# முதல் உலகத் தமிழர் மாநாட்டு மலர் 1990

## கோலாலம்பூர்



With Best Compliments from

## TAMIL NADU CHEMICAL PRODUCTS LIMITED

Pioneer in the manufacture of superior quality Sodium Hydrosulphite by the unique Sodium Formate route in technical collaboration with Mitsubishi Japan.

Exporter of Superior quality Sodium Hydorsulphite to European Continents thereby earning valuable foreign exchange for the Country.

*Regd. Office:*

"TCP SAPTHAGIRI BHAVAN",
10, Karpagambal Nagar,
Mylapore,
Madras 600 004
Phone: 71518, 71358, 75415,
75460, 74347
Grams: TECEHYDROS
Telex: 041-7021 TCP IN
Telefax: 901-44-76789

*Factory:*

Koviloor
Karaikudi 623 319
Pasumpon Thevar
Thirumagan Dist.
Phone: 2673 & 2674

Grams: "TECEPE"
Telex: 443-201 TCPL IN

# முதல்
# உலகத் தமிழர் மாநாடு



1990 டிசம்பர், கோலாலம்பூர்




**உலகத் தமிழர் மாமன்றம்**

*20,* ஐந்தாம் தெரு, லேக் ஏரியா

நுங்கம்பாக்கம்,

சென்னை.-*600 034.*

# உலகத் தமிழர் முதல் மாநாடு
## ஏற்பாட்டுக் குழுவினர்.

**தலைவர்**

மாண்புமிகு டாக்டர்
வி.டேவிட்.எம்.பி.,

**துணைத் தலைவர்கள்:**

மாண்புமிகு ஏ.கே.சிவலிங்கம்
(சிலாங்கூர் மாநிலச்
சட்டமன்ற உறுப்பினர்)

**உதவித் தலைவர்கள்**

திருச்சுடர். கே.ஆர் இராமசாமி
டாக்டர் ஐ லூர்துசாமி
திரு.எம்.எஸ்.மணியம்
டாக்டர் இரா.ஜனர்த்தனம்
திருமதி புனிதம் மகேசன்
சுப .நாராயணசாமி
வி.கே.சின்னப்பன்
சு.பா.தங்கராசன்
கோமகன்

**பொதுச் செயலாளர்கள்:**

இரா.காந்தி
ஜி.பெருமாள்

**துணைப் பொதுச் செயலாளர்கள்:**

இரா.அருட்பிரகாசம்
இரா.மதிவாணனன்

**உதவிச் செயலாளர்கள்:**

எம்.சி.கனி நயினார்
ஜி.எஸ்.மணியம்
கே.பழனிச்சாமி
முகமது சிராஜுதீன்

பி.எஸ். வெங்கடேசன்
பி.எஸ்.மணியம்

பொருளாளர்: துணைப்
பொருளாளர்: குழு **உறுப்பினர்கள்:**

லோ.அன்புராயன்
எஸ்.டி.சந்திரமோகன்
ஜே.பி.சாமுவேல் ராஜ்
ஆர். வெங்கட்ராமன்
பரத ஈழவாணன்
ஈழவேங்கை
பி.கே.சாமி
என்.வீரையா
பி.விசுவாசம்
துரைசாமி லெட்சுமணன்
பி.மணியரசு
டாக்டர் கே.கலியபெருமாள்
எஸ்.கிருஷ்ணன்
தில்லை மணியம்
எம்.ராமநாயுடு
ஜி.சீனிவாசகம்
பி.செல்வசுகுமாறன்
எஸ்.எஸ்.பாண்டியன்
ஜி.சுப்பிரமணியம்
எஸ்.தர்மலிங்கம்
வி.பி.பாண்டியன்
எஸ்.தங்கராஜ்
கோ.வி.பெருமாள்
எஸ்.கே. குலசிங்கம்
எம்.எஸ்.மணியம்
திருமதி ஜெயா பார்த்திபன்
எம்.ராஜேஸ்வரி
எம்.கஸ்தூரிபாய்

**ரெனோராக**
**திருமதி அன்னக்கிளி** ராசையா
**எம்.தருமலிங்கம்**
**எம்.தனபாலன்.**

**துணைக்குழுக்களின்**
**தலைவர்கள்**

**வரவேற்பு தங்குமிடம்,** உணவுக்
குழு — **பி.விசுவாசம்.**
**கட்டுரைக் குழுத்** தலைவர் —
**பி.எஸ்.வெங்கடேசன்**
**ஆய்வரங்கக் கட்டுரை** தேர்வுக் குழு:
தலைவர். டாக்டர் மு.பி.பாலசுப்பிரமணியன்.

போக்குவரத்து சுற்றுலாக் குழு
— சுப.நாராயணசாமி
கலைப்பகுதித் தலைவர்
கே.பழனிச்சாமி

பாதுகாப்பு—
ந. வீரையா

மருத்துவக் குழு —
டாக்டர் சாமுவேல்

நிதிக்குழுத் தலைவர் —
லோ.அன்புராயன்

மக்கள் தொடர்புக் குழுத்
தலைவர் —
திருமதி ஜெயா பார்த்திபன்

கவியரங்கப் பொறுப்பாளர் —
தமிழ்க்குயில் டாக்டர்
கா.கலியபெருமாள்.

## மலர்க்குழு

புரவலர்: இரா.காந்தி (பொதுச் செயலாளர்,
உலகத்தமிழர் மாமன்றம்)

தலைவர்: இரா. முத்துக்குமாரசாமி (ஆட்சியாளர்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்)

செயலாளர்: இரா. மதிவாணனன் (துணைப்பொதுச்
செயலாளர், உலகத்தமிழர் மாமன்றம்.)

மலர்ஆசிரியர்:
மலர்மாமணி
புலவர் இளஞ்செழியன்
(பொதுச் செயலாளர்,
உலகத்தமிழ்க்கவிஞர் பேரவை)

(தொகுப்பாசிரியர்:
பேரறிஞர் அண்ணா கருத்து மணிகள்
தமிழ்நாடு அரசு)

**மலர் ஓவியர் : கலைமதி**



மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள்
(இந்தியக் குடியரசுத் தலைவர்)



பகுத்தறிவுத்தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி



பேரறிஞர் டாக்டர் சி.என்.அண்ணாதுரை எம்.ஏ.
(தமிழக முன்னாள் முதலமைச்சர்)



பெருந்தலைவர் காமராசர்
(தமிழக முன்னாள் முதலமைச்சர்)



முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்கள்
(தமிழக முதலமைச்சர்)



இனமானப் பேராசிரியர்
டாக்டர் க. அன்பழகன் எம்.ஏ. அவர்கள்.
தமிழ்நாடு கல்வியமைச்சர்



புரட்சித் தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன்
தமிழக முன்னாள் முதல்வர்



`உலக மாமனிதர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு அவர்கள்
(மலேசிய அஞ்சல் தொலைத்தொடர்பு மின்துறை அமைச்சர்)



டாக்டர் வி.டேவிட் எம்.பி. அவர்கள்
(உலகத் தமிழர் மாமன்றத் தலைவர்)



**திரு. இரா காந்தி**

பொதுச் செயலாளர், உலகத்தமிழர் மாமன்றம்

MAY 7 1990.

I would like to offer my heartiest congratulation to the Tamil community for holding the 8th International Tamil Research Conference on "The Life and Development of Tamils Worldwide" from August 19-21, 1990, in Petaling Jaya.

I was reminded that the first conference was held in 1966 when I was Prime Minister. Many matters were discussed; foremost among them the Tamil language, customs and culture. It achieved great success and it revealed to the world the enormous potential of Tamil as an important world language.

Since then the Tamil community has come a long way, and I was informed that in 1984 the World Federation of Tamils was established to weld the hitherto divergent forces of Tamil enthusiasm throughout the world and achieve higher levels of socio-economic progress. The Federation was officially inaugurated on September 17, 1984, in Madras and branches were later set up in the United Kingdom, United States, Australia, Fiji, Mauritius, France, Sri Lanka and Malaysia.

As a community the Tamils have contributed their services for the public good and they have become very distinguished politicians, doctors, lawyers and successful professional men, and as members of public services they have helped to make Malaysia a highly developed country. They have spread themselves all over the world and helped to make useful contributions in all the places in which they live. In Malaysia they form the third biggest community with political standing in the government and opposition parties. The Tamil community comprises Hindus, Muslims and Christians and they have lived well together.

I commend Dr V. David, President of the World Federation of Tamils (Malaysian Branch) and all the other members for making their great contribution towards the progress of the Tamil community, and we share their pride in holding the 8th International Tamil Research Conference here.

I wish the Conference every success.



TUNKU ABDUL RAHMAN PUTRA AL-HAJ (DMN. CH.), A.C.
16, Jalan Tunku Abdul Rahman, 10350 Pulau Pinang. Tal. 374876
1, Jalan Tunku, 50480 Kuala Lumpur. Tal. 2983914



க. அன்பழகன், எம். ஏ.
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை—600 009

நாள் 27 11 90

அன்புடையீர்,

வணக்கம்

வருகின்ற டிசம்பர் 12,13,14 நாட்களில் மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் 'முதல் உலகத் தமிழர் மாநாடு' மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவிருப்பது அறிந்து மகிழ்கிறேன்.

உலகெங்கும், பல்வேறுநாடுகளில் பரவி வாழ்ந்திருக்கும் தமிழ்மக்களின் உறவு தழைக்கவும், உரிமை சிறக்கவும் உலகத் தமிழ் மாநாடு ஒரு நல் வாய்ப்பாகத் திகழும் என்பதில் ஐயம் இல்லை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும், புறநானூற்றுக் கவிஞர் கணியன் பூங்குன்றனார் வாக்கு, மானிடம் ஓர் குலம் என்னும் பொது நோக்கிலும், மாந்த நேயம் வளர்க்கும் உயர் நோக்கிலும் இரண்டாயிரம் ஆண்டுகள் முன்னரே முழங்கப்பட்டதாகும்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமூலர் மொழியும்,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் திருவள்ளுவர் வாயுரையும்,

சாதி, குல சமய, மத வேற்றுமைகளை மறந்து, சமரச சுத்த சன்மார்க்க நெறிதனில் கூடுமாறு அழைத்த வள்ளலார் அறிவுரையும்,

'சாதி மதங்களைப் பாரோம்' என்னும் பாரதியின் முழக்கமும்,

தந்தை பெரியார், திரு வி க, அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் வளர்த்த கொள்கைகளும் — தமிழர்களை — இனம் உணர்ந்து, காலம் அறிந்து

"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"

என்னும் தெளிவுடன் செயற்பட ஏதுவாகியுள்ளன எனலாம்.

எனினும், தமிழ் மக்கள் — ஓரினமாக உணரவும், ஒன்றுபட்டுச் செயற்படவும், ஒற்றுமை வளர்க்கவும் ஏற்ற திறன் பெற்றவர்களாக வளரவில்லை. தாயகத்தில், தமிழ் மண்ணில் வாழ்வோர் அந்த உணர்வு கொள்வதில் பின்னடைவுக்கு ஆளாகியுள்ளது, பிற நாடுகளில் வாழ்வோர் — ஆங்காங்கு வீறுடன் வாழ்ந்திடும் பிற இனத்தார்தம் வாழ்க்கை நியதியைக் கண்டு கொண்டு — தாமும் தம் இனத்தைத் திரும்பி நோக்கித் தெளிவு கொண்டோராகி வருவதும் — சூழலின் தாக்கம் எனலாம்.

காலத்தின் ஓட்டத்தினால் கருத்துக்கள் பரவுவதிலும் அவற்றைத் தெளிவதிலும் உருவாகியுள்ள வேகத்தினாலும், அறிவியல் ஆற்றல் பெருக்கத்தால் பயணநேரம் குறைந்து வருவதால் உலக நாடுகளிடையே வளரும் நெருக்கத்தினாலும், ஓரினத்தாரின் உரிமை உணர்வின் அளவும், வகையும், வேற்றினத்தாருடன் உறவு கொள்ளும் அளவினையும் — நிலையினையும் பொறுத்தே அமைவதாகும்.

தமிழன் தமிழனாக வாழும் உரிமையைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பது உண்மை. அது தமிழரின் நாகரிகம், பண்பாடு, மொழி, கலை ஆகியவற்றைப் போற்றி — வளர்த்து — இழக்காது நிலைநிறுத்தி வாழ்வதேயாகும். பிற இனத்தாரோ — மொழியாரோ ஓரினத்தாரின் மொழி — கலைகளை அழித்தல் என்பது வரலாற்றுப் பழஞ்செய்தி. ஆனால், அந்தந்த இனத்தாரே — தம் மொழி — கலைகளை ஆக்கவும் அழிக்கவும் — அறிந்தோ அறியாமலோ ஏதுவாகின்றனர் என்பதே உண்மை.

வேற்றின உறவால் விளைந்த— பிறமொழிக்கலப்பால் — தமிழ்ப் பேச்சு வழக்கு சிதைந்த தொன்னாளில் — ஆங்காங்கு மொழித்திரிபு வளர்ந்து, தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் பிறக்க நேரிட்டது என்பது வரலாறு. ஆனால் அதற்கு இடம் கொடுத்தவர்களோ, துணை ஆனவர்களோ — பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழ் மொழியைப் பேசி வந்தவர்களே ஆதல் வேண்டும். கலப்பாலில் — துளி நஞ்சு கலந்து பால் கெட்டது என்பது போன்ற நிலை என்று கருதுவாராயினும் தாய்மொழி பற்றிய கருத்தும் தெளிவும் மக்களிடையே நிலவாத காலம் என்பதும் — எழுத்து நடை இலக்கியம் பரவாதகாலம் என்பதும் கருதிப்பார்ப்பின் — அந்த மொழித்திரிபும் காலத்தின் விளைவு என்று ஏற்கலாகும்.

இந்த நாளிலும் — பெரும்பான்மையான வேற்று மொழியாளருடன் அன்றாடம் பழகும் நிலையில் வாழும் தமிழர்களின் பேச்சில் பிறமொழித் தாக்கம் ஏற்படுவது தவிர்க்க ஒண்ணாதாம், எனினும் தம்மொழிப்பேச்சு வழக்கை இழக்காதிருக்கத் தாய்மொழியில் பேசி வாழும் வாய்ப்பை மறவாது காத்து, இழக்காது போற்றிட உள்ளங்கொள்ளவேண்டும்.

மொரிசியஸ் நாட்டில் (தீவில்) வாழும் தமிழர் வழிவந்த பல்லாயிரம் மக்கள் — தம் பெயர் தமிழ் மரபில் வந்ததாகக் கொண்டிருப்பினும் — தமிழில் பேசும் பழக்கத்தை இழந்தவர்களாகியுள்ளனர். அவர்தம் சேய்கள் தமிழ் அறியாநிலைக்கு ஆளாகிவருகின்றனர்.

தமிழர்கள் — தமிழைக்காப்பதும் வளர்ப்பதும் அரசியல் நோக்குடையதாகாது.

உலகம் என்னும் கலைப்பண்பாட்டுப் பூந்தோட்டத்தில் — பல்லாயிரம் தனித்தனி மணமுள்ள வண்ண மலர்களாக வெவ்வேறு நாகரிகப் பண்பாட்டு மொழி மலர்கள் பூத்துள்ளன. அவற்றுள் சில வாடி வதங்கி உதிர்ந்துவிட்டன என்பது வரலாறு.

உலகம் பிறந்து, உயிர்கள் தோன்றி, மனிதன் வடிவு கொண்டு உலவத் தொடங்கிய தொல்பழங்காலத்தில் பிறந்ததொரு தொல்மொழியின் வளர்ந்த நிறைவடிவே 'தமிழ்' ஆயிற்று என்பதால் — மனித இனத்தின் நாகரிகவளர்ச்சியின் படிநிலைகளின் படிமங்கள் பலவும், தமிழ்ச் சொற்களில்—அதன் வேர்களில் காணலாகும் என்பது மொழி நூலறிஞர்களின் கருத்தாகும்.

எனவே உலகக் கலைப்பண்பாட்டுப் பூந்தோட்டத்தில் — நீண்டநெடிய வரலாற்றுச் சுவடு காட்ட வல்லதாய் விளங்கும் தமிழ் மொழி எந்நாளும் மணம் வீசிப் பூத்துக்குலுங்க வழிகாண உலகம் கடமைப்பட்டுள்ளது. ஆயினும் உலகம் உணரும் நாள் எந்நாளோ? நாமேனும் உணர்ந்தவர்களாய்ச் செயற்படவேண்டும்:

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வு,
நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே!"

என்றார் பாவேந்தர்.

தமிழரின் வாழ்வும் — தமிழர் தமிழராய் நிலைப்பதும் தமிழால் என்பது கொண்டே அவ்வாறு குறிப்பிட்டார் பாவேந்தர்.

எனவேதான் — தமிழராய் வாழத் தமிழர் மறத்தலாகாது என்பேன்! தம்மை மறந்தார் — தம்மின உணர்வை இழந்தார் தம் வாழ்வில் ஒளிர்தல் அரிதேயாம்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்று பாவேந்தர் முழங்கும் பாட்டு வரிகளே — நம் வாழ்வின் குறிக்கோள் ஆகட்டும்! தமிழர் மாநாடு வெற்றி நடை போட்டுச் — சிறக்கட்டும்! என வாழ்த்துகின்றேன்.

அன்பன்,
க. அன்பழகன்

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ., பி.எச்டி.,
பேரவைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தொலைபேசி { அலுவலகம் : 56 2708
இல்லம் : 83 7772

**தலைமைச் செயலகம்**
**சென்னை-600 009**

நாள்: 6.7.1990

அன்புடையீர்,

உலகத்தின் 40 நாடுகளுக்கு மேல் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் உயர்ந்த சமூக மதிப்போடும், நிறைந்த பொருளாதார முன்னேற்றத்தோடும் வாழ்கின்றார்கள் என்று சொல்ல முடியாது. தமிழகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பொருளியல் மேம்பாடு ஆகியவை போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற மனக்குறையோடு வெளிநாடுகளுக்குச் சென்று பலர் ஏற்றம் பெற்றிருக்கிறார்கள். எனினும் அங்கும் அவர்களுக்குப் பல சிக்கல்கள் எழுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இந்நிலையில் வையகத் தமிழரின் வாழ்வையும், வளர்ச்சியையும் மையக் கருத்தாகக் கொண்டு நடைபெறவிருக்கும் மாநாடு பெரும் பயனை அளிக்கக் கூடியது ஆகும். இன்றைய உலக முன்னேற்றத்திற்கேற்ப அறிவியல் நோக்கோடும், நடப்பியல் சிந்தனைகளோடும் தமிழர்கள் உலகமெங்கும் தங்களை நிலைநாட்டிக் கொள்ள வேண்டியது கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றப் புறப்படும் முதல் உலகத் தமிழர் மாநாடு எல்லா வகையிலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.



அன்புடன்,

6.7.90

(மு. தமிழ்க்குடிமகன்)
சட்டப்பேரவைத்தலைவர்.

டாக்டர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., டி.லிட்.,

தொலைபேசி : 451918

நெ. 4, மாசிலாமணி தெரு,
சித்தம்மாள் காலனி,
ஆழ்வார்பேட்டை, சென்னை-18

நாள் : 27.7.1990

## உலகத் தமிழர் மாநாடு வாழ்க: வளர்க: வெல்க:

உலகெங்கணும் வாழும் தமிழர்களின் மேம்பாடு கருதி, உலகத் தமிழர் மாநாட்டினை, உலகத் தமிழர் மாமன்றம், கோலாலம்பூரில் கூட்ட முனைந்திருப்பது, போற்றிப் பாராட்டி வாழ்த்தி வரவேற்கத்தக்கதாகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் ஒருசில தமிழர்கள், தனிப்பட்ட முறையில், கல்வியறிவு – கலையறிவு – தொழிலாற்றல் – தொழில் நுட்பவறிவு ஆகியவற்றில் சிறந்து விளங்கிப் பொறியியல் துறை, மருத்துவத் துறை, தொழில் துறை, தொழில் நுட்பவியல் துறை, வாணிகத் துறை, கலைத் துறை போன்றவற்றில் மேம்பட்டு விளங்குகிறார்கள் என்றாலும், பொதுவாகத் தமிழ் இனத்தார் ஆங்காங்கு வாழவகையின்றி, வறுமையுற்றுச், சிதறிப்போய்ச், சீரழிந்து, உரிமையிழந்து வாழ்கிறார்கள் என்பதுதான் உண்மை.

வாழ்ந்த தமிழ்இனம் வீழ்வானேன்? ஆண்ட தமிழர்களின் பரம்பரை அடிமையாவானேன்? குன்றாத் தமிழரின் வீரம் குன்றுவானேன்? பண்பாட்டில் உயர்ந்திருந்த தமிழ்ச் சமூகம் பாழடைந்து கிடப்பானேன்? வளமான வாழ்வில் தவழ்ந்த தமிழர்கள் வறுமையில் உழன்று அலைக்கழிவானேன்? உலகத் தமிழர் மாநாடு இவற்றிற்கெல்லாம் அமைந்த அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றையெல்லாம் களைந்தெறிய உரிய வழிகளைக் காணும் என்று கருதுகிறேன்.

தமிழர்களின் வழிபாட்டு இடங்களில், தமிழரின் நல இழப்பு நிகழ்ச்சிகளில், தமிழர்தம் இசையரங்குகளில், தமிழர்தம் விழாக்களில், தமிழர்தம் பெயர்களில் தமிழ்தான் இல்லை. இப்படிப்பட்ட இழிநிலை உலகில் வேறு எந்தநாட்டிலும் இருக்கவில்லை. இந்த இழிநிலை தமிழர்களிடையே அறவே துடைக்கப்பட வேண்டும்.

தமிழரின் அறிவுத்திறனும், ஆற்றல்திறனும், செயலாற்றல் திறனும், செய்துமுடிக்கும் திறனும், பண்பாட்டுத் திறனும், வீரமும், தீரமும் வளர வழிவகைகள் இருந்தும், தமிழினத்தை ஒட்டுமொத்தமாக வேண்டத்தகாத, பயன்படாத சாதி–சமயம்–பக்தி நெறி–ஆன்மீக நெறி–மூடநம்பிக்கை– குருட்டுப்பழக்க வழக்கம்–கற்பனைக் கதைகள் போன்றவைகள் பல நூற்றாண்டுக்காலமாகவே கெடுத்து விட்டன. அந்தக் குறைபாடுகளை அறிவுக்கும், காலத்திற்கும், கருத்திற்கும், உலகியலுக்கும் ஒத்தவகையில், கல்வி–நூல்–ஏடு– இதழ் –சொற்பொழிவு போன்றவற்றின்மூலம் ஏற்ற விளக்கங்கள் தர முற்போக்குத் தமிழர் முன்வர வேண்டும்.

உலகத் தமிழர் மாநாடு தமிழரின் பகுத்தறிவுக்கும், பேராற்றலுக்கும், பெருமுயற்சிக்கும், பேருழைப்பிற்கும், நாணயத்திற்கும், நேர்மைக்கும், உண்மைக்கும், ஒழுக்கத்திற்கும் மதிப்புத்தந்து, ஊக்கம்பயந்து, தக்கபடி ஆக்கம் அளிக்கவேண்டும்.

உலகத் தமிழர் மாநாடு வாழ்க: வளர்க: வெல்க:

இரா. நெடுஞ்செழியன்

(இரா. நெடுஞ்செழியன்)



தொலைபேசி : 34898



# திராவிடர் கழகம்

## தலைமை நிலையம்

நிறுவனத் தலைவர் :
தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி

பெரியார் திடல்,
50, ஈ. வெ. கி. சம்பத் சாலை,
சென்னை-600 007

பொதுச்செயலாளர் :
கி. வீரமணி, எம்.ஏ., பி.எல்.,

நாள்.. ..................

### வாழ்த்துச் செய்தி

மலேசியாவில் அறிஞர் டேவிட் அவர்களது சீரிய முயற்சியால் நடைபெறும் உலகத் தமிழர் மாநாட்டினையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளிவருவது அறிய மகிழ்ச்சி.

உலகத்தமிழர்கள் தங்களது தன்மானம், இனமானம் — இரண்டினையும் பாதுகாத்து, தமது ஒற்றுமைக்கு ஊறுவராதவண்ணம், இணைப்பவைகளைப் பெரிதாக்கி, தம்மைப் பிரிப்பவைகளைச் சிறிதாக்கி முடிந்தால் அலட்சியப்படுத்தி, — தரணியில் நின்று தமிழன் என்று சொல்வோம்; தரணியில் நாம் அனைவரது மரியாதையையும் வெல்வோம் என்ற ஒரு பெரும் சாதனையை இம்மாநாட்டின்மூலம் பெறுவோம் என்று சூளுரைத்து, நம்பகைப்புலம் திணறும் வண்ணம், `இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே, எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் என்று சாதனைச் சரித்திரம் படைப்போம்.'

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், தமிழவேள் கோ. சாரங்கபாணி போன்ற நமது தலைவர்கள் மறைந்தாலும் அவர்கள் ஊட்டிய தமிழின உணர்வு நாட்டின் எல்லை கடந்த மனித நேயப் பிணைப்பைக் காட்டுவது என்பதை இம்மாநாடு புது முறுக்குடன் காட்டட்டும் உலகிற்கு என்று கூறி மாநாட்டின் வெற்றிக்கு மகிழ்வான வாழ்த்துக்களை நல்குகிறோம்.





கோ. பழனிராஜா
சட்டப்பேரவைத் தலைவர்

சட்டப்பேரவை
புதுவை
நாள் 26.7.1990.

# வாழ்த்துச் செய்தி

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் —அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தைஇல்லாதவை அன்றோ! — எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்.

என்று, நூற்றாண்டு விழாக் காணும் பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போல,

முதல் உலகத் தமிழர் மாநாடு, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்துவதற்கு உலகத் தமிழர் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ள இத்தமிழ்த் தொண்டு குறித்து மட்டிலா மகிழ்ச்சி யடைகிறேன்.

உலகளாவிய தமிழர்களின் பல்வேறு சிக்கல்கள், மற்றும் தீர்வுகள் குறித்தும், தொழில், கல்வி, அறிவியல் முன்னேற்றம் குறித்தும் முதல் உலகத் தமிழர் மாநாடு மூலம் ஆய்வு செய்ய உள்ள பணி சிறக்க என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

இதன் பொருட்டு வெளியிடவிருக்கும் சிறப்பு மலர், அமுதத் தமிழின் சிறப்பையும் மறத்தமிழரின் முன்னேற்றம் குறித்தும் செய்திகளைத் தாங்கி மலர் சிறப்புற என் மனமெலாம் தித்திக்கத் தித்திக்க வாழ்த்துகின்றேன்.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டா?
தமிழ்என்று தமிழரென்று சிறிது தொண்டு
தாம்புரிவர் அவர்பெருமை அரசர்க்கில்லை!

—பாரதிதாசன்

(கோ. பழனிராஜா)

**கே. என். நேரு**
செய்தி மற்றும்
தொழிலாளர் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை—600 009

நாள் **1.11.90**

அன்புடையீர்,

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. திறமான புலமையெனில் பிற நாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும். வையம் புகழ ஆண்டிருந்த தமிழின் சிறப்பினை உலகறியச் செய்திட, இந்த உலகத் தமிழர் மாநாடு பெரிதும் பயனுடைத்து, உலக முழுதும் பரவிக் கிடக்கும் தமிழர்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இது ஒப்பரிய நல்வாய்ப்பு.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும். அஞ்ஞான்றே, வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும், கவிப்பெருக்கும், அறிவியற் கருத்தும் விரவி வரவாகிடும் நம் தமிழ் மொழிக்கு, மாநாட்டினையொட்டி மலரும் மலர். இவ்வெண்ணத்தை ஈடேற்றும் என எண்ணுகிறேன்.

உலகத் தமிழர்களின் கரங்களிலெல்லாம் தவழப்போகும் மலர், கவின்மிகு கருத்துப் பெட்டகமாய் மிளிரட்டும்.

கோலாலம்பூரில் நிகழ்வுறும் உலகத் தமிழர் மாநாட்டின் வாயிலாக, கோதிலாத் தமிழின் சிறப்பு, குவலயம் முழுதும் பரவட்டும்.

மாநாடும் மலரும் சிறக்க, என் மனங்கனிந்த வாழ்த்துக்கள்.

“சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!”



(கே.என்.நேரு)

தொலைபேசி { அலுவலகம் : 25422
இல்லம் : 25401

நா. மணிமாறன், M.A.,
கல்வி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

பாண்டிச்சேரி
தேதி 27/9/90

உலகத் தமிழர் மாமன்றம் உலகத்தமிழர் மாநாட்டை முதன்முதலாய் கோலாலம்பூரில் நடத்தவிருப்பதாய் மடல்வழி அறிந்தேன். அம்மாநாட்டில் `உலகளாவிய தமிழர்களின் பல்வேறு சிக்கல்கள் மற்றும் தீர்வுகள் குறித்தும், தொழில் கல்வி, அறிவியல், முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யவிருப்பதாயும், மலரொன்று வெளியிடவிருப்பதாயும்' அம்மடலில் குறிப்பிடப்பட்டிருந்தன.

`உலகத் தமிழ் மாநாடு'கள் நடத்தி வருவதுபோன்று, `உலகத் தமிழர் மாநாடு'ம் உன்னத நோக்கத்தோடு நடத்துவீர்கள் என்றே கருதுகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தியதெல்லாம் தமிழர்தம் ஒற்றுமை குறித்துத்தான். `தமிழர்களே! நம்மை அழிக்க உலகின் எந்தச் சக்தியாலும் முடியாது. நம்மை நாமே ஒற்றுமையின்மையால் அழித்துக்கொண்டால்தான் உண்டு!' என்பார். ஈழச்சிக்கல்கள் கூட இந்த அளவு முற்றிப்போனதற்கும், இலட்சியம் ஈடேறி வெற்றிகாணலில் தாமதமாவதற்கும், ஒற்றுமை தமிழினத்தவரிடையே இல்லாமல் போனமை தான் என்பதை எவரும் உணர்வர். உலகத் தமிழ் மாநாட்டுக்குரியோரும், உலகத் தமிழர் மாநாட்டுக்குரியோரும் இனத்தால் மட்டும் தமிழர்களல்லர், எண்ணத்தாலும் ஒன்றுபட்ட தமிழர்களே என்பதை விளக்கும் மாநாடாக உலகத் தமிழர் மாநாடு அமைந்திடல் வேண்டும்.

உலகத் தமிழர் மாநாடு, தமிழினத்திற்கு உண்டாகியுள்ள சிக்கல்கள் அதற்கான தீர்வுகள் குறித்து ஆய்வு செய்யவிருப்பது குறித்து மகிழ்ச்சி. தொழில் கல்வி, அறிவியல், முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யவிருப்பதாய் வரையறை செய்து சிலவட்டங்களைப் போட்டு அதன் விட்டங்களை மட்டும் அளந்துபார்க்கும் நிலை தெரிகிறது. அவ்வாறன்றி, தமிழினம் தொடர்புகொண்ட துறையாவற்றையும் ஆய்வு செய்யும் நோக்கில் தங்கள் நிகழ்ச்சி அமைந்திருந்தால் சாலச் சிறப்புடைத்தமையாகும். மேலும், தமிழ்மொழி வளர்ச்சி பற்றி ஏதும் குறிப்பிடப்படாதது ஏனென்று புரியவில்லை. எழுத்து மறுமலர்ச்சி, சொல்கண்டுபிடிப்புகள், மேலும் இலக்கணச்செழுமை, இலக்கிய வளமை, ஆக இவை உள்ளிட்ட தமிழ்மொழி வளர்ச்சி பற்றிய நிகழ்ச்சிகளும், இவைசார்ந்த அறிஞர்தம் படைப்புகளும் இடம்பெறக்கூடிய மலரும் மாநாட்டிற்குப் பெருமை கூட்டுவதாய் அமையக்கூடும்.

உலகின் பன்னாடுகளில் சிதறிக் கிடக்கும் எட்டுகோடித் தமிழர்களின் வாழ்நிலை, அதையொட்டிய அவர்களின் உளநிலை, அதில் முகிழ்க்கும் எண்ணப்பூக்கள் நமக்குள் எத்தனையோ விதமான பேதங்களைக் கொண்டுள்ளன. ஆனாலும் இனத்தால் மட்டும் நாம் தமிழர்களாய் வாழ்ந்து கொண்டு, தாய்த்தமிழைப் பின்னுக்குத் தள்ளிப் பிழைப்புக்காக அயல்மொழிகளில் ஆர்வம் காட்டுவதோடு மட்டுமின்றி, வீட்டு மொழியாகக்கூடத் தமிழை வாழவைக்க மறுக்கும் அல்லது மறக்கும் தமிழர்கள் மலிந்து விட்டனர் என்ற வேதனைக்குரிய நிலையை எவரும் மறுத்திட முடியாது. தாய்த் தமிழகத்திலும்கூட இத்தகைய போக்கு உளது. அதை எதிர்த்துத் தமிழக அரசும், புதுவை அரசும் சட்டத்தின் மூலமும், கொள்கை விளக்கம் மூலமும் செயல்படுகின்றன. இதை நான் வலியுறுத்துவதற்குக் காரணம், தமிழினம் பொருளியல் நோக்கில் முன்னேற்ற ஆக்கத்திற்குரிய வழிவகை தேடுதல் எந்த அளவு முதன்மையானதோ, அதுபோல் மொழியை வாழ வைக்கும் போக்கிலும் கூர்த்தமதி கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்மொழி வாழ்ந்தால்தான் தமிழினம் என வொன்று இருக்க முடியும். அதுமட்டுமன்று; நமக்கென உள்ள உயரிய நாகரிகம், கலை, கலாச்சாரம் வாழும். இலையேல் அழிந்துபடும். எனவே உலகத் தமிழர் மாநாடு, பல்வேறு நாடுகளில் வாழும் தமிழின மக்கள் தமிழை எந்த அளவில் பயன்படுத்துகின்றனர் என்பதை ஆய்ந்து, இனி எந்த அளவு பயனுக்குள்ளாக்க வேண்டுமென்பதையும் திட்டமிட்டு, அதற்குச் செயல்வடிவம் தந்து நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

அதுபோல் தமிழனுக்குரிய பழங்கலைகள் அயல்நாடுகளில் வாழும் தமிழர்கட்குக் கற்பிக்கப்பட வேண்டும். அவர்களால் அதற்கு உயிரூட்டப்படல் வேண்டும். அதுபோன்றே பழைய தமிழ் நூற்களை அவர்கள் படித்துத் துய்த்தல் வேண்டும். இதற்கெல்லாம் வழிவகை காணும் மாநாடாக, இனஒற்றுமை, மொழிவளர்ச்சி பேணும் மாநாடாக அமைய வேண்டுமெனப் புதுவை அரசின் சார்பிலும், புதுவை மாநில மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த வாழ்த்தினை வாஞ்சையுடன் வழங்குகின்றேன்.

அன்புடன்,

(நா. மணிமாறன்)



## வாழ்த்துச் செய்தி

### டாக்டர் சை.வே.சிட்டிபாபு, முன்னாள் துணைவேந்தர்

உலகத்தமிழர் மாமன்றம் கோலாலம்பூரில் "முதல் உலகத் தமிழர் மாநாடு" ஒன்றினை மிகச் சிறப்பாக நடத்த உள்ளது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் புகழ் வாகை சூடிச் செம்மாந்து நிற்கும் தமிழ் அன்னைக்குத் தமிழராகிய நாம் செலுத்தும் உள்ளார்ந்த அஞ்சலி ஆகும் என்று கூறத்தான் வேண்டுமோ? தமிழின் செழுமை, பெருமை, வண்மை, இனிமை ஆகியவற்றை உலகறியச் செய்வதோடு அல்லாமல் வையகத்தே வாழும் தமிழரின் வாழ்வும் வளமும் உயர்வதற்கான வழிவகைகளை ஆய்வு செய்து, திட்டங்களைத் தீட்டி அவைகளைச் செம்மையான முறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தவே இம்மாநாடு கூடவிருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். வேற்றுமைகள் வேரோடு சாய்ந்து, பிணக்குகள் நீங்கி, பின் தங்கிய நிலையிலிருந்து முன்னேறி, வாழ்வின் நலங்களை முழுமையாகப் பெற்று அன்பால், அறிவால், பண்பால் அறத்தால் இணைந்து பூபாகம் முழுவதும் தமிழ் மக்கள், ஏன் உலக மக்கள் எல்லாம் விளங்க வேண்டும் என்பதுதான் தமிழ் அன்னையின் பேரவா. அந்த வேட்கையைத் தீர்த்து வைக்கும் பொருட்டுத்தான் முதல் உலகத் தமிழர் மாநாடு என்ற பெயரில் தமிழரின் தரம் அறிந்த சான்றோர், கவிஞர், அறிஞர், வரலாற்று வல்லுநர், பொறியியல், மருத்துவம், உயிரியல் போன்ற அறிவியல் துறைகளிலே புகழ் பெற்ற பேராளர்கள் எல்லோரும் கூடிக் கருத்துப் பரிமாற்றங்களோடு சில பல செவ்விய செயல் திட்டங்களை வழங்கிட இருக்கிறார்கள் என்பது தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைய இருக்கிறது.

அரசியலிலே விடுதலை வேண்டும், பொருளியலிலே சமதர்மம் வேண்டும், சமூகவியலிலே சமத்துவம் வேண்டும் என்று முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் நூற்றாண்டு விழாவினை நாம் கொண்டாடிவரும் இவ்வேளையில் இம்மாநாடு கூடுவது மிக மிகப் பொருத்தமானதாகும். இனிய செந்தமிழ் மணம் வீட்டிலும், நாட்டிலும், ஏட்டிலும் கமழ வேண்டும்; கல்வித்துறையிலும், வாணிகத் துறையிலும், அறிவியல் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும், பொதுத்துறையிலும் தமிழர் ஏற்றம் பெற்றுத் திகழ வேண்டும்; தமிழர் தன்மானத்துடன் எல்லாவகை உரிமைகளையும் பெற்றுப் பீடு நடை போடவேண்டும்; தமிழ் நூல்கள் எங்கும் எல்லாத் துறையிலும் எல்லா வகையிலும் பெருகிட வேண்டும் என்று எண்ணியவர் புரட்சிக் கவிஞர். அவருடைய சீரிய வீரிய கருத்துக்களைக் கவிதையாகப் பொழிந்தார்.

> "செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
> தடம் பெருந்தோளால் தொடங்குக பணியை"

என்று அறைகூவல் விடுத்தவர். இதை மனத்திலிருத்தி மாநாட்டில் கலந்து கொள்வோர் வீறிட்டெழ வேண்டுமல்லவா?

பாவேந்தருக்கு ஆசானாக விளங்கிய மக்கள் கவிஞன் பாரதியார் காடுகமழ வந்த மக்கள் சொற்கோவாய், நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலாவாய், திறம்பாட வந்த மறவனாய், புதிய அறம்பாட வந்த அறிஞனாய் நம் தாயகத்தில் தோன்றி, தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தலைநிமிர்ந்து, புதுமை வேட்கையோடு, சீர்திருத்த நோக்கத்தோடு, அச்சமற்ற தன்மையோடு, வளமோடு, அறச்சிந்தையோடு வாழ வேண்டும் என்று போர் முரசம் கொட்டியவர். சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் தனி மனிதனின் உணர்ச்சிகளைத் தாங்கி வந்த பாடல்களாக அமைந்தவை. ஆனால் பின்னர்த் தோன்றிய திருக்குறளும், சிலப்பதிகாரமும் தனிச்சிறப்புப் பெறுவதற்குக் காரணம் அவற்றின் இலக்கிய நயம் மட்டும் அன்று; அவற்றினுடைய பொதுமைப் பற்றுள்ளமாகும். யாரோ ஒரு அரசனை நல்வழிப்படுத்த அல்லாமல் " உலகினுக்கே" நல்வழிகாட்ட எழுந்ததனால் குறளும் சிலம்பும் நம் சிந்தையையும் நெஞ்சத்தையும் கிளர்ந்தெழச் செய்கின்றன. இக்காலத்துக்கும் பொருந்தும் பலபேருண்மைகளை இந்நூல்களின் மூலம் நாம் கற்க முடிகிறது. இவைகளைப் பூவுலகில் வாழும் மாந்தர் அனைவரிடையேயும் நாம் பரப்ப வேண்டும். அதே வேளையில் சொல்லும் வண்ணம் செய்து காட்டமுடியும் என்பதையும் பாரறியச் செய்ய வேண்டும்.

"வையகத் தமிழரின் வாழ்வும் வளர்ச்சியும்" என்பதை மையக் கருத்தாகக் கொண்டு நடைபெறவிருக்கும் மாநாட்டை ஒட்டிச் சிறப்பு மலர் ஒன்றினை வெளிக் கொணர உலகத்தமிழர் மாமன்றம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி வெற்றிபெறுவதாகுக! அறிஞர்கள் பலரின் கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கித் தேன்துளிகளைத் திரட்டிச் செந்தேனாக வடித்துக் கொடுக்கும் மலராக இது திகழ்வதாகுக! இம் மலரைத் தன்னலங் கருதாது கருமமே கண்ணாகி உழைக்கும் மலர்க்குழுவினரைத் தமிழ்ப் பெருமையறிந்த உலகம் பாராட்ட மறக்காது என்பது என் துணிவு.

வாழ்க தமிழர் குவலயம் எங்கும்!

Dr AVVAI NATARAJAN
*SECRETARY*
*TAMIL DEVELOPMENT - CULTURE DEPT*
*GOVT. OF TAMIL NADU, MADRAS*

'J' BLOCK, NO. 82,
ANNANAGAR,
MADRAS, 600102

PHONE OFFICE 560682
RES.: 612534
612868

*" தொல்பழங்காலப் பண்பாட்டுச் சுவடுகளைத*
*தொடர்ந்து சுமந்துவரும் நீள்நிலப்பரப்புக்*
*களுக்குள் தமிழகமும் தனியிடத்தைப்*
*பெறுகின்ற தகுதி சான்றது."*

*என வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.*

*முதுமொழியாகிய தமிழ் மொழியைத் தங்கள் வாழ்வுமொழியாக வளர்த்துவரும் மரபினரைப் பொதுவாகத் தமிழர்கள் என்று அழைக்கலாம். தமிழகத்திலேயே நம்மோடு நெடிதுறைந்தாலும் தமிழ் மரபை நினையாதவர் களாகப் பலர் வாழ்ந்துவருவதும் கண்கூடு.*

*இந்நிலையில் கடல் கடந்து வாழ்வு தேடி அயலகம் சென்று வாழ்பவர்கள் தங்களை வளர்க்கும் நாட்டின்மீது வாஞ்சை காட்டினாலும், வழிவந்த தமிழ் மரபை மறவாது மொழிக் காதலில் மூழ்கித் திளைப்பது நம் நெஞ்சை நெகிழ்விப்பதும் மகிழ்விப்பதுமாகும்.*

*காலந்தோறும் வளர்ந்துவரும் வாழ்வியலுக்கும் அறிவியலுக்குமேற்ப, எததகைய முதுமொழியும் தன்னை மேலும் வளப்படுத்திக் கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு.*

*வாய்ப்பால் பல்வேறு நாடுகளில், பல்வேறு நிலைகளில் வாழும் தமிழர்கள், தங்கள் முந்தை மொழியாகிய தமிழ் மொழியை வளப்படுத்தவும் வலுப்படுத்தவும் ஒரு வாய்ப்பை உலகத் தமிழர் மாநாடு வழங்கும் என்று நம்புகிறேன்.*

*இனவழிப்பட்ட தமிழர்கள் தமக்கென ஒரு பல்கலைக்கழகம், ஒரு பொதுவங்கி, உலகளாவிய நிலையில் தொழில்வள மேம்பாடு உறுதல் முதலிய உயர்சிந்தனைகளைக் கருதிப் பார்ப்பது பாராட்டத் தக்கதாகும்.*

*இப்படிப் புதிய வரலாறு படைக்க முன்வந்துள்ள உலகத் தமிழர் மாமன்றத்தினரை வாழ்த்தி மகிழ்வோமாக!*

*கருத்துச் செறிவமைந்த கட்டுரை இதழ்களால் கட்டமைந்த மலர், இம்மாநாட்டில் மொட்டவிழ இருப்பது கண்டு களிப்புறுகிறேன்.*

*வண்ண மலர்களில் வழியும் நறுந்தேனை உண்டு மகிழும் வண்டாக—இலக்கியச் சோலையில் பாட்டுப் பறவையாகப் புகழ்மாலையோடு மிளிரும் என் நண்பர் இளஞ்செழியன், மலர்வாணராகவே மாறி வருகிறார். மாநாட்டின் மணம் வீசும் இந்த மலர், ஒரு வாடாத மலர், தமிழர் வாழ்வுக்கு வளங்கூட்டும் மலர் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.*

*(ஔவை. நடராசன்)*





Grams : TAMILOLOGY

தொலைபேசி : 412992

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

சி.ஐ.டி. வளாகம், தரமணி, டி.டி.டி.ஐ. அஞ்சல், சென்னை-600 113

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
இயக்குநர்

அன்புடையீர், 12.7.90

வணக்கம். டிசம்பர் 12, 13, 14 ஆகிய நாட்களில் `முதல் உலகத்தமிழர் மாநாடு' ஒன்றை மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்திட உலகத் தமிழர் மாமன்றம் ஏற்பாடு செய்திருப்பதறிந்து இறும்பூது எய்துகிறேன்.

உலகத் தமிழ் மாநாடுகளுடன், உலகத் தமிழர் மாநாடுகளும் நடத்தப்படவேண்டியனவேயாகும். ஏனென்றால், நமது தாய்மொழியான தமிழ் செம்மையாகவும் செழுமையாகவும் இருக்கிற அளவு, அதற்குச் சொந்தக்காரர்களாகிய தமிழர்கள் செம்மையாக இல்லை, செழுமையாகவும் இல்லை.

உலகிலே வாழுகிற பிறமொழி மக்கள், உலகத்தின் எந்தக் கடைக்கோடிக்குச் சென்றாலும், தங்கள் தாய் மொழியை மறப்பதில்லை; வெளியிலே, சூழ்நிலைக்குத் தகுந்தபடி அவர்கள் வேற்று மொழியிலே பேசினாலும், வீட்டுக்குள்ளே தங்கள் மொழியைத் தவிர வேறொன்றைப் பேசுவதில்லை.

எடுத்துக்காட்டாக, தெலுங்குமொழி பேசுவோர், வெளியுலகிலே தமிழிலே பேசுவர். ஆனால் ஒரு தெலுங்கர், மற்றொரு தெலுங்கரிடம் பேசும்போது, தெலுங்கில்தான் பேசுவார். வீட்டிலும் தெலுங்கையே பேசுவார். ஆனால், தமிழர்கள், இந்த நெறிமுறையில் நின்று ஒழுகுகிறார்களா என்றால், இல்லை. தமிழர்கள் சென்ற நாடுகளில் எல்லாம் பெரும்பாலும் தமிழை மறந்தே வாழ்கின்றனர். மொரீசியசு, ரீயூனியன் தமிழர்களைப் போய்ப் பாருங்கள்! அவர்கள் எல்லாம் தமிழை மறந்த தமிழர்களே ஆவர்.

ஆகவே இதுபோன்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவும், களையவும், ஆக்கமான வழிகளை ஆராயவும் தமிழர் மாநாடுகளும் தேவைப்படுகின்றன.

அந்த அடிப்படையில் நடைபெறுகின்ற முதல் உலகத் தமிழர் மாநாட்டை நான் போற்றி வரவேற்கின்றேன். மாநாடு வெற்றி பெறவும், பயன் விளைவிக்கவும் அதையொட்டி மலர்கிற மலர் சிறந்து வெளிவரவும் என் மனநிறைவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழர் மாமன்றத்தின் முயற்சியைப் போற்றி மகிழ்கிறேன்.

அன்புடன்
சு.செல்லப்பன்.



**பி.ஆர். கோகுல கிருஷ்ணன்**
**தலைமை நீதிபதி, தமிழகம்**

சென்னை
1-12-90.

அன்புடையீர்,

வணக்கம்.

1990 டிசம்பர் 12, 13, 14 ஆகிய நாட்களில் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழர் மாநாடு நடைபெறுவதனைச் செவியுற்றுச் சிந்தை மகிழ்கிறேன்.

`தமிழ் மாநாடு' நடத்துகிற தமிழர்களாகிய நாம், தமிழர் மாநாடு' என்ற பெயரிலேயே ஒன்றுகூடிச் சிந்திப்பதும் தற்கால இனமான உலகில் தேவையானதே.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பரந்து விரிந்த உயர் மனப் பான்மையோடு பாடிய ஒரு தமிழ்ப் புலவனின் கனவு, மெய்யாகிற ஒரு காலம் உதயமாகுமானால், அதைவிட வேறு நற்பேறு தமிழர்களுக்குக் கிடையாது. ஆனால், அது இன்றுள்ள நடைமுறையில் இயலுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

பிற இனமக்கள், தாங்கள் பேசும் மொழியையும் தங்கள் நாகரிகத்தையும் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாப்பதில் முனைப்புள்ளவர்களாய்த் திகழும் போது, தமிழர்களாகிய நாம் மட்டும் "உலக ஒருமைப்பாட்டுத் தத்துவ உபதேசம்" பேசுவதால் பயனிருக்க முடியுமா என்பதையும் நாம் சற்றே சிந்திக்க வேண்டும். எனவே இந்த முதல் உலகத் தமிழர் மாநாடு இன்றைய நாளைய தமிழர்களின் வாழ்வு, வளர்ச்சி ஆகியவை பற்றி ஆக்க பூர்வமாய் ஆராய வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். அந்த அடிப்படையில் தமிழர் மாநாடு அழகுற நடந்து வெற்றி படைக்க எனது விழுமிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்)
பி.ஆர். கோகுல கிருஷ்ணன்.

# WORLD FEDERATION OF TAMILS
# AN INTRODUCTION

The world Federation of Tamils (WFT) was established in 1984 aiter careful consideration to weld the hitherto divergent forces of Tamil enthusiasm all over the world and achieve higher levels of socio-economic progress. The Federation was officially inaugrated on 17th September 1984 at Madras, India. The Federation has its headquarters in Madras, India with branch offices in Kuala Lumpur and Mauritius at the moment. Efforts are in progress to establish branches in the United Kingdom, the United States, Australia, Fiji, and France where Tamils constitute a fair proportion of the local populace.

## AIMS AND OBJECTIVES

A dynamic and comprehensive constitution encompassing a wide range of interests and activities forms the underpinning for the guiding principles of the Federation. The salient features of the aims and objectives of the Federation are:

- To maintain and develop a powerful and effective international organisation at world-wide and regional levels, composed of Tamil Organisations, pledge to task of promoting the interests of Tamils throughout the world, and to enhance the dignity of the Tamils.
- To strive for the elimination of adverse discrimination on the grounds of race, sex, nationality, descent or creed.
- To encourage the development of resources of all Tamils of the world, promote viable and self-help economic ventures including ventures like banks and finance companies, both nationally and internationally.
- To represent the Tamil organisations in all organisations, all international agencies including the United Nations and its agencies which exist or may be set up to perform functions affecting the social and economic conditions of the Tamils and to strengthen and augment the implementation of their decisions whenever desirable.

## MEMBERSHIP

The Federation has two types of memberships to sustain its continued growth.

- Institutional membership
- Individual membership

Tamil organisations and such other establishments promoting the welfare of Tamils shall be admitted as institutional members, while individuals doing yeomen's service for the cause of Tamils shall be admitted as individual members.

## ACTIVITIES

*Sixth International Tamil Research Conference*

While acknowledging that the priorities of any international Tamil organisation should be meaningfully addressed to the development of Tamils in real terms, the Federation had successfully dovetailed the promotion of culture, art and language within the Tamil context, and the Sixth International Tamil Research Conference which the Federation helped to organise was a resounding success. The conference, held in Kuala Lumpur. Malaysia in 1987, proved in no mean measure that the Federation had the capability and the resources to host this Conference, which brought together some of the finest scholars in the Tamil realm.

**First Conference of World Tamils**

The First Conference of World Tamils, aptly entitled "The Life and Development of Tamils Worldwide", is yet another fait accompli in the progress chart of the World Federation of Tamils. It will be held from 12th to 15th December 1990 in Kuala Lumpur, Malaysia.

A conferene of this kind is the first ever to have been organised in the Tamil domain, as it will enable the meaningful exchange of ideas and knowledge between Tamils living in all corners of the globe. Scholars, entrepreneurs and professionals encompassing a wide range of interests will present papers and participate in discussions aimed at uplifting the lot of the Tamils

Given that the magnitude and direction of development know no narrow boundaries, it has been decided that there shall be no political, communal or religious overtones in any segment of the organisational aspects of the Conference.

The Conference will not only serve as a focal point for the best ideas and skills emanating from Tamils all over the World, but will also help afford a critical review of efforts taken thus far to upgrade the socio-economic status of the Tamils.

## PROJECTS IN THE OFFING

**World Tamils Development Bank**

The Federation is at present initiating efforts on a world-wide basis to establish a World Tamils Development Bank. The Bank, on commencement of operations, would serve as an effective and viable reservoir of Tamil funds from near and far, and be in a strong position to assist the international Tamil Community to achieve economic resilience.

**World Tamils University**

In keeping with the guiding principles of the Federation, a World Tamil University is being conceived to meet the specific educational needs of the Tamils.

A specialist committee, comprising well-known and prominent academic experts under the Chairmanship of Professor S V Chittibabu, former Vice-Chancellor of Annamalai University, has been assigned the task of setting up the proposed World Tamils University. The Committee is at present conducting detailed studies on the functional parameters of the university before embarking on its actual inception.

Professional courses such as engineering, medicine, dentistry, veterinary science, accountancy, law and the like will be conducted and it is envisaged that the proposed World Tamils University would be able to satisfactorily meet the everincreasing demand for affordable tertiary education among the Tamils.

## AFFILIATION WITH THE UNITED NATIONS

The World Federation of Tamils will eventually seek affiliation with the United Nations as a non-governmental organisation catering to the general and specific need of a large spectrum of the international community. An intensive membership drive and branches in as many countries as possible would certainly strengthen and enhance the affiliation opportunities of the Federation.

*With Best Compliments from*

## NAVA BHARAT FERRO ALLOYS LIMITED

Registered Office: 6-3-1109/1, Raj Bhavan Road,
Hyderabad 500 482

Tel. 229013 Telex 0452 2084 Grams: NABFAL

NAVA BHARAT FERRO ALLOYS manufacture:

— Ferro Silicon for steel making at Paloncha, A.P.

— Crystal White Sugar at Pugalur, Tamil Nadu; and at Samalkot, A.P.

— Industrial Alcohol & $CO_2$ at Samalkot

— Exports of shrimps from Marine Division, Vizag, to Japan

— Designs and manufacturers turnkey crushing and Material Handling products for coal and other mineral industries.

Associate Companies with foreign Collaboration:

— Voith (India) P. Ltd.: Collaboration with W.Germany to produce fluid couplings and variable speed drive

— MMD (India) P. Ltd.: Collaboration with UK to manufacture patented mineral sizers and conveying equipment

*WITH BEST COMPLIMENTS FROM*

## SRI RAMAKRISHNA OXYGEN LIMITED

KARAMADAI POST, COIMBATORE - 641 104.

PHONES : 89577 & 89578
GRAMS : "ESSOROEL"

MANUFACTURERS OF
HIGH PURITY

OXYGEN, ACETYLENE, MEDICAL OXYGEN, NITROUS OXIDE, NITROGEN GAS, LIQUID NITROGEN AND DRY AIR.

**INSTALLATIONS**

WE ARE ALSO UNDERTAKING CENTRALISED DISTRIBUTION SYSTEMS THROUGH PIPELINES FOR MEDICAL OXYGEN, NITROUS OXIDE, OXYGEN, COMPRESSED AIR, L.P.G., VACUUM, ACETYLENE AND OTHER GASES.

SALES BRANCHES AT:-

1) 2/237, Sidhapudur, Coimbatore —641 044. Phone Nos: 36939
2) 111/B, Mount Road, Guindy, Madras–600 032. Phone Nos: 432686, 435505 & 434491
3) C/o.M/s. Inductocast Steel Foundry Limited 14th K.M.Old Madras Road, Bhattarhalli Bangalore-560 049. Phone Nos: 58544 & 58676.
4) 371/2, Chennayakampalli, Kattamanchi Road, Chittoor-517 127, Andra Pradesh. Phone No:2593

## INDIAN COMMERCE & INDUSTRIES CO. PRIVATE LIMITED

STRUCTURAL CONSTRUCTORS — MECHANICAL CONSULTANTS — FOUNDRYMEN EXPORTERS

Read, & Head Office:
'Beehive Buildings', 29, Prakasam Salai (Broadway)
Madras - 600 108

Cable:
LUCKY, MADRAS
BEEHIVE, MADRAS

Phone:
(044) – 512221
(044) – 512622
(044) – 512423

Telex:
041–7114 ICOM IN

Works:
BEEHIVE FOUNDRY
ENGINEERING WORKS
29 Prakasam Salai
(Broadway)
Madras - 600 108

KOWTHA STEEL PRODUCTS
Ramavarappadu
Krishna District (A.P)
Phone:0866 – 84324
0866 – 84326

Offices:
Kowtha Buildings
Buckinghampet
Vijayawada-520 002
Phone:0866 – 76080

Kowtha Swarajya Vihar
10, Padmanagar
Secunderabad–500 025
Phone:0842 – 867758
0842 – 865907

WITH BEST COMPLIMENTS FROM



## S.C.S. GROUP OF COMPANIES
## SABARI INDUSTRIES
## S.C.S. REAL ESTATES

**Director: S. DHARANI KUMAR**

1, NEELA KANDAN STREET
CHOOLAIMEDU, MADRAS 600 094
Tel: 422728



மலேசியாவில் நடைபெறும்
முதல் உலகத் தமிழர் மாநாடு
சீரும் சிறப்புமாக நடைபெற
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

**வெல்வெட்**

நிறுவனத்தினர்

**ஷாம்புதயாரிப்பில்**
இந்தியாவில் முன்னோடிகள்



டாக்டர் C.K.ராஜ்குமார்

C.K. அசோக்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம்

பட்டினில்ஆடையும் பஞ்சில் உடையும
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்
காசினி வணிகருக்கு அவைகொ டுப்போம்

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்

குடைகள்செய் வோம்உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்

*மகாகவிபாரதியார்*

---


*விளம்பர உதவி*

## ஸ்ரீசாமுண்டீஸ்வரி சுகர்ஸ் லிமிடெட்

வெண்படிக, சர்க்கரை உற்பத்தியாளர்கள்

*பதிவு அலுவலகம்:*

76, உல்சூர் சாலை
பெங்களூர் 560 042
டெல்.நம்.577033/34

*ஆலை*

கே.எம்,ஜோதி 571 422
மாத்தூர் வட்டம், மாண்டியா மாவட்டம்
கர்நாடகா மாண்டியா: 404



குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்கஉண்டு
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தொறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு
காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு
நெஞ்சில் நிறுத்துங்கள் இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார்
கலைமதி


வல்லியினை முத்தமிட்டேன்
வாய்த்த என்றன் மேனியினை
மெல்ல அவள் ஏன் தடவ வேண்டும்—வேறு
நல்ல உடலோ அவட்கு வேண்டும்?


வெய்யில் தாழ வரச்சொல்லடி—இந்தத்
தையல் சொன்னதாகச் சொல்லடி!
கையில் கோடாலி கொண்டு
கட்டை பிளப்பாரைக் கண்டு
கொய்யாக் கனியை இன்று
கொய்து போகலாகும் என்று!
வெய்யில் தாழ வரச்சொல்லடி!—இந்தத்
தையல் சொன்னதாகச் சொல்லடி!
கோபன்


கூடத்திலே மனப் பாடத்திலே—விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்தவிழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின்விழி!
ஆடை திருத்திநின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்!

# கட்டி முடித்த ஒரு காகித மாளிகை படைக்கிறோம்

கிழக்கு விழிக்கிறது!

விழித்த கிழக்கு, மற்ற மூன்று திசைகளையும் அழைக்கிறது!

வியப்பு என்னவென்றால், வெள்ளி கூடக் கிழக்கில்தான் முளைக்கிறது!

அதனால், நான்கு திசைகளில், கிழக்குதான் முதலில் வெளுக்கிறது!

ஒளிஞாயிறும் கிழக்கேதான் உதிக்கிறது!

இயற்கையின் ஆணை இப்படித்தான் இருக்கிறது!

இந்த ஆணைப்படிதான் கிழக்கு நடக்கிறது!

முதல் உலகத் தமிழ் மாநாடு முகிழ்த்த திசை கிழக்குதான்! மலேசியாதான்!

முதல் உலகத் தமிழர் மாநாடு முகிழ்க்கிற திசையும்
கிழக்குதான்! அதே மலேசியாதான்!
இங்கோ பள்ளி எழுச்சி பாடுவதே
நமக்குப் பழக்கம்
பள்ளி எழுச்சியும் பாடலாம்.
ஆனால் பள்ளி எழுச்சி பாடியபிறகு
பைந்தமிழ் எழுச்சி பாடவேண்டாமா?
பைந்தமிழர் எழுச்சிக்குப்
பாடுபடவேண்டாமா?



புலவர் இளஞ்செழியன்

தமிழ்கூறு நல் உலகைச் சேர்த்துக்கொண்டு இவை இரண்டையும் முதலில் பாடியதும் இன்று பாடுவதும் மலேசியாதான்! கிழக்குதான்!

*தமிழன் என்று சொல்லடா*
*தலை நிமிர்ந்து நில்லடா*

என்று நாமக்கல்லார் பாடியதைக் கிழக்குபாடுகிறது. நாமும் சேர்ந்து பாடுகிறோம்.

*மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று*
*இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்*
*தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!*
*மீசையை முறுக்கி மேலே ஏற்று!*
*விழித்த விழியில் மேதினிக்கு ஒளிசெய்!*
*நகைப்பை முழக்கு!நடத்து லோகத்தை!*

என்பதே இந்தத்தமிழர் மாநாட்டின் முழக்கம்.

நம்மைவிட்டுப் பிரிந்து சென்றவர்கள், நாட்டை மறந்து சென்றுவிடவில்லை!

தமிழைப் பிழைசெய்யவில்லை; தமிழால் பிழைக்கவில்லை!

பிழைப்பைத் தேடிச் சென்றவர்கள், உழைப்பைத் தேகமாக்கி நின்றவர்கள் `தமிழர்' எனும் நினைப்பை இழந்துவிடவில்லை!

*எங்குப் பிறப்பினும் தமிழன் தமிழனே* என்கிற பாவேந்தர் பாரதிதாசனின் வரிக்குப் பிறந்த வரிப் புலிகளாய் மலேசியத் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

*தமிழால் ஒன்றுகூடிய நாம்,*
*தமிழர்களாய் ஒன்று கூடுவோம்*

என்று அவர்கள் புதுமுரசு கொட்டுகிறார்கள்.

கிழக்குத் தமிழர்களின் இந்த முழக்கம், கீழ்வானமாய்ச் சிவந்து, உலகமெங்கும் தெரியத்தான் போகிறது.

அதைத் தெரிவிக்கத்தான் இந்தக் காகித மாளிகை!

***சோலைப்பூ,***
***சொக்க வெள்ளிப் பாற்குடம்***
***அமுத ஊற்று***
***பானையாரக் கனத்திருக்கும் வெண்சோறு***
***கவின் நிலவு***

என அடுத்தடுத்துப் புதுவைக் குயிலின் சொல்லெடுத்துப் புகழ் பாடுவதற்கோர் எழுத்தோவியம் — எழிலோவியம் இந்த மலர்!

கடிகாரம் ஓட — காலம் ஓட — அதற்கு முன்னால் ஓடி — இந்தக் காவிய மாளிகையைக் கட்டி முடித்திருக்கிறோம்!

ஆயிரம் ஏடுகள் அன்றாடம் பிரசவிக்கலாம்!
அடிக்கடி பிரசவிக்காத இது ஓர் அற்புத மழலை!
அருஞ்சுவை மாதுளை!

விளைந்த இந்த மாதுளையின் விதை ஒவ்வொன்றும் முதிர்ந்த சுவையுடையது என்று சொல்வேன்.

"வண்டு துளைக்காத இந்த மாமதுர மாதுளையை உண்டு மகிழ வாரீர்" என வையகத்தோரை அழைக்கிறேன்.

மலருக்குள்ளே பலர் — இல்லை, பலருக்குள்ளே மலர்!

படங்களாகச் சிலர் பார்க்கிறார்கள்; பாடங்கள் நமக்குச் சேர்க்கிறார்கள்.

வாழ்த்துக்களாகச் சிலர் வருகிறார்கள். வார்த்தைகள் நமக்குத் தருகிறார்கள்.

கட்டுரைகளாகப் பலர் கனிகிறார்கள். கருத்துமணி மாலைகள் நமக்கு அணிகிறார்கள்.

கவிதைகளாகப் பலர் விளைகிறார்கள். கவிஞர்களாக நம் நெஞ்சில் நுழைகிறார்கள்.

முகப்போவியம்

திருமணத் தம்பதிகள் இருவர்,
[தமிழர்கள் அவர்கள்]
கி.பி.இரண்டாயிரம் வருகிறபொழுது
தங்கள் தேனிலவுக்காக
வானோக்கிச் செல்வதுபோல் வரையுங்கள்

என்றோம். அறிவியலின் அந்த ஆசைக்கனவை — இன்னும் பத்தாண்டுகளில் நிறைவேறப் போகிற அந்த நிசத்தை அப்படியே தனது தூரிகையில் அரங்கேற்றியிருக்கிறார், ஓவியர் அரசு.ஜி.கே. மூர்த்தி அவர்கள்!

அதுமட்டுமல்ல, பின்னட்டையில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பட்டாளத் தோற்றத்தையும் ஒரு கட்டாணி ஓவியமாய்ப் படைத்திருக்கிறார்! மூர்த்தியின் ஓவியக் கீர்த்தியோ நாடறிந்ததாகும்.

பக்க ஓவியம்

இந்த வெள்ளைத் தாள் மாளிகை, வண்ணத்தாள் மாளிகையாய் வடிவம் கொள்ள, வேர்க்காலாய் நின்றவர் ஓவியர் மாமணி கலைமதி அவர்கள். கட்டுரை —கவிதைத் தலைப்புகள் அனைத்தும் அவரது கைவண்ணமே. சும்மா இருந்த இந்த மலர் மாளிகையின் சுவர்களில் பல இடங்கள்— அவருடைய ஓவியங்களையே சுமந்திருக்கின்றன.

படிதிருத்தல் பணி

கலைமாமணி பட்டுக் கோட்டை குமாரவேல்,
கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்,
ஓவியப் பாவலர் முவலவன்—இவர்கள் மூவரும் படிதிருத்த உதவியவர்கள்.

***பாவேந்தர்***
***பாட்டோவியம்***

ஓவியர்கள் லதா, கோபன், கலைமதி, குமார், சசி, வலவன், வாசன் வைஜயந்தி எனும் இவர்கள், பாவேந்தரின் பாட்டு வரிகளுக்கு வண்ண ஓவியங்கள் தீட்டியிருக்கிறார்கள். இந்த எட்டு ஓவியர்களைக் கொண்டு எண்பது ஓவியங்கள் தீட்டியிருக்கலாம். ஆனால், எட்டு ஓவியங்களே இதில் இடம் பெற்றிருக்கின்றன. எதிர்காலம் இடம்தந்தால், அந்த எட்டு எண்பதாகலாம். எங்கள் எண்ணங்கள் ஈடேறலாம்.

இவர்களுக்கும், இவர்களுக்கு முன் இருக்கும் அவர்களுக்கும்,

அன்புடன் இயங்கிய அட்சரா லேசர் நிறுவனத்தார்க்கும், சுடச்சுட அச்சிட்ட சுனிதா ஆப்செட் அச்சகத்தார்க்கும், விளம்பரங்கள் தந்த பெருமக்கட்கும் மலர்க்குழுவின் சார்பிலும், மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் சார்பிலும், மாமன்றப் பொறுப்பாளர்கள் சார்பிலும் நன்றி மாலை சூட்டுகிறோம்.

*தமிழர்நாம் எல்லாரும்*
*தலைநிமிர்ந்து நின்றிடுவோம்!*
*தரணி எங்கும்*
*தமிழரென இருப்போரைத்*
*தலைதாழ விட்டிடாமல்*
*நிமிர வைப்போம்!*

*தமிழரெனப் பெயர்சூடித்*
*தாழ்ந்திருந்த நாட்களினைத்*
*தகர்ப்போம்!மண்ணில்*
*தமிழர்க்குத் தமிழர்களே*
*எதிர்ப்பாகத் தலைதூக்கில்*
*தலையைச் சாய்ப்போம்!*



மலர் ஆசிரியர்



# மாமன்றமும் மாநாடும்

## டாக்டர் வி. டேவிட் எம்.பி

(தலைவர், உலகத் தமிழர் மாமன்றம்)

பாமரராய், விலங்குகளாய்
உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு,
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ? சொல்லீர்!

என்னும் பாரதியாரின் பாட்டுவரிகளை என் இளமைக்காலம் முதற்கொண்டு அசைபோட்டுக் கொண்டிருப்பவன் நான்.

ஊமையராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழ்கின்றோம்

—என்று அந்த மகாகவிஞன் சொன்ன நிலைமையிலும் இன்றளவும் பெரிய மாற்றம் ஒன்றும் நிகழ்ந்துவிட வில்லை.



தமிழ் இனிப்பாக இருக்கின்றது. ஆனால், உலகத் தமிழர்களின் வாழ்வு இனிப்பாக இல்லை. உலக அரங்கிலே, அவர்களுடைய நிலை, இரங்கத் தக்கதாகவே உள்ளது. தமிழரல்லாத வர்கள் பல்வேறு துறைகளிலும் தலை நிமிர்ந்து வாழுகிறார்கள்; தமிழர்களோ, குனிந்த தலை நிமிராதவர்களாய், முதுகிலே கூன் விழுந்தவர்களாய், வாழ்விலே தலைதூக்க முடியாதவர்களாய்த் தாழ்ந்து கிடக்கிறார்கள். "தமிழர்களைக் கைதூக்கி விடுவார் யார்?" எனும் கேள்விக்குறியே இன்னும் நீடிக்கிறது. உலகமெங்கும் பல்வேறு நாடுகளிலே வாழ்கிற தமிழர்களின் எண்ணற்ற பிரச்சினைகளை எண்ணிப் பார்ப்போர் மிகச் சிலரே! தமிழர்களின் தலைவர்கள், அவரவர்களின் நாட்டுப் பிரச்சினைகளையே தீர்க்கவேண்டியவர்களாய் உள்ளனர். ஆயினும், தமிழகத்திற்கப்பால் நம் தேமதுரத் தமிழோசை, நெடுங்காலமாக ஒலிக்கிற நிலையில், அந்த ஓசைக் குரியோரின் ஆசைக்கனவுகளைப் பற்றி நாம் உணர்ந்து பார்க்க வேண்டாமா?

அந்த ஒரு சிந்தனையின் விளைவே உலகத் தமிழர் மாமன்றம்

பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் பிறந்த செப்டம்பர் 17-ல், 1984 ஆம் ஆண்டு, உலகத் தமிழர் மாமன்றம் உருவாகச் செய்தோம். இந்த மன்றம் உருவாகக் காரணமாக இருந்தவர்களை எனக்கு உற்ற துணைகளாய் விளங்கியவர்களை நான் என்றும் மறக்க இயலாது; இந்த நேரத்தில், அவர்களுக்கெல்லாம் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழர் மாமன்றம், ஒரு பன்னோக்குப் பாசறை! விரிந்து பரந்த வானத்தைப் போன்றும், அகன்று நிற்கிற நிலத்தைப் போன்றும், ஆழத்தைக் கொண்ட கடலைப் போன்றும் இதன் கொள்கைகள், எண்ணங்கள், குறிக்கோள்கள், நோக்கங்கள், திட்டங்கள், செயல்முறைகள் பரந்தவை; விரிந்தவை; ஆழமானவை.

ஆனால், உடனடியாகவும் விரைவாகவும் செய்து முடிக்க வேண்டிய இரண்டே இரண்டு செயல்கள், இந்த மன்றத்தின் உயிர்நாடிக் கொள்கைகளாகும்.

1. உலகத் தமிழர் வங்கி

2. உலகத் தமிழர் பல்கலைக் கழகம்

இரு கண்களைப் போல் விளங்குகிற திட்டங்கள் இவை. இவற்றைப் பற்றிப் பேசுகிற போது, தமிழர்களிலே பலர் - ஏன் மிகப் பலர் தங்கள் விழிகளை வியப்பால் அகல விரிக்கிறார்கள். "இவை வெறுங்கனவுகள், வெற்று வேட்டுகள்" என்று சொல்லிவிட்டுப் போவோரும் உண்டு. ஆனால், இவை இரண்டையும் நாங்கள் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம். தமிழர்கள் நூற்றுக்கு நூறு பயனடைய இவை இரண்டும் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும். முயன்றால் முடியாதது இல்லை; `முயற்சி திருவினையாக்கும்' எனும் வள்ளுவரின் சொற்றொடரை நாம் மறந்து விடவுமில்லை. உலகத் தமிழர்மாமன்றத்தின் உன்னதப் பணிகளைக் காலம்தான் கணக்கிட வேண்டும். ஆனால், அது தன் உயிரனைய பணிகளுக்காக உச்சிமலை வரை பயணம் செய்தே தீரும்.

1987 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் மாநாடு—உலகத் தமிழர் மாமன்றத்தின் முயற்சிதான்! 650 பக்கத்திலே அருமையான ஒரு மலரைத் தயாரித்த பொறுப்பு—உலகத் தமிழர் மாமன்றத்தின் தோள்களிலேதான் வீற்றிருந்தது! மாண்புமிகு அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள், உலகத் தமிழர் மாமன்றம் தொடங்கிய ஆறாம் மாநாட்டை, நான் சிறையில் இருந்த நேரத்தில், பொறுப்பேற்று நடத்திப் புகழ்படைத்தார். அதற்காக, அவருக்கு எனது நன்றியை இப்போது கூறிக் கொள்கிறேன். ஆனால், ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு 500 பேராளர்களுடன் தமிழகத்திலிருந்து பங்கேற்ற உலகத் தமிழர் மாமன்றத்தின் முக்கியத்துவத்தை வரலாற்றிலிருந்து யாரும் மறைத்து விட முடியாது.

உலகத் தமிழர் மாமன்றம், ஒரு புதிய தமிழர் சமுதாயத்தை உருவாக்குகின்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுகிறது. "மனித அடிப்படை உரிமை மீறல்கள்" உலகெங்கும் தலைவிரித்தாடுவதை, இந்த மாமன்றம் உற்று நோக்குகிறது. 1991 ஆம் ஆண்டு, அதுபற்றிய ஒரு கருத்தரங்கை நடத்தவும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

உலக நாடுகள் மன்றத்தில், ஓர் உறுப்பியம் பெற்றுப் `பார்வையாளர் நிலை'யைப் பெறவும், உலகத் தமிழர் மாமன்றம் தனது முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. "சாதிமத பேதமற்ற சமுதாய அமைப்பு" உருவாக்கப்படல் வேண்டும் என்பதே இம் மன்றத்தின் விழுமிய குறிக்கோள். அதனால், அத்தகைய ஒரு சமுதாயம் அமைப்பதற்கான ஆக்கப் பணிகளிலே மன்றம் அயராது ஈடுபட்டு உழைத்து வருகிறது. உலக அகராதிகள்—ஏன் யுனெஸ்கோ வெளியீடுகளிலே கூட, `பறையர்' எனும் சொல், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அச்சிடப்பட்டுள்ள வேதனையைக் காண்கிறோம். அந்தச் சொல்லை அகற்றுவதற்கும் மன்றம் ஆவனசெய்து வருகிறது.

மற்ற அமைப்புகளின்று மாறுபட்ட சிறப்புகளையுடையது மன்றம்! தமிழினப் பாதுகாப்பு, தமிழினத்தின் பொருளாதாரப் பாதுகாப்பு, மொழி, கலை, இலக்கியம், சமயம், மருத்துவம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் பாதுகாப்பு என நம்மை எதிர்நோக்கும் எல்லாப் பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து, அவற்றிற்கான தீர்வுகளைப் படைக்க, மன்றம் அவாவுகிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் எவரானாலும், இம் மன்றத்தில் இணையலாம், பணியாற்றலாம்.

உலகத் தமிழர் மாமன்றக் கிளைகள், சிறிலங்கை, பிஜி, இங்கிலாந்து, மொரிசியசு, அமெரிக்கா, ஜெர்மனி, கனடா போன்ற நாடுகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. அதற்கான கடிதப் போக்குவரத்துகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் மாமன்றத்தின் கிளைகள் நிறுவப்படும்.

"முதல் உலகத் தமிழர் மாநாடு" என்னும் பெயரிலே இந்த மாநாடு நடைபெற்றாலும், தமிழ் மொழி ஆய்வும் இதிலே ஒரு பகுதியாக அமையும். தமிழ் இல்லாமல் தமிழர்கள் இல்லையல்லவா? ஆனால், தமிழர்களால்தான் தமிழ் உள்பட, மற்ற எல்லாமே தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகவே, இந்த மாநாட்டைத் தமிழர் மாநாடாகவே நடத்துகிறோம்.

இந்த மாநாடு சிறக்க உழைத்த மன்றத்து உறுப்பினர்கள், மாநாட்டுக் குழுவினர், மலர்க் குழுவினர், பேராளர்கள், செயல் வீரர்கள்

அனைவருக்கும் என் மகிழ்வார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள், பன்னாட்டுத் தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாருக்கும் தலைவணங்குகிறேன்.

உலகத் தமிழர் மாமன்றம் தன் குறிக்கோளை அடைய உங்கள் அனைவரின் துணையையும் தூண்டுகோலையும் நாடுகிறேன்.

## உலகத் தமிழர் மாமன்றம் மலேசியக் கிளை

### உச்சமன்ற உறுப்பினர்கள் 1989/1990.

**தலைவர்**

டாக்டர் வி.டேவிட்

**துணைத் தலைவர்**

திருச்சுடர் கே.ஆர்.ராமசாமி

**உதவித் தலைவர்கள்**

திரு.வி.கே.சின்னப்பன்
திருமதி துளசி

**பொதுச் செயலாளர்**

ஜி.பெருமாள்

**துணை பொதுச் செயலாளர்**

ஜி.எஸ்.மணியம்

**பொருளாளர்**

லோ.அன்புராயன்

**குழு உறுப்பினர்கள்:**

கே.ராமன்
ஆர்.நீலமேகம்
ஆர்.இரத்தினம்
டாக்டர் ஐ.லூர்துசாமி
பி.பாலன்
பி.ஏ.ரஹீம்
எ.தனலெட்சுமி
எம்.சின்னதுரை
கோவி.பெருமாள்
ஜி.சுப்பிரமணியம்
எம்.கஸ்தூரிபாய்
சிவகாமி ராமையா
என்.குள்ளிணன்
இராமானுஜம் பெருமாள்
எஸ்.எம்.பி.சுந்தரேசன் பிள்ளை
விமலாதேவி
எஸ்.டி.சந்திரமோகன்
ஜே.பி.சாமுவேல் ராஜ்
கே.சாமிநாதன்
கே.குமரன்
என்.ஸ்ரீதரன்
எம்.ராஜேஸ்வரி
செல்வசுகுமாரன் பெருமாள்
எம்.கோவிந்தராஜ்
எம்.எஸ்.மணியம் (எம்.சுப்பிரமணியம்)
எம்.சந்திரசேகரன்
எம்.எஸ்.சின்னப்பன்
எஸ்.ஆர்.கிருஷ்ணன்
சி.கோபி
டி.பாலகிருஷ்ணன்
எம்.ஆர்.முனிவேல்
எஸ்.வி.மணியம்
இ.ஏகாம்பரம்
ஆர்.எஸ்.ராஜா
ரமணி சுப்பிரமணியம்
பாண்டுரெங்கம்
என்.இ.அண்ணாமலை
டி.ராஜேஸ்வரி
பி.மணியரசு
தியாகராஜன் (தியாகா)
டி.பாலா
ஏ.பெரியசாமி
பி.பெரியசாமி
சு.சந்திரா

# எங்கள் இமயம்




## இரா. காந்தி வழக்கறிஞர்

(பொதுச் செயலாளர், உலகத் தமிழர் மாமன்றம்)


இமயத்தின் உச்சியில் இக்காலத்தில் மட்டுமல்ல— இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியும்கூடக் கொடி நாட்டிய இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனை இலக்கிய வரலாற்றிலே நாம் படிக்கிறோம். பாரதிபாடியதற்கிணங்க, வெள்ளிப் பனிமலையிலே அன்றும் உலவிவிட்டோம், இன்றும் உலவிவிட்டோம். ஆனால், கால்விரல்களால் இமயம் தொடுவதுமட்டுமே நமது கனவாகி, அது நனவுமாகி நின்றுவிட்டது! தமிழனது வாழ்விலே அந்த இமயம் வந்ததா? தமிழன் என்பவன் சிந்தனையின் சிகரம்தான்—ஆனால், அந்தச் சிகரம், அவன் செய்யும் தொழிலிலே விளைந்ததா? இன்றைய நமது கேள்வி இதுதான். இந்தக் கேள்வியின் ஓர் ஒளி வடிவம்தான், கோலாலம்பூரில் நடைபெறுகிற இந்த முதல் உலகத் தமிழர், மாநாடு என்று நான் கூறுவேன்.



தமிழர் மாநாட்டின் மையச் சிந்தனை என்பது, தமிழர்தம் வாழ்வும் வளர்ச்சியுமே ஆகும். அந்த வாழ்வும் வளர்ச்சியும், தமிழரின் வழித்தடத்தை நோக்கி வரவேண்டுமானால், அதற்கு வழி என்ன என்பதை ஆராய்வதுதான் இந்த மாநாடு!

தமிழைப் பற்றிப் பேசலாம்; தமிழைப் பற்றித் தான் காலமெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பேசுவது தவறுமில்லை! ஆனால், அதையே தவறாமல் பேசிக் கொண்டிருந்தால், அதனால் தவற விடுவது என்ன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நமக்கு வாழ்விருக்கிறது; வளர்ச்சியில்லை. ஏன்? துணையில்லை; துணிவில்லை; தொழில் இல்லை.

தொழில் செய்யாத் தமிழர்களால் வாழ்வு எப்படி வளமுறும்?

தொழில் துறையைத் தூரத்திலேயே நிறுத்திவைத்துவிட்டு, வாழ்வின் துயரம் போகவில்லையே என்றால், எப்படிப் போகும்?

“சும்மா இருப்பதே சுகம்” என்றும் “சிவனே என்றிரு” என்றும் “வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்” என்றும் சொல்லிச் சொல்லிச் சோம்பலையும் தூக்கத்தையும் வளர்த்தவர்கள்—வளர்ப்பவர்கள் தமிழர்கள் என்கிறபோது, வறுமைக் கோடு எவ்வாறு அகலும்?

"பாரத தேசம்" என்ற தலைப்பிலே பாரதி ஒரு வன்தான்—பட்டியல் தருகிறான் "இன்னின்ன தொழில்கள் செய்யுங்கள்" என்று. பாரதி பரம்பரையைக் கடந்த இன்றைய பாவாணர்களின் கவிதைகளிலே அந்தப் பார்வை இல்லையே, ஏன்?

**உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்** என்று பாரதி பாடினான். உலக அரங்கிலே தமிழர்கள் தலைநிமிர்ந்து உலா வருவதற்கு அவர்களுடைய பொருளாதாரம் இமயம்போல் உயர வேண்டும். பொருளாதாரம் இமயம்போல் உயரவேண்டுமானால், அதற்கேற்ற தொழில்கள், வாணிகங்கள், தமிழர்களுடைய சிந்தனையிலே சிகரம் கொள்ள வேண்டும்.

உலகம் எங்கும் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால், அவர்களிலே எத்தனைபேர் தொழிலதிபர்களாய், பிர்லாக்களாய், டாட்டார்களாய், கோயங்காக்களாய் வளர்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், ஏக்கம்தான் நம்முடைய பெருமூச்சாய் வெளிப்படும். அதே சமயம், கூலிகளாய், கொத்தடிமைகளாய், தோட்டத் தொழிலாளர்களாய், பாட்டாளிகளாய்த் தேய்கிற தமிழர்களின் எண்ணிக்கைக்கோர் எல்லையே இல்லை. இந்த நிலை மாற வேண்டும் என்பதுதான், நமது எண்ணம், கனவு, இலட்சியம் ஆகும்.

இந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடுகிறவர்கள், பாடுகிறவர்கள், எழுதுகிறவர்கள், எண்ணிப் பார்க்கிறவர்கள், செயலாற்றுபவர்கள் நமக்குத் தேவை.

பழமைப் புழுக்களையே பாடல்களிலே நெளிய விடுகிறவர்கள், பழம்பஞ்சாங்கப் போர்வழிகள், பாட்டிகள் நமக்குத் தேவையில்லை.

"திரை கடல் ஓடித் திரவியம் தேடு" என்பது பழைய மொழி. "திரை கடல் ஓடாமல் திரவியம் தேடு" என்பதைப் புதுமொழியாக நாம் கொள்ள வேண்டும் என்பதுதான் எனது ஆசை. அதற்கு ஒரே வழி, நமது திறமை வீணாக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கும் புதிய தொழிலுக்காக — அந்தத் திறமை செலவழிக்கப்பட வேண்டும்.

ஆம் தோழர்களே! தமிழர்கள் வாழ்விலே இமயம் படைக்கப்பட வேண்டும். அந்த இமயம் ஆயிரமாயிரம் தமிழர்களை வாழ்விக்கக்கூடிய அருமையான தொழிலாய் அமைய வேண்டும். அறிவியலின் துணை கொண்டு—தொழில்நுட்ப அறிவின் துணை கொண்டு—ஒவ்வொரு தமிழனும் தன் சொந்தக் காலிலே நின்று தொழில்துறையிலே விந்தை புரிய வேண்டும்.





# தமிழரும் தமிழும்

## இரா. முத்துக்குமாரசாமி

(மலர்க்குழுத் தலைவர்)

ஓங்கலிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள காரணத்தால்தான் நாமமது தமிழரெனக் கொண்டிங்கு நாம் வாழ்கிறோம்.

'வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் எனத் தமிழ்வழங்கு நிலத்தின் எல்லையைத் தொல்காப்பியம் கூறியிருப்பினும் தமிழ் அதற்கு முன்னரும் பின்னரும் அதன் எல்லைகடந்து புகழ்பரப்பியது. பரப்பிக்கொண்டிருக்கிறது. பஃறுளியாறும் பன்மலையடுக்கத்துக்குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்வதற்கு முன்பிருந்த குமரிக் கண்டத்தில் தமிழையே தாய்மொழியாகக்கொண்ட தமிழர்கள் வாழ்ந்திருந்தனர். இன்றோ 'திரைகடலோடியும் திரவியம்தேடு' என்ற முதுமொழிக்கிணங்கத் தமிழர்கள் இந்தியத்திருநாட்டின் வேற்று மாநிலங்களிலும் கடல்கடந்து இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிஜி, மொரீசியசு, ரியூனியன் இங்கிலாந்து, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிலும் குடியேறியுள்ளனர்.



வளமான வாழ்வு கிட்டுமென்றே வெளிமாநிலங்களுக்கும் வேற்று நாடுகட்கும் சென்ற தமிழர்கள் சூழ்நிலைகாரணமாகத் தம் தாய்மொழியாகிய தமிழைப் பேணிக்காக்க இயலாத நிலையிலுள்ளனர். தலைமுறை தலைமுறையாகத் தங்கள் தாய்த்திருநாட்டை மறந்து வாழும் மொரீசியசுத்தீவுத் தமிழர்கள் போன்றோர் தாங்கள் இனத்தால் தமிழர்கள் என்றுசொல்லிக் கொள்கிறார்களே தவிர, அவர்களால் தமிழில் பேசவோ எழுதவோ படிக்கவோ முடியவில்லை. பெயரளவில் மட்டுமே அவர்கள் தமிழர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மொரீசியசுத் தீவில் இன்றுவாழும் தமிழர்கள் பெரும்பாலும் இன்று நான்காவது, ஐந்தாவது தலைமுறைத்தமிழர்களாகவே உள்ளனர். ஐம்பது அறுபது வயதைக் கடந்தவர்கள் மட்டுமே இன்று தமிழைப்பேசிப் படித்து மகிழ்கின்றனர். அவ்வயதிற்குக்கீழுள்ள மக்களால் எதுவும் இயலவில்லை. சமயஉணர்வே இன்று அவர்களைத் தமிழர்களாக வாழவைத்துக் கொண்டிருக்கிறது. ஆயிரம் சதுரமைல் பரப்பளவுகூட இல்லாத அச்சிறு தீவில் நூற்றுக்கணக்கான சிறுகோயில்கள் உள்ளன. அக்கோயிலுக்குச் செல்வதிலும் வழிபாடு செய்வதிலும் அம்மக்கள் ஆர்வமாக உள்ளனர் வழிபாடாற்றும் போது தம்மை மறந்து அழகுத்தமிழில் இனிய இசையில் தேவார திருவாசகப் பாடல்களைப்பாடுகின்றனர். அதற்கு முன்னரோ பினனரோ அவர்களால் ஒரு

சொல் கூடத்தமிழில் பேச இயலவில்லை. அந்நாட்டு மக்களின் பொது மொழியாக ஆங்கிலமும் பிரெஞ்சும் கலந்து ஒருவகையான கிரியோல் மொழியையே பேசுகின்றனர்.

அத்தகைய நாட்டில் இன்று அரசியலுணர்வு காரணமாகவும் அரசியல் விழிப்பு காரணமாகவும் இளந்தலைமுறைத்தமிழர்கட்கு, தமிழ் இளைஞர்கட்குத் தமிழ் தாய்மொழி என்ற வகையில் அந்நாட்டு அரசால் பயிற்றுவிக்கப்பெறுகிறது. மகாத்மாகாந்தி நிறுவனம் தமிழ் ஆசிரியர்களை உருவாக்க, தீவின் பல்வேறு பகுதிகளில் இயங்கும் பள்ளிகளில் முதல் ஐந்து வகுப்புவரை தமிழ்ச்சிறார்களுக்குத் தமிழ் பயிற்றுவிக்கப்பெறுகிறது.

அதேபோன்று சிங்கப்பூரிலும் தமிழ்ச்சிறார்களுக்குத் தொடக்க வகுப்புகளில் தமிழ் கட்டாயப்பாடமாகப் பயிற்றுவிக்கப் பெறுதற்கு அந்நாட்டு அரசு ஆவன செய்துள்ளது. தமிழ்கற்ற சான்றோர்கள் அரசின் கல்வித்துறையில் உயரளவில் இருந்துமுறையான நல்ல தமிழ் பயிற்றுவிக்கப்பெற எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். தமிழ் மொழியை ஒலி, ஒளியிழைகள் வாயிலாகக் கற்பிப்பதற்கும் வழிவகுத்துள்ளனர்.

மலேசியத் திருநாட்டிலும் தமிழ்ப் பள்ளிமுதல் பல்கலைக்கழகம்வரை முறையாகக் கற்பிக்கப்பெறுகிறது. தமிழ் நாளேடுகள் தமிழர்களை நடைமுறைத்தமிழில் பேச, எழுத எல்லாவித உதவிகளும் செய்கின்றன. தமிழ்க் கவிஞர்களும் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் தமிழை நல்லமுறையில் வாழவைத்துக் கொண்டுள்ளனர்.

தமிழின் விளைநிலம் தமிழகமாயினும் வளர்பாத்தியாக இலங்கைத்திருநாடு திகழ்கிறது. தமிழர்கள் அங்கே குடியேறியுள்ளனர் என்று கூறுவதைவிடப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன் அந்நாடே தமிழகத்தின் ஒரு பகுதியாகவே திகழ்ந்தது எனலாம். கன்னித் தமிழகத்தின் பெரும்பகுதியைக் கடல் கொண்ட பின் இலங்கை இன்றுள்ள நிலையில் தனித்து இயங்குகின்றது. தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றை அங்குவாழும் தமிழ் மக்கள் கடல்கடந்து மேலைநாடுகட்குச் சென்றாலும் விடாமல் தமிழ்பேசும் தமிழர்களாகவே இன்று உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வேற்று நாடுகளில் வாழ்ந்தாலும் தங்கள் இளம்பிள்ளைகளுக்குத் தாய்மொழியைக் கற்பிப்பதிலோ அல்லது வீட்டில் தமிழில் பேசுவதிலோ அவர்கள் எந்தவிதக்குறையையும் வைக்கவில்லை. பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்குள்ளும் அவர்கள் தாங்கள் தமிழர்கள் என்பதையோ தங்கள் தாய்மொழி தமிழ் என்பதையோ எள்ளளவும் மறக்கவில்லை.

இந்தியத் திருநாட்டிலும் வேற்று மாநிலங்களில் குடியேறியுள்ள தமிழர்கள் தாய்மொழிப்பற்றைவிடவில்லை. ஆங்காங்குத் தமிழ்ச்சங்கங்களை அமைத்தும் தமிழ்ப்பள்ளிகளை அமைத்தும் தமிழ்ப்பயிற்சிக்குத் தேவையான ஊக்கமும் ஆக்கமும் தந்துவருகின்றனர்.

உலகெங்கணும் இத்தகைய சூழ்நிலையிருக்கத் தாய் தமிழ் நாட்டில் இன்று தமிழ் மொழியின் நிலை இரண்டாம் நிலைக்குத்தள்ளப்பட்டுவருகிறது. முந்நூறு ஆண்டுகளாக வெள்ளையன் நம்மையாண்டபோதுகூட நமக்கு இல்லாதிருந்த ஆங்கிலப்பற்று அவன் நம் நாட்டையே மறந்து விட்ட இந்நாளில் உள்ளது. வெள்ளையன் ஆண்டபோது வெள்ளையனால் திணிக்கப்படாத வெள்ளையன் பண்பாடு இன்று நம் இளஞ்சிறார்கள் மீது தமிழர்களாகிய நம்மால் திணிக்கப்பெறுகிறது. சூழ்நிலைகாரணமாக வேற்று நாட்டுத் தமிழர்கள் வேற்று மொழியைப் பேசினாலும் உள்ளத்தால், உணர்வால் தமிழர்களாக வாழுகின்றனர். ஆனால் தமிழகத்தில் தமிழ்உணர்வும் குறைந்துவருகிறது. தமிழகத்தின் நகரப்பகுதியில் வாழும் மக்கள் உடையால்கூட இன்று வேற்று மாநிலத்தாரைப்போலவே வாழவிழைகின்றனர். தமிழ் பயிலாமலே தங்கள் பிள்ளைகள் கல்வியைப் பெறவேண்டுமென்று தமிழகத்துத் தமிழர்கள் விழைகின்றனர். ஆல்போல் தழைத்து அருகுபோல் தமிழகத்தின் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் வேரூன்றிவரும் ஆங்கில வழி மழலைப்பள்ளிகள் இளந்தமிழ் உள்ளங்களில் வேற்று மொழிப் பயிற்சியையும் பற்றையும் விதைத்துப் பயிராக்கி வருகின்றன.

தமிழ் படித்தால் வேலைகிடைக்காது என்றும் வேற்று மொழியைப் பயின்றால் வேலை உடனே கிடைத்துவிடுமென்றும் ஒரு மாயையைத்தோற்றுவித்துப் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்றுவாழும் தமிழர்களின் தாய்மொழிப்பற்றை 'வேலைவாய்ப்பு' வேரோடு பிடுங்கியெறிந்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு மொழி பேசுவதாலோ அல்லது பிறமொழி தெரியாததனாலோ விளைவதில்லை. இன்று வளர்ந்த நாடுகளான—பொருளாதாரத்தில் சிறந்த நாடுகளான மேலைநாடுகளிலேயே 'வேலையின்மை' ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

அமெரிக்க நாட்டினர்க்கே அமெரிக்க நாட்டினரால் வேலை கொடுக்கமுடியவில்லை. அங்கும் இன்று வேலையில்லாத்திண்டாட்டம் பெருகிவருகின்றது. வேலைக்கும் பேசும் மொழிக்கும் என்றும் தொடர்பேயிருந்ததில்லை. அறிவுக்கும் திறமைக்குமே வேலை பெற்றுத்தரும் ஆற்றலுண்டு. அதனை வளர்ப்பதற்குத்

தாய்மொழி குறுக்கே நிற்பதில்லை; மாறாக அதற்குத் தாய்மொழியே முழுக்காரணமாக உள்ளது என்பதை உலகமுழுவதுமுள்ள கல்வியாளர்கள் ஒத்துக் கொள்கின்றனர். குறிப்பாக ஆங்கிலமே தெரியாத, பேசாத தங்கள் தாய்மொழியை மட்டுமே பேசிவருகின்ற ஜப்பானியரும், ஜெர்மானியரும் ரஷ்ய நாட்டினருமே இன்று அறிவியலிலும் பொருளாதாரத்திலும் உண்மையாக முன்னேறி உலகநாடுகளிடையே உயர்ந்துள்ளனர். எனவே அறிவியல் முன்னேற்றத்திற்கும் பொருளாதார வசதிக்கும் வேலை வாய்ப்புக்கும் மொழி ஒரு காரணமில்லையென்பதையும் தாய்மொழி தடையாக இருக்காது என்பதையும் நாம் உணரவேண்டும்.

உலகெங்கும் வாழும் தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட அறிஞர்கள், அறிவியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் தங்கள் தாய்த்திருநாட்டை மறந்துவிடாது தமிழ்நாட்டைத் தொழிற்செல்வம் மிக்க நாடாக மாற்றினால் தமிழ்நாடே தமிழர்க்குத் தேவையான வேலை வாய்ப்பைத் தருவதுடன் தமிழகமும் பாரதமும் தொழில்துறையில் முன்னேறப்பெரிதும் உதவும். தொழில்வளமும் பொருட்செல்வமும் தமிழகத்தில் ஒருங்கே வந்து குவிந்தால் தமிழர்கள் வேற்று நாட்டினரையும் தமிழகத்தை நாடி வரச்செய்யமுடியும். இதன் காரணமாகத் தம் தாய்மொழியாம் தமிழை மறந்து அதனைப் புறக்கணித்துவரும் தமிழகத்துத் தமிழர்கள் தங்கள் தமிழை வளர்க்கவும் உலகெங்கணும் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்கித் தமிழர்களின் பொன்மயமான எதிர்காலத்திற்கு வழிகாட்டவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் உலகத்தமிழர்களை ஒன்றாக இணைக்க மலையகத்தமிழகத் தலைவர் திருடாக்டர் வி.டேவிட் எம்.பி.அவர்கள் பெருமுயற்சியெடுத்து உலகத்தமிழர் மாநாட்டைக் கூட்டியுள்ளார்கள்.

மணங்கவர் மலேசியா தமிழ்மணம் கமழும் நாடாகும். உலகத்தில் முதன்முதல் மொழிக்காக உலகளாவிய அளவில் மாநாடு நடத்திய நாடு மலேசியா. இலங்கைத் தமிழ்ப்பேரறிஞர் டாக்டர் சேவியர் தனிநாயக அடிகளார் தலைமையில் மலையகத் தமிழர்கள் ஒன்றுகூடி முதல் உலகத்தமிழ் மாநாட்டை நடத்தினர். அதன் வழியில் ஆறாம் உலகத்தமிழ் மாநாட்டையும் மலேசியாவில் நடத்தத் தமிழர் தலைவர் திரு.வி.டேவிட் எம்.பி.அவர்கள் வித்திட, மாநாட்டை மண்ணக மக்கள் கண்டு மகிழ்ந்திடச் சீரும்சிறப்புமாக நடத்திமுடித்தவர் மலேசியா அரசு அமைச்சர், தமிழ் ஆர்வலர் மலையகத்தமிழரின் ஒளிவிளக்கு மாண்புமிகு டத்தோசாமிவேலு அவர்கள் மொழிக்காக மொழியின் வளர்ச்சிக்காக முதல் உலகத்தமிழ் மாநாட்டை நடத்திய மலேசியநாடு, இனத்துக்காக, இனத்தின் வளர்ச்சிக்காக முதல் உலகத்தமிழர்மாநாட்டைக் கூட்டுவித்துள்ளது. உலகத்தமிழினம் ஒன்றுபட்டுயர வழிவகுக்கும் இம்மாநாட்டில் எல்லா நாட்டுத் தமிழரும் கலந்து சிறப்புறுவோம்.

உலகத்தமிழர்களே ஒன்றுபடுங்கள். உலகத்தமிழர்கள் அறிவுச் செல்வமும் தொழில் வளமும் பொருளாதார முன்னேற்றமும் பெற்று உலகத்தின் வளமான இனமாகத் தமிழ்இனம் உயரப்பாடுபடுவோம். அரசியல், சாதி சமய வேறுபாடுகளைக்களைந்து நாம் தமிழர், நம் தாய்மொழி தமிழ் என்ற ஒரே உணர்வைக் கொண்டு நம் இனத்தின் முன்னேற்றத்திற்காகவும் மொழியின் வளத்திற்காகவும் உறுதியாக உழைப்போம் வாரீர் வாரீர்.



# மாமன்றம்



## இரா.மதிவாணன்

துணைப் பொதுச் செயலாளர்.
உலகத் தமிழர் மாமன்றம்.

*1984!*

இந்த ஆண்டில்தான் உலகத் தமிழர் மாமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. எனது எண்ணங்கள் பின்னோக்கிச் செல்கின்றன. அந்தக் காலகட்டத்தை நினைக்கிறேன்! இனிக்கிறது! நெஞ்சமெலாம் மணக்கிறது.

நெல்லை மாவட்டம் திசையன் விளையைச் சேர்ந்த திரு வேதமுத்து திருமதி பாக்கியமுத்தம்மாள் ஆகியோரின் அருமந்த புதல்வனாக, மலேசிய மண்ணில் தோன்றிய டேவிட் அவர்கள் தமிழ்மண்ணோடு பல்லாண்டு தொடர்புள்ளவர்கள். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது சென்னைக்கு வருகை தருபவர். 84 ஆம் ஆண்டின் மத்தியில் இத்தகையதொரு வருகையின் போது வழக்கமாக அவர் தங்கும் தாஜ் ஓட்டலில் முதல் சந்திப்பு நிகழ்கிறது.



மலேசிய நாட்டின் தமிழர் தலைவராக, தொழிற்சங்கத் தளபதியாக, சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினராக, பன்னாட்டுத் தொழில் நிறுவனத்தின் உறுப்பினராகப் புகழ் பெற்று விளங்கி "மக்கள் தொண்டர்" எனப் பாசமுடன் அனைவராலும் அழைக்கப்படும் டாக்டர் வி.டேவிட் அவர்கள் அப்போதெல்லாம் தமிழர்களின் தாழ்ந்த நிலையை எண்ணி, தமிழர்களின் மேம்பாட்டுக்கு உழைக்கக்கூடிய ஒரு அமைப்பை எங்ஙனம் தோற்றுவிக்கக் கூடும் என்னும் சிந்தனையிலேயே திளைத்திருப்பார். இச்சிந்தனைக்குச் செயல்வடிவம் எவ்வாறு தருவது எனத் தன்னைச் சந்திக்க வரும் நண்பர்களிடத்தில் விவாதிப்பார். அப்போதைய அமைச்சர் திரு.க.இராஜாராம், அவரது இளவல் டாக்டர் காந்தராஜ், கலைமாமணி எம்.கே.முஸ்தபா, டாக்டர் இரா.சனார்த்தனம், வழக்கறிஞர் வி.ஆர்.எஸ்.சம்பத், மு.மு. நாயகம், அச்சக நண்பர் மணி எனப் பல்துறை நண்பர்களிடமும் கலந்தாலோசித்து " உலகத் தமிழர் மாமன்றம்" என்னும் அமைப்பினை உருவாக்குவது என முடிவாகியது.

டாக்டர் டேவிட் அவர்களின் எளிமை, இன்முகத்துடன் பழகும் தன்மை, தமிழர் முன்னேற்றத்தில் அவர் கொண்டிருந்த உயர் சிந்தனைகள் ஆகியவற்றால் கவரப்பட்ட நான் அவருடன் இணைந்து செயலாற்ற முன்வந்தேன். கணக்குத்

தணிக்கையாளர் திரு.மோகனசுந்தரம் அவர்களிடம், மாமன்றத்தின் அமைப்புச் சட்டங்கள் தயாரிக்கவும், சங்கமாகவும், டிரஸ்ட்டாகவும் பதிவு செய்திடவுமான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு, அவ்விதமே செய்யப்பட்டன.

இத்தகைய உன்னதமான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்கவிருக்கின்ற இம்மாமன்றத்தின் செயல்பாடுகளில் என்னையும் இணைத்துக் கொள்ள நல்வாய்ப்பளித்த டாக்டர்.வி.டேவிட் அவர்களை நன்றியுடன் நினைவுகூர்ந்து "உலகத் தமிழர் மாமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" எனும் கட்டுரையைப் படைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகில் வாழும் தமிழ் மக்களை ஒன்று சேர்க்கவும், அவர்களுடன் தொடர்பினை வளர்க்கவும், ஒருங்கிணைக்கவும், அவர்களிடையே கூட்டுறவைப் பெருக்கவும், கீழ்க்கண்ட நோக்கங்களை நிறைவேற்றவும் உலகத் தமிழர் மாமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

- தனிநபர்கள் முழுமையான, வளமான வாழ்க்கை நடத்த, மனித உரிமைகள், சமூக சுதந்தரம் பேணப்பட—
- மதஉரிமை, பண்பாடு, பாரம்பரியங்களைப் பின்பற்ற—
- தமிழ்மொழியை வளர்க்க, ஆராய்ச்சிகள் நடத்த, அம்மொழியின் மேம்பாட்டுக்குச் சுதந்தரத்துடன் பணிபுரிய—
- சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் பெற—
- உலகம் முழுவதும் வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களை அமைத்தல்— பொருளாதார வளர்ச்சிப் பணிகளை உருவாக்குதல் போன்ற திட்டங்கள் மூலம் தமிழர்களின் பொருளாதார நிலைமை வளப்படுத்திட—அவர்களின் உயிருக்கும், சுயமரியாதைக்கும் பாதுகாப்புப் பெற—
- மக்களாட்சி முறைப்படி தங்களது அரசாங்கத்தினை மாற்ற—
- முழுதேசிய சுதந்தரம் பெறுவதற்கும், சுயாட்சி பெறுவதற்கும் உள்ள உரிமைகளைப் பெறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க—அத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவளிக்க.
- சமூக நீதியுடன், மனித உரிமைகள், பொருளாதார ஜனநாயகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த அனைத்துலக நலம் என்னும் அமைப்பின் பேரில்தான் நிலையான அமைதியை உருவாக்க முடியும் என்றும், இத்தகைய உரிமைகளை மறுப்பதோ அல்லது கட்டுப்படுத்துவதோ மனித நாகரிகத்துக்கு எதிர்ப்பானது என்றும், அமைதியைக் குலைக்கும் என்றும் உறுதியாக மாமன்றம் நம்புகிறது.
- ஜனநாயகத் தத்துவங்களை முழு உறுதியுடன் போற்றும் இம்மாமன்றம் மனித சுதந்தரத்துக்காக உழைக்கும்.
- தமிழர்கள் அனைவருக்கும் சமவாய்ப்பினைப் பெருக்கவும் முயற்சித்தல்.

**தோற்றம்:** உலகத் தமிழர் மாமன்றம் 1984 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 17 ஆம் நாள் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய அரசாங்க விதிகளின்படி ஒரு சங்கமாகவும், டிரஸ்ட்டாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கிளைகள்:** சென்னையில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இம்மாமன்றம் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் பதிவு பெற்ற கிளையைக் கொண்டு இயங்கி வருகிறது. இதேபோல் மோரீசு நாட்டின் கிளை ஒன்றும் இயங்கி வருகிறது. தற்சமயம் இலங்கையில் நிலவி வரும் பாதுகாப்பற்ற தன்மை காரணமாக இலங்கைக் கிளை தமிழகத்தில் இயங்கி வருகிறது. பிரான்சு, பர்மா, பிஜி, ரேயூனியன், இந்தோனேசியா, ஜெர்மனி, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மாமன்றக் கிளைகளைப் பதிவு செய்யும் முயற்சிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

**திட்டங்கள்:** தமிழர்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கப் பெயரளவிலான ஒரு அமைப்பு மட்டுமே உதவாது என்பதில் மாமன்றம் நம்பிக்கை கொண்டுள்ளதால், ஆக்கப்பூர்வமான திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்துவதன் வாயிலாகவே நிறைவேற்ற இயலும் என்பதில் உறுதியான எண்ணம் கொண்டிருப்பதால், நீண்ட காலத்திட்டங்கள் இரண்டைத் தீட்டி, நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

**1.உலகத் தமிழர் பல்கலைக் கழகம் நிறுவுதல்:** தமிழர்கள் சிறுபான்மையினராக வாழும் பெரும்பாலான நாடுகளில், தமிழ்மாணவர்கள் கல்வி பெறுவதற்கான சமவாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு வருவதால், அத்தகையோருக்கு முன்னுரிமை வழங்கும் வகையில், பல்கலைக் கல்வி நிறுவனங்களை உள்ளடக்கிய "உலகத் தமிழர் பல்கலைக் கழகம்" இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் நிறுவப்படும். பொறியியல், மருத்துவம், மேலாண்மைக் கல்வி ஆகியவற்றில் பட்டம் மற்றும்

பட்டயப் படிப்புக்களைத் தருவதோடு, ஒரு உயராய்வுமையமாகவும் செயல்படவிருக்கும் இதில் 50 விழுக்காடு இடங்கள் அயல்நாட்டுத் தமிழருக்கென ஒதுக்கப்படும். துவக்கத்தில் பொறியியல், கல்வியைத் தரும் நிறுவனத்தை உருவாக்கி, நாளடைவில் மருத்துவம், வேளாண்மை, மேலாண்மை உள்ளிட்ட அனைத்துக் கல்வியைத் தரும் நிறுவனங்களைத் தோற்றுவித்து, இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பல்கலைக் கழகமாக உருவாக்கப்படும்.

*2.உலகத் தமிழர் வங்கி அமைத்தல்:* தமிழர்களின் பொருளாதார வசதிகளைப் பெருக்குவதற்கு உதவும் வகையில் "உலகத் தமிழர் வங்கி" ஒன்றை நிறுவும் முயற்சியில் மாமன்றம் ஈடுபட்டுள்ளது. இஸ்லாமியர்களுக்கென `இஸ்லாமிக்' வங்கியும் செயல்படுவதைப் போல, தமிழருக்கெனத் `தமிழர் வங்கி'யும் செயலாற்றும் இவ்வங்கி அமைப்புப் பணியின் முதல் கட்டமாக லண்டனில் உள்ள `பெர்மிங்டன்ஸ்' நிறுவனத்தாருடன் கலந்து பேசப்பட்டு, ஸ்பெயின் நாட்டில் உள்ள `ஜிப்ரால்டர்' நகரில் முதலில் வங்கியைத் தோற்றுவித்து, இங்கிலாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் கிளைகளை விரிவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வங்கியை நிறுவ குறைந்த பட்சம் ஒரு மில்லியன் பவுண்டுகள் தேவையெனக் கணக்கிடப்பட்டு, இதற்கான நிதி ஆதாரங்களைப் பெருக்கும் முயற்சியில் மாமன்றம் இறங்கியுள்ளது.

குறைந்தது 53 விழுக்காடு அளவிலான இவ்வங்கியின் பங்குகள் மாமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும். இவ்வங்கி நிறுவும் முயற்சிக்கு, இந்தியன் வங்கியின் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான திரு. எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் பெரிதும் துணையாகச் செயலாற்றி வருகிறார்கள்.

*3. பன்னாட்டு அமைப்புக்களில் பங்கு:* பன்னாட்டு நிறுவனங்களான ஐக்கிய நாடுகள் சபை *(UNESCO)*, மனித உரிமைக் கழகம் *(HUMAN RIGHTS COMMISSION)* போன்றவற்றில் உறுப்பினராகவோ, பார்வையாளராகவோ இணைவதற்கான முயற்சிகளில் மாமன்றம் ஈடுபட்டுவருகிறது. உலக அரங்கில், முக்கியத்துவம் வாய்ந்த பல்வகை நிகழ்வுகளில் மாமன்றத்தின் பங்கை ஆற்றிட இவை உதவும்.

*உறுப்பியம்:* உலகத் தமிழர் மாமன்றத்தின் குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் ஏற்றுச் செயல்பட முன்வரும் எந்தத் தனிநபரும், அமைப்புக்களும் மாமன்றத்தில் உறுப்பினராகலாம்.

***செயலாக்கங்கள்:***

*1.உலக இளைஞர் மாநாடு:* உலக இளைஞர் ஆண்டாகக் கொண்டாடப்பட்ட 1985 ஆம் ஆண்டில், உலகத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் வகையில், "உலக இளைஞர் மாநாடு" ஒன்றை, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உலகத் தமிழர் மாமன்றம் நடத்தியது. தமிழகத்திலிருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டில், தமிழ் இளைஞர்களின் மேம்பாட்டுக்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன.

*2.ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு:* 1980 ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குப் பிறகு, மூன்றாண்டுகளுக்கு ஒரு மாநாடு என்ற முடிவின்படி 1983 இல் ஆறாவது மாநாடு நடைபெற்றிருக்க வேண்டும். இதற்கான முயற்சிகளில் இறங்கி, இரண்டாண்டுகளின் கடுமையான உழைப்புக்குப் பிறகு 1987 இல் மலாயாப் பல்கலைக் கழகமும், உலகத் தமிழாராய்ச்சி மன்றமும், உலகத் தமிழர் மாமன்றத்துடன் தோள் கொடுத்துச் செயலாற்றி, ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிறப்பாக நடைபெற்றது. தமிழகத்திலிருந்து தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் 500 பேராளர்களும் கலந்து கொண்டு நடைபெற்ற அம்மாநாட்டின் போது, மாமன்றத் தலைவர் டாக்டர்.வி. டேவிட் அவர்கள் அரசியல் காரணங்களுக்காகச் சிறை வைக்கப்பட்டு, மாநாட்டில் கலந்து கொள்ள இயலாத சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்ட போதும், மாநாட்டின் வெற்றிக்கு டாக்டர் வி. டேவிட் அவர்களின் பங்களிப்பை, வரலாற்றிலிருந்தும், கலந்து கொண்ட ஆயிரக் கணக்கான பேராளர்களின் நெஞ்சிலிருந்தும் மறைக்க முடியாமல் சுடர் விட்டுக் கொண்டிருக்கும் உண்மை குறிப்பிடத்தக்கதாகும்.

*3.ஈழத் தமிழர் பிரச்சினை:* ஈழத்தில் சமவாய்ப்புக்களும், அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டு, அல்லலுற்று வாழும் தமிழர்களின் விடுதலை வேட்கையின் வெளிப்பாடான `தமிழீழத்தை' ஆதரித்து மலேசியப் பாராளுமன்றத்தில் குரலெழுப்பியும், அறப்போராட்டங்கள் மேற்கொண்டும், உலக அரங்கின் கவனத்துக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கொண்டு சென்ற பெருமை டாக்டர்.வி.டேவிட் அவர்களுக்கு உண்டு.

இலங்கையில், சிங்கள அரசின் பேரினவாத அடக்குமுறையால், தமிழ்ச் சகோதர, சகோதரிகள் துன்புற்றபோது, இனக் கலவரங்களிலிருந்து மீண்டும் அமைதி திரும்பவேண்டும் என்பதற்காக உலகத் தமிழர் மாமன்றத்தின் சார்பில், சென்னை காந்தி மண்டபத்தில் 6.6.87 அன்று, அனைத்து மதத்தினரும்

கலந்து கொண்ட பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

**ஔவையார் விழா:** ஆத்தி சூடி தந்த ஔவை மூதாட்டியின் நன்னெறிகளை மாணவ உள்ளங்களில் பதியவைப்பதற்காக "ஔவையார் விழா" ஒன்றை 29.8.90 அன்று மாமன்றத்தின் மகளிர் பிரிவு, சென்னையில் நடத்தியது. சென்னை செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் (மழலையர்ப் பள்ளி முதல் கல்லூரி வரை) பல்வகைப் போட்டிகளில் கலந்து கொண்டனர். தமிழ்—ஆங்கில 'ஆத்திசூடி' நூல் ஒன்றும் வெளியிடப்பட்ட இவ்விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**பாராட்டு விழாக்கள்:** தமிழர் முன்னேற வழிவகைகள் காணும் தன்மையாளர்களின் செயல்களை உற்சாகப்படுத்தும் வகையில் அத்தகையவர்களைப் பாராட்டும் வழக்கத்தை மாமன்றம் எப்போதும் மேற்கொண்டு வந்துள்ளது.

அந்த வகையில், அமெரிக்க நாட்டு லாஸ்வேகாஸ் நகர உலகசாலை ஒருங்கிணையத்திட்டம் "1987 ஆம் ஆண்டின் மாமனிதர்" பட்டம் பெற்ற மலேசிய அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்களைப் பாராட்டும் வகையில் 'பாராட்டு விழா' ஒன்றை உலகத் தமிழர் மாமன்றம் 2.3.87 அன்று சென்னை தாஜ் கொரமாண்டல் ஓட்டலில் நடத்தியது.

தமிழர்களின் தொழில் முன்னேற்றத்துக்கு ஒரு முன்னுதாரணமாய் விளங்கி வரும் தொழிலதிபர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள், மோரீசு நாட்டின் கவுரவத் தூதுவராகப் பொறுப்பேற்றதைக் கவுரவிக்கும் வகையில் அவருக்குப் பாராட்டு விழா ஒன்றை 13.10.89 இல் சென்னையில் பாரத முன்னாள் நிதியமைச்சர் திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மாமன்றம் நடத்தியது.

அவ்வாறே, மாமன்றத் தலைவர் டாக்டர் வி.டேவிட் அவர்களுக்கு 24.2.87 இல் சென்னையில் ஒரு பாராட்டு விழா அப்போதைய அமைச்சர் திரு. க.இராஜாராம் அவர்கள் தலைமையிலும், டாக்டர் வி. டேவிட் அவர்கள் தமிழ்மொழிகாக்கச் சிறை சென்று திரும்பியமைக்கு 18.3.89 அன்று ஒரு பாராட்டு விழா சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர். மு.தமிழ்க் குடிமகன், தலைமையிலும் வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் ஆகியோர் முன்னிலையிலும் விழா நடத்தப்பட்டன.

**உலகத் தமிழர்பல்கலைக் கழகப் பணிமனை:** உலகத் தமிழர் மாமன்றத்தின் நீண்டகாலத் திட்டங்களில் ஒன்றான உலகத் தமிழர் பல்கலைக் கழகம் நிறுவுதல் தொடர்பாக, சென்னையிலுள்ள கல்வியாளர்கள் பங்கேற்ற பணிமனை ஒன்று 23.6.90 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க.அன்பழகன் அவர்களை அணுகி இது குறித்து ஆவன செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பாவேந்தர் நூற்றாண்டு விழா

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா, உலகத் தமிழர் மாமன்ற ஆறாண்டு நிறைவு விழா, மாமன்றத் தலைவர் டாக்டர் வி.டேவிட் அவர்கள் தலைமையில், சென்னை தேவநேயப் பாவாணர் மைய நூலகத்தில் நடைபெற்றது. சட்டப் பேரவைத் தலைவர் முனைவர் மு.தமிழ்க் குடிமகன், கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். " பாவேந்தர் பாடல்களில் மேலோங்கியிருப்பது பாடல் அழகா? பைந்தமிழர் எழுச்சியா? " என்னும் பொருளில் ஒரு பட்டிமன்றமும் நிகழ்ந்தது.

**இந்தியக்கிளை:** உலகத் தமிழர் மாமன்றத்தின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கிளைகளை நிறுவும் முயற்சி இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், குறிப்பிடத்தக்க தமிழர்கள் வாழும் இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் மாமன்றத்தின் கிளைகள் தற்போது இயங்கி வருகின்றன.

**முதல் உலகத் தமிழர் மாநாடு:** இதுவரை நடைபெற்ற ஏழு உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் தமிழ்மொழியின் ஆராய்ச்சியை மையமாகக் கொண்டு நடைபெற்றன. அவற்றின் பின்விளைவுகளில் குறிப்பிடத்தக்க அம்சம் எதுவும் இல்லை என்பது ஏற்கக் கூடிய கசப்பான உண்மையே, எனவே தமிழர்களின் இன்றைய சிக்கல்கள், அவற்றின் தீர்வுகள், அறிவியல் உள்ளிட்ட அனைத்துத் துறை முன்னேற்றம் குறித்து முதல் முறையாக ஒரு மாநாட்டை நடத்த மாமன்றம் சிந்தித்ததன் விளைவே இம்முதல் உலகத் தமிழர் மாநாடு ஆகும். பலவித இடர்ப்பாடுகளைக் கடந்து நடைபெறும் இம்மாநாட்டின் வெற்றியையும் பின்விளைவுகளையும் காலம் தான் காட்டும்.









உலகத் தமிழர் மாமன்றச் சார்பில், கோலாலம்பூரில் இளைஞர் மாநாடு நடந்தபோது மாண்புமிகு டாக்டர் டத்தோஸ்ரீ சாமிவேலு. டத்தின் இந்திராணி ஆகியோருடன் டாக்டர் டேவிட்.



சென்னை பாரதிய வித்யாபவனில் டாக்டர் வி.டேவிட் அவர்களுக்கு நடந்த பாராட்டுக்கூட்டம். முன்னாள் அமைச்சர் க.இராசாராம், முத்தமிழ்க்காவலர், இ.ஆ.பெ.விசுவநாதம், டாக்டர் கா.பொ.இரத்தினம், இரா.காந்தி, எம்.கே.முஸ்தபா.



ஈழ அமைதிக்காக உலகத்தமிழர் மாமன்றம் கிண்டி காந்தி மண்டபத்தில் டாக்டர் இரா.சனார்த்தனம் தலைமையில் நடத்திய வழிபாட்டுக் கூட்டம். எம்.கே.முஸ்தபா, மு.மு.நாயகம், இரா.மதிவாணன் முதலியோர்.




சென்னையில் டாக்டர் டேவிட் அவர்களுக்கு நடந்த பாராட்டுக் கூட்டத்தில், நாஞ்சில் மனோகரன், குமரி அனந்தன், மன்றப் பொதுச் செயலாளர் இரா.காந்தி




19.9.90 ல் சென்னை தேவநேயப் பாவாணர் மைய நூலகத்தில் நடந்த பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் டாக்டர் டேவிட் பேசுகிறார். மேடையில் முனைவர் தமிழ்க்குடிமகன், பாரதிதாசன் மகன் மன்னர் மன்னன், எஸ். நல்லபெருமாள் இரா.காந்தி. 23.6.90 ல் உலகத்தமிழர் மாமன்றம் நடத்திய உலகத் தமிழர் பல்கலைக்கழக விழாவில் டாக்டர் டேவிட் முதலானோர்.

## மாநாட்டில் பங்கேற்கும் கலைஞர்கள்



திருமதி ராஜஸ்ரீ கவுதம்



செல்வி சோபனா மதிவாணன்

# உலகத் தமிழர் மாமன்றம்

## பொறுப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | டாக்டர். **வி. டேவிட்**, எம்.பி. (மலேசியா) |
| துணைத்தலைவர் | : | திருச்சுடர். **கே.ஆர். இராமசாமி** (மலேசியா) |
| உதவித்தலைவர்கள் | : | டாக்டர். **சை.வே.சிட்டிபாபு** (தமிழ்நாடு)<br>டாக்டர். **ஜே.ஜி.கண்ணப்பன்** (தமிழ்நாடு)<br>திரு.**எம்.எஸ்.மணியம்** (மலேசியா) |
| பொதுச்செயலாளர் | : | திரு **இரா.காந்தி**, முதுநிலை வழக்கறிஞர் (தமிழ்நாடு) |
| துணைப் பொதுச்செயலாளர் | : | திரு. **இரா. மதிவாணன்** (தமிழ்நாடு) |
| பொருளாளர் | : | திரு.**ஆர்.வீரமணி**, தொழிலதிபர் (தமிழ்நாடு) |

## உச்ச மன்றக் குழு உறுப்பினர்கள்:

திரு.ஜி.பெருமாள் (மலேசியா)

திரு.பெ.விசுவாசம் (மலேசியா)

திருமதி. இராமநாயகம் (மலேசியா)

டாக்டர். இரா.சனார்த்தனம் (தமிழ்நாடு)

புலவர். இளஞ்செழியன் (தமிழ்நாடு)

டாக்டர். மு.பி.பாலசுப்பிரமணியன் (தமிழ்நாடு)

திருமதி. ராஜஸ்ரீகவுதம் (தமிழ்நாடு)

திரு.வி.என்.தியாகராஜன் (தமிழ்நாடு)

திருமதி. புனிதம் மகேசன் (தமிழ்நாடு)

திரு.வி.குமாரசாமி. ரேயூனியன் (பிரான்சு)

திரு.ச. பாலகிருஷ்ணன் (இலங்கை)

திரு. ச.கோபாலன் (சிங்கப்பூர்)

திருமதி. நளினி ஆபிரகாம் (பிஜி)

திரு.அ.நீக்கலஸ்பிள்ளை (லண்டன்)

டாக்டர். முத்துவேல் முத்துசாமி (அமெரிக்கா)

திரு.குணசேகரன் (இந்தோனேசியா)

திரு.வெங்கட்ராமன் (கனடா)

திரு.என்.சி.நாயுடு (தென்னாப்பிரிக்கா)

முத்தமிழ் அறிஞர்

# டாக்டர் கலைஞர்

அவர்களின் “சங்கத் தமிழ் எனும்”

# சந்தனச் சோலையிலே..!



தொகுத்தவர் புலவர் இளஞ்செழியன்

### சங்கப் புலவர் கற்பனை

கருவூலப் பொருள்கூட அள்ள அள்ளக் குறையும் —சங்கக் கவிப் பெரியோர்கள் கற்பனையோ அகழ்கின்ற ஊற்றாக நிறையும் !

—“மலர்மாரி பொழிகின்றேன்”

### மண்ணின் பற்று

ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்
உறவுகொண்டே மனிதகுலம் ஒன்றே எனத் திகழ்வதும்
உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன் கூட
தனது ஊரை மறவாமல் `பூங்குன்றம்' என இணைத்தே
கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனாய் உலவியதைக் கவனமுடன்
எண்ணிப் பார்த்தால்—அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான்
உண்மையன்றோ?

—`யாதும் ஊரே யாவரும் கேளிர்'

### தமிழ்நாடு

காலைக் கதிரவன் போல் கைசிவக்கக் கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று வந்துவிட்டால்,
மாலை சூடுகின்ற 'வேளையென்றும்' பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம்விடுத்து,
வாளைக் கூரேற்றி வான்நோக்கி நிமிர்கின்ற
வீர மறவர்களின் தாய்வீடு!

—“(சுமந்தவள் சுமந்த சோகம்”)

## தமிழினம்

தமிழினத்தார் தன்மானம் மிக்குடையார்; பகைவர்க்குத்
தலைதாழ்த்தும் நிலைவந்தால் தயங்காமல் உயிர்துறப்பார்!
இமிழ்கடல் தாண்டியும் புகழ்மணம் பரப்பி—நல்ல
அகில், மிளகு, முத்து வாணிபஃ புரிவார்!
இலக்கிய மேதைகள், இனிய நற் கவிஞர்கள்
இயற்கையைப் போற்றுவர்; எழில் மாடம் அமைப்பர்.
இனத்தின் மேன்மை ஏட்டில் நாட்டுவர்.
இறைமாட்சி தவறாது இந் நிலமிசை ஆள்வர்!
கல்தோன்றி மண்தோன்றாப் பழங்காலத்தின்
முன்தோன்றி மூத்த குடிமக்களும் தமிழரே ஆவர்!
எல்லாம் சரிதான்; ஆனால் ஒன்று
பொல்லா உட்பகைப் புயலில் சிக்கிக்
கொல்லாமற் கொல்லும் வேற்றுமை என்னும்
குழியினில் வீழ்ந்திடும் குணங் கொண்ட இனமும்
தமிழினமே!

—"பிசிராந்தையார்"

## வானநூல் வல்லவர் தமிழர்

விஞ்ஞானம் வளர்ந்ததாலே விண்ணூர்ந்து, இற்றை நாளில்
வியத்தகு புதுமைகளை விளைக்கின்றார் அறிவுடையார்— முற்றிலும்
அஞ்ஞானம் நிறைந்த காலமல்ல பழங்காலம்;
அன்றைக்கும் வானத்துக் கோள்களை ஆராய்ந்து
கால மாறுதலைக் கணக்கிட்டு, கோள்களின் சுழற்சிக்
கோலமதைத் தீட்டிக் காட்டி, குமிழ்மின்னல் சிரிப்புக்
கொட்டுகின்ற விண்மீன்கள்; தாங்களிருக்குமிடம்
விட்டுப் பெயர்கின்ற நிலையறிந்து நாழிபார்த்துக் கூறி,
கதிரவனைச் சந்திரனைப் பூமியின் நிழல்சூழ்ந்து—நம்
கண்ணுக்கு ஒருநாள் மறைக்கின்ற கிரகணம்! வருகின்ற
நாளைக் கூட நமது முன்னோர் வானநூல் இயற்றித்தந்து
வேளைதவறாமல் விரித்துரைத்தார் எனல் வேடிக்கையல்ல!
ஒளிபெற்று வாழ்ந்த நாமோ, திடுமென இருட்டில் வீழ்ந்தோம்;
வெளிநாட்டு விஞ்ஞான வளமோ விரிந்தது வான்முகட்டில்!
தேய்ந்து வளரும் திங்களை நாம் தெய்வமென்றோம்!
தினம் வந்து கடமையாற்றும் சூரியனைத் தேவனென்றோம்!
ஓய்ந்திருக்கும் வேளையிலே உப்பில்லாக் கற்பனையில்
சாய்ந்து சயனித்துக் கிடந்தோமன்றி,—முன்னோர்
ஆய்ந்தறிந்து வகுத்திட்ட வானநூற் புதுமைகளை, வறட்சியினால்
காய்ந்தபயிர் ஆக்கிவிட்டு மடமைக் கதைகளிலே மாய்ந்து போனோம்!

## வலவன் ஏவிய வானவூர்தி

வலவன் எனும் ஓட்டுபவன் இல்லாமலே
வானில் பறந்திடும் ஊர்தியில் செல்லும்

வாய்ப்பினை எய்திடும் வகை கிடைத்தோர்க்கு—
வாழ்வின் உயர்வு—அந்த வானின் உயர்வாம்!
வைரமென ஒளிபொழியும் இப்புறப்பாட்டில்
வலவன் ஏவா வானவூர்தி! என வருதலாலே
வலவன் ஏவுகின்ற வான ஊர்தியும் அக்காலம்
வழக்கத்தில் இருந்ததெனக் கொள்ளலாம் அன்றோ?
ஆதியிலே அறிவியலில் அக்கறை காட்டியதால், வான
வீதியிலே வலவரென்போர் ஊர்தியினைச் செலுத்தியிருக்கவும் கூடும்!
பாதியிலே படையெடுத்த பத்தாம்பசலி எண்ணத்தினால்
பகுத்தறிவுக்கு வேலையின்றிப் பாழ்பட்டுப் போனதம்மா இந்த நாடு!

—"வலவன் ஏவா வான ஊர்தி"

**காம இன்பம்**

மாம்பழம் இனிக்குதென்று மரத்தோடு பிடுங்கலாமா?
மலர்மணம் இனிமையென்று கொடியோடு பெயர்க்கலாமா?
அள்ளிப் பருகி நீரைத் தாகம் தணித்தலன்றி—ஆற்றின்
வெள்ளத்தோடு வீழ்ந்தழுந்தி அறிவுடையோர் மிதப்பதுண்டோ?
இரும்பினால் வார்த்ததல்ல மாந்தர்மேனி; எனவே
கரும்புதான் காம இன்பம் எனினும், அதனை
விரும்பும் போதெல்லாம் கண்டபடி சுவைத்துத் திளைத்தால்
துரும்புபோல் இளைத்துப்போகும் ஆண் பெண் வடிவிரண்டும் வளைந்து கூனி!

—"தேனாகச் சொட்டும் தேளாகக் கொட்டும்"

**சோற்றாலடித்த பிண்டம்**

இறந்த பின்னர்
எச்சமெனத் தமிழன் விட்டுச் செல்வது மானமொன்றே!
அந்த மானத்தைப் பகைவர் காலடியில் பூவாக்கிப் போட்டுவிட்டு,
சொந்த வாழ்க்கைதனைச் சுகமாக ஆக்கிக் கொள்வோன்
சோற்றாலடித்த பிண்டமாவான்—நூல் அறுந்த காற்றாடிப் பட்ட மாவான்!

—"இளையோன் எதற்கும் இளையான்"

**மறவன் எனும் நிலை மட்டும். . .**

மறவன் எனும் நிலை மட்டும்
மன்பதையில் புகழ் சேர்ப்பதில்லை!
மனிதனாகவும் வாழ்ந்திடல் வேண்டுமென்ற
அறநெறியை விட்டு அணுவளவும் பிறழாது "ஒருவன்
அளந்து வைக்கும் அடிகள் ஒவ்வொன்றும்தான்
வாழையடி வாழையென வருகின்ற சமுதாயத்து
வழித் தோன்றல்களின் பயணப்பாதையாகும்!"

—"பாரி மகளிர் பாடிய செய்யுள்"

## நம் தமிழர் குலப் பழக்கம்

நம் தமிழர் குலப் பழக்கம் ஒன்றுண்டே! அதுதான்
நமக்குள்ளே அழுக்காறு! போராட்டம்!
அதனாலே களத்தினிலே சிவப்பாறு!
சேரரென்றும் சோழரென்றும் பாண்டிய மன்னரென்றும்—அவர்
வீரரென்றும் வித்தகப் புலவரென்றும் விரித்துரைக்கும் வரலாறு! அவர்கள்
சேர்ந்தொருநாள் வாழ்ந்ததாகச் சொல்லவில்லை;
சோர்ந்து போகும் நமதுள்ளம்; இனி அதைச் சொல்லுவதால்
பயனுமில்லை!

—"தாமரைப் பொய்கையில் தவழ்ந்தது நிலவு"

## அதிசயமல்ல

கோலமிகு புறாக்கள் மட்டுமே காதல் கொள்ளுமா?
கொஞ்சு மொழிக் கிளிகளுக்கே இன்பம் சொந்தமா?
கோட்டான்கள் கூட உடலுறவு கொண்டு—தங்கள்
குலம் பெருக்கி வாழ்கின்ற வையமன்றோ இது!
குறளன் மனத்தில் கூனியின் நினைவும்
கூனியின் மனத்தில் குறளன் நினைவும்
கூடுகட்டி வாழ்ந்தன என்பது—இந்தக்
குவலயத்துக்கோர் அதிசயமல்ல!
குரங்கினமும் கோவேறு கழுதையினமும்
கொஞ்சி மகிழும் இன்ப பூமியிலே
குறளனும் கூனியுமட்டும்—உடலின்பம்
கொள்வதற்குத் தடை ஏதும் உளதோ?
உடலால் குள்ளமாயிருப்பதாலே—அவன்
உள்ளமும் வெறும் பள்ளமாய் இருந்திடுமோ?
வளைந்தவளாயிருக்கலாம் கூனி—நெஞ்சிற் காதல்
நிறைந்தவளாயிருப்பதென்ன தீதா?
குறளன்-கூனி என்பதெல்லாம் உடலில்தான்!
குலவி மகிழும் உள்ள மிரண்டுக்குள்
குள்ளமில்லை—நல்ல உயரம்!
கூனல் இல்லை—வானம் பார்த்த நோக்கு!

1—"குறளனுக்கோர் கூனியுண்டு"

## வறுமையில் பலர் வாட . . . !

உண்பது நாழி, உடுப்பவை இரண்டேயெனும்
உண்மைதனை உணர்ந்த பின்னும்
வறுமையில் பலர் வாட, வளமிகு செல்வப்
பெருமையில் சிலர் ஆடல் நீதிதானோ?
உலகிற்பிறந்தோர் அனைவருக்கும்
உடல், உள்ளத் தேவையெல்லாம்
ஒன்றாக இருக்கும் போது—இதனை நன்றாகச் சிந்திக்காமல்
வெள்ளம் போல் பொருள் எதற்கு ஒருவன் சேர்த்தல் வேண்டும்?

பள்ளம் போல் வாழ்வினிலே பலர் எதற்குச் சாதல் வேண்டும்?
தனக்கே எலாம் எனும் தனியுடைமை தகர்த்துத்
தரித்திரத்தை விரட்டுதற்குத் தக்க வழி காண
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பொதுமைக் கொள்கையினை
வகுத்தளித்து வையத்தில் இன்பம் காண்பதுதான் வாழ்வெடுத்த பயனாகும்

—"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே"

### கொற்றவர்க்கு அழகு

அரசு கருவூலத்தை நிரப்புவது குடிமக்கள் வேலை! அவர் வாழ்வைத்
தரிசு நிலமாக்கி இதயத்தில் செருகுவதோ வேலை?
கொற்றவர்க்கு அழகு குடிதழுவிக் கோலோச்சல்!
கொள்கை அற்றவர் செயலோ நல்ல குறிக்கோளுக்குக் கொள்ளிவைத்தல்!

—"ஒருதலைக்காதல் 1"

### அழகிருக்குமிடத்தில்

அழகிருக்குமிடத்தில் அறிவொளியும் இணைந்துவிட்டால்
அருவியிலாயிரம் தேன்குடம் உடைந்து கலந்ததுபோல்
அமிழ்தம்! அமிழ்தம்! அமிழ்தமன்றோ?

—"ஒருதலைக்காதல் 2"

### தக்கை என்போம்!
### தமிழர் என ஒப்பமாட்டோம்!

நிறைவான வாழ்வு எனல் நூற்றாண்டு வாழ்வதல்ல!
குறைவான வயதில் மாய்ந்திடினும், அஃதோர்
குறிக்கோளுக்காக எனில், அதனைவிட
நிறைவான வாழ்வெதுவும் மானமுளோர்க்கில்லை!
மணிமகுடம், மாணிக்கச் சிம்மாசனம், மஞ்சம், கொஞ்சல்,
பணிபுரியப் பன்னூறு ஆளும், தேளும் கைகட்டி நின்று கெஞ்சல்!
இவையனைத்தும் பெறல் எளிது இவ்வையத்தில்!
இளித்தும், நெளித்தும், ஏற்றியும் போற்றியும்,
இங்கிதம், அறியாதவனை இணையிலா ஏந்தலென்றும்
இன்சொல் பயிலானை நன்நெறி ஆசான் மேதையென்றும்
பண்பாடு மறுப்போனை, பார்புகழ் மேதையென்றும்
பழிவாங்கும் குணத்தோனை, பரந்தமனச்சான்றோன் என்றும்
நாயினும் கீழாய்ப் பிறரை மதிப்பவனைத்
தாயினும் சாலச் சிறந்தோன் என்றும் இல்லாச்
சிறப்பெலாம் எழுதியும் பேசியும் எல்லாம்
பெறுவது எளிதே இவ்வையத்தில்!
ஆனால்மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு
மரணம் தழுவினும் களத்தினில் சிரித்து,
மார்பினில் விழுப்புண் தாங்கியே வீழ்ந்து,
மாப்புகழ் எய்திடல் மாணப் பெரிதே!
குலமகள் ஒருத்தியைப் புணர்ந்து குலாவிக்

கொள்ளை இன்பம் பெறுவதைக் காட்டிலும்,
நிலமகள், பகைவர்க்கு அடிமை யாகாமல்
நடத்திடும் போரில் நம்முயிர் தந்து—அவள்
நெடுமடி தனிலே நீள்துயில் கொள்ளலே
நீடித்த இன்பம், நிலைத்திட வழியாம்!
தமிழ் கடலின் அலை போல எழுந்தும் வீழ்ந்தும்
தமிழ் இனத்தின் வரலாறு தடுமாறிப் போகாமல்
தமிழ்சோலை மணம்போலக் காசினியில் பரவுதற்கு
அமிழ்தான உயிர்க் கொள்கை மானமொன்றே!
அக்கொள்கையினை யாரிடமோ அடமானம் வைத்துவிட்டு
அணிமணிகள், அரண்மனைகள் ரக்கவைக்கும்! .. மனிதர்களைத்
தக்கை . மனிதர் என்போம்!
தமிழரென ஒப்பமாட்டோம்!

*தமிழுக்குச் செய்கின்ற பணி*

பொன்மணிக் குவியலும் வைர வைடூரிய முத்துக் குன்றமும்
நன்மணிமாடக் கூடங்களும் கோட்டைக் கோபுரமும்
தொழுதேத்திப் போற்றுகின்ற கொற்றக்குடை ஆட்சியும்
தோத்திரத்தால் உயர்ந்துள்ளம் கொள்ளை கொள்ளும் காட்சியும்
இன்றிருக்கும், நாளை இல்லாமற் போகக் கூடும்!
என்றுமிருக்கும் பணியன்றோ தமிழுக்குச் செய்கின்ற பணி!

—“ஒருதலைக்காதல்”



# புகழ்சேர்ப்பீர் பூந்தமிழீர்!

*பாவலர் பட்டுக்கோட்டை இராஜேந்திரன்*

கல்கொண்டு தீப்பொறிஉண் டாக்கி னார்கள்
கற்காலத்தில்; பின்னர் மண்ணா சையால்
வில்கொண்டு வாள்கொண்டு போர் தொடுத்து
வென்றார்கள்; இன்றைக்கோ மக்களாட்சி;
சொல்கொண்டு மோதிவெல்ல முயலு கின்றோம்!
சிலரோவன் முறையிலுள்ள நாட்டத்தாலே
புல் பூண்டு கூடமுளைக் காத வண்ணம்
பாதிக்கும் விஷக்குண்டை நம்பலானார்!

போரின்மேல் நம்பிக்கை வைத்து வையப்
புகழ்பெறலாம் என நினைத்தல் மடமை; ஓடும்
நீரின்மேல் எழுத்தாகும் ஆயு தத்தால்
நீள்புகழை ஈட்டஎண்ணு வார்பேர்; இந்தப்
பாரின்மேல் ஆண்டவர்கள் பலரில், அன்பு
பண்பெல்லாம் அமைந்தவர்கள்
பெயரே என்றும்
தேரின் மேல் கொடிபோல உயரத்
தோன்றித்
தேயாமல் நின்றிலங்கக் காணு
கின்றோம்!



நடுகின்ற விதைகளெலாம்
முளைப்பதில்லை;
நம்முடைய செயலனைத்தும்
அவ்வாறே; விண் தொடுகின்ற புகழ்
அளிக்கும் ஒன்(று)இன் னொன்றோ,
தலைகுப்புறக் கவிழ்க்கும்; கெடுக்கும்;
விட்டு
புகழுடம்பே புழுபுழுக்கும் நிலைதான் வாய்க்கும்!

மோகத்தால் கேவலம்உண் டாகும்; வெள்ளை
மனம் மானம் இவற்றால்தான் புகழே சேரும்!
யாகத்தால் எல்லாமே கிடைக்கும் இங்கே
யாவர்க்கும் என்றதெலாம் அந்தக் காலம்!
மேகத்தால் மழைகொட்டும்; நற் குணத்தால்
மேம்பாடெல் லாம் கிட்டும்! மெய்யை நம்பித்
தேகத்தால் பிறர்க்குதவி செய்க: மற்றோர்
தேடிவந்து நமக்குதவி செய்வார்; உண்மை!

விடுகின்ற தீக்குணத்தால் முளைக்கும் நன்மை;
மேற்கொள்ளும் தீச்செயலால் மண்டும் தீமை.
கொடுக்கின்ற குணமிருந்தால் நமக்கும் மற்றோர்
கொடுக்கவைக்கும்; கெடுத்தல் பிறர் சிரிக்க
வைக்கும்!

வேர்க்கின்ற படிஉழைக்கும் உழைப்பிற் கீடாய்
வேறொன்றும் கிடையாது; நல்லோர் நெஞ்சை
ஈர்க்கின்ற படிநடந்தால் போதும், யார்க்கும்
ஈடாக இடத்தைநாம் பெறலாம்; வீணே
ஆர்க்கின்ற குணம்கேடே நல்கும்; நாட்டில்
அனைவரும் நம் உடன்பிறப்பே என்ற எண்ணம்
சேர்க்கின்ற புகழ்கல்மேல் எழுத்தாய் நிற்கும்;
சினம் வந்தால் குணம் பறக்கும்; வசை கிடைக்கும்!

பெண்ணென்றால் பேய்கூட இரங்கும்
என்னல்
பழங்காலம்; இந்நாளில் இளைஞர்க்
கெல்லாம்;
கண்ணென்றால் கல்வியல்ல;
இளம்பெண் கள்தாம்!
கூறப்போனால் வயதோர் எல்லை
இல்லை!
மண்ணென்றால் போட்டதெலாம்
விளைவதே மண்; மகளிர்க்கும்
இதைப் பொருத்திப் பார்க்கலாமோ?
புண்ணென்றால் ஈமொய்க்கும்;
மனம்புண் ணானால்

வேகின்ற பலகாரம் கூட ஓட்டை
விழுந்துள்ள பாத்திரத்தால் தரம் இழக்கும்!
போகின்ற உயிர்தானே இருப்ப தற்குள்
பொய்புரட்டால் பொருள்சேர்ப்போம் எனும்
நினைப்பால்
ஆகின்ற தொன்றில்லை அழிவே முந்தும்!
அறிவாலே உலகாள முடியும்; யாரும்
நோகின்ற படி நடத்தல் கேடுண் டாக்கும்?
நீள் பகைமை யும் குலைக்கும் நம்பு வீரே!

# தென்றலெனும் எழிற்பெண்ணே!

**இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசனார்.**

மாந்தளிர்கள் இளங்கமுகு பச்சைக் கற்கள்
மாங்குயில்கள் எழிற்றோகை தழுவி வந்து,
பூந்தாதின் மென்மணத்தை நறுநாற் றத்தைப்
பூரித்தே கொட்டுகின்ற தென்றலே ஆகா!

தென்திசையில் நீ பிறந்து தொட்டில் ஆடி
தேன்பாகு செந்தமிழின் பொதியில் கூடித்
தண்ணருவி நீராடிக் கூத்து மிட்டுத்
தவழ்ந்திங்கே என்னெதிரே நீவந் தாயே!

துங்கமிகு சங்கம்வளர் மதுரை தன்னில்
துன்னியநற் புலவோர்கள் நாவில் ஊர்ந்து
தங்கமெனத் தவழ்ந்திங்கே எனது முன்னே
தளர்நடையிட் டேன்வந்தாய் தென்றற் காற்றே?

மேன்மாடக் கூடங்கள் கோபு ரங்கள்
மேதகுநற் பூஞ்சோலை பூவின் காடு
மான்மேயும் இளங்காடு யாவுங் கண்டு
மாசின்றி என்முன்னே ஏன்வந் தாயோ?

பைந்தொடியார் பூங்கூந்தல் தடவி; பேசும்
பைங்கிளியார் மொழி கேட்டு மெய்ம்ம றந்து
நைந்தோடும் நெஞ்சத்தைப் பிடித்த லைந்து
நெளிவோடும் முறுவலோடும் ஏன்வந் தாய்நீ?

தென்றலெனும் எழிற்பெண்ணே! அகிலின் காடே!
தேனூற்றே! என்னெதிரே நீஏன் வந்தாய்?
தென்றமிழில் வலிவில்லேன்; கவிஞன் அல்லேன்!
தெங்குசுவை யேஉன்னைப் பாடல் என்பேன்!



## தமிழ்க் கொடி

கவிஞர் முத்துதாசன்

குன்றனைய தோள்கொண்ட வீரரோடு
கொல்புலியைக் கொடியாகக் கொண்டநாடு
தொன்றுதொட்டு வந்தகதிர்ச் சோழமன்னர்
தோள்வலிவால் உலகினையே ஆண்ட வீடு
என்றுமெழில் கொஞ்சுகின்ற தாய்த்தமிழை
ஏற்றிட முச் சங்கமதை அமைத்ததோடு
தென்றலிலே அசைந்தாடும் மீன் கொடியால்
தென்னவரின் புகழ்பாடும் பாண்டிநாடு

மன்றலிலே மன்னவர்க்கும் நீதி சொன்ன
மாதரசி மறக்கற்புக் கண்ணகியாள்
கொன்றழிக்கும் புருவமதை விற்கொடியால்
குவலயத்தோர் வணங்கவைத்த சேரநாடு
என்றினிக்கும் பழங்கதையைக் கூறிக்கூறி
எழுச்சியினை மறந்துதினம் உறங்கிக் கொண்டு
அன்றிருந்து இன்றுவரை அடிமைவாழ்வில்
அடிவருடிக் கிடப்பதுதான் தமிழர்நாடு

சாதிமத பேதமது ஓர்புறமும்
சீரழிக்கும் கட்சிநிலை ஓர்புறமும்
நீதியிலா அரசியல்தான் நாற்புறமும்
நாயெனவே தமிழனைத்தும் விலங்குகளால்
வீதியிலே கட்டிவைத்த நிலையிருந்தும்
விடுதலையைச் சற்றேனும் எண்ணிடாமல்
நாதியற்றுக் கிடக்கின்றான் தமிழமகன்
நாளுக்கோர் கனவினையே கண்டு கொண்டு...!

தென்திசையில் உதயமது தெரிகிறதே
திறங்கொண்ட வேங்கையது எழுந்ததுவோ?
எண்டிசையும் உறுமலொலி கேட்கிறதே
எந்தமிழர் விலங்குகள்தாம் ஒடிந்தனவோ?
கண்ணசையும் நேரமதில் தமிழரெலாம்
கரம்பிடித்து ஒற்றுமையாய்க் குரல் கொடுத்தால்
மண்ணுலகில் இனியெங்கும் தமிழ்க்கொடிதான்
மலர்கின்ற கவியெல்லாம் தமிழடிதான்



# திரைகடலோடியும்...

## முனைவர் மு.தமிழ்க்குடிமகன்

தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர்

இந்தியா விடுதலையடைந்து 43 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதற்கு முன்னும் பின்னும் பல நாடுகள் விடுதலையடைந்துள்ளன. இன்று உலகில் தனக்கெனத் தனி இறையாண்மை (*Sovereignty*) கொண்டு விளங்கி விடுதலை நாடுகளாகத் திகழ்பவை 169 ஆகும்.]

இந்த நாடுகளில் எல்லாம் தமிழர்கள் வாழ்கின்றனர். நாலைந்து குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்ற நாடுகளும் உண்டு. இலட்சக் கணக்கில் வாழும் நாடுகளும் உண்டு. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற 15 நாடுகளில் தமிழர்கள் பெருமளவில் (*Considerable Amount*) வாழ்கின்றனர்.

தாயகமாம் தமிழ்நாட்டில் மட்டும் 5 கோடித் தமிழர்கள் வாழ்கின்றோம். இங்குத் தமிழை வளர்க்கவும் வாழ்விக்கவும், உலக மொழிகளின் வளர்ச்சியோடு ஒப்புநோக்கி உயர்வு காணவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



எனினும் தமிழகம் இந்தியாவுக்குள் ஒரு மாநிலம் எனும் முறையிலும் தமிழர்கள் இந்தியாவில் எந்தப் பகுதியிலும் சென்று பயிலவும், தொழில் புரியவும், வேலைவாய்ப்புப் பெறவும் உரிமை படைத்தவர்கள் எனும் முறையிலும் தமிழோடு ஆங்கிலத்தையும் சிறப்பாகப் பயிலும் நிலை உள்ளது. ஒருவேளை ஆங்கிலம் தமிழையும் அமுக்கிக் கொண்டு மேலே வருகிறதோ என்ற ஒரு கவலை உணர்வு படர்ந்துள்ளது. அதற்காக ஆங்கிலத்தை விட்டுவிட்டு வளர முடியுமா எனும் வினாக்குறியும் எழுகின்றது. இந்நிலையில்தான் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்,

'தமிழ் வாழ்ந்தால் தமிழர்கள் வாழ்ந்துவிடுவார்கள் என்று மட்டும் நம்பியிருந்து விடக்கூடாது; தமிழர்கள் தெம்போடும் வளத்தோடும் வாழ்ந்தால்தான் தமிழ் வாழும்; அதற்கான வகையிலும் நாம் நம் மொழிக் கொள்கையை வகுத்துக் கொண்டு செயற்பட்டாக வேண்டும்' எனும் கருத்தைக் கூறியுள்ளார்கள்.

எனவே உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும், மத்தியப் பிரதேசத்திலும் ஆங்கிலத்தின் ஆட்சித் தன்மை குறைக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வரும் இந்நாளில் இந்தியர்களாக நிமிர்ந்து நிற்கும் தமிழர்கள் இந்தியா முழுவதும் செல்வாக்கோடு பரவி வாழும் வகையில் தமிழகம் திட்டமிட வேண்டியுள்ளது.

இந்நிலையில் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய சில

சிந்தனைகளை மீண்டும் அசைபோட்டாக வேண்டியுள்ளது.

மலேசியாவில் சீனர்களும் வந்து குடியேறியவர்கள்தான். ஆனால் இன்று பல ஈயச் சுரங்கங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் உரிமையாளர்களாக, முதலாளிகளாக அவர்கள் திகழ்கின்றனர். ஆனால் தமிழர்களில் விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரைத் தவிர, 11 இலட்சம் தமிழர்களில் பெரும்பாலோர் ஓரளவு வசதியோடும், நடுத்தர நிலையோடும், `கம்பம்' பகுதிகளில் வரவுக்கும் செலவுக்கும் இழுத்துப் போர்த்திக் கொள்ளும் இடர்ப்பாடான நிலையோடும்தான் வாழ்கின்றனர். அதிலும் பினாங்குத் துறைமுகத்தில் சரக்குகளைக் கைவண்டியில் வைத்து மாடாய் இழுக்கும் தமிழர்களைக் காணத்தான் முடிகிறது. இதே உழைப்புக்குத் தமிழ்நாட்டில் கிடைக்கும் ஊதியத்தை விட அதிக ஊதியத்தைப் பினாங்கில் பெறமுடிகிறது என்ற ஒன்றைத் தவிர, தமிழர்களின் வாழ்க்கைத் தரத்திலும், வேலையிலும் என்ன மாற்றம் இருக்கிறது?

அதே நேரத்தில் தமிழகத்தில் பல ஊர்களில் மலேசியா, சிங்கப்பூர் தொடர்புள்ள தமிழர்களின் குடும்பங்களில்தான் ஓரளவு பொருளாதார வசதியுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனாலும் தமிழர்கள்பால் அமைந்துள்ள ஒரு குறையைச் சுட்ட வேண்டியுள்ளது. ஒரு நாட்டுக்குச் சென்று தொழில் செய்து பொருளாதார மேம்பாடு அடையும் ஒரு தமிழ்க் குடும்பம் கொஞ்ச நாளானதும் மூட்டை முடிச்சுகளுடன் தமிழகத்துக்குத் திரும்பிவிட அணியமாகிறதே தவிர அங்கேயே நிலைபெற்றுப் பொது வாழ்விலும் ஏற்றம் காணும் போக்கு மிகவும் குறைந்தே காணப்படுகிறது.

மலேசியாவுக்குச் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள், `தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அந்தநாட்டுக் குடிமக்கள் ஆகி, அந்த நாட்டுக்குள் இணைந்து விட வேண்டும்' என்று வேண்டுகோள் விட்டதை மறந்து விடக்கூடாது. சிங்கப்பூரை நாடிச் சென்று, முதலில் அதிக அளவில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டவர்கள் தமிழர்களே! ஆனால் அவர்களில் பலர் அங்கு நிலைபெறாமல் `ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்' என்று வாழ்ந்ததால் இன்று நமக்கு ஆட்சிமொழி உரிமையும், ஆட்சி வாய்ப்பும் இருந்தும் சிறுபான்மையராகிவிட்டோம் என்பதை மறுக்க முடியாது. இன்று சீனர்கள் 73%ம், மண்ணின் மைந்தர்களாகிய மலேசிய மக்கள் 18%ம் வாழுகின்ற சிங்கப்பூரில் தமிழர்கள் 4% மட்டுமே!

`திரை கடலோடியும் திரவியம் தேடு' எனும் தமிழ்ப் பழமொழி நம்மவர்கள் பிழைப்புக்காக, பொருளாதார மேம்பாட்டுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றதை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. அதுமட்டுமின்றிப் பொருள் தேடிச் செல்லும் தலைவன் கடல்கடந்தும் செல்வதுண்டு; ஆனால் அப்படிச் செல்லும்போது மனைவியை அழைத்துச் செல்வதில்லை எனும் வழக்கமும் இருந்துள்ளது.

`முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' எனும் வரிகள் நம் பழமைச் சிறப்பை உணர்த்துகின்றன. பண்டைய வாணிகத் தொடர்புகள், காவிரிப்பூம்பட்டினத்தில் வந்திறங்கிய பொருள்களின் பட்டியல் எல்லாம் நம் பழமை சாற்றுபவை.

நாவாய் எனும் சொல்லையே நானிலத்துக்கு வழங்கியவர்கள் தமிழர்கள்தான்.

`நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி' எனும் தொடர் நம்மை வியக்க வைக்கிறது. நாவாய் எனும் சொல்தான் *'Navis'* என்று இலத்தீனில் இடம்பெற்றுப் பின்னர் ஆங்கிலத்தில் *'Navy'* ஆகி உலாவிக்கொண்டிருக்கிறது என்பது பாவாணர் கருத்து. இது முற்றிலும் உண்மை என்பதை மறந்து விடக் கூடாது.

நம் முன்னைய வேந்தர்கள்கூடக் கடலில் கலம் செலுத்துவதில் வல்லவர்கள், அப்படிச் செலுத்தியதோடன்றிச் சில படையெடுப்புகளையும் நடத்தி வெற்றி கண்டனர். இந்தோனேசியக் கடற்கொள்ளைக்காரர்களை அடக்குவதற்காகக் கலம் செலுத்திச் சென்றுதான் மலேசியாவில் உள்ள `கெடா' மாநிலத்தில் தம் நினைவுச் சின்னங்களையும் எழுப்பி வந்துள்ளனர். பிற்காலச் சோழர்கள், இராசராசன், இராசேந்திரன் சிறப்புகளைக் கூறும் இச்சின்னங்கள் இன்றும் மலேசிய அரசால் மிகச் சிறப்பாகப் பேணப்படுவதைக் காண்கின்றோம்.

கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராசேந்திர சோழன் இலங்கையில் படையெடுத்து வென்றான். இதுகுறித்து *'Hullugalle'* எனும் ஆங்கிலேய வரலாற்றாசிரியன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றான்: *'Ceylon first came under the direct rule of a foreign power when Rajendra I brought the whole island under his control'* அன்றைய படையெடுப்புகளையும் அவற்றின் வெற்றிகளையும் எண்ணிப் பெருமூச்சு விடுவது நமக்கு எந்த வகையிலும் இப்போது உதவாது.

இன்றைய நிலையென்ன?

தமிழகத்தில் மட்டும் வேலைவாய்ப்பகத்தின் பதிந்துவிட்டு வேலை வரும் வரும் என்று பல

ஆண்டுகளாகக் காத்து நிற்பவர்கள் எண்ணிக்கை 29.7 இலட்சமாகும். இதில் எம்.ஏ., எம்.எசி., எம்.காம்., பயின்றவர்கள் மட்டும் 20,000க்கும் மேலாவர். பி.ஏ., பி.எசி., பி.காம்., பட்டம் பெற்றவர்கள் 50,000க்கும் மேலாவர். இந்நிலையில் இவ்வளவு பேருக்கும் வேலைவாய்ப்பும் அளித்து இனி வருவோர்க்கும் வாய்ப்புகளை உருவாக்கிச் செயற்பட்டு விட முடியுமா?

ஓராண்டுக்கு ஓரிலக்கம் பேருக்கும் வாய்ப்பளித்தாலும் நிறைவான வெற்றியை எய்திட முடியாதே? இந்நிலையை உணர்ந்துதான் தமிழர்களில் நல்ல கல்வி பயின்றோர் அமெரிக்கா, கனடா, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற இடங்களில் சென்று பணியாற்றுகின்றனர்.

நான் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் (Barbados நகரம்) சென்றிருந்தபோது நான்கைந்து தமிழ்க்குடும்பங்கள் ஒருங்கிணைந்து வரவேற்று விருந்து தந்து மகிழ்வித்தன. அனைவரும் மருத்துவர்கள். அங்குள்ள பொருள்நிலை ஏற்றம் கருதித்தான் அவர்கள் அங்கு வாழ வேண்டிய சூழ்நிலை என்று உணர்கின்றனர். பார்படோஸ் நாணயத்துக்கு 5000 டாலர் ஊதியம் (நம் ஊர்க்கு 5000 x 8 = 40,000 ரூபாய்). இந்த ஒரே காரணத்தினால்தான் `சென்னை - பம்பாய் - இலண்டன் - நியூயார்க் - பார்படோஸ் என நீண்ட தொலைவு பயணம் செய்ய வேண்டிய இடத்திலும் தமிழர்கள் வாழ வேண்டியுள்ளது. திரை கடலோடியும் திரவியம் தேடுவது இதனால்தான்.

ஆனால் அதே நேரத்தில் திரை கடலோடியாவது பிழைக்க முடியுமா என்று இங்குள்ள சொத்தை விற்றுத் தரகர்களிடம் கொடுத்துவிட்டுக் கப்பலேறியோ, வேறு வகையிலோ சிங்கப்பூர் போன்ற நாடுகட்குச் சென்று ஆறுமாதம் ஓராண்டு என்று பணியாற்றிவிட்டு, பணி இசைவு (Work Permit) முடிந்துவிட்ட காரணத்தால் மீண்டும் தமிழகத்துக்கே வந்து சேரும் தமிழர்கள் ஒரு புறம்; பணி இசைவு முடிந்தும் நாட்டைவிட்டு வெளியேறாததால் பிரம்படிபட்டும், தலை மொட்டை அடிக்கப்பட்டும் துன்புற்ற தமிழர்களை நாம் மறந்து விடவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டத்தால் வறுமை, பின்னர் படிப்படியாக நம்பிக்கையின்மை, திருட்டு, ஏமாற்று முதலிய குற்றங்களின் பெருக்கம் என்று இங்கு உள்நாட்டில் ஒரு தடுமாற்ற நிலை; அதனால் பெருகி வரும் சமூகச் சீர்கேடுகள் ஒருபுறம்; வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருகிறோம் என ஆசை மொழி கூறி ஏமாற்றும் நிலை மறுபுறம்; வெளிநாடுகளில் குடியேறுவதற்கும் இப்போது எழுந்துள்ள கடுமையான சட்டதிட்டங்கள் பிறிதொருபுறம்.

இந்நிலையில் பக்கத்தில் உள்ள இலங்கையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் ஈழத்தமிழர் படும் துயரம் நெஞ்சைவாட்டுகிறது. ஏதிலி(அகதி)களாக வந்து நிற்போர் மட்டும் 1,30,000 அளவு எனப்படுகிறது. இன்னும் சிக்கல் தீராததாலும் அவ்வப்போது ஈழத்தமிழர் பாதுகாப்பும், வாழ்வும் தேடி ஓடி வருவதாலும் ஏற்படும் சூழ்நிலைகள் ஒருபுறம் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

எனவே உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்தல் வேண்டி முயலும் தமிழர்களுக்கு ஏற்பட்டுவரும் துயர நிகழ்ச்சிகளைக் காணும்போது

பண்டைத் தமிழர்களை நினைத்துப் பெருமூச்செறிவதோடு நின்று விடுவதா? இன்றும் அயல்நாடுகளில் சிலரேனும் நல்ல ஏற்றம் பெற்றுவாழ்வதை எண்ணிப்பெருமைப்படுவதா?

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் பலர் நிறைவானநிலையில் இல்லை என்று அறிந்து அதிர்ச்சியடைவதா?அகதிகளாக ஓடிவரும் தமிழர்களை எண்ணி அழுவதா? பட்டங்களை வைத்துக்கொண்டு பத்தாண்டுகளாகக் கால்கடுக்க நடந்து நடந்து களைத்துப்போன எந்தமிழ்நாட்டு இளைஞர்களைஎண்ணிக் கழிவிரக்கம் கொள்வதா?

என்ன செய்வதென்று அறியாத ஒரு திகைப்புநிலை; வெறும் தமிழ்க்குடிமகனாக இருந்தால் திகைப்பதோடு நின்று விடலாம்; ஆனால் பொறுப்புள்ள தமிழ்க்குடிமகனுக்குக் கடமை இருக்கிறதே!

திரைகடல் ஓடித் தேம்பித் திரியும் தமிழர்களுக்கும் உள்நாட்டில் வாழ்ந்து இன்றும் உருப்படியாகாமல் தவிக்கும் தமிழர்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமையுமாறு,

*தீர்வுகளைத் தேடி உழைப்போம்!*
*தீர்வுக்கு உதவுமாறு அனைவரையும்*
*அழைப்போம்!*

# உலகில் வாழும் தமிழ் இனம்

க. இராசாராம்
முன்னாள் அமைச்சர்

"திரைகடல் ஓடித்திரவியம் தேடு!" என்ற பழமொழிக் கொப்ப, சில நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழர்கள் கடற்பயணம் மேற்கொள்ளத் தொடங்கி விட்டதை நாடறியும், உலகறியும்.

தமிழர்கள் நாடாண்ட இனமாக வாழ்ந்தபோது சோழப்பேரரசர்கள், இன்றைய மலேசியா, இலங்கை முதலிய பகுதிகளின் மீது படையெடுத்துப் பேரரசுகளை உருவாக்கியதை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

பின்னர், தமிழ் நாட்டை விட்டுச் சென்றவர்கள்— ஆங்கிலேயர்கள்' நம் நாட்டை அடிமைப்படுத்தி இருந்த வேளையில் கங்காணிகளால் ஆசை வார்த்தை காட்டப்பட்டுக் கூலிகளாக, கப்பலேறிக்கடல் கடந்து, வறுமையின்றி வாழச் சென்றவர்கள். அதைத்தான், அறிஞர் அண்ணா அவர்கள் "கப்பலில் ஏறி, தாய் நாட்டை விட்டுக் குடும்பத்துடன் கண்ணீரும் கம்பலையுமாகப் புறப்பட்டுப் போனபோது. கப்பல் தளத்தில் நின்று அழுத கண்ணீர், கடலில் கலந்ததனாலேதான், கடல் நீர் உப்பு நீரானதோ" என்றார், தமது "ஏ தாழ்ந்த தமிழகமே" எனும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவில்!



இன்றைக்கு, வெளி நாட்டில் வாழும், இந்தியர்களில், தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள், ஏறத்தாழ நாற்பது சதவீதம். ஆனால், சீக்கியர்கள் போலவோ, சிந்திகள் போலவோ, குஜராத்தியர்கள் போலவோ, நல்ல பொருளாதார நிலையில் வாழ்கிறார்களா என்றால், 'இல்லை', என்ற பதில்தான் கிடைக்கும்!

### பர்மாவில் தமிழர்கள்

பர்மாவிற்குப் போன நகரத்தார்கள், அந்நாட்டு மக்களுக்குப் பண உதவிகளைச் செய்து வட்டி வியாபாரம் செய்தார்கள். நிறைய நில புலன்களைச் சொந்த மாக்கினார்கள். திடீரென அங்கே இராணுவ ஆட்சி வந்து, நமது நகரத்தார்களின் நிலங்களையெல்லாம், ஒரே நாளில் எடுத்துக் கொண்டார்கள்.

ஆகவே பர்மாவிலிருந்து தமிழர்கள் அகதிகளாகத் தாயகம் திரும்பினர். 1953ஆம் ஆண்டு பர்மாவின் தலைநகரான, இரங்கூனில் நடைபெற்ற உலகப்புத்த மத மாநாட்டில் தந்தை பெரியாருடன் அவரது அந்தரங்கச் செயலாளனாகக் கலந்து கொண்டேன். அன்று பர்மா போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுத் திரும்பவும் எழுந்து நிற்க முயன்று கொண்டிருந்தது! இரங்கூன் நகரைச் சிறந்த நகராக உருவாக்கத் தமிழர்கள் எவ்வளவு உழைத்தார்கள் என்ற வரலாற்றை எடுத்துச் சொன்னார்கள். நமது மக்களின் உழைப்பைப் பெற்ற பின், பர்மா நமது மக்களுக்குச் செய்த கைம்மாறு உதைதான்! தமிழர்கள் அந்த நாட்டை விட்டுப் பெரும்பாலும் வெளியேறிய பின், பர்மா உலக அரங்கிலே ஒரு ஒளிமிகுந்த நாடாக மிளிரவேயில்லை! யாரோ சில தமிழர்கள், பர்மியரின் நிலங்களை, உடைமைகளை எடுத்துக் கொண்டு விட்டார்கள் என்ற கோபம் அந்த மண்ணை வளப்படுத்திய தமிழனையும் சேர்த்துப்பாதித்ததை நான் பார்த்தேன்.

### மலேசியாவில் தமிழர்கள்

பர்மாவிலிருந்து, தந்தை பெரியார் அவர்களை, மலேசியத் தமிழர்கள் அழைத்தார்கள். எனவே எங்கள் பயணம், அந்தப் பகுதிக்கு நீண்டது. மலேசியாவில், அப்பொழுது, ஆங்கிலேயர் ஆட்சி! சுதந்தரம் அங்குப் பிரகடனப்படுத்தப்படவில்லை. எனவே, தந்தை பெரியாரின், பொதுக் கூட்டங்களுக்குக் கூட, ஆங்கிலேய அதிகாரிகளிடம் தான், அனுமதி பெற வேண்டி இருந்தது. அங்கு நம் தமிழர்களுக்கு நல்ல செல்வாக்கு! சீனர்கள், தங்கள் தாய்நாடான கம்யூனிஸ்டு சீனத்தை ஆதரித்து, எங்கே மலேசியாவையும் கம்யூனிசப் பாதையில் கொண்டு சென்று விடுவார்களோ என்ற எண்ணம், பல இடங்களில் சீனர்கள் வாழும் பகுதிகள் வேலிகள் போடப்பட்டிருந்தன.

பெரும்பாலான சீன மக்களுக்கு யாராவது முக்கியமான உணவுப் பண்டங்களைத் தந்து, விடுவார்களோ என்ற எண்ணம், ஆங்கில அரசை ஆட்டிப் படைத்துக் கொண்டு இருந்தது. எனவே, தந்தை பெரியார் அவர்களுக்கு, அன்பாக அளிக்கப்பட்ட ஹார்லிக்ஸ் பாட்டில்களை, அங்கங்கேயே விட்டுவிட நேர்ந்தது. தந்தை பெரியாரின் உள்ளத்தை அறிந்தவர்கள், அவரது வேதனையை நன்கறிந்திருப்பார்கள். ஒவ்வொரு `ஹார்லிக்ஸ்' பாட்டிலைப் பிரியும் போதும், ஒரு குழந்தையைப் பிரிந்த சோகம் தான்! அப்போது தமிழர்கள், வாழ்ந்த நிலையைத் தந்தை பெரியார் அவர்கள் நன்கு ஆராய்ந்தார்கள். தந்தை பெரியாருக்கு அப்போது எழுபத்து மூன்று வயது! டாக்டர் அம்பேத்கார் அவர்களை அந்தப் பயணத்தில்தான் இரங்கூனில் பெரியார் சந்தித்தார். அவர் வயதில் தந்தை பெரியாரை விட இளையவர்! ஆனால், டாக்டர் அம்பேத்காரைத் தமது தோளில் கைபோடச் சொல்லித் தாங்கிக் கொண்டு பெரியார் நடப்பார். அந்த அளவு உடல் வலிமையுள்ளவராக அய்யா அவர்கள் இருந்த காலம்! எனவே, எதையும், சுற்றிப் பார்த்து எடைபோடும் சிந்தனை அய்யாவிடம், நிரம்ப உண்டு. மலேசியாவில் உள்ள தமிழர்கள் அங்குப் பணம் சம்பாதிப்பதும், தமிழ் நாட்டிற்கு அனுப்புவதும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தமிழ்நாட்டிற்கு வரமுயல்வதையும் பார்த்தார்கள். எனவே, தனது சுயமரியாதைப் பிரச்சாரத்தை முடித்ததும், அங்குள்ள தமிழர்களுக்கு நல்ல அறிவுரையை வழங்குவார்கள். எங்கள் பயணம் சுமார் இரண்டு மாதகாலம், அந்த மண்ணில் நிகழ்ந்தது! ஒவ்வொரு நாளும், காலையில் ஒரு நிகழ்ச்சியும், மாலையில் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெறும். எனக்கு அப்போது, மூன்று வேலைகள்! அய்யாவின் அந்தரங்கச் செயலாளன், பின்னர் அய்யாவிற்கு முன்பு மேடையில் பேச்சாளன், முடிந்ததும், அய்யாவின் • முழுப்பேச்சையும் எழுதும் நிருபர் வேலை! மூன்றையும் ஒழுங்காகச் செய்ய வேண்டும். நல்ல வேளையாக அய்யாவின் குணத்தை முழுவதும் அறிந்து நடந்த காரணத்தால், அந்தப் பயணத்தில். எனக்கும் அய்யாவிற்கும், எந்தப் பிணக்கும் வ வில்லை.

அந்தப் பயணத்தில், "தமிழர்கள் தாங்கள் வாழும் நாட்டிற்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும். தமிழர்கள் ஒவ்வொருவரும், மலேசியாவில், ஒருகாலும், தமிழ்நாட்டில் மற்றொரு காலையும் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. இரண்டு பக்கமும், நெருக்கினால். நடுவே உள்ள கட்டுக்குத் தான் பலியாக வேண்டி வரும். இங்குள்ள சீனர்கள், தங்கள் தாய் நாட்டையே மறந்து, இந்த நாட்டையே, சொந்த நாடாக எண்ணி, எப்படி முன்னேறுகிறார்கள், என்பதையும் பாருங்கள்" என்று எடுத்துரைத்தார் பெரியார்.

"மலேசியாவில் வாழும் தமிழர்கள் அந்த நாட்டிலேயே தாங்கள் சம்பாதிக்கும் பொருளில் பெரும் பகுதியை முதலீடு செய்ய வேண்டும்" என்று பெரியார் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறினார்கள். தந்தை பெரியாருடைய உள்ளத்தில், "மலேசியா முதலிய கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களின் எதிர்காலம் பாழ்பட்டு விடக்கூடாது! என்று கருதினார்கள். இரட்டை மனப்பான்மையுடன், தமிழர்கள் வாழக்கூடாது, என்பதையும் வற்புறுத்தினார்கள்."

### சிங்கப்பூரில் தமிழ்

அப்போது, சிங்கப்பூரில் பதினான்கு நாட்கள் தங்கினோம். சிங்கப்பூர், ஒரு சிறிய ஊராகக் காட்சி அளித்தது. இன்று 1953ல் இருந்ததைப் போல், பதினைந்து மடங்கு, வானோங்கி வளர்ந்துள்ளது. அந்த ஊரில், `தமிழ் முரசு,' நாளேட்டினை நடத்தி வந்த, திரு. கோ. சாரங்கபாணி அவர்கள்தான், தமிழர்களை ஒன்றுபடுத்தும் பணியில், ஈடுபட்டிருந்தார்கள். திரு. கோ. சாரங்கபாணி அவர்கள், தந்தை பெரியார், நடத்திய `விடுதலை ஏட்டின் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்கள். எனவே அவர்கள், தமிழர்கள் மத்தியில் தமிழ் உணர்வை நன்கு வளர்த்து வைத்திருந்தார்கள். தந்தை பெரியாரும், திரு. கோ. சாரங்கபாணியை, தமிழர் தலைவர், `என்றே' அழைத்துப் பெருமைப் படுத்தினார்கள். அப்பொழுது, மலேசியாவும், சிங்கப்பூரும், ஒன்றாக இணைந்திருந்தது. திரு. கோ.சாரங்கபாணி, தமிழர்கள் மத்தியில், தமிழ் உணர்வை வளர்க்க, ஆண்டுதோறும், "தமிழர் திருநாள்" என்ற விழாவை நடத்த ஆரம்பித்தார்கள். அவர் உயிருடன் இருந்தவரை, அந்த விழா நன்கு நடைபெற்றது. எங்கும் தமிழ் உணர்வை வெளிப்படையாகக் காண முடிந்தது.

### சுதந்தரம் பெற்ற மலேசியா

1964 ஆம் ஆண்டு, திரு. சியாங்கே ஷேக், அவர்களின் அழைப்பைப் பெற்று, தைவான் நாட்டிற்குச் செல்லும் வாய்ப்பு கிட்டியது! அங்கிருந்து, திரும்பும் போது, மலேசியாவில் பத்தொன்பது நாட்கள், நானும், நண்பர். திரு. நாஞ்சில் மனோகரனும், சுற்றுப்பயணம் செய்தோம். அப்போது, மலேசியாவில், டத்தோ, துன். திரு. சம்பந்தம் அவர்களும், டத்தோ, திரு. மாணிக்கவாசகம் அவர்களும், அமைச்சர்களாக இருந்தனர். திரு டத்தோ துன் சம்பந்தம் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தைத் தோட்டத் தொழிலாளர்களுக்காகவே அறிவித்திருந்தார்கள். அப்போது, நாடு சுதந்தரம் பெற்றுவிட்டது. எனவே வெள்ளையர்கள், தங்கட்குச் சொந்தமான தோட்டங்களை, விற்றுவிட்டு, நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தோட்டங்களை விலைக்கு வாங்க, எந்தத் தனியான தமிழனிடமும் பணம் இல்லை. இலங்கைத் தமிழர்கள் மட்டும், சிலர் தோட்டங்களை வாங்கினர். எனவே, திரு. சம்பந்தம் அவர்கள், தோட்டத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களிடமே, பங்குத் தொகையை வாங்கிக் கூட்டுறவுத் துறையின், மூலம், தோட்டங்களை வாங்குவது என்று அறிவித்திருந்தார்கள். ஒவ்வொரு பங்கும், அந்த நாட்டு நாணயத்தில், பத்து வெள்ளி! நாங்கள் அந்த நாட்டில் காலடி எடுத்து வைத்தபோது, நம்மவர்களிலேயே சிலர், அதை எதிர்த்துக் கொண்டு இருந்தார்கள். நான் இந்தத்திட்டத்தை வேகமாக ஆதரிப்பது என்று முடிவெடுத்தேன். காரணம், பத்து வெள்ளி கொடுத்ததும் தமிழர்களுக்கு அந்த நாட்டுக் குடியுரிமை மறைமுகமாகக் கிடைத்து விடுகிறது! தான் உழைக்கும் மண்ணுக்கும் சொந்தக்காரன் ஆகிறான். தனக்குக் கிடைக்கும் இலாபத்தில், அவனுக்குத் தேவையான வீடு, குழந்தைகளுக்கான பள்ளி, தான் வாழும் பகுதிகளுக்கான பாதை, மற்றும் மின் வசதி, வீட்டிற்குத் தேவையான இன்றியமையாத பண்டங்களைப் பெறுதல் போன்று பல்வேறு வசதிகளைப் பெற முடியுமல்லவா?

தந்தை பெரியாரின் அறிவுரைகளை, என் மனத்தில் தாங்கிக் கூட்டம் கூட்டமாகக் கூட்டுறவுத் திட்டத்தை வரவேற்றுப் பிரச்சாரம் செய்தேன். அது நல்ல பலன் அளித்துள்ளதை, சமீபத்தில் கோலாலம்பூர் சென்றிருந்த போது பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. திரு. சம்பந்தனும், திரு. கோ. சாரங்கபாணியும், அந்த நாட்களில், தமிழர்களுக்கான திட்டங்களைப் போடாமல், இருந்திருந்தால், இன்றைக்கு டத்தோ திரு. சாமிவேலு அவர்கள் உலகத்தமிழ் மாநாட்டை மலேசியாவில் நடத்தியிருக்க முடியாது. காரணம் அங்கும், தமிழர்கள், தங்கள் தாய் மொழியை மறக்கத் தொடங்கியிருப்பார்கள். சிங்கப்பூரில், தமிழவேள், திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் மறைவுக்குப் பின், தமிழர்கள் ஒன்றாகக்கூடி எடுக்கும் விழாக்கள் •குறைந்து கொண்டே வருகின்றன. நல்ல வேளையாக, அங்குள்ள நாடாளுமன்றத்தில் முன்னாள் பிரதமர், லீகுவான்யூ அவர்கள் தமிழை அரசு மொழியாக அறிவித்தும், நாடாளு மன்றத்தின் உள்ளேயும் தமிழ் பேசலாம், என அரசியல் சட்டத்திலேயே எழுதியும் வைத்து விட்டார். உலக அரங்கில், முதன் முதலாக ஒரு நாடாளுமன்றத்தில் தமிழ் ஒலித்தது' என்றால் அது சிங்கப்பூரில்தான். தற்போது தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைந்து கொண்டே வருகிறது. தன்னலமற்றுத் தமிழர்களுக்குத் தொண்டு செய்யும் சரியான தலைவர்கள் அங்கு இல்லை என்கிற நிலைதான்!

### மொரீசியசில் தமிழர்கள்

தமிழர்கள், ஆப்பிரிக்காவிற்கு அருகில் உள்ள மொரீஷியஸ் தீவிலும் வாழுகிறார்கள். அத்தீவிற்குப் பலமுறை நான் போய்வந்துவிட்டேன். ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பே, தமிழர்களை, நம்மை ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேயர்கள். கப்பலில் ஏற்றி அத்தீவில் கொண்டு போய் இறக்கினார்கள். முப்பது மைல் நீளம். இருபத்தொன்பது மைல் அகலம். நல்ல மழை. நீர் வளத்திற்குப் பஞ்சமில்லை. நிலம் நிறைய இருந்தது. தமிழர்கள் கரும்புப் பயிரிடுவதில் வல்லவர்கள். அந்தநாடு தமிழர்கள் வசத்தில்

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் இருந்தது! என்றே கூறலாம். தமிழ்நாட்டில் வறுமையால் வாடும் உற்றார் உறவினர்களையும் அழைத்து, அங்கு வாழ வைக்கலாம் என்ற எண்ணமே எவருக்கும் எழவில்லை. சுமார் ஐம்பது ஆண்டுகள் கழித்து, அதே வெள்ளையர்கள் பீகார்க்காரர்களைக் கொண்டு போய்க் குடியமர்த்துகிறார்கள் அவர்களும், தோட்டத்தில் தான் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அங்குள்ள வளத்தைக் கண்டு, தங்கள் உறவினர்களை அழைத்து வாழ வைத்தார்கள். வளமானார்கள். தற்போது பீகார் மக்களின் மக்கள் தொகை சுமார் ஏழு லட்சத்து இருபத்தையாயிரம். நம்மவர்கள் மக்கள் தொகை ஒண்ணேகால் இலட்சம். பீகார்க்காரர்கள், தங்கள் வேலைகளை முடித்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பினால், தங்கள் தாய் மொழியான இந்தியில்தான் பேசுவது என்று உறுதி எடுத்துக் கொண்டார்கள். தமிழர்கள், யார் ஆட்சியில், உள்ளார்களோ அவர்களின் மொழியிலேயே, வீட்டிலேயும் பேசினார்கள். முதலில் ஆங்கிலம், பின்னர் பிரெஞ்சு, தொடர்ந்து இந்தி, எனப்பேசி ஒரு கலப்பு மொழி பேச ஆரம்பித்துத் தமிழையே மறந்து விட்டார்கள். நல்ல வேளையாக, அத்தீவில் ஏராளமான முருகன் கோயில்கள் உள்ளன. அவை தான் தமிழை இதுவரை காப்பாற்றி வந்துள்ளன. அந்த நாட்டிற்குச் சுதந்தரத்தை வாங்கித்தந்த, திரு. சர். ராம்கூலம் அவர்கள் தமிழர்களின் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாகவும், முன்னாள் நிதிய மைச்சரும் தற்போதைய கவர்னர் ஜெனரலுமான திரு. வீராசாமி, திரு. ஏ.வி. செட்டியார், தற்போதைய கல்வி அமைச்சர், திரு பரசுராமன் ஆறுமுகம், ஆகியோர்களின் பெரு முயற்சியாலும், மீண்டும், தமிழ் உணர்ச்சி பரவும் வகையில், உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றுள்ளது. ஆனால், தமிழ் பேசும் பழக்கம், வழக்கத்திலிருந்து மறைந்து போயிருக்கிறது.

### ரீயூனியன் தமிழர்கள்

மொரீஷியஸ் தீவிற்கு அருகில் உள்ள தீவு ரீயூனியன் எனும் தீவு. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில், ஒவ்வொரு வீட்டிலும், கார் வைத்திருக்கும் தமிழ்க் குடும்பங்கள் வாழும் நாடு. பிரெஞ்சு நாட்டின் காலனி அது. அங்கும், நம் தமிழர்கள் தாய் மொழியை மறந்து வாழுகிற நிலைதான்.

மொரீசியஸில், நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டைக் கண்டு, அங்கு தமிழ் மொழியை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும், என்ற ஆசை முகிழ்த்துள்ளது. நான் போன போது, பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம் மூன்றும் கலந்த அகராதி ஒன்று வேண்டும் என்றார்கள். புதுவை மாநில முன்னாள் முதல்வர், திரு. பாரூக் அவர்கள் மூலமாக, அந்த அகராதியைப் பெற்று ரீயூனியனுக்கு அனுப்பி வைத்தேன். அங்குள்ள கொடுமை என்ன வென்றால், பிரெஞ்சு நாடு, ரீயூனியன் தீவிற்கு விடுதலை அளிக்கிறேன், என்று கூறுகிறார்கள். ஆனால் அங்குள்ளவர்களோ, "விடுதலையே வேண்டாம், உங்களோடேயே இருப்போம்" என்கிறார்கள். அந்தத்தீவு விடுதலை பெற்றால், யாராவது ஒரு தமிழர், குடியரசுத்தலைவராகவோ, அல்லது பிரதமராகவோ, இருப்பார். அங்கும் கோயில்கள் தான் தமிழைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன.

### சீசெல்சில் தமிழர்கள்

அதே போல், சீசல்ஸ் தீவும் தமிழர்கள் வாழும் அழகான தீவு. அது ஒரு சுதந்தரம் பெற்ற தீவு. அங்குத் தமிழர்கள், நல்ல கடைகளை வைத்துச் சிறப்பாக வாழுகிறார்கள். அங்குத் தமிழுணர்ச்சி நன்றாக உள்ளது. உலகத் தமிழ் மாநாடுகளுக்கெல்லாம், பிரதிநிதிகள் வருகிறார்கள்.

### தென் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, பிஜி

தமிழர்கள் வாழும் பகுதிகளில், தென் ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா, பிஜி, தீவுகட்குப் போகும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் பலரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்துள்ளன. தென் ஆப்பிரிக்காவில், தமிழ் உணர்ச்சியை நன்கு காப்பாற்றி வருவதாகவே அறிகிறேன்.

### செனகல்

ஆப்பிரிக்காவில், செனகல் என்றொரு நாடு உள்ளது. அதற்கு விடுதலையை வாங்கித்தந்தவர் திரு. செங்கார் என்பவர். அவர் நல்ல கவிஞர். சிறந்த ஆராய்ச்சியாளர். அவர் திராவிடர்கள் பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கி, ஆப்பிரிக்கர்களுக்கும் திராவிடர்களுக்கும் உள்ள மொழி ஒற்றுமைகள். நிற ஒற்றுமைகள் உடல் ஒற்றுமைகள் பற்றியெல்லாம் நூல் எழுதி, உலகின் பாராட்டைப் பெற்றவர். அவருக்குத் தமிழின் மீது மாறாத பற்று. அதன் விளைவு, செனகல் பல்கலைக் கழகத்தில், தமிழ் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்தார். அங்கு ஆண்டு தோறும் பத்துப்பேர் தமிழைக் கற்று வருகிறார்கள். பேராசிரியர் திரு. க. ப. அறவாணன்தான் அந்தப் பணியைத் தொடங்கி வைத்தவர்.

### கென்யா நாடு

மற்ற இன மக்கள், வெளிநாட்டிற்குப் போனால், என்ன செய்தார்கள் என்பதை நேரில் அறியும் நல்ல வாய்ப்பு, எனக்குக் கென்யா நாட்டில் கிடைத்தது.

ஆம்! அங்கு முதன் முதலாகக் குடியேறிய குஜராத்தியை, நைரோபி நகரில் சந்தித்தேன். அவர் தனது வரலாற்றை என்னிடம் சொன்னார்.

"எனக்கு இன்றைக்கு 85 வயதாகிறது. நான் 30 வயது இளைஞனாக இருந்த போது நாட்டில் ஒரே பஞ்சம். எங்காவது சென்று உயிர் வாழலாம், என எண்ணி, துணி மூட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு, கென்யாவின் தலைநகரான, நைரோபிக்கு வந்தேன். இங்கு எல்லோரும் இலை, தழைகளை ஆடையாக உடுத்திக் கொண்டிருந்தனர். ஆட்சியோ, ஆங்கிலேயர் கையில் இருந்தது. ஆப்பிரிக்கர் ஒருவருக்கு, துணியைக் கட்டி விட்டேன். எனக்கு அவர் தன்னிடம் இருந்த தந்தம் போன்ற பொருள்களைத் தந்தார். நான் கொண்டு வந்த துணிகள் அவ்வளவும், சில நாட்களில் தீர்ந்தன. உடனே, தபால் கார்டுகளை வாங்கி, குஜராத்தில் இருந்த எனது உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், "துணிமூட்டையுடன் புறப்பட்டு வருக, வாழலாம்," என எழுதினேன். பலரும் புறப்பட்டு இங்கு வந்தனர். இன்று நைரோபி கடைத்தெருவில் 90 சதவிகிதம் நம்மவர்கள் கையில் உள்ளது" என்றார்.

தமிழ் இனத்திற்கும், மற்ற இனத்தவருக்கும், உள்ள வேற்றுமைகளை அங்குதான் உணர்ந்தேன். மற்ற இனத்தவர், அனைவரும் "வாழலாம், வாருங்கள், இங்கே" என உற்றார் உறவினர்களை அழைக்கிறார்கள். நம்மவர்கட்கு அந்தப் புத்தியே இல்லை.

மொரீஷியஸில் இன்னொன்றையும் கேள்விப்பட்டேன். வயது முதிர்ந்த ஒரு தபால்காரரை அங்குச் சந்தித்தேன். அவர் தமிழர். அவர் சொன்னார். "முப்பது வருடங்களுக்கு முன்பு மொரீஷியஸின் தலை நகருக்கு வரும் தபால்கள் எல்லாம், தமிழில் தான் வரும், ஏனெனில் அவ்வளவும் தமிழர்கள் கடைகள்! என்றார்."

"தற்போது ஏன் நிலைமை மாறியது", என்றேன். ஒரே தலைமுறையில், குடியும் கூத்தியும் பெருகிப் பெரும்பாலோர், தாங்கள் ஈட்டிய பொருள்களை இழந்து விட்டனர், என்றார் அவர்.

எந்த நேரத்தில் இளங்கோ அடிகள், சிலப்பதிகாரம், எழுதினாரோ, எனக்குத் தெரியாது. ஆனால், தமிழன் எங்கு வாழ்ந்தாலும், ஒரு தலைமுறை முடிந்ததும், அடுத்த தலை முறையில், கோவலனாகத்தான், வாழுகிறான்.

மொரீஷியஸில், ஐம்பது ஆண்டுகள், இவன் வாழுகிறான். ஏராளமான உற்றார், உறவினரை, அங்கு அழைக்கவில்லை. ஏராளமாக நிலம் இருந்தது. அதைத் தனதாக்கிக் கொள்ளவும் முயலவில்லை. வாழத் தெரியாத இனமாக, ஒற்றுமையற்ற இனமாக, தன்னைப் போல் பிறரும் வாழட்டும், என்று நினையாத இனமாக, உத்தியோகத்திற்காகத் தாய்மொழியையே மறக்கும் இனமாக, வாழும் இனம் தான், நம் தமிழினமாக, எனக்குக் காட்சி அளிக்கிறது.

தமிழன் வாழும் ஒவ்வொரு நாட்டிலும், ஒரு தன்னலமற்ற பெரியார் தோன்றினால் தான் தமிழர்களின் எதிர்காலம் சிறப்படையும். ஒளிமயமானதாக மாறும். வெளிநாட்டில் வாழும் தமிழர்கள், இதுபற்றி இந்தத் தலைமுறையிலாவது சிந்திப்பார்களா?



# தமிழ்

## செளந்தரா கைலாசம்

அமரர் உலகில் கிடைக்கின்ற
அமுதம் இங்கே கிடைக்காதா?
நமதின் னுயிரும் வளராதா?
நாளும் இன்பம் பெருகாதா?

இமையோர் தமக்கும் கிட்டாத
இனிமை மண்ணில் பூக்காதா?
சுமையே இல்லா மனங்கொண்ட
சுரும்பாய் விண்ணில் சேர்க்காதா?

என்று வருந்திக் கிடந்தாரின்
இதயம் மகிழ்வில் கூத்தாட
நன்று பிறந்தாள் தமிழ் மங்கை!
நலங்கள் பிறந்தன புவியெங்கும்!

சிவனார் முடியில் இருந்துவந்த
தீம்புனற் கங்கை அதுபோலே
சிவனார் திருவாய் மலர்ந்தருளச்
செந்தமிழ் மங்கை பிறந்தாளாம்!

அறுமுகன் முருகன் வழியாக
அகிலம் முழுதும் விரிந்தாளாம்!
குறுமுனி அவரால் அழகெய்திக்
கோடி நலங்கள் புரிந்தாளாம்!

முதலிடை கடையெனச் சங்கங்கள்
மூன்றினைக் கண்டு நிறைந்தாளாம்!
இதழிடை நறவமென் றெங்கெங்கும்
இனிமையைக் கொண்டு செறிந்தாளாம்!



ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்முன்
அருந்தமிழ் மங்கை பிறந்தாலும்
ஓயுதல் இன்றி ஒழிவின்றி
உவகையை என்றும் நிறைக்கின்றாள்!

செந்தமிழ் மங்கை மண்மேலே
திருவடி பதித்த நாள் தொட்டுச்
சிந்தனைக் கதிரின் ஒளிரேகை
சென்று விரிந்தது திசையெட்டும்!

இந்திய நாட்டில் அந்நாளில்
இருந்த மொழிகள் பலவற்றுள்
முந்திய தாக விளங்கியது
முத்தமி ழன்றோ வேறென்ன?

பற்பல வகையில் பண்பட்டுப்
பக்குவ முற்றுப் பார்முற்றும்
முற்பட வைத்த மொழியென்று
மொழிவார் தமிழை அறிவுள்ளார்!

முத்துகள் கடலில் பிறப்பதுபோல்
முத்தமிழ்க் கடலில் பலமொழிகள்
சித்திரப் பிறவி எடுத்துவரத்
தென்திசை நிறைந்தது தாயெனவே!

சுகத்தினை மனத்துள் சேர்த்துவிடும்
சுடர்த்தமிழ் அதனைக் காத்தவனாம்

அகத்திய னுக்கொரு மாணவனாய்
அறிவுயர் தொல்காப் பியன் வந்தான்!

கலக்கம தின்றித் தமிழ்மங்கை
காலமெ லாம் தனி நடைபோட
இலக்கணப் பாதை அவன் செய்தான்!
ஏந்திய விளக்காய் ஒளிபெய்தான்!

எத்தனை சங்கப் புலவோர்கள்
இருந்தொளி ஊட்டினர் வளமாக!
எத்தனை இன்பத் தமிழ்நூல்கள்
எழிற்புகழ் கூட்டின நலமாக!

அருள்நெறி காட்டி, அறம் காட்டி,
அறிவினை ஊட்டி, அழகூட்டி,
பொருள் நலம் பேசி, புகழ் பேசி,
பொலிந்து சிறந்தன பல நூல்கள்!

இயற்கையும் வாழ்க்கையும் ஒன்றாக
இணையும் அழகைக் கவியாக்கி,
உயிர்ப்புற உலகில் மனிதத்தை
உயர்த்த எழுந்தன பல நூல்கள்!

உண்மையின் உயர்வை உலகறிய
உணர்த்தப் புகுந்தன பல நூல்கள்!
பெண்மையின் சிறப்பை எடுத்திங்கே
பேசப் பிறந்தன பலநூல்கள்!

துலக்கிய வாழ்வை மண்மேலே
தோன்றிய யார்க்கும் வழங்கிவிட
இலக்கிய மாகிய கோபுரங்கள்
எழும்பின எங்கும் ஒளிசிந்தி!

அகவல், கலிப்பா, பரிபாடல்
அமைய எழுந்த இலக்கியங்கள்
வகையுற மேலும் விரிவாக
வளர்ந்தன வெண்பா விருத்தம தாய்!

பைந்தமிழ் எட்டுத் தொகையதுவும்
பத்துப் பாட்டும் அழ கமைய
முந்தி நடந்தன வழிகாட்டி!
முறுவ லுதிர்த்தன மொழிகாட்டி!

களவும் கற்பும் விளக்கமுறக்
காட்டிச் சிறந்த நற்றிணையும்,
உளத்தின் காதல் உணர்ச்சிகளை
உரைத்து மகிழ்ந்த குறுந்தொகையும்,

எல்லை இல்லாக் காதலினால்
இணையத் துடிக்கும் காதலரைத்
தொல்லைப் படுத்தும் உணர்வுகளைச்
சொல்லும் ஐங்குறு நூறதுவும்,

வீரம் அதனின் விளக்கமென
விளங்கிய சேர வேந்தர்களின்

பாரம் பரியப் புகழதனைப்
பகரும் பதிற்றுப் பத்ததுவும்,

கரியவன் தனையும் கந்தனையும்
கடலையும், கலக்கும் வையையையும்
திருவளர் மதுரைப் பதியினையும்
செப்பும் நற்பரி பாடலதும்,

பண்டைத் தமிழர் கொண்டிருந்த
பண்பும் அன்பும் ஆண்மையதும்
கண்டுத் தமிழில் கலிப்பாவில்
கவினுற இயம்பும் கலித்தொகையும்,

மோதி மனத்துள் ஒருபோரை
மூட்டி நிதமும் அலைக்கழிக்கும்
காதல் வீரம் இரண்டினையும்
காட்டும் அகமும் புறமதுவும்,

ஆற்றுப் படுத்தி நலங்கூட்டும்
ஆற்றுப் படைகள் நான்கோடு
போற்றும் முல்லைப் பாட்டதுவும்
பொற்பார் மதுரைக் காஞ்சியதும்,

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்
பற்றிய நெடுநல் வாடையதும்,
தோண்டிய சுரங்கம் எனத் தமிழைச்
சுரக்கும் குறிஞ்சிப் பாட்டதுவும்,

திருமா வளவன் புகழதனைச்
செப்பும் பட்டினப் பாலையதும்,
ஒருமா மனிதன் நன்னனைநன் (கு)
உரைக்கும் மலைபடு கடாமதுவும்,

பழந்தமிழ் இலக்கியப் பூங்காவில்
பளிச்செனத் தெரிகிற மண மலர்கள்!
வளந்திகழ் நெஞ்சினை எல்லோர்க்கும்
வழங்கிட வந்தநல் ஒளிக்கதிர்கள்!

நன்னெறி பற்றி மனிதஇனம்
நாளும் நடந்து புனிதமுற
தன்னிக ரற்ற திருக்குறளைத்
தந்து சிறந்தார் வள்ளுவனார்!

காலம் கடந்து நிலங்கடந்து
காணும் நிகழ்வு தனைக் கடந்து
கோலம் விரிக்கும் குறட்பெருமை
கூறுவ தென்ப தெளிதன்று!

சேரர் குலத்தின் இளவரசர்
செம்மைத் துறவி என மாறி
ஈரத் தமிழில் சிலம்பதனை
இசைத்தார் பெண்மைத் திறம்காட்ட!

அரசிய லதனிற் பிழை செய்தால்
அறமே கூற்றாய் மாறுமென

விரிவுல கறியச் சிலம்பதனால்
விளக்க விழைந்தார் பயன் கூட்ட!

புத்த மதத்தின் கொள்கைகளைப்
புகலப் புகுந்த சீத்தலையார்
மெத்தச் சிறந்த மேகலையை
மெல்ல நடக்க வழி செய்தார்!

வாட்டும் கொடிய பசிப்பிணியை
வற்றா அமுத சுரபியினால்
ஓட்டும் படியே மேகலையாள்
ஒவ்வோ ரடியும் எடுத்து வைத்தாள்!

சிந்தா மணிவளை யாபதியும்
சீரார் குண்டல கேசியதும்
எந்தாய்த் தமிழுக் கணிகளென
இலங்கிச் சிறந்தன எழிலாக!

காவிய நாயகன் ராமனையே
கம்பன் என்றொரு மாமனிதன்
ஓவிய மாயொரு மனிதனென
உலவிட விட்டான் புவியினிலே!

கம்பன் வீட்டில் இருக்குமொரு
கட்டுத் தறியும் பாடுமென
நம்புதற்குரிய வகையினிலே
நற்றமிழ்க் கவிதை பின்னியவன்!

ஓட்டக் கூத்தன், புகழேந்தி,
ஓங்கும் பரணிச் செயங்கொண்டான்,
கொட்டும் கவியின் மேகத்தைக்
கொணரும் காள மேகத்தான்,

பண்ணது சிந்தித் தேவாரம்
பாடிய மூன்று திருத் தொண்டர்,
கண்ணது சிந்த, நெஞ்சுருகக்
கவிதரும் நல்மணி வாசகனார்,

தெய்வப் பணியே திருப்பணியாய்ச்
சிந்தை தன்னில் நிதம் கருதிச்
செய்தவர் வாழ்வை உலகுக்குத்
தெரிய உரைத்தசேக் கிழார்பெருமான்,

நெஞ்சம் கசிய, இருவிழியும்
நீரைச் சொரியக் கரியவனைக்
கொஞ்சும் தமிழில் கூப்பிட்டுக்
குலவும் ஆழ்வார் பன்னிருவர்,

ஊனும் உயிரும் உருகிவிட,
உறுத்தும் துயர்கள் கருகிவிட,
தேனும் பாலும் கலந்து கவி
செய்த வடலூர் வள்ளலவர்,

தூய தமிழை மனமாரத்
துதித்து நிதமும் வளர்த்தார்கள்!

தாயைப் போல எப்போதும்
தாங்கிப் புகழை நிறைத்தார்கள்!

பைந்தமிழ்த் தாயின் புண்ணியத்தால்
பாரதி என்றொரு பெருங்கவிஞன்
இந்த நிலத்திலே வந்தொளிர்ந்தான்!
இறவாக் கவிதைகள் தந்து நின்றான்!

தூங்கிய பாரதன் எழுந்துவிட்டான்!
துன்பங்கள் யாவையும் களைந்துவிட்டான்!
ஆங்கிலச் சிங்கத்தை ஓட்டிவிட்டான்!
அன்புடன் ஆண்மையைக் காட்டிவிட்டான்!

ஏழைகள், செல்வர்கள் எங்குமிலை
எல்லோரும் சரிசமம் என்றுரைத்தான்!
கோழை மனங்களை வீரத்தின்
கொட்டடி யாக்கிக் குளிர்ச்சியுற்றான்!

பாரதி பின்னால் அவன் தாசன்
பட்டுக் கிடந்த தோட்டத்தில்
நீரது பாய்ச்சி வளமாக்கும்
நேர்த்திக் கவியின் மழை பெய்தான்!

தேசிக விநாயகம் என்னுமொரு
தேன்தமிழக் கவிஞன் தேசத்தில்
நேசம் மலர, மானுடரின்
நெஞ்சம் வளரக் கவிதந்தான்!

கன்னித் தமிழில் நாமக்கல்
கவிஞர் படைத்த கனியமுதம்
இன்னும் இனித்துக் கிடக்கிறது!
ஏறும் துயரைத் தடுக்கிறது!

எண்ணம் முழுதும் இனிப்பாக,
இறைமை நெறியே முனைப்பாக,
வண்ணக் கவிதை படைத்து நிதம்
வாழும் கண்ண தாசனவர்,

சின்னச் சின்னச் சொற்களிலே
சிறுவர் மனத்தை அள்ளுகிற
வன்ன வன்னக் கவிமலர்கள்
வழங்கிக் களித்த வள்ளியப்பா,

பாடுகள் அளவில் பட்டலைந்து
பைந்தமிழ் அழிந்து படா வண்ணம்
ஏடுகள் தேடி வெளியிட்ட
இயற்றமிழ் அறிஞர் உவே.சா.

மறைமலை அடிகள், திரு.வி.க.
மாசறக் கற்ற கதிரேசர்,
இறைநெறி வளர்க்கும் மடங்களிலே
இருந்தாள் கின்ற குருமார்கள்,

தங்கத் தமிழின் இசைவெள்ளம்
தாரணி முழுதும் தடையின்றிப்

பொங்கிப் பரவச் செய்திருந்த
புகழுயர் அண்ணா மலைவள்ளல்

தன்னே ரில்லாத் தமிழ் மங்கை
தழைத்து வளரத் துணை நின்ற
இன்னோ ரன்ன அறிஞர்களை
இதயம் வணங்கித் துதிக்கிறது!

இன்பத் தமிழுக் கேதேனும்
இன்னல் கண்டால் உள்ளுக்குள்
துன்பம் கனலாய்க் கொதிக்கிறது!
துடித்துத் தகர்க்கக் குதிக்கிறது!

அன்று பிறந்தவள் தமிழ் மங்கை!
ஆயினும் என்ன? அழகாக
இன்றும் உள்ளாள் —நெஞ்சுக்குள்
ஏற்றும் தீப ஒளியாக!

உளமாய் உயிராய் உள்ளொளியாய்
உலவும் இன்பத் தமிழ் மங்கை
வளமாய் என்றும் வையத்தில்
வாழிய வாழிய வாழியவே!



# உலக நாடுகளில் தமிழும் தமிழரும்

இராம.வீரப்பன்
முன்னாள் அமைச்சர்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

–தமிழ்விடு தூது

உலகநாடுகளில் தமிழரும் தமிழ்மொழியும் பெற்றிருக்கும் சிறப்பை எவரும் மறுக்க முடியாது. உலகமொழிகளில் , இடப்பரப்பால் பரந்துபட்டுப் பேசப்படுபவை சில மொழிகளே. அச்சில மொழிகளுள் சீரிய மொழியாகத் திகழ்வது நம் தமிழ்மொழி. தமிழ் மாநிலத்தின் தாய்மொழியான தமிழ், இந்தியாவின் பல மாநிலங்களிலும் பேசப்பட்டு வருவதுடன் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா, பீஜித்தீவு, மொரீசியஸ் முதலான பல நாடுகளிலும் கூடப் பல இலட்சக்கணக்கான மக்கள் பேசிவரும் மொழியாகத் திகழ்ந்து வருகிறது.



இன்று அறிவாற்றல் மிக்க தமிழர்கள் அமெரிக்கா, ரஷியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பணிபெற்று அவற்றைச் சிறப்புற ஆற்றிவரும் தகுதியாலும் உலகின் எந்தப் பகுதியிலும் தமிழரின் கால்படாத இடமே இல்லை என்று கூறத்தக்க உயரிய சிறப்பையும் கூட நாம் பெற்றிருக்கிறோம்.

பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி"

நம் தமிழ் மக்கள் சாதித்துவரும் சாதனைகள் மகத்தானவை ஆகும்.

உலகநாடுகளுடன் நமது தொடர்பு இன்று நேற்று உண்டான ஒன்றல்ல. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நம் தமிழ்நாடு கிரேக்கம், ரோமம், சீனம் முதலான பழம்பெருமை மிக்க பலநாடுகளோடு கடல் கடந்து வாணிகம் புரிந்து வந்த சிறப்புக்களை எல்லாம் பிளினி (கி.பி.24 79) தாலமி (கி.பி.150) போன்ற வரலாற்றுப் பேரறிஞர்கள் தத்தம் நூல்களில் மிக விரிவாக எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள்.

ரோமர்கள் தமிழ்நாட்டு முத்துக் களையும், யானைத் தந்தங்களையும், மெல்லிய (மஸ்லின்) ஆடைகளையும் பெற்று மகிழ்ந்த காரணத்தால், அந் நாட்டுச் செல்வம் முழுவதும் தமிழ் நாட்டைச் சென்று சேர்ந்தது என்றும் வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்தி ருக்கும் குறிப்புகள் பண்டைத் தமிழகத்தின் மகத்தான சிறப்பை இன்றைக்கும் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தின் இஞ்சியும், திப்பிலியும் கிரேக்கத்தின் வரவேற்பைப் பெற்று, சிக்கிபெரஸ், பெப்பரி எனக் கிரேக்க மொழியில் வழங்கி வந்துள்ளன. சீனாவிலிருந்து தமிழகத்திற்கு வந்த காரணத்தால், சர்க்கரை `சீனி' என நம்மால் பெயரிடப்பட்டு , இருக்கிறது. பழைய ஹீப்ரு மொழியில் உள்ள துசி, தோகை என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபே ஆகும். அகில் என்னும் தமிழ்ச்சொல் அஹலத் எனத் திரிந்து அம்மொழியில் வழங்கியுள்ளது. தமிழரின் சந்தனமே சாண்டல் எனவும், அரிசி ரைஸ் எனவும் ஆங்கிலத்தில் இன்றும் வழங்கப்படுகிறதெனில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்து அரிசியும் சந்தனமும், கடல்வழியாகப் பாபிலோனியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதே காரணம் என்று கூறுகிறார்கள் மொழிநூல் அறிஞர்கள்.

இவ்வாறு மிகப் பழங்காலத்திலேயே நம் தமிழகம் கிரேக்க ரோம நாடுகளுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில் அந்நாட்டு நாணயங்கள் பல, தமிழகத்தின் புதை பொருள்களாக நமக்குக் கிடைத்திருப்பதையும் நாம் இன்று சான்று காட்டிக் கொண்டிருக்கிறோம். இடைக்காலத்தில் நம் தமிழகத்தைஆண்ட இராஜராஜன், இராசேந்திர சோழன் போன்ற ஆற்றல்மிக்க மன்னர்கள் சிங்களம், புட்பகம், சாவகம், கடாரம் முதலான பலநாடுகளை வென்று, அங்கெல்லாம் தம் புலிக்கொடியைப் பறக்க விட்டுத் தமிழ்மக்களையும் குடியேற்றிக் கோலோச்சிய சிறப்பினை எல்லாம் வரலாற்று ஏடுகள் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

மகாகவி பாரதியார் நம் தமிழ்ப் பெருமக்களின் சீரிய சிறப்புகளாக இவற்றையெல்லாம் வடித்துக் காட்டி "செந்தமிழ் நாடெனும் போதினிலே –இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று முழங்குகிறார்.

சிங்களம் புட்பகம் சாவகம் –ஆதிய
தீவு பலவினும் சென்றேறி –அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்– நின்று
சால்புறக் கண்ட தமிழ்நாடு

சீன மிசிரம் யவனரகம் –இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் –கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு

என்று பாரதியார் அடுக்கியுள்ள மேன்மைச் சிறப்புகளுக்கு உரிமை படைத்தவர்களே நாம்.

உலகின், இன்றைய மொழிகள் பல, கருவிலும் உருக் கொள்ளாத பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண இலக்கிய வளம் பெற்று உலகின் முதன் மொழி என்று சொல்லத் தக்க மாட்சியைப் பெற்றுத் திகழ்ந்ததும் நம் தாய்மொழியே ஆகும். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், பன்னிருதிரு முறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள், சித்தர் பாடல்கள் என நம் தமிழ் மொழியில் பண்டைநாள் தொட்டு வாழையடி வாழையாக வளர்ந்து வந்த இலக்கியச் சுரங்கங்கள் ஏராளம், ஏராளம். அச்சுரங்கங்களில் நாம் கண்டெடுத்த கருத்து வைரங்களும் ஏராளம் ஏராளம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்று, ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகநாடுகள் அனைத்தும் வியந்து வரவேற்கத் தக்க புதுமைக் கருத்துக்களை, புரட்சிக்கருத்துக்களைப் படைத்துப் புவியில் முழங்க விட்டவர்கள் நாம்தான். "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று இந்நாளில் பாடினார் பாவேந்தர். அந்நாளிலும் "தமிழெனில் இனிமையும் நீர்மையும்" என்று பாடியிருக்கிறார் ஒரு புலவர்.

அமிழ்தாகத் தித்திக்கும் நம்தமிழ் மொழியின் சிறப்பிலே சிந்தையைப் பறிகொடுத்துத் தமிழகத்திற்குச் சமயம் பரப்ப வந்த பல கிறித்துவப் போதகர்கள் தமிழின் மாணவர்களாக–தமிழின் காதலர்களாகத் தங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தமிழர்க்கே உள்ள சிறப்பு. பாதிரியார் தெ.நோபிலி என்பவர் (1577 1656) தம் பெயரைத் தத்துவ போதகர் என மாற்றிக்கொண்டு மதுரையில் தங்கி வாழ்ந்து, முழுதும் தம்மை ஒரு தமிழராகவும் மாற்றிக் கொண்டு, தமிழ் கற்றுத் தமிழில் பலநூல்களை இயற்றினார் எனப்படிக்கிறோம். இத்தாலிநாட்டில் இருந்து வந்த பெஸ்கி என்ற மத போதகர் வீரமா முனிவராய்ப் பல தமிழ்நூல்களை வழங்கினார் என்பதும், அவர் படைத்த "பரமார்த்த குரு" எனும் நூலே தமிழில் தோன்றிய முதல் சிறுகதை நூல் என்பதும், அவர் சதுரகராதி என்ற அகராதி "நூலைப் படைத்து அவ்வகையிலும் தமிழுக்குத் தலைசிறந்த தொண்டாற்றியிருக்கிறார் என்பதும் நாம் தமிழ் இலக்கிய வரலாற்றில் படிக்கிறோம். இன்னும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல், திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி.யு.போப் போன்ற

ஆங்கில அறிஞர்கள் அருந்தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டும், பெருமையும் நாம் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதிலும் ஜி.யு. போப் அவர்கள் தம் கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன் இங்கே கண் உறங்குகிறான்" என்று பொறிக்கச் செய்த அந்தச் செயல், நம் நெஞ்சை நெகிழச் செய்யும் ஓர் அற்புத வரலாறு அன்றோ!

உலகினோர் உள்ளங்களை இவ்வாறு கொள்ளை கொண்ட உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழின் மேன்மையைப் பறைசாற்றும் வகையில் இதுகாறும் ஏழு உலகத் தமிழ் மாநாடுகளை உலகின் பல நாடுகளிலும் நிகழ்த்தி நாம் பெருமை கொண்டிருக்கிறோம். அத்தகைய உலகத் தமிழ் மாநாடுகளில் மொழித் திறம்மிக்க அறிஞர் பெருமக்களே இதுகாறும் மிகுதியும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினைப் பெற்றனர். இப்பொழுது உலகின் பல பாகங்களிலும் வாழக்கூடிய தமிழ்ப் பெருமக்கள், அவர்கள் பண்டிதர்கள் ஆயினும் பாமரர்கள் ஆயினும், செல்வர்கள் ஆயினும், நலிந்தவர்கள் ஆயினும் வேற்றுமையின்றி இன உணர்வோடு கலந்து பேசித் தங்கள் எதிர்கால மேன்மையை உறுதிப்படுத்தும் வகையில் முதன்முதலாக உலகத் தமிழர் மாநாட்டை மலேசிய நாட்டின் தலைநகராம் கோலாலம்பூரில் கூட்ட இருப்பது பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய ஒன்றாகும்.

பூமிப்பந்தின் பற்பல பாகங்களிலும் தமிழர்கள் பரவி வாழ்ந்த சிறப்பைப் பாடிய மகாகவி பாரதியார் தாம் வாழ்ந்த காலத்தில் அத்தமிழ் மக்கள் அங்கெல்லாம் மனித நேய உரிமையின்றி வாடநேர்ந்த அவலத்தையும் கூடச் சுட்டிச் சென்றார்.

"தமிழச் சாதி தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெல்லாம் கேட்டு மனதுள ழிந்திலேன்"

என்று "தமிழச்சாதி" யெனும் தலைப்பில் தமிழர் அன்று பட்ட இன்னலை வடித்துக்காட்டியிருக்கிறார மகாகவி பாரதியார். பீஜித் தீவின் கரும்புத் தோட்டங்களில் கூலிவேலை செய்து கொடுமைக் குள்ளான தமிழ்ப் பெண்களின் துயரம் கண்டும் இரத்தக் கண்ணீர் வடித்திருக்கிறார் மகாகவி பாரதியார்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் தமிழர்கள் நிலை அவ்வாறு இரங்கத் தக்கதாகவே இருந்தது. ஆனால் இன்று தமிழர்கள் அக்கொடுமையான நிலையில் இல்லை என்பதும், இன்று மனிதர் நோக மனிதர் பார்க்கும் அவலநிலை முற்றிலுமாக மாறி வருகிறது என்பதும், "எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் சரிநிகர் சமானமானவர்களே" என்பதும் நம் பாரதியார் கண்ட கனவெல்லாம் நனவாகி வந்து கொண்டிருக்கின்றன என்பதும் மனிதஇனம் மகிழ்வுடன் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையில் இன்று உயர்ந்து விளங்குகிறது. உலகில் எந்த மூலையிலும் ஓரினம் மற்றோர் இனத்தை நிறம், மொழி, மதம் முதலான எந்தக் காரணத்திற்காகவும் அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்தும் செயல் நீடிக்க முடியாது என்பதை இன்றைய உலக நிகழ்ச்சிகள் நமக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்தி வருகின்றன. 27 ஆண்டுகள் ஆப்பிரிக்காவின் தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடந்த நெல்சன் மண்டேலா இன்று விடுவிக்கப்பட்டு வீறு நடைபோடுவதையும் "இழிவு கொண்ட மனிதர் எவரும் உலகில் எங்கும் இல்லையே" என்று உரிமைக் குரல் கொடுத்து அவர் முழங்கிக் கொண்டிருப்பதையும் வரலாறு நமக்குக் காட்டிக் கொண்டிருக்கும் பொன்னான தருணம் இத்தருணம் ஆகும்.

இத்தகைய நல்ல சூழலில் மலேசியாவில் "முதல் உலகத் தமிழர் மாநாடு" நடைபெறுவது முற்றிலும் பொருத்தமான ஒன்று. உலகத் தமிழர்கள் ஒன்றுபட்டு உலக அரங்கில் தலை நிமிர்ந்து வாழும் வண்ணம் பல செயற்திட்டங்களை வகுத்துச் செயல்பட இம்மாநாடு வழி வகுக்கும் என்று நம்புகிறேன். தமிழகத்தின் தாய்மொழியிலே கற்க வாய்ப்பிருந்தும் வசதிகள் இருந்தும் தமிழ் உணர்வைப் புறக்கணித்து நம்மில் பலர் தமிழ் கற்காமலே வாழ நினைக்கும் அவலம் இருந்து வருகிறது. அதே நேரத்தில் மொரீசியஸ் முதலான பலநாடுகளில் தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களும், பாட நூல்களும் இல்லாமல் மக்கள் தமிழ் உணர்வோடு அவற்றைக் கற்க ஏங்கித் தவிக்கும் அவலமும் மறுபுறம் இருந்து வருகிறது. சுவரை வைத்தே சித்திரம் வரைய வேண்டும். ஆகவே உலகின் எம்மூலையில் வாழ்ந்தாலும் தமிழர்களாகிய நம்மை ஒன்று படுத்தும் அடிப்படை உணர்வு தமிழ் உணர்வே ஆகும். தமிழ் மொழியைக் கற்றுத் தமிழ் இலக்கியக் கருவூலங்களைக் காத்து அவற்றை உலகிற்கு எடுத்துணர்த்தும் சீரிய தமிழ்மொழி உணர்வு நமக்கு அடிப்படையாக அமையாவிட்டால் தமிழ் இன உணர்வும் மெல்ல மெல்ல நம்மிடம் இல்லாமலே மறைந்து போய்விடும். ஆகவே நம்மில் தமிழ் உணர்வை வளர்க்கத் தமிழ்

மொழிக் கல்வி மிகமிக இன்றியமையாதது. தமிழைப்புறக்கணித்துப் பிறமொழிகள் பலவற்றில் ஒருவர் புலமை பெறுவது, பெற்ற தாயைப் புறக்கணித்து மற்றப் பலரைத் தாயெனப் போற்றிடும் புல்லறிவே ஆகும். தாய்மொழிக் கல்வி பயில வாய்ப்பில்லாத உலகநாடுகளில் தமிழைக் கற்பிக்கும் வாய்ப்பு வசதிகளைப் பெருக்குவது பற்றி இம்மாநாடு சிந்திக்க வேண்டும். தமிழில் உள்ள உரிய கருத்துக் கருவூலங்களை இன்னும் சிறப்பான முறையில் உலகின் பிறமொழிகளில் மொழி பெயர்த்துப் பரப்புவது பற்றியும் இம்மாநாடு சிந்திக்க வேண்டும். அதே போல் பிறமொழிகளில் உள்ள அரிய விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும் இம்மாநாடு வழி காணவேண்டும். மொழி, இலக்கியம், கலை, விஞ்ஞான அறிவில் நம் தமிழர்கள் உலகில் யாருக்கும் குறைந்தவர்கள் அல்லர் என்றும் கூறும் வகையில் உயரிய முன்னேற்றம் காண்பது பற்றி இம்மாநாட்டில் சிந்தித்து அன்பர்கள் வழிகாண வேண்டுகிறேன்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்று மகாகவி பாரதியாரும்,

"ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன் முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ
இளந்தமிழா கண்விழிப்பாய்
இறந்தொழிந்த
பண்டைநல ம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும் நீ
படைப்பாய்! இந்நாள்
தொண்டு செய்வாய் தமிழுக்குத்—
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே"

என்று புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசனும் வற்புறுத்தியுள்ள உயர்வழி நின்று தமிழர்களின் புதுவாழ்விற்கு வழிகாண இம்முதல் உலகத் தமிழர்மாநாடு வழிகாண வேண்டும் என்று நான் வேண்டி, இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருக்கும் உலகத் தமிழர் மாமன்றத்தினரையும் அன்போடு வாழ்த்தி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.



# தமிழின் தொன்மைச் சிறப்பு

## முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

உலகில் இன்று பேசப்படும் மொழிகள் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவை. அவற்றுள் எழுத்து உள்ள மொழிகள் எழுநூற்றுக்கும் உட்பட்டவை. அவற்றுள்ளும் சிறந்த இலக்கண இலக்கியங்கள் உள்ள மொழிகள் இருநூற்றுக்கும் சற்று அதிகமானவை. இத்தனை மொழிகளுக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. சிறப்புக்கள் ஒன்றிரண்டு அல்ல. பதினாறு. அவை.

1. தொன்மைச் சிறப்பு
2. சுழிச் சிறப்பு
3. எழுத்துச் சிறப்பு
4. சொற்சிறப்பு
5. பெயர்ச்சிறப்பு
6. இனிமைச் சிறப்பு
7. எளிமைச் சிறப்பு
8. தனிமைச் சிறப்பு
9. ஒலிச்சிறப்பு
10. கவிதைச் சிறப்பு
11. கலைச் சிறப்பு
12. மருத்துவச் சிறப்பு
13. இசைச்சிறப்பு
14. நாடகச் சிறப்பு
15. இலக்கியச் சிறப்பு
16. இலக்கணச் சிறப்பு.

என்பன

இவற்றுள் தொன்மைச் சிறப்பை மட்டும் ஆராய்வோம். உலகிலுள்ள மொழிகள் அனைத்திற்கும் இன்ன காலத்தில் இன்னாரால் உண்டாக்கப்பட்டது, உருவாக்கப்பட்டது என்ற வரலாறு உண்டு. தமிழ்மொழி ஒன்றுக்கு மட்டுமே அது இல்லை. உலகம் தோன்றிய காலம் முதல் தமிழ் தோன்றிய காலத்தை அறிந்து கூறும் அறிஞர்கள் இன்று வரை தோன்றவில்லை.



உலகம் எப்படித் தோன்றியது? மலைகள் எப்படித் தோன்றின? மண், நீர், நெருப்பு முதலியவை எப்படித் தோன்றின? என்று மிக மிகப் பழங்காலத்திய நிகழ்ச்சிகளை அறிந்து கூறும் ஆற்றல் படைத்த வல்லுநர்களாலும் தமிழ் தோன்றிய காலத்தை அறிந்து கூற முடியாது என்பது தேசியக் கவி சி. சுப்ரமணிய பாரதியாருடைய கருத்து.

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் அறிந்திடும்
தொல்புவி வாணர்களும்- இவள்
என்று பிறந்தவள்? என்று ணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!'' என்பது அவரது வாக்கு.

உலகத்தின் மிகத் தொன்மையான நாடு தமிழ்நாடு, உலகத்தின் தொன்மையான மக்கள் தமிழ்மக்கள், உலகத்தின் தொன்மையான மொழி தமிழ் மொழி, உலகத்தின் தொன்மையான இசை தமிழ் இசை, உலகத்தின் தொன்மையான மருத்துவம் தமிழ் மருத்துவம் என்பன தமிழறிஞர்கள் கருத்து.

உலகம் தோன்றி, மலைகள் தோன்றி, அவை பாறையாகி அவை கரைந்து மணலாக மாறிய காலத்தில் தமிழ் மக்கள் தோன்றினர் என்றும், அவை பைய நாவை அசைத்த போதே தோன்றிய மொழி தமிழ் மொழி என்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

மேலைநாட்டினர் இக்கருத்தை ஒப்பவில்லை. அவர்கள் உலகில் தோன்றிய முதல் மொழி எது என ஆராய 1920 இல் இலண்டன் மாநகரில் ஒரு குழுவாகக் கூடி ஆராய்ந்தனர். இறுதியில் அவர்கள் கூறிய முடிவு உலகில் முதன் முதல் தோன்றிய மொழிகள் நான்கு எனவும், அவை இலத்தீன், கிரீக், தமிழ், சீனம் எனவும் கூறிவிட்டனர். நாமும் இதை ஒப்பலாம். பாவம்! அவர்களாலுங் கூட இந்நான்கில் முதல் மொழி எது என அறிந்து கூற முடியவில்லை.

தமிழ்கூறு நல்லுலகில் அடிக்கடி மூன்று கடற்கோள்கள் தோன்றித் தமிழகத்து நிலப்பரப்பையும், தோன்றியிருந்த முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகியவைகளையும், அவற்றிலுள்ள தமிழ் நூல்களையும் அழித்து ஒழித்தன எனத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன அச்சங்கங்கள் தோன்றிய காலம் 9000, 5000, 2000 என்பது தமிழ்ச்சான்றோர்கள் முடிவு. மேலைநாட்டினர் இதையும் ஒப்பவில்லை. இரண்டே கடற்கோள்கள்தாம் நடந்தன, முதற்கடற்கோள் 5000 ஆண்டுகளுக்கு முன்பு இல்லையென்பதும் இரண்டாவது கடற்கோள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இல்லையென்பதும் அவர்கள் கருத்து.

எது எப்படியிருப்பினும் தமிழகத்தில் அடிக்கடி கடற்கோள்கள் தோன்றின என்பதும், அவை நிலப்பரப்பையும், மக்களையும், சங்கங்களையும், சுவடிகளையும் அழித்தன என்பதும் உறுதியாகிறது. தமிழ்ச் சுவடிகள் அழிந்த காலமே 2000 ஆண்டுகளுக்கு முன்பா, 3000 ஆண்டுகளுக்கு முன்பா, 5000 ஆண்டுகளுக்கு முன்பா, 7000 ஆண்டுகளுக்கு முன்பா என்று அறியமுடியாதபோது அச்சுவடிகள் தோன்றிய காலத்தை எப்படி அறிந்து கூறுவது? அதற்கு முன்னே இலக்கணம் தோன்றிய காலம், இலக்கியம் தோன்றிய காலம், அதற்கு முன்னே உரைநடை தோன்றிய காலம், அதற்கு முன்னே எழுத்துத் தோன்றிய காலம், அதற்கு முன்னே மொழி தோன்றிய காலத்தை எப்படி அறிந்து கூறுவது? யார் அறிந்து கூறுவது?

தொன்னூல் விளக்கம் என்னும் ஓர் அருமையான நூல் இன்னும் தமிழகத்தில் இருந்து வருகிறது. இதை எழுதியவர் இன்றைக்கு 260 ஆண்டுகளுக்கு முன்னே இத்தாலி நாட்டிலிருந்து இங்கு வந்த வீரமா முனிவர் என்கிற பெஸ்கி பாதிரியார். இந்நூலைப் படிப்பதன்மூலம் மிகத் தொன்மையான பழந்தமிழ் நூல்களின் தன்மையையும், தொன்மையையும் அறியலாம்.

1700 ஆண்டுகளுக்கு முன்பு சோழ மன்னர்கள் பலர் மலேயாவை, கெடாவை, சயாமைக் கைப்பற்றி ஆண்ட செய்திகளும், அவர்களில் முதலாம் குலோத்துங்கன் பர்மாவை ஆண்ட செய்திகளும், சோழன் கரிகாலன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட செய்தியும், இலக்கியங்களாலும், வரலாறுகளாலும், கல்வெட்டுக்களாலும் அறியப் பெறும் உண்மைகளாகும். இதனால் தமிழ் மொழியானது அக்காலத்திலேயே உள்நாட்டை ஆட்சிபுரிந்தும், வெளிநாட்டை ஆட்சிபுரியும் ஒரு வல்லரசின் ஆட்சிமொழியாகவும் இருந்திருக்கிறது எனத் தெரிய வருகிறது. இதனாலும் தமிழின் தொன்மையை ஒருவாறு அறியலாம்.

2000 ஆண்டுகளுக்கு முன் கிரேக்கர்கள் இந்தியாவைப்பற்றி எழுதியிருக்கும் குறிப்புகளில் பல தமிழ்ப் பெயர்கள் காணப்பெறுகின்றன. 2300 ஆண்டுகளுக்கு முன்னைய சில பிராமியக் கல்வெட்டுக்கள் தமிழ் மொழியிலேயே எழுதப் பெற்றிருக்கின்றன. 2400 ஆண்டுகளுக்கு முன்னுள்ள பாணினி காலத்திலேயே தமிழில் நற்றிணை என்னும் சிறந்த தமிழ்நூல் ஒன்று தோன்றியிருக்கிறது. 2600 ஆண்டுகளுக்கு முன்னுள்ள வான்மீகி காலத்திற்கு முன்பே தமிழில் அகம், புறம் என்ற இலக்கணங்கள் தோன்றியிருந்திருக்கின்றன. 2800 ஆண்டுகளுக்கு முன்பு ரோமாபுரியை ஆண்ட ஏழாவது சாலமன் காலத்திலேயே தமிழ் நாட்டிலிருந்து தமிழகத்துக் கப்பல்களில் தமிழ்நாட்டுப் பண்டங்களைத் தமிழக வணிகர்கள் கிரேக்க நாட்டிற்குக் கொண்டு சென்று தமிழ் மொழியிலேயேவிலைபேசி விற்று வந்திருக்கின்றனர். அப்பொருள்கள் அனைத்திற்கும் தமிழ்ச் சொற்களே இன்றும் வழங்கப்பெற்று வருகின்றன.

3000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பிய நூலிலேயே `என்ப', `என்மனார் புலவர்', `யாப்பென மொழிப யாப்பறிபுலவர்' எனக் கூறப் பெற்றிருப்பதால் தமிழ் இலக்கணம் அதற்கு முன்பே தோன்றியது என்பதை நன்கு அறியலாம்.

3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதியாக நம்பப்பெறுகிற நூல்களில் அகத்தியம் எனப்படும் தமிழ் இலக்கண நூல் ஒன்று. அதை 5000, 7000 ஆண்டுகளுக்கு முந்தியது என்று கூறுவாரும் உண்டு. அகத்தியத்தைச் செய்தவர் அகத்தியர் எனவும், இவர்தான் தமிழ்மொழியை உண்டுபண்ணினவர் எனவும், இவர் அகஸ்தியர் என்ற வடமொழி அறிஞர் எனவும் சிலர் கூறுவர். அவர் அறியாதவர். அக்கருத்து நல்லறிஞர்களால் கொள்ளப் பெற்றதன்று. தமிழ் என்றுமுள்ளது – அகத்தியர் அம்மொழியைப் படித்து, அறிந்து, புகன்று பெருமை பெற்றவர் என்று கூறியாக வேண்டும். இவ்வுண்மையை "என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான்" என்ற கம்பரது வாக்கே மெய்ப்பிக்கும்.

இன்று உலகில் அமெரிக்காவோடும், இரசியாவோடும் சமமான வல்லரசாகத் திகழ்ந்து நிற்கின்ற சப்பானிய மக்கள் மட்டுமல்லர் – சப்பானியப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களும் "எங்களின் தாய்மொழி தமிழ்மொழியிலிருந்து தோன்றியது" எனக் கூறி மகிழ்கிறார்கள். இது நம்மையும் மகிழ்ச்சியடையச் செய்கிறது.

தமிழகத்தின் தமிழ்ச் சான்றோர்களால் எழுதப்பெற்றிருந்த தொன்மையான பழஞ்சுவடிகள் பல அழிந்து போயின. அவை இன்றில்லை.

### அழிந்துபோன இலக்கிய நூல்கள்

அகத்தியம், அடிநூல், அவிநயம், அவிநந்த மாலை, ஆசிரிய மாலை, ஆசிரிய முறை, ஆசிரிய முறி, ஆன்மவியல், ஆட்சிநூல், இந்திரம், இந்திர காவியம், இளந்திரையம், எதிர்நூல், ஐந்திரம், ஒப்புநூல், கச்சபுடம், கடகண்டு, கணக்கியல், கலியாண கதை, கலைக் கோட்டுத் தண்டு, கலிப்பாடல், கவிமயக்கிறை,களரியாவிரை, களவு நூல், கால கேசி, காக்கைப் பாடினியம், குருகு, குண்டலகேசி, கோள்நூல், (வானநூல்) சங்கயாப்பு, சயந்தம், சாதவாகனம், சிந்தம், சிற்பநூல், சிறுகுரீஇ உரை, செயன் முறை, தந்திரவுரை, தகடூர்யாத்திரை, தும்பிப்பாட்டு, தேசிமாலை, நாக குமாரம், நீலகேசி முதலியன.

### அழிந்துபோன இசைநூல்கள்

சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசைநுணுக்கம், இசை விளக்கம், பஞ்சமா பாரதீயம், பண் அமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக்கூறு, பாடற்பண்பு, தாள சமுத்திரம், கருவி இலக்கணம், ஆளத்தி அமைப்பு முதலியன.

### அழிந்துபோன நாடக நூல்கள்

கூத்துவரி, உளநூல், சயந்தம், செயிற்றியம், கூத்த நூல், பரதம், பரத சேனா பதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், முறுவல், விளக்கத்தார் கூத்து, அடிவைப்பு, அடிவரிசை, உறுப்பாட்சி, முத்திரை விளக்கம், மெய்ப்பாட்டியல், முகக்குறி முறை, கைக்குறிமுறை, இன்னுரைக் குறிமுறை, நிருத்த நூல், தாளக் கட்டு, நாட்டிய விளக்கம் முதலியன.

இந்நூல்கள் அனைத்தும் இன்றிருந்தால்...?

இன்னும் என்னென்ன நூல்கள் இருந்தனவோ? அவற்றின் ஆசிரியர்கள் எவர்எவரோ? இந்நூல்களில் என்னென்ன செல்வங்கள் இருந்தனவோ? இவை அழிந்தது எப்படியோ? இவை அழிந்த காலம் எப்போழுதோ? இதை எண்ணும்பொழுதே நம் கண்களில் குருதி வடிகின்றது. என் செய்வது?

இதுகாறும் கூறியவற்றால் தமிழ் மொழியின் தொன்மையை, அதன் சிறப்பை ஒருவாறு நன்கு அறியலாம்



# கனவு நிறைவேறாதா?

## கவிஞர் கா.வேழவேந்தன்

### முன்னாள் அமைச்சர்



சப்பானை மிஞ்சுகின்ற வகையில் இங்கே
தரமான தொழில்வளர்ந்து மலர்ந்தி டாதா?
`அப்போலோ' அனுப்புகின்ற அமெரிக் காவே
அணுகிடின்நாம் கடன்கொடுக்கும் நிலைவா ராதா?
`ஒப்பரிய பொதுவுடைமைத் தோட்டம்' என்றே
உவந்துநமை ருஷியாவும் போற்றி டாதா?
கப்பலுடன் அயல்நாட்டார் வந்தே நந்தம்
கடலோரம் பொருள்களுக்கே ஏங்கு வாரா?

`நூற்றுக்கு நூற்றுவரும் படித்தோம்' என்ற
நுட்பமிகு தேன்செய்தி நிலைத்தி டாதா?
`சோற்றுக்குப் பஞ்சம்' எனக் கேட்போ ருக்கே
துறைமூலம் அரிசியினை அனுப்பு வோமா?

நாற்றங்கால் போல்நெருக்கக் குழப்பம் இன்றி,
`நாம் இருவர்; நமக்கிருவர்' நிலைவா ராதா?
ஆற்றல் மிகு அறிவியலில் உயர்ந்தோர் என்றே
அகிலத்தார் நமைப்பாடம் கேட்டி டாரா?

வீதிக்கு வீதியிங்கே கட்சிவைத்து
விழலுக்கே நீர் இறைக்கும் நிலைமாறாதா?
சாதிவெறி, வேற்றுமைகள், மாயை யெல்லாம்
தவிடுபொடி யாய்மாறிப் பறந்தி டாதா?
நீதிவழிக் `குறள் சட்டம்' உலகை யாளும்
நிலையினைநாம் இருகண்ணால் காணு வோமா?
`மேதினியில் தமிழர்களே முதலில்' என்ற
மிக இனிய சொல்வந்து செவி விழாதா?



# நினைவும் நினைப்பும்

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

உலகம் இன்றுள்ள நிலை என்ன? நமது தமிழர்களின் நினைப்பு எப்படியிருக்கிறது? இன்றைய பூத, பௌதிக உலகம் மிகவும் நெருக்கமான நிலைக்கு வந்து விட்டது. ஆனால், நமது தமிழ்மக்கள் உலகந் தழீஇய ஒட்பம் பெறவும், உலகத்தோடு ஒட்டி ஒழுகி வாழவும் விரும்பவில்லை. இது ஏன்? தமிழர் மரபு என்ன? அறிவியல் உலகம், உலகத்தை இணைப்பதற்கு முன்பே உலகம் பற்றிச் சிந்தித்தவர்கள் தமிழர்கள். "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்ற கணியன் பூங்குன்றனாரின் சிந்தனை, உலகந்தழீஇய சிந்தனை! உலக நாடுகள் பேரவையில் முழங்கப் பெற்ற அடிகள்! திருக்குறள், உலகந்தழீஇய அறிவே அறிவு என்றும், உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலே ஒழுக்கம் என்றும் கூறியுள்ள அற்புதத்திற்கு ஈடு ஏது? இணை ஏது?



இன்று தமிழர்கள், மக்கள் உலகத்தை அந்நியமாகக் கொண்டு ஒதுங்குகின்றனர். தமிழர், பிறமொழி களைக் கற்கத் தயங்குகின்றனர். அதுபோலவே, தமிழை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவும் முன் வருவதில்லை. பிறநாட்டவர்கள் சிலர் தமிழை விரும்பிப் படித்ததுண்டு: ஆனால் பரவலாக இல்லை. அயல்மொழியினர் தமிழ் மொழி பயிலுதற்குரிய வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. ஏன்? தமிழ் நாட்டிலேயே தமிழர்கள் ஆங்கில ஆர்வலர்களாகவே வாழ்கின்றனர்! தமிழ் நாட்டில் தமிழ்வழிக் கல்வியியக்கம் நடக்கிறது! தமிழ்நாட்டில் தமிழ்வழியாகப் பயிலா இயக்கம் நடத்தினால் நமது நிலை என்ன? ஊகித்துக் கொள்ளுங்கள்! ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் வரிவடிவம் பெற்ற மொழிகள் கூட இன்று அறிவியல் துறையில் வளர்ந்துள்ளன. நமது தமிழோ, அப்படி வளரவில்லை. ஏன்? ஜப்பானிய மொழி முதலியன வரிவடிவம் பெற்று ஒரு ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகவில்லை! அந்த மொழிகள் கூட அறிவியலில் –மின்னியலியல் வளர்ந்த மொழிகளாகவுள்ளன. ஆனால், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தித் தோன்றி மூத்த மொழியான தமிழ் இந்த நூற்றாண்டுக்கு ஏற்ப வளரவில்லை. வளராதது மட்டுமின்றி வளர வேண்டும் என்ற நினைப்புக் கூட நம்மவர்களிடையே முழுமையாக இல்லை. இந்த நிலையில் தமிழர் எப்படி அறிஞர்களாக முடியும்? தமிழ் எப்படி அறிவியல் மொழியாக முடியும்?

தமிழர் சிந்தனைத் திறனில் வேறு எந்த மொழி வழிப்பட்ட இனத்திற்கும் பின்தங்கியவர்கள் அல்லர். புல், பூண்டுகளுக்கு ஓரறிவு உண்டு என்று தொல்காப்பியரே கூறினார். இது தொல்காப்பியரின் அறிவியற் சிந்தனை!

இந்தச் சிந்தனையைத் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்பெறவில்லை! சிந்தனையில் மலர்ந்த செய்திகள் நடைமுறைகள் மூலம் உறுதிப்படுத்தப் பெறவில்லை. இதனால் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக நமது தமிழ்மொழியில் மலர்ந்த சிந்தனைகள் பயனற்றுப் போயின.

மானிடன் சிந்தனையினால் மட்டும் விலங்கி னத்தில் பிரித்து எண்ணப்படுவதில்லை. மானுடத்தை விலங்கினின்றும் பிரித்துக் காட்டத் துணை செய்வது செயலேயாம்.

இன்றும் தமிழர்களில் சிந்தனையாளர்கள் பலர் வாழ்கின்றனர், கவிஞர்கள் பலர் வாழ்கின்றனர். சொற்பொழிவாளர்கள் எண்ணற்றோர் வாழ்கின் றனர். இவையெல்லாம் தமிழ் பெற்ற நற்பேறேயாம்! ஆயினும், தமிழினம் வளரும் உலகத்துடன் இணைந்து வளர, வாழ ஆய்வியல் திறமும் செயல்திறமும் உடையவர்கள் தேவை. காலங்களில் எல்லாம் கலந்து நின்று முன்னைப் பழமைக்குப் பழமையாய் விளங்கும் பைந்தமிழ், பின்னைப் புதுமைக்குப் பெயர்த்தும் அப்பெற்றியதாக விளங்கும் தகுதி பெற்றாலே தமிழின் எதிர்காலம் ஒளி பொருந்தியதாக இருக்கும்: தமிழ் வளரும். என்றுமுள இனிய தமிழாக இசையுடன் விளங்கும்.



# தமிழர்களின் ஆதி தாயகம்

டாக்டர். நா.மகாலிங்கம்

உலகத்தின் மூத்த குடி தமிழ்க்குடி. நம்முடைய இனமே உலகின் தொல் இனம். கிறிஸ்துவுக்கு முப்ப தினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே தமிழினம் வாழ்ந்துவருகிறது.

முப்பதினாயிரம் வருடங்களுக்கு முன்னால் இந் தப் பூமி இன்று நாம் காண்பதுபோல இருக்கவில்லை. அப்போது இமயமலை தோன்றவில்லை. வட அமெ ரிக்கா ஐரோப்பாவின் பெரும்பகுதி, கிழக்கே வியட் நாம், தாய்லாந்து, கொரியா, ஜப்பானியத் தீவுகள், இந்தோனேஷியாத் தீவுகள் இவைகள், எல்லாம் தோன்றவில்லை. இந்தப் பகுதிகளில் கடல் பரவியிருந் தது. இதற்கு வடக்கே வட துருவம் வரை இரண்டு பெரிய நிலப்பரப்புகளும் தெற்கே ஒரு பிரம்மாண்ட மான நிலப்பரப்பும் இருந்தன.



தென் நிலப்பரப்பு, தென் அமெரிக் காவில் தொடங்கி, ஆப்பிரிக்கா, இந் தியா, ஆஸ்திரேலியா வரை பரவியிருந்தது.

இதன் தென் எல்லை தென்துருவம்.

இவ்வளவு பெரிய பிரதேசத்தில் இன்று நாம் காண்கிற ஆர்டிக் கடல், இந்துமகா சமுத்திரம், அரபிக்கடல், வங் காளக் குடாக்கடல் ஆகியவை அன்று இருக்கவில்லை. அவை எல்லாம் நல்ல நிலங்களாகவும், ஒன்றோடொன்று தொடர்பு கொண்டும் மிகப் பெரிய நிலப்பரப்பாகவும் விரிந்திருக்கின்றன. இந்த நிலத்தையே இன்று குமரிக் கண்டம் அல்லது 'கோண்ட்வானா லாண்ட்' என்கி றார்கள்.

அதாவது நம் பூமி மூன்று பெரிய தீவுகளாகப் பிரிந்திருந்தது. பிறகு சிறுகச் சிறுக இன்றைய அமைப் புப் படி உருவாக ஆரம்பித்தது.

தென் ஆப்பிரிக்காவையும், அமெரிக்காவையும் சுற்றி இருந்த பகுதிகள் கடலில் மூழ்கின. (இவ்வாறு மூழ்கிய நிலப்பகுதி போக எஞ்சிய பகுதிகளே இப் போது இருக்கும் ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண் டங்கள்)இந்தக் கண்டங்கள் உருவானபோது இமயம் தோன்றி வட பக்கத்து இரு தீவுகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டன.

இதன் பகுதியிலிருந்த தீவு சுருங்கி, ஆஸ்திரேலியாவை மட்டும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு தென்னிந்தியாவுடன் இணைந்திருந்தது. இதுவே தமிழர்களா கிய நம்முடைய ஆதி தாயகம். அங்கி ருந்து பிரளயங்களால் துரத்தப்பட்டு உலகெங்கும் சென்று குடியேறினவர்களின் சந்ததியர்தாம் இன்றைய உலக மக்கள்.

நம்முடைய ஆதி தாயகத்தின் வட எல்லை இமயமாக இருந்தது. தெற்கே தென்துருவம் வரை பரவியிருந்தது. இத

னிடையே இருந்த பகுதி பல நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது.

இந்தப் பிரதேசம்தான் விந்தியத்துக்கு வடக்கே இருந்த தமிழ்நாடு. அது இந்து நாடு, கங்கைநாடு இமயநாடு என்று மூன்று பெரும் பிரிவுகளாக இருந் தது.

விந்தியத்திலிருந்து தொடங்கி இன்றைய கன்னி யாகுமரிக்கு தெற்கே பல மைல் தூரத்திற்கு அப்பால் இருந்த குமரியாற்றுக்கும் இடைப்பட்ட பகுதிதான் துண்டீர நாடு, எருமை நாடு, குறும்பர் நாடு, கொங்கர் நாடு, மழவர் நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, சேரளர் நாடு என்று பிரிக்கப்பட்டிருந்தது.

குமரியாற்றின் கரையில் இருந்து தொடங்கி தென் துருவத்துக்கு அருகில் இருந்த கன்னி ஆறு வரை யிலான பகுதி குமரி நாடு, பெருவளநாடு, ஒளிநாடு என்று மூன்று பெரும் நிலப் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது.

இதில் குமரிநாட்டில், இன்றைய ஈக்வேடர் என் கிற கோட்டில் தொடங்கி தெற்கே இருபத்தெட்டரை பாகை வரை ஒரு பெரிய மலையிருந்தது. அதற்கு மேருமலை என்று பெயர்.

அந்த மலையில் 49 சிகரங்கள் இருந்தன. அவற் றில் முக்கியமான சிகரங்கள் மகேந்திரம், மணிமலை, குமரி, கொல்லம் ஆகியவை. இந்த மேரு மலையிலிருந்த குமரி ஆறு, பேராறு, பஃறுளியாறு, கன்னியாறு என் கிற நதிகள் தோன்றி கிழக்கு முகமாக ஓடி குமரி நாடு, பெருவள நாடு, ஒளி நாடுகளை வளப்படுத்தின.

குமரி நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ்தெங்க நாடு, ஏழ்குறும்பனை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ் பின் பாலை நாடு, ஏழ் குன்றநாடு, ஏழ் குணக்கரை நாடு என்று ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் ஏழ் குணக்கரை நாடுதான் குமரி நாட்டின் தெற் கெல்லை. அதிலிருந்து தொடங்கி, இருபத்து மூன்றரை பாகை வரை அதாவது தென் அயனம் வரை பரவி யிருந்த நாடு, பெருவளநாடு.

குமரியாறு குமரி நாட்டிலும், பேராறும், பஃறுளி யாறும் பெருவள நாட்டிலும் ஓடிக்கொண்டிருந்தன.

பெருவள நாடு முடிந்து இருபத்து மூன்றரை பாகையிலிருந்து அண்டார்டிக் வரை ஒளி நாடு பர வியிருந்தது. கன்னியாறு இந்த நாட்டில் ஓடிய ஆறு.

ஒளிநாடு சூரிய சஞ்சார எல்லைக்கு அப்பால் இருந்ததால் அங்கே பகல் ஆறு மாதமாகவும், இரவு ஆறு மாதமாகவும் இருந்தது. அதாவது ஒரு பகல் ஒரு இரவு சேர்ந்தால் அவர்களுக்கு ஒரு ஆண்டு. ஒளி நாடு, மேகங்களின் பிரதி பலிப்பினாலேயே பகல் ஒளிபெற் றது.

இந்த ஒளி நாட்டின் கொடி இடபக் கொடி; இந்த நாட்டு மக்கள் சிறந்த வேளாளர்களாக விளங் கினார்கள்.

கி.மு. முப்பதினாயிரம் ஆண்டுக்கும் பதினாயி ரத்து ஐந்நூறாம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத் தில் நெடியோன் என்கிற ஒரு பாண்டிய அரசன் மேருமலையிலிருந்து பஃறுளி என்கிற ஆற்றை வெட் டிப், பெருவள நாட்டை வளப்படுத்தினான். அதன் கரையில் ஒரு அழகான நகரத்தை நிர்மாணித்தான். அதற்குத் தென் மதுரை என்று பெயரிட்டு, தன் தலை நகரமாகக் கொண்டு, ஒளிநாடு, பெருவள நாடு, குமரி நாடு, பாண்டிய நாடு ஆகியவைகளை ஆண்டுவந்தான். இவனுக்கு, இப்படி ஒரு ஆற்றை வெட்டி நிலம் செழிக் கச் செய்த காரணத்தால் நிலந்தரு திருவிற் பாண்டி யன் என்ற பெயர் ஏற்பட்டது. ஆனால் இவனுடைய உண்மையான பெயர் அழி வடிம்பலம்ப நின்ற பாண் டியன்.

இந்தத் தென் மதுரையில் இவன் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவி, நடத்திவந்தான். அதுவே பஃறுளியாற் றுத் தமிழ்ச் சங்கம். இந்த அரசு பரம்பரை 26 ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து ஆண்டதாக நச்சி னார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் கூறு கிறார்.

பாண்டியர்களுடைய ஆட்சி இந்தப் பெருவள நாட்டில் கி.மு. முப்பதாயிரம் ஆண்டிலிருந்து கி.மு. பதினாறாயிரத்து ஐந்நூறு ஆண்டுவரை நடைபெற் றது. இந்த நீண்ட அரச பரம்பரை பதின்மூன்று ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கி றது.

பிறகு இன்று ஆப்பிரிக்கா என்று சொல்லுகிற பகுதியிலிருந்து (நிரதி நாடு என்று இதற்குப் பெயர்) நிரதர்கள் என்ற வகுப்பார், படையெடுத்து வந்து இந் தத் தமிழ்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுக்காலம் இவர்கள் ஆட்சி நடந்தது. இதைத் திரிபுராதிகர் காலம் என்பார்கள்.

இந்த நிருதர்கள் (நீக்ரோ இனத்தவர்) குமரிக் கண்டத்தைக் கைப்பற்றி,சேர, சோழ, பாண்டிய நாடு களையும் கைப்பற்றி, தெற்கே ஒளி நாட்டையும் கைய கப்படுத்தி இப் பரந்த பிரதேசம் முழுவதையும் ஆட்சி செய்தார்கள். பொன், வெள்ளி, இரும்புகளால் ஆன மூன்று பெரிய கோட்டைகளைக் கட்டி அதிலிருந்து ஆண்டார்கள்.

மூன்று கோட்டைகளில் இவர்கள் இருந்ததால் முப்புரத்தவர் எனப்பட்டார்கள், முப்புரமே திரிபுர மாயிற்று.

அந்த நிருதர் பரம்பரையின் கடைசியாக வந்த மூன்று அரசர்கள் தாரகாக்கன், கமலாக்கன், வித்தி யுன்மான்.

இதனிடையே ஆழிவடிமபலம்ப நின்ற பாண்டி யன் காலத்திற்கு முன்பே ஒளி நாட்டிலிருந்து அரச வம்சத்தைச் சேர்ந்த பலர் வடக்கே இமயம் சென்று, கயிலையைத் தங்கள் ராஜதானியாக்கிக் கொண்டு கங் கைச் சமவெளி வரையில் ஆட்சி செய்துவந்தார்கள்.

மேலே சொன்ன மூன்று நிருதர் காலத்திலே, இந்தக் கயிலை ஆட்சி அரியணையில் வீற்றிருந்த மகா வீரர் பரமேசுவரன் என்பவர். இவர் தலையை விரித்து அழகுற விட்டுக் கொண்டிருந்ததால் இவருக்கு விரிச டைப் பெருமான் என்ற சிறப்புப் பெயரும் விளங்கி யது.

இவரிடம் தமிழகத்து மூவேந்தர்களும் தம் பரி வாரங்களுடன் போய் இந்த மூன்று நிருதர்களிடம் தாங்கள் படும்பாட்டைத் தெரிவித்து, உதவும்படி வேண்டினார்கள்.

நரசிம்ம பல்லவருக்குப் பரஞ்சோதி என்கிற சிறுத் தொண்டர் எப்படிச் சைவமும் வீரமும் கல்வியும் சேர வலக்கையாக விளங்கினாரோ அவ்வாறே இந்தப் பர மேசுவரருக்கு ஒரு மகாவீரர் –, கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர் வலக்கையாக விளங்கினார். அவர் தான் அகத்தியர்.

பரமேசுவரன் அகத்தியரை சேனைகளுடன் சென்று நிருதர்களின் அதாவது நீக்ரோக்களின் கொட் டத்தை அடக்கி அவர்களிடம் இருந்த தமிழ் நிலங் களை மீட்கும்படி பணித்தார். அகத்தியரும் அவ்வாறே கிளம்பினார்.

அகத்தியர் பரமேசுவரனின் படைகளுடன் வரு வதை அறிந்த மூன்று நிருதர்களும் தங்கள் படையி னரை எதிர்த்துப் போரிட அனுப்பினார்கள். விந்திய மலையில் இரு தரப்பினருக்குமிடையே கடும் சண்டை நடந்தது. அகத்தியரே கடைசியில் வென்றார். தோற் றோடிய நிருதர் படைகளைத் துரத்திக்கொண்டு சென்று கிரௌஞ்ச கிரியில் இன்னொரு பெரும் போர் நடத்தி அங்கிருந்தும் அவர்களைத் துரத்திவிட்டுப் பொதிய மலை வந்து சேர்ந்தார்.

அதற்கப்பால் செல்வது அவரால் இயலாததா யிற்று அவர் திருவேற்காடுவரை சென்று அங்கே பர மேசுவரனைச் சந்திக்க, பரமேசுவரனே படைத் தலைமை பூண்டு திருவித கோலத்தில் திரிபுராதிகளின் படைகளை அழித்து முப்புரம் வரை போய், அந்த மூன்று பெரும் கோட்டைகளையும் அழிக்கமுடியும் என்று செய்தி அனுப்பிவிட்டு அகத்தியர் காத்திருந் தார். சில நாட்களுக்கெல்லாம் பரமேசுவரனே தம் படையுடன் புறப்பட்டு வருவதாக அவருக்குச் செய்தி கிடைத்தது.

அவர் திருவேற்காடுவரை சென்று அங்கே பர மேசுவரனை சந்திக்க, பரமேசுரனே படைத் தலைமை பூண்டு திருவிதகோலத்தில் திரிபுராதிகளின் படை களை அழித்து முப்புரம் வரை போய், அந்த மூன்று பெரும் கோட்டைகளையும் தீயிலிட்டு எரித்து, அந்த மூன்று நிருதர்களையும் (நீக்ரோ மன்னர்கள்) வந்து சரணாகதி அடையச் செய்தார். பின் அவர்களை மன் னித்துவிட்டு இன்னும் தெற்கே இருந்த மகேந்திர மலையில் வீற்றிருந்து இந்தத் தென்னாட்டைச் சீரும் சிறப்புறவும் அமைதியும் தமிழும் கொஞ்சப் பல காலம் சிறப்புடன் ஆண்டார்.

பரமேசுவரன், மகேந்திர மலையில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவினார். அந்தச் சங்கத்திலே, பரமேசுவர னுக்கு, மேருமலை நாட்டை நிருதர் ஆட்சியிலிருந்து மீட்டதால், "மேரு வரப்பன்" என்ற பட்டத்தையும் திரிபுரங்களையும் எரித்ததால் "திரிபுரம் எரித்த விரி சடைப் பெருமான்" என்ற பட்டத்தையும் வழங்கி னார்கள்.

ஆனால் இந்தப் பரமேசுவரனுடைய இயற்பெ யர், இவை எவையுமல்ல. இறையனார் என்பதுதான் அவருடைய பெயர்.

தமிழ்க் குடியைக் காத்த இறையனாரையே இன்று நாம் இறைவன், சிவபெருமான், விரிசடைக் கடவுள், பரமேசுவரன் என்றெல்லாம் போற்றி வருகி றோம்.

இந்த இறையனார் மகா அறிஞர். தமிழ் மேதை. இவர் போதித்த நான்கு மறைகளையும், ஒன்பது ஆக மங்களையும் பதினெட்டு ஒழுக்க நூல்களையும் இவர் இந்த மகேந்திரமலைத் தமிழ் சங்கத்தில் மீண்டும் விரி வாக வெளியிட்டார்.

இந்தத் திரிபுரம் எரித்த பரமேசுவரன் மரபில் ஒளிச்செங்கோ என்று ஒரு அரசன் இருந்தான். ஒளி நாட்டு வேளிர் குல அரசர் குடியில் வந்தவன் இவன். அந்த வம்சத்து அரசனும் இவனே.

இவன் மகேந்திர மலையை விட்டுவிட்டு மணி மலையில் அரண்மனை கட்டிக் கொண்டு அதைத்தன் ராஜதானியாக்கிக் கொண்டு ஆண்டான். இங்கே அவன் ஒரு தமிழ்ச் சங்கம் நடத்தினான். அறுபது ஆண்டுகள் இந்தச் சங்கம் நடைபெற்றது.

இவனுடைய ஆட்சி கி.மு. 14490 இல் முடிவடைந்தது. இவனுக்குப்பின் தக்க வீரர் யாரும் இல்லாததால் இவன் நாடு மீண்டும் நிலைகுலைந்தது.

சீனத்துக்கு அப்பால் அப்போது இருந்த அவுணர்கள் இவன் மறைந்த சேதி கேட்டதும் விரைந்து வந்து இவன் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு ஆள ஆரம்பித்தார்கள்.

இவர்களுடைய ஆட்சி கி.மு. பதினாலாயிரத்து நானூற்று தொண்ணூறாம் ஆண்டு முதல் கி.மு. பதினாலாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டு வரை நானூற்று முப்பத்து இரண்டு ஆண்டுகள் நடைபெற்றது. இந்த ஆட்சியின் கடைசி அரசர்கள் சூரபதுமன், சிங்கமுகன், தாருகன். இவர்கள் மூவரும் சகோதரர்கள். இவர்களுடைய ஆட்சியின் கொடுமை தாங்காமல் தென்னாட்டு அரசர்கள் கயிலை சென்று, அப்போது ஆட்சி செலுத்தி வந்த குமரவேள் என்கிற அரசரிடம் முறையிட்டார்கள்.

இந்தக் குமரவேளும் ஒளி நாட்டிலிருந்து கயிலை சென்று அங்கே ஆண்ட விரிசடைப் பெருமானான பரமேசுவரனின் வம்சத்தில் வந்தவர்தாம். இவர் தம்மைக் காண வந்த கரூர்ச் சோழனான முசுகுந்தனையும் கடார நாட்டு அரசனான இந்திரனையும் அவர்களுடைய படைகளுடன் கடாரம் வழியாக அவுணநாட்டுக்கு அனுப்பி அங்கிருந்து சூரபதுமன் வகையறாக்களுக்கு எந்த உதவியும் வர முடியாதபடி செய்து விட்டு, தாமே தம் படையுடன் புறப்பட்டுச் சென்று சூரபதுமனுடன் போரிட்டு அவனையும் அவன் சகோதரர்களையும் கொன்றான்.

குமரவேளுக்கும் அவுணர்களுக்கும் இடையே ஐப்பசி மாதம் அமாவாசை அடுத்த மறுநாள் தொடங்கி ஆறுநாட்கள் போர் நடந்தது. அந்த நாட்களையும் அதன் வெற்றியையும் இன்று கந்தர் சஷ்டி விழாவாக முருகர் கோயில்களில் கொண்டாடுகிறோம்.

இந்தச் சமர் முடிந்தபின் குமரவேள் திருச்செந்தூரிலேயே தங்கிவிட்டார். கடார நாட்டு மன்னன் மகளான தெய்வயானையைத் திருப்பரங்குன்றத்தில் மிக மிகக் கோலாகலமாகத் திருமணம் செய்துகொண்டார். பிறகு அரசனின் வேண்டுகோளின்படி அவன் மகள் வள்ளியம்மையையும் மணந்து கொண்டார்.

குமரவேள் தமிழ்க் குலத்தின் இரட்சகராக விளங்கினார். தங்களைக் காத்த தெய்வமாக அவரைத் தமிழ் மக்கள் கருதினார்கள். அவருடைய வீரதீரச் செயல்களை ஆண்டுக் கணக்கில் பேசினார்கள்.

இதை எல்லாம்விட இந்த முருகவேள் இன்னொரு ஒப்பற்ற காரியமும் செய்தார். ஆழிவடிம்பலம்ப மன்னன் காலத்தில் தமிழ் மொழிக்குத் தனித் தனி எழுத்துக்கள் இருக்கவில்லை. ஒவ்வொரு உருவமே ஒரு எழுத்தாக இருந்தது. (இதுவே அப்போது உலகெங்கும் பரவி இன்னும் பல நாடுகளில் உருவ எழுத்துக்களாக இருக்கின்றன).

பிறகு கி.மு. 14058 கால கட்டத்தில் அது சொல் எழுத்தாக மாறியது. பொருட்களைக் குறிக்க ஏராளமான குறியீடுகள் இருந்தன. இந்த உருவ எழுத்துக்கள் நினைவு கொள்வதற்கு மிகக் கடினமாக இருந்தன. முருகவேள் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவி, உருவ எழுத்துக்களுக்குப் பதிலாக ஒலிகளுக்குத் தக்க வரிக் கீற்றுகளை உண்டாக்கித் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். புதிய தமிழ் வரிவடிவம் பிறந்தது. அதுவே இன்றைய தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்திற்கும் அடித்தளம்.

இப்படிப் புதிய தமிழ் எழுத்துக்களைத் தந்ததால் முருகவேள் தமிழ்க் கடவுளாகவே ஆகிவிட்டார். முருகவேள் 54 ஆண்டுக் காலம் திருச்செந்தூரில் ஆட்சி செய்தார். தமிழ்ச் சங்கத்தைத் தலைமை தாங்கித் தமிழ் வளர்த்துவிட்டு காய்சின வழுதி என்கிற அரசனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு கயிலைக்குத் திரும்பிச் சென்றார்.

இந்த முருகவேள் அவுணர்களுடன் சமர்புரிய அமைத்த ஆறு பாசறைகளே இன்றுள்ள ஆறுபடை வீடுகள்.

இந்த முருகவேள் அவுணர்களை அடக்க வந்த காலத்தில்தான் உலகமே கணடிராத ஒரு பெரிய பிரளயம் ஏற்பட்டு பஃறுளியாறும், பனிமலை அடுக்கும், பெருவளநாடும், ஒளிநாடும், மேரு மலைத்தொடரும், கடலில் அமிழ்ந்தன. அங்கே வாழ்ந்த மக்கள் நான்கு திசைகளிலும் தப்பி ஓடினார்கள். இதையே முதல் ஊழி என்கிறோம். இது நடந்தது கி.மு. 14058.

அந்த ஊழியில் எஞ்சியிருந்தவை இன்றைய அந்தமான் நிகோபார் தீவுகள்.

ஆனால் கடலின் பசி குமரியாற்றோடு நின்று விட்டது. குமரியாறும் அதன் கரை நகரங்களும் நல்ல வேளையாக அழியவில்லை. அந்த நகரங்களின் குமரியாற்றங்கரை தென் மதுரை என்பதும் ஒன்று. இப்போது உள்ள கன்னியாகுமரி அம்மன் கோயிலுக்குச் சற்று தூரத்தில்தான் குமரியாறு இருந்தது.

இந்தத் தென் மதுரையிலிருந்துகொண்டு காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரையிலான 80 பாண்டியர்கள் ஆண்டார்கள். இங்கும் தமிழ் ஆயும் பணி தொடர்ந்தது. 4440 ஆண்டுக் காலம் இந்தத் தமிழ்ச்

சங்கத்தில் 549 பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள். இந்தக் காலத்திலும் ஒரு இறையனார் இருந்தார்.

இந்தக் காய்சின வழுதி ஆழி வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழியில் வந்தவன். இவனுக்கும் நிலந் தரு திருவிற்பாண்டியன் என்ற பட்டம் இருந்தது.

"கடல் தம் பிரதேசத்தில் பெரும் பகுதியைக் கொண்டுவிட்டதே " என்று காய்சின வழுதி பெரிதும் வருந்தினான். தன்னைப் பதவியில் அமர்த்திவிட்டு முருகவேள் கயிலைக்குக் கிளம்புபோது,

"கவலைப்படாதே –நான் வேறு பிரதேசத்தைத் தருகிறேன்" என்று சொல்லி முருகவேள், கங்கை நதி பாயும் பிரதேசத்தையும், இன்றைய நேபாளம் பூட் டான் பகுதிகளையும் காய்சின வழுதிக்குக் கொடுத்து, மதுரையிலிருந்து அவன் இவற்றையும் ஆளலாம் என்று சொன்னார்.

இந்தச் செய்தி சிலப்பதிகாரத்தில்,

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசையை ஆண்ட தென்னவன் வாழி"
என்று கூறப்பட்டுள்ளதை அறியலாம்.



# முல்லைத்திணை

## முனைவர் சி.பாலசுப்பிரமணியன்

துணைவேந்தர்

### தோற்றுவாய்

தொன்மைச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் உடையவர்கள் தமிழர்களாவர். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுக்கால வரலாற்றைத் தமக்குரியதாகக் கொண்டவர்கள் அவர்கள். அக்காலத்திலேயே அவர்கள் தங்கள் வாழ்க்கையை அகம் புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்து வாழ்ந்தனர்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

என்பதனால் அகத்தை எழுதிணைகளாகவும், அதற்கேற்பப் புறத்தை எழுதிணைகளாகவும் கொண்டனர் என்பது புலனாகின்றது. அகத்திணை ஏழனுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணை ஒழுக்கமே அவர்தம் பண்பாட்டுச் சிறப்பிற்கு எடுத்துக் காட்டாக அமைகிறது. இவ்வைந்திணை ஒழுக்கங்களுள் ஒன்றான முல்லைத் திணை பற்றிக் காண்போம்.



### முல்லைத்திணை

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல், குறிஞ்சி நிலத்தில் மனிதன் இயற்கையை எதிர்த்து வாழ வேண்டியிருந்தது. மருத நிலத்தில் மனிதன் உழைத்துப் பாடுபட்டு வாழ வேண்டிய சூழ்நிலை இருந்தது. நெய்தல் நிலத்தில் பிற நிலங்களை எதிர்பார்த்து வாழ வேண்டியிருந்தது. முல்லை நிலத்தில் மனிதன் இயற்கையை எதிர்பார்த்து நம்பி வாழ வேண்டியிருந்தது.

மனிதன் காட்டுமிராண்டியாய் இருந்த நிலை மாறி அவன் நாகரிகம் பெற்றுக் கூட்டமாகக் கூடி வாழந்தது முல்லை நிலத்தில்தான். எனவேதான் முல்லை நிலத்து ஆயர்கள் ஆநிரைகளை மேய்க்கும் கோல் அரசனுடைய ஆட்சிக்குரிய கோலாகியது. எனவே மக்கள் இனமாய்க்கூடி நாகரிகத்தை வளர்த்த இடம் முல்லை நிலம் என்பது தெளிவாகிறது.

### முதற்பொருள்

தொல்காப்பியனார் ஒவ்வொரு திணைக்கும் உரிய பொருள்களை முதல், கரு, உரி என மூன்றாக்கிக் கூறுகின்றார்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

என்றதனால் முல்லைக்குரிய நிலம் காடுறை உலகம் என்பது பெறப்படுகின்றது.

வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவைஅவை சேர்தரு ம்இடனே
என ஈரை வகைத்து அனையியல் நிலமே

என்ற நம்பியகப் பொருள் நூற்பாவும் புறவும் அவைச் சார்ந்த இடமும் முல்லை எனக் குறிக்கிறது.

முல்லைக்குரிய பெரும்பொழுதாகக் கருதப் படுவது கார்காலம். சிறுபொழுது மாலை.

காரும் மாலையும் முல்லை

என்பது தொல்காப்பியம்.

மல்குகார் மாலை முல்லைக்குரிய

என்பது நம்பியகப் பொருள்.

**கருப்பொருள்**

தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் முதலியனவும் பிறவும் ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருள்களாகக் கருதப்படும்.

**உரிப்பொருள்**

முல்லைத்திணைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலை திணைக்குரிப் பொருளே

என்ற தொல்காப்பிய நூற்பாவினாலும்,

புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்
இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனவாங்கு
எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே

என்ற நம்பியகப் பொருள் நூற்பாவினாலும், முல்லைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பதைத் தெளியலாம்.

பொருள் காரணமாகவும் வேந்துவினை காரணமாகவும் தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்கிறான். செல்பவன் திருவில் விலங்கன்றித் தீம்பெயல் தாழும் கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கிறான். சென்ற தலைமகனின் வருகையை எதிர்பார்த்து அவன் வரவில் அவன் சொல்லில் நம்பிக்கை வைத்து அவன் பிரிவை ஆற்றியிருத்தலே இருத்தல் எனப்பட்டது. இதுவே முல்லைத்திணையின் உரிப்பொருளாகிறது.

முல்லை என்பதற்குக் கற்பு எனவும் பொருள் கூறுவர். `முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' என்றெல்லாம் மகளிர் போற்றப்பட்டனர். கற்பு என்பதற்குக் கல் போன்ற திண்மை எனவும், இல்வாழ்க்கைக்கு உரியன கற்று கற்ற நெறியில் நிற்றல், சொல் திறம்பாமை என்றெல்லாம் பொருள் கூறப்படுகின்றது. இங்குச் சொல் திறம்பாமையே முல்லை என்பதற்குப் பொருத்தமான பொருளாக அமைகின்றது.

வினையே தன் உயிராகக் கொண்ட தலைமகன், தன்வினை முடித்துக் கார்காலத்தில் திரும்பி விடுவதாகக் கூறிச் செல்கிறான். அதுவரை தன் பிரிவினை ஆற்றியிருக்குமாறு தலைமகளிடம் கூறிச் செல்கின்றான். தலைமகளும் தலைமகன் சொற்படி கார்காலம் வரும் வரையில் அவன் பிரிவை ஆற்றியிருப்பதாகக் கூறுகிறாள். இருவரும் சொன்ன சொல் தவறாமல் ஒழுகுகின்றனர். இவ்வாறு சொன்ன சொல் தவறாமல் – சொல் திறம்பாமல் நடத்தலே கற்பு என்னும் ஒழுக்கம். இதனாலேயே முல்லை என்பது கற்பு என்னும் பொருள் உடையதாயிற்று.

**சங்க இலக்கியத்தில் முல்லைத் திணைப்பாடல்கள்**

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் முல்லைத்திணைப் பாடல்கள் காணப்படுகின்றன. எட்டுத்தொகையில் ஐங்குறு நூற்றிலும் கலித்தொகையிலும் ஐந்தில் ஒரு பகுதியாக முல்லைத்திணைப் பாடல்கள் காணப்படுகின்றன. அக நானூற்றில் நாற்பது முல்லைத்திணைப் பாடல்கள் உள்ளன. குறுந்தொகை, நற்றிணைகளிலும் சில பாடல்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்களில் முல்லை நில வருணனை இடம் பெறுகிறது. பத்துப்பாட்டுள் முல்லைப்பாட்டு முழுவதும் முல்லைத்திணை பற்றி எழுந்த நூலாகும். சங்க இலக்கியத்தை அடுத்துத் தோன்றிய கார் நாற்பது பாடல்களும் முல்லைத்திணையின் சிறப்பை எடுத்துரைப்பன. பதினெண்கீழ்க்கணக்கில் அமைந்த வேறு சில பாடல்களும் முல்லைத்திணையில் அமைந்தவையே. பின்னர்த் தோன்றிய காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்கள் சிலவற்றிலும் முல்லைத்திணை பற்றிய குறிப்புகளைக் காணலாம். பொதுவாக முல்லைத் திணைப் பாடல்களை நோக்கும்போது

உள்ளதை உணர்ந்தவாறு பாடும் நிலையே காணப்படுகிறது.

## ஆங்கிலத்தில் முல்லை

ஆங்கில இலக்கியத்திலும் முல்லைப்பாடல்கள் உண்டு. அவற்றைப் பாடிய புலவர்களும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து கண்டவற்றையே பாடியுள்ளனர். அப்பாடல்களைக் குறித்து வாஷிங்டன் இர்வின் என்பவர் புகழும்போது "மற்ற நாடுகளில் முல்லைப் பாடல்களைப் பாடியவர்கள் இயற்கையை என்றோ ஒருமுறை சென்று கண்டு பொதுவான எழில் மட்டும் அறிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் ஆங்கிலப்புலவர்களோ இயற்கையோடு கலந்து வாழ்ந்து திளைத்தவர்கள். கண்ணுக்கெட்டாத இயற்கையின் நுட்பங்களையும் நெருங்கிக் கண்டு பழகியவர்கள். இயற்கையின் நுண்ணிய திருவிளையாடல்களையும் துருவிக் கண்டவர்கள்" என்கிறார். எனக் குறிக்கின்றார் டாக்டர் மு.வ.

தமிழில் அமைந்த முல்லைத் திணைப் பாடல்களைப் போல, ஆங்கிலத்தில் தலைவன் தலைவியரின் கற்பொழுக்கம் போற்றப்படவில்லை. நகர வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடி நாட்டுப்புறத்தின் நலங்களைத் துய்த்தல், ஆடம்பரத் தொல்லை களிலிருந்து விலகி எளிமையின் இனிமையில் மகிழ்தல், கவலையும் பரபரப்பும் மிக்க வாழ்க்கையைத் துறந்து கவலையற்ற அமைதியான வாழ்வை நாடுதல் இவைகளை அடிப்படையாகக் கொண்டே முல்லை நிலப் பெண்களின் காதல் முதலியன புனைந்து உரைக்கப்படுகின்றன. முல்லை நிலத்து ஆயர்வாழ்வு ஆங்கிலப் பாடல்களில் வருகின்றன. எனினும் அவர்கள் இத்தாலி நாட்டு ஆயர்களாகவே உள்ளனர் என்றும் அதனாலேயே குளிர் மிகுந்தது இங்கிலாந்து என்பதையும் மறந்து ஆயர்கள் வாழ்வு புனையப்பட்டுள்ளன என ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். இன்னும் சில பாடல்களில் ஆடு மாடு முதலிய சொற்கள் எல்லாம் நேர்ப்பொருளை உணர்த்தாமல் உருவகப் பொருளையே உணர்த்துகின்றன. ஆதலின் அவை முல்லைத் திணைப் பாடல்கள் அல்ல என்பது சிலர் கருத்து.

## தமிழில் முல்லைத் திணைப் பாடல்கள்

ஆங்கிலத்தில் உள்ள முல்லைப் பாடல்களைப் போன்ற முல்லைப் பாடல்களைத் தமிழில் காண முடிவதில்லை. தமிழ் இலக்கியத்தில் அமைந்த முல்லைப் பாடல்கள் ஆங்கிலத்தில் உள்ள முல்லைப் பாடல்களைப் போன்று கடன் வாங்கல்கள் அல்ல. முல்லை நிலத்து வளத்திலும் வனப்பிலும் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த புலவர் செம்மல்களின் உள்ளத்து வெளிப்பாடுகள் அவை. முல்லை நிலத்து வாழ் மக்களின் வாழ்க்கைச் செய்திகள், இயற்கைப் படப்பிடிப்பு, தலைமகன் தலைமகளிரின் அன்பின் பிணைப்பு முதலியவற்றை முல்லைத் திணைப் பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

## முதற்பொருள் வருணனை

முல்லைத் திணைக்குரிய முதற்பொருள்கள் முல்லை நிலமும் கார் காலமும் மாலைப்பொழுதும் ஆகும். இவற்றைப் பின்புலமாகக் கொண்டு எழுந்த முல்லைத் திணைப் பாடல்கள் பல.

முல்லை நிலமாகிய காட்டினைப் பற்றிக் கூறவருகின்ற புலவர் அம்முல்லை நிலப் பூக்களின் வண்ணத்தையும் வடிவத்தையும் கண்டு கற்பனை மெருகேற்றிப் பாடுகின்றார். செறிந்த இலைகளையுடைய காயா மரத்தில் அஞ்சனம் போன்ற நீல நிற மலர்களும் இளந்தளிர்கள் கொத்துக் கொத்துக்களாகத் தோன்றும்; கொன்றை மரத்தில் நல்ல பொன் காசு போன்ற மலர்களும், வெண்காந்தளின் குவிந்த முகைகள் அழகிய கைபோல் மலர்ந்த மலர்களும், இதழ் நிறைந்த தோன்றியில் குருதி போன்ற செந்நிற மலர்களும் நிறைந்த காடு பொலிவுற்றதாக முல்லைப்பாட்டு எடுத்துரைக் கின்றது.

> செறியிலைக் காயா அஞ்சனம் மலர
> முறியிணர்க் கொன்றை நன்பொன்
> காலக்
> கோடல் குவிமுகை யங்கை யவிழத்
> தோடார் தோன்றித் குருதி பூப்பக்
> கானம் நந்திய செந்நிலப் பெருவழி
>
> – முல்லைப்பாட்டு

விதை விதைக்கும் ஆயர் பலபடியாக உழுதுள்ளனர். உழுத பழங்கொல்லைப் புழுதியில் உள்ள ஈரிய இலைகள் நிரம்பிய வரகின் சுவைத்த கதிர்களைக் கலைமான்கள் உண்கின்றன. உண்டபின் அவை மரல் வித்துக்கள் உதிர்ந்து கிடக்கும் அழகிய காட்டின்கண் விளையாடி மகிழ்கின்றன. இத்தகைய இனிய காட்சியினையுடையது முல்லை நிலம் என்பதை,

> விதையர் கொன்ற முதையற் பூழி
> இடுமுறை நிரப்பிய ஈரிசி வரகின்
> கவைக்கதிர் கறித்த காமர்மடப்பிணை
> அரலை யங்காட்ட இரலையொடு வதியும்
> புறவு –நற்றிணை: 121

என்ற அடிகள் சித்தரிக்கின்றன.

முல்லை நிலம் பல நறிய மலர்கள் நிறைந்த அழகிய காட்சியினை உடையது என்பதை

பழமழைக் கலித்த புதுப் புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகு சிரித் தன்ன பசுவ மென்பிணிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவு

என்ற குறுந்தொகைப் பாடல் (222)குறித்து நிற்கின்றது.

கண்ணியல் அஞ்சனம் தோய்ந்த போற்
காயாவும்
நுண்ணரும் பூழ்த்த புறவு —கார்.8
பவழஞ்சிதறியவை போலக் கோபந்
தவருந் தகைய புறவு—கார்.5
அணர்த்தெழு பாம்பின் தலைபோற்
புணர்கோடல்
பூங்குலையீன்ற புறவு—கார்.11
செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார்
மேனிபோற் புல்லென்ற காடு —கார்.18
... ... ...நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போல் பூத்தன காடு —கார்.22

என்ற கார்நாற்பது பாடல் பகுதிகளினாலும் முல்லை நிலத்தின் கவின்மிகு காட்சியைக் கண்டு களிக்கலாம்.

இவ்வாறாக முல்லைத்திணைப் பாடல்கள் பல முல்லை நிலத்தின் வளத்தினை எடுத்துரைப்பனவாகத் திகழ்கின்றன. இனி முல்லை நிலத்தின் பெரும் பொழுதாகக் கருதப்படும் கார்காலச் சிறப்பை முல்லைத் திணைப் பாடல்கள் போற்றுமாற்றைக் காண்போம்.

கார்காலத் தொடக்கம் இரவு முழுவதும் விடாத மழை. காலைப் பொழுதில் உழவர்கள் தத்தம் நிலத்தில் சென்று ஏர் பூட்டிச் செம்மண் பூமியில் உழுதி மேலும் கீழும் சென்றிடுமாறு உழுதொழில் செய்தனர். உழுத நிலத்தில் விதைத்த வரகுகளின் முளைகள் மேலே தெரிந்தன. உழவர்கள் தங்கள் தலைமேல் ஓலைக்குடையைப் பிடித்துத் தொழில் செய்த காட்சி அங்கிருந்த கலைமான்கள் பரந்து திரிவதுபோலக் காட்சி அளித்தது. பறை ஒலிக்க உழவர்கள் களையைக் களைய, களைந்தபின் வரகு செழித்து வளர்ந்துவிட்டது. இரண்டிரண்டாகப் பிளந்து காணப்பட்ட கதிர்களை மயில்கள் பறித்து உண்டன. அந்த நீல நிற மயில்கள் அழகிய தோகையைப் பரப்பிக் குருந்த மரத்தின் வளைந்த கிளைகளில் ஏறியிருந்து அகவிய ஒலி கிளி ஒப்பும் மகளிரின் ஒலிபோல் இருந்தது. அத்தகைய கார்காலம் இது.

கார்காலத்தின் தோற்றத்திற்கு முல்லை மலர்கள் மலர்ந்து நிற்றலே அறிகுறி என்பதை உணர்த்துவது போன்ற பல பாடல்கள் காணப்படுகின்றன.

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லை
தொழுமுகை இலங்கெயிறாக
நகுமே தோழி நறுந்தண் காரே-
குறுந்தொகை 126 எனக் காரைச்
சிறப்பித்துரைக்கின்றார் ஒக்கூர்
மாசாத்தியார்.

தண்குளிக் கேற்ற பைங்கொடி முல்லை
முகை தலை திறந்த நாற்றம் புதல்மிசைப்
பூவமல் தளவமொடு தேங்கமழ் கழல
வம்பு பெய்யுமார் மழையே வம்பு அன்று
கார் இது

என்ற பாடலும் கார்காலத்தில் முல்லை மலர்கள் மலர்தலைக் குறித்து நிற்கின்றன.

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாட்செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகம் கதிர்மணி
கழாலவும்நெடுங்காற் புன்னை நித்திலம்
வைப்பவும்... ... ... ...
பைந்தினை அவரை பவழங் சேர்ப்பவும்
கடுநனைக் காயா கனமயில் அவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங்
கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்

—சிறுபாணாற்றுப்படை146—156

கார் காலம் சிறந்து பொலிந்து விளங்கினமையைச் சிறுபாணாற்றுப்படை புலப்படுத்துகின்றது.

இனி முல்லைத் திணைக்குரிய சிறுபொழுதாகிய மாலைக்காலம் பெறும் இடத்தினைக் காண்போம்.

மேகம் கடலினது நீரைக்குடித்துப் பின்னர் மலைகளினிடத்தே தங்கியிருந்து உலகத்தை வளைத்தெழுந்த விரைந்த செலவினையுடைய முகில் பெரிய மழையைப் பெய்த சிறுபொழுதாய புல்லிய மாலைக்காலம் என மாலையின் சிறப்பினைப் பாடுகின்றது முல்லைப்பாட்டு.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு

கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

-முல்லைப்பாட்டு1-6

தலைமகன் பிரிவினால் வாடும் தலைமகளுக்கு மாலைப்பொழுது புன்கண் மாலையாகத் தோன்றுகின்றது.

ஆம்பற் பூவின் சாம்பர் அன்ன
சும்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்
தெருவில் நுண்டாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு
வதியும்
புன்கண்மாலை

என மாலைப்பொழுது துன்பம் மிக்கதாகத் துலங்குவதை எடுத்துக்காட்டுகிறாள்.

பையுள்மாலை புலம்புகல் மாலை
பெரும்புகல் மாலை சிறுபுகல் மாலை
பழங்கண் மாலை புன்கண்மாலை
மருவின் மாலை அருளின் மாலை
கையறு மாலை புலம்பொடு
வந்த புன்கண் மாலை...
கையற வந்த மையில் மாலை

என மாலைப்பொழுது துணையிலோர்க்குத் துன்பம் தரும் நிலையினைச் சங்கப்பாடல்கள் குறிக்கின்றன.

இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந் தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல
இடஞ்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்

என்ற முல்லைப்பாட்டுப் பகுதி தலைமகனைப் பிரிந்து வாடும் தலைமகளைக் கண்முன் நிறுத்துகின்றது.

நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நின்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்கி
நின்னே உள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே

என்ற தலைமகன், தலைமகளைக் காணத் துடிக்கும் அவன் உள்ளத்து ஆர்வத்தினைப் புலப்படுத்துவதாகத் திகழ்கிறது.

இன்னும் அன்றைய வரலாற்றுச் செய்திகளையும் பண்பாட்டுச் செய்திகளையும் அறிய உதவுவனவாக முல்லைத்திணைப் பாடல்கள் திகழ்கின்றன.

## முடிவுரை

பொதுவாகத் தமிழில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள் அனைத்தும் மாறிப் புக்கு இதயம் எய்திய காதலர் இருவரின் கருத்தொருமித்த வாழ்வின் பிரதிபலிப்புகளாகக் காணப்படுகின்றன. முல்லை நிலத்துக் கார்காலமும் மாலைக் காலமும் உணர்ந்து பாடப்படுவதால் அதின் உயர்வு நவற்சி சிறிதும் இல்லை. நிலமும் பொழுதும் மரமும் மலரும் புள்ளும் விலங்கும் பிறவும் பாடலின் பின்னணியாகத் துலங்கப் பாட்டின் உயிர்ப்பொருளாகக் காதலர் இருவரின் உள்ளத்து நிலை விளங்குகின்றது. இயற்கை உலகமும் மனித உலகமும் இயைந்த ஓர் இயைபை இப்பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.



# அறஞ்சாரா வறுமை

## பேராசிரியர் கா.பொ.இரத்தினம். ஈழம்

மக்களுக்கு வறுமை பல காரணங்களால் உண்டாகும். வறுமை மிகுந்த குடும்பத்தில் பிறப்பதனாலும், உழைப்பின்மையாலும். தொழிற்கேட்டினாலும், இயற்கையின் கொடுமைகளாலும் பிறவற்றாலும் வறுமை வரும்.

இருமனப் பெண்டிர், கள் சூது என்பனவும் ஒருவனுடைய செல்வத்தைச் சிதைப்பன என வள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

"இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப்பட்டார் தொடர்பு" - தமிழ்மறை 920
(திரு-திருமகள், செல்வம்)

என்பது அவர் வாக்கு.

இவற்றால் வரும் வறுமையை ஒருவன் தானே தேடிக் கொள்கின்றான். தன்னிடமுள்ள பொருளை அறஞ்சாராத வழியில் ஒழுகி அழிக்கின்றான்.



கணிகையரை-வரைவின் மகளிரை- இருமனப் பெண்டிர் என அவர் உரைக்கும் நுட்பம் உளங்கொளற்குரியது. கவறு என்பது சூதைக் குறிக்கின்றது. இருமனப் பெண்டிரிலும் கள்ளிலும் சூதிலும் ஈடுபட்டவர்க்கு மீட்சியில்லை. இவர்கள் பொருளை இழப்பதுடன் நோயையும் தேடிக்கொள்வர், பழிப்புக்கும் ஆளாவர்.

'இன்று நாடுகள் தோறும் வரைவின் மகளிர் உளர். கள் எனப் பொதுப்படக் கூறப்பட்டாலும் இதனுள் பிற குடிவகைகள் யாவும் அடங்கும். குடித்துக் கூத்தாடும் இடங்கள் உலகில் எங்கும் உள. குதிரைப் பந்தயம் உள்ளிட்ட சூதும் பலவகையாகும். சூதாடும் களங்கள் எல்லா நாடுகளிலுமுள.

இந்த மூன்றுவகைச் சூதுடனும் திருமகளால்- செல்வத்தால் - துறக்கப்பட்டவர்களே தொடர்பு கொள்வர் என வள்ளுவர் பெருமான் அறுதியிட்டு உரைப்பதை நோக்குக. பொதுமகளிர் வரைவின் மகளிரின் தொடர்பால் விளையும் கேடுகளையும், அவர்களின் இயல்புகளையும், அறிவுடையார் அவர்களைச் சேரார் என்பதையும் "வரைவின் மகளிர்" எனும் அதிகாரத்தில் வள்ளுவர் பெருமான் திறம்படத் தீட்டிக் காட்டுகிறார்.

பொதுமகளிர் அன்பினால் ஒருவரை விரும்பார்; பொருளினாலேயே விரும்புவர். பொருள் கொடுப்போர் யாவரையும் வரைவின்றிச் சேரும் அவர்களைத் தழுவுவது இருட்டறை ஒன்றில் முன்னர் அறியாத பிணத்தைத் தழுவுவது போன்றது. அவர்களுடைய தோள்கள் அறிவில்லாத கீழ்மக்கள் புதையும் நரகமாகும். அறிவுடையார் எவரும் அவர்களை நாடார்.

"வரைவிலா மாண் இழையார் மென்தோள்
புரைஇலாப்
பூரியர்கள ஆழும் அளறு" - தமிழ்மறை 919

(புரை-உயர்வு, அறிவு, பூரியர்கள்- கீழ்மக்கள்; அளறு-நரகம்.)

தமிழ் மறையில் வரைவின் மகளிர் எனும் அதிகாரத்தை அடுத்துக் கள்ளுண்ணாமை எனும் அதிகாரமும் சூது எனும் அதிகாரமும் உள.

**கள் உண்ணல்.**

கள்ளுண்பதால் ஒருவன் அடையும் தீமைகளையும், நாணம், மானம், முதலியவற்றையும், மக்களின் மதிப்பையும் இழப்பதையும், அவன் நகைப்புக்கு இடமாவதையும் படிப்போருள்ளத்தில் பதியத்தக்கதாக வள்ளுவர் பெருமான் விளக்குகிறார்.

"உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்" -தமிழ்மறை 921

(உட்கப் படாஅர்-அஞ்சப்படார், ஒளி- புகழ்)

"உள் ஒற்றி உள் ஊர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள் ஒற்றிக் கண்காய்பவர்" -தமிழ்மறை 927

(உள்ஒற்றி-உள்ளே நடப்பதை ஆராய்ந்து, உள்ஊர்- உள்ளூரார், நகப்படுவர்-சிரிக்கப்படுவர்(இகழப்படுவர்) கள்ஒற்றி-கள்ளை மறைந்துண்டு, கண்காய்பவர்-அறிவு மயங்குபவர்).

ஒருவன் பொருளைக் கொடுத்துக் கள்ளை உண்டு தனது உடலுக்கு உணர்ச்சி இன்மையைத் தேடிக் கொள்வது அறியாமையாகும்.

"கை அறியாமை உடைத்தே பொருள் கொடுத்து
மெய் அறியாமை கொளல்" -தமிழ்மறை 925

(கைஅறியாமை-செய்வது அறியாமை, மெய்யறியாமை- மெய்ம்மறப்பு(உணர்ச்சியின்மை)

ஒருவன் பொருளைக் கொடுத்துத் தீமையைக் கொள்ளுதல், தான் செய்வதை அறியாமை அன்றோ! கள்வெறியினால் ஒருவன் மெய் மறந்து பிதற்றி ஆடுவதை `மெய் அறியாமை' என அவர் நயம் மிளிரக் குறிப்பிடுகிறார்.

நித்திரை கொண்டாருக்கும் செத்தாருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இருபகுதியினரும் அறிவிழந்தவராவார். இதைப்போல நஞ்சு உண்பவருக்கும், கள்ளுண்பவருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. நஞ்சு உண்பவர் மயங்குவதைப்போலக் கள்ளுண்பவரும் மயங்குவர். இதனைப் பின்வரும் குறள் கூறுகிறது.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" - தமிழ்மறை 926

(துஞ்சினார்-உறங்கினார்.)

கள்ளுண்டு களிக்கப் பழகியவனைக் காரணங்கூறித் திருத்த முடியாது. திருத்த முயல்வது நீரில் மூழ்கியவனை எரியும் விளக்கைக் கையிற் கொண்டு நீருக்குள் புகுந்து தேடுவதைப் போன்றதாகும். விளக்கு நீருள் புகாது. இதைப் போலக் காரணம் அவன் மனத்திற்புகாது.

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானை தீத்துரீஇ அற்று" தமிழ்மறை 929

(கீழ்நீர்-நீர்க்கீழ், தீ-எரியும் விளக்கு, துரீஇயற்று-தேடுதலைப் போன்றது)

குடிப்பவனை மட்டுமன்றி அவனுடைய குடும்பத்தையும் சமுதாயத்தையும் குடி கெடுத்துவிடும். எனவே மக்கள் கேடின்றி, வளமாக, இன்புடன் வாழ, வழியுரைக்கும் வள்ளுவர் பெருமான் `கள்-காதல்' கொண்டவன் திருந்த வேண்டும் எனறு விழைகின்றார். அவருடைய விழைவு ஒரு வினாவாக எழுகின்றது. வழக்கமாகக் கள்ளுண்டு களிப்பவன் கள்ளுண்ணாது இருக்கின்றான். அப்போது நிறையக் குடித்தவன் வெறி தலைக்கு ஏறி ஆடிப்பாடி அலைகின்றான். தன்னை மறந்து மயங்கித் தான் செய்வதை அறியாது புலம்புகிறான். இவனுடைய அருவருப்பான நிலைமையைக் கள்ளுண்ணாமல் இருப்பவன் கண்ணாரக் காண்கின்றான். கள்ளுண்டு வெறி கொண்டவனுடைய உள்ளச் சோர்வு, பேச்சுச் சோர்வு, உடற் சோர்வு, கண்சோர்வு, உடைசோர்வு முதலியவற்றைப் பார்த்து `யானும் கள்ளுண்டால் இவ்வாறு தானே எல்லாச் சோர்வும் உடையவனாகக் கண்டார் இகழும் நிலையில் இருப்பேன், என்று எண்ணமாட்டானா? என வள்ளுவர் பெருமான் கேட்கின்றார். இவ்வாறு எண்ணினால் மட்டுமே அவன் திருந்த முடியும் என்பதையும் அவருடைய வினாப் புலப்படுத்துகிறது.

"கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக்
காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு" -
தமிழ்மறை 930

(போழ்தில் -நேரத்தில், உள்ளான்-நினைக்க மாட்டான்.)

இந்த உலகத்தில் ஒரு தாய் தன் பிள்ளைகளிடத்தில் கொள்ளும் அன்பே தலையான அன்பாகும். இந்த அன்பு ஒப்புயர்வற்ற அன்பாகும். எக்காரணத்தாலும் இந்த அன்பு குறையாது. பேருண்மைகளை மக்கள் உள்ளத்திலே பதியச் செய்தற்கு வள்ளுவர் ஈன்ற தாயின் உதவியை நாடுவார். அவர் தம்முடைய

நூலில் நான்கு குறள்களிலே பெற்றதாயை நிறுத்திக் காட்டுகிறார். தன்னைப் பெற்ற தாயின் முன்னே ஒரு வன் கள்ளுண்டு களித்தால் அவளாலும் பொறுத்துக் கொள்ள முடியாது. வெறுப்படைந்து அவள் துன்புறுவாள் என்று கூறிக் கள்ளுண்டு களித்தலின் கொடுமையை அவர் விளக்குகிறார்; பெற்ற தாயே பொறுக்க முடியாதெனின் சான்றோர் பொறுப்பரா? என்றும் வினாவுகிறார்.

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி"-தமிழ்மறை 923.
சூதாடல்.

உலகத்து நாடுகளில் இன்று சூதாடல் பல முனைகளில் பலவகையாக நடைபெறுகின்றது. எளிதில் பணத்தைப் பெறலாம்-பெருக்கலாம் என்று எண்ணிச் சூதாடுவோர் தம்முடைய கைப்பொருள்களையும் இழந்து தம்மையும் தம் குடும்பங்களையும் வறுமையிலும் துன்பத்திலும் தோயச் செய்கின்றனர். பொய், சூடி, கொலை, களவு முதலிய பல தீமைகளிலும் மக்களை ஈடுபட, சூது தூண்டுகிறது. இத்தகைய வாழ்வு கொல்லியின் ஆற்றலையும் அது விளைக்கும் தீமைகளையும் எடுத்துக் காட்டி மக்களைக் காப்பாற்ற முயல்கிறார் வள்ளுவர். சூதாடுபவர்கள் ஒருமுறை சிறு வெற்றி பெற்றால் மதிமயங்கி எப்பொழுதும் வெல்வோம் என்றெண்ணிச் சூதில் ஈடுபடுவர்.எனவே, வள்ளுவர் பெருமான் சிறந்ததோர் உதாரணத்தை மக்கள் நன்கு அறிந்த உதாரணத்தைக் காட்டி அறிவுரை பகர்கிறார். தூண்டில் போட்டு மீன் பிடிப்பதை யாவரும் அறிவர். இரையால் மறைக்கப்பட்ட தூண்டிலின் கொளுக்கியை இரை என்று எண்ணி மீன் விழுங்கிச் சாவைத் தழுவும். சூதில் ஈடுபடுவோர் முதலிற் பெறும் வெற்றி இந்தக் கொளுக்கியைப் போன்றதேயாகும். எனவே முதலில் ஒருசிறு வெற்றியைப் பெற்றாலும் சூதில் ஈடுபடக் கூடாது.

"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூ உம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி அற்று"-தமிழ்மறை 931.

இதனைப் பொருட்படுத்தாமல் சூதில் ஈடுபடுவோர் ஒன்று பெற்று நூறு இழப்பர். இவர்கள் நல்லவற்றைப் பெற்றுச் சிறந்து வாழுதற்கு ஒருவழியும் இல்லை.

"ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கு உண்டாம்
கொல்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு-தமிழ்மறை 932

(நன்று-நல்லது, ஆறு-வழி)

சூதினுடைய தனி இயல்பு-பெருங்கொடுமை யாதெனில் பொருளை இழக்க, இழக்க இழந்த பொருளை மீட்போம் என்றெண்ணித் தொடர்ந்து ஆடுதலை ஊக்குவதாகும்.பொருளை இழக்க இழக்க சூதில் காதல் மிகும். இதனை இழத் தொறும் காதலிக்கும் சூது என வள்ளுவர் கூறுகிறார். கள்ளைக் குடிக்கக்குடிக்கக் கட்காதல் மிகுவது போன்றதே இது.

சூதினால் ஒருவனிடமுள்ள பொருள் முழுவதும் அழிந்துவிடும் . அவன் உண்ண உணவின்றியும் உடையின்றியும் வாடுவான். அவனுடைய புகழும் பண்பும் அழிந்துவிடும். சூது ஒருவனைப் பொய்யைத் தழுவச் செய்து அருளைக் கெடுத்துத் துன்பத்துள் உழலச் செய்யும்.

" உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்"-தமிழ்மறை 937.
(ஊண் உணவுஒளி புகழ்ஆயம் சூதாடுகருவி)

இந்தக் குறள் சூதில் ஈடுபட்டவன் அடையும் இழப்புக்களை அடுக்கிக் கூறுகிறது. இந்தக் குறளைப் படித்தபின் யாரேனும் சூதினை விரும்புவாரா? வரைவின் மகளிரும் கள்ளும், சூதும் வறுமையை உண்டாக்குவன் என்று வள்ளுவர் கூறுவதை எவரும் மறத்தல் கூடாது. இந்த உண்மையை மக்கள் மனத்தில் பதியச் செய்வதற்கு வள்ளுவர் ஈன்ற தாயை நம் முன்னே நிறுத்துகிறார். மக்களுக்கு வறுமை இவற்றாலும் வேறு பல காரணங்களாலும் வரலாம். இவற்றால் உண்டாகும் வறுமையை அவர் "அறஞ்சாரா வறுமை" எனப் பொருத்தமுறக் கூறுகிறார். இத்தகைய வறுமை எய்தியவனைப் பெற்ற தாயும் — வேறு எக்காரணம் கொண்டும் மக்களிடத்துக் கொண்ட அன்பை மாற்றாத ஈன்ற தாயும் — பிறனைப் போல நோக்குவாள் என்று கூறி இவற்றின் கொடுமைகளை அவர் மக்கள் உள்ளத்திற் பதிய வைக்கும் பாங்கு போற்றுதற்கு உரியது.

அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்
பிறன்போல நோக்கப் படும்" — தமிழ் மறை 1047.



# முதிர்ந்தும் முதிராத தமிழ்க்கன்னி

கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம்



முதிர்ந்தும் முதிராத முத்தமிழ்க் கன்னி
முறுவல் புரிகின்றாள்—பொருள்
பொதிந்த இயல்இசை நாடக மென்னும்
பூ மழை பொழிகின்றாள்!

இருபது நூறு ஆண்டுகள் ஆண்டும்
இளமையில் திகழ்கின்றாள்—துயர்
பெருகிய பெண்குலம் உரிமைகளடையும்
பெருமையில் மகிழ்கின்றாள்!

உதய சூரியன் உலவும் நாளெலாம்
ஒளிரும் திடம் கொண்டாள் —நம்
எதிரிகள் கோட்டை சிதறுதல் கண்டு
இரக்கப் படுகின்றாள்!

விளைவினைப் பெருக்கும் உழவர்மக்களின்
வெற்றியைப் புகழ்கின்றாள்—இன்னும்
விலைகளை உயர்த்தும் பதுக்கல்காரரின்
வேட்டையை இகழ்கின்றாள்!

ஆயிரம் தொழில்கள் ஆலைவளர்ச்சியில்
ஆனந்தமடைகின்றாள்—தொற்று
நோயெனச் சுரண்டல் தொடர்வது கண்டும்
நொந்து நலிகின்றாள்!

கொள்கைக் காகவே நிலைத்த தொண்டரின்
குணத்தைப் போற்றுகின்றாள்—வஞ்சக்
கொள்ளை யடித்தே வளர்ந்த குண்டரின்
குலத்தைத் தூற்றுகின்றாள்!

தொல்லைகள் தரவே சாதி மதச் சண்டை
தூண்டும் பகைவரை நசுக்கிடுவாள்—நம்
எல்லைக்குள் வந்தும் போர்க்கொடி தூக்கும்
எதிரியைச் சுட்டுப் பொசுக்கிடுவாள்!



# உலகிலே நாம்

டாக்டர் இரா. சனார்த்தனம்

உலகில் தமிழர்கள் எங்கும் இருக்கிறார்கள். ஆட்சிக் கட்டிலில் தமிழர்கள் அமர்ந்திருக்கும் நாடுகளும், தமிழர் ஆதரவு பிறரை ஆட்சியில் இருக்க வைத்திருக்கும் நாடுகளும், உலகில் உண்டு. இருபது நாடுகளில் குறிப்பிடும் அளவு தமிழர்கள் இருக்கிறார்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்." என்ற கொள்கையினரான நாம் நம்மை எண்ணும் நேரம் இது.

நமது மொழி உயர்வானது. உலகின் உயர்ந்த மொழிகளில் ஒன்று! கால வெள்ளம் அதை அழிக்கப் போவதில்லை. கடல் கொண்டும், கறையான் அரித்தும், பிறரால் சிதைந்தும் தன் சீரிளமையைத் தமிழ் இழக்கவில்லை. தமிழைக் காக்க ஏழு மாநாடுகள் முடிந்து, எட்டாவது மாநாட்டை நோக்கி நாம் நடை போடும் நேரம்! உலகத் தமிழர் மாநாடு தமிழனை வளர்க்க, காக்க வழி காணுகிறது.



பிற இனங்கள் குற்றம் காணா வகையில், நம் இனம் நம்மை வளர்க்க, காக்க வழிகள் யாவை?

"பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை" எனில், பொருளீட்டுதலில் நாம் எவ்வகையில் முன்னேற வேண்டும்?

"திரைகடல் ஓடித் திரவியம் தேடு" என்று தேடினர். ஆனால் தேக்க வில்லை.

தொழில்கள் தொடங்கினர். அதில் நுனிக் கரும்பின் சுவையோடு மகிழ்ந்து நின்றனர். மளிகைக் கடை, துணிக்கடை இப்படிக் காலை முதல் இரவு வரை படியளந்த வியாபாரம், துணி அளந்த வாழ்க்கை-மொத்த விற்பனை, தயாரிப்பு ஆகிய இத்துறைகளில் சிந்தனை செலுத்தாததால், பெரும் இலாபம் அடையாளம் தெரியாத இடமாக மறைந்தது.

கல்வி நிலையிலும் தொழிற்கல்வி பயின்றாலும் தாமாகத் தொழிற்கூடம் தொடங்கும் துணிவின்மை-உதவியின்மை, ஊக்கமின்மை -வீழ்ச்சிக்கு அல்லது தொடர்ந்த வளர்ச்சி இன்மைக்கு காரணமாகியது. அதுவே "உலகத் தமிழர் வங்கி" என்ற சிந்தனைக்கு உலகத் தமிழர் மாமன்றம் வருவதற்குக் காரணம். அவ்வெண்ணம் கருக் கொள்ளக் காரணமாக இருந்த டாக்டர் வி. டேவிட் அவர்களின் தமிழ் நெஞ்சத்திற்குத் தமிழுலகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

நமது எழுச்சிக்கு எது அடிப்படை? நமது வரலாறுதான்! அவ்வரலாறு

ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்யப்படாமல் இருக்கிறது. எந்தெந்த நாடுகளில் எவ்வளவு தமிழர்கள் உள்ளனர், எவ்வகைத் தொழில்புரிகின்றனர், அவர்களுடைய எதிர்காலத்திற்கு, நாம் எவ்வகையில் துணை நிற்கலாம் என்ற சிந்தனை, தாய்த் தமிழகத்திற்கு வராத வரை பயன் விளையப் போவதில்லை.

இந்தோனேசிய மெடானுக்குப் போனபோது, தமிழ்நாட்டிலிருந்து தமிழ் பயில்வதற்காக அனுப்பி வைக்கப்பட்ட நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டு அழுக்கடைந்திருந்த நிலையைக் கண்டேன். அந்நாட்டிற்கு ஏற்ற வகையில், அந்நாட்டுத் தமிழ் இளைஞர்கள் பயிலத் தக்க வகையில் நூல்கள் உருவாக்கப்பட்டு அனுப்பப்படாமையால் ஏற்பட்ட விளைவு அது! தமிழ் ஆசிரியர்களை அயல்நாடுகளுக்குத் தமிழ் நாட்டிலிருந்து அனுப்பிவைத்தல், தமிழ் நூல்கள் அனுப்பிவைத்தல் ஆகியவற்றில், பிற நாட்டுத் தமிழர்களின் பசி அறிந்து, தேவையறிந்து, படைக்கும் பக்குவத்திலே நாம் செயல்படவேண்டும். அது மொழி காக்கும் பணிகளிலே ஒன்றாகும்.

இது போழ்து, நாம் மிகவும் எண்ண வேண்டியது, அயல் நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு எவ்வகையான கல்வி அளித்தால் அந்நாடுகளில் அத் தமிழர்கள் வேலைவாய்ப்பு, சொந்தமாகத் தொழில் தொடங்கும் வாய்ப்பு ஆகியவற்றைப் பெறுவார்கள் என்பதாகும். அந்த அடிப்படையில் தான் "தமிழர் பல்கலைக் கழகம்" முயற்சி உலகத் தமிழர் மாமன்றத்தால் மேற் கொள்ளப்படுகிறது.

உலகில் நாம் உயர்வதற்கு அரசுகள் மட்டும் அபயம் அளித்து விட முடியாது. நாமே முயலவேண்டும். அதற்கு உலகத் தமிழர் மாமன்றம் உந்தாற்றலுடன் செயல்பட முன்வருகிறது.

இன்றைய உலகில் தொழிலியல் சிந்தனை-அதுவும் அறிவியல் வழிச் செயல்பாடுகள் வளர்ந்திருக்கின்றன. கணிப்பொறி உலகின் கதவு திறந்திருக்கிறது. உலகில் பரவியிருக்கும் நமக்கு, பிற இனங்களுக்கு இல்லாத உலகியல் வாய்ப்பு! உலகளாவிய முயற்சி, ஏற்பாடுகளுக்கு வாயில்! நொடிப்பொழுதில் தொடர்பு கொள்ள அறிவியலின் வாசல் திறந்திருக்கும் இந்நேரம், கடல் கடந்த தமிழர்கள் நம் காதருகே உள்ளனர்! ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்கள், நமது கையை வீசினால் அது அவர்கள் தோளிலே படும் நெருக்கத்திலே உள்ளனர்! இப்போது தேவை–உலகத் தமிழர்களை அரசியலுக்கு அப்பால் நின்று ஒருங்கிணைக்கும் ஒரு முயற்சி! அவர்களை உலகிலே பிற இனங்களுக்கு இணையாக, உயர்த்தும் ஒரு வேலைத்திட்டம்! அதிலே ஈடுபடுகிறது உலகத் தமிழர் மாமன்றம். அதில் முதல் படியே, இந்த உலகத் தமிழர் மாநாடு!

வாழ்வோம்! வெல்வோம் உலகிலே நாம்!



# அறிவியல் நெறி வளர்ப்போம்

## டாக்டர் ஆ. ஞானம்

சிறப்பிற்குரிய மானிடப் பிறவிக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளுள் மிகவும் இன்றியமையாதனவாக உள்ள உணவு, உறைவிடம், உடுப்பு என்பனவற்றோடு கல்வியையும் சேர்த்துக்கொள்ளவேண்டிய கட்டுப்பாடு இவ் அறிவியல் ஊழியால் ஏற்பட்டுள்ளது. பொதுவாக அக் கல்வி கலையியல் சார்ந்த கல்வி, அறிவியல் சார்ந்த கல்வி என்னும் நிலைகளில் அமையும். அவற்றுள் கலையியல் சார்ந்த கல்வி - வாழ்க்கையை இனிமையாக்குவதற்கும் அறிவியல் சார்ந்த அறிவுத்துறைக் கல்வி வாழ்க்கையை எளிமையாக்குதற்கும் உதவும். இவை இரண்டையும் இணைப்பதால் வாழ்க்கை இனிமையாகவும் எளிமையாகவும் அமைதல் உறுதி. அறிவுத் துறைக் கருத்துக்களை இலக்கியம், நாடகம், இசை, திரைப்படம் முதலிய கருத்துப்பரப்புக் கருவிகள் மூலம் தரும்போது பாமரனாலும் எளிமையாக விளங்கிக்கொண்டு பயன்படமுடியும். அவ் வகையில் இலக்கிய, கலைப் படைப்பாளர்கள் மக்களுக்கு அறிவூட்டும் அறிவியல்துறைக் கருத்துக்களைப் பாடுபொருளாக்கி வழங்கவேண்டும். அண்மைக் காலமாகச் சென்னைத் தொலைக்காட்சியினர் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்வது பாராட்டுதற்குரியது.



மக்கள் அனைவரும் அறிவியலைத் தெரிந்து கொள்வதோடு அவர்களை அறிவியல் மனப்பான்மை உள்ளவர்களாகவும் உருவாக்குவதில் அறிவியல் அறிஞர்களுக்குப் பெரும்பங்கு உள்ளது. அவ்வாறே கலை, இலக்கியத் துறையினருக்கும் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. அறிவியல் மனப்பான்மையை அறிவியல் அறிவு மக்களிடம் ஏற்படுத்தும். அதாவது அறிவியலிலுள்ள அறிவைக் கொண்டு, காரணகாரிய முறைப்படி சிந்தித்து முடிவெடுக்க, சிக்கல்களுக்குத் தீர்வுகாண மக்களுக்குப் பயன்படும். திருவள்ளுவர் கூறியுள்ளவாறு நோய்நாடி நோய்முதல் நாடிப் பின்னர் அது தணிக்கும் முறையை நாடவேண்டும். இன்றைய நிலையில் உலகெங்கிலுமுள்ள சிக்கல்களை அறிவியல் மனப்பான்மையுடன் அணுகினால் விரைவான தெளிவான தீர்வுகள் கிடைக்கும். இதற்கு அனைவரும் முயலவேண்டும். மக்கள் தலைநிமிர்ந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ அறிவியல் மனப்பான்மையும் பயன்படும். இந் நிலையை மக்களிடம் உருவாக்க இலக்கியவாணர்களும் கலைஞர்களும் விருப்புடனும்

பொறுப்புடனும் செயல்படவேண்டும். சிறப்பாக, குழந்தைகள் மனத்தில் அறிவியல் மனப்பான்மை வளர வழிவகுக்க வேண்டும்.

எந்தவொரு துறையும் தனித்து வளர முடியாது. ஒவ்வொரு துறையும் கொண்டும் கொடுத்துமே வளரமுடியும். அவ்வகையில் இலக்கியம் பிற கலைகளுக்கும் அறிவியலுக்கும் கொடுக்கவேண்டிய கருத்துகளும் உள்ளன, அவற்றிலிருந்து கொள்ள வேண்டிய கருத்துக்களும் உள்ளன. அறிவியல் அறிஞர்கள் இலக்கியம் படைக்கும்போதும் இலக்கிய, கலை ஆராய்ச்சி செய்யும்போதும், இலக்கிய வாணர்களும் கலைஞர்களும் அறிவியல் அறிவும் அறிவியல் மனப்பான்மையும் பெறும்பொழுது விளையக்கூடிய நன்மைகள் மிகப்பெரியதாகவும், மிகப் பலவாகவும் வளர்ச்சிநோக்கிலும் அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான நிலை உருவாகவேண்டுமானால் அதற்குத் தேவையான கருவி நூல்கள் மிகவும் அடிப்படையானவையாகும்.

தமிழில் அறிவுத்துறை நூல்கள் பல்கிப்பெருக வேண்டும். `எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் இலக்கினை அடைய அனைவரும் அயராது பாடுபடவேண்டும். ஒவ்வொரு அறிவுத்துறை குறித்தும் அடிப்படையான, விரிவான நூல்கள் படைக்கப்படவேண்டும் அல்லது மொழிபெயர்க் கப்படவேண்டும். அதாவது ஒரு துறையைப் பற்றி அறிந்துகொள்ள விழைபவர்களுக்குப் பயன்படும் நோக்கிலும் அத்துறையில் சிறப்புப்புலமைபெற விரும்புவோர்க்கும் பயன்படும் நிலையிலும் தேவையான நூல்கள் விரைவில் செம்மையாக உருவாக்கப்படவேண்டும். `எல்லோர்க்கும் கல்வி என்னும் நோக்கத்தைத் தாய்மொழிக் கல்வி மூலம் எளிதில் அடையலாம். மனிதநலம் நாடுவோர் அனைவரும் இத்துறையில் ஈடுபாட்டுடன் உழைக்கவேண்டும். இவ்வாறான செயல்களில் முதல் உலகத் தமிழர் மாநாடு சிறப்பாகப் பணியாற்றி, தமிழ் மக்கள் வாழ்வும் உலக மக்கள் வாழ்வும் வளம் பெற வழி செய்யும் என்று நம்புகிறேன்.

இவ் அறிவியல் ஊழியின் சிறப்பான கண்டுபிடிப்புகளுள் குறிப்பிடத்தக்கது கணிப்பொறி ஆகும். இக் கணிப்பொறி தமிழில் சிறப்பாக வளர்க்கப்படவேண்டும். சித்திர எழுத்துக்கள் கொண்ட சப்பான் மொழியில் கணிப்பொறியைத் திறம்படப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறிருக்க நாம் இன்னும் தயக்கமாகச் சிந்தித்துக் கொண்டுள்ளோம். தமிழில் வடிவமைத்துள்ள கணிப்பொறியினைப் பரவலாக்கவேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் கணிப்பொறி சிறப்பாகப் பயன் படத்தக்கது ' என்பதை நாம் அறிவோம். ஒரு காலத்தில் சமய நெறி வளர்த்த தமிழ், இனி அறிவியல் நெறி வளர்ப்பதாக!

எதிர்கால வாழ்வு பற்றிச் சிந்திக்கும் இம் மாநாட்டு அமைப்பாளர்களின் அறிவியல் மனப் பான்மை பாராட்டுதற்குரியது. வாழ்த்துக்கள். அறிவியல் நெறி வளர்க்க இம்மாநாடு ஆவன செய்யும் என் நம்புகின்றேன்.




அத்தான்என் றெதிர்வந்தாள்; ஐயோ என்றாள்
அவன்என்னைக் கற்பழித்தான்; உடனி ருந்த
அத்தீய மாதரினால் மயக்கம் தந்தான்
உணர்விழந்தேன் அவ்விரவில்! விடிந்த பின்னும்
சொத்தான என்னைஅவன் தொட்டா னென்று
தோன்றியது மறைந்துவிட்டான்; தேடிச் சென்று
குத்தினேன்! சிறுக்கிகளை இவர்ம டித்தார்!
கூவினேன் கோட்டையிலே உம்மை வந்தே!


பார் இரண்டு சிட்டு — பெண்ணே
பழகும் ஒன்று பட்டு!
யார் தடுக்கக் கூடும்?
வாசன்


கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்!
கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ?
சசி.


சொல்வதென்றால் வெட்கமடி தோழி—சொல்லச்
சொல்லு கின்றாய் என்துணைவன்
சொன்னதையும் செய்ததையும்! சொல்வதென்றால் வெட்கமடி தோழ
முல்லை விலை என்ன என்றான்
இல்லை என்று நான் சிரித்தேன்
பல்லை இதோ என்று காட்டிப்
பத்து முத்தம் வைத்து நின்றான்- சொல்வதென்றால்—வெட்கமடிதோழி!
வைஜயந்தி

# அற்றம் காக்கும் கருவி

## டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியன்

ஓர் இனத்தின் வரையறுப்பில் மொழியின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மொழிவழித் தேசியத்தின் அடிப்படையில் தமிழினத்தின் வாழிடங்கள் விரிந்து பரவியுள்ளன. இவற்றுள், தொடர்ச்சியான நிலப்பரப்புகளும் அடங்கும்; உலகப் படத்தில் சிதறிக் கிடக்கும் சிறு துண்டுகளும் அடங்கும்.

தமிழர்களின் இடப் பெயர்விற்கான காரணங்களை ஆராயின் தனி ஆய்வாக விரியும். இவ்வாறு, அயலகம் சென்ற தமிழர்கள் பல்வேறு திறத்தினர், பல்வேறு நோக்கங்களுக்காகச் சென்றவராவர். புகுந்த இடத்தில் வாழ்நிலைச் சூழல்கள் அவர்களை மிகவாகப் பாதித்துள்ளன. பல்வேறு இனக்கூறுகளுக்கிடையேயும் தங்களை அடையாளம் காட்டிக் கொள்வதிலும், தங்களின் தனித்துவத்தைப் பேணிக் கொள்வதிலும் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றனர்.

வையகத் தமிழர்களை வசதிக்காக, இவ்வாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்:

1. இந்தியாவில் வாழும் தமிழர்கள்.

2. அக்கரைகளில் வாழும் தமிழர்கள்.



இவர்களில் ஒவ்வொரு வகையினரையும் இரு பிரிவாக்கிப் பார்க்கலாம். இந்தியத் தமிழர்களைத் `தாயகத் தமிழர்கள்' என்றும், `இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் தமிழர்கள்' என்றும் வகைப்படுத்திக் காண வாய்ப்புண்டு. தாயகத்தில் தமிழகமும், புதுவையும் அடங்கும். இவை எஞ்சிய இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் தமிழர்களை `இந்தியத் தமிழர்' எனலாம்.

அக்கரைத் தமிழர்களில், அரசியல் பொருளியலில் அந்நாட்டின் பிற இன மக்களுக்கு இணையான உரிமைகளும், வாய்ப்புகளும் பெற்றவர்களைத் தனியாகவும் (இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு) எஞ்சியோரைத் தனி நிலையில் வைத்தும் எண்ணுவதற்கு இடமுண்டு.

வையகத் தமிழர்களில், தமிழ் இலக்கிய இலக்கணப் பாரம்பரியத்தையும் தமிழின மரபுகளையும் கடைப்பிடித்து ஒழுகுபவர்களும் உண்டு. புறம் ஒதுக்குபவர்களும் உண்டு. வளர்ச்சி குறித்து வளைந்து கொடுப்பவரும் உண்டு; வற்புறுத்துவோரும் உண்டு. தாம் யார் என்று அடையாளம் தெரியாதவர்களும் உண்டு. அறிந்தாலும் ஊரோடு ஒட்டி ஒழுகலாகத் தம்மை

மறைத்துக் கொண்டோரும் உண்டு. அறிந்துகொள்ள நடைப்போக்கனைப் போல் வழி கேட்டோருமுண்டு. கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி வருவோருக்கு வழித்தடம் அமைப்போரும் உண்டு. பொருளாதார நன்மைகள், பண வருவாய், சமூக மதிப்பு முதலியவற்றைப் பெறுவதற்கான போராட்டத்தில் தம் இனத்தின் தனித்தன்மையையும், சுய கௌரவத்தையும், பல காலமாகப் போற்றப்பட்டு வந்த பாரம்பரியத்தையும் தியாகம் செய்தவர்களும் உண்டு. அவ்வாறு செய்யக் காத்துக் கொண்டிருப்பவர்களும் உண்டு. இவர்களின் ஊடாகத்தான் ஒட்டுமொத்தத் தமிழர்களின் வாழ்வையும், வளர்ச்சியையும் எண்ண வேண்டியுள்ளது.

தாயகச் சூழலில், தமிழர்கள் அரசியல், பொருளியல் மற்றும் தமிழினத்திற்கே உரிய பண்பாட்டியல் போன்றவற்றில் மேலாண்மை பெற்றவர்களாகக் கூறிக்கொள்ள முடியாதெனினும், காத்து வருகின்றனர் என்பதே உண்மை. தமிழே தன்னாட்சி செலுத்தும் நிலை தமிழகத்திலும் கூட முழுமையாக வெற்றி பெற முடியவில்லை என்பது கண்கூடு. என்றாலும், தாயகம் தமிழினத்திற்குப் பல வழிகளிலும் முன்னோடியாக விளங்கிப் பல ஆக்க முயற்சிகளைச் செய்து வருகிறது. இந்தியத் தமிழர்களின் நிலையும் அவர்களின் வாழ்நிலைச் சூழலோடு ஒன்றிணைந்துள்ளது.

தமிழர் குடியேறிய நாடுகளில் தமிழ் மொழிக்குள்ள வாய்ப்பு, அந்நாட்டு அரசியலில் தமிழர்களின் பங்கு, பொருளியல் வாழ்வில் தமிழர்களின் முன்னேற்றம், குடியேறிய நாட்டின் பல்வேறு வாய்ப்புகளைத் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ளும் திறம் ஆகியவற்றை அளவுகோலாகக் கொண்டு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு ஆகிய நாட்டுத் தமிழர்களின் வாழ்வையும், வளர்ச்சியையும் தனிநிலையில் காணுதல் வேண்டும்.

தமிழகத்தில் வாழும் தமிழர்களைப் பொறுத்தவரையில், மொழியுணர்வுக்கு மேலாக இனவுணர்வு மேலோங்கியுள்ளது. ஏனெனில், அவர்களின் வாழ்நிலைச் சூழலில் இனவுணர்வுதான் இனவொற்றுமைக்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. இருப்பினும், இன ஒற்றுமையைக் காட்டும் குறியீடாக அமைவது, இயங்குவது மொழி என்பது உலகறிந்த உண்மை. எனவே, தங்களின் மொழியைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சி தமிழகத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவது இயல்பானதே.

அயலகத் தமிழர்கள், பல வேளைகளில் தாயகத் தமிழர்களுக்கு முன்னோடியாக விளங்கிப் புதிய வழித் தடங்களை அமைத்துத் தந்துள்ளனர். இலக்கியப் படைப்பு மற்றும் இலக்கிய ஆராய்ச்சியில் இலங்கை ஒரு புதிய முனைப்பைப் பெற்றுள்ளது. தமிழிற்கான புதிய ஆய்வுக்கத்தோடு சமூகப் பண்பாட்டு மனநிறைவையும் இலங்கை தன்னொத்த தமிழர்களுக்கு வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

தமிழ் கற்பித்தலில் சிங்கப்பூர் புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு தமிழை அறிவியல் படுத்தியுள்ளது. தொழில் நுட்பத்திற்கு உகந்த தமிழ் பற்றித் தாயகத்தில் கருத்தரங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம காலத்தில் தமிழைத் தொழில் நுட்பத்தில் ஓடி, ஆடி விளையாட வைத்துள்ளனர் சிங்கப்பூர்த் தமிழர்கள்.

முதலாவது மற்றும் ஆறாவது உலகத் தமிழ் மாநாடுகளை மலேசியாவும், ஏழாவது உலகத் தமிழ் மாநாட்டை மொரீசியசும் நடத்தித் தங்களின் இன அடையாளத்திற்கு வலுச் சேர்த்துள்ளன.

அக்கரைத் தமிழர்களில் எஞ்சிய தமிழர்களின் நிலை வேறுவிதமாக உள்ளது. தென்னாப்பிரிக்கா, ரியூனியன், பிஜித் தீவு, சீசெல்ஸ் போன்ற நாடுகளிலெல்லாம் தமிழர்கள் வாழுகின்றனர். ஆனால் தமிழின் இருப்பை, தமிழினப் பாரம்பரியத்தின் இருப்பைத் தேட வேண்டிய நிலைதான் உள்ளது.

இவர்கள் தமிழே பேசத் தெரியாமல் பண்பாடு இழந்து, மரபு மறந்து தமிழ் உணர்வுடன் மட்டுமே வாழ்கின்றனர். தமிழ் மொழி வழக்கற்றுப் போய் அந்தந்த நாட்டு மொழிகளைப் பேசும் குடிமக்களாகவும், உடையாலும், உள்ளத்தாலும் தமிழ்ப் பண்பாட்டை இழந்து பிற பண்பாடுகளுடன் கலந்துவிட்டதையும் காணமுடிகிறது. என்றாலும் தமிழை வாழ வைக்கவேண்டும் என்ற ஆர்வமுடைய சங்கங்களும் தமிழின அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன.

தமிழினத்திற்கு உண்டாகியிருக்கும் பல நெருக்கடிகள் காலப்போக்கில் அவ்வினத்தையே அழித்துவிடக்கூடும். உலகில் வாழும் தமிழன் ஒருவனுக்குத் தமிழ் தெரியாவிட்டால் தமிழினத்தின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்துவிட்டது என்பது பொருள். இத்தகு நெருக்கடியிலிருந்து தமிழினம் மீட்கப்படவேண்டும். உலகெங்கும் வாழும் தமிழர்கள் உரிமையோடு வாழ, தாய்மொழி இழந்துவரும் தமிழினத்திற்குத் தாய்மொழியினை நல்க, சீரிய தமிழ்ப் பண்பாட்டை அவர்கள் அறிந்து ஒழுக, உரிய உயரிய கலைகளோடும், பண்பாட்டோடும் வாழ்ந்திட

# பிறமொழிப் பெயர்சூட்டல் தேவைதானா?

'கவிக்குயில்' பொன். அய்யனாரப்பன்

விடுதலிலா விருப்பமுடன் காட்டில் வாழும்
விலங்கினங்கள், விண்ணகத்தைச் சொந்த மாக்கிக்
குடியிருப்பாய்க் கொண்டுறையும் புள்ளி னங்கள்
குதூகலமாய் உலவிவரும் உயிரி னங்கள்
நெடும்புனலில் திரிகின்ற மீனி னங்கள்
நெஞ்சத்தைக் கொள்ளைகொள்ளும் மலர்வ கைகள்
உடனுறையும் கால்நடைகள் நிலைத்து நின்றே
உயிர்காக்கும் தாவரங்கள் இன்னோ ரன்ன

இயற்கைதரும் செல்வங்கள் பெயர னைத்தும்
இயல்பாகத் தமிழ்மொழியில் இருக்கக் கண்டேன்
அயர்ந்துறங்கும் நேரத்தில் நினைவி ழந்தும்
அயல்மொழியால் அவைகளைநாம் விளிப்ப தில்லை

வியப்பிற்கே எல்லையாகத் திகழும் குன்றா
வீரம்சேர் தமிழ்நாட்டுக் குழந்தை கட்கோ
அயல்மொழியின் பெயரிட்டே அழைக்கும் போதில்
அடடாவோ! என்னாவி பிரியக் கண்டேன்!

குயில்வந்தால் துரத்திவிட்டுச் சோலைக் குள்ளே
கோட்டானை அழைக்கலாமா? பருவ காலப்
புயலுக்கு வரவேற்பா? இன்பம் நல்கும்
பூங்காற்றை வீசாமல் தடுத்தல் நன்றோ?
பயிர்களையே அழித்துவிட்டுக் களையை மட்டும்
பாதுகாத்தல் முறைதானா? குவியல் போன்று
பெயர்ச்சொற்கள் செந்தமிழில் இருக்கும் போது
பிறமொழியில் பெயர்சூட்டல் தேவை தானா?



---

ஆக்க வழிகள் பல அவசரமாக எடுக்கப்பட வேண்டும். தமிழின் மீட்சியில் ஒவ்வொரு தமிழனுக்கும் பெரும் பங்கு உண்டு என்பதை நெஞ்சில் நிறுத்திச் செயலாற்றிட வேண்டும். தமிழனின் வாழ்வும், தமிழின் வாழ்வும் வேறாகி விட முடியாது.

அன்றே வள்ளுவர் கூறினார், 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று. அறிவைக் கருவியாகப் பார்த்த ஒரே உலகச் சிந்தனையாளர் திருவள்ளுவர்தான். உலக வரலாற்றில் அறிவைக் கருவியாக இதுவரை யாரும் கையாண்டிருக்கிறார்களா என்பதுதான் கேள்வி.

இக்கருவியை ஜப்பானியர்கள் கையாள்கிறார்கள். மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாமோ அறிவுக் கருவியைக் கீழே வைத்துவிட்டு, சாதி, மதக் கருவிகளைக் கையில் எடுத்துக்கொண்டு பின்னோக்கிச் செல்கிறோம். இனியாவது நாம் அறிவைக் கருவியாகப் பயன்படுத்தினால் உலகத்தின் உச்சியில் இருப்போம் என்பது திண்ணம்.

# ஒரு குடைக்கீழ் அணிவகுப்போம்

## பெருங்கவிக்கோ டாக்டர் வா.மு.சேதுராமன்



உலகத்தின் தமிழுறவு ஓங்க வேண்டும்!
உணர்வலைகள் ஒருமைப்பாட் டியக்கம் வேண்டும்!
கலகத்தைத் தமிழர்க்குள் தமிழர் தாமே
கண்மூடித் தனம் செய்தல் களைதல் வேண்டும்!
பலகற்ற மேதைகளாம் தமிழ்ச்சான் றோர்கள்
பதமான வழிகாட்ட முனைய வேண்டும்!
நிலமுற்ற தமிழரெல்லாம் ஒருகு டைக்கீழ்
நெருங்கிவளர் நாளொன்றே தமிழர் வாழ்வாம்.

கொத்தடிமை மாக்களைப்போல் வாழ்கின்
றோம்நாம்
கூலிகளாய் வேலிஇன்றித் தாழ்கின் றோம்நாம்!
செத்தாரைப் போல்வாழ்ந்தே செயல்வி டுத்தோம்!
சிறுமைக்கே உறைவிடமாய்த்
திகழ்கின்றோம்நாம்.
சித்தர்கள் நம்மில்பலர்
தோன்றினாலும்
செயலாக்கம் நமக்கின்னும் வரவே
இல்லை.
மொத்தமாக நமைநாமே திருத்தும்
நாளே
முன்னேற்றம் தமிழர்க்கே வரும்நாள்
ஆகும்!

சிற்றெறும்பும் ஒழுங்காகச் சேர்ந்து
வாழும்!
நினைப்புனத்துக் கிளிகள்கூடக் கூடி
மேயும்!
புற்றீச லுக்கும் தொடர் வரிசை உண்டே!
புள்ளினமும் ஒன்றைஒன்று அடுத்தேவாழும்!
பெற்றியிலாப் பல்லுயிரும் ஒருமை காக்கும்!
பிறப்புரிமை முதுகுடியின் அடித்தோன்றல் நாம்!
கற்றநெறிக் காவலராம் தமிழர் மட்டும்
கருத்தொருமை செயலொருமை காணார்! ஏன்?
ஏன்?

புவிஉள்ள இனமக்கள் தம்மின் மூத்த
புடம்போட்ட தமிழ்க்குடிக்கோர்
முதன்மைவேண்டும்!
குவிக்கின்ற பல்மொழிகள் பலநாட்டார்கள்
கோத்தலைமை கொள்கின்ற ஆக்கம் வேண்டும்!



செவி ஏற்கும் கொள்கைவழி
செப்பவேண்டும்,
திறம் வேண்டும் அறம்வேண்டும்
உயர்வுவேண்டும்!
தவிக்கின்ற மனத்தாலே இந்நி லைக்கே
தமிழ்க்குடிகள் உயரும்நாள் நன்னாள்
ஆகும்!

வையகத்துத் தமிழர்களின் நெஞ்ச
மெல்லாம்
வருங்காலம் ஓர்நெஞ்சம் ஆக
வேண்டும்.
மையத்தில் உலகிடையில் தமிழ
ரெல்லாம்

வாழ்வொருமை காண்பதற்குக் கூடவேண்டும்!
நையத்தான் வாழ்கின்ற வாழ்க்கை இன்றி
நலிவின்றி வளவாழ்வின் ஏற்றம் வேண்டும்!
கையகத்தில் பெருவெற்றி தமிழ ரெல்லாம்
காணுகின்ற திட்டங்கள் தீட்ட வேண்டும்!

தென்துருவம் வாழும்ஓர் தமிழ னுக்குத்
தீமையொன்று வரவிட, அத் துருவம் உள்ள
தன்னிகரில் தமிழன்தன் துயர்கண் டாற்போல்
தான்துடித்தே உதவிசெய்யும் தகைமைவேண்டும்!
சென்னைதலை நகர்கண்ட தமிழ்நாட்டார்கள்
தென்தமிழீ ழத்திடையில் விடுத லைக்காய்
நின்றாடும் நேரத்தில் வாய்மூடித்தான்
நெடுமரமாய் நிற்கும்நிலை தொலையவேண்டும்!

ஒருதமிழன் உலகத்தில் துயருற் றால்மற்
றொருதமிழன் ஓடோடி உதவ வேண்டும்!
வருமானக் காப்புக்கோர் வங்கி வேண்டும்!
வளர்ந்துள்ள 'இசுரேலர்' போன்றவெற்றி
தரும் வகையில் திட்டங்கள் தீட்டவேண்டும்
தமிழரெலாம் ஓரணியில் திரளவேண்டும்
கருமிகளாய்க் கைகட்டி வாழ்வோ ரெல்லாம்
கடைத்தமிழர் இவர்திருந்தி நிமிர்தல் வேண்டும்!

நெருப்பைப்போல் தமிழ்நெஞ்சம்
கொதிக்கவேண்டும்!
நெடுவான்போல் எண்ணங்கள் உயரவேண்டும்!
கருத்துக்கள் வெள்ளம்போல் புரளவேண்டும்!
கதிரவன்போல் அறிவொளிதான் வீசவேண்டும்!
எருதைப்போல் உழைத்திட்டால் மட்டும் போதா!
ஏறுபோல நிமிர்ந்துரிமை பெறவும் வேண்டும்!
வருத்தமெனும் இருள் கிழிக்கும் முயற்சி வேண்டும்!
வருங்காலம் தமிழ்த்தலைமை காணவேண்டும்!

பலநாட்டில் வாழ்கின்ற தமிழ ரெல்லாம்
பாதைவழி ஓரிடத்தில் சந்திக் கின்ற
நலமான செயல்பெருக்கம் காணவேண்டும்
நம்பிக்கை, நாணயத்தால் உழைப்பால், பண்பால்
நிலமெல்லாம் வெல்கின்ற எழுச்சிவேண்டும்
நேர்மைக்குக் குவலயத்தில் மதிப்புவேண்டும்!
தலை நிமிர்ந்து தன்மான வாழ்வு பெற்றுத்
தான்வாழும் நாளில்தான் தமிழும் வாழும்!

செந்தமிழீர் இந்தநிலை வருவ தற்கே
திசையுள்ள தமிழரெலாம் ஒன்று சேர்வீர்!
"முந்துமொழி நம்தமிழும், தமிழர் என்ற
முதுபெரிய இனம்தாமும், வைய மீதில்
உந்துபெரும் முன்னிலையில் தலைமைகொள்ளும்
உயர்நிலையில் வைக்காமல் சாகமாட்டோம்"
இந்தநிலைக் காய்உழைக்க முழக்கம் செய்வோம்!
எல்லோரும் ஒருங்கிணைவோம் வாரீர்! வாரீர்!



# தமிழகப் பெண்களின் சமூகநிலையும் கல்வியும்

டாக்டர் திருமதி ஜெயாகோதைப் பிள்ளை
துணை வேந்தர்

*முன்னுரை*

"பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்னும் வள்ளுவன் வாக்கின்படி, பெண்மையை எங்கெங்கும் கண்டு,எல்லாமாகக் கண்டு, வியந்து, பணிந்து போற்றியவன் பாரதி. எந்த நாட்டில் பெண்மைக்கு மதிப்பும் பெருமையும் இருக்கின்றனவோ, அந்த நாடு முன்னேற்றம் பெற்ற நாடு ஆகும். ஒரே நாட்டை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் அது உயர்ந்தோங்கியிருந்த காலம் இன்னது என்று கண்டால், அந்தக் காலத்தில் பெண் மக்களின் நிலையும் உயர்ந்திருந்ததை ஆராயலாம். தமிழ் நாட்டின் வரலாறும் இதற்கு நல்ல சான்றாக இருக்கின்றது.

பண்டைய தமிழகத்தில் பெண்களின் நிலை சிறப்பாக இருந் துள்ளதென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தமிழகப் பெண்கள் கலை வாழ்க்கையில், நடைமுறைச்செயல்களில் தங்கள் திறத்தால் ஒரு தனியிடத்தைப் பெற்றுச் சிறப்புற்றுள்ளனர்.



**மகளிரும்கல்வியும்**

சங்க கால மகளிர் இயல், இசை, நாடகத்தில் பயிற்சி பெற்றுப் பெருமையுடன் வாழ்ந்துள்ளனர். பல சங்கப் பாடல்கள் பெண்பாற் புலவர்களால் இயற்றப் பட்டுள்ளன. ஆனால் அக்காலத்திலும் பல குடும்பங்களில் மகளிருக்கு இல்லறவியலையே அதிகம் கற்றுத் கொடுத்துள்ளனர் என்பதை அறியலாம். ஒரு சிறு குழந்தைக்கு இயல், இசை, நாடகத்தில் மட்டும் பெரும்பாலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அந்த மகளிர் `முதுக்குறைவை' என அழைக்கப்பட்டனர். கண்ணகி சிலப்பதிகாரத்தில் அவ்வாறு தான் அழைக்கப்படுகின்றாள். இதைத்தான் " யாயா கியளே விழவுமுதலாட்டி" என்று குறுந்தொகையும், "சிறு முதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்" என்று சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது.

சங்க காலப் புலவர்களில் ஐம்பது பெண் பாற் புலவர்கள் ஆடவருக்கு நிகராக கவிஞானத்தில் புகழ்பெற்று இருந்துள்ளனர். அவர்களுள், ஒளவை யார், ஆதிமந்தியர், காவற்பெண்டு, பாரி மகளிர், ஒக்கூர் மாசாத்தியர், நச்செள்ளையார், பெருங்கோப்பெண்டு முதலானோர் பெண்பாற் புலவர்களில் தனிச் சிறப்புப் பெற்றவராவர்.

தொன்றுதொட்டு `ஒளவை' என்ற பெயர் இடைக்காலம் மட்டும் பல

இடங்களில் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. சங்ககால இலக்கியத்தில் ஓர் ஔவை, அதியமான் நெடுமானஞ்சியின் நண்பராகவும், பல்லவர் காலத்தில் இரண்டாம் ஔவை சுந்தரமூர்த்தி நாயனாரின் சமகாலத்தவராகவும், மூன்றாம் ஔவை சோழர் காலத்தில் கம்பரின் காலத்திலும் வாழ்ந்துள்ளனர் என்பதைத் தமிழக இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. இதிலிருந்து மாண்புமிக்க பெண்பாற் புலவர்கள் சங்ககால முதல் சோழர் காலம் வரை "ஔவை" என அழைக்கப்பட்டுள்ளனர் என்பது அறிய வருகிறது.

நாலடியில் ஆசிரியர் மகளிரின் அழகைப் பற்றிக் கூறும்பொழுது அழகாக ஒன்றைக் குறிப்பிடுகின்றார். பெண்களுக்கு உடலழகைக் காட்டிலும், ஆபரணங்களால் செய்யும் அழகைக் காட்டிலும், உயர்ந்தஉடைகள் அணிவித்து அழகுறச் செய்வதைக்காட்டிலும், மகளிர் சிறப்பான மனப்பான்மையுடன் மூடநம்பிக்கைகள் அற்றுப் பலகலையும் கற்றுப் பெருமையுடன் வாழ்வதே மிக அழகானதாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல —நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு"

—நாலடி

இசை ஞானத்தில் பெண்கள் சிறந்து விளங்கினர் என்பதை, குறிஞ்சிப் பண் எவ்வாறு மிரண்ட யானையை வசப்படுத்தியது என்பதும், பாலைப்பண் எவ்வாறு மிரண்டு வந்த மறவரின் கையிலிருந்து அம்புகள் விழச் செய்தது என்பதும் இலக்கியத்தில் பேசப்படுகின்றன.

ஆறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலைபெயர்க்கு மருவின் பாலை

—பொருநர் ஆற்றுப்பா

மேலும் பாடும் திறத்தால் தன் கணவரின் விழுப்புண்களையே மகளிர் குணப்படுத்தியுள்ளனர். இதைத் தவிர பெண்கள் நாடகத்தின் மீது ஈடுபாடு உள்ளவர்களாக இருந்துள்ளனர். நாடகம், கூத்து என அழைக்கப்பட்டுள்ளது.மகளிர் நேரப் போக்கிற்காக நாடகத்தை ஒரு கலையாகக் கற்றுள்ளனர். சிலப்பதிகாரத்தில் உள்ள "குறவைக் கூத்தும்" திருவாசகத்தில் வந்துள்ள "தெள்ளேணனம் கொட்டல்" என்பதும் இதற்குச் சான்றாகும்.

***பெண்களின்சமூகநிலை***

சங்கப் பாடல்கள் "அகத்தில்" களவியலைப் பற்றிக் கூறும் பொழுது, ஒரு பெண்ணும் ஓர் ஆண்மகனும் திருமணத்திற்கு முன் கொண்டுள்ள காதலைப் பற்றி விளக்குகின்றன. இவை இருபாலருக்கும் உள்ள சமத்துவத்தை, சம உரிமைகளை எடுத்துக்காட்டுகிறது. பெற்றோர்கள் தாங்கள் பார்க்கும் ஆண்மகனையே தமது மகள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியதாக இல்லை. ஆனால் தாம் விருப்பப்பட்டவரை தேர்வு செய்து கொள்ள சுதந்தரம் அளிக்கப்பட்டிருந்துள்ளது. அதே சமயத்தில் மகளிரின் கற்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கற்புடைய மகளிரைத் தெய்வமாகவும் கொண்டாடியிருக்கின்றனர்.

சங்ககால இல்லற மகளிர் பெரிதும் மதிக்கப்பட்டுப் பெருமைப்படுத்தப் பட்டுள்ளனர். குடும்பத்தலைவி குடும்ப விளக்காக எண்ணப்பட்டதால் `மனைக்கு விளக்கு' என்றும், வீட்டை ஆட்சிசெய்பவள், நடத்துபவள் என்பதால் "இல்லாள்" என்றும், இல்லறத்திற்குத் தலைவியாதலால் "மனை முதல்வி" என்றும், வாழ்க்கை முழுவதும் என்றும் துணை யிருப்பவளாதலால் "வாழ்க்கைத் துணைவி" என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இதற்கிணையாக ஆடவருக்கு ஓர் பெயரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிரின் வீரத்தைக் குறிப்பிடுகையில் "மூதின்முல்லை" எனப் புறப்பொருள் இலக்கணம் அழைக்கிறது. நாட்டின் பாதுகாப்பிற்காகத் தங்களை அர்ப்பணித்த மகளிர் "முதுமகளிர்" எனப் பாராட்டப்பட்டுள்ளனர். தமிழக மகளிர் எவ்வளவு நாட்டுப்பற்றும் மனத்திண்மையும் உள்ளவராக இருந்துள்ளனர் என்பதை ஒக்கூர் மாசாத்தியார் அழகாக விளக்கி உள்ளார். ஒரு பெண் தன் மூத்த தமையனையும் கணவனையும் போரில் இழந்த பொழுதும், தனது ஒரே மகனையும் போர்க்களத்திற்கு அனுப்பினாள் என்பதன் மூலம் தமிழக மகளிரின் தைரியமான செயலை நன்கு அறியலாம்.

மேலும் கணவனை இழந்த மகளிர் "சதி" வழக்கத்தால் நசுக்கப்படவில்லை. ஆனால் "கைம்மை நோன்பு" மேற்கொண்டு ஏதாவது ஒரு நூற்கும் தொழிலை ஏற்றுத் தம் குழந்தைகளைக் காப்பாற்றியுள்ளனர். அவர்கள் "பருத்திப் பெண்டிர்" என அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சங்ககால மகளிர் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளனர் என்பது சங்ககாலத் தலைவர்கள் அழைக்கப்பட்ட விதத்திலிருந்து நன்கு புலனாகும்.

பதிற்றுப்பத்தில் ஆடவர் "நல்லோள் கணவன்", "புரையோள் கணவன் "என்று மகளிர் பெயரைச் சொல்லியே இன்னாருடைய கணவன் என அழைக்கப்பட்டுள்ளனர். இது மகளிருக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்தை உள்ளங்கை நெல்லிக் கனியாக விளக்கும்.

தமிழ் பக்த காலத்தில் —சைவமும் வைஷ்ணவமும் சமமாக வளர்ந்த காலத்தில் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் பெண்களும் சமபங்கு எடுத்துள்ளனர். அவர்களுள் காரைக்கால் அம்மையார், திலகவதி, மங்கையர்க்கரசி, இசை ஞானியர் முதலானோர் சைவத்திலும், ஆண்டாள் வைஷ்ணவத்திலும் குறிப்பிடத்தக்கவர்.

நெடுமாறன் என்ற பாண்டிய மன்னரின் துணைவி, மங்கையர்க்கரசி, பாண்டிய நாட்டில் சைவம் வளரப் பாடுபட்டுள்ளனர். ஆண்டாளின் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் `பக்தி' என்பது என்ன என்பதை எடுத்தியம்பியுள்ளன.

ஆனால் இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்ற மகளிரின் சமூக நிலை நாளடைவில் சீர்குலையத் தொடங்கியது. சிறு பஞ்ச மூலம் பெண்கள் அடங்கிச் செல்லவேண்டும் என்பதைக் கூறுகிறது. திரிகடுகம் (3) ஒரு கணவன் தம் மனைவியை அடித்துக் கொடுமைப்படுத்துவதை விளக்குகிறது.

"காழ் கொண்ட இல்லாளைக்
கோலாற் புடைத்தலும் —திரிகடுகம்"

மகளிர் ஆண்களின் உடைமையாக, அடிமையாக நடத்தப்படலாயினர். கற்பு என்பது மகளிருக்கு மட்டுமே என்ற நிலை உருவாகியது. தேவதாசிகள் தவிர மற்றவருக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டது. கற்பனை செய்து பார்க்க இயலாத அளவிற்கு மகளிரின் நிலை சரிந்து விழுந்தது.

இதற்கிடையில் புத்த, சைன மத வளர்ச்சியால் ஓரளவிற்கு மிகக் கட்டுப்பாட்டுடன் பெண்களுக்குச் சிறிது கல்வி வழங்கப்பட்டது. இருபாலரும் ஒரே இடத்தில் பயிற்றுவிக்கப்பட்டனர். நாளடைவில் நிர்வாகத்திலும் மகளிருக்கு இடம் கொடுக்கப்பட்டது. மதச் சடங்குகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். கர்நாடகத்தில் உள்ள கல்வெட்டுக்களில் ஒன்று பெண்துறவி, ஸ்ரீநந்தியின் மாணவி சரக்கவுராவின் பாலதேவய்யாவால் கட்டப்பட்ட கோவிலுக்குப் பொறுப்புடைய வராயிருந்துள்ளார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. கோவிலை நிறுவுவதில் பொறுப்பையே மகளிர் ஏற்றிருந்துள்ளார் என்பது பாராட்டத்தக்கது.

கழுகு மலையில் உள்ள சைவக் கல்வெட்டு இருபால் மாணவரும் ஆசிரியரும் இருந்திருக்கின்றனர் என்பதைத் தெரியப்படுத்துகிறது. இதைத் தவிர "பெண் பள்ளி" என்று மகளிர் தனியாகச் சமயக் கூடங்கள் அமைத்து மகளிரின் நிலையை ஓரளவு உயர்த்தியுள்ளனர்.

நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டில் "விளாப்பாக்கம், வேடல்" முதலிய இடங்களில் உள்ள கல்விக்கூடங்கள் மகளிருக்காக நடத்தப்பட்டவை என்று பொறிக்கப்பட்டுள்ளது. சைவ ஆசிரியர்களில் ஆண்கள் "ஆச்சாரியர்" என்றும் பெண்கள் "குறத்தியர்" எனவும் அழைக்கப்பட்டுள்ளனர். மாணவியர் "மாணாக்கியர்" என்றும் "பிள்ளைகள்" என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். நீலகேசி என்ற சமணப்பெண்புலவர் சொல்லாற்றல் பெற்றுச் சிறப்புற்றும் விளங்கியுள்ளார் எனத் தெரியவருகிறது.

மேலும் கதைப்பாடல்களிலும், நாட்டுப் பாடல்களிலும் மகளிரின் மனத்திண்மையையும், வீரத்திறமையையும் காண்கின்றோம். அவை, மதுரை வீரச்சாமியின் கதை, மதுரை வீரன் அம்மானை, தேசிங்கு ராஜா கதை, கான் சாஹிப் சண்டை, கட்ட பொம்மன் கதை முதலியவற்றில் மகளிரின் வீரச் செயல்கள் போற்றப்பட்டுள்ளன. இவை யாவும் பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் இயற்றப்பட்வை.

இவ்வாறு சைவ சமயத்திலும், பிற்காலப் பாண்டியர் காலத்திலும் ஓரளவு கல்வி கொடுக்கப்பட்டாலும், சமய உரிமைகள் வழக்கத்திலிருந்தும், "சதி"போன்ற சமூக வழக்கங்கள் சமூகத்தில் இடம் பெறலாயின.

வடிவம்மை சேரன்மாதேவியின் மகள் திருநெல்வேலியில், தன் காதலன் குலசேகரப் பாண்டியர், வள்ளியூரில் தற்கொலை செய்து கொண்ட பொழுது தானும் "சதியை" மேற்கொண்டாள். மேலும் நாட்டுப்புறப் பாடல்கள் கொட்டுகுறவை குமரப்பா ராஜாவிற்காகவும், பொம்மக்கா, திம்மக்கா, முத்துப்பட்டன் என்ற இளைஞனுக்காகவும், "சதி"மேற்கொண்டதாக விளங்குகிறது. மேலும் பெண்கள் இராணுவ, அரசியல் நிர்வாகங்களுக்குத் தகுதியற்றவர்கள் என்றும் கருதப்பட்டனர். ராணியம்மாள், ராஜா தேசிங்கின் அரசவையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தாள், அவளுக்குச் சொத்துரிமை அளிக்கப்படவில்லை.

நாளடைவில் குழந்தை மனமும், கட்டாய விதவை வாழ்வும் வற்புறுத்தப்பட்டன. இதனால் குழந்தை மணத்தால், இளம்பிராயத்து விதவை காதலால் பல பெண் குழந்தைகள் அல்லலுற்றனர். கி.பி.1881 ன் கணக்குப்படி பத்து வயதுக்குக் கீழேயே 24,787 பேர் தமிழகத்தில் மட்டும் விதவையாகியுள்ளனர்.

இவையெல்லாம் எதிர்த்துப் பிற்காலத்தில் சமூக சீர்திருத்தவாதிகளான ராஜாராம் மோகன்ராய், பண்டிதர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் முதலானோர், பெண்களின் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளனர்.

வித்யாசாகர் கி.பி.1855 இல் இந்து சாத்திரங்கள் விதவைகள் மறுமணத்திற்கு ஆட்சேபிக்கவில்லை என்ற பதிப்புகளை வெளியிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கி.பி.1881 ல் 29 விதவைகளுக்கும் திருமணம் செய்வித்து இவ் வழக்கத்திற்கே ஒரு வழிகாட்டியானார். பின் சாரதா சட்டத்தால் குழந்தை மணம் தடை செய்யப்பட்டது.

பெண்கல்வியும் கி.பி. 1854 முதல் சென்னை மாகாணத்தில் கிறிஸ்துவ பாதிரிமார்களால் விரி வடைந்தது. கி.பி.1901ல் கூட ஆயிரத்தில் ஏழு பெண்கள்தான் எழுத்தறிவு பெற்றவராக சென்னை மாகாணத்திலிருந்துள்ளனர்.

லண்டன் மிஷன், ரோமன் கத்தோலிக்க மிஷன், லூத்தரன் மிஷன் முதலியன பல பெண் குழந்தைகளுக்காகக் கல்விக் கூடங்களை நிறுவிப் பெண் கல்வியை வளர்த்தனர். இன்னும் சொல்லப் போனால் சுதந்தரமடைந்ததற்குப் பின் சென்னை பெண்கல்வியை வளர்ப்பதில் முழுவதும் ஈடுபட்டது. மாணவியரின் எண்ணிக்கையும் பள்ளிகளில் அதிகரிக்கலாயின.

### சுதந்தரத்திற்குப் பின் பெண்களின் கல்வி நிலை

துர்காபாய் தேஷ்முக் (1959) குழுவின் பரிந் துரைப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் பெண்களையே வளர்க்க ஓர் ஆணியக் குழு நிறுவப்பட்டுப் பெண்கல்வி கண்காணிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பெண்கல்விக்கான தேசியக்குழு (1959) பெண்களுக்கான தனிப்பயிற்சிகளும் வேலை வாய்ப்புகளும் வழங்குவதில் திட்டங்கள் தீட்டின. மாநிலக்குழு பெண்கல்வியைக் கண்காணிப்பதில் பெண் அதிகாரிகளை நியமனம் செய்யப் பரிந்துரைத்தது. பெண்கல்வியின் வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

தமிழக அரசாங்கம் "இலவச மதிய உணவு" "இலவச சீருடை" "இலவச புத்தகம்" முதலான பலதிட்டங்களைச் செயல்படுத்தித் தமிழக எழுத்தறிவுடையவர் எண்ணிக்கையை உயர்த்தியது. கீழ்க்காணும் அட்டவணை தமிழகப் பெண்களின் எழுத்தறிவுடையவரின் சதவீதத்தை நாட்டில் எழுத்தறிவு பெற்ற பெண்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு, தமிழகப் பெண்கல்வியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

| ஆண்டு | பெண்களின் எழுத்தறிவு | |
|---|---|---|
| | தமிழகம் | இந்தியா |
| 1951 | 10.6% | 70.3% |
| 1961 | 18.17% | 12.93% |
| 1971 | 26.86% | 18.72% |
| 1981 | 34.12% | 24.88% |

மேலும் பக்தவச்சலம் குழு 1965இல் வயதுவந்தோர் கல்வியில் பெண்களுக்கு ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புத்திட்டத்தால் கல்வி பயிற்றுவிக்கப்படவேண்டும் என வலியுறுத்துகிற இன்று இந்தியாவில் கேரளத்திற்கு அடுத்து இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள தமிழகம் முறைசாராக் கல்வியின் மூலம் எழுத்தறிவு பெறுவோரின் எண்ணிக்கையை ஆண்டுதோறும் பெருக்கியுள்ளது.

இதனால் உயர்கல்வியிலும், பொறியியல், அறிவியல் முதலான கல்வி வகைகளிலும் பெண்களின் எண்ணிக்கை ஏறிவருகிறது.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்"

— பாரதியார்

ஆம், பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்து அடக்கி ஆட்சி செய்த காலம் மாறி, பெண்களுக்கும் கல்வி அவசியம் என்ற காலம் உருவாகியுள்ளது.

"பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை அற்றிடுங் காணீர்!

என்பதை நன்கு உணர்ந்தோர், உயர்கல்விக் கூடங்களில் தொழிற்கல்விக் கூடங்களில் பெண்களுக்கும் கதவைத் திறந்தனர்.

| | கல்வி | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|---|
| 1. | மருத்துவம் (ஆங்கிலம்) | 3329 | 5357 |
| | இந்திய மருத்துவம் | 83 | 257 |
| | ஹோமியோபதி | 27 | 52 |

| | கல்வி | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|---|
| | ஆயுர்வேதம் | 1 | 13 |
| 2. | செவிலியர் பயிற்சி | 31 | 14 |
| 3. | பொறியியல் தொழில்நுட்பம் | 1022 | 14831 |
| 4. | கால்நடை மருத்துவம் | 36 | 819 |
| 5. | வேளாண்மை | 228 | 2769 |
| 6. | சட்டம் | 202 | 2769 |
| 7. | ஆசிரியர் பயிற்சி | 1761 | 1443 |
| 8. | இசை | 268 | 224 |
| 9. | கடல் சார்ந்த உயிரியல் | 8 | 124 |
| 10. | கலை | 48 | 522 |
| 11. | நிர்வாகக் கல்வி | 6 | 204 |

மேற்கண்ட இவ்வட்டவணை பெண்களும், ஆண்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த தொழில், அறிவியல், நிர்வாகம், சட்டம், கடல்சார்ந்த உயிரியல், கலை போன்ற பல துறைகளில் ஈடுபடலாயினர் என்பதை விளக்குகிறது.

இன்றுள்ள கலாச்சாரத்தில் சமூகச்சூழலில், பழக்க வழக்கங்களில் பால்இன வேறுபாடு வேரூன்றி இருப்பதை முழுவதும் தகர்த்தெறிந்து ஆண் ஆயினும், பெண் ஆயினும் சம வாய்ப்புப் பெறச் செய்தால் பெண்களும் உயர்வர் - வீடும் உயரும். வீடு உயர நாடும், மானுடமும் உயரும்.

பெண்ணினத்தின் இன்னல்களை நீக்கவும், நிலையை உயர்த்தவுமே உலகிலேயே முதன் முதலில் `மகளிரியலையே' தன்னகத்தே கொண்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தமிழகத்தில் 1984ல் நிறுவப்பட்டுப் பல வழிகளிலும் முயற்சி எடுத்துப் பற்பல நல்திட்டங்களை செயல்படுத்திப் பெண்கள் முன்னேற்றத்திற்கும், சரிநிகர் சமானம் என்ற நிலைமையை அடையவும் வழி செய்து வருகிறது.

## முடிவுரை

"பெண்மை வாழ்க" என்று கூத்தாட விரும்பினார் கவிஞர் பாரதியார். பெண்மை வாழ்ந்தால்தான் அன்பு, அறம், ஆண்மை எல்லாம் வாழமுடியும். தமிழ்நாட்டு வரலாறு பெண்மைக்கும், பெருமைதரும் வரலாறாக இருக்கிறது. இவற்றை மேலும் வலுப்படுத்த தமிழகம், 30 சதவீதம் பெண்களுக்கான ஒதுக்கீட்டை அலுவலகங்களிலும், பெண்களுக்குச் சொத்துரிமைச்சட்டம் முதலானவற்றை இந்தியாவிலேயே முதன்முதலாகவும் செயல்படுத்தியுள்ளது.

"தாதர் என்ற நிலைமை மாறி,
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக வாழ்வோம் -
இந்த நாட்டிலே

என்ற நிலைமை வர, தமிழகம் ஓர் எடுத்துக்காட்டாக, கலங்கரை விளக்கமாக பிற மாநிலங்களுக்கு முன் உள்ளது.



# இரட்டைப் பிறவிகள்

டாக்டர் ந.சுப்பு ரெட்டியார்

கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய உயிரணுக்களிலிருந்து மானிட உயிர் தோன்றுவதும், பல்வேறு சிக்கலான அமைப்புகளையும் பண்புகளையும் கொண்ட ஒரு மனிதன் உருப்பெறுவதும் வியப்பேயாகும். அதே சிறிய உயிரணுக்களிலிருந்தே இரண்டு, மூன்று, நான்கு என்று சில சமயம் ஒரே மாதிரியான பல குழவிகள் தோன்றுவதைக் காணும் பொழுது நம்முடைய வியப்பு பன் மடங்கு அதிகரிக்கின்றது. இயற்கையின் இரகசியம் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருப்பதைக் கண்டு இறும்பூது அடைகின்றோம். ஈண்டு இரட்டைப்பிறவிகள் *twin births* தோன்றுவதை விளக்குவோம். இரட்டைப் பிறவிகள் ஒரு கரு இரட்டையர் *Identical twins,* இருகரு இரட்டையர் *Fraternal twins* என்று இருவிதங்களில் உண்டாகலாம்.

**ஒரு கரு இரட்டையர்:** இவ்வகையில் கருவுற்ற ஒரே முட்டையிலிருந்து இரண்டு குழவிகள் உண்டாகின்றன; கருவுற்ற முட்டை பிரிவுபட்டு உண்டான கருப்பத்தில் உள்ள உயிரணுக்களின் தொகுதி இரண்டு பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு பகுதியாக வளரும். ஏன் அது இவ்வாறு பிரிகின்றது என்பது இயற்கையன்னையின் விளங்காப் பல புதிர்களில் ஒன்றாகும். வளர்ச்சியின் முதல் நிலையில் எல்லா உயிரணுக்களுக்கும் குழந்தையின் எல்லாப் பகுதிகளாக வளரும் ஆற்றல் உண்டு. இவ்வாறு பிறக்கும் குழவிகளின் தோற்றம், தன்மை, உயரம், நிறம், உறுப்புகளின் அமைப்பு முதலிய மரபு வழிக் கூறுகள் அனைத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்கும்; இரண்டும் ஆணாக இருக்கும்; அல்லது பெண்ணாக இருக்கும். அதாவது இவ்வகைக் குழவிகளில் பால் வேற்றுமை இராது. எ.டு நம்காலத்தில் வாழ்ந்து உலகப் புகழ் பெற்ற ஆற்காட்டுச் சகோதரர்கள்.



இவ்வகைக்குழவிகள் கருப்பையில் வளரும் பொழுது இரண்டும் ஒரு கோரியானால்*Chorion* மூடப் பெற்றிருக்கும். கருப்பந்தின் உட்புறத்தில் உயிரணுக்கள் ஒருவரிசையாகவும் சுவருடன் சேர்ந்தும் உள்ள அமைப்பே 'கோரியான்' என்பது. இந்த அமைப்பு தாயின் குருதியிலிருந்து உணவுச்சத்துக்களைப் பெறுவதற்குத் துணை செய்கின்றது. மேலும், ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனிப் பனிக் குடமும்*Amniotic sac* தனித்தனிக் கொப்பூழ்க் கொடியும் *Umbilical cord* இருக்கும். கொப்பூழ்க் கொடிகள் ஒரே நஞ்சுடன் *placenta* இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய

இரட்டைப் பிறவிகளை **அச்சு இரட்டைகள்** என்று வழங்குவதும் உண்டு.

**இருகரு இரட்டையர் Fraternal twins:** இருகரு இரட்டையர் இரண்டு முட்டைகள் கருவுறுவதனால் உண்டாவதாகும். சாதாரணமாக மாதத்திற்கு ஒரு முட்டைதான் முதிர்ந்து கருக்குழலில் செல்லும். சில சமயங்களில் இரண்டு முட்டைகள் முதிர்ச்சியுற்றுச் சூற்பைகளிலிருந்து வெளிப்பட்டுக் கருக் குழலில் செல்வதுண்டு. ஒவ்வொரு முட்டையிலும் ஒவ்வொரு விந்தணு புகுந்து இரண்டு முட்டைகளும் கருவுறும். இவ்வாறு கருவுற்ற முட்டையுள் கருப்பையில் வெவ்வேறு இடங்களில் பதிந்து கொண்டு இரண்டு கோரியான்களில் வளரும். ஒவ்வொன்றுக்கும் தனித் தனிப் பனிக்குடமும், தனித்தனிக் கொப்பூழ்க் கொடியும் தனித் தனி நஞ்சும் இருக்கும். இவ்வாறு பிறக்கும் இரட்டைக் குழவிகள் உருவம், தன்மை முதலானவற்றில் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஒன்று ஆணாகவும், மற்றொன்று பெண்ணாகவும் அமையலாம்; அல்லது இரண்டும் ஆணாகவோ, பெண்ணாகவோ அமையலாம். இரண்டு முட்டைகளின் நிறக்கோல்கள் பிரியும் பொழுது இரண்டினுடைய நிறக்கோல்களும் *Chromosomes* ஒரே மாதிரியாக அமையும் என்று சொல்வதற்கில்லை. ஒரு முட்டையில் தாய்வழிப் பாட்டனிடமுள்ள நிறக்கோல்கள் அதிகமாகவும், மற்றொன்றில் தாய் வழிப் பாட்டியிடமுள்ள நிறக்கோல்கள் அதிகமாகவும் அமையலாம். மேலும், இந்த இரண்டு முட்டைகளும் வெவ்வேறு முறையில் அமைந்த நிறக்கோல்களைக் கொண்ட இரண்டு தனிப்பட்ட விந்தணுக்களால் கருவுறுகின்றன. இதனால்தான் இவை பல பண்புக் கூறுகளில் வேற்றுமையுடன் அமைகின்றன. இதனால் தான் நிறம், உரோம வளர்ச்சி, உயரம், உறுப்புகளின் அமைப்பு, தோற்றம் முதலியவற்றில் சாதாரணமாக, சகோதர சகோதரிகளிடம் காணப் பெறுவதைப் போலவே இவையும் வேறுபாடுகளுடன் அமைகின்றன. இத்தகைய இரட்டைப் பிறவிகள் சகோதர இரட்டைகள் எனவும் வழங்கப் பெறும்.

**இயல்பிகந்த இரட்டையர்:** கருவுற்ற முட்டையிலுள்ள உயிரணுக்களின் தொகுதி இரண்டு பகுதிகளாகப் பிரியும் பொழுது முற்றிலும் இரண்டாகப் பிரியாமல் போகுமாயின் இயல்பிகந்த இரட்டையர்கள் பிறப்பதற்கு ஏதுவாகும். இவை வெவ்வேறு நிலைகளில் ஒட்டிய பாங்கில் பிறக்கும். இவற்றை ஒட்டுப் பிறவிகள் *Conjoined twins* என்று வழங்குவர். முதன் முதலில் இத்தகைய பிறவிகளில் ஒன்று உயிருடன் சயாம் நாட்டிலிருந்து வந்ததைக் கண்டதால் இவ்வகைப் பிறவிகளைச் `சயாம் இரட்டையர்'(*Siamese*) என்று வழங்குகின்றனர். சாதாரணமாக ஒட்டுப் பிறவிகள் உடலில் ஒருபகுதி (எ.டு.இடுப்பு), தலை, பக்கங்கள் ஆகியவற்றில் ஏதாவது ஓரிடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். பெரும்பாலும் சயாம் இரட்டையர் அச்சு இரட்டையராகவே இருப்பார். ஆனால், ஒரு சிலர் சகோதர இரட்டையரின் இளஞ்சூல்கள் தொடக்க நிலையில் ஒன்றையொன்று நெருங்கி அழுத்திய நிலையில் அமைந்தால் இவ்வாறு ஒட்டுப் பிறவிகளாக அமைந்து விடும் என்று நம்புகின்றனர். இன்னும் சிலர் ஒரு முட்டை இரண்டு விந்தணுக்களால் கருவுற்றால் இத்தகைய பிறவிகள் அமையலாம் என்றும் கூறுகின்றனர். இந்த இரண்டு வகைகட்கும் யாதொரு சான்றும் இல்லை.

இளஞ்சூல் நிலையில் பிரிவது முற்றிலும் சரியாகப் பிரியாவிட்டால் சில சமயம் ஒரு தலை நான்கு புயங்கள், நான்கு கால்களையுடையதாகவும், அல்லது இரண்டு தலைகளையுடையதாகவும், அல்லது அக உறுப்புகளிலோ புறஉறுப்புகளிலோ பல்வேறு விதமாக இரட்டித்தும் அரக்கப் பிறவிகள் தோன்றுவதுண்டு. பெரும்பாலும் இத்தகைய பிறவிகள் பிறப்பதற்கு முன்பாகவே மரித்து விடும். ஆனால் 1937 இல் இரஷ்யாவில் இரண்டு தலைகள், ஓர் உடல், நான்கு புயங்கள், இரண்டு கால்கள், ஒரு சிறிய வால் இவற்றுடன் பிறந்த ஒரு குழந்தை ஓராண்டு வரை வாழ்ந்து உயிர் துறந்ததாக அறிகின்றோம். இரட்டைப் பிறவிகள் ஏற்படுவது ஒரு மரபு வழிப் பண்பு என்று அறியக் கிடக்கின்றது. சில குடும்பங்களில் இப்பண்பு அடிக்கடி தலை காட்டுவதாக ஆராய்ச்சிகளால் அறிகின்றோம். ஒரே தாயிடம் தொடர்ந்தாற் போல் பல பிறவி களையுடைய குழந்தைப் பேறு ஏற்படக் காண்கின்றோம். ஓர் ஆஸ்திரியப் பெண்மணி 69 குழந்தைகட்குத் தாயான செய்தியை அறிகின்றோம். அவள் நான்கு தடவைகள் நந்நான்கு குழந்தைகளையும், ஏழுதடவைகள் மும்மூன்று குழவிகளையும், பதினாறு தடவைகள் இரட்டைக் குழவிகளையும் பெற்றெடுத்ததாக அறியக் கிடக்கின்றது. ஆயினும் பெண்ணின் செல்வாக்கு மட்டிலும் இப்பிறவிகளில் ஒரு முக்கிய கூறாக அமையவில்லை என்றும், ஆண் வழியாகவும் இக் கூறுகள் அமைந்துள்ளதற்குச் சான்றுகள் உள்ளன என்றும் அறிகின்றோம். இரண்டு முறை மணந்து கொண்ட ஒரு மனிதனுக்கு முறையே இரட்டைப் பிறவிகளும் மூன்று குழவிப் பிறவிகளும் அதிகமாக ஏற்பட்டனவாகச் சான்று கிடைக்கின்றது.

**நம் நாட்டுக் குசேலர்:** நம் நாட்டுப் புராணக் குசேலருக்கு இருபத்தேழு குழவிகள் இருந்தன என்பதை நாம் அறிவோம்.

ஒரு மகவு களித்திடும்போது ஒரு மகவு
கைநீட்டும்; உந்திமேல் வீழ்ந்து
இருமகவும் கைநீட்டும்; மும்மகவும்
கைநீட்டும் என்செய் வாளால்!
பொருமியொரு மகவு அழும்; கண் பிசைந்து
அழும். மற்று
ஒருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்தில் கிடந்து அழும்; மற்று ஒரு மகவு
எங்ஙனம் சகிப்பாள் பெரிதும் பாவம்.
அந்தோ என் வயிற்றெழுந்த பசியடங்கிற்று
இல்லையென அழுமால் ஓர்சேய்;
சிந்தாத கஞ்சிவார்க்கிலை எனக்கு அன்னாய்
எனப்பொய் செப்பும் ஓர்சேய்
முந்தார் வந்து ஒரு சேய் மிசையப் புகும்போதினில்
ஓர்சேய் முடுகி யிரப்ப
நந்தாமல் அச்யும் எதிர்ப்ப,
சிந்துதற்கு நயக்கும் ஓர் சேய்;

என்று கவிஞர் வருணித்திடுவர். இதனால் குழவிகளில் பலர் மிகச்சிறு வயதினராயிருந்தனர் என்று ஊகம் செய்யலாம். ஆகவே, சுசீலைக்கும் பல குழவிகளையுடைய பல குழந்தைப் பேறுகள் ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்று கொள்வது தவறுடையதாகாது. இப்படிக் கொண்டால்தான் கவிஞருடைய கற்பனைபொருந்துவதாக அமையும். அந்தக் கற்பனைக்கும் அறிவியல் அடி நல்ல விளக்கமும் ஏற்பட ஏதுவாகும்.



# பாரியும் பாவேந்தனும்

கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கம்

முல்லைக்குத் தேர்தந்தான் பாரி! ஏழை
<168ன்னேறப் பாவேந்தன் கவிதை தந்தான்!
வில்லுக்கும் வாளுக்கும் கலங்கா மூன்று
வேந்தர்கள் பாரிபுகழ் கண்டு நொந்தார்!
சொல்லுக்குள் பாவேந்தன் கருத்தைக் கண்டு
சூழ்ச்சிபல நினைப்பவர்கள் நொந்தார்! நைந்தார்!
புல்லுக்கும் மழையளித்த மேகம் பாரி!
புலிகளுக்கும் படையளித்தான் கனக சுப்பு!

மூவேந்தர் பாரியினைக் கொன்றார்! அன்றே
முழுநிலவைக் கொல்லுகின்ற மூடர் ஆனார்!
பாவேந்தன் கயமைகளைக் கொல்லும் வீரம்
படைத்ததனால் மறுமலர்ச்சிச் சிற்பி ஆனான்!
பூவேந்தும் கொடிகளுக்கும் வாழ்வு நல்கப்
பொன்மனத்தால் அன்புதந்தான் பாரி! நாட்டில்
வாழ்வேந்த முடியாத பெண்க ளுக்கு
வாள்போன்ற கவிதந்தான் புதுவை
ஊரான்!

அங்கவையும் சங்கவையும் பாரி
பெண்கள்
ஆனாலும் தமிழர்நலம் அவனின்
கண்கள்!
தங்கமொரு கோடியென
வந்தாலும்தேன்
தமிழன்றி விரும்பாத புரட்சிக் காரன்!
சிங்கமெனத் தாம்பெற்ற மன்னர்
மன்னன்



செழித்திடவே சேர்த்துவைத்த தொன்று மில்லை!
தங்களது நலமெல்லாம் தமிழே என்று
தனிமுரசம் இருவருமே ஆர்ப்பரித்தார்!

தமிழ்ப்புலவன் கபிலனுக்கு நண்பன்; ஓங்கும்
த ண்பறம்பு மலைநாட்டின் தலைவன்: நாட்டில்
தமிழ்ப்பகுதி எனவாழ்வோர் எவர்க்கும்
தொண்டன்;
தழுவுகின்ற தமிழ்த்தென்றல் மனைவி; நாளும்
தமிழ்க்கடலில் முத்தெடுப்போர் உடன்பிறந்தார்;
தாகத்தை, வன்பசியைப் போக்கு தற்குத்
தமிழ்ப்பாட்டை உணவாகக் கொண்டு கொண்டு
தலைமீது புகழ்சுமந்து நின்றான் பாரி!

பாரியுடன் பாவேந்தை இணைத்துப் பார்த்தால்
பைந்தமிழே இருவர்க்கும் உயிராம்!
அந்தப்
பாரிமனம் இரவுபகல் தமிழர் மேன்மை
படைத்ததுபோல் பாவேந்தன்
படைத்தான் ஏட்டில்
ஊரினிலே யாரெதிர்த்தும் இருவர்
நெஞ்சும்
உயர்கொள்கை மாறவில்லை!
மறக்கவில்லை!
பாரினிலே வாழ்கின்றான் பாரி
வேந்தன்
பாட்டுலகில் நிலைபெற்றான் பாவின்
வேந்தன்!

13465

# கிரிக்கெட் எனும் போதை

## டாக்டர் க.ப.அறவாணன்

காலனி நாடுகளில் பாவ எச்சம்

ஐரோப்பாவைச் சேர்ந்த போர்ச்சுகீஸ், ஆலந்து, ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்சு ஆகிய ஐந்து சிறு நாடுகள் பல நூறு கல் தொலைவில் உள்ள ஆப்பிரிக்கக் கண்டத்தையும், ஆசிய க் கண்டத்தையும், ஆஸ்திரேலியாக் கண்டத்தையும், வட அமெரிக்கா - தென் அமெரிக்கா கண்டங்களையும் அரசியல் அடிமையாக்கின என்பது வரலாறு. கி.பி.14ஆம் நூற்றாண்டில் தொடங்கிய காலனி ஆதிக்கம் 20ஆம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது. இன்னும் சிற்சில நாடுகளில் நீடிக்கிறது. சோவியத் ஒன்றியத்தில் மாமேதை லெனின் 1917இல் நிகழ்த்திய புரட்சியை ஒட்டி உலகத்தின் பல்வேறு நாடுகளில் உரிமைக் கிளர்ச்சிகள் தோன்றின. ஆங்காங்கே ஆளுகின்ற ஐரோப்பியரை அல்லது அதிகார வர்க்கத்தை எதிர்த்து நடத்தப்பெறும் விடுதலைப் போர் களுக்கு லெனின் ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும் நல்கி வந்தார். 20ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் சில நாடுகளும், பிற்பாதியில் பல நாடுகளும் தம்மை ஆண்டு வந்த அயலாதிக்க விலங்குகளை உடைத்தெறிந்து விட்டு விடுதலை பெற்றன. 1947இல் இந்தியா விடுதலை பெற்றது. 1954இல் புதுவை பிரஞ்சு அரசிடம் இருந்து விலகி இந்தியா - தில்லி அரசுடன் இணைந்தது.



அரசியல் பிணைப்புகளை மட்டுமே ஐரோப்பியர்கள் சாதுரியத்தோடும், அறிவுக் கூர்மையோடும் விலக்கிக் கொண்டார்கள். அனைத்து நாடுகளும் காலனி ஆதிக்கங்களில் இருந்து அரசியல் விடுதலை மட்டும் பெற்றன என்றே சொல்லுதல் வேண்டும். காலனி ஆட்சிக் காலத்தில் காலனிக்காரர்கள், குடியிருப்பு நாடுகளில் விதைத்து, வளர்த்து, மரமாகச் செழிக்க விட்டுப்போன மொழி அடிமைத்தனம், பண்பாட்டு அடிமைத்தனம், நாகரிக அடிமைத்தனம், பொருளாதார அடிமைத்தனம், சமுதாய அடிமைத்தனம் ஆகியன அப்படியே நின்று நிலை பெற்றன. இதற்குச் சரியான சான்று, இந்தியா - தமிழ்நாடு ஊ14 புதுவை எனலாம். ஐரோப்பியர்கள் வெளியேறிய பின்பும் அவர்கள் விட்டுச் சென்ற நாகரிகமே ஆதிக்கம் செலுத்துகின்றது. அவர்கள்

விட்டுச் சென்ற பண்பாடுகளே ஆதிக்கம் செலுத்துகின்றன.

அவர்கள் விட்டுச் சென்ற பொருளாதார, சமுதாய அமைப்புகளே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. காலனி ஆட்சிக் காலத்தில் குடியிருப்பு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் விற்பதற்குரிய சந்தைகளாக விளங்கின. ஐரோப்பிய மொழியில் எழுதப்பட்ட நூல்கள், வெளியிடப்பட்ட ஏடுகள், வெளியிடப்பட்ட திரைப்படங்கள், குடியிருப்பு நாட்டுச் சந்தைகளில் விற்கப்பட்டன. ஐரோப்பியர் அறிமுகப்படுத்திய தேநீர், காபி, சிகரெட், கோதுமைப் பண்டங்கள் ஆகியனவும் அப்படியே இடம் பிடித்தன. கனடாவில் உருவாக்கப்படும் பாட்டா செருப்பு சென்னையிலும், புதுச்சேரியிலும் விற்பனையாயிற்று; விற்பனை யாகிறது. ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட கால்கேட், லக்ஸ் முதலான ஆடம்பரப் பொருள் வகைகள் அனைத்து நாடுகளின் கூட்டு என்ற பெயரில் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றன. ஆழ்ந்து சொல்லப்போனால் ஐரோப்பிய, பொருளாதாரச் சந்தைகளாகவே இன்னும் பல நாடுகளும் இருந்து வருகின்றன. உற்பத்தி செய்யும் இடம் இங்கிலாந்து, பாரிஸ் ஆகிய நகரங்களுக்குப் பதிலாக பம்பாய், கல்கத்தா என்று மாறி இருக்கலாம். மொழி வெறும் கருவி மட்டும் அன்று. அதுவே பண்பாட்டு, நாகரிக வளர்ச்சிக்கும், தளர்ச்சிக்கும் அடிப்படையானது. இதை நன்கு அறிந்தவர்கள் ஐரோப்பியர். ஏனைய பொருள்கள் விற்றதைப் போலவே, விற்றுக் கொண்டு இருப்பது போலவே தம் மொழியையும் இவர்கள் விற்றனர். ஒரு வேறுபாடு. ஒரு பொருளை விற்றபின் அந்தப் பொருள் விற்றவன் கையில் இராது. மொழி அளவில் மட்டும் இது வேறுபட்டுள்ளது. அண்மையில் புதுவைப் பல்கலைக் கழகமும், புதுவை அரசும் இணைந்து நூல் கண்காட்சி ஒன்றை நடத்தின. இந்நூல் கண்காட்சியில் விற்பனையான புத்தகங்களில் பெரும் பங்கு ஆங்கில, பிரஞ்சுப் புத்தகங்கள் ஆகும். மிகச் சிறு பங்கு கூடத் தமிழ் நூல்கள் விற்கவில்லை. எனவே, நூல் கண்காட்சியில் பங்கேற்ற தமிழ்ப் பதிப்பாளர்கள் அடுத்தமுறை தாங்கள் நூல்கண்காட்சிக்கு வரப்போவது இல்லை என்று தெரிவித்தனர்.

***காலனி நாடுகளில் கலாச்சார எச்சத்துள் தலையாயவை:*** தமிழ்நாட்டுச் சித்த மருத்துவம் செத்து, ஐரோப்பிய அலோபதி மருத்துவம் செழித்தது. தமிழ்நாட்டு உணவுமுறைகள் அழிந்து, ஐரோப்பிய உணவுமுறைகள் இடம் பெற்றன; தமிழ்நாட்டுக் குடிவகைகள் ஐரோப்பியக் குடிவகைகளால் விரிந்து பரவின.தமிழ்நாட்டு விளையாட்டுகள் விடைபெற்று ஐரோப்பிய விளையாட்டுகள் இடம் பெற்றன. இவற்றுள் தலையாயது கிரிக்கெட் எனும் விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு கி.பி.1300 வாக்கில் இங்கிலாந்தில் பிறந்து எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டது. இது ஏழைகளின் விளையாட்டு இல்லை. ஆங்கிலேய இளவரசக் குடும்பத்தினர் விளையாடும் விளையாட்டு. அதனால் அது விளையாட்டின் அரசன் *(Sports' King)* என்று கூட அழைக்கப்படுகிறது. இவ்விளை யாட்டு விளையாடத் தேவைப்படும் இடம், கருவிகள், ஆட்கள் ஆகியவற்றை எண்ணிப் பார்த்துத் தமிழ்நாட்டில் தலைமுறை தலைமுறையாக விளையாடப்பட்டுத் தற்போது மறக்கப்பட்டு வரும் சடுகுடு விளையாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வேறுபாடு தெரியும். சடுகுடு விளையாட்டிற்கு முதலீடே தேவையில்லை. சிறிய அளவில் திறந்தவெளி மட்டும் தேவை.

அண்மையில் நடந்து முடிந்த கிரிக்கெட் போட்டிக்குச் செலவான தொகை ரூ.94 லட்சங்கள். விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆறு நாட்டுக் குழுவினருக்குத் தரப்பட்ட குறைந்தபட்ச கியாரண்டிதொகை | ரூ. | 16,00,000 |
| 15 ஆரம்பக்கட்ட ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளுக்குத் தரப்பட்ட தொகை | ரூ. | 6,00,000 |
| 15 ஆட்டங்களில் மேன் ஆப்தி மேட்சுக்குத் தரப்பட்ட பரிசுத் தொகை | ரூ. | 3,00,000 |
| மேன் ஆப்தி சீரியஸ் பரிசுத் தொகை | ரூ. | 1,00,000 |
| 8 அம்பயர்களுக்கான செலவுத் தொகை | ரூ. | 4,00,000 |
| செமிபைனல், பைனல் ஆட்ட அம்பயர்களுக்கான செலவு | ரூ. | 1,00,000 |
| அடுத்ததாக வந்து வெற்றி பெற்ற குழுவிற்கு | ரூ. | 5,00,000 |
| அதற்கு அடுத்து வந்த வெற்றிக் குழுவிற்கு | ரூ. | 3,00,000 |
| அதற்கு அடுத்து வந்த வெற்றிக் குழுவிற்கு | ரூ. | 2,00,000 |
| பிரயாணச் செலவு வகை | ரூ. | 25,00,000 |
| உள்ளூர்ச் செலவு வகையறாக்கள் | ரூ. | 20,00,000 |
| ஆக | ரூ. | 94,00,000 |

(கல்கண்டு, 30.11.89)

விளையாட்டு என்பது சமூகவியல் பார்வையில் வேண்டாத ஒன்று அன்று. மனிதன் அடிப்படையில்

விலங்கு. அவன் ஒரு சமூக விலங்கு அவ்வளவுதான். மற்றபடி விலங்கு உணர்ச்சிகள் அனைத்தும் அவனிடம் இடம் பெற்றுள்ளன. இது போன்ற விளையாட்டுகள் மனித மனத்தில் பொங்கிவரும் விலங்கு உணர்ச்சியையும், பகை உணர்ச்சியையும் தணிக்க உதவுகின்றன. எனவே, சமூகவியல் பார்வையில் விளையாட்டு வேண்டியதே. உடல்நலப் பார்வையிலும் விளையாட்டு வேண்டியதே. குழுநலப் (Team Spirit) பார்வையிலும் விளையாட்டு வேண்டியதே. ஆனால் விளையாட்டு வேறு, விளையாட்டை விளையாடாமல் சுற்றி அமர்ந்து கொண்டு சோம்பேறியாக இரசிப்பது வேறு. கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்த அளவிற்கு 11 + 11 = 22 பேரும், இரண்டு நடுவர்களும், ஆக 24 பேர் அங்குமிங்கும் அசையப் பல்லாயிரக் கணக்கானோர் பார்க்கும் இரசிகர்களாகத் தம்மை முழுச்சோம்பேறிகளாக மாற்றிக் கொள்கின்றனர். அதனால் பெர்னாட்ஷா,

"11 ஆட்கள் ஆடும் ஆட்டத்தை 11 ஆயிரம் முட்டாள்கள் பார்த்து இரசிக்கின்றனர் "

என்று குறிப்பிட்டார். நாம் இங்கே அலசுவதும், ஆராய்வதும் கிரிக்கெட் விளையாட்டை விளையாட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி அல்ல. விளையாட்டை ஒட்டி இரசிக்கும் சோம்பேறிக் கூட்டத்தை இந்தியா போன்ற ஏழை நாடுகளில் திட்டமிட்டு வளர்க்க வேண்டுமா என்பதுதான்.

### அரசின் அரவணைப்பு

அரசாங்கமே கிரிக்கெட் விளையாட்டைப் பெரிய அளவில் விளம்பரப்படுத்தி நடத்துகிறது; அல்லது நடத்த உதவுகிறது. கிரிக்கெட் விளையாட்டு நிகழும்போது அரசாங்கமே விடுமுறை அளிக்கிறது. சான்றாக, 1986ஆம் ஆண்டு இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே செப்டம்பர் 18 முதல் 22ஆம் நாள் வரை சென்னை சேப்பாக்கத்தில் கிரிக்கெட் போட்டி நிகழ்ந்தது. விளையாட்டுத் தொடங்கும் முதல் நாளான 18ஆம் நாளை விடுமுறை நாளாக அரசு அறிவித்தது. இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கிடையே 1987ஆம் ஆண்டு பிப்ரவரி 3 முதல் 8 வரை சென்னையில் கிரிக்கெட் போட்டி நடந்தது. 3ஆம் நாளை விடுமுறை நாளாக அரசு அறிவித்தது. அரசாங்கம் அளிக்கும் விடுமுறை ஒரு நாள் என்றாலும் அவர்களாக எடுத்துக்கொள்ளும் விடுமுறை மேலும் பல. 1987ஆம் ஆண்டில் இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கிடையே பிப்பிரவரி 3 முதல் 8 வரை நிகழ்ந்த மேற்கண்ட கிரிக்கெட் போட்டியின்போது 120 சிறப்புப் பேருந்துகளை விளையாடும் இடமான சேப்பாக்கம் வரை செல்ல அரசு ஏற்பாடு செய்தது.

### தொலைக்காட்சி, வானொலி

மாநில அரசு ஒரு பக்கம் இருக்க, கிரிக்கெட் விளையாட்டைக் கச்சை கட்டி வளர்க்கும் பொறுப்பைத் தொலைக்காட்சியும், வானொலியும் போட்டிப் போட்டுக் கொண்டு செய்கின்றன. இந்தியாவிற்கு வெளியே அயல் நாடுகளில் நிகழும் கிரிக்கெட் போட்டி ஒன்றை இந்தியா, தொலைக் காட்சி வழி ஒலிபரப்ப அரசுக்கு 20 கோடி ரூபாய்க்குமேல் செலவாகிறது. வானொலியில் ஒரு நொடி நேரம் ஒலிபரப்ப ஆகும் செலவு ரூ.5 ஆகும். ஒரு மணிக்கு 5 x 60 x 60 = 18,000 ரூபாய் செலவாகிறது. தொலைக்காட்சி ஞாயிறு காலை 11 மணி முதல் `தட் இஸ் கிரிக்கெட்' (That is Cricket) எனும் பெயரில் வாரம்தோறும் கிரிக்கெட்டைப் பற்றிய வரலாற்றை விரித்துரைத்தது.

இந்தியாவில் கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் காலம் பெரும்பாலும் திசம்பர் மாதம் ஆகும். திசம்பர் மாதத்தில் கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் முதற்பருவ இறுதித் தேர்வு நடக்கும் காலமாகும். பள்ளி, இன்னபிற கல்வி நிறுவனங்களுக்கு அரையாண்டுத் தேர்வுகள் நடக்கும் காலம் ஆகும். தேர்வு நடந்துகொண்டிருக்கும் அதே சமயத்தில் அல்லது தேர்வு தொடங்குவதற்குச் சில நாள் முன்பு இந்திய அரசின்தொலைக்காட்சியும் வானொலியும் காலை முதல் இரவு வரை, இன்னும் சொல்லப் போனால் நள்ளிரவிலும் கூடக் கிரிக்கெட் விளையாட்டை ஒளி/ஒலிபரப்புகின்றன. போதிய பக்குவம் பெறாத இந்திய இளைஞர்கள் தம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்வைப் பற்றிக் கவலையுறாமல் தொலைக்காட்சிப் பெட்டி முன் உட்கார்ந்து `அவன் வென்றானா' , `இவன் வென்றானா' என்று பார்ப்பது அன்றாடக் காட்சிகள். உள்ளூர் நிகழ்ச்சிகள் போதா என்று உலகத்தில் எங்கோ மூலையில் நடக்கும் கிரிக்கெட் விளையாட்டையும் தொலைக்காட்சிகள் நேர்முகமாக அஞ்சல் செய்கின்றன. அண்மையில் இது போன்ற தொடர் ஒளி, ஒலிபரப்புகள் நிகழ்ந்தன. சனவரி 9 முதல் பிப்பிரவரி 9ஆம் நாள் வரை 1986 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் நடந்த விளையாட்டை நம் தொலைக்காட்சி நேர்முக அஞ்சல் செய்தது. சில சமயம் நேர்முக அஞ்சல், இரவு தொடங்கி அதிகாலை வரை நிகழும். அத்தகு சமயங்களில் தொலைக்காட்சி வர்ணனைகளை இரவில் கண் விழித்துப் பார்த்து விட்டு மாணாக்கர்கள் வகுப்பில் தூங்குவது எங்கும் காணப்படும் காட்சியாகும்.

கோடிக்கணக்கான வீடுகளுக்கு மின்னிணைப்பு இல்லை; இந்தியாவில் பல மாநிலங்களில் ஆண்டிற்கு ஆறு மாதங்கட்கு மேல் மின்வெட்டு; வேளாண்மை, தொழிற்சாலைகள் மின்சாரம் இன்மையால் தொடர்ந்து பாதிக்கப் பெற்று வருகின்றன. இந்நிலையில், கிரிக்கெட் பேரரங்கம் முழுவதும் மின் விளக்குகளால் ஒளிபாய்ச்சப் பெற்று, இரவு முழுவதும் விளையாட்டு ... விளையாட்டு. இரவு விளையாடு வோர் பகலில் ஐந்துநட்சத்திர விடுதியில்-ஐந்தடுக்கு மெத்தையில் கவிழ்ந்துபடுத்துத் தூங்கி விடுவர். ஆனால் கண்விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் இரசிகர்கள் – பகலில் அலுவலகத்தில் தூங்குவர்; மாணவர்கள் வகுப்பில் தூங்குவர் அல்லது விடுப்பு எடுத்து வீட்டில் உறங்குவர். சம்பளத்தோடு கூடிய தூக்கம்! வேலைக்குப் போனால்தான் சம்பளம் – சாப்பாடு என்றிருக்கும் அன்றாடங்கள் ...? நகரப் பணக்கார மாணவர்களும், அலுவலர்களும் வானொலி வழிஅவ்வப்போது செய்தியை அறிந்து கொண்டே இருக்கப் பை வானொலியை வகுப்பிற்கே/ அலுவலகத்திற்கே கொணர்ந்து கேட்டுக் கொண்டிருப்பர். பேராசிரியர்கள் சிலரும் இதற்கு விதிவிலக்கல்லர். வானொலிப் பெட்டி நேர்முக அஞ்சலில் கிரிக்கெட்காரர்கள் வீர வரலாற்றைச் சிற்றூர்தோறும், இல்லந்தோறும் பரப்பும் பங்கைத் தொடர்ந்து செய்து வருகிறது.

### கிரிக்கெட்காரரைக் கண்டபடி புகழ்வது

1. அண்மையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதி ஸ்ரீகாந்திற்கு இலவசமாக மூன்று இலட்சம் மதிப்புள்ள வீட்டை வழங்கினார்.

2 1983ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி இந்தியாவிற்கு விளையாட வந்தது. இந்திய அணியின் சார்பாகப் பதினான்கு பெயர்கள் அறிவிக்கப்பட்டன. அவர்களில் இடம்பெறாத கிரிக்கெட்காரர் சந்தீப்படேல் என்பவரை நாகபுரியில் பங்குகொள் வதற்காகப் பம்பாயில் இருந்து நாகபுரிக்கு ஒரு தனி விமானத்தையே அனுப்பி அவரை அழைத்து வந்தது.

3. பத்மபூசன், பத்மஸ்ரீ முதலான விருதுகளைக் கிரிக்கெட்காரர்களுக்கு அரசு வாரி வழங்கி வருகிறது.

4. கவாஸ்கர் என்பவருக்குச் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1986 டிசம்பர் முதல் நாள் அன்று டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

5. 1980 சனவரியில் தமிழ்நாட்டு அரசின் கருவூலத்தில் இருந்து/மக்கள் அளிக்கும் வரிப் பணத்தில் இருந்து ரூபாய் ஐயாயிரத்தைக் கபில்தேவுக்கு வள்ளல் எம்.ஜி. ஆர். வழங்கினார்.

6. 1986இல் செப்டம்பர் 18 முதல் 22 வரை சென்னையில் நடந்த கிரிக்கெட் போட்டியில் ஆளுநர் எஸ்.எல்.குரானா நினைவுப் பரிசை வழங்கினார்.

7. 1986 அக்டோபர் 18 பம்பாயில், இந்திய கிரிக்கெட் நிருவாகச் சங்கத்தின் தலைவர் திரு. இராமன் 32 வயிரங்கள் பதிக்கப்பட்ட வெள்ளித்தட்டைக் கிரிக்கெட்காரருக்கு நினைவுப் பரிசாக வழங்கினார்.

8. இவற்றோடு கூட அரசுகள் இன்னும் சலுகைகள் சிலவற்றைக் கிரிக்கெட்காரர்களுக்குச் செய்கின்றன. மருத்துவம், பொறியியல் முதலான தொழிற்கல்வி பெற ஆயிரக்கணக்கான இளைஞர்கள், தம் மதிப்பெண் சான்றிதழ்களைக் காட்டி இடம் பெறத் துடிக்கின்றனர்; அலைகின்றனர். கிடைப்பதும் இல்லை; ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசுகள் கொடுப்பதும் இல்லை. மட்டையால் நம் பொருளாதாரத்தை உறிஞ்சி வரும் கிரிக்கெட் காரர்களுக்காக மூன்று இடங்களை ஆண்டுதோறும் ஒதுக்குகின்றன. 1986ஆம் ஆண்டு எல். சுப்பிரமணியம் என்ற கிரிக்கெட்காரருக்கு அவர் கிரிக்கெட்காரர் என்பதற்காகவே மதிப்பெண் பெறாத் தகுதியைப் புறக்கணித்துவிட்டுத் தமிழ்நாடு அரசு இடம் அளித்தது. இவ்வநீதியை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தோடுக்கப்பட்டது. 1986 திசம்பர் 10 இல் கிரிக்கெட்காரர் சுப்பிரமணியத்திற்கு அளிக்கப்பட்ட இடம் முறையற்றது என அன்றைய நீதிபதி திரு. மோகன் அவர்களால் ரத்து செய்யப்பட்டது.

### திட்டமிட்ட திசை திருப்புதல்

இந்நாட்டின் மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தை ஏழைப் பிள்ளைகள் படிப்பு நாசமாகும் வண்ணம், அரசு கிரிக்கெட் போன்ற விளையாட்டிற்குத் தலைமை கொடுப்பது அணுகி ஆராயத் தக்கது. காலனி ஆட்சிக்காரர்கள் தாங்கள் ஆட்சி செய்யச் செல்லும் நாடுகளில் வாழும் மக்களுக்குத் தீய பழக்கங்கள் அனைத்தையும் மெல்ல மெல்ல அறிமுகப்படுத்தி அவர்களை அடிமைகளாக மாற்றிவிடுதல் வழக்கம். அயல் நாட்டு மது வகைகளை நம் மக்கள் குடிக்குமாறு செய்தனர். இதற்குச் சரியான சான்று, புதுச்சேரி அரிக்கமேட்டில் கிடைத்த ரோமானியர்களின் மதுச் சாடிகள், ஐரோப்பியர்கள் வருகைக்குப் பிறகு ஐரோப்பிய மது வகைகளுக்கு இந்திய மக்கள் எளிதாகப் பழக்கப்படுத்தப்பட்டனர்; புகையிலைக்குப் பழக்கப்படுத்தப்பட்டனர். சிகரெட்டுக்குப் பழக்கப்படுத்தப்பட்டனர்; திரைப்படம்

பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப்பட்டனர். தனிப் பரத்தை விடுதிகள் நடத்துவதற்குப் பழக்கப்படுத்தப்பட்டனர். போதை மருந்து தின்னப் பழக்கப்படுத்தப்பட்டனர். இப்பட்டியலில் கிரிக்கெட் விளையாட்டும் ஒன்றாக இடம் பெறுகிறது. பசிக்காக அழும் குழந்தைக்குத் தாய்ப்பாலும் தர முடியாத/ வேண்டிய பண்டங்களை வாங்கித்தர முடியாத ஏழைத்தாய் வேறுவேறு சால்ஜாப்புகளையும், விளையாட்டுகளையும் காட்டிக் குழந்தையைத் திசைதிருப்பி விடுவாள். பசியைக் குழந்தை அப்போதைக்கு மறந்துவிடும். பசியால் வாடும் ஏழைகளை, வேலையின்மையால் வாடும் இளைஞர்களை அரசு, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளால் திசை திருப்புகின்றது. எளிய மக்களை வாட்டிக் கொண்டிருக்கும் ஏழைமை, வேலையில்லாத் திண்டாட்டம், அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடப் போராட்டம், கொள்ளை அடிக்கும் அரசியல் வாதிகளை, அதிகாரிகளை அடையாளம் கண்டு எதிர்க்கும் உரிமை ஆகியவற்றில் இளைஞர்கள் அக்கறை கொள்ளாமல் கிரிக்கெட்டை நோக்கித் திசை திருப்புதல் மூலம் அரசுக்கும், ஆளும் அதிகார வர்க்கத்திற்கும் நிலையான நன்மைகள் கிட்டுகின்றன. எனவேதான், இளைஞர்கள் தாம் தேர்வில் வெற்றி பெற்றோமா என்பதைவிடக் கவாஸ்கர், கபில்தேவ் வெற்றி பெற்றனரா என்பதிலேயே அக்கறை காட்டச் செய்யப்படுகின்றனர்.

கிரிக்கெட் போன்ற விளையாட்டை இந்தியாவில் மட்டுமா நடத்துகிறார்கள், அயல் நாடுகளில் நடத்தவில்லையா என்று வினவலாம். எங்கெங்கு விளையாட்டு உணர்வுக்கு மாறாக வேடிக்கை பார்க்கும் இரசிக உணர்வு வளர்க்கப்படுகிறதோ, அங்கெல்லாம் திசைதிருப்புதல் திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்பதுதான் பொருள். எனினும், அடிப்படைத் தேவைகளை நிரப்பி ஆடம்பர வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐரோப்பியர்கள் சில நாட்கள் விடுமுறை விட்டு விளையாட்டை வேடிக்கை பார்க்கக் கூடச் செய்யலாம். ஆனால் 40 கோடி மக்களுக்கு மேல் உணவு இன்றி, உடையின்றி, உறைவிடமின்றித் தவிக்கும் நாட்டில் 50 கோடிக்கு மேற்பட்ட மக்கள் எழுதப்படிக்கத் தெரியாமல் அல்லலுறும் நாட்டில் திசை திருப்புதல்கள் வேண்டுமென்றே திட்டமிட்டே செய்யப் பெறுகின்றன.

**ஏடுகள்**

நாட்டைச் சுட்டுக் கொண்டிருக்கும் எத்தனையோ செய்திகளை விட்டுவிட்டு நடிகைகளின் அந்தரங்க வாழ்க்கைகளைச் சந்தைக்குக் கொண்டு வரும் இந்திய ஏடுகள் திரைப்பட இரசனைக்கு அடுத்தபடியாக விளையாட்டு இரசனையை வெகுவேகமாக வளர்த்து வருகின்றன. இதில் அனைத்துலக/அனைத்தறிவு மொழியாகக் கருதப் பெறும் ஆங்கில மொழி இதழ்கள் தனி இடம் பெறுகின்றன. இந்து, இன்டியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்கள் நாள்தோறும் சில பக்கங்களையே விளையாட்டிற்காக ஒதுக்குகின்றன. அதனுடன் வாரம் தோறும் துணை இதழ்களை *(Supplement)* வெளியிடுகின்றன. இவை போதா என்று இந்து நாளிதழ் ஸ்போர்ஸ்டார் என்ற தனி வார ஏட்டையே நடத்துகிறது. இவை மட்டுமல்லாமல் *Sports World, Sports Week, World of Cricket, Asian Cricketer* முதலான ஏடுகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அண்மைக் காலத்தில் தினமணி, தினமலர் ஆகிய இதழ்கள் தமிழிலும் இந்த நாசத்தைச் செய்வதற்காகச் சில பக்கங்களையே ஒதுக்குகின்றன. இவ்வேடுகளில் இந்நாட்டில் பிறந்த அறிவியல் அறிஞர்களுடைய செய்திகள் வாரா, கல்வி மேதைகளுடைய செய்திகள் வாரா, சிறந்த கலை ஆர்வச் செய்திகள் வாரா. அப்படி வந்தாலும் கூட அவை யார் கண்ணுக்கும் படாத இடத்தில் மிக அந்தரங்கமாக வெளியிடப்பட்டிருக்கும். தொழு நோயாளிகள் தொண்டு செய்யும் அன்னை தெரேசா மரணத்தின் பிடியில் துடித்துக் கொண்டிருந்த செய்தியை எட்டாவது பக்கம் எட்டாவது காலத்து மூலையில் வெளியிட்ட தமிழ் ஏடுகள், கிரிக்கெட்காரனின் வைப்பாட்டிக்கு வயிறு வலிக்கும் செய்தியை முதற் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிடுகின்றன.

கிரிக்கெட்காரர்களின் கட்டுரைகள், நேர் முகங்கள் அவர்தம் உளறல்கள் ஆகியன நாளிதழில் நாள் தவறாமல் வாரம் தவறாமல் இடம் பெறும்; இலக்கியத்திற்கோ, அறிவியலுக்கோ, இன்னபிற அறிவைச் சார்ந்த வாழ்வியல்களுக்கோ தனி வார ஏடு இல்லாத இந்தியத் திருநாட்டில் விளையாட்டுக்கு என்று எத்தனை வார இதழ்கள்? இந்த விளையாட்டு இதழ்களில் கூட விளையாட்டுப் பற்றிய செய்திகள் ஒரு பக்கம் இருக்க, கிரிக்கெட்காரர்களின் காமச் செய்திகள், கல்யாணச் செய்திகள், குடித்துக் கூத்தியாளுடன் ஆடிய ஆட்டங்கள் முதலாயின கட்டம் கட்டி வெளியிடப் பெறுகின்றன. சான்றாக, விவியன் ரிச்சர்டு என்பவர் மேற்கு இந்தியத் தீவான ஆன்டிகுவாவில் நடந்த கிரிக்கெட் போட்டியில் 58 பந்துகளில் சதம் எடுத்துப் புகழ் பெற்றார். அப்போது நம் ஏடுகள் வழங்கிய செய்தி சமுதாய அக்கறை உள்ள எவனுக்கும் அதிர்ச்சி தருவதாகும்.

`விவியன் ரிச்சர்டு தான் விளையாட வருவதற்கு முன்பு ஒரு கோப்பை பீர் அருந்தினார். எனவே, எல்லாப் பந்துக ாயும் கண்டபடி விலாசித் தள்ளினார்'

விளையாட்டுக்காரர்களையும், திரைப்பட நடிகை களையும் இணைத்துக் கதைகள் கட்டித் தம் ஏடுகளில் விற்பனையைப் பெருக்குவது ஒருமுறை. பட்டோடி – ஷர்மிளா, சோபர்ட்ஸ – அஞ்சு, கபில்தேவ் – சரிகா, இம்ரான்கான் – ஜீனத் அமன், மோசின்கான் – ரீனாராய், இரவிசாஸ்திரி அம்ரிதாசிங் ஆகிய காமுகர் பற்றி ஏடுகள் பரப்பிவிட்ட கிசுகிசுக்களில் பட்டோடி – ஷர்மிளா, மோசின்கான் – ரீனாராய் காமம் திருமணத்தில் முடிந்தன. மற்றவை கிசுகிசுக்களோடு – அதாவது களவுப் புணர்ச்சியோடு நின்றுவிட்டன ( கண்ணகியும் அகலிகையும் அருந்ததியும் பிறந்த நாடல்லவா?). இரவிசாஸ்திரி அம்ரிதாசிங் இணைக்குத் திருமணம் முடிந்து குழந்தை பெறும் வரை, ஏடுகள் கவனித்து எழுதின; மக்களிடையே உணர்ச்சியைப் பெருக்கின. தம் சொந்த வாழ்க்கையில் கற்பைப் பற்றி உரக்கக் கத்தும் இந்திய, தமிழ் இனம், திரைப்பட நடிக, நடிகைகள், விளையாட்டுக்காரர்கள் ஆகியோர் கற்பைப் புறக்கணிப்பதையே பாராட்டிப் பத்திரிகைகள் தொடர்ந்து எழுதித் தள்ளுகின்றன. இரவிசாஸ்திரி கிரிக்கெட் நட்சத்திரங்களின் `காதல் மன்னன்' என்று இதழ்களால் புகழப் பெறுகிறார். நியூயார்க்கில் இரவிசாஸ்திரியும் அம்ரிதாசிங்கும் இணைந்து இருந்தது நம் நாட்டு நிருபர்களால் கண்டுபிடிக்கப்பட்டது; உடனுக்குடன் ஏடுகளில் விளம்பரப்படுத்தப்பட்டது. பாகிஸ்தான்காரர் மோசின்கான் தேர்வு செய்யப்படாததற்குக் காரணம் அவர் இந்திய நடிகை ரீனாராயைத் திருமணம் செய்து கொண்டதுதான். திரைப்பட நடிக, நடிகையர்கள் பற்றி ஆபாசங்களைப் பரப்புவதில் ஏடுகள் எவ்வாறு முதன்மை வகிக்கின்றனவோ அதனைப் போலவே விளையாட்டுக்காரர்களின் அந்தரங்கங்களை, ஆபாச வாழ்க்கையை ஏடுகள் முதல் நிலை ஆக்குகின்றன. சிற்சில சமயங்களில் சிறப்பு விளையாட்டு இதழ்களும் வெளியிடப் பெறுகின்றன. இதயம் பேசுகிறது என்ற ஏடு 8.2.87இல் கிரிக்கெட் சிறப்பிதழ் என்றே தனியாக வெளியிட்டது. இன்னும் எத்தனையோ?

### கிரிக்கெட் பற்றி வெளிவரும் புத்தகங்கள்

அறிஞர்கள் அரும்பாடுபட்டு எழுதி வெளியிடும் நூல் 600 அல்லது 1000 வரைதான் பொதுவாக அச்சிடப்பெறும். சமுதாய அக்கறையுள்ள சமுதாயத் தேவையுள்ள எந்த நூலும் தமிழ் வாசகர்களிடயே விற்பனையாக மூன்று ஆண்டுகள் அல்லது ஐந்து ஆண்டுகள் வரை ஆகும். சிலவற்றிற்கு நூற்றாண்டு கூட ஆகும். ஆனால் விளையாட்டுக்காரர்கள் சொந்தமாகவோ அல்லது மற்றவர்கள் எழுதிக் கொடுத்தோ வெளியிடும் புத்தகங்கள் (உளறல்கள்) ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றன. சான்றாக, கவாஸ்கர் எழுதிய சன்னி டேஸ் (Sunny Days) என்ற புத்தகம் ஐம்பதாயிரத்திற்குமேல் விற்பனையாயிற்று. அவருடைய இடோல்ஸ் (Idols) என்ற புத்தகம் இலட்சத்தை எட்டியது. கபில்தேவ் தன்னுடைய சுயசரிதத்தை எழுதியே இலட்சக் கணக்கில் சம்பாதித்து உள்ளார். தற்போது (24.11.1989) தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் வேட்பாளராக நின்ற (தோற்ற) முன்னாள் போலிசு ஐ.ஜி. திரு. இராதாகிருஷ்ணன் கிரிக்கெட் பற்றி நூல் எழுதியுள்ளார். கிரிக்கெட்டைப் பற்றிய பல நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்துள்ளன. இதில் பெருத்த அவலம்! கல்லூரி அல்லது பள்ளிக்குப் படிக்க வந்திருக்கும் மாணாக்கர்கள் பெற்றோரிடம் இருந்து பாடப்புத்தகத்திற்காகப் பெற்று வந்த பணத்தைக் கவாஸ்கர், கபில்தேவ் எழுதிய புத்தகங்களை வாங்குவதற்குச் செலவழிப்பதுதான். படிக்காத பெற்றோருக்கு எந்தப் புத்தகம், யார் எழுதியப் புத்தகம் என்று தெரியவா போகிறது? சரசுவதி பூசை செய்வதிலேயே தமிழ்ப் தாய்மார்களின் பொழுது போய்விடுகிறது!

### விளம்பரம்

தொலைக்காட்சி, வானொலி, ஏடுகள் ஆகியவற்றைக் கவனிப்போர் அண்மைக் காலமாக விளையாட்டுக்காரர்கள் விளம்பரங்களில் இடம் பெறுவதைப் பார்த்திருப்பீர்கள். குறிப்பிட்ட கிரிக்கெட்காரர் பயன்படுத்தும் பற்பசை, சோப்பு, உடை, காலணிகள், பாட்டரிகள், வாகனங்கள் முதலானவற்றைக் கிரிக்கெட்காரர் பயன்படுத்துவதாக விளம்பரம்

ஒரு விளம்பரத்தில் தமிழும் இடம் பெற்று இருக்கிறது. ஒரு நண்பன் தமிழ்ப் பாடம் படித்துக் கொண்டிருக்கிறான். இன்னொரு நண்பன் அவனை விளையாடக் கூப்பிடுகிறான்,

`புத்தகத்தைத் தூர எறி. கிரிக்கெட் நன்றாக விளையாட வேண்டுமென்றால் தமிழ் நன்றாகத் தெரியக் கூடாது'

நெஸ்கபே விற்பனைக்காக இரவிசாஸ்திரி என்பவர் கூறுவதாக (உளறுவதாக) வரும் விளம்பரம் வாக்கியம் கவனத்திற்கு உரியது:

`எனக்குத் தமிழ் நல்லா வராது. ஆனால் காபியைப் பற்றி நல்லா தெரியும்'

### ஏழைக் கிரிக்கெட்காரர்கள் வருமானம்

கிரிக்கெட்காரர்களுக்குக் கிடைக்கும் வருமானம், புகழ் ஆகியன இந்தியாவில் உள்ள பொதுமக்களுக்குக் கிடைக்குமா என்பது முழுக்க முழுக்க ஐயமே. அண்மையில் பாகிஸ்தானில் ஆடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இந்தியக் கிரிக்கெட்காரர்கள் தமக்குக் கொடுத்த பணம் போதாது என்று போராடியது இதழ்களில் வெளிவந்தது.

### அதிகச்சம்பளம் தராவிட்டால் கிரிக்கெட் விளையாட மாட்டோம்'

கிரிக்கெட் வீரர்கள் சம்பளத்தைக் கிரிக்கெட் போர்டு உயர்த்த வேண்டும். அதாவது பாகிஸ்தான் செல்லும் வீரர்களுக்கு 60 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. இதை ஒரு லட்சத்து 2 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க வேண்டும்.

இது தவிர வீரர்களை டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்கள் விளையாடி உள்ள அனுபவத்துக்கு ஏற்பத் தரம் பிரித்து, மூத்த வீரர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். மேலும் வீரர்களுக்கான `அலவன்சு' தொகையையும் அதிகரிக்க வேண்டும்.

வீரர்களின் இந்தக் கோரிக்கைகளின்படி கபில்தேவ் அதிகபட்ச சம்பளம் பெறுவார். அவருக்குச் சுற்றுப்பயணச் சம்பளமாக ஒரு லட்சத்து 2 ஆயிரம் ரூபாயும், மூத்த வீரர் என்ற அடிப்படையில் மேலும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட வேண்டும்.

இது தவிர அவருக்கு அலவன்சாக 2 ஆயிரத்து 760 டாலர் (சுமார் 44 ஆயிரம் ரூபாய்) அளிக்க வேண்டும். (தினத்தந்தி, 8.11.89)

1983ஆம் ஆண்டில் இந்தியக் கிரிக்கெட் அணி உலகக் கோப்பையை வென்றபோது ஒவ்வொரு வருக்கும் ரூபாய் ஐந்து லட்சம் கூடுதல் தொகையாகக் கிடைத்தது. 1960 இல் கிரிக்கெட்காரர் ஒருவருக்கு ரூ.750 கொடுக்கப்பட்டது. இன்று ரூ.17,500 கொடுக்கப்படுகிறது. ஒரு நாள் போட்டி விளையாடினால் ரூ.5,000 கொடுக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் வேறு எந்த வேலையும் செய்யாமல் கிரிக்கெட்காரர் ஒருவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,50,000க்கு மேல் ஈட்ட முடியும். கவாஸ்கருக்கு திர்லான் என்ற கம்பெனி ஓர் ஆண்டிற்கு ரூபாய் ஒரு லட்சத்துப் பதினையாயிரம் வழங்குகிறது. போட்டியில் வெற்றி பெறாமல் தோற்றாலும் பணம் கிடைக்கும். தோற்றதற்கு ரூ. 25,000. வெற்றிபெற்ற கிரிக்கெட்காரர் விளம்பரத்தில் தலையைக் காட்டினாரேயானால் அவருக்கு அளிக்கப்படும் தொகை ரூ.15,000. ஏதேனும் ஏடுகளில் கிரிக்கெட்காரர்கள் 800 வார்த்தைகள் உளறியிருந் தால் அதற்கு அவருக்கு அளிக்கப்படும் தொகை ரூ.1000. (நமக்கு அவர்கள் வெளியிட்டால் அதுவே பெரிய புண்ணியம்). 1983ஆம் ஆண்டில் உலகப் கோப்பையை வென்ற இந்திய அணித் தலைவர் கபில்தேவ், அவ்வாண்டில் மட்டும் 50 இலட்சம் சம்பாதித்தார். வெற்றி பெறுகிறபோது மேலும் பல பரிசுகளும் ஒருவருக்குக் கிடைக்கின்றன. 1983 டிசம்பர் 26 முதல் 29 வரை சென்னை சேப்பாக்கத்தில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக நடந்த போட்டியில் கவாஸ்கர் 236 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். உலகக் கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதம் அடித்தவர் என்ற பெயரையும் பெற்றார். அதற்காக அவர் பெற்ற பரிசுகள்:11

| | | |
|---|---|---|
| சிறந்தளட்டக்காரர் விருது | : | ரூ.15,000 |
| பின்னி கம்பெனி அளித்த பரிசு | : | ரூ.10,000 |
| ஹெர்பர்ட் சன்சு லிமிடெட் பரிசு | : | ரூ.5,000 |
| கிரிக்கெட் சங்கப் பரிசு | : | ரூ.10,001 |

மாருதி கார் : ரூ. ஒரு லட்சத்திற்கு மேல்
மொத்தம் : ஒன்றரை லட்சம் (கிட்டத்தட்ட)

1985 ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டியில் இரவிசாஸ்திரி சிறந்தளட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்காக அவருக்கு `ஆடி 100' என்ற கார் பரிசாக வழங்கப் பெற்றது. அந்தக் காரின் மதிப்பு ரூ.40,000 டாலர்கள். அதாவது ஆறு லட்சம் (40,000 x 15 = 6,00,000) அந்தக் காரை ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவிற்குக் கொண்டுவர நம் பா.....ரத அரசு தனிக் கப்பல் ஒன்றையே அதற்காக ஏற்பாடு செய்தது. இலவசப் பயணம் செய்து வந்த காருக்கு எந்த வரியும் இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டது;(ஏழையின் வாகனம் அல்லவா?).தலைமை வழிபாடு

விளையாட்டைப்பார்த்து விளையாட்டு ஆர்வம் வரலாம். அதைப் பற்றிய கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் விளையாட்டைப் பார்த்துச் சோம் பேறித்தனம் வளர்க்கப்படுவது கொடுமையிலும் கொடுமை. அதனினும் கொடுமை, தலைமை வழிபாடு இதன்மூலம் வளர்க்கப் பெறுகிறது. கண்ணை மூடிக் கொண்டு கிரிக்கெட்காரர்களை வணங்கி வழிபடும் போக்கு கற்கும் இளைஞர்களிடையே பரவியுள்ளது, அவர் என்ன பற்பசையைப் பயன்படுத்துகிறார், அவர் என்ன பிரஸ் பயன்படுத்துகிறார் என்று பார்த்துப் பயன்படுத்தும் இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில்

உள்ளனர். வெங்சர்க்கார் என்ற கிரிக்கெட்காரர் தாம் விளையாடிய மட்டையை ஏலத்திற்குப் போட்டு அதிலிருந்து வந்த தொகையைக் கொண்டு ஓர் அறக்கட்டளையையே நிறுவிவிட்டார். கண்மூடி வழிபாடு திட்டமிட்டு வளர்க்கப்படுகிறது. இந்தியாவில் சிறந்தவர்கள் என்ற கணக்கு எடுப்பு நிகழும் போது, அக்கணக்கெடுப்பில் அறிவியல் அறிஞர்கள் யாரும் இடம் பெற்றது இல்லை. மாறாகக், கவாஸ்கர் முதலாவதாகவும், கபில்தேவ் இரண்டாவதாகவும், இரவிசாஸ்திரி எட்டாவதாகவும் தெரிவு செய்யப் பெற்றனர்; பெறுகின்றனர். தலைமை வழிபாடு வளர்க்கப் பெற்றதால் விளையும் பெரும் தீங்கு, மனித குலத்தில் முளைத்துக் கொண்டிருக்கும் தன் நம்பிக்கைச் சிறகுகளை வெட்டிவிடுவதாகும். சில சமயம் தனக்கு விருப்பமான ஒருவர் வெற்றி பெறாவிட்டால் எதையோ இழந்தது போன்று துடிக்கும் இளைஞர்கள் ஏராளம். கிரிக்கெட் விளையாட்டை விரும்பும் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாட்டு நிகழும்போது சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். காலப்போக்கில் கிரிக்கெட் போட்டி நிகழாத நாட்களில் எதையோ இழந்தது போன்ற நிலைக்கு ஆளாகிறார்கள். கிரிக்கெட் விளை யாட்டைப் பார்ப்பதற்கு விடுமுறை எடுக்கத் தயங்குவதும் இல்லை. கபில்தேவிற்குத் திருமணம் நிகழ்ந்தபோது கல்லூரித் தமிழ்க் கண்ணகியர் பலர், அவலமே உருவாக ஆகிப்போயினர். கபில்தேவிற்குத திருமணம் நிகழ்ந்தபோது கல்லூரித் தமிழக் கண்ணகியர் பலர், அவலமே உருவமாக ஆகிப் போயினர். கபில்தேவிற்குச் சென்னை (தமிழ்நாட்டின் தலைநகர்!) கல்லூரி மாணவி ஒருத்தி தன் ரத்தத்தால் கண்ணீர்க் கடிதம் எழுதியிருந்தார். 1987இல் கவாஸ்கர் —ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். "டெஸ்ட் பந்தயங்களில் இருந்து விலகுவேன்" —என்றார். ஐயோ! ஐயோ! தமிழர்களுக்கு இச் சோகச் செய்தி கேட்டுப் பொறுக்கவில்லை. சென்னை பெரம்பூரைச் சார்ந்த 25 கல்லூரி மாணவர்கள் கவாஸ்கர் தொடர்ந்து விளையாட வேண்டும் எனத்தம் ரத்தத்தால் ஒவ்வொருவரும் விண்ணப்பித்துக் கொண்டனர். கவாசுகர் மறுத்திருந்தால், இவ்வீரத் தமிழர்கள் தற்கொலை செய்திருக்கக் கூடும்! நல்ல வேளை: மீண்டும் கவாசுகர் களத்தில் குதிக்க முடிவு செய்தார். இம்முடிவை அவர் மட்டும் செய்யாது போயிருந்தால் நமக்குச் சோறு கிடைக்காமல் போயிருக்கும். பெரம்பூர்த்தமிழர்கள். நம்மைத் தடுத்தாட்கொண்டார்கள்.

எந்த அளவிற்குக் கிரிக்கெட் விளையாட்டு. போதையாகி ஒருவனை அல்ல ஓர் இனத்தையே கெடுக்கிறது என்பதற்குச் சரியான சாட்சி 1985 ஆம் ஆண்டு ஈழத்தில் இனக் கலவரம் ஏற்பட்டபோது நிகழ்ந்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பெற்றனர். இலட்சக்கணக்கானோர் ஈழத்தில் உள்ள தமிழர்கள் தமிழகக் கடற்கரையில் உயிரோடும், உயிரற்றும் ஒதுங்கினர். ஈழம் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் 1985 ஆகஸ்ட் 21 முதல் செப்டம்பர் 22 வரை கிரிக்கெட் ஆடுவதற்காக ஒரு குழு இந்தியாவில் இருந்து இலங்கை சென்றது. இதனைவிடத் தன் இனத் துன்பத்தை அறிய முடியாத அளவிற்கு மக்களை மறக்க அடிக்கச் செய்வதில் கிரிக்கெட் போன்ற விளையாட்டு முன்னிடம் வகிக்கிறது என்பதற்கு வேறு சான்று இருக்க முடியாது.



# அயல் மண்ணில் தமிழ் மணம்

## டாக்டர் தி. முருகரத்தனம்

### அயல் மண்ணில் தமிழர் சிக்கல்

தமிழர் உலகின் பல நாடுகளிலும் பரவி உள்ளனர் என்பது ஒரு வரலாற்றுண்மை என்பது மட்டுமல்ல; அது தமிழர்களுக்குப் பெருமை தருவதும் ஆகும். அவர்கள் பரவிய நாடுகள் எல்லாம் அவர்கள் உழைப்பால் உயர்ந்தே வந்துள்ளன. தமிழருடைய நேர்மை, சுறுசுறுப்பு, கடின உழைப்பு, அறிவுக்கூர்மை ஆகியவை பல நாட்டாராலும் பாராட்டப்பட்டு வந்துள்ளன. இது தமிழருக்குப் பெருமிதம்தான்.

இலங்கை தவிரப் பிற நாடுகளுக்கெல்லாம் தமிழர் `பிழைப்பை' நாடிச் சென்றவர்கள்தாம். அவர்களுள் எளிய மக்கள் பெரும்பாலோர்; மேல்உள மக்களும் சிலர். அவர்கள் உழைத்து முன்னேறியுள்ளனர் என்பதும் உண்மையே. பிழைப்பை நாடிச் சென்ற நாடுகளிலே தமிழர் வெற்றியே கண்டுள்ளனர் எனலாம். அவர்கள் யாரும் இப்போது தாயகம் திரும்பி வர விரும்புவதில்லை அல்லவா?



ஆனால் வாழ்க்கையும் வரலாறும் அதனோடு நின்றுவிடுவதில்லை. இனப் பூசலும் பொருளாதார அரசியல் சமயச் சிக்கல்களும் தமிழர் குடியேற்றத்தால் பல நாடுகளில் தோன்றியுள்ளன. தமிழர்களிடையேயும் சமூகச் சிக்கல்கள் எழுந்துள்ளன. இன்றைய உலகச் சூழலில் இவை எதிர்பார்க்கக் கூடியவை என்றாலும் தவிர்க்கக்கூடியவைதாம்.

அயல் நாடுகளில் வாழ்வோர்க்கெல்லாம் முதலாவதாகத் தோன்றும் சிக்கல் `அவர்கள் அந்நியர்' என்பதுதான். இந்த `அயன்மை' அரசியல் பொருளாதார சமூக சமய நோக்கங்களில் பெரும் பூசல் தோன்றக் காரணமாகிவிடுகிறது. குடியேற்ற நாட்டு மக்களினத்தின் வலிமை (தொகை, செல்வாக்கு, தாயகத்தின் ஆதரவு முதலானவை) உலக நாடுகளின் பார்வை ஆகியவை இந்தப் பூசலைக் கட்டுப்படுத்துகின்றன.

### `நாம் தமிழர்' உணர்வு

அந்நிய மக்களுக்கு எப்படியாயினும் `உரிமைகள்', `உதவிகள்', `கடமைகள்' என ஏதாவது அளவில் சில கிடைக்கின்றன அல்லது இருக்கின்றன; அல்லது அவர்கள் பெறுகின்றனர். இவற்றைப் பெறவும் காத்துக் கொள்ளவும் அந்த அந்நிய மக்களுக்கு — தமிழர்களுக்குத் தமிழர் என்ற பெயர் உணர்வு, பண்பு, ஒற்றுமை, பேர், குறி ஆகியவை தேவைப்படுகின்றன. இதனைப் பொதுவாக *Identity* (தமிழர்க்கு உரிய பொருள்

அல்லது வேண்டிய பொருள்) என்று கூறலாம். தமிழர் குடியேறிய பெரும்பாலான நாடுகளில் நிலை இதுவாகத் தெரிகிறது.

நாடுகள் பல கலப்பின (*Multi-racial*) நாடுகளாகவே அமைந்திருக்கின்றன. அண்மை நூற்றாண்டுகளில் தோன்றிய புதிய பொருளாதார அரசியற் சூழல்களால் இந்த நிலை கூடியுள்ளது. அரசியல் சமூக சூழல்களில் `வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற நிலையும் காணப்படுகிறது. ஒரு நாட்டில்அமைந்துள்ள பெரும்பான்மை சிறுபான்மை இனங்களை ஒட்டியே அந்தநாட்டின் `வண்ணம்' அமைகிறது. அரசியலில் பங்கு, அரசியல்ஆதரவு (உதவி) ஆகியவை இதனை ஒட்டியே அமைகின்றன. அவற்றைப் பெற உரிப்பொருள் (*Identity*) போற்றப்பட வேண்டியுள்ளது. பல நாடுகளில் வாழும் தமிழர்க்குள்ள தேவையும் இதுவாகத் தெரிகிறது. தாய்த் தமிழகம் நீங்கிய அயல்நாட்டுத் தமிழர்கள் எங்கிருந்தாலும் நாம் தமிழர் என்ற இந்த வேட்கை மேலோங்கியிருக்கிறது.

### தமிழர் உரிப்பொருள்களின் கூறுகள்

இந்தத் தமிழ் உரிப்பொருள் (*Tamil identity*) வேட்கை எப்படிச் செயல்படுகிறது என்பதும் எண்ணிப் பார்க்க வேண்டியதே. தமிழர் உரிப்பொருளைக் கண்டு வெளிப்படுத்தி அறிமுகம் செய்து போற்றுதலும், அவற்றின் அடிப்படையில் உலகத் தமிழர் ஒன்றுபடுதலும் ஒன்றுபட்டுத் தமக்குரிய உரிமையைப் பெற்றுக் கடமையாற்றுதலும் என அந்த வேட்கை செயல்படுகிறது என்று கூறலாம். இவற்றுக்கெல்லாம் அடிப்படையான தமிழர் உரிப்பொருள்களை இன்னவை எனக் காணுதல் வேண்டும்.

தமிழர்க்கே உரிய பொருள்கள் அவர்களுடைய இனப் பண்புகளால் அமைந்தவையாகத்தான் இருக்க வேண்டும். அவை:

அரசியல்
சமூகம்
சமயம்
கலைகள்
மொழியும் இலக்கியமும்

என்ற கூறுகளில் அமைந்திருக்கும். ஓர் இனம் அல்லது ஓர் இனமக்கள் என்றால் இவைகள்தாம் கூறுகளாக இருக்கும். இந்தக் கூறுகளில் தமிழர்க்கே சிறப்பாக உரியவை – பிறருக்கு இல்லாதவை – தமிழ் உரிப்பொருள் எனக் கொள்ளத்தக்கவையாகும்.

### தமிழர் அரசியல்

தமிழர்க்கே உரிய அரசியற் கோட்பாடுகள் பற்றித் தமிழர்க்கே தெளிவில்லை. தமிழரிடையே தோன்றிய அரசியற் சிந்தனையாளர் திருவள்ளுவர்தான். அவர் அரசியலை அறத்தின் அடிப்படையில் (*on ethical basis*) அமைக்க விரும்பினார். ஆனால் அவர் பேசியது கோனாட்சி பற்றியதுதான். பழந்தமிழர் இடைக்காலத் தமிழர் ஆகியோர் ஆட்சிமுறையும் கோனாட்சிதான். தலைநகர ஆட்சி இவ்வாறிருந்தாலும் நாட்டுப்புற அளவில் குடிமக்கள் ஆட்சி (பஞ்சாயத்து முறை) இருந்திருக்கின்றது. ஆனால் இன்றைய உலகத் தமிழர் உலகப் பொது அரசியற் போக்குடன் ஒன்றிவிடுவதாகத் தெரிகிறது. அது குடியாட்சி நோக்கியது.

### தமிழரின் சமூகம்

தமிழரின் சமூக இயல்புகளைப் பிரித்தறியலாம். அவர்கள் சமூகம், குடும்பம், குடி, சாதி, இனம் என நான்கு படிகளாக அமைத்திருப்பதாகக் கொள்ளலாம். குடியைக் கோத்திரம் போன்ற ஒன்று எனக் கொள்ளவேண்டும்.

தமிழர் குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகள் அடங்கியது. ஒரு கணவன், ஒரு மனைவி, மறுமணம், மணமுறிவு, சொத்துப்பிரிவு ஆகியவை குடும்பத்தின் இயல்புகளைப் பாதிக்கின்றன. இவை அமைந்துள்ள பாங்கே தமிழரின் குடும்பப் பண்பு (இல்லறப் பண்பு) ஆகின்றது. ஒருமை மணம் (ஒரு கணவன், ஒரு மனைவி), இருவரிடமும் கற்புடைமை, கணவன், மனைவி பிள்ளைகள் ஆகிய முப்பாலும் அன்புடைமை, விருந்தோம்பல் இவை அரிய இனிய தமிழ்ப் பண்புகளாகப் போற்றப்பட வேண்டியவை.

மணவிலக்கு, மறுமணம் ஆகியவை தமிழரிடையில் இல்லாமல் இல்லை. தமிழகத்து மேற்சாதியாரிடம் இவை இல்லை. ஆனால் உலகச் சூழலில் இவை குறித்துத் தமிழர் ஆய்ந்து தக்கது மேற்கொள்ளவேண்டும்.

குடி, சாதி ஆகியவை தமிழகத்திலேயே விலங்குகளாகக் – கட்டுக்களாகக் – கருதப்படுகின்றன. இவை தமிழ்ச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி வந்துள்ளன என்பது மட்டுமல்லாமல் தமிழரின் நலத்துக்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டை எனக் கண்டிக்கப்படுகின்றன. அயலகத் தமிழர் இவற்றை விரைந்து கைவிட்டு வருகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

தமிழர் இனத்தையும் காக்க வேண்டுமா என்பது பெரிய வினா! தமிழர் உரிப்பொருள் என்பதே இதன் அடிப்படையில்தான் பேசப்படுகிறது. தமிழகத்துத் தமிழர்க்கு இல்லாத இச்சிக்கல், அயலகத் தமிழர்க்குப் பெருஞ்சிக்கலாக உள்ளது. அயலகத் தமிழர் அவரவர் நாடுகளில் உள்ள பிற இனத்தாருடன் கலந்து ஒன்ற வேண்டுமா? தமிழ்ச் சமூகத்தின் நல்லியல்புகளை உடன் கைக்கொண்டு பிற இனத்தாருடன் கலக்கலாமா என்பது பற்றி அவர்கள் சிந்தித்து முடிவு மேற்கொள்ளலாம்.

### தமிழர் சிந்தனை

சமூக இயல்புகளில், சமூக அமைப்புகள் போக, மற்றவை சமூகச் சிந்தனைகள் எனப்படும். ஒரு சமூகத்தின் எண்ணங்கள் எல்லாம் இவற்றுள் அடங்கும். இவை வாழ்வின் குறிக்கோள்கள் (*Aims of life*), சமூக எண்ணச் செல்வங்கள் (*Social Values*), பழக்கவழக்கங்கள் (*Social customs*) நம்பிக்கைகள் (*Social Beliefs*) போன்றவை ஆகும். இவை எத்தனையோ இருக்கலாம். சமூக அமைப்புக்களைப் போன்று சமூகச் சிந்தனைகளும் எளிதில் மாறுவதில்லை. காலத்திற்கு ஏற்ப மாறாதபோது அவை பொருந்தாதவை ஆகி முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் அமைகின்றன. இந்த நிலையையே தமிழர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

தமிழர் சிந்தனைகளில் சிறந்தவற்றைத் தேற வேண்டும். காதல் வீரம் ஈகை ஆகியவை பண்டைத் தமிழரின் வாழ்வியற் குறிக்கோள்களாக விளங்கின. பின்பு சமய வாழ்வும் முத்தி பெறுதலும் வாழ்வியற் குறிக்கோளாகின. இன்று வாழ்வியற் குறிக்கோள் களாக எவற்றைக் கொள்வது? சமூக நன்மை, சமூக மகிழ்ச்சி ஆகியவற்றைக் கொள்ளலாமா? உலகின் போக்கு இப்போது எப்படி உள்ளது? இவற்றைக் கருத்தில் கொண்டு குறிக்கோள்களைத் தேர்வு செய்யவேண்டும்.

கற்புடைமை, நன்மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், வாய்மை, இன்னா செய்யாமை, செய்ந்நன்றி அறிதல், பொறாமை கொள்ளாமை முதலானவை தமிழர் சமூக எண்ணச் செல்வங் களாகும். எளிமை, தூய்மை, கல்வியுடைமை, எளிய பொழுதுபோக்குகள் முதலானவை தமிழர் சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகும். கள்ளுண்ணல், சூதாடுதல், பரத்தமை ஆகிய ஒழுக்கங்கள் சமூகத் தீமைகள் என அவ்வப்போது கடியப்பட்டுள்ளன. ஆனால் இவை இல்லாமல் இல்லை. பிற்காலத்தில் பெண்களைத் தாழ்த்துதல் வழக்கமாகிவிட்டது.

இவற்றில் எல்லாம் தமிழ் உரிப்பொருள் முத்திரை உண்டு. இந்தக் காலத்துக்கு அயல் மண்ணுக்குப் பொருந்தியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பது சொல்லவேண்டியதில்லை. தமிழ கத்தில் வழங்கும் எல்லாமே ஏற்பன எனக் கொள்ள வேண்டியதில்லை என்பதே எச்சரிக்கை.

### தமிழர் சமயம்

தமிழர் சமயம் குறித்துத் தாயகத் தமிழரிடையில் கூடக் குழப்பமும் பூசலும் நிலவுகின்றன. தமிழர் சமயம் இன்னது என வரையறுப்பதில் தெளிவில்லை. தமிழர் சமயம் என்பது இன்று இந்து சமயம் தான் போலும். ஆனால் இந்து சமயம் என்பதையும் வரையறுத்துக் கூற முடியவில்லை. இன்றைய தமிழகத்தில் ஒரு சமயக் கோட்பாடோ ஒரு தெய்வமோ ஒரு வழிபாட்டு (சடங்கு) முறையோ இல்லை. எல்லாமே பலப்பல; பலப்பல என்பது மட்டும் அல்ல, அவை தம்முள்ளே முரண்பட்டவை எதிரெதிரானவை. இன்றைய தமிழகத்துத் தமிழர் சமயத்துக்கு அமைப்பும் (*Organization/Church*) தலைமையும் இல்லை. ஆகவே இந்து சமயம் என்பதைப் பின்பற்றுவோரும் பின்பற்றாதோரும் எதிர்ப்போரும் இந்துக்களாகக் கருதப்படும் வேடிக்கை நிலையே உள்ளது. வேதாந்த, சித்தாந்தம் முதலான உயர்ந்த தத்துவங்கள், மாணிக்கவாசகர் நம்மாழ்வார், தாயுமானவர் போன்றோரின் ஆன்மீகம், சித்தர்களின் சீர்திருத்தம், கபிலரகவலின் புரட்சி, திருமூலரின் யோகநெறி, ஆழ்வார் நாயன்மார்களின் பக்தியியக்கமும் உருவ வழிபாடும், இராமலிங்க வள்ளலாரின் அருளிரக்கம், வேதாந்தஆன்மீ கவாதிகளின் உருவமில்லா வழிபாடு, சைவ வைணவத்தின் ஒரு தெய்வ நெறி, பிறரின் பல தெய்வ உருவ வழிபாடு, மேற்குலத்தாரின் பூப்பலி வழிபாடு, கீழ்க்குலத்தாரின் உயிர்ப்பலி வழிபாடு, கிராம மக்களின் சிறுதெய்வ(ங்கள்) வழிபாடு, பேய்பூத வழிபாடு, மந்திரம், தந்திரம் ஆகியவை எல்லாம் இன்றைய தமிழகத்துச் சமயம்! இவற்றோடு சமணம், பவுத்தம், இசுலாம், கிறித்துவம் முதலானவையும் தமிழகத்தில் வழங்குகின்றன. சண்டை சச்சரவுக்கோ குறைவு இல்லை.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகச் சமயச் சீர்திருத்தம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்; 'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்', 'நட்ட கல்லைத் தெய்வமென்றே நாலு புட்பம் சூட்டியே சுற்றி வந்து முணுமுணுக்கும் சொல்லும் மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ?, நாதன் உள் இருக்கையில்?', 'அனைத்துமாய் நின்றாயே, யான் வேறா? நின்னை

நினைக்குமாறெங்கே?', `கண்மூடிப் பழக்கம் எல்லாம் மண்மூடிப் போக', `ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று சாற்றும் அறிவிலிகாள்', `உண்டென்பார்கள் சிலர், இல்லை என்று சிலர் சொல்வர்; எனக்கில்லை கடவுள் கவலை'. சீரங்கநாதனையும் `தில்லை நடராசனையும் பீரங்கி வைத்துப் பிளந்தெறிவதெந்நாளோ?' என்றெல்லாம் இந்த மண்ணிலே பிறந்தோர் எவ்வளவோ பேசியுள்ளனர். எதுதான் தமிழர் சமயம்? இன்றைய தமிழரிடையிலேயே ஒரு வேகம், `சமயச் சீர்திருத்தம் வேண்டும்' என்பதையும் கருத்தில் இருத்தல் வேண்டும்.

அயலகத் தமிழர் என்ன செய்யவேண்டும்? தமிழகத்தின் சூழல் இருக்கட்டும். அவர்கள் குடியேறிய நாடுகளின் சூழல் என்ன? தமிழர்கள் அந்நாடுகளின் சூழல்களில் கேலிப்பொருள்களாக, மூடமக்களாக, காட்டுமிராண்டிகளாகக் கருதப்படக்கூடாது.

பெருஞ் சமயங்கள பவுத்தம், கிறித்தவம், இசுலாம் ஆகியவை. இன்றைய உலகில் இவையே விரிந்து பரவி வழங்குவன. இவற்றில் பவுத்தத்துக்குத் தெய்வம் இல்லை. இசுலாத்துக்கும் ஒரே தெய்வம். கிறித்தவத்துக்கும் ஒரே தெய்வம்; அவற்றுக்கும் உருவம் இல்லை. அன்பின் வழியே வழிபாடு; உயிர்ப்பலி இல்லை. இந்தச் சமயங்களின் மக்கள் எல்லாம் ஏற்றத்தாழ்வில்லாது ஒரே சமூகம்; சாதி வகுப்பு வேறுபாடுகள் இல்லை. இந்தச் சமயக் கோட்பாடுகளை இந்தச் சமயங்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போராடிப் போராடி அடைந்துவிட்டன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்தந்த நாடுகளில் இருந்த பல்சமயப், பல்லுருவப் பல்தெய்வச் சூழல்தான் இன்றைய தமிழகத்தில் இருப்பதாகத் தெரிகிறது. தமிழர்கள் எல்லாம் ஒருகாலத்தில் சமணர்களாகவும், பவுத்தர்களாகவும் இருந்தவர்கள்; பின்புதான் இந்துக்கள் ஆனவர்கள். இதுவும் வரலாறு.

இந்தச் சமயக் கூறுகளில் அயலகத் தமிழர் எவற்றை மேற்கொள்ள வேண்டும்? அறிவியல் வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல் இனிச் சமயம் நடைபெறுதல் முடியாது. கடவுள், ஆன்மா (உயிர்), ஆன்மநிலை பேறு, அதன் தொடர்ச்சி, வினைக் கூறுகள், புண்ணிய பாவங்கள், பல பிறப்புக்கள், மாந்தர் பிறப்பின் நோக்கம், முடிவு, அவற்றை அடையும் முறைகள், வழிபாடு, சுவர்க்கம், நரகம், யமலோகம் ஆகியவை பற்றியெல்லாம் அறிவியலின் கண்டுபிடிப்புக்களைக் கருத்தில்கொண்டு புதிய சமயம் உருவாக்கப்படவேண்டும். எதிர்காலத்துச் சமயம் இப்படித்தான் அமையும். இப்போது அது நம்மிடம் இல்லை.

மேலும் ஒரு சிந்தனை. சமயம் வாழ்வில் எவ்வளவு இடம்பெறலாம்? ஓர் இந்துவின் வாழ்வில் எல்லாமே சமயமாக இருக்கலாம். சமயச் சார்பின்மை (secularism)யாகிய உலகியல் அரசியல் சமூக கலை இலக்கிய வாழ்வில் பெருகி இடம் பெற்று வருகின்ற இக்காலத்தில் சமயம் இல்லத்துக் கூறாக அமைய வேண்டி இருக்குமோ? இந்திய நாட்டின் பண்பாடு அதை நோக்கிச் செல்வதாகத் தெரிகிறது. எங்கும் சமயத்தின் பிடி த ளர்ந்து வருகிறது. இன்றைய தமிழகத்து அறிவாளிகளே எப்படிப்பட்ட சமயத்தை அமைப்பது என்பதில் கருத்துச் செலுத்துவதாகத் தெரியவில்லை. அயலகத்துத் தமிழர் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பொருள் இது.

அயலகத்துத் தமிழர் தாம் வாழும் நாட்டின் சமயச் சூழலால் தாக்குறாது வாழ்தலும் இயலாது. உலகச் சமயங்களோடு தம் சமயத்தை ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை காணாதும் இருத்தல் இயலாது. அவர்கள் ஒரு புதிய சமயத்தைக் காணுதல் இன்றியமையாததாகலாம்; தமிழகத்துச் சமயத்தை அல்ல. ஒருகால் தமிழகத்தின் சில சமயச் சான்றோரின் முரண்பாடற்ற பொதுமைக் கருத்துக்கள் அவர்களுக்குப் பயன்படலாம்.

தத்துவச் சிந்தனை, சமயச் சிந்தனை ஆகியவற்றைப் பொறுத்த வரை இந்தியா பெருமையடித்துக் கொள்ளலாம். உயர்ந்து ஓங்கி வளர்ந்துள்ளன; விரிந்து பரந்தும் வளர்ந்துள்ளன. உபநிடதங்கள், வேதாந்தங்கள், சித்தாந்தங்கள், கீதை, குறள் ஆகியவை உலகச் சிந்தனை உயர் நூல்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கன. ஆனால் அவையெல்லாம் இந்தியாவில் உயர்குடிமக்கள் அளவிலேயே நின்றுவிட்டன; கீழ்த்த ள மக்களைச் சென்று எட்டவே இல்லை; எட்டவும் விடப்படவில்லை.

இவை எல்லாம் தத்துவங்கள் (Philosophy); சமயத்தோடு இணைந்துள்ளன. இவற்றை இனிமேல்தான் இன்றைய அறிவியல் கண்கொண்டு நோக்கி ஆராயவேண்டும். விவேகானந்தர், அரவிந்தர், இராதாகிருஷ்ணன், பெரியார் ஈ.வே.ரா. ஆகியோர் இத்தகைய முயற்சியை மேற்கொண்டனர். தமிழர், தம் சமயம் காணும்போது இவற்றையும் கருத்தில் கொள்ளலாம்.

### தமிழர் கலைகள்

தமிழகத்துக் கலைகள் பல அழகு காட்டி இன்பமூட்டும் கவின் கலைகளாகும். பரதநாட்டியம், கருநாடக இசை, சிற்பக்கலை, கோவில் கட்டடக்கலை, ஓவியக்கலை ஆகியவை உலகிற் சிறந்த கலைகளோடு

ஒப்ப வைத்தெண்ணத்தக்கவை. தமிழர் இவற்றை உலகுக்கு வழங்கி மகிழலாம். இவற்றை செவ்வியற் கலைகள் (*Classical Fine Arts*) எனலாம். இவை மேற்குடி மக்களுக்குரிய கலைகளாகக் கொள்ளப்படவேண்டும்.

இவை மட்டும் அல்லாமல் வேறுபல கலைகளும் தமிழகத்தில் வழங்குகின்றன. இவை நாட்டுப்புறக் கலைகள் எனக் குறிக்கப்படுகின்றன. நையாண்டி மேளம், கரகம், காவடி, பாவைக்கூத்து, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை என எத்தனையோ நாட்டுப்புறக் கலைகள் உண்டு. இவை கீழ்த்தட்டு மக்களிடமே வழங்குகின்றன.

செவ்வியற் கலைகளுக்கும் நாட்டுப்புறக் கலைகளுக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டை அறியவேண்டும். இலக்கணம் சிறந்து நுட்பங்கள் செறிந்து அழகும் இனிமையும் இன்பமும் பெருகுமானால் அத்தகையவை செவ்வியற் கலைகளாகும். நாட்டுப்புறக் கலைகளில் வன்மை கடுமை முரட்டுத்தன்மை கூடியிருப்பதாகத் தெரிகிறது. அவை மேலும் செம்மையாக்கம் பெறவேண்டும். செவ்வியற் கவின் கலைகள் நாட்டுப்புறக் கலைகளிலிருந்து அவ்வாறு செம்மையாக்கம் பெற்றவையாக இருக்கவேண்டும்.

நாட்டுப்புறக் கலைகளில் சில வினைத்திற விளையாட்டுக்களாக (*Circus Feats*)விளங்குகின்றன. கரகத்தை அப்படிக் கூறலாம்.

நாட்டுப்புறக் கலைகள் சில சமயம் சார்ந்து நடக்கின்றன. காவடியாட்டம் அப்படிப்பட்டது. கலை ஒன்று உலகக்கலையாக நிலை பெறவேண்டுமானால் சமயம் கடந்து விளங்கவேண்டியிருக்கலாம். அதற்குப் பொதுமை வேண்டும். அவை பிறவற்றைச் சாராது தனித்து விளங்கவேண்டும்.

தமிழர் உரிப்பொருளாகக் காட்ட விரும்பும் கலைகள் செவ்வியற் கவின் கலைகளோடு செம்மையாக்கம் பெற்ற நாட்டுப்புறக் கலைகளாகவும் இருக்கவேண்டும்.

### மொழியும் இலக்கியமும்

தமிழரின் மொழியும் இலக்கியமும் நல்லுடைமைகள்; அரிய உரிப்பொருள்கள். தமிழ் உயர் தனிச்செம்மொழி (*Classical Language*). உலகில் புகழ் பூத்த கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், பாரசீகம், சமஸ்கிருதம், சீனம் ஆகிய மொழிகளுடன் ஒருங்குவைத்து எண்ணத்தக்கது தமிழ். அதன் இலக்கிய வளமும் செம்மையும் பெருமை வாய்ந்தன. அவற்றைத் தமிழர் உலகிற்கு ஈந்து பெருமைப்படலாம். `வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு', `கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்ற கூற்றுக்கள் `உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை'.

இலக்கியம் என்னும் கலைக்கு உரியவை கற்பனை, உணர்வு, வடிவம், சிந்தனை ஆகியவை. சிந்தனை தவிரப் பிற எல்லா மொழிகளுக்கும் பொதுவானவை. சிந்தனை அந்தந்தப் பண்பாட்டுக்கு உரியது. ஒருசில இலக்கியங்கள் இடத்தாலும் காலத்தாலும் கருத்தாலும் குறுகி, அவற்றுக்கே உரியனவாகி அமைந்திருக்கலாம். (தமிழ்த் தலபுராணங்கள்) அவை போகப் பிற, உலகப் பொதுமை (*Universality*) பெற்றவையாகக் கருதப்படலாம். இந்த வகையில் எல்லா மொழி இலக்கியங்களும் கருதப்பட வேண்டியவையே.

தமிழின் சங்க இலக்கியங்களான அக புற இலக்கியங்களுக்கு ஒரு சிறப்பு உண்டு. உலகப் பொதுமையான காதல், வீரம், புகழ் பற்றி அவை பேசுகின்றன. அவை முழுவதும் உலகியல் (*secular*)இலக்கியங்கள். தமிழினம் உலகிற்கு வழங்கும் கொடைச் செல்வமாக அவற்றைக் கருதலாம்.

தமிழரின் இனப்பெருமை காட்டும் இந்த இலக்கியச் செல்வங்கள் தமிழரிடையே கூடப் போதிய அளவு அறிமுகம் ஆகவில்லை. இராமாயணமும் பாரதமும் அவர்களை ஆட்கொண்டுள்ளன. அவைகளைப் போற்றும் பக்தி இலக்கியங்களும் பரவியுள்ளன. இவற்றோடு அந்தத் தமிழிலக்கியங்களுக்கு உறுதியான இடம் வேண்டும். அந்தத் தமிழிலக்கியங்களிலேயே பெரிதும் தமிழ் மணம் கமழ்கின்றது என்பதைத் தமிழர் உணர வேண்டும்.

### கமழத்தக்க தமிழ் மணம்

காலந்தோறும் இடந்தோறும் பண்பாடு மாற்றமுறுகிறது. அது தவிர்க்கவும் முடியாதது. ஆனால் மாற்றம் வளர்ச்சியாக அமையவேண்டும். வளர்ச்சி என்பது கால இடங்களுக்கு ஏற்ப அந்த இன மக்களுக்கு நன்மை சேர்ப்பதாக அமைவதாகும். புதிய சூழலுக்கு ஏற்பத் தன்னைச் சீர்செய்து அமைத்துக் கொள்ளாத இனம் சிதைவுபடும். இந்தச் சமூக நெறிகளைத் தமிழர் மனத்தில் கொள்ளவேண்டும்.

அயலகத் தமிழர் பன்னாட்டுப் பல்சமயப் பல்பண்பாட்டுப் பல்லின மக்கள் சூழலில் வாழும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றார்கள். அது மனங்கவலத் தக்கதல்ல; மனம் மகிழத்தக்கது; ஓர் அரிய வாய்ப்பு.

# பழுத்துக் குலுங்கும் பழச்சோலை

## கவிஞர் பொன்னடியான்

எழுத்துல கத்தினர்
சிந்தனை யாளர்கள்
எழுந்துழைத்தால் இந்த
இனிய நன் னாட்டினைப்
பழுத்துக் குலுங்கும் பழச்சோலை யாக்கலாம்
பன்னிற வண்ண மலர்ச்சோலையாக்கலாம்!
அழுந்திக் கிடக்கின்ற
மக்களின் வாழ்வினில்
அன்பினால் ஆயிரம்
வளமைகள் சேர்க்கலாம்!
எழுத்தினால் பயன்மிகு எழுத்தினால் இந்நாட்டின்
இதயத்தில் எண்ணிலா வெற்றிகள் சேர்க்கலாம்.!

கொள்கை மறவர் நாம்
ஒன்றென்று கூடினால்
கூக்குரல் இல்லா ஓர்
உலகம் படைக்கலாம்!
"வெல்க!" எனும் ஒரு சொல்லின்
வடிவான
வீழாச் சமூகத்தை இன்றே
வடிக்கலாம்!



பல்லுயிர் ஓம்பிடும்
பண்பின் மனத்தினர்
படைப்பாற்ற லால் மண்ணின்
துயரம் துடைக்கலாம்!
சொல், செயல் இரண்டின் துணை கொண்டு
பூமியில்
தூய்மை துலங்கிடும் வாழ்க்கை சமைக்கலாம்.

நட்பினால் பிறர்நலன்
நாடும் குணத்தினால்
"நாம்" எனும் பன்மை
மணக்கும் மனத்தினால்
துட்டத் தனங்களைத் தூர விரட்டலாம்
தொண்டின் வழிசென்று நன்மை
புரியலாம்!
வெட்டுக் கிளிகளின்
செயல்கள் தடுக்கலாம்
வெங் கொடுமை எலாம்
வேரோடு சாய்க்கலாம்!
கட்டி முடித்த அணையாகி, வையத்தில்
கலைப்பயிர், கவிப்பயிர் வளர்த்துச்
செழிக்கலாம்.

---

இந்தச் சூழலில் தமிழின மக்களின் உரிப்பொருள்களில் ஓங்கி உயர்ந்த கலை இலக்கியக் கருத்துச் செல்வங்களை உலகிற்கு வழங்கிப் பிறரிடமிருந்து ஏற்றன கொண்டு வாழ்தலே அறிவுடைமை.

பிறரிடமிருந்து ஏற்றன கொண்டு வாழ்தல் இழிவல்ல. நாம் இன்று மேலை நாகரிகத்தை எவ்வளவு ஏற்றுக்கொண்டு எவ்வளவு மாறியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கலாம்.

அயலகத் தமிழர், 'பால் உண் குருகு' ஆக விளங்கவேண்டும். தமிழ் மண்ணில் நல்லன கொண்டு, அல்லன விலக்கி உலக மக்களாகித் தமிழ் மண்ணுக்கும் வழிகாட்டுவார்களாக. அயலக மண்ணில் இவ்வாறு தமிழ் மணம் கமழ்தலே முறையாகும்.

# புரட்சிக்கவிஞரின் புதுமைக் கருத்துக்கள்

டாக்டர் வ.பெருமாள் கருநாடகம்

மனிதன் பிறக்கின்றான்; இருக்கிறான்; சாகின்றான், இது மனித வரலாறு. கவிஞன்தோன்றுகிறான்; வாழ்கின்றான்; அமரனாகின்றான். இது கவிஞன் வரலாறு. கவிஞனின் உடல் மறைந்தாலும் அவன் இயற்றிய கவிதைகள் காலத்தை வென்று என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கின்றன. கவிஞனது எண்ணமும் உணர்ச்சியும் அவன் உருவாக்கிய கவிதைகளில் என்றும் நிலைத்து வாழ்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, கவிஞன் படைக்கும் உயிர் இலக்கியம் அவனை உலகம் உள்ளளவும் வாழச் செய்கின்றது.



தமிழகத்தில் தோன்றிய கவிஞர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சிலர். அச்சிலருள்ளும் மக்கள் கருத்தைக் கவர்ந்தவர்கள் மிகச்சிலரே. அவர்களில் தலையாயவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஒவ்வொரு கவிஞரும் ஒவ்வொரு சிறப்பியல்பு பெற்றிருந்தாலும், பாவேந்தரிடம் பல சிறப்பியல்புகள் உண்டு. ஏனைய கவிஞர்கள் தனித்தனிப் பூக்கள் போன்றவர்கள். ஆனால் பாரதிதாசன் பல்வேறு வண்ணமுள்ள நறுமணப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை போன்றவர். அம் மாலையில் முல்லை உண்டு; மல்லிகை உண்டு; இன்னும் பல்வேறு பூக்களும் உண்டு. எண்ணத்தாலும், மணத்தாலும், அமைப்பாலும் மக்கள் உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் ஆற்றல் அப் பூமாலைக்கு உண்டு. பாரதிதாசன் கவிதைகள் யாவும் அவர்தம் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்தவை. இன்பமே உருவம் எடுத்து விளங்குவதைப் போல் அமைந்தவை. பளிங்குபோல் தெளிந்த நடையில் இயங்குபவை. எல்லாவற்றுக்கும் மேலாக உண்மையை அடிப்படையாகக் கொண்டவை. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிய,

உள்ளத் துள்ளது கவிதை -இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை

என்னும் கவிதை இலக்கணத்திற்குப் பாவேந்தர் இலக்கியப் படைப்பு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**தமிழ் உணர்ச்சியை வளர்த்த கவிஞர்**

தமிழின் சிறப்பையும், இனிமையையும் பாடிய தமிழ்க் கவிஞர்களில் பாரதிதாசன் தலையாயவர். தமிழ்ச் சுவையை ஒவ்வொரு கோணத்திலிருந்தும்

அறிந்துணர்ந்து மகிழ்ந்து அனுபவித்தவர். கனிச் சுவை, கரும்புச் சுவை, தேன் சுவை, பாகுச் சுவை, பாற் சுவை, இளநீர்ச் சுவை முதலிய அறுவகைச் சுவையுடன் தமிழ்ச் சுவையை ஒப்பிடுகிறார். இவ்வறுவகை இன்சுவையைவிடத் தமிழ்ச்சுவையே மிகவும் இனிமையாக இருக்கிறது என்பதைப் புரட்சிக் கவிஞர் உணர்கின்றார். எனவே, தமிழ்ச் சுவையை இவ்வறுவகைச் சுவைக்கு ஒப்பாகச் சொல்வதைவிட அவற்றை விட ஒருபடி உயர்ந்த அமிழ்துக்கும்-ஏன் தம் ஆருயிர்க்கும் ஒப்பாகக் கூறுகின்றார்:

*கனியிடை ஏறிய சுளையும் -முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்,*
*பனிமலர் ஏறிய தேனும் -காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்,*
*நனிபசு பொழியும் பாலும் -தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் -தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!*

வாய்ச்சுவையுடன் தமிழை ஒப்பிட்ட கவிஞர் அத்துடன் அமைந்தார் அல்லர். மூக்கிற்குப் பெரு விருந்தளிக்கும் நறுமணத்துடனும் கண்ணிற்குப் பேரின்பம் நல்கும் நிலவுடனும் தமிழை ஒப்பிட்டு மகிழ்கின்றார். தமிழ்ச்சுவை, தமிழ் மணம் ஆகியவற்றை இனிது இயம்பிய பாரதிதாசன், தமிழ் ஒலி நயத்தையும் இசைச் சிறப்பையும் சொல்ல மறந்தார் அல்லர். வண்டொலி, அருவியொலி, குழல் இசை, வீணை இசை ஆகியவற்றின் இன்னிசையைவிடத் தமிழ் இசை மிகவும் செவியின்பம் பயக்கவல்லது என்பதைத் தமக்கே உரிய நடையில் கவிஞர் இனிது பாடுகின்றார். சோறு, பசுநெய், காய்கறி, தானியங்கள், தயிர், மிளகுச் சாறு, கிழங்கு, அப்பம் முதலியவை உடலை வளர்க்கவல்லன; உயிரையும், உணர்வையும் வளர்ப்பது தமிழே என்று பாவேந்தர் பாடுங்கால், அவர்தம் தமிழ்ப் பற்றின் ஆழத்தையும் தமிழ் உணர்ச்சியின் வேகத்தையும் மிகத் தெளிவாக அறியலாம்.

செந்நெல் மாற்றிய சோறும் -பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை -கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்,

நன்மதுரஞ்செய் கிழங்கு-காணில்
நாவி லினித்திடும் அப்பம்
உனை வளர்ப்பன தமிழா! -உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

பாவேந்தர் தமிழில் பாடினார்; தமிழைப் பாடினார்; தமிழுக்காகப் பாடினார். தமிழை ஐம்புல இன்பத்துடன் ஒப்பிட்டுத் தமிழ் உணர்ச்சியுடன் பாடினார்.

**இயற்கை**

இயற்கை எழிலைச் சுவைக்கும் ஆற்றல் வாய்ந்தது கலை உள்ளம். தான் சுவைத்த இயற்கை எழிலைப் பிறர்க்கும் புலப்படுமாறு செய்பவனே கலைஞன். ஒரு கலைஞன் தான் கண்ட இயற்கைக் காட்சியைக் காவியமாக்குகின்றான். மற்றொருவன் ஓவியமாக்குகிறான். காவியத்திலும் கலை உண்டு. ஓவியத்திலும் உயிர் ஓட்டம் உண்டு. புகைப்படக்காரன் உள்ளதை உள்ளவாறே படம் பிடித்துக் காட்டுகிறான், ஆனால் கலைஞன் அவ்வாறு இல்லை. வேண்டாதவற்றை நீக்குகிறான். வேண்டியவற்றை இணைத்துக் கொள்கிறான்; அத்துடன் கற்பனை உணர்ச்சியுடன் அழகுச்சுவையை ஊட்டிக் காண்போர்க்குப் பெருவிருந்தளிக்கிறான். ஒரு சிறு குளம் இருக்கின்றது அதன் நடுவில் ஒரு கழுதை நின்றுகொண்டிருக்கிறது. ஒரு புகைப்படக்காரன் அக்குளத்தைப் படம் பிடிக்கும்போது, அங்குள்ள கழுதையையும் சேர்த்துப் படம் பிடித்துவிடுகிறான்.

குளத்தின் நடுவே கழுதையை ஒதுக்கிவிட்டு அவனால் படம் எடுக்க முடியவில்லை. அது அவனுடைய குறைபாடன்று. புகைப்படக் கருவியின் இயல்பு. ஆனால் கவிஞனின் நிலை அவ்வாறன்று. அவன் தன் கற்பனைத் துணை கொண்டு அங்குள்ள கழுதையை விரட்டி விடுகின்றான். அவ் வெறுங்குளத்தைத் தாமரை பூத்த குளமாக மாற்றுகின்றான். அதில் அன்னத்தை உலவிடச் செய்கின்றான். காண்போர்க்குப் பெருவிருந்தளிக்கின்றான். புகைப்படக்காரனுக்குக் கழுதை நின்று கொண்டிருந்த வெறுங் குளம் கலைஞனுக்கு அன்னம் உலவும் குளமாகக் காட்சியளிக்கின்றது. கலைஞன் படைப்பில் வேண்டாதவை இரா. வேண்டியவையும் விரும்பத்தக்கவையும் மிகச் சிறப்பாக விளங்கும். பாவேந்தர் தம் இயற்கை வருணனை, இக் கலை இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது. `ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்னும் பழமொழிக்கேற்பப் பாவேந்தர் தீட்டிய இயற்கைக் காட்சிகளில் ஒன்றை மட்டும் இவண் காண்போம்:

*அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்*
*அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்*
*பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?*
*பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்*

சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ?

பாவேந்தர் கண்ட நிலா முழுநிலா, மாசு மறுவற்ற நிலா, அழகு நிலா, முத்து நிலா, ஒளி நிலா, குளிர் நிலா, காதல் உள்ளத்தில் முகிழ்த்த கற்பனை நிலா. எழில் வாழ்வைச் சித்தரிக்கும் இனிய நிலா. இயற்கையழகைச் சொல்லோ வியமாக்குவதில் பாவேந்தர் வல்லவர் என்பதற்கு இது ஒன்றே தக்க சான்றாகும்.

### பெண் கல்வி

பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் கல்விச் செல்வத்தை இருபாலர்க்குமுரிய பொதுச் செல்வமாகக் கருதினர். இப்பேருண்மையைத் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாக நன்கு விளக்குகின்றார்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

என்பது குறட்பா. எண்ணும் எழுத்தும் ஆண்களுக்கு மட்டும் கண்கள் அல்ல. உலகில் வாழும் மக்கள் எல்லோருக்கும் கண்களாக அமையும். குறட்பாவிலுள்ள `உயிர்க்கு' என்னும் சொல் கல்வி இருபாலர்க்குமுரிய பொதுச் செல்வம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆண்களுக்கு மட்டும் கூறப்பட்டவை அல்ல. பெண்களுக்கும் உரைக்கப்பட்ட பொன் மொழிகளே. ஆனால் பிற்காலத்தில் கல்வியை ஆண்களுக்கு மட்டுமே உரிய தனியுடைமையாக்கிப் பெண்களை அறியாமையில் ஆழ்த்தும் குருட்டுக் கொள்கை எழுந்தது. அம் மூடக்கொள்கையின் விளைவாக `அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்னும் பழமொழி தோன்றிற்று. இது பழமொழி போன்று காட்சியளித்தாலும் உண்மையில் இது பழிமொழியே. பெண் குலத்தை இழிவு படுத்தும் இழிமொழியே. அப் பழமொழியையும் இழிபழமொழியையும் போக்கும் வகையில் `நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்னும் பாவேந்தர் வாக்கு நன்மொழியாகவும் பொன் மொழியாகவும் சிறந்து விளங்குகின்றது. பயனுள்ள நிலம், வயல். பயனற்ற நிலம் களர். திருத்திய கழனியில் பயிர் செழித்து வளரும்; களர் நிலத்தில் ஒரு வேளை புல் முளைக்குமே தவிர பயிர் வளர்தல் இல்லை. கல்லாதவனையும் பயனற்றவனையும் களர் நிலத்திற்கு ஒப்பிடுவதுண்டு.

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லாதவர்

என்பது வள்ளுவர் வாய்மொழி. திருவள்ளுவர் கல்லாதவர்களையும் களர் நிலத்திற்கு ஒப்பிட்டதைப் போன்று, பாவேந்தரும் கல்லாத பெண்களைக் களர் நிலத்திற்கு ஒப்பிடுகின்றார். கல்வியற்ற பெண்கள் களர் நிலம்; கல்வியுள்ள பெண்கள் பயன் நிலம். இதுவே பாவேந்தர் கருத்து.

"கல்வி இல்லாத பெண்கள்
களர் நிலம்! அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவிலவோ நான் "

பாவேந்தர் பெண்கல்விக்கு அளித்த சிறப்பிடத்தை விளக்க இப்பாடல் ஒன்றே சாலும். ஓர் ஆண்மகனுக்குக் கற்பித்தால் ஒருவனுக்குக் கற்பிக்கிறாய்; ஒரு பெண்ணுக்குக் கற்பித்தால் ஒரு குடும்பத்திற்கே கற்பிக்கின்றாய் என்பது ஓர் அறிஞர் வாக்கு. கல்வி கற்ற பெண் சிறந்த பெண்மணியாக, நல்ல மனைவியாக, குடும்ப விளக்காக, நன்மக்களைப் பெறும் உயர்ந்த தாயாக, குடும்பத்தைக் கலைக்கோயிலாகவும், பல்கலைக் கழகமாகவும் ஆக்கும் சிந்தனைச் சிற்பியாக விளங்குகிறாள். பெண்கல்வியே நற் கல்வி; அதுவே மக்களை வாழ்விக்கும் வாழ்க்கைக் கல்வி.

### பெண்ணுரிமை

பண்டைச் சமுதாயத்தில் உரிமையுடன் வாழ்ந்த தமிழ்ப் பெண்கள் பிற்காலத்தில் அடிமைகளானார்கள்; இல்லை அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள். ஆணுக்கொரு நீதியும், பெண்ணுக்கொரு நீதியும் பிற்காலத்தில் தோன்றிவிட்டன. சமுதாய உரிமைகள் அனைத்தையும் ஆண்கள் பெற்றார்கள். மகளிர் கொடுமைப்படுத்தப்பட்டு அடிமைக்கும் ஆளானார்கள். பெண்களைப் பெற்றவர்கள் தாம் பெற்ற பெண்ணைப் பணத்திற்காக ஆசைப்பட்டுப் பன்னிரண்டு வயது கூட நிறைவுறாத தம் ஒரே மகளை அறுபது வயதுக் கிழவனுக்கு வற்புறுத்தித் திருமணம் நடத்திய கொடுங்காட்சி நம் மனத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை. அந்தோ! அக்கொடுங்காட்சியை நம்மால் நினைக்கவும் முடியவில்லை. பெண்களை விலைக்கு விற்கும் இத் திருமணத்தை, கொடுமணத்தைக் கண்டார் பாவேந்தர். அவர் உள்ளம் பதறியது. பகுத்தறிவுக் கண்கொண்டு திருமணத்தை வரையறுத்தார்.

திருமணம் என்பது பணத்தால் ஒன்று படுவதன்று; மனத்தால் ஒன்றுபடுவது. குலத்தால் ஒன்றுபடுவதன்று; உளத்தால் ஒன்றுபடுவது; வம்பால் ஒன்றுபடுவதன்று; அன்பால் ஒன்றுபடுவது. ஒருவர் மட்டும் இசைவதன்று; இருவரும் இசைவது. இதுதான் பாவேந்தர் காதலுக்கு வரையறுத்த தெளிவான இலக்கணம்.

காதல் இருவர்களும் – தம்
கருத்தொரு மித்த பின்
வாதுகள் வம்புகள் ஏன் – இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?

ஒரு திருமணம் நடைபெறுகின்றது. திருமணமாகி ஒரு மாதத்திற்குள் கணவன் இறந்துவிடுகின்றான். பதினாறு வயதுள்ள அவ்விளம் பெண் கைம்பெண் கோலத்தில் சமுதாயத்திலிருந்து விலக்கி ஒதுக்கி வைக்கப்பட்டவளாய் நரம்பு அறுந்த வீணை போன்றவளாய், பூவிழந்து, பொட்டு இழந்து, மஞ்சள் இழந்து, குங்குமம் இழந்து, உயிர் இருந்தும் வாழ்விழந்து, பருவம் இருந்தும் இன்பம் இழந்து, கண்ணீரும் கம்பலையுமாய் ஒவ்வொரு வினாடியும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அவல நிலையைக் கண்டார் புரட்சிக் கவிஞர். அவர் இரக்க உள்ளம் உணர்ச்சியால் பதறியது. அவர் சிந்தை பகுத்தறிவால் உந்தப்பட்டுக் கேள்விகளை எழுப்பியது. கவிஞரது பகுத்தறிவு தோய்ந்த இரக்க உணர்வால் அரும்பிய கவிதையே இது.

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல்
தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

பெண்ணுரிமையைப் பொறுத்த வரையில் பாவேந்தர் வலியுறுத்தியவை பல. அவற்றில் இங்குக் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஒன்று காதல் திருமணம்; மற்றொன்று விதவை மறுமணம். மகளிரைப் பற்றிப் பாடியவர்கள் சிலர். ஆனால் விதவை மறுமணத்தைப் பற்றித் தெளிவாகப் பாடியவர் ஒருவரே. அவரே பாவேந்தர்.

*பொருளாதாரப் புரட்சி*

உடல் நலத்துக்கு நல்ல இரத்த ஓட்டம் வேண்டும். நாட்டு நலத்திற்கு நல்ல செல்வச் செழிப்பு வேண்டும். இரத்தம் உடலில் இருந்தால் மட்டும் போதாது; அது அனைத்து உறுப்புகளுக்கும் சீராகவும் முறையாகவும் செல்லுதல் வேண்டும். அதைப் போலவே நாட்டின் செல்வம் ஒரே இடத்தில் மட்டும் குவிந்து கிடந்தால் போதாது. அது எங்கும் பரவி எல்லோர்க்கும் வாழ்வளிக்கும் வகையில் அமைதல் வேண்டும். இது பொருளாதாரத்தின் அடிப்படை உண்மை. ஒரு நாட்டில் ஒருவன் பெருங் கோடீசுரனாகவும் இன்னொருவன் பிச்சைக்காரனாகவும் வாழ்வதைப் பகுத்தறிவுள்ள எந்தச் சமுதாயமும் பார்த்துக் கொண்டு சும்மா இராது. பொருளாதாரக் கண்கொண்டு பார்க்குமிடத்து ஏழை பணக்காரரிடையே ஏற்றத் தாழ்வும் வேறுபாடும் இருப்பது இயல்புதான். ஆனால் அந்த ஏற்றத் தாழ்வுக்கும் வேறுபாட்டுக்கும் ஓர் அளவு உண்டு.

ஒருவன் செல்வ வளத்தில் கோமானாக வாழ்வதற்கும் மற்றொருவன் வறுமையின் கொடுமைக்கு ஆட்பட்டு உழல்வதற்கும் உரிய பொருளாதார சமுதாயக் காரணங்களை விருப்பு வெறுப்பின்றி ஆராய்வது நன்மக்கள் கடமையாகும். உழைத்து உழைத்து உருக்குலைந்து ஒட்டிய வயிற்றுடன் குழிந்த கண்ணுடன் காட்சியளிக்கும் ஆயிரக்கணக்கான ஏழைமக்களைப் பாவேந்தர் காண்கின்றார். மறுபுறத்தில் பாலும் பழரசமும் உண்டுகொழுத்துவிட்டு உழைப்பாளிகளின் உழைப்பையும், பொருளையும், ஏமாற்றித், தந்திரமாகப் பிழைக்கச் சுரண்டி வாழும் எத்தர்களையும் நோக்குகின்றார். ஒரு புறத்தில் ஓடப்பர். மறுபுறத்தில் உயரப்பர். ஓடப்பருக்கும் உயரப்பருக்குமுள்ள இடைவெளியை நீக்க ஒரே ஒரு வழிதான் உண்டு.

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ.

இதுதான் பாவேந்தர் கூறிய வழி. பாவேந்தர் பாட்டாளியின் நிலையை அறிந்தவர் மட்டுமல்லர்; மிகத் தெளிவாக உணர்ந்தவர். அவர் எழுப்பிய உரிமை முழக்கம் வெறும் குரலன்று. பாட்டாளி உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உந்திக்கொண்டு எழுந்த உணர்ச்சிக் குரலாகும்.

“சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின்
தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு...?”

இக்கவிதை கற்போர் நெஞ்சிருக்கும் வரை நினைவில் நிலைத்திருக்கும் ஆற்றல் வாய்ந்தது. தமிழ்க் கவிஞர்களில் இத்தகைய பொருளாதாரப் புரட்சிக் கருத்தை உணர்ச்சியுடன் உரைத்தவர் பாவேந்தர் ஒருவரே.

### இலக்கியச் சுவை

"கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய் தன்வால் பார்க்கும்"

பாரதிதாசன் சொல்லோவியங்களில் இதுவும் ஒன்று. ஆலமரக் கிளையில் தொங்கிய பாம்பை விழுதென்று தவறாக நினைத்துக் கொண்டு தொட்டுவிட்டு மருண்ட குரங்கை விளக்கிக் காட்டுகிறார் கவிஞர். ஆலமரத்தில் பல விழுதுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுடன் ஒரு பாம்பும் தொங்கிக் கொண்டிருக்கிறது. விழுதைப் பிடிப்பதற்கு மாறாக விழுதுபோல் காட்சியளிக்கும் பாம்பைத் தொடுகின்றது குரங்கு. தொட்டவுடன் சுடர் விட்டு எரியும் விளக்கைத் தொட்ட குழந்தையைப் போல் வெடுக்கென்று குதிக்கின்றது. கீழேயுள்ள விழுதுகள் எல்லாவற்றையும் பார்க்கிறது குரங்கு. விழுதுகள் எல்லாம் பாம்புகளாகத் தோன்றுகின்றன. இறுதியாகத் தன் வாலைப் பார்க்கிறது. அக் குரங்குக்குத் தன் வால் கூடப் பாம்புபோல் காட்சியளிக்கின்றது. கவிதையின் திரண்ட கருத்து இவ்வளவுதான். ஆனால் இதன் உட்பொருளை ஆழமாக ஆராய்ந்தால் இதன் நயமும் சுவையும் தென்படும். குரங்கு தன் அறியாமையின் காரணமாகவும் அவசரத்தினாலும் விழுதைப் பிடிப்பதற்கு மாறாகப் பாம்பைப் பிடித்துவிட்டது. அதைப் போலவே உலகத்திலுள்ள மக்கள் தம் அறியாமை, அவசரத் துடிப்பு ஆகியவற்றால் உண்மையைப் பின்பற்றுவதற்கு மாறாகப் பொய்யைப் பிடித்துவிடுகின்றனர். வெளித்தோற்றத்துக்குப் பொய் உண்மைபோல் காட்சியளிக்கின்றது. கைகளின் மிகுந்த விரைவை 'உடுக்கை இழந்தவன் கைபோல' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அத்தகைய விரைவை உணர்த்த 'விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல்' என்று பாவேந்தர் உவமை நயம் தோன்றப் பாடுகிறார். 'காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள், மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' முதலிய பழமொழிக்கேற்பக் குரங்கிற்கு விழுது எல்லாம் பாம்பாய்த் தெரிகிறது. தன் வாலைப் பார்த்து 'இதுவும் பாம்போ' என்று நினைக்கின்றது. 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரைக்கு வராது' என்பது பழமொழி. அதுபோல் ஒரு முறை அச்சத்துக்கு ஆட்பட்ட குரங்கு விழுதைக் காணும் போதெல்லாம் அஞ்சுகிறது. விழுது தொங்குவதைப் போல் பாம்பு தொங்கியது. குரங்கு பாம்பைத் தொட்டவுடன் விளக்கைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல் குதிக்கிறது. இவ்விரண்டிலும் உவமைச் சுவை நயம்பட அமைந்திருக்கின்றது.

கிளைதோறும் குதித்துத் தாவி வேகமாகச் செல்வது விரைவுச் சுவையை ஊட்டுகிறது. விழுதையும் தன் வாலையும் பாம்பு என்று நினைக்கும்போது ஐயச்சுவையும் அச்சச்சுவையும் தோன்றுகின்றன. 'ஐயோ பாவம்' என்று குரங்குக்கு நாம் இரங்குங்கால் இரக்கச்சுவையும் அவலச் சுவையும் தோன்றுகின்றன. இப்படியும் ஒரு குரங்கு உலகத்தில் இருக்கின்றதே என்று எண்ணும்போது வியப்புச்சுவை ஏற்படுகின்றது. குரங்கின் செய்கை நமக்குச் சிரிப்பு உண்டாக்கி, நகைச் சுவை அளிக்கின்றது. இக் காட்சியை மனக்கண்ணால் பார்க்கும்போது அதிலுள்ள அழகுச்சுவை தென்படுகின்றது. இவையெல்லாம் சேர்ந்து பாவேந்தர் கவிதைக்கு இலக்கியச் சுவையை உண்டாக்குகின்றன.

### கவிதைப் பண்பு

தமிழ் இலக்கிய வரலாற்றில் புரட்சிக் கவிஞர் என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர் பாரதிதாசன். அவர் இலக்கியத்தில் பல்வேறு புதுமைகளைக் காணலாம். பாமர மக்களுக்கும் நன்கு விளங்கும் எளிய நடையில் அவர் கவிதைகள் அமைந்திருக்கின்றன. அவர் இலக்கியத்தைப் புரிந்து கொள்ள உரையோ, அகராதியோ தேவை இல்லை. பாவேந்தர் இலக்கியம் புலவர் இலக்கியம் அன்று; பொது மக்கள் இலக்கியமாகும். பாரதிதாசன் கவிதைகள் (3 பகுதி), பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, பாரதிதாசன் நாடகங்கள், அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், காதல் நினைவுகள், குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா முதலிய இலக்கியங்கள் கவிஞருக்குப் பொன்றாப் புகழ் தருவன. அவர் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்த கவிதைப் பண்பைக் காணலாம். எளிமை, புதுமை, பொதுமை, இனிமை, வலிமை ஆகிய பண்புகளைப் பாவேந்தர் இலக்கியத்தில் பார்க்கலாம். அவர் கவிதையில் வீரம் உண்டு. அவர் கவிதை கிழவனையும் இளைஞனாக ஆக்கவல்லது,

# பாரில் உயர்ந்த சிங்கப்பூர்



## கவிஞர். பெரி. நீல. பழனிவேலன்

சிங்கப்பூர்

பாருக்கே ஒளிகொடுக்கும் கதிர்ஒன் றேதான்
படர்ந்துவரும் இருளகற்றி வெளிச்சம் தந்து
யாருக்கும் பொதுவென்றே தொண்டு செய்யும்
எல்லாரும் அறிந்த வுண்மை! அதனைப்
போன்றே
பாருக்கே வழிகாட்டும் எங்கள் சிங்கை
பார்முழுதும் புகழ்ந்தேற்றும் உயர்ந்த சிங்கை!
சீருயர்ந்த மிகச்சிறிய சிங்கப் பூர்தான்!
சீர்வானின் ஒளிக்கதிர்போல் சிறந்த தென்பேன்!

குடிமக்கள் நலன்காக்கும் கொள்கை ஒன்றே
குடியரசை யாள்கின்ற சான்றோர் கொள்கை!
படியாத வேங்கையையும் வித்தைக் காரன்
பணிந்தேவல் செய்கின்ற பயிற்சி தந்து
முடிசாய்த்து விளையாடும் கலையைப் போல
குடியாட்சி புரிகின்றார் ஆட்சி யாளர்!
படியாத பிடிவாதக் காரர் யாரும்
பண்பாடித் திரிவதில்லை எங்கள் நாட்டில்!

அமைதிக்குக் கேடுகளைச் செய்வோர் இங்கே
ஆழக்கால் ஊன்றுவதும் இல்லை என்பேன்
அமைதியினால் சிப்பிக்குள் முத்தைப் போல
அடங்கியதாம் சிங்கப்பூர் அகிலத் துக்கே
அமைதிக்கே வழிகாட்டும்! நெறியும் காட்டும்!
அன்புணர்ச்சி யால்இனங்கள் ஒன்றி வாழும்!
இமைகாக்கும் வழியாகும் எங்கள் சிங்கை
இனம்என்றால் இனஒருமைப் பாடே ஆகும்.

மதமிங்கே ஆட்சிசெய்வ தில்லை; யார்க்கும்
மதம்பிடிப்ப தில்லைசிங்கை நாட்டில்! எல்லா
மதமும்சம மதம்என்ற சகிப்புத் தன்மை
மனம்கொண்ட தால்இங்கே இருக்கும் எல்லா
மதமும்சீர் பெற்றேதான் வளரும்; வாழும்
வகைகண்டோம்; இதனாலே சிங்கைநாடு
மதமதப்பு இல்லாமல் சுறு சுறுப்பாய்
மழைக்காலப் பயிர்போலே வளரக் கண்டோம்!

---

கோழையையும் வீரனாக மாற்றவல்லது. குருட்டுக் கொள்கையினருக்குக் கைவிளக்கு போன்று உதவவல்லது; சமத்துவத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தவல்லது; இருபதாம் நூற்றாண்டு இளங்கவிஞர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்து துணைபுரிவது; குருட்டுக் கற்பனையும், வறட்டுக் கற்பனையும் இல்லாமல் உண்மையை அடிப்படையாகக் கொண்டது.

பாரதியாரைத் தம் ஆசிரியராக மதித்து வாழ்ந்த புரட்சிக் கவிஞர் தம் இயற்பெயராகிய சுப்புரத்தினத்தைப் பாரதிதாசன் என்று மாற்றி அமைத்தது, அவர்தம் குருபக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. அவர் பாரதிக்குத் தாசன்; பாவுக்கு வேந்தர், புரட்சிக்குக் கவிஞர், புதுமைக்குக் கவிஞர், புதுவைக்கும் கவிஞர்.

# காளமேகத்தின் சொற்கோலம்



## பதிப்பகச்செம்மல் க.கணபதி

கவி காளமேகம் ஒரு கவிதை வானம்! `பாடு' என்று சொன்னவுடனே பாடிய `ஆசு' மலை அருவி! `மதுர'கவி மன்னன்! `சித்திர'க் கவிச் சிங்கம்! `வித்தார'க் கவி வேங்கை!

"அரிகண்டம் பாடுவாயா?" என்று திருமலைராய மன்னனின் அவைக்களப்புலவர் அதிமதுரகவி கேட்டபோது, "எமகண்டமே பாடுவேன்" என்று எழுந்து நின்று, எதிர்த்து வந்தவரையெல்லாம்

வென்று, வெற்றி என்கிற பாஉச்சியின் மலையிலே ஏறி நின்று, அன்றைய பாட்டுலகிலே ஏறுநடை போட்டவன்தான் காள்மேகம்!

திருக்குடந்தையிலேபிறந 92து, திருவானைக்காவிலே வாழ்ந்து, மோகனாங்கி என்ற சிவன் கோயில் தாசியின் சிரிப்பிலே மயங்கி, அவளுடன் குடும்பம் நடத்தி, அவளுடைய அணைப்புக்காகவே தமது வைணவத்தை உதறி, சைவத்தை அணைத்தவன் இந்தக் காளமேகம்! "தேவியின் அருளை நாக்கிலே பெற்றவர்" என்று இவரைப் பற்றித் தெரிவிப்பாரும் உண்டு.



அதிமதுர கவி, ஆணவம் தலைக்கேறி, " மூச்சுவிடுமுன்னே முந்நூறு பாட்டும், ஆச்சென்னும் முன்னே ஐந்நூறு பாட்டும் பாடுவேன்" என்று காளமேகத்திடம் கூறினார். காளமேகமோ, சீறி எழுந்து, **இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ? – சும்மா இருந்தால் இருந்தேன் எழுந்தேனே யாயின் பெருங்காள மேகம் பிளாய்** என்று பதிலுக்குப் பாடி, அதிமதுர கவிராயரை வாயடைத்தான்.

உண்மையிலேயே இடைக்காலப் புலவர்களுள், காளமேகத்தைப் போன்று, உடனுக்குடன் சுடச் சுடச் சொல் வல்லமை கொண்டு பாட்டெழுதியவர்கள் இல்லை. அவன் ஒரு புரட்சிப் பாவலனாகப் புது நடை போட்டான்! பாட்டு, அவனுக்கொரு விளையாட்டு! பாட்டுக் களத்திலே ஒரு விளையாட்டையல்ல, பல விளையாட்டுகளை அவன் ஆடிக் காட்டினான்!

விநாயகரை அவன் பாடிய பாட்டிலேயே — அவனுடைய வீறுகொண்ட சொற்கோலத்தைப் பாருங்கள்!

**ரானைக் காவிலுறை என்னானைக்கு**
**அன்றளித்தீ**
**ரானைக் கன்றுதனைப் போற்றினால் –**
**வாராத**

**புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்திவரும் தான்!**

**ஏர் ஆனைக்காவில் உறை என் ஆனைக்கு** – திருவானைக்காவிலே கோயில் கொண்டிருக்கிற என் அன்னையாகிய பெண்யானை வடிவெடுத்து நின்ற உமையம்மைக்கு –

**அன்று அளித்த பேர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால்** ஆதிகாலத்திலே சிவபெருமான் அளித்த பேராற்றல் வாய்ந்தஎளனைமுகத்தோனாகிய பிள்ளை யாரைப் போற்றி வழிபட்டால்

**வாராத புத்திவரும் பத்திவரும் புத்திரவுற்பத்திவரும் சத்திவரும் சித்திவரும்தான்** – பிறவற்றால் வராத அறிவும் இறையன்பும் பிள்ளைப்பேறும் திறமையும் தொட்ட செயலிலே துலக்கமும் வரும்.

அடுத்த பாடலுக்குப் போகலாமா?

திருமலைராய மன்னனின் போர்வாளைப் புகழ்ந்து பாடுகிறான் காளமேகம் – அங்கே அவனது சொற்கோலம் காணுங்கள்:

**செற்றலரை வென்ற திருமலைராயன்கரத்தில்
வெற்றி புரியும்வாளே வீரவாள் – மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவாள்அவா ளாம்.**

**செற்றலரை வென்ற** – பகைவர்களை வென்ற

**திருமலைராயன் கரத்தில் வெற்றிபுரியும் வாளே வீரவாள்** – திருமலைராயன் கையிலேயிருந்து போர் விளைத்து வெற்றியை அடைகிற வாளே வீரவாள் ஆகும்.

**மற்றையவாள்** – `வாள்' என்று முடிகிற மற்ற எல்லாம்

**போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள் ஆவாள் இவாள் அவாள்** – இப்போது சொல்லப்பட்ட இந்தச் சொற்களில் பயனற்று உட்கார்ந்திருக்கிற `வாள்' போன்றவையே ஆகும்.

இப்படிப் பாடுவது ஓர் உத்தி! இப்படிப் பல உத்திகளைக் கையாண்டவன் காளமேகம்!

மற்றொரு பாடலைப் பார்ப்போம்.

`கவிராயர்' என்ற பெயரிலே திருமலைராயனின் அவையிலே பலர் இருந்தனர். அவர்கள் காளமேகத்தை ஏளனம் பேசி, இறுமாந்தனர். அந்த ஏளனத்தைக் கண்டு அஞ்சக் கூடியவனா காளமேகம்? `கவிராயர்' என்ற சொல்லைவைத்தே அவர்களைத் திணறவைத்தான். `கவி' என்ற சொல்லுக்குக் `குரங்கு' என்ற பொருளும் உண்டல்லவா? அந்த ஒன்று போதாதா காளமேகத்துக்கு? உடைப்பெடுத்தது கவிதை!

**வாலெங்கே? நீண்ட வயிறெங்கே? முன்னிரண்டு
காலெங்கே? உட்குழிந்த கண்ணெங்கே? – சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்**

இந்தப் பாட்டுக்குப் பொருள் சொல்லத் தேவையில்லை! காளமேகம், திருமலைராயனின் அவையிலே இருந்தவர்களைக் கவிஞர்கள் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. "சேட்டை செய்கிற குரங்குகள்" என்றே கருதினான். அதனாலேயே, அவர்களை நோக்கி, இந்தச் செய்யுளை வீசினான். அதற்குப் பின்னால், அவர்களுடைய போலி ஆணவம் பொடிப்பொடியாகி விட்டது. இது இவ்வாறிருக்க,

குரங்கு' என்றவுடன், காளமேகத்தின் வேறொரு பாடலையும் உள்ளம் அசைபோடுகிறது. `குரங்கு' என்று தொடங்கி, `இடம்' என்று முடிக்க வேண்டும் என்று ஒரு புலவர் கூறினார். காளமேகமோ குறும்புக்காரன். அவனிடத்தில் போய்க் குறும்பு காட்டலாமா? அதே குறும்பு

குறையாமல் பாடலை எடுத்து நீட்டுகிறான், பாருங்கள்:

**குரங்கனலில் வீழ்ந்து வெறிகொண்டு தேள்கொட்ட
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ – விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக் கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்**

"ஒரு குரங்கு நெருப்பிலே வீழ்ந்துவிட்டது. அதனால் அது வெறிகொண்டது. அப்போது அதனை ஒரு தேள் கொட்டிவிட்டது. பாம்பு ஒன்றும் அதன் கையிலே சுற்றிக்கொண்டது. நண்டு வேறு கவ்வியது. குரங்கின் அந்த நிலையைக் கண்டு, பேய் ஒன்றும் விரைந்து சென்று, அதனைப் பற்றிக் கொண்டது. அதன்பிறகு, குரங்கு கள்ளையும் குடித்தது. இத்தனையும் போதவில்லை என்று, அந்தக் குரங்கு பச்சை மிளகையும் கடித்தது என்றால், அதன் சேட்டைகளுக்கு எத்தனை இடங்கள் பாழாகும் என்பதைச் சொல்லவா வேண்டும்? அதை நீயே பார்" என்று காளமேகம் கூறியதிலே வேறு ஒரு பொருளும் உண்டு. "உன்னுடைய குரங்குச் சேட்டைகளுக்கு நான் அஞ்சமாட்டேன்" என்பதையும், செய்யுள் கூறக் கேட்டவருக்குச் சுட்டிக் காட்டியிருப்பது, இதிலே விளங்குகிறது.

"புங்கங் கொம்பு அங்கு இங்கு ஒன்பது என்று வருமாறு பாடல் புனையுங்கள் என்று கேட்டபோது,

காளமேகம் பாடிய பாடலொன்று, சங்கீதம் போல இருக்கிறது – இனிக்கிறது.

**எங்கள் மடத்துக்கு எரிதுரும்பு வெட்டுதற்குப்**
**புங்கங்கொம்பு அங்கிங் கொன்பது புளியங்கொம்பு**
**அங்கிங்கொன்பது வெட்டி நறுக்கிய வெள்வேலங்**
**கொம்பங் கிங்கொன் பது**

எங்கள் மடத்திற்குக் கொண்டுவந்த எரிதுரும்புகள் அங்கும் இங்குமாக வெட்டி நறுக்கிக் கொண்டுவரப்பட்டவை.

புங்கமரத்துக் கிளைகள் ஒன்பது, புளியமரத்துக் கிளைகள் ஒன்பது, வேலமரத்துக் கிளைகள் ஒன்பது. இவற்றைத்தான் காளமேகம், அவ்வளவு நயமாகக் கூறி, நம்முடைய மனங்களைக் கொள்ளையிடுகிறான்.

சிலேடை பாடுவதிலே காளமேகம்தான் சிகரத்திலே வீற்றிருப்பவன். காளமேகத்தின் எத்தனையோ சிலேடைப் பாடல்களைப் படித்தும் கேட்டும் சுவைத்தும் பயன்பெற்றும் இருக்கக் கூடும் நீங்கள். இதோ இங்கு ஒரு சிலேடைப் பாடல்!

விநாயகர், முருகன், சிவபெருமான் மூவருக்கும் பொருந்தும்படி ஒரு பாடல்:

**சென்னிமுக மாறுளதால் சேர்கரம் முன் னாலுகையால் இந்நிலத்தில் கோடொன் றிருக்கையால் – மன்னுகுளக் கண்ணுதலானும் கணபதியும் செவ்வேளும் எண்ணரனும் நேரா வரே.**

**விநாயகருக்கு: சென்னிமுகம் மாறுளதால்** – தலையும் முகமும் உடலமைப்பிற்கு மாறுபட்டிருப்பதாலும்,

**சேர் கரம் முன் நாலுகையால்** – துதிக்கை முன்புறம் தொங்கிக்கொண்டிருப்பதாலும்,

**இந்நிலத்தில் கோடு ஒன்று**

இருக்கையால் – இவ்வுலகில் ஒற்றைக் கொம்பு அமைந்தவராய் இருப்பதாலும்,

**மன்னு குளக்கண் உறுதலால்** – நிலைபெற்ற படையலாக வெல்லக் கட்டி அமைந்து இருப்பதாலும்,

முருகனுக்கு: **சென்னிமுகம் ஆறு உளதால்** – தலையும் முகமும் ஆறு ஆறு இருப்பதாலும்,

**சேர்கரம் முந்நாலு கையால்** – **கரங்கள்** பன்னிரண்டாய் இருப்பதாலும்,

**இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால்** – இவ்வுலகில் குன்றமே இருப்பிடமாய் இருப்பதாலும்,

**மன்னு குளக்கண் உறுதலால்** – நிலைபெற்ற சரவணப் பொய்கையிலே பிறந்திருப்பதாலும்

**சிவபெருமானுக்கு: சென்னிமுகம் ஆறு உளதால்** – தலையிலே கங்கையாறு இருப்பதாலும்,

**முன்சேர் கரம் நாலுகையால்** – முன்னே கைகள் நான்கு இருப்பதாலும்,

**இந்நிலத்தில் கோடுஒன்று இருக்கையால்** – இவ்வுலகில் கைலாய மலை இருப்பிடமாய் இருப்பதாலும் இந்த மூவரும் சமம் ஆவர்.

ஒரே பாடல் – ஆனால் பல பொருள் குறித்த ஒரு சொல் என்பது வரிதோறும் அமையப்

பாடுவது என்பது கிள்ளுக்கீரை அன்று. நிறைந்த இலக்கியப் புலமையும் நிகரற்ற சொல்லாட்சித் திறமையும் இருந்தாலன்றி இது போன்ற ஒரு பாடலை இயற்றவே முடியாது. காளமேகம், நம் தமிழுக்குக் கிடைத்த வரம்!

சிலேடை கிடக்கட்டும்.

காளமேகத்தின் வித்தாரப் பாடல் ஒன்றைக் காதாலே கேளுங்கள்:

**காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை**
**கோக்குக்கூக், காக்கைக்குக் கொக்கொக்க –**
**கைக்கைக்குக்**
**காக்கைக்குக் கைக்கைக்கா கா.**

**காக்கைக்கு ஆகா கூகை** –காக்கைக்குக் கூகை எனப்படும் ஆந்தை இரவிலே பகை. இரவிலே ஆந்தைக்குப் பலம் அதிகம். அதனால், இரவிலே காக்கை ஆந்தையை வெல்ல முடியாது.

**கூகைக்கு ஆகா காக்கை** –கூகைக்குக் காக்கை பகலிலே பகை. பகலிலே காக்கைக்குப் பலம் அதிகம். அதனால், பகலிலே கூகை காக்கையை வெல்ல முடியாது. ஆகையால்,

**கோக்கு கூ காக்கைக்கு** – அரசன் தன்னுடைய நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பாற்றுவதற்கும்

**கொக்குஒக்க** – கொக்கைப் போலத் தக்க காலத்திற்காகக் காத்திருக்க வேண்டும்.

**கைக்கைக்கு காக்கைக்கு** – பகையை வென்று நாட்டைக் காப்பாற்றுவதற்கு,

**கைக்கு ஐக்கு ஆகா** – காலமற்ற காலமென்றால், ஆற்றல் வாய்ந்த அரசனுக்கும் அது தோல்வியைத் தந்துவிடும்.

ககர எழுத்து வரிசையிலே, காளமேகத்தின் கைவரிசை இது! அவரது கவிதை விளையாட்டிலே விளைந்த கதிர்நெல் முத்து இது.

ஒருமுறை மயிலாடுதுறைக்குக்

காளமேகம் சென்றிருந்தார். அங்கே மாயூரநாதர் ஆலயத்திலே ஒருவர், சிவபெருமான் நஞ்சுண்ட பெருமையைக் கூறிக்கொண்டிருந்தார். சிவன் நஞ்சுண்ணுதலைக் கேலி செய்யக் கருதிய காளமேகம், கவியொன்றைப் பொழிந்தார்.

வறுமையிலே சிக்கியவன், வாழ்க்கையை வெறுத்து நஞ்சுண்பான். வாழ்விலே ஏற்பட்ட தோல்வி காரணமாகவும் ஒருவன் நஞ்சு உண்பான். ஆனால், சிவபெருமான் ஏன் நஞ்சுண்டார்? அவருக்கென்ன கவலை? –

***வள்ளலெனும் பெரிய மாயூர நாதருக்கு***
***வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்க –***
***தெள்ளுமையாள்***
***அஞ்சல் அஞ்சல் என்றுதினம் அண்டையிலே***
***தானிருக்க***
***நஞ்சுதனை ஏன் அருந்தினார்?***

"வெள்ளிமலை என்கிற கைலாயம், பொன்மலை என்கிற மாமேரு இரண்டும் சிவபெருமானுக்குச் சொந்தமாயிருக்க, அஞ்சற்க என்று அடிக்கொரு தடவை சொல்லியபடி அருகிலே பார்வதிதேவியிருக்க, விரக்தியடைந்து மயிலாடுதுறையிலே வாழ்கிற இந்த வள்ளல் மாயூரநாதர் நஞ்சினை அருந்தியது ஏன்? நியாயமா?" என்று கேட்கிறார் காளமேகம். அவருடைய பாடலைக் கேட்கக்கேட்க இன்பமாகவே இருக்கிறது. இறைவன் மீது அவர் பாடிய எல்லாப் பாடல்களுமே புதிய பாங்கிலே அமைந்தவை. மனப்பாடம் செய்தும், மற்றவரிடம் செப்பியும் மகிழத்தக்கவை. இவை இப்படியிருக்க, ஆழமான கருத்தோட்டப் பாடல்களையும் காளமேகம் பாடியிருக்கிறார்.

பெண்ணொருத்தி, காதல் நோயாலே உடல்மெலிந்து கிடக்க, அது தெய்வக் குறையாலே வந்தது என்று தாய், தெய்வத்திற்குப் பலிபூசை இடுகிறாள். அதைக் கண்ட அந்தப் பெண், தன் தோழியிடத்திலே கூறுவதுபோல அமைந்த பாடல் ஒன்று. இராசிகளின் பெயர்களைத் தெரிந்துவைத்திருப்பவர்க்கே இந்தப் பாடலின் பொருள் விளங்கும்.

***முந்நான்கில் ஒன்றுடையான் முந்நான்கில்***
***ஒன்றெடுத்து***
***முந்நான்கில் ஒன்றின்மேல் மோதினான்–***
***முந்நான்கில்***
***ஒன்றரிந்தால் ஆகுமோ ஓஓ மடமயிலே***
***அன்றணைந்தான் வாரா விட்டால்!***

***முந்நான்கில் ஒன்றுடையான்*** – பன்னிரண்டு இராசிகளிலே ஒன்றான மீனைத்(மகரம்) தன் கொடியாகக் கொண்டவனாகிய மன்மதன் –

***முந்நான்கில் ஒன்றெடுத்து*** – பன்னிரண்டு இராசிகளிலே ஒன்றான (தனு) வில்லினை எடுத்து,

***முந்நான்கில் ஒன்றின்மேல் மோதினான்*** – பன்னிரண்டு இராசிகளிலே ஒன்றான கன்னியாகிய என்மீது மோதிவிட்டான்

***ஓஓ மடமயிலே*** – ஓ என் அழகிய தோழியே!

***அன்றணைந்தான் வாராவிட்டால்*** – அந்த நாளிலே என்னை அணைத்த என் காதலன் வராமல்,

***முந்நான்கில் ஒன்றரிந்தால் ஆகுமோ?*** – பன்னிரண்டு இராசிகளிலே ஒன்றான ஆட்டை (மேஷம்) அரிந்து பலியிட்டு விட்டால், என் நோய் தீர்ந்துவிடுமோ?

மகரம், தனுசு, கன்னி, மேஷம் என்கிற நான்கு இராசிகளின் பெயர்களைக் கொண்டு இந்தக் கவியை அமைத்த காளமேகத்தின் நுண்மாண் நுழைபுலத்தை என்னென்பது? வாழ்க காளமேகத்தின் சொற்கோலம்!



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் ச...
பதிவு இல. 73
10. 5. 1950
அறக்கட்டளை நிலையம்
கசெட் இல. 14805
7. 6. 1968

# பெரியாரில் பாவேந்தர்

'திருச்சுடர்' கே.ஆர்.இராமசாமி மலேசியா

நான்தான் திராவிடன்
என எண்ணுகையில்
வான்தான் அவன் புகழ்

எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாடல் இசைத்து, தன்னை யாரென்று உணராது, தண்ணடை எருமையாகக் கிடக்கின்ற தமிழினத்திற்குத் தலையிலடித்து உணர்த்தினார். இதன் வழி, எதிர்கால வாழ்வுக்குத் `தன்னம்பிக்கை எனும் ஊன்றுகோலைத் தமிழர் ஒவ்வொருவருக்கும் பெற்றுத் தந்தார்.

என் இனம், உலகத்தின் மற்ற
இனத்திற்கு ஈடாக மானமும்
அறிவும் கல்வியும் பெற்ற
சமுதாயமாகத்
தலைநிமிர்ந்திட வேண்டும்.

என இலட்சியப் போராட்டங்களை நடத்தினார் தமிழர் தலைவர் தந்தை பெரியார்.

பெரியாரின் இலட்சிய வீணையைக் கையிலே ஏந்தித்தான், பாவேந்தர் பாரதிதாசன், இசை நாதங்களை எழுப்பினார்.

"சாதி ஒழித்திடல்
ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று"

எனப் பாவேந்தர், சாதி ஒழிப்பு, தமிழ் வளர்ப்பு ஆகிய இரண்டு பணிகளையும், தமது பாட்டுத் திறத்தாலே செய்து காட்டினார். ஆனால், தந்தை பெரியார், சாதியை ஒழிப்பதையே முதல் வேலையாகக் கருத்திலே கொண்டார். ஆனாலும், தமிழை வளர்க்கப் பெரியார் தடையாக் இருந்ததில்லை. மொழிப் பெருமை ஒன்றையே மொழிந்து, காலத்தைப் பெரிதும் வீணடிப்பதைப் பெரியார் கண்டித்தார். ஒரு பெரிய சமுதாய மாற்றத்தைக் காணப் போராடியவர் பெரியார். எனவே அந்த மாற்றத்திற்குத் தீங்கு செய்த சாதியெனும் ஆணிவேரைப் பிடுங்கி எறிவதிலேயே அவர் அதிகமான கவனம் செலுத்தினார்.



தமிழ் கற்ற பாவேந்தர், "பெரியாரின் இலட்சியத் தடம் இது தான்" என்பதைப் புரிந்து கொண்டு, அவரின் தொண்டு சிறக்கவே தமது கவிக் குரலை வானென உயர்த்தினார். பாவேந்தரின் பாட்டுத் தொண்டிலே சரிபாதி, பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே அமைந்திருக்கின்ற பாங்கினை நாம் பார்க்கலாம்.

சாதி கலைந்திட்ட ஏரி—நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்

சாதிப் பிணிப்பற்ற தோளே—நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்று பாவேந்தர் பாடுகிறார் என்றால், இங்கே அவர் பெரியாரின் சாதி ஒழிப்புப் பணியையே முழு முதற்பணியாகக் கருதுகிறார் என்பது வெள்ளிடை மலையாகும்; மலைமேல் விளக்குமாகும்!

மச்சினில் வாழ்பவ ரேனும்—அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு

பெரியாரின் தன்மான வாழ்வைத்தான், பாவேந்தர் இவ்வாறு பேசுகிறார்.

"மச்சைத் துறந்தாலும் மானத்தைத் துறந்து வாழக் கூடாது என்பதுதான் பெரியார் கொள்கை. பாவேந்தரின் கொள்கையும் அதுதான்.

இருக்கும் நிலைமாற்ற ஒரு
புரட்சி மனப் பான்மை,
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும்
எழுத்தாளர் கடனாம்

என்றார் பாவேந்தர். இந்த வரிகளுக்கோர் இலக்கியமாகவே பெரியார் இயங்கினார். பெரியாரின் எழுத்துக்களைப் படித்தறிந்தோர், `அவர் ஒருவர்தான் புரட்சி எழுத்தாளர்' என்பதையும், `புதியதோர் உலகம் காணப் புறப்பட்டவர்' என்பதையும், அதற்காகப் `போர் நடத்தியவர்' என்பதையும் உள்ளங்கை நெல்லிக் கனியாக உணர்வர்.

அந்நாளின் இலக்கியத்தை
ஆய்தல் ஒன்றே
அரும்புலமை எனும் மடமை
அகன்ற திங்கே!

அந்நாளில் இலக்கியத்தைப் படித்து ஒரு புலவராகவே உலாவந்த பாவேந்தர் தான் இப்படிக் கூறுகிறார்! பாவேந்தர்— பெரியாரின் சீடர்களிலே ஒருவராகத் தம்மை முழுவதுமாக மாற்றிக் கொண்டுதான், இப்படியெல்லாம் பாடினார்.

"மறைவர்க நமக்குள்ளே
பழம் பெருமை சொல்வதிலோர்
மகிமை இல்லை"

என்ற பாரதியாரின் வரிகளிலே கூட, பெரியாரை நம்மால் காணமுடிகிற போது, பாரதிக்குத் தாசனாகிய பாவேந்தரின் வரிகளிலே—வரிக்கு வரி, பெரியாரை யன்றி வேறு யாரை நாம் காண முடியும்?

பெரியார் மேடைப் பேச்சிலே தந்த கருத்துக்களை— பாவேந்தர் பாரதிதாசன் ஓடைக் குளிர் மலர்ப் பாக்களிலே தந்தார். `இந்த வெளியீடு முறையின்' வேறு பாட்டைத் தவிர, வேறு கொள்கை வேறுபாடுகள் எவையும் வெண்தாடி வேந்தருக்கும் வெட்டுமீசைப் பாவேந்தருக்கும் இடையிலே இருந்ததில்லை.

எடுத்துக் காட்டாக, எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்காதவர் பாவேந்தர்.

மொழிக்குரிய உயர்கருத்தும் உலகளாவும்
முன்னேறும் அறிவியலை வளர்க்கும் எண்ணம்
விழிக் கடையின் ஓரத்தும் வராத பேர்கள்
வெதும்புவதேன் எழுத்தினிலே சீர்திருத்தம்?

என்று கேட்டவர் அவர்.

எழுத்தமைப்பால்
சிந்தனைக்கு வந்த தடை செப்புவீரே!

என்றும் வினா எழுப்பினார் பாவேந்தர்.

ஆனால், பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை அவர் எதிர்க்கவில்லை. "பெரியாரின் அந்த எளிய எழுத்துச் சீரமைப்பைப் பின்பற்றினாலே போதுமானது" என்றே அவர் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுவார்க்கு எடுத்துரைத்தார்.

எழுத்துகளைச் சீர்திருத்தும் ஆர்வலர்க்கோர் விண்ணப்பம்; எதற்காக இந்த வேகம்? பழுத்துக்கனிந்திட்ட மொழிக்கனிக்குப் பழம் அழுகச் செய்வதுவா உங்கள் திட்டம்? ஒழுக்கத்தில் ஓர் அழகு வேண்டு மாயின் உயர்பெரியார் திருத்தத்தை ஏற்க. மேலும் கழுத்தறுப்பு வேலைகளைச் செய்வதெல்லாம் காளைகளைக் காயடிக்கும் செயலை ஒக்கும்! என்று கூறினார். எந்த நிலையிலும் பாவேந்தர், பெரியாரின் ஒருவராகவே இலட்சிய முழக்கம் செய்து வந்தார் என்பதை எண்ணும்போது, இன்பம் மீதூர்கிறது.

உயிரியல் பயிரியல் பாடு—நம்
உடலியல் மருந்தியல் ஏடு
தயிரினில் வெண்ணெய் போல் தேடு—நின்
தன்னறிவால் உயரும் நாடு!

என்று பாவேந்தர் நிறுத்தியிருக்கிற வார்த்தைகளிலே `தன்னறிவு' என்பது பெரியாரின் `பகுத்தறிவையே' சுட்டி நிற்கிறது என்பதில் ஐயம் உண்டோ? இல்லை.

அறியாமை இருட்டில் ஆழ்ந்திய தமிழர்க்கு
அறிவொளி கூட்டிய அன்புடைப் பெரியார்
உழைக்காதுண்ணும்
சோற்றால் அடித்த சோம்பேறிகள் எலாம்
ஆட்டம் கண்டனர் அறிஞர் பெரியாரால்!

என்றெல்லாம் பாவேந்தர் பெரியாரின் பெருமைகளை இவ்வுலகுக்குப் பறைசாற்றினார்.

சாதி, மதம், சடங்குகள், புராணங்கள், குருட்டு நம்பிக்கைகள்—இவை அனைத்தையும் பெரியார் சாடினார். மக்களின் முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களாக இருந்த இவை எல்லாவற்றையும் ஒழிக்கப் பாடுபட்டார் பெரியார். பாவேந்தரும், தம் பாடல்களிலே இவற்றைப் பலமாகத் தாக்கி எழுதினார்.

சமத்துவப் பூங்காவை அமைக்கச் சலியாது உழைத்தார் பெரியார். சாய்ந்த தராசு கூடாது என்றார். "சமன்செய்து சீர்தூக்கும் சான்றோர்களே சமுதாயத்திற்குத் தேவை" என்று அவர் முழங்கினார்.

அதே பாதையிலே நடைபோட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும்,

> வாழ்வதிலும் நலம்
> சூழ்வதிலும்—புவி
> மக்களெல்லாம்
> ஒப்புடையார்!

என்று கவிதை பாடினார்.

புதுவையிலே பிறந்த அந்தப் புரட்சிக் குயில், புதுவைப் பெரியாராய்ப் பாட்டிசைத்து, ஈரோட்டுப் பெரியாரோடு இரண்டறக் கலந்திருந்து, வீழ்ச்சியுற்ற நம் தமிழர்கள் எழுச்சி கொள்ளப் பாடுபட்ட அந்த வீர வரலாற்றை எண்ணும் போது, அவருள்ளே நாமும் கரைந்து போகிறோம், கலந்து போகிறோம்.

பெரியார் வழியில் பாவேந்தர் ஏற்றி வைத்த அந்தப் பாட்டுத் திருவிளக்கை, வையகமெங்கும் நாமும் ஏந்திப் பிடிக்க விரும்புகிறோம்.

அவர்களின் அறிவுப்பணி தொடர, அயராது நாமும் உழைக்கிறோம்.

தமிழகத்தில் மட்டுமல்ல, மலேசிய மண்ணிலும், அந்தப் பகுத்தறிவுப் பகலவர்களின் தங்கம் நிகர் எண்ணங்களைப் பரப்பிய வண்ணம் உள்ளோம்.

தமிழர்கள் வாழும் நாடுகள் தோறும், அவர்களின் உரையும் பாட்டும் ஒளியின் தீபங்களாய்ச் சென்று பரவும் காலம் அதிகத் தொலைவிலே இல்லை!

நமது பணியும் பயணமும் நிற்கப் போவதுமில்லை!

அவர்களின் கொள்கைகள் சிறந்தவை. ஆகையால், வெற்றி நிச்சயம்!



# தமிழ் நூல்

டாக்டர் ஆறு. அழகப்பன்

பன்னெடுங்காலமாகத் தமிழில் இலக்கண நூல் எதுவும் தோன்றவில்லை. நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும் பிற மொழிக் கலப்பாலும் தமிழ்மொழியில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றிற்கெல்லாம் இலக்கண வரையறையோ விதிகளோ வகுத்துக் கூறும் இலக்கண நூல்கள் தோன்றவில்லை. அது தமிழ்மொழிக்குள்ள ஒரு குறை. அக்குறையை நிறைவு செய்வது போல் தோன்றியது **தமிழ் நூல்**. அந்நூல் பற்றிய சில கருத்துகள் இங்குத் தரப்படுகின்றன.

**ஆசிரியர்**

தமிழ் நூலின் ஆசிரியர் இலக்கணக்கடலின் நிலை கண்டுள்ள புலவர் **த. சரவணத்தமிழன்** அவர்கள். இவர் தனித்தமிழ் இயக்கச் சார்பினர்; ஞா.தேவநேயப்பாவாணரின் பட்டறையிலும், பாவலர் ஏறு பெருஞ்சித்திரனாரின் பாசறையிலும் உருவாக்கப்பட்டவர். இவர் செய்து வரும் தமிழ்ப்பணி பெரிது.

இவர் திருவாரூரின் அண்மையில் **உள்ள** ஒரு மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிகிறார். அவ்வூரில் இயற்றமிழ்ப் பயிற்றகம் என்ற நிலையம் ஒன்றை நிறுவித் தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறார். இவர் தமிழ்ப் புலமையும் வடமொழிச் தேர்ச்சியும் உடையவர்; சைவ சமய நூல்களை முறையாகப் பயின்றவர்; கவிதை இயற்றுவதில் வல்லவர், யாப்பியல், தொல்காப்பியச் சொல்லடைவு, திருக்குறள் திறனாய்வு முதலிய பதின்மூன்று அரிய நூல்களை இயற்றியவர்.

**நூல்**

சரவணத் தமிழனால் இயற்றப்பட்ட இலக்கண நூல் தமிழ்நூல் என்னும் பெயரோடு 1972-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இது ஐவகை இலக்கணங்களில் எழுத்து, சொல் என்ற இரண்டையும் விரித்துரைப்பது.

> **மனமாற்றம்**
> **ஏற்படாதவரை**
> **மதமாற்றம்**
> **இருந்தே தீரும்!**
> **மலேரியாக்கிருமி**
> **இரத்தத்திலே**
> **இருக்கும்வரை**
> **காய்ச்சல்**
> **இருந்தே தீரும்!**
>
> **—பேரறிஞர் அண்ணா**

பழமையை விடாமல் போற்றிப் புதுமையைப் புகுத்த வேண்டிய இடங்களில் புகுத்தி இலக்கண விதிகளை அமைத்திருக்கின்றார் ஆசிரியர். புதுமைக் கருத்துக்கள் மிகத் துணிவோடு கூறப்பட்டிருக்கின்றன.

நூற்பாக்கள் நன்னூலின் அமைப்பை ஒட்டியிருக்கின்றன. நன்னூல் சூத்திரவிதிகளைப் போலவே இந்நூல் சூத்திரங்களும், சொல், புணர்ச்சி, வழக்கு பற்றிய விதிகளைக் கூறுகின்றன. நன்னூலுக்குப் பின் எண்ணூறாண்டுக்

காலமாகத் தமிழில் வழங்கிவரும் இலக்கிய மரபுகளையும் சொல் வழக்குகளையும் விதிப்படுத்திக் கூறியுள்ள இம்முயற்சி பாராட்டத்தக்கது.

*அமைப்பு*

**இந்நூல்** 1. எழுத்தியல், 2. சொல்லியல், 3. உறுப்பியல், 4. புணரியல் 5. பொதுவியல், 6. ஒழிபியல், 7. தொடரியல்

என்னும் ஏழு இயல்களையும் நானூற்று முப்பத்து மூன்று நூற்பாக்களையும் அதன் உரைகளையும் கொண்டுள்ளது. நூற்பாக்கள் ஆசிரியப்பாவால் அமைந்தவை. எளிமையாகப் பொருளுணர்த்துபவை; தனித்தமிழ்ச் சொற்களாலானவை. பழமை மரபை அடியொற்றியவை.

இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து ஆகியவற்றின் நூலாசிரியர்கள் செய்ததுபோல, இவரே அந்நூற்பாக்களுக்கு உரை எழுதியுள்ளமையால் இதுவோ, அதுவோ எனப் பொருள் மயக்கத்திற்கு இடமில்லாமல் தெளிவாகக் கருத்தை உணர முடிகின்றது

நூற்று எண்பத்து நான்கு பக்கங்களையுடைய இந்நூலின் நூற்பாக்களை விட உரைவளமே சிறப்பாக அமைகிறது. இவ்வுரை நுதலுரை, பொருளுரை, சான்றுரை, விரிவுரை என்பவற்றில் ஏற்பக் கொண்டு எழுதப்பெற்றிருக்கும் உரை நூற்பாவினும் சிறிது கடுமை கொண்டிலங்குகிறது' என ஆசிரியரே கூறியிருப்பது இதனை விளக்கவல்லது.

*தனித்தன்மை*

1. தமிழின் தூய்மையைப் போற்றல்; தனித்தமிழ்க் கொள்கை.

2. சொற்களின் திரிவுமுறைகளையும், மரூஉக்களின் மூலத்தையும் காட்டல்

3. நிறுத்தல் குறிகளுக்கு நூற்பாவில் அமைத்து இலக்கணங் கூறுதல்

4. மதச்சார்பு, கடசிச்சார்புகள் இல்லாமல் கருத்துக்களைக் கூறுதல்; ஒருவரைப் பாராட்டுதல்

என்பன இந்நூலின் தனிச்சிறப்புக்கள்.

*நுவல் பொருள்*

தொல்காப்பியர் கூறுவதைப் போன்று ஒலி எழுத்துக்கள் அவற்றின் பிறப்பு ஆகியவை நூலின் தொடக்கத்தில் கூறப்படுகின்றன. முதல் கடை இடை எழுத்துக்கள் வரி எழுத்துக்கள் பற்றிய விதிகளும் நூற்பாக்களில் இடம் பெறுகின்றன.

சொல்லியலில் தொகைநிலைகள், பெயர், வினை இடைச் சொற்கள் ஆகியவற்றின் இலக்கணம் பேசப்படுகிறது.

எக்காரணத்தாலோ இடைச்சொல்லை அடுத்து உரிச்சொல் இலக்கணம் கூறப்படவில்லை; பின்பகுதியில் ஒழிபியலில் கூறப்படுகிறது.

பெரும்பாலும் பழைய மரபுப்படியே புணரியல் விதிகள் அமைகின்றன. உயிர்முன் உயிர், மெய்ம்முன் உயிர், உயிர்முன் வலிமெய், மெய்ம்முன் வலிமெய் என்ற பாகுபாடுகளில் அடக்கி இவ்விதிகளை வரையறுக்கின்றார்.

பொதுவியலில் வழக்கு, வழுவகைகள், வினாவிடை, இடைப்பிறவரல், அடுக்கு முதல் இணை ஆகியவை கூறப்படுகின்றன. ஒழிபியலில் உரிச்சொல் குறிப்புவினை சார்பெழுத்துக்களான குற்றியலுகரம் குற்றியலிகரம் ஐகாரம் முதலியவற்றின் குறுக்கங்கள் ஆகியவை விளக்கம்பெறுகின்றன.

இவை இலக்கணத்தின் சிறப்பான பகுதிகள். நன்னூலார் இவற்றைத் தொடக்கத்தில் எழுத்தியலில் கூறுகிறார். இதுவே முறைமை, ஆனால் இவ்வாசிரியர் இவற்றைச் சிறப்பில்லாதன போல ஒழிபியலில் கொண்டு போய் வைத்துக் கூறுவது ஏன் என்பது சிந்தனைக்குரியது.

தொடரியல் என்பது வேறு. இலக்கணிகள் கூறாத புதுப்பிரிவு. வாக்கிய வகைகளுக்கான இலக்கணவிதிகளும், விளக்கங்களும் இதில் கூறப்பட்டுள்ளன. ஆங்கில உரைநடையின் அமைப்புக்குக் கூறப்படும் வாக்கிய வகைகளும், தொடரமைப்புகளும் இக்கால முறையை ஒட்டி எழுதப்படுகின்றன. இது இலக்கணப் பாதையில் புதியதோர் வளர்ச்சி!

காற்புள்ளி போன்ற நிறுத்தற்குறிகளுக்கு நூற்பாவில் இலக்கணங்கூறியவர் இவரே எனலாம்.

*புதுமைக் கருத்துக்கள்*

இந்நூலில் கூறப்பட்டுள்ள புதுக்கூறுகள் தனிப்பட்டியலிட்டுக் காட்ட வேண்டியவை. ஆசிரியரின் புதுமை வேட்கை இவற்றில் புலனாகிறது.

பலுக்கற்படம், எண்திரிபுப்படம்-சிறப்பாக அராபிய வடிவ ஒப்பீடு பாராட்டத்தக்கவை.

அச்செழுத்திற்கும் தட்டச்சிற்கும்
பச்சைச் சிறுவர் பயிற்சியா னுக்கும்

இ ஈ உ ஊ வரிசை உயிர்மெய்
எழுபத் திரண்டு குறிதனித்தெழுதலாம்.
-நூற்பா.43

என்னும் நூற்பா இக்காலப் புதுமை பற்றிக் கூறுவது.

அச்செழுத்திற்கும் தட்டச்சிற்கும் உள்ள எழுத்துச்சுமைக் குறைப்பிற்கும், பள்ளிச்சிறுவர் மொழிப்பயிற்சிக்கும் மாறுபட்டுக் குழப்பம் இன்மைக்கும் வாய்ப்பாக இ, ஈ, உ, ஊ என்னும் நான்கு உயிர் ஏறும் உயிர்மெய் வரிசையிலுள்ள 72 எழுத்துக்களையும் குறிகளைத் தனித்துப் பிரித்து முன்னும் பின்னும் எழுதல் நன்றாகும் என்பது இதன் பொருள்.

இவ்வகையைக் கடைப்பிடித்தல் முப்பத்தாறு வடிவ மாற்றம் குறையும், மற்றும்,

`பெருவர அடைய தகுகாற் புள்ளி
பெயர்கள் தொகுப்பு, முகவரி, பட்டம்
மடல்விளி, மேற்கோட் குறிமுன்பு, இலக்கம்,
பெருந்தொடர் எழுவாய், எச்சப் பயனிலை,
இணைச் சொல், இயை சொல் இவற்றின்
பின்வரும்'

-நூற்பா.420

என்பன போல்வன புதுமை கிளப்பன.

`முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்
மொழியும்
பொன்னே போல் போற்றுவோம்'

என்பது நன்னூலார் கடைப் பிடித்த உத்திகளில் ஒன்று. இதனை இந்நூலாசிரியரும் கையாண்டிருக்கின்றார்.

"எட்ட னுருபே இயற்பெய ரீற்றின்
திரிபு, குன்றல், மிகுதல், இயல்பு-அயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே"

-நூற்பா.81

"உயிரோடு உயிர்வந்து ஒன்றுறு காலை
இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும், ஏமுன்இவ் விருமையும்
ஒருமை உறுஞ்சொலில் உடன்படு
மெய்யாம்" -நூற்பா-201

என்பன போல்வன சிறு மாற்றத்தோடு எடுத்தாளப்பட்ட நன்னூல் நூற்பாக்கள்.

எப்பொருள் எச்சொல்லின் எவ்வா
றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே
-நூற்பா.283

முதலை ஐயுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயின் சினைக்கை யாகும்
-நூற்பா .305

என்பன போல்வன மாற்றமின்றி அப்படியே எடுத்தாளப்பட்ட நன்னூல் நூற்பாக்கள்.

**நூலின் சிறப்பு**

காலத்திற்கு ஏற்ற இலக்கணங்களை, பன்னெடுங்காலமாக விடுபட்டுக் கிடந்த இலக்கணங்களைக் கூறுவது ஒரு சிறப்பு.

பழைய இலக்கண நூல்களில் கையாளப்பட்டுள்ள நூற்பாக்களின் நடை சற்று கடுமையானது. உரையாசிரியர்கள் எடுத்துக்கூறாவிட்டால் பலவற்றின் பொருள் இன்னதென்றே அறிய இயலாமற் போயிருக்கும்.

தமிழ்நூலில் உள்ள நூற்பாக்கள் அனைத்தும் மிகவும் எளிமையான நடையில் அமைந்தவை; பள்ளிச்சிறார் பயின்று பொருளுணரத் தக்க நிலையில் அமைந்தவை.

(எ.டு)"உயிரும் மெய்யும் அடிப்படை எழுத்துகள்"
-நூ.4.

"விரைவு பற்றிக் காலம் தவறும்" -நூ.280

வடமொழி எழுத்துக்கள் தமிழில் திரிந்துவரும் விதியைக் கூறும் பகுதி தெளிவாக உள்ளது. வடசொற்களில் மொழி பெயர்ப்பாகப் பல புதிய சொற்கள் தமிழில் ஆக்கப்பட்டுள்ளன.

நிருபர் - மடலர்
பக்கம் - புறம்
கிளவியம் முதலியன.

காலத்தை மூவகைப் படுத்தியதோடமையாது, இறப்பு, இறப்பிறப்பு, இறப்பு நிகழ்வு, இறப்பெதிர்வு என்றிவ்வாறு மூன்றையும் முறையுறப் பகுத்துக் காட்டுகிறார். இது ஆங்கில மொழிமரபை அடியொற்றியதாகும். உரைநடை இலக்கண வளர்ச்சியில் இப்பகுப்புக்கு இலக்கணம் கூறவேண்டியது இன்றியமையாத பணியாகும்.

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களை ஒப்பிட்டு ஒவ்வொன்றிலும் கூறப்படும் முதலெழுத்து சார்புஎழுத்துக்களைப் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது பாராட்டத்தக்க தொன்றாம்.

**நூற்பயன்**

அறம் பொருள் இன்பம் அடைதல்
நூற்பயனே என்பது

பழமை இலக்கியக் கொள்கை.

காலத்திற்கேற்ற கருத்துக்களை உணர்ந்து தமிழை வளர்க்கவும், பிழையின்றிப் பேசவும் எழுதவும் அறிவு பெறவும் நூல் வேண்டுமென்பது புதுமை இலக்கியக் கொள்கை. இக்கொள்கையை ஒட்டி,

தமிழ் நூலால் பின்வரும் பயன்கள் விளைந்துள்ளன.

1. தமிழிலக்கணம் புது மரபுகளுக்கு வகுக்கப்படவில்லை என்ற குறை நீக்கப்பட்டது.

2. புதிது புதிதாக இக்காலத்தில் எழுந்துள்ள இலக்கணக் கோட்பாடுகள் பிறமொழிக்கலப்பால் விளைந்துள்ள மரபுகள் முதலியவை பலரும் அறியும் வண்ணம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

3. ஆங்கில உரைநடையில் கையாளப் பெறும் வாக்கிய அமைப்புக்களை ஒட்டித் தமிழ் வாக்கிய நடைக்கும் இலக்கணம் அமைக்கப்பட்டது.

4. தமிழ் தனித் தன்மை பெற்றது என்ற கருத்து நாட்டப்பட்டது.

5. புதுமை மரபுகளுக்கு இலக்கணம் எழுதவேண்டுமென்ற ஆர்வம் தூண்டப்பட்டது.

மேலும் ஆக்க வேண்டியவை:

1. இக்கால எழுத்து மாற்றங்கள்

2. மொழிபெயர்ப்பு, சொல்லாக்கம், உரைநடை அமைப்பு பற்றிய சில விதிகள்

3. சிறுகதை, புதினம், திறனாய்வு போன்றவற்றின் கொள்கைகளை விளக்கும் இலக்கணம்.

4. செய்தி இதழ்கள்,-நாளிதழ், வாரஇதழ், மாத இதழ் இவற்றில் கையாளப்படும் உரை நடை பற்றிய கொள்கை விதிகள் - இன்னும் சில.

இலக்கண நூல் வரலாற்றில் புலவர் சரவணத் தமிழனின் தமிழ்நூல், தமிழ்மொழிக்குப் பாதுகாப்பான ஒரு நூல்; பவணந்தியார் தமிழ்மொழிப் பாதுகாப்பிற்காகப் 'பதவியல் எழுதினார். நம் நூற்றாண்டுப் பவணந்தியாராக இந்நூலாசிரியர் விளங்குகிறார்.



# எழுச்சிக்கு ஒருவழி

பாவலர் முரசு. நெடுமாறன் மலேசியா

என்சிறு குடிசை எழில்பெறு வண்ணம்
ஓங்கி வளர்ந்தே ஒளியின் வெப்பம்
வாங்கி; குளிர்மை வழங்கி எங்களை
மகிழ்வில் ஆழ்த்தும் மரமே! உன்றன்
எழுச்சி மிக்க இனிய கதையை
எண்ணி எண்ணி இன்புறு கின்றேன்

சின்னஞ் சிறுவிதை மண்ணில் பதிய,
புத்தம் புதுமுளை புடைத்திடக் கண்டே
ஒருசிறு வேலி உன்னைச் சுற்றி
தந்தை எழுப்பினார்; தண்ணீர் வார்த்தார்!
மளமள வென்று வளர்ந்தாய் குழந்தைபோல்
வீட்டார் உன்னை விரும்பிப் போற்றினர்!
சிறுசெடி பெருஞ்செடி ஆகஓர் மரமாய்
ஒருசில ஆண்டில் உருவம் கொண்டாய்!
வளர்த்தவர் மகிழ வனப்பும் பயனும்
வழங்கி நன்மை விளையச் செய்கிறாய்!
உன்னினம் தழைக்கவும் ஓரா
யிரம்விதை
உதிர்க்கிறாய்!நொடிதொறும்
உவப்புறும் வண்ணம்
பயன்களை அள்ளிப் பாய்ச்சிடு
கின்றாய்!
வள்ளுவ னாரும் -வாழ்த்துக் கூறினார்
உன்றன் பெருமையை உன்னி
மகிழ்கையில்
என்னின நிலைமை எண்ணி
அழுகிறேன்!



வளர்ச்சி யின்றி மாறுத லின்றி
செழுமை ஓங்கும் சீர்மை யின்றி
கிணற்றில் போட்ட கல்லெனக் கிடக்கும்
விந்தையை எண்ணி வேகிறேன் மரமே!

விதையே கருகினால் விளங்குமோ தலைமுறை?
வளர்ச்சி தடைப்படின் மாறுதல் ஏது?
மாறுத லின்றேல் நிலைக்குமோ வாழ்வு?
எத்துறை நோக்கினும் எழுச்சி இலையே!
நாளும் நாளும் நலிவே தொடரின்
இறுதி என்னாம்? எண்ணும் போதெலாம்
நடுங்கும் உடலம்! நல்லரு மரமே,
அஃறிணை உயிர்நீ ஆனால் பிறப்பின்
நோக்கம் சிதையா துயர்நிலை
அடைகிறாய்! உழன்று முடிவில்
ஓயும் உடல்களைச்
சாம்ப லாக்கிச் சாம்ப லாகும்
உன்னினம்! அதனால் உறவு நமக்குள்
உண்டே அந்த உறவின் பேரால்
உன்னைக் கேட்கிறேன் உனது
வாய்க்குப்
பேறு பெற்ற பெரும்புகழ் மெய்களே
கிடைக்க வேண்டு மென்பதற் கேனும்
எழுச்சியின் மறைபொருள் என்ன
என்பதை எம்மினம் உணர எடுத்
துரைப்பாயே!

# திருக்குறளில் அறிவியல்

## பிணியும் மருந்தும்

டாக்டர், ஜே.ஜி.கண்ணப்பன்

ஒளவையார் கூறியபடி, திருக்குறள் நின்று சுடரெரித்து நெஞ்சத்தில் இருள் அகற்ற, அன்று போல் இன்றும் இலங்குகிறது. இன்றைய அறிவியலில் கண்டுபிடிக்கப்பட்ட தத்துவங்களைத் தெள்ளத் தெளிவாக இலகுவாகக் குறள்களிலே காண்கிறோம். தமிழிலே அறிவியல் முடியுமா என்று ஐயப்பாடு கொள்ளுபவர்களுக்குக் குறளைப் பரந்த உள்ளத்துடன் ஆராய்வார்களேயானால், தமிழிலே முடியாதது என்பதில்லை எனத் திட்டவட்டமாக அறியலாம்.

உலக நலச்சங்கம் (*World Health Organisation*) கி. பி.2000 ஆண்டிற்குள் பாரினில் யாவருக்கும் முழு நலம் வேண்டும். அதனால் மகிழ்வு வேண்டும் எனத் தீர்மானித்துள்ளது. அதனை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு நாடும் தனது ஆண்டுத் திட்டங்களில் நல வாழ்வினைக் குறிக்கோளாகக் கொண்டு பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வந்துள்ளது.



நமது நாட்டில் சுதந்தரம் பெறாத காலத்தில் வறுமையினாலும், கொடிய நோயினாலும், மக்கள் நலிவுற்றும் மடிந்தும் வந்துள்ளார்கள்.

இதனை உணர்ந்து நமது நாட்டின் சிற்பி பண்டித நேரு அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்கள் பலவற்றில் நல வாழ்விற்கும், நோய் நீக்கும் பணிக்கும் முக்கியத்துவம் வழங்கினார். முன்னர் பெரியம்மை, பிளேக், காலரா, மலேரியா, டிப்த்தீரியா போன்றவை நாட்டு மக்களைக் கொன்றன. இந்தக் கொல்லும் நோய்கள் பரவா வண்ணமும், முழுமையாக நீங்கும் பொருட்டும் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வேகமாகச் செயல்பட, மத்திய அரசும், மாநில அரசும் மிகவும் பாடுபடுகின்றன.

இந்த முன்னேற்றத்தினால், நமது நாட்டு மக்களின் சராசரி ஆயுள் 60 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்று; ஆரோக்கியத்தையும், ஆக்க வேலையில் செயல்படும் திறனையும் கொண்டுள்ளோம். இன்றைய நாட்டின் செழிப்பிற்கு நீண்ட ஆயுளும், நல வாழ்வும் முக்கிய காரணம்.

அதனையே வள்ளுவர், ஒரு நாடு சிறப்பாகத் திகழ, அணியாக விளங்க முதல் தேவையான பிணியின்மையை எடுத்துக் கூறுகிறார். பின்னர், "செல்வங்களைக்" கூறுகிறார்" எல்லாச் செல்வங்களையும் கூற வேண்டும். கனிவளம், நீர்வளம், உணவுவளம் இப்படியாக மனிதனுக்கு என்னென்ன தேவையோ, அவற்றை நிலத்திலிருந்து இலகுவாகவும், அபரிமிதமாகவும் பெற வாய்ப்பு உள்ளது. அடுத்ததாக "விளைவு" எனக் கூறுகிறார். நமது

நாட்டிலேயே உண்டாகும் உற்பத்தியாகும் தேவைப்பொருள்களின் வளர்ச்சி, இன்று சீர்ப்படுத்தப் பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. "இன்பம்" எனக் கூறும் வள்ளுவர், அமைதி நிறைந்த நாட்டினை வேண்டுகிறார். அழிவிற்கு வேண்டிய சூழ்நிலை இருப்பின் ஆனந்தம் இல்லை. ஆகையினால், சாந்தம், சாத்வீகம், சமாதானம் நிறைந்த சூழ்நிலை இன்பத்தை நிலைநிறுத்துகிறது. மேலும் ஐந்தாவதாக "ஏமம்" வேண்டுகிறார் வள்ளுவர். எதிர்காலத்தைத் தொலை நோக்குடன் ஆராய வேண்டிய எண்ண அலைகளைக் குறிக்கிறார். இப்படியாக, ஒரு நாட்டின் ஐந்து விதமான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால், நாடு செழிப்பாக இருக்குமெனவும் அணியாக இருக்குமெனவும் இரண்டடிகளினால் வள்ளுவர் கூறுகிறார்.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வவைந்து" (738)

தொடர்ந்த தேவைகளில் முதல் முக்கிய தேவை பிணியின்மையாகும். இன்றைய மருத்துவ உலகில், நாம் அறிவுறுத்தும் முதல் நலவாழ்வுத் தத்துவம் "பிணியில்லாமை" ஆகும். ஆங்கிலத்திலே *Prevention of Diseases* என அறிவு றுத் துகிறார் கள் . இன் று நாம் கூறும் இந்தத் தத்துவத்தை முற்றும் உணர்ந்த வள்ளுவர் அன்றே கூறினார்.

இன்றோ, எங்கும் கொலை, கொள்ளை என்று கூறுகிறோம். நல்ல நாடுகள் சிலவும் இந்த வேண்டாத முறைகளைக் கொண்டு சீரழிந்து வருகின்றன. போர்களை ஊக்குவித்து அதனால் அழிந்த நாடுகளை நாம் பார்க்கிறோம். ஆகையினால், நாம் வேண்டுவது சமாதானம், வளமை, விளைவு என முன்னர்க் கூறினோம்.

இதனை மறுவிதமாக உணர்வோமேயானால், இன்றைய நாளில் மருத்துவத்தில் பிணியில்லாமல் இருக்க மிக முக்கியமாகச் சம உணவு ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் அறிவுறுத்தப்படுகிறது.

அடிமையாக இருந்த நமது நாட்டில் ஊட்டச்சத்தின் குறைவினால் ஏற்படும் நலிவினால் நோய்க் கிருமிகள் தாக்கப்பட்டுச் சாக்காடு சர்வசாதாரணமாக ஏற்பட்டு வந்துள்ளது. நோய்கள் தாக்காவண்ணம் இருக்க, ஊட்டச்சத்துப் பெற உணவு இன்றியமையாததாகவும் முதன்மை யானதாகவும் இருக்க வேண்டும். இதனையே இன்றைய மருத்துவத்தில் உணர்ந்துள்ளோம். பசியிருக்குமேயானால் பெருகுவது பிணியும் ஆகும். இதனை உணர்ந்து வள்ளுவர்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு" (734)

என வரிசைப்படுத்திக் கூறுகிறார்.

பசி நீங்கினால் ஓவாப்பிணியும் அகலும். வளங்குன்றா நாட்டிற்கு மேற்கூறியவை மிக மிகத் தேவை.

ஒரு மனிதன், ஒரு சமுதாயம், ஒரு நாடு என்ற வகையில் தேவைகளை உணர்த்தி வரும் வள்ளுவர் நோயினையும் பசியையும் விரிவாகக் கூறியதை முன்னர் அறிந்தோம். அஃதேபோல், நோய் எற்படா வண்ணம் உடலைக்காக்க மருந்து என்னும் அத்தியாயத்தில் பத்துக் குறட்பாக்களை அவர் கூறுகிறார். அவற்றுள் கூறப்பட்ட கருத்துகள் இன்றைய நாள்களில் கூட எங்களைப் போன்ற மருத்துவர்கள் அறிவுறுத்தும் தத்துவங்களை ஒத்துள்ளன.

பசித்துப்புசி; ஒவ்விய உணவினை ஏற்றுக்கொள்; தேர்ந்தெடுத்த உணவினைப் போற்றி உண்; அளவறிந்து உணவினை ஏற்றுக்கொள்; சீரான உணவு கொள்;(மாறுபாடு இல்லாத உண்டி) என்னும் அறிவுரைகளை, வழிமுறைகளை இன்றைய மருத்துவத்தில் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இவ்வாறாக அனுசரிக்கப்பட்டால் 9மருந்து என வேண்டாவாம் இவ் யாக்கைக்கு" என்பது தெளிவாகும்.

வள்ளுவர் கூறிய குறளிலே இன்றைய மருத்துவ அறிவியலைக் காண்கிறோம்.

நோய் நீக்கும் மருத்துவத்தில், முக்கியமாக, நோய் தாக்கும் காரணத்தை அகற்றுக என அறிவுறுத்தப்படுகிறது. ஆங்கிலத்திலே *"To treat a disease, fundamentally remove the etiology"* என்ற உண்மையை அறிகிறோம். வள்ளுவர் அழகாகவும் எளிமையாகவும்

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (948)

எனக் கூறுகிறார். ஆங்கில வார்த்தை "Etiology" என்பதற்குத் தமிழிலே "நோய் முதல்" எனக் கூறுவது சாலச் சிறந்ததாகும்.

நோயுற்றவன், மருத்துவன், மருந்து, கொடுக்கும் மருந்து சிறப்பாகப்பயன்பட "உழைச் செல்வான்" என்று வரிசைப்படுத்திக் கூறுகிறார் வள்ளுவர். இன்று கண்டறிந்த உண்மையில், மருத்துவன் கொடுக்கும் மருந்து சிறப்பாக இயங்க வேண்டின் உடலினுள் உழைச் செல்வான் தேவைப்படுகிறது. அதாவது, எந்த

# எங்கள் தமிழ்நெறி

## கவிஞர் கோ.சிட்டிபாபு

உலகம் யாவையும் தாமுள வாக்கலை
உள்ளக் கிடக்கையாய் உடையவன் தமிழன்
உலகெல்லாம் உணர்ந் தோதும் கலையினை
உன்னி உன்னியே உயர்ந்தவன் தமிழன்
உலகம் உவப்பத் தான்உவப் பதனை
உயர்குறிக் கோளாய் உடையவன் தமிழன்
உலகத்தோ டொட்ட ஒழுகும் நெறியினை
உரிய ஒழுக்கமாய் உடையவன் தமிழன்.

யாதும் ஊராய் யாவரும் கேளிராய்
இசைந்து வாழும் இயல்பினன்
தமிழன்
தீதும் நன்றும் பிறர்தர வராவெனத்
தெளிந்து நல்லதே செய்பவன் தமிழன
சூதும் வாதும் தன்னையே
தொலைப்பினும்
தூய நன்னெறி தொடர்பவன் தமிழன்
போதும் என்ற பொன்மனம் கொண்டு
போகப் பொருள்களில் அகல்பவன்
தமிழன்.



தமிழன் என்னிலே இனிமைய னாகித்
தரணியை இனிதே சமைப்பவன் ஆவான்
தமிழன் என்னிலே அமிழ்த னாகிச்
சாகா வாழ்வைத் தருபவன் ஆவான்
தமிழம் என்னிலோ இறைமை யாகிச்
சகலமும் ஒன்றாய்ச் சார்வ தாகும்
நிமிர்வான் நிலம்நீர் காற்று யாவிலும்
நீங்கா உயிர்ப்பே தேங்காச் செந்தமிழ்.

உயர்ந்தோர் மேற்றே உலகம் என்று
உலகையே உயர்த்தும் ஒளியே தமிழறம்
முயன்றே விண்ணை மண்ணில்
முகிழ்க்க
விளைக்கும் தொழிலே தமிழ்ச்சித்த
நெறியாம்
பயின்றிடப் பயின்றிடப் புதுப்புது
நுட்பம்
பயந்து நயந்தரும் குறள்தமிழ்
மறையாம்
இயன்றிடா தென்பது எதுவும் இல்லை
எங்கள் தமிழ்நெறி இது!வேறில்லை!

மருந்தும் உழைச் செல்வான் இல்லையெனில் நோய் நீக்குதல் முடியாததாகும்.

இன்று உடலிலேயிருக்கும் சக்தி, அதாவது நிண நீர், செந்நீர் (*Blood*), இரத்த அணுக்கள் மற்றும் திசுக்களில் ஊடேயிருக்கும் *Immunological substances* இருக்குமேயானால்தான், மருந்து பயன் விளைவிக்கும். இந்த உழைச் செல்வான் இல்லையெனில், எந்த அளவு பயன்தரும் மருந்தானாலும் அதனால் பலன் இல்லை.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்
என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து" (950)

என்று வள்ளுவர் கூறுகிறார்.

நோய் நீக்கும் பணியில் உழைச் செல்வான் என்ற வார்த்தைக்கு இது நாள் வரை பொருள் தெரியாது; சரியான விளக்கங்களை அறியவில்லை. இன்றோ, உழைச் செல்வான் என்பதனை " உடலிலே உடன்பிறந்த நோய் அகற்றும் சக்தி" என அறிய வேண்டும்.

இவ்விதமாக, மீண்டும் மீண்டும் உணர்ந்து படிக்க, குறளிலே எத்தனையோ புதுமைகளையும் அறிவியல் சார்ந்த கருத்துகளையும் நாம் அறியலாம்.

திருக்குறள் ஓர் அறிவியல் கடல்; பிரபஞ்சம். இதனை உணரும் எவரும் அறிஞர் ஆவர்.

# தமிழர் செல்வம் கண்ணதாசன்

புலவர் தமிழ்ப்பித்தன்

முத்தமிழ் மொழியில் வித்தகக் கவிதைகள்
மொழிந்து குவித்த மன்னன்
தத்துவம் பற்பல மகத்துவ மாகவே
தந்து சிறந்த தென்னன்
பத்தரை மாற்றுத் தங்கமே போலும்
பண்புகள் செறிந்த அன்பன்
பித்தராய் மக்களைக் கவியினில் ஆழ்த்திய
பெருமைக்கு உரிய சித்தன்

கண்ணனின் தாசன் என்றொரு நற்பெயர்
களிப்புடன் சேர்த்துக் கொண்டான்
அண்ணனின் தாசன் ஆகவே வாழ்ந்து
அறிவினில் குன்றம் ஆனான்
கன்னலின் நிகராய்ப் பாடல்கள் படைத்துக்
காவிய மாகி நின்றான்
முன்னவர் வகுத்த மரபுகள் அனைத்தும்
முனைப்புடன் காத்து வந்தான்

புதுவையில் ஓர்குயில் பிறவி எடுத்தே
புவியினைக் கலக்கிய(து) உண்டாம்
முதுமையைச் சுமக்கும் முகவைப் பூமியில்
முத்தெனும் கவிஞனைக் கண்டோம்
புதுமைகள் கொழித்திட மேடையில் முழங்கிப்
புகழுரை பெற்றுக் கொண்டான்
பதுமைகள் கூட வாயினைத் திறக்கும்
வித்தைகள் நாளும் செய்தான்.



இலக்கியச் செந்தமிழ் இவனை எப்படி
எளிதினில் மறந்திட முடியும்?
துலங்கிடும் வானம் தூயவன் இந்தத்
துருவமீ னாலே விடியும்!
கலங்கிய குட்டையில் ஓடம் விடாத
கண்ணியன் இவனே என்போம்!
இலங்கிடும் நெஞ்சில் இளக்கம் கொண்
டோன்
இன்கவி நித்தமும் உண்போம்!

# மலேசிய தேசியத்திற்குத் தமிழரின் பங்கு

## 'தமிழ்க்குயில்' கா.கலியபெருமாள்

ஈப்போ

### முன்னுரை

உலகமெல்லாம் போற்றும் வளமும் பொலிவுமிக்க இன்றைய மலேசியா அமைவதற்கு முன்னர். மலாயாவென்றும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாணிபம் செய்யவந்த தமிழர்களால் `சொர்ணபூமி' என்றும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ள தமிழ் இலக்கியங்களில் மலையம் என்றும் குறிப்பி டப்படுகிறது. இத்தகைய வரலாற்றுக் கண்ணோட் டத்தில் பார்க்கும் போது தமிழர்களுக்கும் மலேசியா விற்குமுள்ள தொடர்பு தாய்க்கும் மகவுக்கும் உள்ள தொடர்பு போல் அழுத்தமானது; பழமை யானது. பிரிக்க முடியாதது என்றுணரலாம். 1949 இல் சுவாமி சத்தியானந்தா அவர்களால் எழுதப் பட்ட மலாயா சரித்திரத்தில் மலேசியா என்ற சொல்லுங்கூடப் பரவ லாகக் கையாளப்படுகிறது. எனவே, மலேசிய தேசியத்தில் தமிழரின் பங்கினை நான்கு கோணத்தில் ஆராய வேண்டும்.



1. நாடாள வந்த தமிழர்கள் மலேசிய தேசியத்திற்கு வழங்கிய பங்கு.

2. வணிகம் செய்ய வந்த தமிழர்கள் மலேசியாவிற்கு அளித்த பங்கு.

3. ஒப்பந்தத் தொழிலாளர்களாக வந்த தமிழர்கள் மலேசிய உயர்விற்குச் செய்த தொண்டுகளின் பங்கு.

4. விடுதலைக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த தமிழர்களின் தேசியப்போராட்டப் பங்கு.

### 1. நாடாள வந்த தமிழர்கள் மலேசிய தேசியத்திற்கு வழங்கிய பங்கு

கி.பி.454இல் சுமத்திரா என்னும் புட்பக நாட்டைச் சைவ மன்னனான ஈஸ்வர நரேந்திரன் ஆண்ட காலத்திலிருந்து தென்கிழக்காசிய நாடு களுக்குத் தமிழர்களின் பயணம் தொடங்குகிறது. பின்னர் கி.பி.1030இல் இராசேந்திர சோழன் காழகம் அல்லது கடாரமென்னும் கெடாவை வென்றது முதல் மலேசியாவில் தமிழர்களின் பங்கு வேர்க்கொள்கிறது.

மேலும் பேராவின் மேற்குக் கரையிலிருந்து அதன் நடுப்பாகம் வரை கங்கா நகரம் என்ற ஓர் இந்திய அரசும், பகாங் நதிதீரத்தில் இந்திரபுரம் என்ற பிறிதோர் அரசும் இருந்து வந்துள்ளன. இங்ஙனம் நாடாளவந்த தமிழ் மன்னர்களால் மலேசியத் தீவுகளில் தமிழர்களின் மொழியும், கலைகளும், பண்பாடுகளும், ஆட்சிமுறைகளும், உழவுமுறைகளும் வேரூன்றி உள்ளன.

மலேசியத் தீவுகளிலும், மலேசியா விலும் இராமாயணக் கதைகளும், பாரதக் கதைகளும் பரவியதுடன்

பாவைக்கூத்து எனும் , "ஓயாங் கூலிட்" கலைகளும் பரவி இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றன. ஓயாங் கூலிட் கதையும் கதைப்படைப்பும் இந்து முறைப்படியே இருப்பதை உணரலாம்.

மேலும் மேழிச் செல்வமாகிய உழவுமுறைகளும், மன்னவனைக் கையெடுத்துக் கும்பிட்டு வணங்கும் மரபுகளும் பேணப்பட்டன. இஸ்லாமியர்கள் கும்பிடும் வழக்கமற்றவராயினும் மலேசிய மன்னர்கள் இஸ்லாமியர்களாக இருந்தும் இருகை கூப்பி எழிலுறக் கும்பிடும் காட்சி மாட்சியுறத்தக்கது. மேலும் இந்து முறைப்படி மகுடம் சூட்டப்படுகின்ற பண்பாட்டுச் சடங்குகளும் மலாயர்களிடையே வரவேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டன. மகுடத்தை "மகோடா" என்றும் நகரத்தை "நெகரா" என்றும் இராஜ்யத்தை "கெராஜாஹன்" என்றும் வரும் வேர்ச் சொற்களே தமிழ் வழக்காக இருக்கின்றன. மேலும் அரசனை "இராஜா" என்றும், அரசியை "பரமேஸ்வரி என்றும் அழைக்கின்ற பண்பாடும் மலாய்க்காரர்களால் தழுவப்பட்டன. இராஜா இஸ்லாமியக் கலப்பிற்குப்பிறகு சுல்தான் ஆனாலும் இராணி பரமேஸ்வரியாகவே இருப்பதைக் காணலாம். பெர்லிஸ் சுல்தானை இன்றும் இராஜா என்றே அழைக்கின்றனர்.

பேராவில் மன்னன் முடி சூட்டப்பட்டுச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் ஸ்ரீ நராதிராஜா என்பவர் சிதைந்த சமஸ்கிருதத்தில் வாழ்த்து வாசிக்கும் வழக்கு இன்றும் உண்டு. இதுபோல சீயமன்னன் முடி சூட்டப்படும் போது சிதைந்த திருவாசகப்பாடலான திருவெம்பாவை ஓதப்படுகிறது. இங்ஙனம் மலேசிய மலாயர்களிடையே பிறப்பு, இறப்பு, திருமணம், கல்வி, மருத்துவம், மந்திரம், பூஜை, பணிவு, கனிவு அனைத்திலும் தமிழர்களின் பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் ஊடுருவி நிற்பதைக் காய்தல் உவத்திலின்றி நோக்கினால் புலப்படும்.

நூலாதாரங்கள் இவற்றுக்கு விரிவாக இல்லையென்றாலும் கெடாவில் அகழ்ந்தெடுக்கப் பட்ட இந்துக் கோயிலின் அடித்தளமும் பீடோரில் கிடைத்த அவலோகிதேஸ்வரர் போன்ற சிலைகளும் அழியாத கலையாகிவிட்ட ஓயாங் கூலிட் எனும் நிழலாட்டக் கலைகளும் இதனை மெய்ப்பிக்கும்.

"மலாயா மண்ணுக்கு முதன் முதல் நாகரிகத்தை அளித்ததுடன் இந்திய நாகரிகத்தாலும், இந்திய மொழிகளாலும் ஏற்றம் பெற்றது மலாயா மண்ணாகும்". என்று ஆங்கில நூலறிஞர் ரோலன் பிராடல் *(Rolland Braddol)* குறிப்பிடுவதை மறுக்கமுடியாது.

### 2. வணிகம் செய்ய வந்த தமிழர்கள் மலேசிய தேசியத்திற்கு வழங்கிய பங்கு

கி.பி. 15ஆம் நூற்றாண்டு வாக்கில் மலாயாவில் மலாக்க வாணிகச் சந்தையாக சிறந்து விளங்கிற்று. அந்தக் காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து துணிமணிகள், யானைத் தந்தம், அரிசி, கோதுமை முதலியவற்றைக் கொண்டுவந்து விற்றுவிட்டு அதற்குப் பதிலாக மிளகு, தகரம், பீங்கான், வாசனைத்திரவியம், பொன் முதலியவற்றை வாங்கி எடுத்துச் சென்று வியாபாரம் செய்துள்ளனர்.

வணிகத்திற்காகத் தமிழர்களில் சிலர் ஆறுமாதம் வரை மலாக்காவில் தங்கி இருப்பதுண்டு. அப்படிப்பட்ட காலத்தில் சிலர் மலாய்ப் பெண்களைக் காதலித்து இந்து முறைப்படி தாலிகட்டி மணந்துகொண்டு இங்கேயே தங்கினர். ஒரு சில தடவைகளில் கப்பல் புயலில் சிக்கியதால் தப்பிக் கரையேறிய தமிழர்களும் இங்ஙனம் மலாக்காவில் தங்க நேர்ந்த கதையும் உண்டு. இவர்கள் பிள்ளை என்றும், செட்டி என்றும், முதலியென்றும், படையாட்சி என்றும் பலவகைப் பிரிவினராக இருந்தாலும் மலாக்காவிலே தங்கி மலாக்காச் செட்டிகளாகி விட்டனர். அவர்களின் மொழி மறைந்தும் பண்பாடு வழிபாடு மறையாத மக்களாக இருப்பதை இன்றும் காணலாம். இவர்கள் கட்டிய பொய்யாத விநாயகர் கோயில் 350 ஆண்டுகள் பழமையுடையது. இவ்வாறே தமிழர்களும் – தமிழ் முஸ்லீம்களும் மலாயாவின் பல்வேறு பகுதிகளுக்குக் குடியேறி வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன.

அவர்களையடுத்துத் தனவைசியம் பண்ணவந்த நகரத்தார் பெருமக்களும் – கல்விமான்களும் – உயர் அலுவல் பார்க்கும் ஆற்றல் படைத்தவர்களும் விரும்பியும் – அழைக்கப்பட்டும் மலாயாவிற்குப் பரவலாக வந்துள்ளனர் என்பதும் வெள்ளிடைமலை. 1938இல் சுங்குரும்பை பெ.நா.மு. முத்து பழநியப்பன் ஜே.பி. அவர்கள் எழுதிய "மலாயாவின் தோற்றம்" என்ற நூலில் இதன் விரிவைக்காணலாம்.

இவ்வாறு குடியேறிய தமிழர்களால் தமிழ்ப் பண்பாடுகள் – தமிழர் நடையுடை பாவனைகளின் சாயல்கள் மலாயாவில் மேலும் வேரூன்றின. வெண்கலக் குத்து விளக்குகளைப்பாவிக்கும் பழக்கமும், வெற்றிலைபாக்குப் போடும் பழக்கவழக்கமும் பரவத் தொடங்கின.

வணிகத்தில் துலாக்கோலும், வாழ்வியலில் நல்லெண்ணப் புரிந்துணர்வும், விளையாட்டில் பல்லாங்குழியும், பண்பாட்டில் மலர்மாலைகளும் தமிழர்களின் வருகையால் மேலும் இரண்டறக்

கலந்தன. மற்றும் தமிழ்ச்சொற்களும் – சமஸ்கிருத மொழிச் சொற்களும் – இந்தியச் சொற்களும் மலாய் மொழியிற் கலந்து மலாய் மொழியையும் வளர்த்தன. மலாய் மொழியிலுள்ள பண்பாட்டுச் சொற்களில் பெரும்பான்மை இந்தியச் சொற்களும், வழிபாட்டுச் சொற்களில் பெரும்பான்மை அரபுச் சொற்களும், அறிவியலில் ஆங்கிலச் சொற்களும் இரண்டறக் கலந்து பயன்படுத்தப்படுவதைக் கல்விமான்கள் மறுப்பதற்கு இல்லை.

கப்பல், பெட்டி, மீசை, ரோமம், ரூபம், ரகம், ஸ்திரி, ஜெயம், ஆகமம், சக்தி, பக்தி, தேவி, புத்ரி, குரு, பாக்கி போன்ற நூற்றுக்கணக்கான சொற்கள் அப்படியே எவ்வித் மருவுமின்றிப் பயன்படுத்தப் படுகின்றன. மேலும் சில சொற்கள் ஈறுதிரிந்து வழங்கப்படுகின்றன. சிங்கம் – சிங்கா; தருமம் – தருமா; சிங்காசனம் – சிங்காசனா; நாமம் – நாமா; நீலம் – நீலா; உபவாசம் – புவாசா; பாஷை – பாஹசா; சமம் – சமா; பூஜை – பூஜா; சதை – சாத்தை; பூங்கா – பூங்நா; லட்சம் – லக்ஷா; சாஸ்திரம் – சாஸ்திரா; ஸ்வரம் – சுவாரா; கங்கை – சுங்கை என்பன சில.

இன்னுஞ் சில சொற்கள் முன்பின் இணைப்புப் பெற்று வழங்குகின்றன. கும்பல் – கும்புலான்; ராஜாங்கம் – கிராஜாஹன்; பஞ்சேந்திரியம் – பஞ்சேந்திரா என்பன போன்றவை ஏராளமாகும். இவ்வாறு மலாய்மொழியைத் தமிழோடும் தமிழ்ப்பண்போடும் சேர்த்து மொழி வளர்த்த பங்கினை மறைக்க முடியாது. மலாய்மொழி இலக்கியத்தின் தந்தை என்றும் முன்னோடி என்றும் போற்றப்படும் முன்ஷி அப்துல்லாவும் ஒரு தமிழ் முஸ்லீம் என்பதையும் மறுப்பதற்கு இல்லை. இது போன்ற வரலாற்றுச் சான்றுகளைக் கெடாவிலுள்ள பூஜாங் பள்ளத்தாக்கின் அகழ்வாய்வுகள் உறுதிப் படுத்தும். தமிழ் மன்னர்களின் வருகையாலும், வணிகர்களின் வருகையாலும் மலேசியாவின் மொழியும் – கலையும் – பண்பாடும் பழக்க வழக்கங்களும் வளம் பெற்றன என்றும் நலம் பெற்றன என்றும் கூறலாம்.

### 3. ஒப்பந்தத் தொழிலாளர்களின் வருகையினால் ஏற்பட்ட மலேசிய தேசியப்பங்கு

முதற்காலக் கட்டமாகிய 10ஆம் நூற்றாண்டில் மன்னர்களாகவும் – வீரர்களாகவும் வந்த தமிழர்களின் சந்ததியினர், பதினாறாம் நூற்றாண்டில் வணிகர்களாக வந்த தமிழர்களின் பரம்பரையினர். மூன்றாம் காலகட்டமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் **ஒப்பந்தக்** கூலிகளாகவும் வரத் தொடங்கினார்கள்.

1857ஆம் ஆண்டில் பினாங்கு **ஆங்கிலேயரின்** ஆட்சிக்குக் கைமாறிய உடனே – **பினாங்கிலும்** பிராவின்ஸ் வெல்லெஸ்லியிலும் கோப்பித் தோட்டங் களை அமைக்கவும் கரும்புத் தோட்டங்களைப் பெருக்கவும் நிரம்பத் தொழிலாளர்கள் தேவைப் பட்டனர். அப்போது ஆங்கிலேயர்களின் கண்ணிற்குப் பட்டவர்கள் தென் இந்தியத் தொழிலாளர்களே ஆவார்கள். ஏனென்றால் தமிழர்கள் பெரும்பாலும் நல்ல உழைப்பாளிகள்; அடங்கிப் போகும் குணமுள்ளவர்கள் – துன்பங்கள் ஏற்படும்போது ஆராய்ந்து புதுவழி காணாமல் தலையெழுத்து என்று இறைவனை வழிபடும் பழங்குடிப் பண்பு மிக்கவர்கள். மேலும் கீழறுப்பு போன்ற கொடுஞ் செயல்களில் ஈடுபடாதவர்கள் என்பதை ஆங்கிலேயர்கள் இந்தியாவிலேயே அறிந்திருந்தபடியால் தென் இந்தியத் தொழிலாளர்களின் வருகையை வரவேற்றார்கள்.

மொரிஷியஸ், பிரிட்டிஷ், கயானா, கிழக்கிந்தியத் தீவுகள், மலாயா போன்ற நாடுகளுக்குத் தென் இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களைக் கொண்டு செல்ல இந்திய நாட்டுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதற்குத் தோதாக ஜாவாவிலிருந்த பென்கூலனை டச்சுக்காரர்களிடம் ஒப்படைத்து விட்டுப் பதிலுக்கு மலாக்காவை எடுத்துக் கொண்டனர். இந்தக் காலகட்டத்தில் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் சிங்கையை ஆங்கிலேயர்களின் வசப்படுத்தியதாலும் கி.பி.1824 முதல் 1865க்குள் மலாக்காவிலும் பினாங்கிலும் சுமார் 16 ஆயிரம் தமிழ்த் தொழிலாளர்கள் குடியேறிவிட்டனர். கி.பி.1833இல் பினாங்கில் மாரியம்மன் கோயில் உருவாக்கப்பட்டதையும் நினைவு கூர்க.

இங்ஙனம் மலாயா வந்த தமிழர்கள் கோப்பித் தோட்டங்களிலும் கரும்புத் தோட்டங்களிலும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். 1885 இல் புகைவண்டிப் பாதை அறிமுகமானதுடன் கிள்ளானிலிருந்த ரிட்லி துணையால் ரப்பரும் மலேயாவில் அறிமுகப்படுத்தப்பட்டதால் தென் இந்தியத் தொழிலாளர்களின் வருகையும் தேவையும் முக்கியமாகக் கருதப்பட்டது. 1898இல் கண்காணி முறையெனும் புதுவழியில் மேலும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் இங்கு இறக்குமதியாயினர். எனவே 1910க்கெல்லாம் ஏறத்தாழ 94,000 பேர் மலாயா மண்ணிற்கு வந்துவிட்டனர்.

இன்று பசுஞ்சோலையாக விளங்கும் மலேயா நாடு அன்று புலிகள் வாழும் காடு. எங்கு நோக்கினும்

அடர்ந்த புதர்களும் உயர்ந்த காடுகளுமாய் விளங்கின. எனவே, தமிழ்த் தொழிலாளர்களின் பணி மிகவும் கடுமையாயிருந்தது.

தமிழர்கள் காடுகளை அழித்து ரப்பர் தோட்டங்களையும் கோப்பித் தோட்டங்களையும் அமைக்கப் பயன் படுத்தப்பட்டனர். உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்ல மேடுகளை வெட்டிப் பள்ளங்களை மூடி மண்சாலைகளையும் கற்சாலைகளையும் அமைத்தனர். ஆறுகளையும் ஓடைகளையும் கடக்கப் பாலங்களையும் கட்டினர். நாடு முழுமைக்கும் சுமார் 1300 கல் தூரமுள்ள புகைவண்டிப் பாதைகளை அமைத்தனர். புகை வண்டிகளை அனல்கக்கும் கரியடுப்பில் நின்று கொண்டு ஓட்டினர். ஆங்காங்கு நகர் அமைப்புப் பணியாளர்களாகவும் மின்சாரம், நீர் விநியோகம் முதலிய மராமத்துத் தொழிலாளர்களாகவும் தமிழர்கள் பயன்படுத்தப்பட்டனர். அது மட்டுமன்று; அமைந்த நகரங்களுக்கு நகரசுத்தித் தொழிலாளர் களாகவும் தமிழர்கள் பணியாற்றியதை, பணி யாற்றுவதை இன்றும் காணலாம்.

இரயில்வே பணியில் தமிழர்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதால் நிலையங்களுக்கிடையே மாற்றிக்கொள்ளும் வெண்கலக்கற்களில் தமிழும் ஆங்கிலமும் இருந்தன என்பதை ஆராய்ச்சியாளர்கள் மறுக்கமாட்டார்கள்.

இந்த மலைநாடு உலக அரங்கில் செல்வச் செழிப்போடு தலை நிமிர்ந்து நிற்கிறதென்றால் தென்னிந்தியத் தமிழர்களின் உழைப்பும் ஒரு பகுதி காரணமே என்பதை நன்றியுள்ள வரலாற்று ஆசிரியர்கள் மறக்காமல் குறிப்பிடவே செய்வார்கள். ஏனென்றால் தமிழ்த் தொழிலாளர்கள் பட்டுள்ள துயரங்களும் வடித்துள்ள கண்ணீரும் சிந்தியுள்ள இரத்தங்களும் கொஞ்சமன்று. மருந்தும் சுகாதார வசதியும் குறைந்திருந்த அக்காலத்தில் அம்மை நோய்க்கும், வாந்திபேதிக்கும், விஷக்கடிக்கும், நெருப்புக் காய்ச்சலுக்கும், மலேரியாக் காய்ச்சலுக்கும், காய்ச்சக்கட்டி நோய்க்கும் பலியானவர்களின் உடல்களும்கூட மலேயா மண்ணுக்கு எருவாகி இந்த நாட்டை வளப்படுத்தி இருக்கிறதென்றால் மிகையாகாது. பினாங்கை பிரிட்டிஷாருக்குச் சொந்தமாக்கிய பிரான்சிஸ் லைட் என்னும் ஆங்கிலத் துரைமகனே 1794இல் மலேரியாக் காய்ச்சலால் இறந்தாரென்றால், வீட்டு வசதியும் மருத்துவ வசதியும் இல்லாமல் லாயங்களில் வாழ்ந்து இரவும் பகலும் உழைத்த ஏழைத் தமிழ்த் தொழிலாளர்களின் நிலைமை எப்படி இருந்திருக்கும்! எண்ணிப் பார்த்தாலே இதயம் நடுங்கும். இதை ஆதாரமற்ற கூற்று என்று மறுக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது.

1907இல் "சஞ்சியில்" வந்தவர்கள் நாடு திரும்புங்கால் பயன்படுத்தவும் – பயன்படவும் தொடங்கிய நிதி "தமிழர் குடியேற்ற நிதி" என்று அழைக்கப்பட்டது. அது 1912இல் தென்இந்தியக் குடியேற்ற நிதியானதும் அதன் நிருவாகத்தில் நிபோங்திபாலில் தென்னிந்தியத் தொழிலாளர் முதியோர் இல்லம் இன்றும் நடந்து வருவது கண்கூடு.

இங்ஙனம் மூன்றாம் காலகட்டத் தமிழர்களின் வருகையால் நாடு நலம் பெற்றது. பொருளாதாரம் செழிப்படைந்தது. வசதியான சாலைகள் போடப்பட்டன. புகைவண்டிப் பாதைகள் உருவாயின. குழாய் நீர் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. பொதுப்பணி இலாகா சிறப்பாக இயங்கியது. மலேரியா நோய்கள் ஒழிக்கப்பட்டன. கட்டிய வீட்டிலிருந்து கட்டியம் பேசுவார்க்குக் களம் அமைத்துக் கொடுக்கப் பச்சை இரத்தம் பரிமாறி இந்த நாட்டைப் பசுஞ்சோலையாக்கியவர்களே தமிழர்கள்தாம்.

### 4. ஜப்பானியர் காலமும் விடுதலைக்கு முன்னும் பின்னும்

1941இல் இரண்டாவது உலகப்போர் மூண்டது. ஜப்பானியர் மலாயாவைக் கைப்பற்றினார்கள். அவர்களின் இரக்கமற்ற போராட்டங்களிலும் பலியானவர்கள் தமிழர்கள்தாம்.

சயாம் நாட்டுக்குப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை ஓட்டிச் சென்று தாய்லாந்து, பர்மா ரயில்பாதை போடப் படுத்திய கொடுமைகளில் உணவில்லாமல், மருந்தில்லாமல், வீடில்லாமல் கொசுக்கடியிலும் பூச்சுக்கடியிலும் நோயிலும் மடிந்தவர்களின் கதை–அவர்களின் குடும்பங்கள் வடித்த கண்ணீரும் பட்டதுயரங்களும் எழுத்திலடங் காத சோகங்கள்.

1945இல் இரண்டாவது உலகப்போர் ஒரு முடிவிற்கு வந்தது. ஆங்கிலேயர்களின் வசமிருந்த இந்தியா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளும் டச்சுக்காரர்களின் வசமிருந்த இந்தோனேசியாவும் அமெரிக்கர்களின் கட்டிலிருந்த பிலிப்பைன்ஸ் நாடும் விடுதலை பெற்றது. 1950க்கெல்லாம் மலேயா இந்தியர்களின் உழைப்பாலும் இன்ன பிற மக்களின் கூட்டுறவாலும் நாடு விடுதலை பெற வேண்டுமென்ற வளர்ச்சியைப் பெற்றிருந்தது. டத்தோ ஓன் பின் ஜபார் விடுதலை வித்தை ஊற்றினார்.

1952இல் முதன்முதலில் சிற்றூர் – பேரூர் – மாநகரங்களில் நகராட்சித் தேர்தல்கள் நடந்தன. அது போலவே முதலாவது தேசியத் தேர்தல் 1955இல் நடந்தது. 1956இல் தேசத்தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் சுதந்தரத்திற்கு முயன்று உழைத்த போதும் இந்தியர்களின் ஒத்துழைப்பும் பிளவுபடாத தேச விசுவாசமும் மலாயா விடுதலை பெறப் பெரிதும் துணைநின்றது என்பதில் இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்க முடியாது.

ஜப்பானியர் காலத்துக்கு முன்னும் பின்னும் மலேய அரசியலாரின் உயர்பதவிகளில் அமர்ந்து அரசியல் கேந்திரம் ஒழுங்காக நடத்தவும் – நீதித்துறை, சட்டத்துறைகளில் இருந்து மக்களை நடத்தவும் தமிழர்கள் செய்துள்ள பணிகள் ஏராளமாகும். இதில் இலங்கைத் தமிழர்களும் அடங்குவார்கள்.

ஜப்பான் யுத்தத்திற்குப் பிறகு இந்திய சுதந்தரத் தென்றல் வீசியதால் ஜான் தீவி அவர்கள் மலாயன் இந்தியன் காங்கிரசைத் தொடங்கினார். அரசியல் முக்கியத்துவம் பெறாத அந்தக் காலத் தலைவர்களான திரு. ஜான் திவி, திரு. பூத் சிங், திரு. கா. இராமநாதன் செட்டியார், திரு. குண்டர்லால் தேவாசர் போன்றவர்கள் தேசத்தின் ஐக்கியத்திற்குத் துணையாக நின்று இந்தியர்களை வழி நடத்தியுள்ளார்கள்.

ம.இ.கா.வின் ஐந்தாவது தலைவராக வந்த துன்.வீ.தி. சம்பந்தன் அவர்களும் ஆறாவது தலைவரான டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்களும் மாண்புமிகு துங்குமகனார் அவர்களின் வலதுகரமாக இருந்து லண்டன் வரை சென்று பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டதும், தேச விடுதலைக்குப் பாடுபட்டதும் மலேசிய தேசிய வரலாற்றில் மறக்க முடியாத அத்தியாயங்களாகும்.

மலாக்காவின் வரலாற்றில் பொற்காலமாக வருணிக்கப்படும் மன்சூர் ஷா காலம் போல, ம.இ.கா. வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்படும் மாண்புமிகு டத்தோ ச. சாமிவேலு அவர்களின் குழாத்தினரும் இன்று அரசின் ஆட்சி பீடத்தில் அமைச்சர்களாக இருந்து, மாண்புமிகு பிரதமர் டத்தோ ஸ்ரீ டாக்டர். மகாதிர் முகம்மதுவுடன் இணக்கமான போக்குடன் ஆளும் அரசிற்குப் பக்கபலமாக இருந்து நாட்டின் அரசியல் நிலைத்தன்மைக்குத் துணைபுரிந்து வருவது கண்கூடாகும்.

## முடிவுரை

மலேசிய தேசியத்திற்குத் தமிழர்களின் பங்கு இவ்வளவு அவ்வளவு என்று அளவிடற்கரியது.

1. அரசர்களாகவும் வீரர்களாகவும் வந்த காலத்தில் நாடு – குடி – அரசு – ஆட்சிமொழி என்ற நெறியும் பண்பாடும், வழங்கித் தங்களின் தேசியப்பங்கைச் செலுத்தினார்கள்.

2. வணிகர்களாகவும் கல்விமான்களாகவும் வந்த காலத்தில் வணிகநெறி, உழவுமுறை, இன இணக்கம், புரிந்துணர்வை விளைவிப்பதில் முன்னோடிகளாக இருந்து தங்களின் தேசியப்பங்கைச் செலுத்தியுள்ளனர்.

3. ஒப்பந்தக் கூலிகளாகத் தமிழர்கள் வந்த காலத்தில் காட்டை அழித்து ரப்பர் பயிரிட்டும் சாலைகளைப் போட்டும் புகைவண்டிப் பாதைகளை அமைத்தும் நகரங்களை அமைத்தும் தூய்மை பேணியும் தங்களின் உடலை, உயிரை இந்நாட்டின் உயர்விற்கு வழங்கியதன் மூலம் தங்களின் தேசியப் பங்கைச் செலுத்தியுள்ளனர்.

4. மேற்கண்ட மூன்று காலக்கட்டங்களிலும் வந்த சந்ததியினர் அரசு பணிகளிலும் சுதந்தரம் பெறும் போராட்டத்திலும் தேச வளர்ச்சியிலும் பிளவுபடாத விசுவாசம் மிக்கவர்களாக இருந்து தேசியப் பங்கை ஒழுங்காகச் செலுத்தி வந்துள்ளார்கள்.

5. அன்றைய மலாயாவிலும் இன்றைய மலேசியாவிலும் தமிழர்கள் காலடி வைத்தது முதற்கொண்டு இன்றுவரை தேச விரோதக் கீழறுப்பு வேலைகளிலோ – பகற் கொள்ளை போன்ற குற்றச் செயல்களிலோ தேசத் தலைவர்களுக்கு எதிர்ப்பான செயல்களிலோ இந்த இனம் தம்மை ஈடுபடுத்திக் கொண்டது கிடையாது. இனியும் ஈடுபடுத்திக் கொள்ளாது.

மலேசியா பல இன மொழிகளும், சமயங்களும், வழிபாடுகளும், கலைகளும், பண்பாடுகளும் கலந்து புழங்கும் ஒரு கவின் நாடாகும். இந்நாட்டின் தேசிய கலாச்சார முதிர்ச்சிக்கும், புரிந்துணர்வுடன் கூடிய ஒருமைப்பாட்டுக்கும், பொருளாதார நிலைத் தன்மைக்கும், சர்வ சமூக நற்குண இணக்கத்திற்கும், ஒருவரையொருவர் மதித்துப் போற்றும் ஆன்மீகச் சிந்தனைக்கும், தமிழர்களின் சமயப் பொறையும், அருட்கொடையும் முன்மாதிரியாக இருந்து வந்துள்ளன.

கலைவிழா, விளையாட்டு, ஒட்டப்பந்தயம் போன்றவற்றிலும் கூட்டுறவு இயக்கங்கள்,

# ஓடத்துத் துடுப்புகள்

## கவிஞர். பூங்கோவன்

மாடத்தில் ஏற்றிவைத்த மணிவி ளக்காய்
மன்பதையில் திகழ்கின்றார் பெண்கள் எல்லாம்!
ஓடத்தில் துடுப்பைப்போல் இருந்தே, வாழ்க்கை
ஓட்டத்தைத் தடையின்றிச் செலுத்து வார்கள்!
கூடத்தில் படுத்துறங்கிப் பொழுதைப் போக்கிக்
குடும்பத்து வளர்ச்சியினைக் குலைக்க மாட்டார்!
வேடத்தில் ஆண்களைப்போல் இருந்திடாமல்,
விடியுமுன்னர் எழுந்தெழுந்து உழைத்து நிற்பர்!

பொங்குநுரைப் பொய்த்தோற்றம் கொள்ள மாட்டார்!
பூமிபோல் நிலைத்தமனம் பூண்டிருப்பார்!
தங்குதடை யில்லாமல் பணிகள் செய்வர்!
தலைவியர்கள் எனும்தகுதி காப்பார் பெண்கள்!
வெங்கொடுமைச் சூழ்ச்சியினால் பெண்கள் தம்மை
வீட்டிலடை மாடுகளாய் நடத்தி விட்டோம்!
இங்கந்தப் போக்கெல்லாம் இனிமேல் இல்லை!
ஏனென்றால், பெண்கள்நம் கண்கள் ஆவர்!



அரசியலில், கலையியலில், அரும்பண் பாட்டில்,
அறிவியலில், கணக்கியலில், எழுத்தில், பேச்சில்,
முரசொலியில், முழக்கத்தில், உரிமை மூச்சில்,
முன்னேற்றச் சிந்தையினில், எழுச்சி தன்னில்,
வரதட்ச ணைஎதிர்ப்பில், வாழ்வ மைப்பில்,
வரன்தேடல் எனும்செயலில், துணிவில், நெஞ்சின்
இரக்கத்தில், ஈகையினில், அன்பில், பண்பில்,
ஈடற்றோர் பெண்களென்றால் மறுப்ப வர்யார்?

“மாதவம்செய் வோம்நாமே இங்கெல் லாரும்
மங்கையராய்ப் பிறப்பதற்கே!” என்று சொன்னார்
மூதறிவுத் தேசிகனார்! இதைநி னைத்தால்,
முனையளவும் பெண்தீமை புரிகு வாரோ?
மேதினிமேல் பிறந்தவருள் பெண்ணுக் கீடாய்
மேலான பிறப்பெதுவும் இல்லை! இல்லை!
ஆதலினால் உலகத்தீர்! பெண்ணை வாட்டும்
அநீதிகள் விட்டொழிப்பீர்! மனிதராவீர் !



உயிர்க்காப்புறுதி அமைப்புகள் இந்நாட்டில் தோன்றவும் வளரவும் தமிழர்களின் திறனும் ஆற்றலும் தேசியப்பங்காக பெருமளவில் இருந்து வந்துள்ளதைப் புள்ளி விவரங்கள் மூலம் நிறுவ முடியும். உலக நாடுகளிடையே மலேசிய உடையும், நாகரிகமும், சுவையான உணவுகளும், திருவிழாக்களும் பல நாடுகளும் பாராட்டும்படி அமைவதற்குப் பண்பாட்டுக் கொடையும் தேசியப் பங்காகத் தமிழர்கள் வழங்கியுள்ளனர்.

“சொற்ப ஊதியங்கொண்டு உடலின் இரத்தம் சிந்த, நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தவர்கள் இந்தியர்கள் என்றால் அதற்குக் காரணம் தமிழர்களே” என்று 1931இல் அறிஞர் ரோலண்ட் பிராடல் எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே `மலேசிய தேசியத்தில் தமிழர்களின் பங்கு என்பதை ஒரு கட்டுரையின் மூலம் கோடி காட்ட முடியுமேயன்றி முழுமையாகப் பாடிக்காட்ட முடியாது.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

# கன்னித்தமிழ் வளர்த்த கால்டுவெல்



டாக்டர் மு.பி.பாலசுப்பிரமணியன்

ஐரோப்பியர் வருகையால் தமிழ்மொழி பல்வகையில் ஏற்றம் பெற்றுச் சிறந்தது. மேலை நாட்டினர் தமிழில் அச்சுப் புத்தகங்கள் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்தனர். இந்திய மொழிகளிலேயே முதல் அச்சுப் புத்தகம் தமிழில்தான் வெளிவந்தது. வரலாற்று நூல்கள், பூகோள நூல்கள், கணித நூல்கள் பல ஐரோப்பியர் வருகையால் தமிழ்மொழியில் தோன்றலாயின. மேலும், அவர்களே தமிழ் எழுத்துகளில் சில மாற்றங்களைச் செய்தனர். வாக்கிய அமைப்புகளில் பிரித்தெழுதும் முறையைப் புகுத்தினர். அகராதிகளைத் தொகுத்தும், இலக்கணங்களை வகுத்தும், இலக்கியங்கள் படைத்தும் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றி வந்தனர். புதிய உரைநடை தோன்றுவதற்குத் துணையாய் இருந்ததோடு, தமிழரிடையே படிப்பார்வத்தை அதிகப்படுத்திய பெருமைக்கும் உரியவராகத் திகழ்ந்தனர்.

தமிழ்நாட்டில் கிறித்தவ மதத்தைப் பரப்பவந்த ஐரோப்பிய பாதிரிமார்களால் தமிழ் மொழி அடைந்த வளர்ச்சி குறிப்பிடத் தக்கதாகும். அன்னைமொழியின் அருமை பெருமைகளை அறியாதிருந்த தமிழர்தம் விழிமலர்களைத் திறந்து ஒளி மணம் கமழச் செய்தோர் அவர்களே ஆவர். தம் மதத்தைப் பரப்புவதற்காகத் தமிழைக் கற்ற அப்பாதிரியார்களைக் காந்தம் போல் கவர்ந்து இழுத்துத் தம் வயப்படுத்திக் கொண்ட பெருமை தமிழ் மொழிக்கே உண்டு. மதத்தை வளர்க்கத் தமிழைக் கற்றவர்கள் தம்மை மறந்து தமிழையும் வளர்க்கத் தலைப்பட்டார்கள். உரைநடை நூல்கள் பலவற்றை உருவாக்கித் தந்த தத்துவ போதக சுவாமிகள், அச்சுப் புத்தகம் கொணர்ந்த `சீகன் பால்கு' பாதிரியார், `சதுரகராதி' தந்த வீரமாமுனிவர், அரிய பல தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதிய போப் பாதிரியார், `திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' கண்ட கால்டுவெல் போன்றோரைத் தமிழுலகம் என்றும் மறவாது போற்றுமன்றோ?



பைந்தமிழை வளர்த்த பாதிரியார்களுள் குறிப் பிடத்தக் கவராகத் திகழும் இராபர்ட் கால்டுவெல் அயர்லாந்து நாட்டில் பிறந்தவர். அந்நாட்டில் கிளாடி என்னும் ஆற்றங்கரைச் சிற்றூரைத் தன் பிறப்பிடமாகக் கொண்டாலும், தமிழ் நாட்டில் பொருனை நதி பாயும் திருநெல்வேலிச் சீமையில் வெம்மை மிகுந்த செம்மண் தேரியில் அமைந்த இடையன்குடியைத் தன் இருப்பிடமாகக் கொண்டு மதப்பணியும் தமிழ்ப் பணியும்

புரிந்த மாபெரும் தொண்டரும் மாமேதையும் அவராவார். அவ்வூரைச் சுற்றி வாழ்ந்த பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் காவல் தெய்வமாக வாழ்ந்து வந்த பெருந்தகையாளரே கால்டுவெல் பாதிரியார்.

ஆங்கிலக் கல்வியின் மூலமே கிறித்தவ சமயத்தைப் பரப்ப இயலும் என்போரின் கூற்றுக்கு மாறாக, `சாமான்ய' மக்களின் உள்ளங்களைத் தொடவேண்டுமெனில், தாய்மொழி வழியாகத்தான் கிறித்தவ சமயக் கோட்பாடுகள் பரப்பப்படவேண்டும் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியவர், அறிஞர் கால்டுவெல்.-----சிற்றூர்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் அன்னார் தம் தாய்மொழியாம் தமிழ்மொழியே, சாலச் சிறந்த சமயத்தைப் பரப்பும் சாதனமாகத் திகழும் என்று கூறியவர் அவர். இம்முறையில் கிறித்தவ சமயத்தைப் பரப்பிய காரணத்தால் தான், இடையன் குடியைச்சார்ந்த சுற்றுவட்டாரத்தில் இவர் வருவதற்கு முன்பு ஆயிரமாக இருந்த கிறித்தவர்களின் எண்ணிக்கை, இவர் வந்து தொண்டு செய்த பின் இலட்சமாகப் பல்கிப் பெருகியது. இம் முயற்சியில் அவர்தம் அன்புத் துணைவியார் எலிசா அம்மையாரும் பெருந்துணை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கால்டுவெல் அறிஞரின் தலையாய தமிழ்ப்பணியாகக் கருதப்படுவது அவர்தம் `திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலாகும். 1856-ஆம் ஆண்டு வெளிவந்த அந்நூல்தான், மேலைநாடுகளில் கால்டுவெல் அறிஞரின் புகழ் ஓங்குவதற்குக் காரணமாக அமைந்தது. கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மாணவராக இருக்கும் போதே ஒப்பிலக்கணத்தின் மூலமாக மொழித்திறம் உணரும் முறைமையைக் கால்டுவெல் அறிந்திருந்தார். ஒப்பிலக்கண உணர்வினைக் கால்டுவெல் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்தவர், சர் டேனியல் சேண்ட் போர்டு என்னும் கிரீக்கு மொழிப் பேராசிரியர் ஆவார். திராவிட மொழிகள் அனைத்தும் ஓர் இனத்தைச் சேர்ந்தவை என்னும் உண்மையை முதன் முதலாக உலகுக்கு உணர்த்திய பெருமை கால்டுவெல் அறிஞரையே சாரும். அதனால்`திராவிட மொழி நூலின் தந்தை என்றே அன்னார் பாராட்டப்பெறுகின்றார்.

தமிழ் மொழியை மிகவும் மதித்துப் போற்றியவர் கால்டுவெல் அறிஞர். "திராவிட மொழியினங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த திருந்திய மொழி தமிழேயாம். அது சொல் வள மிகுந்தது ... இதனால் தமிழுக்குத் தலைமை இடம் அளிக்கப்பட்டது " என்று அவர் கூறும் கருத்து அன்னார் தம் உள்ளத்தின் வெளிப்பாடாக அமைந்திருக்கின்றதன்றோ? ஏனைய திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை வடமொழியின் துணையின்றி வாழ முடியாது என்ற நிலைமைக்கு வந்து விட்டன. ஆனால், தமிழ்மொழியோ வட மொழியின் துணையின்றியே வளமுடன் வாழும் வல்லமை பெற்றுத் திகழ்கிறது என்னும் கருத்தினைத் `திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் தம் நூல் மூலம் வலியுறுத்திக் கூறுகின்றார் அவர். மொழியியல் துறையில் புதிய ஆராய்ச்சி நெறியினைப் புகுத்திய கால்டுவெல் அறிஞருக்குக் கிளாஸ்கோ பல்கலைக் கழகம் `டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது எனின், அன்னார்தம் ஆராய்ச்சித் திறனுக்கு வேறு உரைகல்லும் வேண்டுமோ?

தமிழ் நாட்டின் தொன்மையினைத் தக்க ஆதாரங்களுடன் நிலை நிறுத்த நினைத்து அதற்கான ஆராய்ச்சிப் பணியிலும் கால்டுவெல் அறிஞர் ஈடுபட்டார். `துகி' என்னும் ஈபுருமொழிச் சொல் `தோகை' என்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவென்றும், `அருசர்' என்னும் கிரீக்கு மொழிச் சொல் `அரிசி' என்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவென்றும் உலகுக்கு அறிவித்த பெருமை கால்டுவெல் அறிஞரையே சாரும். `தமிழர்' பற்றிய கால்டுவெல் அறிஞரின் கருத்தும் அறியத்தக்கதாகும். "தமிழர்களைக் கீழை நாட்டுக் கிரேக்கர்கள் அல்லது ஸ்காட்சுகள் என்று கூறலாம். இந்துக்களுக்குள்ளேயே குறைந்த அளவு குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள் தமிழர்களேயாம். பொருளீட்டும் பெரு முயற்சியும் பேருழைப்பும் வாய்ந்தவர்கள் தமிழர்களே" என்னும் கால்டுவெல் பாதிரியாரின் மதிப்பீடு நம்மை மெய் மறக்கச் செய்கின்றதன்றோ?

கால்டுவெல் அறிஞரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "திருநெல்வேலி சரித்திரம் " என்னும் நூல் அன்னார்தம் வரலாற்று ஆர்வத்தினை இவ்வையத்திற்கு எடுத்துக்காட்டுகின்றது. அவர் இயற்றிய தமிழ் நூல்களான "நற்கருணைத் தியான மாலை" 1853-ஆம் ஆண்டிலும், `தாமரைத் தடாகம்' 1871 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. மேலும் `ஞானஸ்நானம்' `நற்கருணை' என்னும் இரு பெருங் கட்டுரைகளையும் தமிழில் எழுதியிருக்கின்றார். தென்னாட்டில் பணிபுரிந்த வேத விளக்கச் சங்கத்தின் வரலாற்றைத் தொகுத்தும் நூலாக்கி வெளியிட்டுள்ளார். கிறித்துநாதரை வழிபடுவதற்காக அமைந்த `பிரார்த்தனை நூலைத்' (The Prayer Book) திருத்தி அமைக்கும் பெரும்பணியில் ஈடுபட்ட அறுவர் குழுவில் ஒருவராக இருந்து, சீரிய முறையில் அவ்வழிபாட்டு நூல் அமையத் துணைபுரிந்தார். இடையன் குடி வட்டத்தில் வாழ்ந்த மிகவும்

பிற்படுத்தப்பட்ட பெரும்பான்மை சமூக மக்களின் வாழ்க்கை முறைகளை மையமாக வைத்து ஆங்கிலத்தில் ஒரு சிறு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். உயர் சாதிக்காரர்களால் இழிவாக நடத்தப்பட்ட அச்சாமான்ய மக்கள் தம் வேதனைக் குரலின் வெளிப்பாடாக அந்நூலை அமைத்து, அன்னாரின் துன்பத்தைத் துடைக்க வழிகோலுகிறார் கால்டுவெல்.

இங்ஙனம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்த குணாளராகத் திகழ்ந்த கால்டுவெல் அறிஞரின் அறிவாற்றலையும், புகழ்மேம்பாட்டையும் கண்டு பொறாமை கொண்ட உளத்தினர் சிலர், அவரைப் பற்றிப் புறங்கூறிப் பொய்த்து உயிர்வாழத் தலைப்பட்டனர். ஒரு முறை நீலகிரி மலையில் ஒரு மாதம் தங்கியிருந்தபோது, ஒரு பெண்ணோடு தொடர்பு கொண்டிருந்தார் என்றும், திருமணம் செய்து கொண்டார் என்றும் பலவாறு கதை கட்டிவிட்டனர் ஒரு கூட்டத்தினர். தன்னைக் காணவரும் மங்கையரைத் தங்கையராகக் கருதும் தன்மை கொண்டவர்தான் கால்டுவெல் அறிஞர் என்பதை நன்கு அறிந்திருந்தும் வேண்டுமென்றே பொய் மூட்டைகளை அவிழ்த்து விடலாயினர். அதன் மூலம் அன்னார் தம் பெருமையை -பெரும் புகழைக் குலைத்துவிடலாம் எனக் கனவு கண்டனர். அவர்களால் வானத்தைப் பார்த்துக் குரைக்கத்தான் முடிந்தது. கால்டுவெல் பாதிரியாரோ, வண்ண நிலவாகப் புகழ்வானில் பவனி வந்தார். அப்பொய்யர்களை யார் என்று அறிந்த பின்னர் அன்னார் நாணும் வண்ணம் பல உதவிகளைச் செய்த நல்லோராக உலகுக்குத் தம் உயர்ந்த பண்பினை வெளிப்படுத்திக் காட்டியவர் கால்டுவெல் அறிஞர்.

சமயத் தொண்டராக, ஆராய்ச்சி அறிஞராக, மொழிநூல் வல்லுநராக, தமிழ் வளர்த்த சான்றோராக, பகைவருக்கு அருளும் பண்பாளராக விளங்கிய கால்டுவெல் பெருமகனார் 1891-ஆம் ஆண்டு ஆகஸ்டு 28-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார். ஐம்பதாண்டுகளுக்கும் மேலாகச் சீரிய தொண்டுகள் பல புரிந்த இச் செந்தமிழ் மண்ணிலேதான் கல்லறை கொள்ளவேண்டும் என்ற தன் விருப்பத்தை முன்பே வெளியிட்டிருந்தார். அதன்படி, செம்மண்தேரி சூழ்ந்த இடையன்குடி மண்ணில் அன்னார்தம் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. வெளிநாட்டிலிருந்து கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காகத் தமிழகத்திற்கு வருகை தந்திருப்பினும், தமிழர் மத்தியில் ஒரு தமிழராக வாழ்ந்தவராகவே தமிழுலகம் கால்டுவெல் அறிஞரைக் கருதுகிறது.

"செயற்கரும் பணிசெய்து சிறப்புற்ற கால்டுவெல் ஐயர் மனமொழி மெய்யென்னும் மூன்றையும் தமிழகத்தார்க்கே ஒப்புவித்த தன்மையால் அப்பெரியாரைத் தமிழர் என்று கருதுதலே தக்கதாகும்" என்னும் சொல்லின் செல்வர் டாக்டர் இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் சீரிய கருத்து நம் சிந்தனைக்குரியதாகும். சமயப்பணியையும் தமிழ்ப் பணியையும் ஒன்றெனக் கருதி வாழ்ந்த கால்டுவெல் பெருமகனாரின் புகழ், என்றும் நம் நெஞ்சில் நின்று நிலவுமாக!



# மொழி மானம் காத்த முதல்வன்

## கவிஞர் ஆ.திருவாசகன்

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந் தமிழ்த்தாய்" தான் தோன்றிய நாள் தொட்டு எண்ணிறந்த புலவர்களையும், அறிஞர்களையும் அருளாளர்களையும் ஈன்று புகழ்தாங்கிய போதும், தம் மைந்தருள் ஒருவராவது தன்னைத் தமிழ்மைந்தன் என்று கூறுவாரா என்று ஏங்கினாள். அந்த ஏக்கத்தை நீக்கி மொழி மானங்காத்த முதல் மகன் திருஞானசம்பந்தப் பெருமானே ஆவார்! இறைவி ஊட்டிய பொற்கிண்ணத்து அடிசில் மூன்றாம் அகவையிலேயே அவரை நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தனாக்கியது! அப்பேரருளாளன் பாடி இன்று நமக்குக் கிடைத்துள்ள சுமார் நாலாயிரம் பாடல்களில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழின் அளப்பரிய பெருமைகளையும் தமிழால் இறைவனை அடையலாம் என்று ஆணையிட்டும் கூறுகின்ற காட்சியை வேறு எந்த இலக்கியத்திலும் நாம் காண இயலாது. தன்னைத் தமிழன் என்று மார்தட்டிக் கூறி மாற்றாரை மனங்குலைய வைத்த எந்தப் புலவனையும், அருளாளனையும் ஞானசம்பந்தர் காலம் வரை தமிழ் ஞாலம் கண்டதில்லை!



இனமானத்திற்காகச் சேரன் செங்குட்டுவன் இமயத்தை வென்றிருந்தாலும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனித நேயத்தை முதலில் உலகுக்குச் சொன்னது தமிழனின் அரிய பெருந்தன்மைதான் என்றாலும், தன்னைத் தமிழன் என்று சொல்லி அதனாலேயே தான் பிறந்த சமூகத் தாரிடமிருந் து இன் றுவரை தள் ளி பட்டு ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் உள்ள புரட்சி வித்தகர் நம் பைந்தமிழ் ஞானசம்பந்தனே என்றால் அதில் துளியும் மிகையில்லை.

ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணன் சிவநேசன் என்பதையும், ஒன்பதாம் பாடலில் திருமாலும், பிரமனும் காண முடியாதவன் சிவபிரான் என்பதையும், பத்தாவது பாடலில் சமண, புத்தமதங்களைச் சாடுவதையும், திருக்கடைக் காப்பாகிய பதினோராவது பாடலில் தம்மைத் தமிழோடு இணைத்துப் பாடுவதையும் காணும் எந்த உண்மைத் தமிழனும் நெஞ்சுயர்த்தாமல் இருக்கமுடியாது.

"பழுதில் இறை எழுதுமொழி தமிழ் விரகன்"

"செந்தமிழ்பரப்புறு திருப்புகலி தன் மேல்"

"பந்தன் உரை செந்தமிழ்கள்"

"தலைமகனாகி நின்ற தமிழ் ஞான சம்பந்தன்"

"தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்

"ஞான சம்பந்தன் தமிழ் மாலை"

என்று பன்னூறு திருக்கடைக் காப்புப் பாடல்களில் தமிழோடு தம்மை இணைத்துப் பிணைத்துக் கூற வேண்டிய கட்டுப்பாடு ஞானப் பிள்ளைக்கு ஏன் நேர்ந்தது?

திருஞானசம்பந்தப் பெருமான் தோன்றுவதற்கு முன்னர் தமிழகம் களப்பிரர் ஆட்சியில் மயங்கிக் கிடந்தது. சமணம் அப்போது கொடிகட்டிப் பறந்தது. சமணர்கள் தமிழைக் கற்று அதில் பல காப்பியங்களும், இலக்கணங்களும் இயற்றி யிருந்தாலும் சமயத்தை வளர்க்கவே மிகுதியும் மொழியைப் பயன்படுத்தினார்கள். சம்பந்தர் தோன்றிய காலத்தில் தமிழ்நாட்டின் வட பகுதியில் கோலோச்சிய பல்லவர்களும் தென்பகுதியை ஆண்ட பாண்டியன் நின்றசீர் நெடுமாறனும் சமணத்தைத் தழுவியிருந்ததைக் காணும்போது தமிழகம் முழுவதும் சமணத்தின் செல்வாக்கில் கட்டுப்பட்டிருந்தது புலனாகின்றது. அடுத்த நிலையில் பௌத்தமும், அதற்குப் பிந்திய நிலையில் வேத வேள்வியில் ஒழுகும் வைதிகமும் இருந்து வந்தன. சமணத்தை ஏற்காத பல்லவ மன்னர்கள் கூடத், தாம் வடபுலத்திலிருந்து வந்தமையால் இயல்பாகவே தமிழர்கள் பின்பற்றி நின்ற வழிபாட்டு முறை, பக்திநெறி, தாய்மொழியில் வழிபாடு செய்தல் முதலியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாகத் தமிழ் வேத விற்பன்னர்களை மதியாமல் வடநாட்டிலிருந்து வேதியர்களை வரவைத்து அவர்களையே அரசகுருக் களாகவும், தெய்வவழிபாட்டுக்குரிய பூசாரிகளாகவும் நியமித்துப் பிறமொழி வழிபாட்டைப் போற்றிவளர்த்தனர். தமிழகத்தின் சிவவேதியர்கள் வேதங்களை அறிந்திருந்தாலும் அதன் வழக்கிலிருந்து மாறுப்பட்ட ஐந்தெழுத்துக்கே (ந,ம,சி,வா,ய)முதலிடம் கொடுத்து வந்தனர் என்பது ஆளுடைய பிள்ளையாராகிய சம்பந்தப் பெருமானின் திருப்பா டல்களிலிருந்து நாம் காணமுடிகிறது. வடபுலத்தவர் தமிழகத்தில் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதற்காகத் தமிழர்களின் பழக்க வழக்கங்களை ஒதுக்க முயன்ற பல்லவர்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்தனர். அக்கரைப் பச்சையில் மயங்குகின்ற அல்லது அதனைப் போற்றித் துதிக்கின்ற தமிழர்களின் குணக் குறைபாடு தனித்தமிழ் வேந்தர்களாகிய இராசராசன், இராசேந்திரன் போன்றவர்களையும் விட்டுவைக்கவில்லை. அவர்கள் வடக்கேயிருந்து தமிழகம் போந்த சதுரானன பண்டிதர், லகுலீசபண்டிதர் என்பவர்களையே குருமார்களாகக் கொண்டனர். தேவாரம் பாடிய அருள் நெறித் தந்தையர்களாம் அப்பர், சம்பந்தர், சுந்தரர் தோன்றி ஆறு அல்லது ஏழு நூற்றாண்டுகட்குப் பின்னரும் இந்தநிலை என்றால் சம்பந்தர் காலத் தமிழகத்தை எண்ணிப்பார்ப்பதற்கே அச்சமாயிருக்கிறது.

தமிழர்கள் உயர் சைவ நெறியைப் பெற்றிருந்தும், சிவவேதியர்கள் வேதாகமங்களை உணர்ந்திருந்தும், வந்தோர்களிடம் ஏற்பட்ட மயக்கத்தால் தாழ்ந்து கிடந்தனர். அவர்களைக் கண்டு மனம் பொறாத ஞானசம்பந்தப்பிரான் தமிழர்களிடையே மங்கிப்போய்க் கிடந்த மொழிமானத்தையும் இனமானத்தையும் தூசிதட்டி ஒளியேற்றினார். அதன் பொருட்டே வடபுலச் சமயங்களையும், வடபுல வேதியர்களையும் முழுமூச்சாக எதிர்த்துப் புரட்சிக் கொடி உயர்த்தித் தன்னை வேதம் அறிந்தவன் என்றும், அது தனக்கு நன்கு தெரியும் என்றும் கூறியதுடன் அதனிலும் சிறந்த தமிழைப் பாடவந்தேன் என்றும் முரசு முழங்கினார். "முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்" என்ற அவருடைய சொல்லாட்சி நான்மறையைப் பின் வைத்து முத்தமிழை முன்னே வைத்தது.

> 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்'
> 'நல்லிசை ஞான சம்பந்தன்'
> 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
> ஞான சம்பந்தன்'

என்று சுந்தரமூர்த்தி அடிகளால் பாராட்டப்பெறுகின்ற திருஞான சம்பந்தர் கவுண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணர் என்று கூறப்படுகிறார்.(கவுண்டின்யர் என்பார் மருத்துவர் குலத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்து கன்னட நாட்டில் புரட்சியாளர் பசவண்ணரால் கூறப்படுகிறது) தமிழ்நாட்டில் இன்றளவும் சிவாச்சாரிய பரம்பரையினராகிய சுந்தரரையும், கவுண்டின்ய கோத்திரத்தாராகக் கூறப்படும் சம்பந்தரையும் வைதிக நெறியினர் முற்றிலும் ஏற்றுக் கொள்ளவில்லை!

தமிழ் மரபை, மொழியை, முதலில் தாக்கியது வேதமரபு. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியையும், இராசசூயம் வேட்டவனையும் வேதமரபே தமிழகத்தில் உண்டாக்கியது மெய்மைதான் என்றாலும், அடுத்துவந்த சமண பௌத்த சமயங்கள் தமிழ்மரபையும், வேதமரபையும் ஒடுக்கின. சமணத்தின் மீதும் அதே அளவு பௌத்தத்தின் மீதும் நேரடித் தாக்குதல் தொடுத்த சம்பந்தப் பெருமான் வைதிகத்தை மறைமுகமாகச் சாடினார். காரணம் அவர்கள் சிவபரம்பொருளை முற்றிலும் ஏற்காவிட்டாலும் ஓரளவு ஏற்றுக் கொண்டவர்கள். அவர் வாழ்ந்த காலத்தில் வேதச் சூழ்நிலையுடன் கூட்டணி அமைத்தே சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டியதை உணர்ந்து வேறு

மந்திரங்களுக்கு எதிராகத் தமிழ் மந்திரத்தை எச்சரிக்கையோடு உயர்த்திக் காட்டினார்.

தமிழ்நாட்டில் தமிழனாகத் தோன்றி, தமிழர்களிடையே வாழ்ந்த பெருமகனார் ஏன் ஓயாது தன்னைத் தமிழனாகச் சொல்லிக் கொள்ள வேண்டும்? அவர்காலத்தில் இறைவழிபாட்டு மொழியாக வேற்று மொழி மேலோங்கியது மட்டுமல்ல; தமிழ் அதற்கு உகந்தது அல்ல. எனவே அதைக் கற்றல் தேவையுமல்ல என்று இன்று போலவே தமிழை அழிக்கும் கும்பலின் ஆதிக்கம் வலுப்பெற்றிருத்தல் வேண்டும். எனவே முதலில் இன உணர்ச்சியை எழுப்பி அதன் வாயிலாக மொழி உணர்ச்சியையும் இறைஉணர்ச்சியையும் அற்புதமாக ஏற்படுத்தினார்.

திருநீலகண்டயாழ்ப்பாணர் தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தும், தன் கூடவே அழைத்துச் சென்று திருநீலநக்கர் என்ற முத்தீ வளர்க்கும் அந்தணர் இல்லத்தில் வேள்வி செய்யும் இடத்திலேயே தங்க வைத்தார் என்றால் அவருடைய சமுதாயப் புரட்சியும், தமிழகச் சைவநெறியின் மாண்பும் எத்தகையன என்பதுமட்டுமல்ல; எவ்வளவு துணிவான புரட்சிவீரர் சம்பந்தர் என்பதையும் காட்டுகிறது. தீந்தமிழின் தீண்டாமை மட்டுமல்ல; மேட்டுக்குடியின் தீண்டாமையும் தீயிடப்பட்டது ஞானசம்பந்தப் பெருமானால்தான். அன்று அவர் தமிழன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டதால்தான் இன்றும் நாமும் தலைநிமிர்ந்து சொல்ல முடிகிறது.

நான்மறையிலும், வேள்வியிலும் நாங்களும் சிறந்தவர்களே; ஆனாலும் அவற்றைவிட எங்கள் மந்திரம் உயர்ந்தது. வழிபாடு இனியது. மொழி உயர்ந்தது. அந்த மொழி என்னுடைய மொழி என்று கூறும் ஞானசம்பந்தர் ஆளுடையபிள்ளை மட்டுமல்ல; நம்முடைய மொழிகாத்த மூத்தபிள்ளை! நமது வீட்டுப்பிள்ளை!!



# முல்லையைக் காணும்போது...



## ஓவியப் பாவலர் மு.வலவன்

### குறிஞ்சி பறம்பு மலைவளம்

கனியினைக் கடுவன் ஈர்த்தே
காதலால் மந்திக் கீயும்!
மதுவினில் தோய்ந்த வண்டு
மலரினில் மயங்கிச் சாயும்!
மழைமுகில் தன்னைக் கண்டே
மயில்மணித் தோகை பாயும்!
தழைதினை தன்னைக் கொத்த
தாவிடும் கிளியின் கூட்டம்!

தொண்டகப் பறைமு ழக்கித்
தோகையர் நடனம் ஆடக்
கண்டிடும் குறவர் கண்ணோ
காதலால் மெழுகாய் மாறும்!
விண்டிடா எழில்சேர் வெற்பின்
வீழ்ச்சியே அருவிச் சாரல்!
மண்டிடும் முகிலைக் கூட
மணிக்கரம் நீட்டும் குன்றம்!

குறிஞ்சியைப் பாடுதற் கோர்
குளிர்மதிக் கபிலன் வேண்டும்!
அருங்கனி அதியன் கீர்த்தி
ஔவையே பாட வேண்டும்
பரணிபோல் வீரம் பாடப்
பாரதி தாசன் வேண்டும்!
இருப்பினும் நானு மிங்கே
இயம்பினேன் குறிஞ்சிப்
பாட்டை!

### முல்லைப் பாட்டு

கொன்றையும் குருந்தும் ஓங்கிக்
குறைவிலா எழிலைப் பெய்யும்!
கன்றுடன் பசுக்கள் மேயும்!
கண்ணனைத் தொழுவர் ஆயர்!





பண்ணிசைக் குழலை வைத்தே
பரப்புவர் காற்றில் கீதம்!
இன்னவா றந்த முல்லை
இருப்பதை அறிவீர் நீவிர்!

வடிவுடைத் தேரை ஓட்டி
வந்தனன் பாரி மன்னன்!
கொடிமுல்லை தன்னைக் கண்டு
கொம்பின்றி வாடக் கண்டு
'படுதொல்லை' முல்லைக் கென்றே
பதைத்தவன் வருந்து கின்றான்
'விடுதேரை' இங்கே என்றான்
விழித்தனன் வலவன் நின்றே!

### பாரி காதை

"வந்தவர்க் கெல்லாம் வாரி
வழங்குவான் வள்ளல் பாரி!"
சிந்தையில் வைப்பீர்! என்றே
செப்பினார் கபிலர்! அந்த
அந்தணர் சொன்ன சொல்லை
அடியேனும் சொல்லு கின்றேன்
அந்தநாள் வேந்தர் எல்லாம்
அறத்தாலே உலகை வென்றார்!

"விலையிலாத் தேரா? இந்த
வீழ்முல்லைக் கொடிக்கே! என்றான்
அலைகண்ணீர் துடைத்துக் கொண்ட
அண்ணலும் திரும்பிப் பார்த்தே
நிலையிலா யாக்கை பெற்ற
நெடுமரம் என்னை விட்டே
இலைமுல்லைக் கொடியி னுக்கே
ஈக இத் தேரை!" என்றான்

வாடிய பயிரைக் கண்டு
வருந்திய வடலூர் வள்ளல்
பாடலைப் பாடும் போது
பாரியின் நினைவே தோன்றும்!

ஓடிடும் தேரும் தோன்றும்!
ஒளிமுல்லைக் கொடியும் தோன்றும்!
ஈடிலாப் புகழும் தோன்றும்!
ஈகையின் மாண்பும் தோன்றும்!

முல்லைப்பூ பூக்கும் போதோ
முத்தமிழ்க் கற்பு பூக்கும்!
முல்லைப்பூ நோக்கும் போதோ
மொய்குழல் முறுவல் தாக்கும்!
முல்லையைக் காணும் போதோ
மூவேந்தர் தம்மை வென்ற
வள்ளலாம் பாரி வேந்தர்
வரலாறே தோன்றும் என்பேன்.

# தமிழர் வாழ்வில் நாடகம்

## 'நாடகச்செம்மல்' பட்டுக்கோட்டை குமாரவேல்

ஒரு கருத்தை மக்கள் உடனே புரிந்து கொள்ளும்படி சொல்ல வேண்டுமென்றால் நாடகம் ஒன்றினால்தான் சுலபமாகச் சொல்ல முடியும்.

சிறுகதைகள் - புதினங்களை வாசகன் படிக்கும்போது ஆசிரியர் சொல்லியிருக்கும் கருத்து வெளிப்படும் இடத்தைப் படிப்பதற்குள், பல சிந்தனைகளும் வேலைகளும் வந்து அந்தக் கருத்தைப் படிக்க முடியாமலே செய்துவிடுவதுண்டு. படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தை மூடி வைத்துவிடுவான். அலலது தூங்கிவிடுவான். ஆனால் நாடகம் அப்படியல்ல. நாடக மேடையில் நாடகக் கதைப்பாத்திரங்களை நிறுத்திச் சொல்லவேண்டிய கருத்துக்களைச் சொல்லிவிடலாம்.



படிக்கத் தெரியாத பாமர மக்கள் கூட, நாடகத்தின் மூலம் சொல்லும் கருத்தை உடனே புரிந்துகொள்வார்கள்.

அதற்குக் காரணம் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு மக்களைக் கவருவதுதான்.

முதன் முதலில் மனித வாழ்க்கையின் பிரதி பலிப்புகளை உலக மக்கள் தெரிந்து கொள்ளும்படி செய்ய எல்லா நாடுகளிலும் சொற்பொழிவும் கூத்தும்தான் உதவியாக இருந்தன. அதன்பிறகு மொழி அறிவும், எழுத்தறிவும் வளர்ந்து, அவற்றைப் பின்னர் நூல்களாக எழுதினார்கள்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற பிற மொழிக் கதைகளை மூலக் கதைகளாக வைத்துத் தமிழர்கள் இலக்கியங்களை உருவாக்கினார்கள். மூல இலக்கியம் என்பது பிறமொழி நூல்களைப் படித்து எழுதுவதல்ல. நேரடியாக மக்கள் வாழ்க்கையைப் பற்றி எழுதுவதுதான்.

திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் ஒருவர்தான் மக்கள் நடைமுறை வாழ்க்கையைப் பார்த்து அனுபவித்து எழுதியிருக்கிறார். மக்கள் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை வைத்துச் செய்யுள் வடிவில் இலக்கியமாக எழுதியிருக்கிறார்.

அதுதவிர, தமிழில் உருவாகியிருக்கும் இலக்கியங்கள் பலவற்றில் பிறமொழி இலக்கியங்களின் சாயல்கள் படிந்து கிடக்கின்றன. ஆகையால் அவர்களை எல்லாம் இலக்கியச் சிற்பிகள் என்று அழைப்பதற்கில்லை.

மக்கள் வாழ்க்கையில் நாள்தோறும் இலக்கியம் படைப்பதற்கான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. அவற்றைப் பார்த்து அனுபவித்து அவற்றை மக்கள் அறிந்து

பயனடையும்படி எழுதுகின்ற இலக்கிய ஏந்தல்கள் எப்பொழுதும் தோன்றுவதில்லை.

தமிழில் எழுந்துள்ள இலக்கியங்கள் பல இருந்தாலும், அவற்றை ஈன்ற ஆசிரியர்களின் வரலாறுகள் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பெரும்பாலும் காலம் -இடம் நிகழ்ச்சி என்று அமைத்துக் கொண்டு தமிழில் மூல இலக்கியங்களை வழங்கவில்லை.

திருக்குறளை எழுதிய திருவள்ளுவருக்குப் பிறகு, தமிழிலே மூல இலக்கியத்தைத் தந்த 'இலக்கியச் சுடர்' இளங்கோவடிகளே! அவர் எழுதிய சிலப்பதிகாரம்தான் முதல் தமிழ் இலக்கிய நாடக நூல். அதுதான் தமிழ் இலக்கியத்திற்கே முழுமுதல் நாடகமும் வழிகாட்டிக் காப்பியமும் ஆகும்.

தமிழ் மூவேந்தர்கள் கண்ணகியைத் தெய்வமெனக் கொண்டாடிய பின்னரே சகோதர அன்பின் காரணமாக அரசியல் துறவு பூண்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காப்பிய நூலை இவ்வுலகுக்குப் படைத்தார்.

தமிழ் நாட்டில் பிறந்து தமிழே பேசி வாழ்ந்து, புகழ் பெற்ற மக்களைத் தலைவர்களாகக் கொண்ட நாட்டுக் காவியம் சிலப்பதிகாரம்!

இதைத் தொடர்ந்து பல தமிழ்ச்சான்றோர்கள் பல மேடை நாடகங்களை உருவாக்கி நடத்தியிருக்கிறார்கள். அவற்றிலெல்லாம் மேலைநாட்டு நாடகங்களின் பாதிப்புகளும் ஆங்கில ஆட்சியின் மொழி ஆதிக்கமுமே மேலோங்கிக் கிடக்கின்றன.

அதன் பிறகு உண்டான நாடகக் குழுக்கள் புராண இதிகாசங்களை நாடகங்களாக்கி மேடை ஏற்றி மகிழ வைத்தார்களே தவிர, அவற்றில் தமிழர்களின் வாழ்வும் வளர்ச்சியும் தெரியவில்லை.

அதற்குப்பின்னர் அரங்கேறிய மேடை நாடகங்கள் உச்சிச் சாதியினரின் கலைப் பண்பாட்டு ஆதிக்கத்தினால் அவர்களின் வாழ்க்கையை ஒட்டி வெறும் பொழுதுபோக்கு நாடகங்களாகவே அமைந்தன. அவற்றை மக்கள் குடும்பத்தோடு பார்த்து மகிழ முடியாத அளவுக்குக் கேலியும் கிண்டலும் மலிந்து கிடந்தன. அப்போதுதான் திரைப்படங்கள் மேடை நாடகங்களை ஆதிக்கம் செலுத்த எழுந்தன.

இந்தச் சூழலிலேதான் வானொலி நாடகங்கள் நம்பிக்கை ஒளிமீன்களாக வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளை நாடகங்களாக ஒலிபரப்பத் தொடங்கின.

1938இல் சென்னை வானொலி நிலையம் ஏற்பட்டது. 1939 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. இப்போது பதினெட்டு இந்திய மொழிகளிலே வானொலி நாடகங்கள் ஒலிபரப்பாகின்றன.

மக்கள் வானொலிப் பெட்டியின் முன்னாலே உட்கார்ந்து கேட்டு மகிழ்வதும் நெகிழ்வதும் வானொலி நாடகத்திலேதான்!

மேடை நாடகங்கள், திரைப்படங்களிலே காணப்படுகின்ற பாலுணர்ச்சிகளுக்கும் வன்முறைச் செயல்களுக்கும் வானொலி இடம் கொடுக்காமல் நல்ல இலக்கியப் பண்பாட்டோடு நனிசிறந்த கருத்துள்ள நாடகங்களை வானொலி ஒலிப்பரப்புகிறது.

வானொலி நாடகங்கள் பண்பாட்டை வளர்க்கும் நாடகங்கள். "புதுமை இல்லாமல் போனாலும் புனிதம் கெடாமல் இருந்தால்போதும்" எனும் வேலிக்குள்ளே வளரும் பூஞ்செடிகள்! நாடக இனத்திலேயே சனநாயகம் நிறைந்தது. வானொலி நாடகங்களில் சமுதாயக் களியாட்டங்களோ கசப்போ இடம் பெறுவதில்லை. இலட்சியங்களுக்காகப் பாடுபடுவதோடு புது இலட்சியங்களையும் அவை தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றன.

சாதி சமயம் என்னும் வேறுபாடு இன்றி எந்த மக்களின் மனத்தையும் புண்படுத்தாத சீரிய சிந்தனை வெளிச்சம் தரும் நாடகங்களைப் பொருள் பொதிந்த தமிழ் உரையாடல்களுடன் தருகின்றன வானொலி நாடகங்கள்.

பலதரப்பட்ட மக்களும் புரிந்துகொள்ளும் பேச்சுத் தமிழிலே வானொலி நாடகங்களை எழுதி வையகத் தமிழரின் வாழ்விலும் வளர்ச்சியிலும் பங்கு கொள்ளச் செய்வது வானொலி நாடகங்கள்!

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்று அவ்வையார் சொன்ன அமுத மொழியானது, எல்லாக் கவின் கலைகளுக்குமே பொருந்தக்கூடியதாகும்! அதிலும் "செந்தமிழும் நாப்பழக்கம்" என்னும் வாக்கு இருக்கிறதே, அது வானொலிக்கலைக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்!

வானொலிக்கு உரிய எந்தப் படைப்பாக இருந்தாலும் அது நாடகமோ, கலந்துரையாடலோ, சொற்பொழிவோ ஒரு வரி அறிவிப்போ எதுவாக இருந்தாலும், அந்த எழுத்துப் பிறக்க வேண்டிய இடம் 'பேனா' என்ற எழுதுகோல் இல்லை. அது பிறக்கவேண்டிய இடம் நாக்கு! 'நாப் பழக்கம்' எனும் மொழிக் கலைதான் வானொலிக்கு வித்து. 'நா'

என்னும் அந்த வித்திலிருந்து முளைக்க வேண்டிய அருங்கலையே இந்த வானொலிக்கலை!

எதை எழுதினாலும், ஒலிக்கருவியிலே அது எப்படி ஒலிக்கும், கேட்பவர்களுடைய செவிப்புலனிலே அந்த ஒலி எவ்வாறு உட்புகுந்து செல்லும், எத்தகைய மனச் சித்திரத்தை அந்தச் சொல்லொலி செவியிலே உருவாக்கி நிறுத்தும்? என்பவற்றையெல்லாம் நன்றாகப்புரிந்து கொண்டு 'செவியுணர்வு' என்ற நுட்பமான உணர்வோடு எழுதுகிறவனே சிறந்த வானொலி எழுத்தாளனாகத் திகழ முடியும்!

வானொலி நிகழ்ச்சியானது உடம்பு இல்லாத உயிரைப் போன்றது. ஒலியிலே உலவுகிற ஆவி அது. வடமொழியிலே அசரீரி என்ற சொல்லுக்குச் சரீரம் இல்லாதது என்று பொருள். வானொலி என்னும் அசரீரியும் அப்படித்தான்!

சரீரம் இல்லாமல் உயிர் இல்லை. என்றாலும் ஒலியே அதற்கு உடம்பாக அமைகிறது. இந்தப் பண்பே அதன் சிறப்பாகும். இடையூறு அல்லது இடுக்கண் என்பதும் இதுவே. ஏனென்றால் கண்ணினால் பார்க்க வேண்டிய அனைத்தையும் சேர்த்துக் காதுக்குள்ளேயே கொண்டு செலுத்த வேண்டிய ஒரு பெரிய கட்டுப்பாட்டுக்குள் வானொலி இயங்குகிறது.

சஞ்சயனுடைய வார்த்தை மூலமாகவே திருதராட்டிரன் மகாபாரதப் போரைப் பார்க்கிற கதையாகத்தான் வானொலி இருக்கிறது! ஆகையால் வானொலிக்கு எழுதுகிற எழுத்தாளன் தனது ஒவ்வொரு சொல்லையும் நாவிலே கொடுத்து வாங்கித் தனது எழுத்திலே அதைத் தொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது மொழியை நாவிலே நடமாடவிட்டு, அந்த அரிய நாப்பழக்கம் என்னும் ஒலிக்கலையிலிருந்து தன்னுடைய எழுத்தாகிய கண்காணா உருவத்துக்குக் கட்புல மயக்கம் ஒன்றைத் தர வேண்டியிருக்கிறது.

மனமாகிய கண்ணிலே உருவமும் காட்சியும் புலப்படும்படியாகச் செய்யும் சொற்கலை என்னும் வித்தையிலே எவ்வளவுக்கெவ்வளவு அவன் தேர்ச்சி பெறுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு, அவனுடைய வானொலி எழுத்து வெற்றி பெறுகிறது. எனவே வானொலிக்கலை மிகக் கடினமான கலை. இந்தக் கலைக்கு ஆழமான பயிற்சி இன்றியமையாதது.

உலக மொழி எதுவானாலும், மொழிக்கு வடிவம் என்பதே ஒலியின் வடிவந்தான். "மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" என்று நன்னூலார் மிக அழகாக இதைக்கூறிவிட்டார். வரி வடிவம் என்பதே கூட, ஒலி வடிவத்தின் மறு கூறுதான்.

இத்தனை ஆற்றல் மிகுந்த வானொலி நாடகக்கலையைச் சிறப்பாகக் கற்று ஒலிபரப்ப இந்திய அரசு மேலை நாடுகளுக்கெல்லாம் நிலையக் கலைஞர்களை அனுப்புகிறது.

இந்தியாவிலுள்ள எல்லா வானொலி நிலைய எழுத்தாளர்களையும் அமைப்பாளர்களையும் பல நிலையங்களில் ஒன்று சேர்த்துப் பயிற்சி முகாம்களை அமைத்து அங்குச் சிறந்த வானொலி நாடகங்களை உருவாக்குவது எப்படி என்று பயிற்சி அளிக்கிறார்கள்.

வானொலியில் ஐம்பது வகையான நிகழ்ச்சிகளை மக்கள் நல்வாழ்விற்காக ஒலிபரப்புகிறார்கள்.

வானொலி ஒரு கல்விநிலையம்!
வானொலி ஒரு பல்கலைக்கழகம்!
வானொலி ஓர் ஒலிவடிவ இலக்கியம்!
வானொலி ஒரு முத்தமிழ் ஆலயம்!



# புதிய சுவடும்

## கவியரசு இ.முத்துராமலிங்கம்

இல்லாதார் வயிற்றுக்குச் சோறிடாத -அந்தப்
பொல்லாதார் கோபுரங்கள் ஏன்? ஏன்? ஏன்?
கொல்லாமல் கொல்லுமத-சாதிப் பேயை-இன்னும்
கொல்லாதார் சமுதாயம் வீண்! வீண்! வீண்!!
வில்லாக வளைந்தவர்கள் நிமிர்ந்து விட்டால்-இற்று
வீழ்ந்துபடும் அதிகாரத் தூண்! தூண்! தூண்!!
நில்லாதே! நெருப்பலையே! நிலவைத்
தாண்டு!-ஏற்று
நீடுதமிழ்ப் புகழ்க் கொடியை வான்! வான்!
வான்!!

இல்லாதான் இருப்பவனால் சுரண்டப்பட்டால்
-எங்கும்
எரிமலைகள் வெடிக்கட்டும் தூள்! தூள்! தூள்!!
எல்லாமும் இவ்வுலகில் உழைப்பவர்க்கே -இதை
ஏற்காத தத்துவங்கள் பாழ்! பாழ்! பாழ்!!
கல்லானாய் புதையுண்டாய் காலங்காலம் -எழுச்சிக்
கரத்தினிலே எடுத்திடடா வாள்! வாள்! வாள்!!
புல்லானாய் மிதியுண்டாய் போதும்! போதும்!
போதும்!!-
புலிப்போத்தே ஏந்திடடா வேல்! வேல்! வேல்!!





# உலகளாவிய தமிழர் பொருளியல்

## முனைவர் அரு.கோபாலன்

சுதந்தர இந்தியாவில் முதலாவது வரவு செலவுத்திட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டபோது நிதியமைச்சராக இருந்தவர் "கொங்குநாட்டுககோமான்" என்று தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டவரும், சிலப்பதிகாரத்திற்குப் புத்துரை கண்டவருமான செந்தமிழ் அறிஞர் ஆர்.கே.சண்முகனார் அவர்களாவார். அவர் தமது உரையில் "பர்மாவில் வங்கித் தொழில் செய்து வந்த தமிழ்மக்கள் உலகப்போரின் காரணமாக அப்படியே விட்டுவந்த சொத்துக்களுக்காகப் பர்மிய அரசாங்கம் ரூ905 கோடி நட்டஈடு தரவேண்டும். இந்திய அரசாங்கம் அதைக் கோரிப் பெறவேண்டும்" என்று கூறினார்.

ஆனால் அன்று இந்தியத் தலைமையமைச்சராக இருந்த பண்டித சவகர்லால் நேரு அவர்கள் "பர்மா புதிதாகச் சுதந்தரம் பெற்ற நாடு என்பதால் அதை வற்புறுத்த வேண்டாம். பெருந்தன்மையுடன் விட்டுவிடலாம்" என்று கூறிவிட்டார்.

1948 ஆம் ஆண்டு 905 கோடிரூபாய்கள் என்றால், இன்று அது 90500 கோடி ரூபாய்களாகும். இந்தப் பணம் தமிழினத்தின் வைப்பு நிதியாகப் போடப்பட்டிருந்தால், இன்று அது எத்தனை மடங்காகப் பெருகியிருக்கும்?...



இப்படியே இன்றைக்கு வியட்நாம், கம்போடியா, லாவோஸ் முதலிய நாடுகளாக இருக்கும் அன்றைய பிரஞ்சுக் காலனியான இந்தோ சீனாவிலும், மற்றும் பல நாடுகளிலும் தமிழ் மக்கள் பெரும் தொழிலதிபர்களாகவும், வணிகர்களாகவும் இருந்து சம்பாதித்த பல்லாயிரங்கோடி ரூபாயை அப்படியே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். தொழிலாளர்களாய் இருந்து உழைத்துக் கொடுத்துவிட்டு வந்தவர்கள் வேறு உள்ளனர்.

அன்று அப்படித் திரைகடலோடித் திரவியம் தேடி, கோடீசுவரர்களாக இருந்த பல குடும்பங்களின் வாரிசுகள் இன்று தமிழ்நாட்டில் ஏழைகளாகி அன்று தங்கள் முன்னோர்கள் கட்டிவைத்த பெரும் பெரும் வீடுகளை இடித்து அவற்றிலுள்ள தேக்குமரம் போன்ற விலை உயர்ந்த பொருள்களை விற்றுப் பிழைக்கின்றவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம்.

தங்கள் முன்னோர்கள் வெளிநாடுகளில் விட்டுவந்த சொத்துகளுக்கு உரிய இழப்பீடுகள் கிடைக்குமானால், அல்லது அன்று அவர்கள் ஈட்டிய பணம் உலகளாவிய ஒருபொருளியல் அமைப்பின் மூலம் கையாளப்பட்டிருக்குமானால், இன்று வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய

மக்கள் அல்லது அவர்களுடைய சந்ததியினர் தமிழ்நாட்டில் துன்புறவேண்டிய அவசியமே இருந்திருக்காது. ஏன், தமிழ்நாடே பொருள்வளத்தால் பொங்கி வழியும் மாநிலமாக இருந்திருக்கும்.

அது மட்டுமல்ல, வந்தவர்கள் போக அந்தந்த நாடுகளில் எஞ்சியுள்ள தமிழர்களும், அவர்களுடைய வருங்காலச் சந்ததியினரும், இப்போது சுதந்தர நாடுகளாகவுள்ள அந்நாடுகளில் சமூகத்தில் தக்க மதிப்பைப் பெறவும், பொருளாதாரத்தில் உயர்ந்து வாழவும் அது உதவியிருக்கும்.

பல நாடுகளில் பரவிவாழும் ஓர் இனத்திற்கு உலகு தழுவிய ஒரு பொருளியல் அமைப்பு எத்தனை காப்புறுதி பயப்பது, எவ்வளவு ஆற்றல்களை விளைப்பது என்பதனை யூத இனத்தின் வரலாற்றிலிருந்து நாம் உணர்ந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

யூத இனம் உலகில் எண்ணிக்கையில் குறைந்த ஒரு சிறிய இனம் என்றாலும், உலகம் முழுவதும் பரவி வாழ்ந்ததும், நாடற்ற இனம் என்று பல்வேறு நாடுகளிலிருந்தும் அது துரத்தியடிக்கப்பட்டதும் உலகமறிந்த செய்தி.

ஐரோப்பாவில் இட்லரின் நாஜி இயக்கமும், முசோலினியின் பாசிஸ்ட் இயக்கமும் யூதர்களை ஒழிப்பதற்கென்றே எழுந்த இயக்கங்கள் என்பதை மறக்க இயலாது.

இலட்சக்கணக்கான யூதர்களைப் பலிகொண்ட நூரம்பர்க் படுகொலைகள் மனிதகுல வரலாற்றிலேயே மாற்ற முடியாத கறைகளாக நிலைத்துவிட்டவையாகும்.

இருப்பினும், இந்தப் பின்னணிதான் தனியாகத் தங்களுக்கென்று ஓர் தாயகம் வேண்டும் என்கிற தாகத்தை யூதமக்களிடம் ஏற்படுத்தியது.

சரித்திரத்திலேயே இல்லாத அத்தாயகத்தைப் படைக்க அவர்களுக்கு 'மூலபலமாக' இருந்தது அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட உலகுதழுவிய யூதப் பொருளியல் அமைப்புஆகும்.

ஆம்; சியோனிஸ்ட் வங்கி எனும் உலகுதழுவிய யூதப்பொருளியல் அமைப்பானது யூதர்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்களோ, அங்கெல்லாம் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுடைய பொருளாதாரம் ஒருங்கிணைக்கப்பட்டு, சேமிப்புகள் ஒருமுகப்படுத்தப்பட உதவி செய்தது.

அதன் மூலம் எங்கோ ஒரு நாட்டில், ஏதோ ஒரு மூலையில் 'தான் உண்டு தன் பிழைப்பு உண்டுஎன்றிருந்த ஒரு சராசரி யூதனைக்கூட யூததேசிய நீரோட்டத்தில் கலக்கவும், தானும் தன் இனத்தின் தாயகத்திற்கு உதவும் வாய்ப்பினைப் பெறவும், உரிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

அது மட்டுமா? தான் வாழும் இடத்திலேயே உத்தியோகம், கல்வி, தொழில், வணிகம் போன்ற வாய்ப்புகளில் தன்னை உயர்த்திக் கொள்ள உலகுதழுவிய யூதப் பொருளியல் அமைப்பிடமிருந்து கடனுதவிகளையும் மானியங்களையும் பெறுகின்ற பேறும் அவனுக்குக் கிடைத்தது.

அதாவது ஒரு யூதன் எங்கே வாழ்ந்தாலும் யூதஇனத்தின் ஒட்டுமொத்த நலத்திற்கு அவனால் உதவி- அதைப்போலவே அவனுக்கு உலக யூதப் பொருளியலின் பேருதவி என்கிற இருமுனை நன்மைகள் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

அதன் காரணமாகத்தான் விவிலிய நூலில் என்றோ இருந்து யூதர்கள் இழந்து விட்டதாகக் குறிப்பிடப்பட்ட கானான் நாட்டை- இஸ்ரேலை, நடைமுறையில் அரபு நாடுகளில் ஒன்றாகிவிட்ட பாலஸ்தீனத்தில் 1948 இல் அவர்களால் முற்றிலும் புதிதாகப் படைக்க முடிந்தது.

இஸ்ரேல் அமைக்கப்பட்ட அன்றே அரபுநாடுகள் எல்லாம் ஒன்றுதிரண்டு அதன்மீது படையெடுத்தன. உலக வல்லரசுகளில் அமெரிக்காவைத் தவிர, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் ருசியா உட்பட அத்தனை நாடுகளும் அப்போரில் அரபுநாடுகளையே ஆதரித்தன.

இருந்தும் இஸ்ரேலே வென்றது. அதற்கு உதவியது உலகளாவிய யூதப் பொருளாதார சேமிப்புத்தான்.

ஆம்; அந்தப் போரினால் இஸ்ரேலைச் சுற்றியுள்ள பல அரபுநாடுகள் நிலைதடுமாற, சுண்டைக்காய் இஸ்ரேல் தனக்கிருந்த உலகுதழுவிய பொருளியல் பலத்தால் இழப்புகள் அனைத்தையும் உடனடியாக ஈடுசெய்து, பாதிப்பால் ஆடிவிடாமல் பலம் கொண்டு எழுந்துநின்றது.

இன்று எண்ணெய் வளத்தால் அரபுநாடுகள் பொருளாதாரச் செழுமையை எய்திப் பூதம்போல் உயர்ந்துள்ள நிலையிலும், அந்த 21 அரபுநாடுகளுக்கிடையே ஒரு தன்னந்தனி யூத நாடாக இருந்தும் அரபு மண்ணில் அது ஆக்கிரமிப்பால் உருவாகியதால் அந்த 21 அரபு நாடுகளின் ஆத்திரத்திற்கு எப்போதும் இலக்காக இருந்து வந்தும்-இஸ்ரேல் அச்சமின்றி ஆர்த்து

நிற்கிறதென்றால், அதற்குக் காரணம் உலக யூதர்களின் பொருளாதார உந்துபலம்தான்.

இவ்வளவுக்கும் உலகில் உள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட யூத மக்களில் இஸ்ரேலில் குடியிருக்கும் யூதர்களின் தொகை வெறும் 25 இலட்சமே யாகும்.

ஆனால், இஸ்ரேலால் உலக யூதஇனத்திற்கு ஒரு தகுதியும், உலக யூதர்களால் இஸ்ரேலுக்குப் பயனும் பாதுகாப்பும் கிடைத்துள்ளன.

இவை இரண்டுக்கும் அடிப்படை உலகு தழுவிய யூதப்பொருளியல் அமைப்பேயாகும்.

அந்தப் பொருளியல்தான் அரபுநாடுகளின் ஏகோபித்த எண்ணெய் வளப் பொருளியல் பலத்திற்கு ஈடுகொடுத்து இஸ்ரேலைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

இஸ்ரேலிய யூதர்களை மட்டுமின்றி உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கும் யூதமக்களின் வணிக, விஞ்ஞான, கல்வி, உத்தியோக,தொழில் மற்றும் சமூக வாய்ப்புகளையும், பாதுகாப்பையும் அந்தப் பொருளியல் பலம்தான் உயர்த்திக் காத்துவருகிறது.

இதேபோலப் பன்னாடுகளில் பரவிவாழும் இன்னொருஇனம் குர்து இனமாகும். இவ்வினம் ஈரான், ஈராக், சிரியா, துருக்கி, சோவியத் ஒன்றியம் முதலிய பல நாடுகளில் சிறுபான்மை இனமாக இருந்துவருகிறது.

தங்களுக்கென்று ஒரு தாயகம் படைக்க வேண்டுமென்ற தாகம் இவ்வினத்திற்கும் நிறைய உண்டு.

அதற்காக ஈரானிலும் ஈராக்கிலும் இவ்வினம் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறது. ஆனால், யூதர்களைப் போல வெற்றிபெற முடியவில்லை.

இத்தனைக்கும் "குர்திஸ்தான்" என்ற ஒரு சுதந்தர நாடு 1945 -ஆம் ஆண்டே நிறுவப்பட்டு, அன்றே அப்பொழுதே சோவியத் ஒன்றியமும், ஐ.நா.வும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இன்றைய ஈரான் நாட்டிலுள்ள மகாபாத் நகரைத் தலைநகராகக் கொண்டிருந்த அந்தச் சுதந்தர குர்து குடியரசுக்கு அளித்துவந்த பாதுகாப்பை ஈரான்-ஈராக்குடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு சோவியத் படைகள் திரும்பப் பெற்றதால் ஈரானும், ஈராக்கும் கூட்டாகச் சேர்ந்து சிதைத்துவிட்டன.

தனக்கென்று உலகு தழுவிய ஒரு பொருளியல் அமைப்பு இல்லாததாலேயே, வாய்க்கப்பெற்ற சுதந்தர தாயகத்தைக் காப்பாற்ற முடியாமல் குர்துஇன மக்களால் கோட்டைவிட நேர்ந்துவிட்டது.

உணர்ச்சியும் முனைப்பும் இருந்தும் உலகு தழுவிய அத்தகைய பொருளாதார பலத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ளாததாலேயே மகாபாத் நகரில் மலர்ந்து உதிர்ந்த அத்தாயகச் செடியை மீண்டும் பூத்துக் காய்த்துக் குலுங்கச் செய்ய முடியாமலேயே தேக்கமுற்றுக் கிடக்கின்றனர் குர்துஇன மக்கள்.

ஏறத்தாழ அதே நிலைதான் நம் தமிழினத்திற்கும். பிரிட்டிஷ், பிரான்சு, டச்சு ஏகாதிபத்தியங்கள் உலகில் எங்கெல்லாம் பரவினவோ, அங்கெல்லாம் சென்று, அவர்களின் வெற்றிக்கும் உயர்வுக்கும் உதவிகரமாக இருந்த தமிழினம், தான் மட்டும் வெற்றிபெறாமல்-உயராமல் அன்றுபோன-போதிருந்த அதே `கூலி' நிலைமையிலிருந்து மீளமுடியாமல் இன்றைக்கும் தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருப்பதற்குக் காரணம், உலகம் முழுவதும் பரவியும் உலகுதழுவிய பொருளியல் அமைப்பைக் கட்டியெழுப்பாமையுமே யாகும்.

"பொருளல் லவரைப் பொருளாகச்
செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" *(751)*

" பொருளென்னும் பொய்யா விளக்கம்
இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" *(753)*

"குன்றேறி யானைப்போர்
கண்டற்றால், தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை" *(758)*

"செய்க பொருளை! செறுநர்
செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியதில்" *(759)*

என்றெல்லாம் பொருள்செய்யக் கட்டளையிடும் திருக்குறளைத் தமிழ்மறையாகக் கொண்டிருந்தும் காணாக்கண்ணர், கேளாச்செவியராக இருந்துவிட்ட காரணத்தால், தமிழர்களாகிய நாம் மாணா மக்களாக-உலக அரங்கில் உரிய அங்கீகாரம் பூணா மாந்தராக- அதற்காகச் சற்றும் நாணா மாக்களாக நலிவடைந்து கொண்டிருக்கிறோம்.

அந்த நலிவையும் மெலிவையும் போக்க, இழிவையும் அழிவையும் நீக்க, உலகு தழுவிய தமிழர் பொருளியல் அமைப்பை – உலகத் தமிழர் வங்கி ஒன்றை நிறுவுவதும், பன்னாட்டுத் தமிழர்களையும் அதில் பங்குதாரர்களாகச் செய்வதும் இன்றைய முதற்பணியாகும். அனைவரும் இணைவோம். அதற்காக முனைவோம்.

# இந்துமதம் என்பது எந்தமதம்?

அ. இராமநாதன் மலேசியா

தமிழகத்தில் தோன்றிய பழைய மதங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று 'சிவ மதம்'. இன்னொன்று திருமால் மதம். இந்த இரண்டு மதங்களே பின்னர் இந்தியா முழுவதும் பரவின.

சிவ மதத்தையும் திருமால் மதத்தையும் நன்கு அறிந்தவர்கள் இம் மதங்களை 'இந்து மதம்' என்ற பெயரால் அழைப்பதில்லை. அப்படியானால் இந்து மதம் என்பது எந்த மதத்தைக் குறிக்கிறது?

காலஞ் சென்ற சைவ சமய அறிஞர் பேராசிரியர் திரு.கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமது 'தமிழர் சமயம்' என்ற நூலில் 'இந்து மதம் என்பது பற்றி அளிக்கும் விளக்கம் வருமாறு:—

"இந்து மதம்" என்ற சொல் கடவுள், ஆசிரியன், பிரமாண நூல் என்பவற்றுள் எதன் பெயரையும் சார்ந்ததாகத் தெரியவில்லை.

சிந்துநதிக் கரையில் இருந்தவர்களை 'ஹிந்துக்கள்' என்று பாரசீகர் அழைத்தனர். அவர்களை 'இந்துக்கள்' என்று கிரேக்கர்கள் கூறினர். இந்துக்கள் என்ற பெயரிலிருந்தே "இந்தியா" என்ற பெயர் ஏற்பட்டது.

இந்திய நாட்டில் உள்ள பூர்வீக மக்கள் ஐரோப்பாக் கண்டத்தாரால் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்துக்களுக்குள் பல மதங்கள் இருப்பதை அறியாத மேலை நாட்டினர் இந்துக்கள் எல்லோருக்கும் ஒரு மதம் இருப்பதாக எண்ணி, "இந்து மதம்" என்ற பெயரைத் தோற்றுவித்தனர்.

இந்துமதம் என்ற பெயர் தமிழிலாவது வடமொழியிலாவது உள்ள பண்டை நூல்களிற் கிடையாது. தற்காலத்தில் வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வைதிகர்கள், தங்கள் மதமே இந்து மதம் என்று பேசுபவராய் – அம் மதமே இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரிய மதம் என்று நிலைநாட்ட முன் வந்துள்ளார்கள்.



ஆங்கில மதம், சப்பானிய மதம், அமெரிக்க மதம் என்று மதங்கள் இருக்குமாயின் இந்து மதம் என்ற ஒரு மதமும் உண்டெனலாம். அவை இலவாதல் போல இந்து மதம் என்ற ஒரு மதமும் கிடையாது.

வேதத்தையும் மிருதியையும் பிரமாணமாகக் கொண்ட மதமே இந்து மதம் என்றால், அது இந்தியாவில் உள்ள பல மதங்களில் ஒரு மதமாகுமேயன்றி, அது இந்தியர் எல்லார்க்கும் உரிய பொது மதம் ஆகாது.

தற்காலத்தில் இந்தியாவில் தோன்றிய இந்துக்கள், மகம்மதியர் முதலிய எல்லாரையும் இந்தியர்கள் என்பது பொருந்தும். ஆனால், இந்தியாவில் தோன்றிய புத்தம், சைனம், வைதிகம், சுமார்த்தம், சைவம், வைணவம் முதலிய எல்லா மதங்களையும் இந்து மதம் என்று கூறுதல் பொருந்துமாறில்லை.

ஆதலால், வடமொழி வேதத்தின் வேறான சிறந்த பிரமாணங்களையுடைய தமிழ்ச் சைவ வைணவர்கள் தங்கள் சமயங்களை இந்துமதம் என்று கூறுதல் அறிவுக்குப் பொருந்துவதில்லை. இந்திய அல்லது இந்து மதங்கள் பல. அவற்றுள் சைவம், வைணவம் இரு மதங்கள் என்றல் பொருந்துவதே.

வேத வாக்கியங்களுக்கு, சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஏற்ற முறையில் பொருள் கொள்ளுதல் பைபிளுக்கும் குரானுக்கும் சைவ வைணவப் பொருள் கொள்ளுதல் போலாகும். (தமிழர் சமயம் – பக்கம் : 65–66)

கடவுள் நம்பிக்கையுடைய இந்திய மதங்களை வேத மதங்கள், ஆகம மதங்கள் என வகைப்படுத்தி விளக்குவது சிறந்த முறையாகும்.

வட இந்தியாவில் தற்போது பெரும்பான்மை யாக விளங்குவது ஆரிய மதமாகிய வேதமதம். அது இந்து மதம் என்ற பெயரால் வழங்கி வருகிறது. இதில் நாத்திகம் முதல் அத்துவிதம் ஈறாகப் பற்பல சமய வேறுபாடுகள் உள்ளன. தமிழர் பண்பாட்டுக்கு ஒவ்வாத பல புராணங்களும், ஆரிய அரசர்களின் அரசுரிமைப் போராட்டங்களைக் கற்பனை நிகழ்ச்சிகளோடு கூறும் இராமாயண, பாரதக் கதைகளும் இதில் உள்ளன.

வேதியர்களை மதத் தலைவர்களாகக் கொண்ட சங்கர மதம் (அத்துவிதம்), இராமாநுசரின் வடகலை வைணவ மதம் (விசிட்டாத்துவிதம்), மாத்துவ மதம் (துவைதம்) ஆகிய மூன்று பிராமண மதங்களும் `வேத மதங்கள்' ஆகும். பிரம்ம சூத்திரம், உபநிடதம், பகவத் கீதை என்ற மூன்று வகை ஆரிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு இந்த மதங்கள் தோன்றியதால் இவை "ஆரிய மதங்கள்" எனவும் பெயர் பெறும்.

சைவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு சிவ மதமும், வைணவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு தென்கலை வைணவமும் தோன்றின. ஆகவே, இவை "ஆகம மதங்கள்" எனப் பெயர் பெறுகின்றன.

திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் சிவமதத்திற்கே உரிய கருவி நூல்கள். `திராவிட வேதம்' என்ற `திவ்வியப் பிரபந்தம்' தென்கலை வைணவத்தின் கருவி நூல். இவை அனைத்தும் தமிழில் உள்ளன.

இராமாநுசரின் வடகலை வைணவம் திருமால் வழிபாட்டுக்கு ஆரிய மொழியைப் பயன்படுத்து கின்றது. மணவாள மாமுனிகளின் தென்கலை வைணவம் திருமால் வழிபாட்டிற்குத் தமிழ் மொழியைப் பயன்படுத்துகின்றது. வடகலை என்பது ஆரிய மொழி. தென்கலை என்பது தமிழ் மொழி.

ஆகம மதங்களான சைவ வைணவ மதங்களுக்கு ஆலய வழிபாடு உண்டு. ஆனால், ஆரிய மதங்களுள் ஒன்றான சங்கர மதம் என்ற சுமார்த்த மதப் பிராமணர்களுக்கு ஆலய வழிபாடு கிடையாது; தீ வழிபாடு மட்டுமே உண்டு. இதனைத் "தீயினைக் கும்பிடும் பார்ப்பான்" என்று அமரகவி பாரதியார் கூறுவதிலிருந்து அறியலாம். எனினும், உலக வாழ்க்கையைக் கருதி இவர்களும் ஆலய வழிபாடு செய்து வருகிறார்கள்.

வேத மதங்களும் ஆகம மதங்களும் தனித்தனி மதங்கள் ஆகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனிச் சித்தாந்தம் உண்டு; கொள்கை உண்டு; மரபு உண்டு; மறை நூல் உண்டு; விதிகளும் உண்டு; எல்லாம் ஒன்று எனக் கருதுவது தவறு; அறியாமையும் ஆகும். எடுத்துக்காட்டாக,

சங்கராச்சாரியார் ஒருவர் திருநீறு பூசி, உருத்திராக்கம் அணிந்திருந்தாலும் அவர் சைவர் ஆகார். காரணம் அவர் ஆரிய முறைப்படி ஆரிய வேதத்தை ஓதுவாரே தவிர, சைவத் திருமுறைகளை ஓதிச் சிவபூசை செய்ய மாட்டார்; தமிழைத் தாழ்த்தி ஆரியத்தை உயர்த்திப் பேசுவார்; அவருடைய செயலே அவர் ஆரிய மதத்தினர் என்பதை உணர்த்தி விடும்.

சங்கர மத வேதியர் ஒருவர் சைவக் கோயிலில் பூசாரியாகப் பணி செய்தால், நாட்டுக்கும் அரசுக்கும் பெருங்கேடுகள் உண்டாகும் என்று திருமந்திரமாலை அருளிய திருமூலர் நாயனார் எச்சரிக்கிறார். இது வேதியன் சைவன் அல்லன் என்பதை உணர்த்து கின்றது.

காஞ்சிபுரம் சங்கரமடத்துத் துறவிகளுள் ஒருவரான திரு. ஜயேந்திர சரஸ்வதி அவர்களால் எழுதப்பட்டு, சென்னை வானதி பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள இந்து தர்மங்கள் என்ற நூலில், அவர் இந்து என்று சங்கரமதச் சுமார்த்தப் பிராமணர்களையே குறிப்பிடுகிறார்; இந்து தர்மங்கள்

என்று சங்கரமதத் கொள்கைகளையும் மரபுகளையும் விளக்குகிறார்; இந்து தர்மங்களுக்கு உரிய நூல்களாக ஆரிய மொழியில் ஆரியர்களுக்காக எழுதப்பட்ட ஆரிய வேதபுராணங்களையே குறிப்பிடுகிறார்.

வேதியர்களான சுவாமி சிவானந்தரின் `இந்து மதம்' என்ற நூலும், சுப்பிரமணிய சிவாவின் `மோட்ச சாதன ரகசியம்' என்ற நூலும், திரு. சி. சுப்பிரமணிய பாரதியாரின் கட்டுரைகளும், சென்னை இராமகிருஷ்ண மடத்து வெளியீடுகளும் இந்துமதம் என்று சங்கர மதத்தையே குறிப்பிடுகின்றன.

பார்ப்பனர்களால் நடத்தப்படுகின்ற ஆனந்த விகடன், கலைமகள், கல்கி போன்ற இதழ்கள், தீபாவளி மலர்களில் இந்து மதத் தலைவர்களாகச் சங்கர மடத்துப் பிராமணத் துறவிகளையே வண்ணப்படங்களோடு விளம்பரப்படுத்துகின்றனர். ஆனால் `ஞானபூமி' என்ற வேதமத இதழ் ஓர் ஆண்டு மலரில் சங்கர மதம், இராமாநுச மதம், மாத்துவ மதம் ஆகிய மூன்று பார்ப்பன மதங்களையும் "இந்து மதங்கள்" எனக் குறித்துள்ளது. எல்லா நரிகளும் ஒரே மாதிரி ஊளையிடுவது போலப் பொதுவாகப் பார்ப்பனர்கள் அனைவரும் சங்கர மதத்தையே "இந்து மதம்" எனக் கட்டுக்கோப்பாகக் கூறிவருகின்றனர்; எழுதி வருகின்றனர்.

ஆகவே, "இந்து மதம்" என்பது, ஒரு கேரள நம்பூதிரியான ஆதிசங்கரரின் அத்துவித மதமான சங்கர மதம் அல்லது சுமார்த்தப் பிராமண மதமேயாகும். இந்த உண்மையை உணராமல் சைவ, வைணவ மதங்களை `இந்துமதம்' என்று சொல்வதும் எழுதுவதும் பெருந்தவறாகும்.

இந்த அடிப்படையில் நோக்கும்போது இங்கு இயங்கி வரும் இந்து சங்கம், இந்து தர்ம மாமன்றம் போன்ற மத இயக்கங்கள், காஞ்சி சங்கர மடத்தின் கிளைகளே என்று கருத இடந்தருகின்றன. சைவ மன்றம், சைவ மாமன்றம் என்றிருப்பதுதான் நல்லது. சொல்லும் செயலும், பெயரும் பணியும் ஒத்திருப்பதுதான் சிறப்பு; பெருமையுமாகும்.

சைவ மக்கள் ஒரு சைவத் துறவியையே வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சைவம் வளர்ச்சி பெறும்.



# நெல்லையில் ஓர் அணுமின் நிலையம்

## டாக்டர் அரு. தாணுமாலையன்

தென்பாண்டிச் சீமை என்று எல்லோராலும் சிறப்பாக அழைக்கப்படும் நெல்லை மாவட்டம் இப்பொழுதெல்லாம் பத்திரிக்கைகளில் அதிகம் எழுதப்படுகின்ற ஓர் இடமாகக் காணப்படுகின்றது. கூடன்குளம் என்னும் இடத்தில் ஓர் அணுமின் நிலையம் ஏற்படுத்த இந்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்திருப்பதும், தமிழக மாநல முதலமைச்சர் அதற்கு ஆதரவு தெரிவித்து இருப்பதும், "பயந்தவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பார்களே அதுபோல் உருசிய நாட்டில் செர்னோவில் அணுமின் நிலைய பெருவிபத்து மக்கள் மனத்தில் ஏற்படுத்தியுள்ள அச்ச உணர்வும், இதனைத் தொடர்ந்து சில பெரும்புள்ளிகளும் பல ஏதும் உணராத அப்பாவி மக்களும் கூடன் குளத்தில் அணு மின் நிலையம் ஏற்படுத்தக் கூடாது என்று குரல் எழுப்புவதுமே இதற்குக் காரணம். சில ஆயிரம் கோடி ரூபாய்களைச் செலவு செய்து இதனை முடிக்க அணுக்கரு ஆற்றல் கழகம் திட்டங்களை உருவாக்கி இருக்கிறது. இதுபோல் கருநாடகத்திலும் `காய்கா' என்னும் இடத்தில் திட்டம் உருப்பெற்று வருகிறது. அங்கும் எதிர்ப்பு தலைஎடுத்துள்ளது. கி.பி.2000-த்தில் இந்திய நாட்டில் அணுமின் நிலையங்கள் மூலம் 10000 மெகாவாட் மின் திறனை எட்ட இந்திய அணுக்கரு ஆற்றல் கழகம் திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகவே கூடன்குளமும் காய்காவும் திட்டமிடப்பட்டுள்ளன.



ஒரு நாட்டின் வளர்ச்சி, தனி மனிதன் பயன்படுத்தும் சராசரி ஆற்றலின் அடிப்படையில்தான் கணக்கிடப்படுகிறது. சராசரி மனிதன் அதிக ஆற்றைலைப் பயன்படுத்துகிறான் என்றால், நாடு வளர்ந்து இருக்கிறது என்று பொருள். தமிழ் நாட்டிலும், மற்றும் தென் மாநிலங்களிலும், புனல் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு மின்சாரம் பெறப்படுகிறது. இனிப் பெரிய புனல் மின் நிலையங்கள் அமைக்க வாய்ப்பு இல்லை. அனல் மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்றாலோ தொலை தூரங்களிலிருந்து கருப்புத் தங்கம் எனப்படும் நிலக்கரி கொண்டு வரப்படவேண்டும். நிலக்கரியும் எரிவாயுக்களும் நிலத்தடி எண்ணையும் அதிகபட்சமாக இன்னும் 100 ஆண்டுகளுக்கே பயன்படுத்த முடியும். இந்நிலையில் ஆற்றலைப்பெற, நமக்குக் காற்றின் ஆற்றல், அலை ஆற்றல், ஞாயிற்றின் ஆற்றல் என்று இப்படிப் பல இருப்பினும் அவைகளைக் கொண்டு நிறைந்த அளவு ஆற்றலைப் பெறும்

தொழில் நுட்பம் இன்னும் வளர்ச்சியடையவில்லை.

திட்டமிட்டு மின் ஆற்றலைப் பெருக்காவிடில், ஒரு காலக் கட்டத்தில் நாம் ஆற்றல் பஞ்சத்தால் அழிந்துவிடவும் கூடும். (power Starvation)வளர்ந்து வரும் மக்கள் தொகை, மின் ஆற்றலின் தேவை அதிகரிப்பு இப்படி ஒரு பக்கம், ஆற்றலைப் பெற இப்படிப் பயன்படும் மூலப் பொருட்களின் குறைவு மற்றொரு பக்கம், இப்படிப்பட்ட ஒரு நிலையில் நாம் என்ன செய்யவேண்டும்? வளர்ச்சி தேவையில்லை என்று பழைய கற்காலத்தை நோக்கிச் செல்லவா? அல்லது சிறிது தீமை ஏற்படக்கூடும் என்ற கற்பனைக் கருத்தின் அடிப்படையில் அணுக்கரு ஆற்றலைப் புறக்கணித்து ஒதுக்காமல் அதனை ஏற்று எல்லோரும் நல வாழ்வு வாழ்வதா? இதுவே இப்போதுள்ள கேள்வி. பொருளாதார மட்டத்தில் அணுக்கரு ஆற்றலைப் பயன்படுத்துவதனால் நாம் வேண்டும் அதிக மின் ஆற்றலைப் பெற முடியும். இது தேவைதானா அல்லவா என்பது நம்முன் உள்ள வினாவாகும். வாழ்வு வேண்டுமானால் ஆற்றல் வேண்டும். ஆற்றல் வேண்டும் என்றால் இப்போதில்லை. ஆனாலும் எப்போதாவது அணுக்கரு ஆற்றலைத் தேடிப் போகத்தான் வேண்டும்.

நாட்டு மக்கள் அனைவரும் அச்சப்படுத்தப் பட்டுள்ளனர் சிலரால். ஜப்பான் நாட்டு மக்களை விடவா இன்று ஒரு தொகுதி மக்கள் அதிக அணுக்கதிர்களுக்கு ஆளாகிவிட முடியும்? அந்த நாடு அழிந்து ஒழிந்துவிடவில்லையே? காய்காவிலும் கூடன்குளத்திலும் அணுமின் நிலையம் தேவை இல்லை என்றும் கூறும் மக்களில் சிலர், அணுக்கரு ஆற்றல் நிலையங்களால் 100 விழுக்காடு தீமை விளையாது என்று இந்திய அரசும் அணுக்கரு ஆற்றல் துறையும் நிச்சயமாக உறுதி கூறமுடியுமா? என்று கேட்கிறார்கள். 100 விழுக்காடு விபத்துக்களே ஏற்படாத எந்த ஒரு துறையினையேனும் அவர்களால் காட்டமுடியுமா? எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் ஆயிரத்தில் ஒருவர் அல்லது நூறு ஆயிரத்தில் ஒருவர் என்று மடியக்கூடும். புள்ளி விவரங்கள் நிரம்பவே உள்ளன. போபாலில் உர ஆலையில் விபத்து ஏற்பட்டு 2000 பேர் உடனடியாகவும் இன்றுவரை அந்த விபத்தின் பின் விளைவாக நாள் ஒன்றுக்கு ஒருவர் வீதமும் உயிரிழந்து வருவதாகவும் கூறுகிறார்கள். எனவே உர ஆலைகளை எல்லாம் மூடிவிடலாமா? அப்படி மூடிவிட்டால் மக்களுக்கு எப்படி உணவளிப்பது? இனிவரும் நாட்களில் செயற்கை உரம் இல்லாமல் அதிக விளைச்சலைப் பெறமுடியாது. கி.பி.2000-ஆண்டில் நாட்டில் உள்ள 100 கோடி மக்கள் உணவின்றி வாட நேரிடும்.

எனவே அணு ஆற்றலைக் கவனமாகக் கையாண்டால் பெரும் பயன் பெறமுடியும்; இல்லையென்றால் ஆற்றல் பற்றாக்குறைவினால் வளர்ச்சி தடைப்படும், மக்கள் துன்புற வேண்டிவரும்.

மனிதன் நல்ல உடல்வலிவோடு நீண்ட நாட்கள் வாழத்தான் ஆசைப்படுகிறான். கீழே கொடுக்கப்பட்டுள்ள செய்தி உலக அரங்கில் ஆய்வுகள் மூலம் பெறப்பட்டவைகளாகும். நாள் ஒன்றிற்கு 20 சிகரட் புகைக்கும் ஒருவர் தனி வாழ்நாளில் 5 வருடங்கள் இழந்துவிடுகிறார். திருமணம் செய்து கொள்ளாத ஒருவர் திருமணம் ஆன ஒருவரைவிட 5 வருடங்கள் அதிகம் வாழ்கிறார். நகர்ப்புறவாசிகள் கிராம மக்களை விட 5 வருடங்கள் வரை முன்னதாகவே இயற்கை எய்துகிறார். இவற்றால் நகர்ப்புற வளர்ச்சி நின்றுவிட்டதா? திருமணம் வேண்டாம் என்று யாரேனும் ஒதுங்கி இருக்கிறார்களா? அல்லது புகைப்பதைத்தான் மக்கள் விட்டுவிட்டார்களா?

1927இல் தான் முதன் முதலில் டாக்டர் முல்லர் என்பவர் அணுக்கருக் கதிர்களால் சந்ததியினரிடம் தீய விளைவுகள் ஏற்படும் என்று தெரிவித்தார். இவைகள் யாவும் சோதனைகள் மூலம் உறுதி செய்யப்பட்டும் உள்ளன. அவர் கூறிய அந்நாளில் எக்ஸ் கதிர்களும் கதிரியக்கத்தின் போது தோன்றும் கதிர்களுமே மருத்துவத்திலும், தொழில் துறை மற்றும் ஆய்வுக் கூடங்களாலும் பயன்படுத்தப்பட்டன. எக்ஸ் கதிர்களைப் போன்ற கதிர்கள்தாம் அணு உலைகளிலும் தோன்றுகின்றன. இன்று நாம் ஏராளமான எக்ஸ் கதிர் எந்திரங்களை உற்பத்தி செய்கிறோம். அணுமின் நிலையத்தில் வெளிப்படும் கதிர்களைப் போன்ற கதிர்கள் வெளிப்படுகின்றன என்று எக்ஸ் கதிர் எந்திரங்களை உற்பத்தி செய்யாமல் இருந்துவிட முடியுமா? அதனால் யாருக்கு என்ன இலாபம்? நோயினைக் காணவும் குணப்படுத்தவும் இக்கதிர்கள் பெரிதும் பயன்படுகின்றன. இக்கதிர்களைக் கவனக் குறைவாகப் பயன்படுத்தினால், தீங்கு விளையும் என்பது உண்மையே. ஆனால் தீமையைக் கட்டுப்படுத்தி நன்மை சேர்க்கப் பல கட்டுப்பாடுகள் உள்ளன; வரைமுறைகள் உள்ளன.

அணுமின் நிலையத்தினை எதிர்ப்பவர்கள் அனைவரும், அணுமின் நிலையத்தால் தீமையே விளையும் என்று கூறுகிறார்கள். அரசும் இத்துறையில் இருப்பவர்களும் மக்களிடம் உண்மையினை மறைத்துவிடுகிறார்கள் என்று குற்றம் கூறுகிறார்கள். அவர்களுடைய இந்தத் தவறான எண்ணத்தினை

அணுக்கதிர்களால், அணுமின் நிலையங்களால், தீமையே விளையும் என்ற அச்சத்தினை அகற்றுவதற்காகவே இக்கட்டுரை. கதிர் உயிரியல், கதிரியக்கம், அணுக்கரு இயற்பியல், அயனியாக்கம் கதிர்கள், அவைகளின் பண்புகள் இப்படிப் பலதுறை சார்ந்தது இந்தக் கதிர்களின் உயிரியல் விளைவு என்கிற துறை. இவை அனைத்தையும் இங்குக் கூறுவது, எழுதுவது முடியாத செயலாகும்.

உலகில் வாழும் அத்தனை உயிர்களும் தொடர்ந்து அண்டக்கதிர்களால் தாக்கப்பட்டு வருகின்றன. மனிதனும் இதற்கு விதிவிலக்கல்ல. இவை இன்று நேற்றல்ல, உலகம் தோன்றிய நாள் தொட்டு நிகழும் ஒரு நிகழ்ச்சியாகும். உயிரினங்கள் இந்தக் கதிர் தாக்குதலை ஏற்று வாழப் பழகி இருக்கின்றன. இந்தக் கதிர்களைப் போன்ற கதிர் வீச்சே அணு உலைகளிலிருந்தும் வெளிப்படுகின்றன.

நமது உடலில் கார்பன் 14, பொட்டாசியம் 40 என்ற இரு கதிர் தனிமங்கள் காணப்படுகின்றன. மனிதன் தோன்றிய நாளிலிருந்து அணுக் கதிர்களைச் சுமந்து வாழ்ந்து இனத்தைப் பெருக்கிக்கொண்டுதான் இருக்கிறான். பொட்டாசியம் 40 விருந்து மட்டும் அவன் பெறும் கதிர் வீச்சளவு 0.4 மில்லி சீவர்ட் அல்லது 40 மில்லி ரெம் ஆகும். சீவர்ட், ரெம் என்பன கதிர் வீச்சினை அளவிடப் பயன்படுத்தப்படும் அலகுகளாகும். ஒரு மனிதன் சராசரியாக 1 மில்லி சீவர்ட் அளவு கதிர் வீச்சளவினை இயற்கையாக அண்டக் கதிர்கள், பொட்டாசியம் 40 இவைகளிலிருந்து பெறுகிறான். ஒரு மார்பு எக்ஸ் கதிர் படம் எடுப்பதால் மட்டுமே அவன் இந்த 0.4 மில்லி சீவர்ட் அளவினைப் பெற முடியும். எக்ஸ் கதிர் ஆய்வு மனிதனுக்கு எவ்வளவு பயன்படுகிறது என்பது நமக்குத் தெரியும். பல்வலிக்காக முகவாயினை ஒரு படம் எடுத்தால் 0.2 மில்லி சீவர்ட் அளவு கதிர்வீச்சளவு பெறுகிறான்.

ஆனால் அணு உலையில் பணிபுரியும் ஒரு மனிதன், எடுக்கப்படும் மிகுந்த காப்பு நடவடிக்கையின் காரணமாக ஒரு வருடத்தில் 0.06 மில்லி சீவர்ட் அளவே பெறுகிறான். இது அவனையோ அவனது சந்ததியினரையோ பாதிக்காது. இந்த 0.06 மில்லி சீவர்ட் கேரளக் கரையோரங்களில் வாழும் ஒருவர் பெறும் கதிர் வீச்சளவான 3.0 மில்லி சீவர்ட்டைவிட மிகவும் குறைவாகும்.

எனவே அணுமின் நிலையங்கள் தேவையின் அடிப்படையில் அமைப்பது நலம் பயப்பதேயாகும்.

ஆகவே அணுமின் நிலையம் தேவை.



# பேசும் திறன் வளர்ப்போம்

## டாக்டர் சா.வளவன்

அன்றைக்குப் பார்த்து அந்தப்பேருந்தில் இடம் சற்று நெருக்கடியாக இருந்தது. நல்ல வேளையாக நான் ஓர் இடம் காலியாக இருப்பதைப் பார்த்து விட்டேன். மூன்று பேர் அமரவேண்டிய இடத்தில் ஒரு குழந்தையும் அதன் பெற்றோரும் இருந்தனர். நேரே அந்த இடத்திற்குச் சென்றதும் அவர்களாகவே இடம் கொடுத்தார்கள். குழந்தை புதுமுகம் என்று பாராமல் என்னிடமும் தானாகவே சிரித்துப் பேசத் தொடங்கியது. மற்றப் பயணிகளும் அதன் பேச்சில் மயங்கிக் கொண்டிருந்தனர். அந்தக் குழந்தைக்கு ஏறத்தாழ மூன்று வயதிருக்கும்.

எங்களுக்கு முன்னால் அமர்ந்திருந்த பயணியரிடம் பயணச்சீட்டுகளைக் கொடுத்துவிட்டு, அந்த வெளியூர் வண்டியின் நடத்துநர் எங்களிடம் வந்தார். குழந்தையின் தந்தை தாம் போகவேண்டிய ஊரைச்சொல்லி இரண்டு பேருக்குரிய பணத்தைக் கொடுத்தார். நடத்துநர் முறுவலித்துக்கொண்டே குழந்தைக்கு அரைக்கட்டணம் செலுத்த வேண்டும் என்றார். குழந்தையின் தந்தையோ `மூன்று வயது முடிய சில மாதங்கள் உள்ளன' என்றார். நடத்துநர் புன்சிரிப்பு மாறாமல் என்னிடம் வந்து பயணச்சீட்டை எழுதித்தந்தார். பிறகு, அக்குழந்தையைப் பார்த்து தம்பி உன் பேரென்ன?' என்றார். குழந்தை தெளிவாகத் தன் பெயரைஉச்சரித்தது. அடுத்து, `உன் வயதென்ன?' என்றார். உடனே, அது `அஞ்சு' என்றது. நடத்துநர் சிரித்துக் கொண்டே `குழந்தைக்குப் பொய் சொல்லத் தெரியாது' என்று சொல்லிவிட்டு அடுத்த பயணியிடம் பணம் வாங்கச் சென்றார்.



அந்தப் பெற்றோர் திடுமென நிகழ்ந்துவிட்ட இச்செயலால் தடுமாறிப் போய்விட்டனர். படித்த, நிறையவே சம்பாதிக்கிற அவர்கள் நிலைகுலைந்து போனார்கள். பேசும் திறனை இழந்தார்கள். மற்ற பயணியர் எல்லாம் குழந்தையின் பதிலையும், நடத்துநரின் திறனையும் கண்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் மேலும் அந்தப் பெற்றோர் குன்றிப் போனார்கள்.

நடத்துநர் அடுத்த பயணியிடம் பணம் வாங்கிக் கொண்டிருந்தார். அப்போது நான், அந்தக் குழந்தையைப் பார்த்து, `தம்பி நீ எத்தனாவது படிக்கிறே?' என்று உரத்த குரலில் கேட்டேன். உடனே அதற்கு அக்குழந்தை `அஞ்சு' என்றது. `அஞ்சு' வயசில் அஞ்சாவதா?' என்று வியந்து வாய்விட்டுச் சொன்னேன். அடுத்து இன்னொரு கேள்வியையும் கேட்டேன்.

`இன்னைக்குக் காலைல நீ என்ன சாப்பிட்டே? இட்லியா? தோசையா?' என்றேன். அது `தோசை' என்றது. `எத்தனை சாப்பிட்டே?' என்றேன். அதற்கும் `அஞ்சு' என்றது. `இதற்கு முன்னே ஊருக்குப் போனியே, எப்ப வந்தே?' என்று கேட்டேன். அதற்கு அக்குழந்தை `நாளைக்கு' என்றது. `மூணாவது எப்பப் படிச்சே?' என்றேன். `நாளைக்கு' என்று அதற்கும் பதில் வந்தது.

உடனே, `குழந்தைக்குச் சில சொற்கள் எளிதில் உச்சரிக்க வரும். அந்தச் சொற்களையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கும்'. அதற்குப் பொய் சொல்லத் தெரியாதுதான், ஆனால் உண்மை எதுவென்றும் அதற்குத் தெரியாது என்று விளக்கமும் தந்தேன்.

நடத்துநர் மீண்டும் அந்தப் பெற்றோரிடம் வராமலே தம் வேலையைத் தொடர்ந்தார். நமக்கு, அந்தப் பெற்றோர் ஏன் பேசும் திறனை இழந்தார்கள்? என்ற கேள்விதான் தோன்றும். `படித்திருந்தும் பேச்சு எழாமல் போனது ஏன்? இன்றைய இளைஞர் பலர் இப்படிப் பல இடங்களிலும் தயக்கம் காட்டி நிற்பதைக் காண முடியும். அவர்கள் தயங்குவதற்கு என்ன காரணம்? அவர்களுக்கு உள்ள தாழ்வுமனப்பான்மைதான்' என்றேன்.

தேர்வு நேரத்தில் இன்றியமையாப் பாடங்களைப் படித்து விட்டு ஓரளவு மதிப்பெண்ணுடன் வெற்றியும் பெற்று விடுவதால் பல செய்திகள் தெரிவதில்லை. எந்தச் செய்தியையாவது தவறாகச் சொல்லி விட்டால் `என்ன பட்டம் வாங்கியிருக்கே! இதுகூடத் தெரியவில்லையே?' என்பார்களோ என்ற அச்சம்.

சிறு வயதிலிருந்தே கேள்வி கேட்டால், பதில் சொல்லாமல், அடக்கி வைத்துவிட்ட சூழலும் ஒரு காரணம். நேரம் குறைவாக இருப்பது இன்னொரு காரணம். சுருக்கமாகச் சொல்ல வேண்டியிருப்பதால், இன்றியமையாத ஒன்றைச் சொல்லாமல் விட்டு விட்டுப் படாத பாடுபடும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

இப்படித்தான் ஒரு நாள், திருமண வீட்டிற்கு இரண்டு நண்பர்கள் போனார்கள். நெருக்கமான நண்பர்கள்; சேர்ந்தே போவார்கள். திருமணக்கூடத்தில் கீழே உணவறை. மேலே நிகழ்ச்சி, வந்தவர்களை ஒருவர் உணவறைக்கு வருமாறு வற்புறுத்தினார். ஒரு நண்பர் வற்புறுத்தலுக்குப் பணிந்தார். மற்றவர் மாடிக்குப் போனார். தனியாக வந்த நண்பரைப் பார்த்தவுடன் திருமண வீட்டாரில் ஒரு இளைஞன் ஓடி வந்து `மற்றவர் வரவில்லையா?' என்று கேட்டான். அந்த நண்பரும் அவரை அப்படியே சாப்பிட அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள்' என்றார். அந்த இளைஞன் அவரை வரவேற்க ஓடினான். அவரைக் கண்டவுடன் `வாங்க', வாங்க இப்பத்தான் உங்க நண்பர், நீங்க இங்க இருக்கிறதாகச் சொன்னாரு' `அதான் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்' என்றான். சாப்பிட்டுக் கொண்டிருந்தவருக்குக் கோபம் வந்துவிட்டது. `நான் இப்ப ஒரு தரம் சாப்பிட்டுவிட்டு இன்னொரு தடவை சாப்பிட வருவேனோன்னு பார்க்கிறதுக்காக வந்தியா?' என்று கத்த ஆரம்பித்து விட்டார். வந்த இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இந்தக் குழப்பம் ஏன் ஏற்பட்டது? விரைவு கருதி சுருக்கமாகச் சொல்ல நினைத்து மாட்டிக்கொண்டான் அந்த இளைஞன். வருகிறபோதே, மனத்தில் என்ன பேச வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தால் இந்தச் சிக்கல் தோன்றியிருக்காது. `உங்கள் நண்பரிடம் உங்களைப் பற்றி நான்தான் கேட்டேன். இங்கிருப்பதை அறிந்து வரவேற்க வந்தேன்' என்று சொல்லியிருந்தால் கூச்சலும் குழப்பமும் நேர்ந்திருக்காது. பேசும் திறனை அந்த இளைஞன் வளர்த்துக் கொள்ளாததால் இச் சிக்கல் எழுந்தது.

அந்தத் திருமணத்தில் பலரும் வாழ்த்தினார்கள். மணமகனின் தந்தை தம் வரவேற்பில், வந்திருந்த ஒரு பெரியவரைப் பற்றிப் புகழ்ந்து பேசி வரவேற்றார். அவர் வருவார் என்று எதிர்பார்க்கவில்லை; இப்படி திடுமென, வந்து எங்களை மகிழ்வித்தமைக்கு நன்றி என்றும் கூறினார். அதற்கு, அந்தப் பெரியவர் வாழ்த்தும்போது, மகிழ்ச்சிப்பெருக்கில் தம் பழைய நினைவுகளில் இருந்து கிளறி ஒன்றைச்சொன்னார். தாம் அந்தக் காலத்தில் அரசியல் தலைவரை ஒரு திருமணத்திற்கு அழைத்ததாகக்கூறி, `அவரும் என்னைப் போலவே திடுமென அம்மணத்தில் வந்து நின்றார்' என்றார். கேட்டுக்கொண்டிருந்தவர் அத்தனை பேரும் சிரித்து விட்டனர். பேசிய பெரியவருக்கு ஏன் சிரிக்கிறார்கள் என்று புரியவில்லை. பேச்சை எங்கே விட்டோம் என்றும் மறந்து போயிற்று. அதனால் முடித்துக் கொண்டு விட்டார். தம் பேச்சைத் தாமே கூர்ந்து கவனியாமையால் பேசும் திறனை அவரால் வளர்த்துக்கொள்ள முடியாமல் போயிற்று.

இன்றைய இளைஞரில் சிலர் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலைப் பெறும் பயிற்சியைப் பெறவில்லை என்றே எண்ணுகிறேன். வெளியூரிலிருந்த என்

பேராசிரியரின் மகன் ஒரு வங்கி நடத்திய நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்தான். அவனை நான் அழைத்துப் போயிருந்தேன். அந்த நேர்முகத்தேர்வில் பலரும் கலந்து கொள்ள வந்திருந்தனர். அதனால் சில நிமிடங்களுக்குள் கேள்வி கேட்டு அனுப்பிக்கொண்டிருந்தனர். ஓர் இளைஞன் தேர்வு முடிந்து அலுத்துக் கொண்டே வந்தான். ஒரு சொல்லைக் கொடுத்துவிட்டு எழுத்துக்கூட்டி உச்சரிக்கச் சொன்னார்களாம். அவன் சரியாக உச்சரித்தானாம். ஆனால் தவறு என்றார்களாம். அவன் அது சரிதான் என்று வாதிட்டானாம். கேளாமல் அனுப்பி விட்டார்களாம். அவர்களுக்கே அது தெரியவில்லை. நம்மை ஒப்புக்கு அழைத்து அனுப்புகிறார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போட்டான். அடுத்த இளைஞனும் அவ்வாறே சொன்னான்.

அவனை நிறுத்தி, கேள்வியை எப்படிக் கேட்கத்தொடங்கினார்கள்? என்று கேட்டேன். இப்போது சொல்லக்கூடிய சொற்களுக்கு எழுத்துக்கூட்டி உச்சரியுங்கள் என்று தொடங்கி ஒரு சொல்லைச் சொன்னார்கள் என்றான். அந்தச் சொல்லை நான் சரியாகவே உச்சரித்தேன். ஆனாலும் தவறு என்றார்கள் என்றான்.

நான் அழைத்து வந்த இளைஞனிடம் சென்று, [illegible]தானமாகப் பதட்டமில்லாமல் சிரித்துக்கொண்டிரு' என[illegible] சொன்னேன். பிறகு, `உச்சரிக்கச் சொல்கிற சொற்களை நீ எழுத்துக்கூட்டி உச்சரி. உதாரணமாக, `பம்பாய்' என்று சொன்னவுடன் ப., ம்., பா., ய்., என்று உச்சரி. அடுத்துத் `தவறு' என்பார்கள். அதனையும் நீ. த., வ., று., என்று உச்சரி என்று சொன்னேன். அவனும் வெற்றி பெற்றான்.

பணம் புழங்கும் வங்கியில் பதட்டம் கூடாது என்பதும், கூர்மை தேவை என்பதையும் அறிந்த தேர்வாளர் அழகாகக் கேள்வி கேட்டனர். அதனை அறிந்து கொள்ளாது அவர்கள் மீது பழியைப் போடும் மன நிலையை இளைஞர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். `ஏன் இந்தக் கேள்வி' என்பதை ஆராய்ந்து இனிமையாகப் பேசும் திறனை வளர்த்துக் கொண்டால் வெற்றி பெறலாம்.

விண்ணப்பம் எழுதப் பிறர் உதவியை நாடுதல், விண்ணப்பத்தினை நிரப்பப் பிறர் உதவியை நாடுதல் என்ற மன நிலையை மாற்றிக் கொண்டு, தாமே சிந்தித்துச் செயல்படத் தொடங்கினால் பிறரைக் கண்டு பேசவும், திட்டமிடவும் முடியும். பேசும் திறனை வளர்த்துக் கொள்ள முடியும். வாழ்வில் உறுதியாக வெற்றி பெறவும் முடியும்.



# ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத் தமிழர்கள்

## முனைவர் இர. மனுவேல், திருப்பதி

திருப்பதியிலிருந்து சென்னைக்குச் செல்லும் சப்தகிரி எக்ஸ்பிரசில் மாதம் இருமுறை பயணம் செய்யும் போது உடன் பிரயாணம் செய்யும் தமிழர் "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்பதுண்டு. திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் நான் தமிழ்த்துறையில் பணிசெய்கிறேன் என்றவுடன்," அப்படியா! திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையா? திருப்பதியில் தமிழர் வாழ்கின்றனரா? " என்றெல்லாம் அடுக்கடுக்காக வினாக்கள் தொடுப்பர். இவர்களின் வினாக்கள் ஒருவகையில்அவர்களின் ஆர்வத்தையும், மறுவகையில் அவர்களின் அறியாமையையும் வெளிப்படுத்தும்.

திருப்பதியில் வாழும் சில இந்துக்கள் திருமலையில் நடக்கும் சிறப்புச் செய்திகளை அறியாதிருப்பர். சிலருக்குத் திருவேங்கடவனைத் தரிசிக்கவும் நேரமிருப்பதில்லை. இதுபோல்தான் திருப்பதியில் தமிழர்வாழ்கின்றனரா? என்ற வினாவும். தமிழக எல்லைப்பகுதியில் வாழும் தமிழரைப் பற்றி அறிய வாய்ப்பு இல்லாத தமிழருக்கு உலக நாடுகளில், உள்ள தமிழரைப்பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக்கூடாத ஒன்றுதான். இயந்திர வாழ்க்கை நடத்தும் இக்கால மக்களுக்கு இக்குறை இருப்பதில் விந்தையொன்றும் இல்லை.



'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயர்ந்த பண்பாட்டு வழிவந்த தமிழர் அனைத்து நாட்டினரையும் வரவேற்று இடம் கொடுத்து இருக்கின்றனர். அதுபோல் தங்கள் ஊக்கத்தாலும், உழைப்பாலும் பிற நாட்டினரைக் கவர்ந்த தமிழர் நாவலந்தீவு (இந்தியா) மட்டுமின்றித் தரணியெங்கும் சென்று குடியேறினர்.

உலகத்தமிழர்கள் பற்றிய விளக்கம் ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு மலரில் இடம் பெற்றுள்ளது. அம்மலரில் பேராசிரியர் பொன். கோதண்டராமன் அவர்கள் அளித்துள்ள பட்டியலை மீண்டும் ஒருமுறை ஈண்டு நினைவுக்குக் கொண்டு வருவது நன்மை பயக்கும் என்று நம்புகிறேன். தமிழர் வாழும் நாடுகளான இலங்கை, கயானா, குவாடிலோப், கென்யா, சிங்கப்பூர், சுரினாம், ஜமைக்கா, டிரினிடாடு, தான்சேனியா, பர்மா, மலேசியா, மார்ட்டினீக், மோரீசு யுகாண்டா, யு.கே., யூ.எஸ்.எஸ்.ஆர்., ரியூனியன் முதலிய நாடுகளைக்குறிப்பிட்டுள்ளார். அதே மலரில் பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கள் தமிழகத்தை அடுத்துப் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்பற்றிய செய்திகளையும்

தொகுத்துத் தருகிறார்.

தமிழகத்தின் அண்டை மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகியவற்றில் வாழும் தமிழர்களில் பெரும்பாலோர் சென்றேறு குடிகள் அல்லர்; காலங்காலமாக அவர்கள் அங்கேயே வாழ்ந்து வருகின்றார்கள். இந்த மாநிலங்களில் புதிய பெரிய தொழிற்சாலைகள் தோன்றியதன் காரணமாக இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் இந்த மாநிலங்களில் குடியேறியவர்களைத் தவிர, பெரும்பான்மையான தமிழர்கள் அங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து வருபவர்களே. இதற்கு முற்றிலும் மாறாக இந்தியாவில் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் பிழைப்பு நாடியும், வேலை வாய்ப்புத்தேடியும் சென்றிருக்கிறார்கள். மேற்குவங்கம், உத்தரப்பிரதேசம்,பீகார், பம்பாய், குஜராத், ஒரிசா, பஞ்சாப், அந்தமான் முதலிய மாநிலங்களில், தமிழர்கள் தொகை கணிசமாக உள்ளது. (காண்க ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு மதுரை -1981 விழாமலர்)

பண்டைத் தமிழகத்தின் வட எல்லையாகத் திகழ்ந்தது திருப்பதி. இது `வடவேங்கடம் தென்குமரி' என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னியர் படையெடுப்பாலும், வேற்றுமதக் கலப்பாலும், வேற்று மொழிக்கலப்பாலும், பல தாக்கங்களுக்குள்ளாகி எல்லைப்பகுதி மாறியும் மருவியும் வருவது இயல்பு. நாடு விடுதலையடைவதற்குமுன் ஆந்திரமும், தமிழகமும் ஒரே மாநிலமாக அமைந்திருந்தது. விடுதலைக்குப்பின் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. அன்று ஆந்திரத்தின் எல்லை திருத்தணி வரை கணக்கிடப்பட்டது. சித்தூர், திருத்தணி, புத்தூர், திருப்பதி போன்ற தமிழர் வாழும் பல இடங்கள் தமிழகத்தில் இணைக்கப்படவில்லை. இச்செய்தி தமிழர்களுக்கு மிகுந்த வேதனையை அளித்தது. ம.பொ.சி, போன்ற தமிழ்ச் சான்றோர் பலர் எல்லைகாக்கும் போராட்டத்தில் இறங்கினர். எல்லைக்களத்தில் போராடிய சான்றோர்கள் பலர். அவர்களில் ஆசிரியர் மங்கலம்கிழார் அவர்களும், தணிகைக்கோ என்.ஏ. ரஷீத் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக 1960 ஆம் ஆண்டு திருத்தணி மட்டும் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்கள் சில மீட்கப்படவில்லை. இது கடந்த கால கசப்பான உண்மை.

முன்பு குறிப்பிட்டது போல் தமிழகமும் ஆந்திரமும் ஓர் ஆட்சியின் கீழ் பலகாலம் இருந்து வந்துள்ளன. இதனால் தமிழர் ஆந்திராவில் பல இடங்களில் குடியேறினர். ஆந்திரத்தலைநகர் ஐதராபாத்-செகந்திராபாத், இரட்டை நகரங்களில் பெருவாரியான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். எல்லையோர மாவட்டங்களில் சித்தூர் நெல்லூர்ப் பகுதிகளில், அதிகமாகவும், கடப்பை அனந்தபூர் மாவட்டங்களில் பரவலாகவும் தமிழர்கள் வசிக்கின்றனர். ஆந்திரத்தின் உட்பகுதியில் காக்கிநாடா அமைந்துள்ளது. இந்த மாவட்டத்தில் `ஏனாம்' என்ற ஒரூர் உள்ளது. இந்த ஊர் முன்பு பிரெஞ்சுக்காரரர் வசமிருந்தது. புதுச்சேரியைப் போல் இந்த ஊரில் வாழும் அனைவரும் தமிழர்களே. இது குறிப்பிடத்தக்க செய்தியாகும். சைக்கிள் ரிக்‌ஷா அதிகமாக உற்பத்தி செய்யும் இடம் விசயவாடா. இங்கும் குறிப்பிடத்தக்க அளவு தமிழர் வசிக்கின்றனர்.

ஆந்திரத்தமிழ் மக்கள் என்று நோக்குகிற போது சித்தூர் மாவட்டம் முதன்மை இடத்தைப்பெறுகிறது. ஏறக்குறைய நூறு கிலோ மீட்டர் தமிழ் எல்லைப்பகுதியை உடையது. இந்த மாவட்டம் கருநாடக மாநிலப் பகுதியிலிருந்து கீழ்நோக்கி வந்தால் குப்பம், பலமநேர், பங்காரு பாளையம், சித்தூர், கார்வேட்நகரம், நகரி, புத்தூர், நாகலாபுரம், சத்தியவேடு, தம்பலப்பள்ளி, திருக்காளத்தி முதலிய வட்டங்களைக் கடந்து இதன் எல்லை நெல்லூர் மாவட்ட எல்லை வரை நீடிக்கிறது. மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தமிழர் மிகுதியாக வாழ்கின்றனர்.

மேலும் மாவட்டத்தின் உட்பகுதிகளாகிய நாராயணவரம், ரேணிகுண்டா, பாகாலா போன்ற வட்டாரங்களிலும் தமிழர் வாழ்கின்றனர். மக்கள் தொகை அடிப்படையில் நோக்கினால் ஆதிதிராவிடத் தமிழர் இம்மாவட்டத்தில் அதிகமாக உள்ளனர். பெரும்பாலும் இவர்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்தக் கிராமங்களை அடுத்து உயர்சாதியினராகத் தங்களைக் கருதுபவர் வாழ்கின்றனர். இவர்கள் தெலுங்கு மொழியினர். அரசியல்பொருளாதார சமூக நிலைகளில் உயர்வாக உள்ள இவர்கள் பல நூற்றாண்டுகளாக அடிமைகளைப்போல் வாழும் ஆதிதிராவிடத் தமிழர்களை விவசாயக் கூலிகளாக வைத்துக் கொண்டுள்ளனர். கல்வியறிவு இல்லாத பெரும்பான்மையான இம்மக்களுக்குத் திருக்குறள் பற்றியும், கண்ணகி வரலாறு பற்றியும் கூடத் தெரியவில்லை. அடுத்து, செங்குந்த முதலியார் தமிழர் கணிசமான அளவு உள்ளனர். இவர்களின் முக்கிய தொழில் நெசவு. வாணிகத்திலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் பெண் கொடுக்கல் வாங்கல் முறை திருத்தணி, சோளிங்கர், அரக்கோணம் போன்ற வட்டங்களில் வைத்துக்

கொண்டிருப்பதாலும், இவர்கள் மத்தியில் மங்கலங்கிழார், ரசீத் போன்ற சான்றோர் தமிழ்ப்பணி ஆற்றியதாலும் இவர்களிடம் தமிழ் ஈடுபாடு உள்ளது. ஆனால் பிள்ளைகளைப் பெரும்பாலும் நெசவுத் தொழில்களில் ஈடுபடுத்தி அவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பைத் தடுத்து விடுகின்றனர். அடுத்துப் பள்ளி (பள்ளர், உழவர்) கணக்கர், செட்டியார், பார்ப்பனர் முதலிய சாதியினர் அவரவர்களுக்குரிய பணிகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் தமிழ்ப்பற்றும் தமிழர் நலனில் நாட்டமும் உடையவர் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இவ்வாறு தமிழர் பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழ்ந்து தமிழ் ஆர்வம் அற்றவர்களாக வாழ்கின்றனர். இங்குள்ள அரசு ஊழியர், ஆசிரியர் சிலர் இதற்கு விதிவிலக்கு. தமிழகத்திற்கு அண்மையில் இவர்கள் வாழ்ந்தாலும் பல காரணங்களால் இங்குத் தமிழ்ப்பற்றும் தமிழ் வளர்ச்சியும் ஏற்படவில்லை. தமிழ் மொழியில் பயிலத் தமிழ்ப் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. கல்லூரிகளிலும், பல்கலைக் கழகத்திலும் தமிழ் வகுப்புகள் இருந்தாலும் தமிழ் ஆட்சி மொழியாக இல்லாததால் தமிழ் பயிலும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது. எல்லைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு இது தீராத தொல்லையாகத்தான் இருந்து வருகின்றது. ஐதராபாத், சித்தூர், புத்தூர், பாகாலா போன்ற இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் இருந்தாலும் தமிழருக்கும், தமிழுக்கும் முறையாகத் தொண்டாற்ற அவைகளால் இயலவில்லை.

தமிழகத்திலும் பிற இடங்களிலும் இருப்பதுபோலவே இந்தப் பகுதிகளிலும் தொழில் அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் பிரிவுகளும் ஏற்றத்தாழ்வுகளும் நிலவுகின்றன.

வெளி நாடுகளிலும் வடமாநிலங்களிலும் வாழும் தமிழர் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாதலால் அவர்களால் நல்ல ஆக்கப் பணிகளைச் செய்ய இயலாது. ஆனால் எண்ணிக்கையில் அதிகமாகவும் தமிழகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் தமிழர்களாகவும் உள்ள இவர்கள் எவ்வளவோ முன்னணிப்பணிகளைச் செய்து வெற்றி பெறலாம். கட்சி ஈடுபாடு சாதி ஈடுபாடுகளை வெறுத்து ஒற்றுமையோடு மொழியீடுபாடு, இன ஈடுபாடு இவற்றில் நாட்டம் கொண்டால் நிச்சயமாக அவர்கள் வாழ்வும் வளமும் பெருகும். எதிர்பாராத விதமாக இவர்களின் ஒற்றுமையைச் சாதிகள் கட்சிகள், தொழில்கள் சீர்குலைத்து வருகின்றன. இவற்றையெல்லாம் கடந்து இவர்கள் மொழி நாட்டமும், இன நாட்டமும் கொண்டவர்களாக மாறினால் நிச்சயமாக இவர்களின் வாழ்வும் வளமும் சீர்பெறும். அந்நாள் வெகுவிரைவில் வரும் என்று எதிர்பார்ப்போம்.



# இதழ்கள் வளர்த்த தமிழ்

## கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்

"அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண் ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்"

என்கிறார் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன். பத்திரிகையைப் பெண்ணாக வருணித்து, அதனுடைய கடமைகளை, அது ஆற்றுகின்ற செயல்களையெல்லாம் மிக அழகாகப் பாடியிருக்கின்றார்.

`வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநி லத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்பு றத்தே
ஆனநற் கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்துத்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்'



தித்திக்கும் தேனூறும் மலரின் இதழ்போல, பத்திரிகைப் பெண்ணும் தன் இதழின் வாயிலாக அரியநற் செய்திகளை இனிக்க இனிக்கத் தருவாள் என்கிறார் கவிஞர்!

ஒரு காலத்தில் பத்திரிகை என்று சொல்லப்பட்டும், சஞ்சிகை என்று வழங்கப்பட்டும் வந்த சொற்கள் மாறி இன்று `தாளிகை' என்றும், `நாளிதழ் என்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

அன்றைய பத்திரிகைகளில் இருந்த தமிழுக்கும் இன்றைய தாளிகைகளில் இருக்கும் தமிழுக்கும் நிரம்ப வேறுபாடுகளைக் காண முடியும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்த பத்திரிகைகளுக்கும், அதன் பின் விடுதலை பெற்ற நாட்டில் இருந்து வரும் பத்திரிகைகளுக்கும் உள்ள வேறுபாட்டை, பத்திரிகைகளே கண்ணாடி போல நமக்கு எடுத்துக் காட்டி வருகின்றன.

பத்திரிகை எனப்படும் தாளிகை என்பதே, தமிழர் வாழ்வில்-இன்னும் சொல்லப்போனால் மாந்தர் வாழ்வில் ஒரு புதிய வரவாகும். ஏனென்னில் பத்திரிகை என்பதே இலக்கிய உலகில் இருந்ததில்லை. சங்க காலத்திலும் சரி, அதன் பிற்காலத்திலும் சரி, நீண்ட நெடுங் காலமாக இந்தப் `பத்திரிகைப் பெண் பிறப்பெடுக்கவேயில்லை! நூறு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் `பத்திரிகை' பிறந்தது! எனவேதான் `பத்திரிகை' என்பதற்கான நல்லதமிழ்ச் சொல்லே

தொடக்க காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. `பத்திரிகா' என்னும் வடமொழிச் சொல்லே பத்திரிகையாகத் தமிழில் வழங்கப்பட்டு அது இன்று தாளிகையாக நல்ல தமிழில் மலர்ந்துள்ளது! `பத்திரிகை' என்னும் தாளிகைகள் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் ஒழுங்கான ஒரு வடிவம் பெற்றன என்று கூடச் சொல்லலாம். தமிழகத்தைப் பொறுத்த வரை இந்தத் தாளிகைகளினால் தமிழுக்கு நல்ல பயன் விளைந்திருக்கிறது என்பதை மறுக்கவியலாது; இன்றும் பயன் விளைந்து கொண்டே வருகிறது.

ஒரு காலத்தில் புலவர் பெருமக்களும், அறிஞர் பெருமக்களும், இலக்கியச் செம்மல்களும்தாம் தமிழை வளர்த்தார்கள் என்றால், அவர்களையெல்லாம் விட இன்று நாள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கின்ற நாளிதழ்கள் மட்டுமின்றி, கிழமை, திங்கள் இதழ்களும் அவ்வப்போது நல்ல தமிழ்ச் சொற்களை உருவாக்கி, வழக்கிற்குக் கொண்டு வருகின்றன.

தாளிகைகள் என்பன இன்றைக்கு இன்றியமையாத ஒரு பொருளாகவே மக்கள் வாழ்க்கையில் இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன. காலையில் எழுந்தவுடன் பசியாறுமுன் `பத்திரிகை' படிக்கும் பழக்கம் பாமர மக்களிடையே கூட வளர்ந்து விட்டிருக்கிறது. `மாஸ் மீடியா' (*Mass Media*) என்று சொல்லப்படும் மக்கள் தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவை போலவே தாளிகைகளும் ஆகிவிட்டன. பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் மட்டுமின்றி அவரவர் தாய்மொழியை வளர்த்துக் கொள்வதற்கும் வாழ்க்கையில் மறுமலர்ச்சி காண்பதற்கும் மிக விரைந்து செயலாற்றி வருவது தாளிகை என்றால் அது மிகையாகாது. சங்க காலத்தில் நாற்பத்தொன்பது புலவர்கள் மட்டுமே அடங்கிய அவையில், ஒரு கவிதையை அரங்கேற்றினால், அந்தக் கவிதை நாடு முழுவதும் பரவுவதற்குப் பல்லாண்டுக்காலம் பிடிக்கும். ஆனால் இன்றைய நிலைமை அப்படியில்லை. தொலைக்காட்சியிலோ, வானொலியிலோ ஒரு கவியரங்கம் நடத்தினால், நாடு முழுவதும் அதே நேரத்தில் கண்டு, கேட்டுக்களிக்க முடியும். இதேபோலத்தான் தாளிகை வாயிலாகவும், படிக்கத் தெரிந்த அத்துணைப்பேரும் ஒரே நேரத்தில் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

இத்தகைய தொடர்புச் சாதனமாகப் பயன்படும் தாளிகைகள் வெறும் செய்திகளை மட்டுமே வெளியிடுபவையாக இல்லாமல், தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் பணியிலும் செயலாற்றி வருகின்றன என்பது ஒரு மாபெரும் உண்மையாகும்.

ஒரு புதிய சொல்லை அறிமுகப்படுத்த வேண்டுமென்றால் தாளிகையில் அதனைப் பயன்படுத்தினால் போதும். காட்டுத் தீப்போல் அது பரவி, கற்றார் நெஞ்சங்களிலெல்லாம் கனிந்து, மக்கள் வாழ்க்கையில் அன்றாடப் புழக்கத்திற்கு வந்து விடும்.

ஒரு காலத்தில் தமிழ் எழுத்து வழக்கிலும் சரி, பேச்சு வழக்கிலும் சரி, பல மொழிச் சொற்களும் கலந்து, `மணிப்பிரவாள நடை' என்று சொல்லக்கூடிய கலவை மொழியாகவே வழங்கி வந்தது. `பரிதிமாற் கலைஞர்' என்று புகழ்பெற்ற வி.கோ. சூரியநாரயண சாஸ்திரியாரும், `மறைமலையடிகள்' என்று போற்றப்பெற்ற சுவாமி வேதாசலம் அவர்களும் நல்ல தமிழை வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் தங்கள் பெயரையே நல்ல தமிழில் மாற்றியமைத்துக் கொண்டு மற்றவர்களுக்கும் வழிகாட்டினார்கள்.

அவர்கள் தொடங்கி வைத்த அந்த `நல்ல தமிழ் இயக்கம்' நன்கு தழைத்து ஓங்கத் தமிழுணர்வு கொண்ட தாளிகையாளர்களும் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். அதன் பயனாகத்தான் இன்று தமிழ் நாட்டில் மக்கள் பேசுகிற தமிழும் ஓரளவு நல்ல தமிழாக இருக்கக் காண்கிறோம்.

`தமிழ்ப் பெரியார்' என்றும் `தமிழ்த் தென்றல்' என்றும் பாராட்டப் பெற்ற திரு.வி. கலியாண சுந்தரனார் போன்றோர் தாளிகைத்துறையிலே அந்தக் காலத்தில் ஈடுபட்டதன் பயனாகத் தாளிகைத் துறையிலும் தமிழ் கொஞ்சி விளையாடத் தொடங்கியது!

ஓர் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் தமிழில் வெளிவந்த தாளிகைகளில் தமிழ் எந்த நிலையில் இருந்தது என்பதை, இன்றைய தலைமுறையினர் கண்டால் தலையே சுற்றும்!

அந்தக் காலத்தில் வெளிவந்த ஒரு நாளிதழின் செய்தி இது:-

“மெட்றாஸ் கோவாப்பரேடிவ் அர்பன் பேங்கின் ஜெனரல்பாடி மீட்டிங் சென்ற 29 ஆம் தேதி சாயரட்சை 4 மணி சுமாருக்கு காஸ்மா பாலிட்டன் கிளப் ஹாலில் நடைபெற்றது. சேர்மன் ஸ்ரீமான் நடேச முதலியார் அக்ராசனம் வகித்தார். செக்ரட்டரி ஸ்ரீமான் ஸ்ரீனிவாச ஐயங்கார் அன்வல் ரிப்போர்ட்டை சமர்ப்பித்தார். ஸ்ரீமான் பஞ்சாபகேச ஐயர் சில ரிசல்யூஷன்களை பிரேரேபித்து நீண்ட பிரசங்கம் செய்தார். அவரது பிரசங்கத்தை மெம்பர்கள் கரகோஷம் செய்து ஆமோதித்தார்கள். ரிசல்யூஷன்கள் சபையில் பாஸ் செய்யப்பட்டு வந்தனோபசாரத்துடன் மீட்டிங் முடிவுற்றது”.

இந்தச் செய்தியில் எத்தனை தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தால் இருக்கின்ற தமிழ்ச் சொற்களை விட ஆங்கிலச் சொற்களும் வடமொழிச் சொற்களுமே சொற்றொடரை நிரப்பிக் கொண்டிருக்கின்றன.

இதே செய்தியை இன்றைய தாளிகைத் தமிழில் மாற்றி எழுத வேண்டுமானால் எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

"சென்னை நகரக் கூட்டுறவு வங்கியில் பொதுப் பேரவைக் கூட்டம் கடந்த 29 ஆம் நாள் மாலை 4 மணி அளவில் காஸ்மா பாலிடன் விடுதியில் நடைபெற்றது. தலைவர் திரு. நடேச முதலியார் தலைமை வகித்தார். செயலாளர் திரு. சீனிவாச ஐயங்கார் ஆண்டறிக்கையைப் படித்தளித்தார். திரு பஞ்சாபகேச ஐயர் சில தீர்மானங்களை முன்மொழிந்து நீண்ட உரை நிகழ்த்தினார். அவரது உரையை உறுப்பினர்கள் கையொலி செய்து வரவேற்றார்கள். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது

அந்தக் காலத்தில் தமிழ் எழுத்துநடை எப்படி இருந்தது என்பதையும், திரு.வி.க. எத்தகைய நடையைக் கையாண்டு தமிழுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தினார் என்பதையும் காலஞ்சென்ற `கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதைப் பாருங்கள்:-

அதுவரையில் தமிழ் நாட்டில் தனியாட்சி நடத்திக் கொண்டிருந்த ஒரே தினசரிப் பத்திரிகை "சுதேசமித்திரன்" ஆகும். அதில் வந்த தலையங்கங்கள் ஏறக்குறைய பின்வரும் முறையில் அமைந்திருக்கும்.

"பெங்கால் புரொவின்ஷியல் கான்பரன்சில் மிஸ்டர் அம்பிகாசரண் மஜூம்தாரின் புரொவின்ஷியல் அட்ரெசில் இந்தியப் பிரஜைகளின் தேசிய அபிலாஷைகளை அடக்க இந்தியப் ப்யூராக் ரேஸி கையாண்டுவரும் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றிக் கரதலா மலகமாய்க் கூறியிருப்பது ஹிஸ் எக்ஸெலன்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுமென்று நம்புகிறோம்".

(இது பழைய `சுதேச மித்திரன்' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டதன்று; சு.மி.யின் அக்காலத்திய நடையை எடுத்துக் காட்டுவதற்கான சொந்தக் கற்பனை.)

இதே விஷயத்தை "தேசபக்தன்" பத்திரிகையில் திரு.வி.க. எழுதியிருக்கக்கூடிய முறை பின்வருமாறு:-

"வங்கத் தாயின் புதல்வர்கள் அண்மையில் மாகாண மகாநாடு கூட்டினார்கள். திரு. அம்பிகா சரண் மஜூம்தார் என்னும் வங்க வீரர் தலைமை தாங்கி அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். அச் சொற்பொழிவில் இந்திய அதிகார வர்க்கத்தார் இந்தியக் குடிமக்களின் விடுதலை வேட்கையைத் தகைவதற்குக் கையாளும் அடக்குமுறைகளைக் கடிந்தார். அம்முறைகள் பயனற்றன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெற்றென எடுத்துக் காட்டியுள்ளார். இச்செவ்விய உரைகள் மேன்மை தங்கிய இந்திய இராஜப் பிரதிநிதியின் திருச்செவியில் ஏறுங்கொல்"!

`சுதேசமித்திரன்' நடைக்கும் திரு.வி.க. தமிழ் நடைக்கும் உள்ள வேறுபாட்டைக் `கல்கி' அவர்கள் மேற்கண்டவாறு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

அதே சொற்றொடர்கள் அண்ணா காலத்தில் எப்படி எழுதப்பட்டிருக்கும் என்பதை இன்றைய தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கற்பனையாக எழுதியிருப்பதைப் பாருங்கள்:-

"வங்கம் ஈன்றெடுத்த சிங்க மறவர்கள் மாநில மாநாடொன்றைக் கூட்டினர் அண்மையில்!

அம்பிகா மஜூம்தார் என்ற போராட்டத் தளபதி அந்த மாநாட்டிற்குத் தலைமையேற்று வீர முழக்கமிட்டார்.

இந்தியக் குடிமக்களின் இதயங்களில் சுடர்விட்டெரியும் விடுதலைத் தீயை அணைப்பதற்குக் கையாளப்படும் அடக்குமுறைகளைச் சாடிய அவர், அம்முறைகள் பயனற்றுப் போய்விடும் என்பதைக் கருத்துக் குருடர்களுக்கும் புரியும் வண்ணம் விளக்கினார்."

அக்கால எழுத்து நடையை மாற்றி மறுமலர்ச்சி ஏற்படத் தாளிகைத் துறையில் முன்னோடியாக விளங்கியவர் திரு.வி.க. என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

திரு.வி.க. காலத்துக்குப்பின் பேரறிஞர் அண்ணா காலத்திலும், தொடர்ந்து கலைஞர் காலத்திலும் தமிழ் நடையில் எத்துணை எத்துணை மாற்றங்கள்!

`கல்கி' அவர்கள் தமிழில் நிறைய ஆங்கிலச் சொற்கள் கலந்திருப்பதைத்தான் சுட்டிக் காட்டி வருந்தினாரேயன்றி, வடமொழிச் சொற்கள் கலப்பதைப் பற்றி அவர் கவலைப்பட்டவரல்லர்! இன்னும் சொல்லப்போனால் வடமொழிச் சொற்களை அவரே கலந்து எழுதக் கூடியவர்.

திரு.வி.க. அவர்கள் ஆங்கிலச் சொற்களை மட்டுமின்றி வடமொழிச் சொற்களையும் களைந்தெறியத் தலைப்பட்ட முன்னோடியாவார். தாளிகையில் நல்ல தமிழைக் கையாள முடியும் என்பதைச் செயலில் காட்டியவர்.

திரு.வி.க. அவர்களைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தாளிகைத் துறையில் மிகப் பெரும் மாற்றத்தை உண்டாக்கினார். எழுத்துநடையிலும் பேச்சு நடையிலும், இன்று ஏற்பட்டுள்ள `மறுமலர்ச்சிக்கு' அண்ணா அவர்களின் பங்கு பெரிது.

தமிழ் மறுமலர்ச்சி இயக்கமான திராவிட இயக்கத்தைச் சார்ந்தோர் தாளிகைத் துறையில் ஈடுபட்ட பிறகுதான், நல்ல தமிழை நடைமுறையில் காண முடிந்தது.

`கல்கி' அவர்கள் `கான்பரென்ஸ்' என்னும் ஆங்கிலச் சொல்லை `மகாநாடு' என்றுதான் மொழிபெயர்த்துள்ளார். திராவிட இயக்கத்தவர் `மகாநாடு' என்பதை ஏற்கவில்லை; `மாநாடு' என்ற சொல்லை வழக்கிற்குக் கொண்டு வந்தார்கள்.

"தணிப்பரிதாம் துன்பமிது
தமிழ் நாட்டில் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை"

என்று மனம் நொந்து பாடினார் பாவேந்தர். அந்தப் பாவேந்தர் பாரதிதாசனின் `தமிழியக்கம்' ஊட்டிய உணர்வும் பேரறிஞர் அண்ணா கையாண்ட தமிழ் நடையும், எழுத்துலகத்தையே மறுமலர்ச்சியடையச் செய்து பீடு நடைபோடச் செய்தன என்றால் மிகையாகாது.

தமிழறிஞர்களான நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், இரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார், கா.சுப்பிரமணிய பிள்ளை, நாவலர் நா.மு. வேங்கடசாமி நாட்டார், பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையார், ஔவை துரைசாமிபிள்ளை, மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் போன்றோர் தனித்தமிழ் நடைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தனர். இதன் பயனாக, நாட்டில் உள்ள ஏடுகள் எல்லாம் நல்ல தமிழ் நடைபயின்று வரலாயின.

நமஸ்காரம் `வணக்கம்' ஆயிற்று. `வந்தனோபசாரம்' நன்றிகூறலாக மாறியது. `அக்கிராசனாதிபதி' தலைவர் ஆனார். `காரியதரிசி' செயலாளர் ஆனார். விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை `திருமண அழைப்பிதழாக' அச்சாயிற்று. `மகாசபை' பேரவையாயிற்று; `மகாஜனங்கள்' பெருமக்கள் ஆயினர். `பஸ்' பேருந்தாக ஓடுகிறது! `போர்டுகள்' வாரியங்களாக இயங்குகின்றன. இப்படி எத்தனை எத்தனையோ சொற்கள் மறுபிறவியெடுத்து வந்தன!

அண்ணா அவர்களின் `திராவிட நாடு', கலைஞர் அவர்களின் `முரசொலி' மற்றும் நம்நாடு, விடுதலை பொன்னி, போர்வாள், மன்றம் போன்ற திராவிட இயக்க ஏடுகள் நல்லதமிழ் நடைக்கு வழிகாட்டி வந்தன.

தேசிய ஏடுகள் என்ற பெயரால் வெளிவந்த ஏடுகள் மட்டும் `தனித்தமிழ்' என்பதே தேசியத்துக்கு விரோதமான ஒன்று என்ற கொள்கையைக் கடைப்பிடித்துப் பிடிவாதமாக நடையை மாற்றிக் கொள்ளாமல் இருந்து வந்தன.

தமிழ்மொழிப் பற்று மிகக் கொண்ட நற்றமிழ்ச் செல்வரான கருமுத்து. தியாகராச செட்டியார் துணிந்து தனித்தமிழிலேயே நாளிதழைச் சிறப்பாக நடத்திக் காட்டினார். `தமிழ்நாடு' என்னும் அவரது நாளிதழ் நாள்தோறும் நாட்டில் செந்தமிழ்த் தேனில் செய்தியைக் குழைத்துத் தந்து கொண்டிருந்தது. பெரும் பொருளிழப்பையும் பொருட்படுத்தாது அவர் அந்த நாளிதழை மதுரையிலும் சென்னையிலும் நடத்தினார்.

யார் மாறினாலும் நான் மாறமாட்டேன் என்று, வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில் அண்மைக் காலம் வரை வெளிவந்து கொண்டிருந்த ஒரு தேசிய நாளிதழ் கூட இனித் தாக்குப் பிடிக்கமுடியாது என்று உணர்ந்து கொண்டு, நடையை மாற்றிக் கொண்டுவிட்டது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தபின் `எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு, அதன்பயனாக அரசின் அறிவிப்புகளும் அறிக்கைகளும் நல்லதமிழில் வெளிவரத் தொடங்கின. `அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பது போல ஆட்சியாளர் வழியில், தமிழ்நாட்டு ஏடுகளிலும் நல்லதமிழ் நடைபயிலத் தொடங்கின.

இப்பொழுது நாளிதழ்களில் வெளிவரும் செய்திகள், கட்டுரைகள் எல்லாம் பெரும்பாலும் நல்லதமிழில் வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வருந்தக் கூடிய செய்தி என்னவென்றால், இப்பொழுது வெளிவரும் `புதினங்கள்' `சிறுகதைகள்' `புதுக்கவிதைகள்' என்பவையெல்லாம், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது போலப் பழைய மணிப்பிரவாள நடைக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

ஆங்கிலச் சொற்றொடர்களை அப்படியே தமிழில் கையாள்வதும், வடமொழிச் சொற்களை வேண்டுமென்றே கையாள்வதும், சிலரின் வாடிக்கையாகி வருகிறது. `முற்போக்கு' என்ற முகமூடியை அணிந்து கொண்டு புதுக்கவிதைகள் வெளிவருகின்றன. இத்தகைய கவிஞர்களின் இந்தப் போக்கினால் தமிழ் வளருமா? நல்லதமிழ் நடமாடுமா? `முற்போக்கு' என்னும் `முத்திரை' யைத் தாங்களே குத்திக் கொண்டு எழுத முனைவோர்களின் இந்த நிலை கண்டு இரங்காமல் என்னசெய்வது?

நல்ல மரத்தில் `புல்லுருவி' பாய்ந்தது போல இதனைக் கொள்வோம். யார் என்ன சொன்னாலும், எவர் எப்படிக் கருதினாலும், நல்லதமிழை வளர்த்து வருவதில் தாளிகைகளின் பங்கு மிகப் பெரிது.

வாழ்க நல்ல தமிழ் இதழ்கள்
வளர்க அவற்றின் அருந்தமிழ்ப் பணிகள்!



# நாட்டோரே...

கவிஞர் பி.அப்துல் கரீம்

நிதியுள்ளார், நிதியில்லார் எவரா னாலும்
நீதியினை விரும்பிடுவார்! அதேபோல், நுட்ப
மதியுள்ளார் எனும்நீதி பதியோ, யார்க்கும்
மனுநீதிச் சோழன்போல் தீர்ப்ப ளிப்பார்!
சதியுள்ளார், பேராசைக் காரர், நெஞ்சில்
சற்றேனும் நல்லெண்ணம் இல்லா ரெல்லாம்,
அதிகசுகம் எனும்இதய அமைதி இல்லார்!
அன்பில்லார்; இன்பமில்லார் என்று சொல்வேன்.

படியேறி நீதிமன்றக் கூடத் திற்குள்
பலர்காண வருபவர்க்கோ சமுதா யத்தில்
இடிவிழுந்தால் எப்படியோ அதைப்போல், மிக்க
இழிவுவந்து சேர்ந்துவிடும்! உறவார், ஊரார்
அடிகொடுப்பர்! ஆதரிக்க எண்ண மாட்டார்!
அங்குமிங்கும் ஏளனங்கள் பேசித் தீர்ப்பார்!
முடிவென்ன? ஏதுமில்லை! பொருளா தார
முட்டுப்பா டெழுந்துவந்து வாழ்வை வெட்டும்!

நாட்டோரே! நன்னெறியின் பால்ந டப்பீர்!
நல்லமகான் காந்தியைப்போல் உண்மை சொல்வீர்!
நீட்டோலைப் புகழ்பெற்ற நபியைப் போன்று,
நெஞ்சுக்கு நீதியாய்நீர் வாழ்வீர்! துன்பச்
சாட்டையடி பெற்றேமெய் பேசி வென்ற
சந்திரமதி புருடனைப்போல் துணிவைக் கொள்வீர்!
வேட்டைமனம் விலங்குள்ளம் விட்டொ ழிப்பீர்!
வெல்வீர்நீர்! வரலாற்றில் பெயர்பொ றிப்பீர்!

# தாகூர் பெரியார்

## பெண் விடுதலைக் கோட்பாடுகள்

டாக்டர் மைதிலி வளவன்

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

என்று முழங்கினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். மானுடத்தோற்றத்தின் மையப் புள்ளியாய் விளங்குவது பெண்மையே. இனிமை, அழகு, பொறுமை, ஆற்றல் ஆகியவற்றின் உருவகமாய், சக்தியின் பிரதிபலிப்பாய்ப் போற்றப்பட்டு வருவது பெண்மையே. தாய்மையாய், தயவாய், திருவாய், செழுமையாய் உலக இலக்கிய நூல்களில் படைக்கப்பட்டு வருவதும் பெண்மையே. கருத்தளவில், தத்துவத்தில், இவ்வாறெல்லாம் உச்சியில் வைத்து மெச்சப்படும் பெண், இருப்பு நிலையில் உலகியலில் அடிமைப்படுத்தப்பட்டும் கீழ்மைப்படுத்தப்பட்டும் துன்பச் சகதியில் அமிழ்ந்து வருவதை எவராலும் மறக்க இயலாது. இது உண்மையாகும்.



பெண்ணினத்தின் இப்பேரிடரை நீக்கக் குரல் கொடுத்தோர், உணர்ந்து பெருமுச்செறிந்தோர், தீர்ப்பதற்காகப் போராடியோர் நெடிய வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் தோன்றித் தோன்றி மறைந்துள்ளனர். ஆனாலும் பெண்ணினம் அடிமைத் தனத்தையும் துயரச்சுமையையும் தாங்கும் நிலையிலேயே இன்னும் இருந்து வருகிறது.

வேத காலத்தில் பிரகசுபதி, பிசானர் (*Bishanar*) முதலானோர் பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த பெரியோராவர். இதிகாச காலத்திலும் காவியப் பாத்திரங்களின் வாயிலாக இக்குரல் ஒலித்தது.

இராவணனை எதிர்த்துச் சீதையின் குரலாய், துரியோதனனை எதிர்த்துப் பாஞ்சாலியின் குரலாய், இதிகாச காலத்தின் பெண் விடுதலைக் குரல் உரத்து ஒலித்துள்ளது. முடிமன்னர் காலத்தில் கூண்டுக் கிளிகளாய் அடைக்கப் பட்டிருந்த பெண்களைக் கூட்டுப் பறவைகளாய் விடுதலை பெறச் செய்த இலக்கிய வாணர்கள், இந்தியா முழுவதும் முயற்சி செய்து வந்திருக்கின்றனர்.

முகலாயர் ஆட்சிக் காலத்தில் குதிரை வீராங்கனைகளாய் ஓடித்திரிந்த இரசபுத்திரப் பெண்கள் இசுலாமிய மன்னர்களின் அந்தப்புரங்களில் பர்தாவுக்குள் பதுங்க நேர்ந்த அவலத்தைப் பற்றிப் பிர்தோசி, தான்சே முதலானவர்கள் பாடிப் புலம்பி இருக்கின்றார்கள்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் கல்வியும், ஓரளவு உரிமையும் பெறுகிற வாய்ப்பினை இந்தியப் பெண்கள் பெற நேர்ந்தது. ஆனாலும் ஆணுக்குப் பெண் சற்று இளைப்புத்தான் என்னும்

ஆணவத்தின் ஆணிவேர் மட்டும் அசைக்கப்படவில்லை. இந்தக் கொடுமையான ஏற்பாட்டைக் குலைக்கும் முயற்சியில் பாரதி, தாகூர், பெரியார், காந்தியடிகள், அம்பேத்கார், அண்ணா போன்றோர் செயல் வீறுகொண்டு போராடினார்கள். இவர்களுக்கு எல்லாம் முன்னோடிகளாய், தத்துவ வித்தகர்களாய் விளங்கியவர்கள் இராமகிருட்டினபரம அம்சர், வள்ளலார், விவேகானந்தர், இராசாராம் மோகன்ராய் போன்றோராவர்.

'பெண் என்பவள் ஆணுக்குச் சற்றுத் தாழ்ந்தவள் தான்!' என்னும் பெண்ணடிமைக் கோட்பாடு ஆதி நாகரிக நாடு என வருணிக்கப்படும் கிரேக்கத்திலேயே விழுதுவிட்டிருந்தது. மதத்துறையில் புரட்சியாளராகக் கருதப்படும் மார்டின் லூதர் தன் பெண்ணடிமைக் கருத்துக்களை வெளிப்படுத்திய விதம் வேதனைக்குரியது. "பெண்கள் குறுகிய சிந்தனை உடையவர்கள்; எனவே அவர்கள் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்து கணவனுக்குத் தொண்டு புரிந்து, பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் கடமையை மட்டுமே செய்ய வேண்டியவர்களாவர்".

இவ்வாறு பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்தியவர்கள் மேல்நாடுகளில் மட்டுமின்றி இந்தியாவிலும் இருந்து வந்துள்ளனர். இரவும், பகலும் எந்நேரமும் ஒரு பெண் ஆணினத்தைச் சார்ந்தே வாழ வேண்டுமே அல்லாது தம் சொந்த உணர்வுகட்கு ஒரு போதும் மதிப்பளித்தல் ஆகாது; பெண்களுக்குச் சொத்துரிமை கூடாது; அவர்களின் உடைமை யாவும் அவர்களின் காவலரான ஆண்களுக்கே உரிமையாக்கப்பட வேண்டும் என்கிறது மனு தரும சாத்திரம். இவ்வாறு ஆணின் உடைமையாகவும் உணர்வற்ற சடப்பொருளாகவும் பெண்களைக் கருதும் முறை கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திலும் வலியுறுத்தப் படுகின்றது.

பெண் என்பவள் ஓர் ஆணின் வீடு, மனை, கால்நடை போன்ற செல்வமே ஆவாள்; அவளைத் தன் மனம் விரும்பியவாறு நடத்தும் உரிமை அவனுக்கு உண்டு என்றெல்லாம் கருதப்பட்ட பெண் இனத்தின் நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு சிக்கல்களுக்கான தீர்வுகளை முன்வைத்தவர்களில் வடக்கே பிறந்த இரவீந்திரரும் தெற்கே பிறந்த பெரியார் ஈ.வெ.ராவும் இன்றியமையாதவர்கள். சிக்கல்களின் விரைவும் தீர்வின் தேவையும் இருவராலும் ஒரே அளவுக்கு ஈடுபாட்டோடு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் பெண்ணடிமைச் சிக்கலின் தோற்றுவாயையும் அது இயங்கும் விதத்தையும், அதன் வளர்ச்சி நிலையையும் ஆராய்கிறபோது இவ்விருவரும் வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்திருப்பது புலனாகின்றது.

கவியரசர் இரவீந்திரர் மனித இனத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள அடிப்படை வேறுபாட்டை ஒரு வகையாக விளக்கியுள்ளார்.

மனித இனத்தின் வாழ்க்கைக்கான போராட்டத்தில் ஆண் இனம் பல முயற்சிகளில் ஈடுபட்டு, ஒன்று தப்பித்தவறி முன்னேறியது; இல்லாவிட்டால், தான் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியாமல் அழிந்தது. ஆனால் பெண் இனம் காதல் மனைவியாகவும், பாசத்தினை வளர்க்கும் தாயாகவும் இருந்து, நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்த்து வந்தது என்று கூறி ஆண் இனத்தை வாழ்வியல் முன்னேற்றத்துக்குப் போராடும் இனமாகவும், பெண் இனத்தைக் காதல், பாசம் ஆகிய உன்னத உணர்வுகளால் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் இனமாகவும் பார்த்துள்ளார் கவியரசர் இரவீந்திரர்.

இந்த இனப்பிரிவைப் பெரியார் ஏற்கவில்லை. அவர் விழையும் பெண்ணுரிமை ஆணைப் போலவே பெண்ணுக்கு வீரம், வன்மை, சினம், ஆளும் திறம் உண்டு என்பதை ஆண் மக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். காதலும் பாசமும் மட்டுமே பெண்மை எனக் கருதும் கூற்றினைப் பெரியார் மறுத்துள்ளார். "வன்மை, கோபம், ஆளும் திறம் ஆகியவை ஆண்களுக்கே சொந்தம் என்றும், சாந்தம், அமைதி, பேணும் திறம் பெண்களுக்கே சொந்தம் என்றும் சொல்வதானது வீரம், வன்மை, கோபம், ஆளும் திறம் புலிக்குச் சொந்தம் என்றும் சாந்தம், அமைதி, பேணும் திறம் ஆட்டுக்குச் சொந்தம் என்றும் சொல்வது போன்றதே ஒழிய வேறில்லை" என்றார் பெரியார்.

ஆனாலும் பெண்கள் அடிமைப் பட்டதற்கு ஆண்களே காரணம் என்பதில் கவியரசருக்கும் பெரியாருக்கும் வேறுபாடில்லை. எளிதில் பெண்கள் இனிமையை ஊட்டுவதால், ஆண்கள் தமக்கே உரிய உடைமையாகப் பெண்களை எண்ணி மனம் போனபடி ஆட்டி வைக்கிறார்கள்.... அழகான இறகும் இன்குரலும் உடைய பறவையைச் சிலர் கூட்டில் அடைத்துப் பெருமை கொள்வது போலத்தான்! குடும்பத்தை வளமாக்க வந்த பெண்களின் அழகையும் இனிமையையும் தமக்கே உரியவை என்று எண்ணி ஆண்கள் அனுபவிக்கிறார்கள். பெண்களின் உள்ளத்தில் ஊறும் அன்பையும், பணிபுரியும் பண்பையும் வெகுகாலமாக ஆண்கள் இப்படித்தான் கருதி, பெண்களுக்குப் பல தளைகள் பூட்டி அவர்களை

வீட்டிலே சிறைப்படுத்தி வைத்து வேடிக்கை பார்த்து வருகிறார்கள்.

ஓர் ஆணுக்கு மனைவி என்ற வகையில் பெண்ணுக்கு ஏற்படும் உறவு ஆண்டான் -அடிமை உறவாகவே இருப்பதை வெளிப்படுத்தி இந்நிலையை வெகுவாகக் கண்டிக்கிறார் பெரியார். "புருஷன் -மனைவி சம்பந்தமே எஜமான் -அடிமைச் சம்பந்தமே ஒழிய அன்பு முறைச் சம்பந்தமோ, நட்பு முறைச் சம்பந்தமோ அல்ல. ஓர் அரசனுடைய மகளாயினும், அவள் ஒரு வேலைக்காரனுக்கு வாழ்க்கைப்பட நேரிட்டால் அவளும் அடிபணிந்து நடந்து வரவேண்டியது தான். ஒரு பெண்ணை ஒரு ஆணுக்கு அடிமையாக்குவது தவிர்த்துத் திருமண முறையில் வேறு தத்துவம் இல்லவே இல்லை என்பதை உறுதியாகச் சொல்வேன்.

மனித சமுதாயத்தில் சரிபகுதி எண்ணிக்கை கொண்ட பெண்களைச் சமூக முன்னேற்றத்தில் ஈடுபட விடாமல் அடக்கி வைத்திருந்த நிலையில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்த மாற்றத்தைப் பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த பழைமை நிலையில் ஏற்படும் புது மாற்றத்தைக் கவியரசரும் பெரியாரும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். இந்த வெளிப்பாட்டால் சமூக நன்மை விளையும்; மனித குலம் மேம்படும் என்பதில் இருவரும் ஒத்த கருத்துடையவராய் இருந்தனர். பெண்களின் முகத்தை மறைத்திருந்த முகத்திரை மட்டுமின்றி உள்ளத்தை மூடிக்கிடந்த அறியாமை என்னும் இருட்டுத் திரையும் விலகி வருகிறது. பெண்கள் தாங்களும் மனித சமுதாயத்தில் இன்றியமையாதவர்கள் என்பதனை உணர்ந்து வருகிறார்கள். இனிக் குருட்டுப் பழக்கம் என்னும் பட்டறையில் உருவான மரப்பாச்சிகளை வைத்துக் கொண்டு, கட்டுத் திட்டங்களையே சிறப்பாக எண்ணி அவர்கள் வாழத் தேவை இல்லை. இயல்பாகவே உயிரை வளர்த்துக் காக்கும் திறம் படைத்தவர்கள் பெண்கள். இனிக் குடும்பத்திலுள்ள உறவினர்களை மட்டுமின்றி மனமொழி மெய்களால் உலக மக்கள் அனைவரையுமே பேணிக்காக்கும் பணியில் ஈடுபடுவார்கள் என்றே நம்புகிறார். பெண்கள் தம் தளைகளை உடைத்துக் கொண்டு சமூகத்திற்குள் புகுந்துவிட்ட பேருண்மையை இவ்வாறு வரவேற்றுள்ளார் கவியரசர்.

தந்தை பெரியாரும் இவ்வாறான பெண் விடுதலைக்கான வழியை மிக மகிழ்வுடன் வரவேற்றுள்ளார். சமூக முன்னேற்றத்தில் ஈடுபடுதல் பெண்களுடைய விடுதலைக்கு முதற்படி என்று விளக்கினார். "பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இவை இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டு விட்டால், சொத்து சம்பாதிக்கும் சக்தி வந்துவிடும். பிறகு தங்கள் கணவன்மார்களைத் தாங்களே தேர்ந்தெடுக்கவும், அல்லது பெற்றோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கணவனோடு சுதந்திரமாய் வாழ்க்கை நடத்தவும் கூடிய தன்மை உண்டாகிவிடும்"

இவ்வாறு இயல்பாகவே விடுதலையுடன் இயங்க வேண்டிய பெண்களைத் திருமண உறவுகள் சம உரிமையற்ற நிலையில் வைத்திருப்பதைச் சாடியுள்ளார் கவியரசர் இரவீந்திரர். நம் நாட்டு திருமண உறவு முறை நாகரிகமற்றதாயிருப்பதையும் சுட்டிக் காட்டி அதற்கான காரணங்களையும் நன்கு விளக்கியுள்ளார். மண முறையிலும் சரி, சடங்குகள்-சட்ட திட்டங்களிலும் சரி, நாம் இன்னும் பழைய காட்டுமிராண்டிகளின் நிலையிலே தான் இருக்கின்றோம். இதனாலேயே இன்னும் ஆண் பெண் உறவு முற்றும் சுபமாகப் பரிணமிக்காதபடி அரை குறை நிலையில் இருக்கிறது. நம் நாட்டிலே பெண்ணையும் பொன்னையும் ஒன்றாக வைத்து எண்ணுவதும் இந்தத் தவறான மணமுறையின் விளைவுதான். இப்படிப் பொன்னை அவர்களுக்கு ஒப்பிடுவதென்றால் என்ன அர்த்தம்? `பொன் மனிதனைப் பேராசைக் குள்ளாக்குவது போல் பெண்களும் ஆளை மயக்கிப் பாழாக்குகிற மட்டமான பிறவிகள்' என்ற கருத்து, ஆண்களின் மனத்திலே ஓங்கியிருக்கிறது என்பதுதான். தாங்கள் மட்டுமே மனிதர்கள். தங்களுக்குத்தான் முக்தியை நாடும் உரிமை உண்டு என்று நமமவர்கள் எண்ணி வருகிறார்கள். ஆண்களின் அற்ப ஆசைக்கும் கடமைக்கும் நம் பெண்கள் தங்களைத் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனாலும் இந்தத் தியாகம் தற்கொலைக்கு ஒப்பாகும் என்பது இன்னும் அவர்களுக்குப் புரியவில்லை. பெண்களிடமுள்ள இனிய பண்பு வெறும் சிற்றின்பம் துய்ப்பதற்காக ஏற்பட்டதன்று; ஆண்களின் பலவகை முயற்சிகளுக்கு அது இன்றியமையாத மூலதனம் என்பதை அவர்களே இன்னும் உணரவில்லை. நம் நாடு எல்லாத் துறையிலும் வலிவிழந்து கிடப்பதற்குக் காரணம் இதுதான்.

இயற்கையோடு இயைந்த அன்பும், காதலும், ஒருமித்த உணர்வும் மிக்க அமைப்பாக இல்லாமல் திருமணம் என்பது நம் நாட்டில் ஆணுக்குச் சொத்தாய் அடிமையாய்ப் பெண்ணை ஆக்கிவிடுகிற ஏற்பாடாகவே இருப்பதனை உணராமல் பெண்கள் இந்தக் கேட்டிற்கு உடன்படுவதைச் சாடியுள்ளார் பெரியார். இந்தத் தீமை பயக்கும் திருமண ஏற்பாட்டை மாற்றியமைத்துக் கொள்ள

வேண்டுமென வலியுறுத்துவதோடு இவ்வேறுபாட்டிற்குக் காரணமாய் விளங்கும் மதங்களும் சட்டங்களும் மாய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பெண் மக்கள் தாங்கள் ஆண் மக்களின் சொத்தென்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும், அவர்களது சினத்திற்கு ஆளாகக் கூடியவர்கள் என்றும் நினைத்துக் கொண்டு பெண் விடுதலையில் கவலையற்று இருக்கின்றனர். உண்மையாகப் பெண் விடுதலை வேண்டுமானால், ஒரு பிறப்புக்கு ஒரு நீதி வழங்கும் கட்டுப்பாட்டுத் திருமண முறை நீங்கி, இரு பிறப்பிற்கும் இணையான தன்விருப்பத் திருமண முறை ஏற்பட வேண்டும். கற்புக்காக அன்பற்ற இடத்தில் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான கட்டுப்பாட்டுத் திருமணங்கள் நீங்கவேண்டும். கற்புக்காகக் கணவனின் விலங்குச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள் சட்டங்கள் மாய வேண்டும் என்றார் பெரியார்.

இவ்வாறு திருமண உறவுகள் பெண்களை அடிமைப்படுத்தும் கட்டுப்பாட்டு உறவுகளாய் இல்லாமல் மனம் ஒத்து வாழும் காதல் உறவுகளாய் இருக்க வேண்டும் என்று கவியரசரும் பெரியாரும் கருதுவதோடு இந்தப் புது நிலை ஏற்படப் பெண்களே முன் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தும் கொடுமைக்கு எப்போது முடிவு தோன்றும் என்று கூற வந்த கவியரசர் "பெண்கள் அறியாமை இருளிலும் குருட்டு நம்பிக்கையிலும் ஆழ்ந்திருக்கும் வரை தான் ஆண்கள் தம் இஷ்டப்படி ஆட்டம் போடலாம்" என்றார்.

பெரியாரும் பெண்களே தம் அடிமைத் தளையைத் தகர்த்துக் கொள்ள முன்வரவேண்டும் என்பதில் குறியாய் இருந்தார். " ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எந்த விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. ஆதலால் பெண்கள் தாராளமாகவும், துணிவுடனும், முன்வந்து தம் விடுதலைக்கான கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமும் ஆன காரியமாகும் ".

ஆழ்ந்த சமயப்பற்றும், இறையருளில் நம்பிக்கையும் ஆன்மீகத்தில் ஆழந்த ஈடுபாடும் கொண்டவர் கவியரசர் இரவீந்திரர், சமயத்தில் பற்றின்மை, இறையருளில் நம்பிக்கையின்மை, ஆன்மீகத்தில் ஈடுபாடின்மை ஆகியவற்றின் கொள்கலனாகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார். ஆனால் இவ்விரு துருவங்களும் சந்திக்கும், உடன்படும் ஒத்துப் போகும் மையப்புள்ளியாகத் திகழ்கிறது பெண் விடுதலைக் கோட்பாடு.

அண்மைக் காலத்தில் எழுச்சி பெற்றுள்ள பெண் நிலை வாதம் என்னும் புதிய கோட்பாட்டுக்கு வித்திட்ட சான்றோர்களாகவே கவியரசரும் பெரியாரும் விளங்கினர். மனித இனத்தின் சரிபாதித் தொகையினரான பெண்களின் விடுதலைக்காகப் பெண் விடுதலைக் கோட்பாடு புதிய தொலை நோக்கினைப் பெண்களுக்கு அளித்துள்ளது.



# இறைமையில் அமைதி

## கவிஞர் இமய பாரதி



நாடிருந்தும் நகரிருந்தும் வீடி ருந்தும்
நலமான மனைஇருந்தும் மகனிருந்தும்
நாடாளும் அரசனெனப் புகழி ருந்தும்
நயமான அமைச்சர்கள் துணையி ருந்தும்
நாடாமல் சித்தார்த்தன் அமைதி யற்று
நலிவுற்று மனம்வருந்திக் காடு சென்றே
தேடரிய மெய்ஞ்ஞானம் பெற்றா னென்றால்
தேக்கியநல் இறைஅமைதி யாலே அன்றோ?

தீமையெலாம் தீயனென இகழும் வண்ணம்
தீங்கிழைத்த அருணகிரி நாதர் பின்னர்
ஆமையென ஐம்புலனும் உள்ள டக்கி
ஆண்டவனின் அடிபணிந்து மணக்கும் ஞானப்
பாமாலை பல சூட்டி பக்தனாகிப்
பலதீயர் மனம்மாற்றும் கருத்த ளித்துப்
பூமியிலே உயர்வடைந்து மிளிர்ந்தா
ரென்றால்
புனிதரவர் கொண்டஇறை அமைதி
யன்றோ?

குறேசியர்கள் கொடுங்கோன்மை
அரபு நாட்டில்
கோலோச்சி தீங்குபல படர்ந்த
வேளை,
இறைத்தூதர் பெருமானார் நபிகள்
தோன்றி
எண்ணரிய நன்மைபல செய்தா ரன்றோ?
இறைஅமைதி மக்களுளம் தழைக்க வேண்டி
இனிமைமிகு தத்துவங்கள் மொழிந்தா ரன்றோ?
குறைவறியா இறைவனருள் வேண்டல் ஒன்றே
குவலயத்தில் பேரமைதி நல்கு மன்றோ?

பொன்பெற்றும் பொருள்பெற்றும் போகம் பெற்றும்
பொருள்மிக்க செல்வந்தர் உறவு பெற்றும்
தன்ஆணை நிறைவேற்றும் தாதி பெற்றும்
தட்டாமல் உணவுபெறும் வளமை பெற்றும்
இன்பங்கள் எல்லாமே இருக்கப் பெற்றும்
ஏந்திழையாள் `மகதலேனா' அமைதி யின்றி
துன்பத்தால் மிகவருந்தித் துடிக்க லானாள்
தூண்டிலிட்ட புழுப்போல வாட லானாள்!

தேவமைந்தர் ஏசுநாதர் சமயம்!
எட்டுத்
திசையெங்கும் புகழ்பரப்பி ஒளிர்ந்த
வேளை,
ஆவலுடன் மிகவிரும்பி ஏசு ஞானம்
அகம்தேக்கிப் பெறற்கரிய இன்பம்
பெற்றாள்!
தூவிமலர் வையமெல்லாம் புகழும்
வண்ணம்
தூயவளாய் மனம்மாறிப் பெருமை
கண்டாள்!
தீவுமயல் மகதலேனா மகிழ்ந்தா
ளென்றால்
சிந்தையொளிர் இறைஅமைதி யாலே அன்றோ?

சமயங்கள் வெவ்வேறாய் இருந்தாலென்ன?
சார்ந்திருக்கும் இனமொழியால் பிரிந்தாலென்ன?
அமைந்தபெரும் கடவுளவர் ஒருவர் என்னும்
அருமையான தத்துவத்தைச் சிரமேற் கொள்வோம்!
கமழ் அன்பு போற்றுமினம் மாந்த ரென்றே
காசினியில் எங்கெங்கும் முழக்கம் செய்வோம்?
இமைமூடும் வேளையிலும் பிறரை வாட்டும்
இன்னலினை விரும்பாத உறுதி செய்வோம்!

போரிட்டுப் பிறநாட்டில் பொருள்அ ழிக்கும்
பொல்லாத நாடுகளைத் திருந்தச் செய்வோம்!
ஏராளப் பொருள்களினை விழுங்கச் செய்யும்
இழிவான அணுக்குண்டைத் தடைகள் செய்வோம்!
ஊரெங்கும் நாடெங்கும் உலக மெங்கும்
உணவின்றி வாடுபவர் துயரம் தீர்ப்போம்!
சீராகப் பொருள்வளங்கள் பரவச் செய்யும்
சீர்த்திமிகு நல்லறங்கள் படரச் செய்வோம்!

# பாலைக்குடிபோ!

## புலவர் கா.வெ.தியாகசாந்தன்

"என்றுமுள தென்றமிழ்" என்றான் கம்பன். எவராலும் அழிக்க முடியாத சிறப்புப் பெற்றது `தமிழ் என அறுதியிட்டுக் கூறிவிட்டான் அருந்தமிழ்க் கவிஞன் கம்பன். அதை இன்றும் எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. உலகிலுள்ள மொழிகள் அனைத்திலும் இலக்கிய, இலக்கணத் தொன்மைச் சிறப்போடு பிறந்தது தமிழ் ஒன்று தான். வேறென்ன இருக்க முடியும்? அதனால் உலகத் தமிழருக்கெல்லாம் பெருமையல்லவா?

தமிழ்மொழியின் சிறப்புப் பற்றிக் கூறும்பொழுது. திலகத்தின் மணமானது மலை நாடான மலேசியா மட்டுமல்ல; எண்டிசைகளிலும் பரவி அனைவரையும் இழுப்பது போலத் தமிழ் மொழியின் சொற்சுவை பொருட்சுவை யாவரையும் இழுக்கும் தன்மையன எனப் பொருள்படும்படி,



"அத்திலக வாசனை போல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த
பெருந்தமிழணங்கே!"

என மிக அழகாகச் சுந்தரம் பிள்ளையவர்கள் தெளிவுப் படுத்துகின்றார். "தமிழ்மொழியின் மிகுந்த பெருமையைச் சொல்வது யாருக்கும் எளிதன்று" "என்று கரந்தைக் கவியரசர் பாடுகின்றார். "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடுகின்றார் நூற்றாண்டு விழாக்காணும் பாவேந்தர்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

எனத் தமிழகத்தின் சிறப்புப்பற்றிக் கூறுகின்றார் பாரதியார். அத்தகைய தமிழ்ச்சான்றோர் வாழ்ந்த இந்த நிலத்தை ஐவகை நிலங்களாகப் பிரித்து வாழ்ந்திருக்கின்றனர்.

ஐவகை நிலங்களுக்குள்ள உரிப்பொருள்களாகக் குறிஞ்சிக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் எனப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இலக்கியங்கள் காட்டுகின்ற வழியில் மக்களுக்குள்ள உறுதிப்பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடு என நான்காக வகுத்துள்ளனர். இந்நான்கை அகப்பொருளெனவும், புறப்பொருளெனவும் பெரும் பிரிவாக்கி, இன்பம் அகத்தோடு சேர்ந்ததாகவும், அறம் பொருள் வீடு புறத்தோடு

சேர்ந்ததாகவும் பிரித்துள்ளனர்.

அகப்பொருளைப்பற்றிக் கூறும் இலக்கியப் பகுதிகள் தமிழில் செறிந்துள்ளன. ஒருவனும், ஒருத்தியும் ஒருவரையொருவர் காதலித்து வாழும் வாழ்க்கையைப் பலவாறாகப் பிரித்துக் கூறுவது அகப்பொருள் எனப்படும். இதிலும் தலைவனும், தலைவியும் தாமே எதிர்ப்பட்டுப் பிறர் காணாது மறைவில் கூடி மகிழும் வாழ்க்கை `களவு' என்றும், திருமணம் செய்து வாழும் வாழ்க்கை `கற்பு' எனவும் பிரித்துக் காட்டியுள்ளனர். அகச்சுவையைக் காட்டும் தனிப்பாடல் திரட்டிலிருந்து ஒரு காட்சி!

இதோ!

அழகிய மலைநாட்டை ஆண்டு வந்தான் சேடசலேந்திரன். அவன் நாட்டில் கனி வகைகளுக்கும், செல்வங்களுக்கும் எல்லையில்லை. எத்தனை உயிரினங்கள் அவன் மலையில்! ஒரே மரத்தில் தாய்ப்பறவை, சேய்ப்பறவைபோல வாழ்ந்தனர், இரு மாதர் குல மாணிக்கங்கள். இவ்வுலகில் காலமும், பயனும், எவருக்கும் ஒரே மாதிரியாய் அமைவதில்லை.

எப்படியோ சேடசலேந்திரனுக்கும், அந்தத் தாயின் மகளுக்கும் காதல் ஏற்பட்டுவிட்டது. தெய்வக்காதலை எண்ணி, மறைந்து வாழ்ந்த அந்த சோடிப்புறாக்களுக்குத் தாய்ப்பறவை தடைவிதித்தது போன்றநிலை. சேயானவள் வீட்டிலேயே இருக்கவேண்டிய விதி. என் செய்வாள்? காதலனைக் காணாத காரிகை களையிழந்து காணப்பட்டாள். வானவில்லாய்த் தோன்றி மறையும் இளம் பருவத்தில் காதலனுடன் வாழ்வதையே பெரிதெனக் கருதினாள். வழிகண்டு வகை செய்தாள் வனிதை. தாயின் ஆணையும் கிடைத்தாக வேண்டும். காதலனுடன் வாழவும் வேண்டும்– தாயும் வருந்தக் கூடாது. காதலும் ஈடேற வேண்டும் என எண்ண அலைகளைப் புரளவிட்டு ஒரு முடிவுக்கும் வந்தாள். முடிவு இரவை எதிர்நோக்கியது. இருள் மலையைச் சுற்றியது. படுக்கைக்குச் செல்லும் நேரம்! ஊர் உறங்கியது.

திடீரென எழுந்த தாய் "கண்ணே" , என்றாள். சேயானவள், "ஏனம்மா கூப்பிட்டாயா? " என்றாள்.

"இப்படியே இருந்தால் உடம்பு என்ன ஆகும்? கெட்டுவிடும் மகளே! நீ இரவில் இனிப் பாலைக்குடித்துவிட்டுத்தான் உறங்க வேண்டும். போம்மா.. . போ...

மேலே காய்ச்சிய பால் வைத்திருக்கிறேன்.

போய்ப் "பாலைக்குடி, போ!" என்றாள் தாய், மிகுந்த கனிவுடன்.

இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கவே உதய சூரியன் வெளிக்கிளம்பினான் மறுநாட்காலை!

கன்றைப் பிரிந்த பசுவைப் போல, கலங்கியிருந்த தாய்க்கு, "உன் மகளை எங்குத் தேடினும் காணவில்லை. அவளை நீதான் அனுப்பிவிட்டாயே!" என்ற செவிலித்தாயின் பதில் அதிர்ச்சியையும், வியப்பையும் கொடுத்தது. ஆம்! தாய்தான் அனுப்பிவிட்டாள். எங்கு எனக் கேட்கத் தோன்றுகிறதோ? வினாவுக்குரிய விடையைப் பாடல் விளக்குகின்றதே, இதோ...!

"பூச்சிலைக் கன்னல்கைச் சேடசலேந்திரன் பொருப்பிடத்தே காய்ச்சிய பாலைக்குடிபோ என்றேன். அந்தக் காரிகையும் பேச்சில் எத்துக் கள்ளி! பின்ன கரப்பிற்கு முன் சொன்னதா(க) வாய்ச்சு(து) என்றே நடந்தாள் பாலையான வனந்தனிலே! "

பிரிதலும், பிரிதல் நிமித்தமுந்தானே பாலைக்குரியது! புலவரின் சொல்லாற்றலும், மொழிவளமும் நம்மை இன்பக்கடலில் அல்லவா ஆழ்த்துகின்றன? ஆம்! பாலைக்குடிக்கச் சென்றவள் பாலைக்கே குடிபோய்விட்டாள் -அவள் காதலனுடன்!

இது போன்ற இலக்கியத் தாரகைகள் இன்னும் மின்னி மங்காது, மறையாது நம் தமிழ்வானில் ஒளிவிட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. ஒளியில் ஆடிப்பாடிக் கலந்து சுவைத்துணர்ந்து மகிழ்வோமாக!

"பூச்சிலைக் கன்னல்கைச் சேடசலேந்திரன்
பொருப்பிடத்தே
காய்ச்சிய பாலைக்குடிபோ என்றேன் அந்தக்
காரிகையும்
பேச்சில் எத்துக்கள்ளி!பின்ன கரப்பிற்குமுன்
சொன்னதா (க)
வாய்ச்சு(து)என்றே நடந்தாள் பாலையான
வனந்தனிலே!"

–தனிப்பாடல் திரட்டு



# வள்ளுவர் வகுத்த வையகம்

## சௌபாக்கிய இராமானுஜம்

வள்ளுவரை விட வையகத்தைப்பற்றித் துல்லியமாக விளக்கி, அறிவுரை வழங்கியவர் வேறு யாரும் இலர்.

"இவ்வையகத்தில் பிறந்தவர்கள் நிலைத்து வாழ வேண்டும். அறம் செய்து வாழ்பவர்கள் தாம் வையகத்தில் உயர்ந்து வாழ்வார்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று பெருமைப்படக் கூறுகிறார் வள்ளுவனார்.

"வல்லவனுடைய அறிவில் உள்ளது வையகம். சான்றோரின் பெருமையும், அவர் தம் மறை மொழிகளும் இவ்வையகத்தில் என்றும் அழியாது" என்று பகர்ந்த வள்ளுவப்பெருந்தகை,



"நடுவு நிலையாக நின்று அற நெறியில் வாழ்கின்றவனைத்தான், அவன் வறுமை நிலையில் வாழ்ந்தாலும் இந்த வையகம் போற்றும்" என்றும் கூறி வையகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

"இந்த வையகத்தை விட மாணப்பெரிது, உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவியாகும். உலகத்தை விட, தக்க தருணத்தில் செய்த உதவியே மிகப்பெரியது. உலகத்தையே மிஞ்சக்கூடியது" என்று உதவிக்குப் பெருமை சேர்க்கிறார் பெரும்புலவர்.

இந்த வையகம் நிலைத்து இருக்கும் காலம் வரை கூட ஒருவன் புகழோடு வாழமுடியும். ஆனால் அதற்கு அவன் தனக்குத் தீங்கு செய்தவரைக் கூடப் பொறுத்துக்கொண்டவனாக இருக்கவேண்டும். அவ்வாறு தீங்கு செய்தவரைப் பொறுத்துப் புகழுடன் வாழ்பவர்களை வையத்து மக்கள் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பார்கள்.

"தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகிறது இந்தப் பூமி. அதைப்போல நாமும் இகழ்வாரைப்பொறுத்தால் அதுவே நமக்குத் தலை சிறந்த பண்பாகும். அதை விடுத்து, உங்களுக்குத் தீங்கு செய்வோரை மன்னிக்காமல் அவர்களை வருத்தினால், உங்களை இந்த வையகம் ஒரு பொருளாகவே மதிக்காது" என்றும் சாடுகிறார்.

பழிச்சொல் கூறுவோர்களையும், இந்தப் பூமி சுமக்கத்தான் செய்கிறது. இந்த உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு ஒரு கைம்மாறும் செய்வதில்லை. அதைப்போல நாமும், வறுமையில் வாடுபவர்களுக்கு மழையைப்போலக் கைம்மாறு கருதாமல், தக்க உதவிகள் செய்யவேண்டும். பிறருக்கு உதவி செய்து வாழும்

ஒப்புரவே உயர்ந்தது. ஒப்புரவினால் இவ்வுலகம் வாழுமாறு செய்வார்கள் பேரறிவாளர்கள்.

இந்த வையகத்தில் பொறாமை கொண்டவர்கள் பெருமை பெற்றதில்லை. பொறாமையில்லாமல் வாழ்ந்தவர்களே மேம்பாட்டையும் பெருமையையும் அடைந்திருக்கிறார்கள்.

பிறருக்குக் கொடுத்துப் புகழ் சேர்ப்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள். புகழே இந்த வையகத்தில் நிலைத்திருக்கும். புகழோடு வாழாதவர்கள் உண்மையில் வாழாதவர்களே. "அருளுடையவராக வாழ்பவர்களுக்கு என்றும் துன்பமில்லை"

"உலகத்திலுள்ள உயர்ந்தவர்களோடு பொருந்திவாழும் முறையைக் கற்காதவர்கள் பல நூல்களைக்கற்றறிந்த போதிலும் அவர்கள் அறிவில்லாதவர்களே" என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

மன வலிமை இல்லாதவர்கள், ஆற்றல் இல்லாதவர்கள், உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டாலே போதும். பிறகு அவர்களுக்கு எந்தச் சடங்கும் தேவையில்லை.

"நீ இந்த வையகத்து வாழ்வோரின் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற விரும்பினால், நீ எப்போதும் பொய் இல்லாமல் நடக்க வேண்டும்." என்று அறிவுரை கூறுகிறார் பொய்யாமொழியார்.

நேற்று இருந்தவன், இன்று இல்லாமல் போய்விடும் நிலைமையைக் கொண்டுள்ளான் மனிதன். ஐயத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்களுக்கே இவ்வையகம் சொந்தமாகும்.

அவா, அழுக்காறு ஆகிய துன்பங்கள் இல்லாமல் வாழ்பவர்களுக்கு இவ்வுலகத்தில் இடையறாமல் இன்பம் வாய்க்கும். நாம் பெறும் கல்வியால் இந்த வையகம் இன்புறவேண்டும். அப்படிப்பட்ட கல்வியைத்தான் நல்லறிஞர்கள் நாடுவார்கள். நாமே கற்கமுடியவில்லையாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறிய முடியுமல்லவா? செவியால் கேட்டு உணராதவர்கள் வாழ்ந்தென்ன, போயென்ன என்று வினாவுகிறார் குறளாசிரியர்.

வையத்துள் உயர்ந்தவரை நட்பாக்கிக்கொள்வது நல்லது. வையத்தை ஒட்டி வாழ்வதும் சிறப்புடையது. தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே இந்த உலகம் கண்ணாகப்போற்றுகிறது. "அளவறிந்து வாழ்பவனே இவ்வையகத்தில் நிலைத்து வாழ்வான். எந்தச் செயலையும் அதற்குரிய ஏற்ற காலத்தை அறிந்து பொருத்தமான இடத்தில் செய்தால், இந்த வையகமே வேண் டுமெனினும் அது கை கூடும் என்கிறார் நூலாசிரியர்.

இந்த உலகம் கெட்டு விடாது. எப்போது? தொழில் செய்கின்றவன் கோணாதிருக்கும் வரை இந்த உலகம் கெடாது. மறதி வாழ்க்கைக்கு எதிரி. மறதியாளர்களால் புகழுடன் வாழமுடியாது.

அருளில்லாத ஆட்சி, மழையில்லாத உலகத்திற்குச் சமம். உலகியல் கண்ணோட்டமில்லாதவர்கள் இந்தப் பூமிக்குச் சுமையாவர். தங்கள் தொழில் கெடாமல் சரியான கண்ணோட்டத்தில் செயல்படும் வல்லவர்களுக்கே இந்த வையகம் சொந்தமாகும்.

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும். உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தக்கூடிய நூலறிவால் செயலைச் செய்ய வேண்டும். கருத்துக்களை ஒழுங்காகக் கை கோத்து இனிமையாகச் சொல்பவரிடம் இந்த வையகம் அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும் என்று கூறி அறிவின் சிறப்பைச் சித்தரிக்கிறார் செந்நாப்புலவர்.

மனத்திட்பம் செயலுக்கு அவசியம். உறுதி இல்லாதவரை இந்த உலகம் விரும்பிப் போற்றாது. ஒருவரின் திருமுகத்தைப்பார்த்து அவர் கருதிய குறிப்பை அறிந்து உதவி செய்பவன் இவ்வையகத்திற்கு அணிகலனாக ஒளிவிடுவான். உயர்ந்தவரை நட்பாக்கிக் கொள்வது சிறந்த அறிவாகும். உலகத்தில் குற்றம் நேர்வதற்கு முன்னமே வாராமல் காத்துக்கொள்ளாதவன் வாழ்க்கை, நெருப்பில் விழுந்த வைக்கோலைப்போல் எரிந்து சாம்பலாகிவிடும்.

நீதியையும், நேர்மையையும் விரும்பிப் பிறருக்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை இவ்வையகம் போற்றும், பண்புள்ளவர்களால் தாம் இவ்வுலகம் பெருமை அடைகிறது. பிறரோடு கலந்து, பழகி, மகிழ முடியாதவர்க்கு ஒளியுள்ள பகற்காலமும் இருளாகத்தான் தெரியும். பழிப்பை நாணுபவர்களையே உலகத்தார் தங்கள் சுற்றமாகக் கருதுவர். உலகத்துக்கு அச்சாணி உழவு. இந்த உலகமே ஏரின் பின்னேதான் சுழலுகிறது. இந்த உலகத்தில் உழுதுண்டு வாழ்பவர்களே உண்மையில் வாழும் பெருமைக்குரியவர் ஆவர்.

"எம்மிடம் ஒரு பொருளும் இல்லை. என்று புலம்பி வறுமையால் சோம்பிக்கிடப்பவரைக்

# உணருவீர்! ஒன்றுசேர்வீர்!

**கவிஞர் மு.மு.நாயகம்**



தமிழனைத் தேடு கின்றேன்
தமிழன்னைத் தேடு கின்றேன்!
தமிழனாய் வாழ்வோ னைநான்
தனியாகத் தேடு கின்றேன்!
நிமிராத கூனன், கோழை,
நெறிகெட்ட கழுதை எல்லாம்
தமிழனா? இல்லை! நல்ல
தமிழனைத் தேடு கின்றேன்!

உழைப்பினை மறந்தான்; வாழ்வின்
உயர்வினை மறந்தான்; நல்லோர்
அழைப்பினை மறந்தான்! பாவம்,
ஆற்றலை மறந்து போனான்!
பிழைப்பினை இழந்தான்; பேசும்
பெருமையை இழந்தான்! வெய்யோன்
இழைப்பினை, நாள்இ முப்பை
ஏனிவன் எண்ண வில்லை?

வசைபடும் கூவ மானான்
வதைபடும் பிறவியானான்
இசைபடும் வீணை, இவ்வா
றிழிவினை அடைய லாமா?
திசைபடும் கீர்த்தி பெற்றோன்
தெருமண்ணாய் மாற லாமா?
நசைபடும் பெருமை எல்லாம்
நழுவிடல் சரியா சொல்வீர்!

ஒற்றுமை தேவை! நெஞ்சில்
உடன்பாடு உடனே தேவை!
வெற்றுமை எழுத்தில் தீட்டும்
வித்தாரம் தேவை யில்லை!
பற்றினைத் தமிழில் வைத்தும்
பணிவினை வாழ்வில் வைத்தும்
ஒற்றெழுத் தாய்இ ணைவீர்!
உணருவீர்! ஒன்று சேர்வீர்!

---

கண்டால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள்". என்று கூறிச் சோம்பித்திரிபவர்களை ஏளனம் செய்கிறார் வள்ளுவனார்.

"சிலர் பிச்சை எடுத்து, இரந்து உயிர் வாழ்ந்தால், இவ்வையகத்தைப் படைத்தவனே யாயினும், அவன் அலைந்து கெடுவானாக" என்று சாபமிடுகிறார். ஆனால் வறுமையிலும் இரந்து கேட்காதவனே உலகத்தில், பெரும் பெருமை அடைவான் என்றும் கூறி உழைப்பின் மேன்மையை இவ்வையக மக்கள் அறிந்திடத்தம் குறள் மூலம் குரல் கொடுக்கிறார், வான்புகழ் கொண்ட வள்ளல் பெருமகனார்.

# பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி

"நாகி"

`நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்' என்ற கவிதையை வடித்ததோடு நில்லாது, அதற்கு ஏற்பவே வாழ்ந்த, தனிப்பெரும் தேசியக் கவிஞராக விளங்கியவர் மகாகவி பாரதியார்.

திருவள்ளுவர், கம்பர், இளங்கோ போன்ற கவிஞர் பெருமக்கள் வழியில் வந்தவர் சுப்பிரமணிய பாரதியார். தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் புத்துயிர் அளித்தவர் ஆவர்.

பாரதியார் 1882ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகவாகத் தோன்றினார். குமரகுருபரர் தம்முடைய ஐந்தாவது வயதிலேயே அரும்பாக்கள் இயற்றினார். அதுபோன்றே பாரதியாரும் இளம் வயதிலேயே பெரும் கவிஞரானார். எட்டு, ஒன்பது வயதிலேயே, கொடுத்த அடிகளை வைத்து அற்புதமான முழுக் கவிதையை எழுதிப் பெரும் புலவர்களை இவர் வியப்படையச் செய்தபோது, நான் உடன் இருந்துள்ளேன்' என்கிறார் சோமசுந்தர பாரதியார். அதனால் மகிழ்வுற்ற புலவர்கள் இவருக்குக் கொடுத்ததுதான் பாரதி என்ற பட்டம்!



கவிஞர்கள் எவ்வளவோ பேர் இருக்கலாம். ஆனால் கவிதை உள்ளம் கொண்டவர்கள் மிகக்குறைவே. பாரதியார் உள்ளத்தால், உற்ற செயலால் மாபெரும் கவிஞராவார். இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம், ஏராளம்!

காந்தியடிகள் மீது பாரதியாருக்கு மட்டற்ற பக்தியுண்டு. `வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமைமிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா' என்று அவரைப் போற்றுகிறார். அத்தகைய மகாத்மா ஒரு சமயம் சென்னைக்கு வந்தார். பாரதியார் அவரிடம் சென்று ஒரு பொதுக்கூட்டத்தில் பேச வருமாறு வேண்டினார். நேரம் இல்லையே' என்று காந்தியடிகள் தயங்கியவாறு கூறினார். `அப்படியா? ஆகட்டும். நான் வேறு ஒருவரை வைத்துக் கூட்டம் நடத்திக் கொள்கிறேன்' என்று மிடுக்குடன் கூறிவிட்டு வேகமாக வெளியேறிவிட்டார். அசந்துவிட்டார் காந்தி மகாத்மா. உடன் இருந்த இராஜாஜியிடம் கூறினார், `இவர் பெரிய மனிதர். இவரால் நாடு நலம் பெறும்' என்று.

துன்பப்படுவோர் துயரம் கண்டு சகிக்க மாட்டார். தம்முடைய

உடைகளை இல்லாதோருக்குக் கொடுத்துவிட்டுச் செல்வார். ஒரு முறை அவருடைய மனைவியார் தம்முடைய ஆடையை அவிழ்த்து வைத்துவிட்டுக் குளித்துக் கொண்டு இருந்தார். அச்சமயம் ஒரு வறிய பெண் வந்து உடை கேட்கவே அதனை எடுத்துக் கொடுத்து விட்டார். அவருடைய இல்லத்தரசியார், இருந்த ஒரே துணியையும் இழந்துவிட்டுத் துன்பப் பட்ட துயரமான நிகழ்ச்சியைப் பாரதியின் நண்பர் உருக்கமாகக் கூறினார்.

யானைக்குப் பழம் கொடுக்கப் போய் மிதியுண்டு பல நாட்கள் படுத்திருந்தார். `பத்து நாட்கள் பட்டினி கிடந்தபோது பத்து ரூபாய் கிடைத்தாலும், அப்போது இரப்பாரைக் கண்டால் தொகையை அப்படியே கொடுத்துவிட்டுப் பழைய பட்டினி விரதத்தைத் தொடருவார்', என்கிறார் அவருடன் நெருங்கிப் பழகிய சோமசுந்தர பாரதியார்.

"ஆங்கில ஆட்சியில் இருப்பின் பாரதியார் கைது செய்யப்படுவார்" என்று நண்பர்களுக்குத் தெரிந்துவிட்டது. பெரிதும் முயன்று சிறு தொகை சேர்த்து ரயில் சீட்டு வாங்கி அவரை ரயிலில் புதுவைக்கு அனுப்பினார்கள். கடலூரில் ரயில் நின்றது. அங்கு ஒரு காக்கையைக் கவிஞர் பார்த்துவிட்டார். கவிதை பிறந்தது.` காக்கைச் சிறகினிலே -நந்தலாலா -நின் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா' எனப் பாடிக்கொண்டே ரயிலைவிட்டு இறங்கிக் காக்கையைத் தொடர்ந்தார். ரயில் சென்று விட்டது. கைது செய்யப்பட்டார்!

`தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா -நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா' என்று பாடும் அளவிற்குப் புகை நடுவே தீ இருப்பதைப் புவியினில் கண்டோம் -நன்னெஞ்சே, பகை நடுவே அன்புருவாகிய பரமன் வாழ்கின்றான்', கொல்லவரும் புலி தன்னையும் அன்போடு சிந்தையில் போற்றிடுவாய், அன்னை பராசக்தி அவ்வுருவாகினாள், அவளைக் கும்பிடுவாய்' என்று பாடும் அளவிற்குப் பக்குவம் பெற்ற கவிஞர் பாரதியார்.`காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம், நோக்கும் திசை எல்லாம் நாமன்றி வேறில்லை, நோக்க நோக்கக் களியாட்டம்' எனப்பாடி மனித இனத்திடம் மட்டுமல்ல, காக்கை, குருவி, கடல், மலை, திசை அனைத்திலும் ஆன்மநேயம் காண்கிறார்.

விரும்பும் இறைவனைப் பல பாவங்களாக வழிபடுதல் என்பது பக்தியின் முதிர்ந்த நிலையாகும். ஆண்டாள், மீரா போன்ற பக்தைகள் கண்ணனைக் கணவனாக வழிபட்டார்கள். கோபிகள் கதை நாடறிந்தது. இராமகிருஷ்ணருக்கு நாயகி அனுபவம் காண ஆசை வந்துவிட்டது. சேலையைத் தரித்துக்கொண்டு இராதை என்ற பாவத்தில் கண்ணனை வழிபட்டார். திருக்கோவையாரையும், இராமலிங்கரின் திருவருட்பாவையும் இத்துறையில் நாம் அறிவோம். கிருத்துவ மத ஆச்சாரியார்கள் கூட அடியார் இனத்தை நாயகியாக, ஏசுநாதரை நாயகனாகப் பாவித்து எழுதி உள்ளார்கள். இத்தகையோர் வழியில் வந்த பாரதியார் கண்ணனைத் தாயாக, தந்தையாக, காதலனாக, காதலியாக, நாயகனாக, நாயகியாகப் பாவித்துப் பாடியுள்ளது தனித்தன்மையானது. அழகுக்கு அழகு கூட்டுவது!

இறைவனை உண்மையின் உருவாகக் கண்டார் -`உண்மையின் பேர் தெய்வம் என்போம் -அன்றி ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்' என்பார்.

இடம் பெரிதுண்டு கண்டீர் - இதில் ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்! பயிற்றி உழுதுண்டு வாழ்வீர், பிறன் பங்கைத் திருடுதல் வேண்டாம், உடன் பிறந்தவரைப்போல -இவ்வுலக மக்களெல்லாம்' என்று உலகையே ஒன்றாகக் காண்கிறார்.

`மலை அருவியைப் போல நேர்மையுடையதாயும், கடல் போலவும், மாலையில் காணும் மலையின் உச்சியைப் போலவும் ஆழமும், அற்புதமும் உடைய பாடல்கள்' என்று கே. சீனிவாச ஐயங்காரால் போற்றப்பட்ட அவருடைய நாட்டுப்பாடல்கள் அக்காலத்தில் பல ஆயிரம் மக்களைத் தட்டி எழுப்பி அவர்கள் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபடக் காரணமாக அமைந்தன. அன்று தெருவெங்கும், மூலை முடுக்குகளிலெங்கும் பாரதியின் பாடல்கள்தாம். அவைகளைக் கேட்ட கோழைகள் வீரர்களானார்கள். வீறு கொண்டு விடுதலைப் போரில் குதித்துத் தாய்த்திருநாட்டின் அடிமைத் தளையை அறுத்து எறிந்தார்கள்.

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவும் நாடிடும் நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம் பெரும் நாடே
பாடுவோம் இஃதை எமக்கிலை ஈடே`

என்ற தேசிய கீதம் முழங்காத மனிதனே அன்று இல்லை தமிழ் மண்ணில்!

பாஞ்சாலி சபதத்தில் நாட்டைப் பற்றிப் பாடுவார்-

நீல முடி தரித்த பலமலை சேர் நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர் காவும், சோலைகளும் குலவு நாடு
ஞாலமெல்லாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நஞ்சையும், புஞ்சையும் நலமிக்கோங்கப்
பாலாடையும், நறு நெய்யும், தேனும் உண்டு
பண்ணவர் போல் மக்கள் எல்லாம் பயிலும் நாடு'

உலகிலேயே இதற்கு இணையாக நாட்டுப்பாடல் இல்லை என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என்று பாடிய பாரதியார் நாட்டு விடுதலையைப் பற்றியும், சமதர்ம சமுதாயத்தைப் பற்றியும் ஏராளமாகப் பாடியுள்ளார்.

மா முனிவர் தோன்றி மனமுயர்ந்த நாட்டினிலே
காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே!
பொன்னு மணியுமிகப் பொங்கிநின்ற
விந்நாட்டினிலே
அன்னமின்றி நாளும்அழிவார்களெத்தனைபேர்?

என்று வேதனைப்படுகிறார். அதனால்தான் முரசு கொட்டுகிறார்.

அன்பென்று கொட்டு முரசே -மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும்பெருகும் -இங்கு,
யாவரும் ஒன்றென்று கொண்டால்!

பெரியவர்களுக்கு மட்டுமல்ல, பாப்பாவுக்கும் பாடுகிறார்.

`உயிர்களிடத்தில் அன்பு வேணும் -தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் -இது
வாழும் முறைமையடி பாப்பா!

சாத்திரங்களையும் சாட, பாரதியார் தவறவில்லை.

`சூத்திரனுக்கு ஒரு நீதி -த ண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் -அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்!

ஆம்,

நந்தனைப்போல் ஒரு பார்ப்பான் -இந்த
நாட்டினில் இல்லை-என்கிறார்!

யார் மேலோர்?

`வையகம் காப்பவரேனும் -சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்
பொய்யகலத் தொழில் செய்தே -பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்!

தெய்வம் எது?

சாவும் நோவும் சிவனடா
சண்டையும் வாளும் சிவனடா
பாவியும், ஏழையும், பாம்பும், பசுவும்
பண்ணும் தானமும் தெய்வமடா!

இதுதான் மேலான அத்வைதம் ஆகும்.

அனுமன் கடல் தாண்டினான், சீதை நெருப்பில் பிறந்தாள், வடக்கு தாழ்ந்ததனால் தெற்கில் வந்து சமன் செய்த அகத்தியன் கதை, நதியில் மூழ்கிப் போய் நாகர் உலகப் பாம்பின் மகளை பீமன் மணந்தது முதலிய அத்தனையும் -கற்பனை, கற்பனை என்று இருமுறை அடித்துக் கூறுகிறார் நம் முற்போக்குக் கவிஞர்கோ.

அவருடைய பாஞ்சாலி சபதம் மாபெரும் காவியம் மட்டுமல்ல. அது ஒரு புரட்சிகரமான படைப்பாகும். பல கவிஞர்கள் பாரதத்தைப் பாடியுள்ளார்கள். அதே கதையைத்தான் பாரதியும் பாடியுள்ளார். ஆனால் தம்முடைய முற்போக்குக் கருத்துக்களை புகுத்தவே அந்தக் காவியத்தைப் பாரதி எடுத்துக் கொண்டார்.

தருமன் நாட்டைச் சூதில் பணயமாக வைத்து இழந்தான். பார்த்தார் பாரதி, வந்துவிட்டது வெஞ்சினம். தருமனைச் சாடுகிறார்.

`கோயில் பூசை செய்வோர் -சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயிற் காத்து நிற்போன் -வீட்டை
வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான நீதி
அவையுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் -சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்.

தருமனை மட்டுமா, அத்தினாபுரம் மக்களையும் விட்டாரா?

பாஞ்சாலியைத் துச்சாதனன கௌரவர்கள் சபைக்கு இழுத்து வருகிறான். தெருவில் அதனைப் பார்த்த மக்கள் வேதனைப்பட்டார்கள். ஆனால் பாரதி வேதனைப்படவில்லை. கோபம் வெடித்தது. மக்களைப் பார்த்துக் கூறுகிறார்.

வீரமிலா நாய்கள், விலங்காம்இளவரசன்
தன்னை மிதித்துத் தரதலத்திற் போக்கியே
பொன்னையவளந்தப்புரத்தி னிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென்று நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

அநீதியைக் கண்டு எதிர்த்துப் போரிடாமல் ஐயோ பாவம் என்று ஒதுங்கும் மக்களை வீரமிலா நாய்கள். நெட்டை மரங்கள் என்று சபிக்கிறார்.

`வேள்விப் பொருளினையே -புலை நாயின் முன்
மென்றிட வைப்பவர் போல்
நீள்விட்ட பொன் மாளிகை -கட்டிக் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்
ஆள்விற்றுப் பொன் வாங்கியே -செய்த
பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்

தருமன் பாஞ்சாலியைச் சூதில் பணயமாக வைத்துத் தோற்றுவிட்டான். பீமனுக்கு வந்துவிட்டது கோபம்!

இது பொறுப்பதில்லை -தம்பி!
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் -அண்ணன்
கையை எரித்திடுவோம்!

இது எந்தப் பாரதத்திலும் இல்லாத புதிய கருத்தாகும். அநீதியை எதிர்க்க வேண்டும் என்ற புலவனின் வெறி கதையின் கட்டுக்கோப்பையும் தாண்டிவிட்டது. எனவேதான், அவரால் கொடுமையை எதிர்த்து நில், குன்றென நிமிர்ந்து நில், ஏறுபோல் நட, சோதிடந்தனையிகழ், பெரிதினும் பெரிது கேள், சாவதற்கஞ்சேல் என்று புதிய ஆத்திசூடி ஆக்க முடிந்தது.

காலா! உனை சிறு புல்லென மதிக்கிறேன்
-என்றன்
காலருகே வாடா, சற்றே உனை மிதிக்கிறேன்'

எனக் காலனுக்குச் சவால்விட முடிந்தது. நோய்வாயில் விழுவதற்கு முதல்நாள் கடைசியாகச் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் பாடினார்.

இனியொரு விதி செய்வோம் -அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக்குணவிலை யெனில்
சகத்தினை யழித்திடுவோம்
வாழ்க பாரத பெருஞ் சமுதாயம்'

1921ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் முடிசார்ந்த மன்னரும், மற்றுமுளோரும் முடிவில் எய்தும் பிடி சாம்பல் நிலையை எய்திவிட்டார்.

அன்னங்கள் பொற்கமலத் தடத்திலூர
அளி முரலக்கிளி மதலையரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூரக் குயில்கள் பாடும்' என்று பாஞ்சாலி சபதத்தில் கற்பனையே வடித்தெடுத்த, உண்மையில் கேட்போர்`கன்னங்கள் அமுதூறும்' தமதின்னிசைத் தீம்பாக்களால் தமிழையே ஆண்ட கவிஞர்கோ போய்விட்டார்!

அவன் இறந்துவிட்டான், எனினும் தன்னுடைய வைராக்கியமதனால் அவன் இன்னும் நம்முடன் உரையாடி வாழ்கிறான்! என்று விவிலியம் (BIBLE) கூறுகிறது. அதுபோல இன்னும் நம்முடன் வாழ்கிறார் பாரதி!'

பாரதியாரின் ஜீவன் போய்விட்டது. அவருடைய ஜீவனத்திற்கு ஆதாராமாகவிருந்த பாரதமாதாவின் ஜீவசக்தி என்றென்றும் அழியாதது. தமிழ்நாடு உள்ளளவும், தமிழ் நாட்டில் ஒரு மனிதனோ அல்லது ஒரு சிறு குழந்தையோ தமிழ் பேசிக் கொண்டிருக்கும் அளவும் பாரதியின் மூலமாக நமக்குக் கிடைத்த ஜீவசக்தி நிலைத்திருக்கும் என்று என் இருதயம் சொல்லுகிறது' என்று எழுதியுள்ளார் பாரதியின் மனைவியார் செல்லம்மா அவர்கள்.

`என் தாய்த் திரு நாட்டைப்புகழும் இத்தகைய பாடல்களைப் பாடி மகிழுமாறு யான் இந்த நாட்டினிலே கோடி கோடி பிறப்புப் பிறக்க வேண்டுமென்று விரும்புகிறேன். வாய் உள்ள மக்களெல்லாம் பாரதியின் பாடலைப் பாடும்படி செய்யவேண்டும். இவ்விருப்பம் நிறைவேறுமாறு, பாரதியும், பரமசிவனும் திருவருள் புரிக என்பது எங்கள்பிரார்த்தனை, என்று முன்னுரை எழுதுகிறார் பாரதி பாடல் தொகுப்பை வெளியிட்ட பரலி. சு. நெல்லையப்பர்.

`பாரதியாரின் பாடல்களை நால்வரின் பாடல்களைப் போல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாடும்படி செய்வித்தல், எப்போதும் நல்ல பாடல்களையே போற்றும் தமிழ் நாட்டின் கடமையாகும்'என்று கூறி, பாரதியாருடன் வாழ்ந்து, அவருடன் தேசப்பணியில் ஒன்றுபட்டு உழைத்த வி.சர்க்கரைச் செட்டியாரின் வேண்டுகோளை நிறைவேற்றுவது மூலம் பாரதியாருக்கு அஞ்சலி செய்வோமாக!



# நாட்குறிப்பு தந்த நாயகர்

புரட்சிப் பாவலர் தி.தேவிதாசன், புதுவை

**புதுவைப் புகழ்மணிகள்**

இருபதாம் நூற்றாண்டில் புதுச்சேரியின் பெருமை உலகெங்கும் பரவியதற்குக் காரணமாயிருந்தவர் இருவர்; ஒருவர் மகாகவி பாரதியார். இன்னொருவர் அரவிந்த அடிகள்.

**பழைய வரலாறு**

இப் புதுவை மண்ணுக்கு மிகப் பழைய வரலாற்றுச் சிறப்பும் உண்டு. அதாவது. "புதுக்கை", என்று சொல்லப்படும் மிகப் பழங்காலத்துத் துறைமுகப்பட்டினம் ஒன்று, இந்தப் புதுச்சேரிப் பகுதியில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கி வந்துள்ளது. அந்தப் புதுக்கைக் கடற்கரை நகருக்குக் கிரேக்க, உரோமானியக் கப்பல்கள் அவ்வப்போது வந்து செல்வது வழக்கம். இதனை, அரிக்க மேட்டு அகழ்வாராய்ச்சியினாலும் அறிகிறோம். இந்த அரிக்கமேடு என்னும் அருகன் மேடு அரியாங்குப்பத்தை அடுத்த வீராம்பட்டினம் கடற்கரைப் பகுதியில் உள்ளது. இந்த ஆய்வை நடத்தியவர் பிரஞ்சு ஆராய்ச்சியாளர் திரு துயிப்ரெய் (*Mr.Dubreil)*) என்பவர் ஆவார்.



இருப்பினும், உலகத்தார்க்கு நம் பழம் பெருமையெல்லாம் இன்னமும் தெரியாமலேயே இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் நாமே! வரலாறு எழுதும் வழக்கம் நம்மிடமில்லை. இதனால் எத்தனையோ உண்மைகள் வெளிவராமல் ஆழப் புதைந்து விட்டன!

**வரலாற்று நாயகர் திரு ஆனந்தரங்கப்பிள்ளை**

இந்த வழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வந்தவர், புதுவை திரு. ஆனந்தரங்கப் பிள்ளையாவார். இவர் எழுதி வைத்த நாட்குறிப்பு, பிரஞ்சிந்திய வரலாற்றுக்கும் ஆங்கில இந்திய-வரலாற்றுக்கும் பெருந்துணையாக உள்ளது.

வரலாறு படைக்கத் தவறிய தமிழர்களுக்கும் வரலாற்றுப் பாதையை வகுத்துக் காட்டிய செம்மல் திரு. ஆனந்தரங்கராவார். எனவே, இவரை, கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிலேயே புதுவைக்குப் புகழ் சேர்த்த பெரியார் எனலாம். திரு. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பால் அன்றைய ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவிற்குள் எப்படிப் பரவிற்று என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

தொழில், வாணிகம், அரசியல் முதலியனவும் நமக்கு ஒருவாறு புலனாகின்றன. சிறப்பாக, நம் தமிழகத்துச் சூழ்நிலைகள், பிரெஞ்சு ஆங்கில ஆதிக்கங்களின் போக்கு முதலியன படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

## புதுவை முதலமைச்சர்

ஆனந்தரங்கப்பிள்ளை திவானாக நியமனம் பெற்றபின் நாட்டு நடப்புகளில் மிக்க கவனம் செலுத்தினார். மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் நல்லுறவையும், நன்மையையும் ஏற்படுத்தினார். இதனால், மக்கள் யாவரும் அவரைத் தங்கள் தலைவராகக் கருதி வந்தார்கள். பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கூட்டுறவுச் சங்கத்தாரும் அவரிடத்தில் தனி மதிப்பு வைத்திருந்தனர். அவருக்கெனச் சில உரிமைகளையும் வழங்கினர். இசை முழக்கத்தோடு பல்லக்கில் போகவும் தங்கப் பிடி போட்ட கைத்தடி வைத்திருக்கவும் மிதி அடியோடு ஆளுநர் மாளிகைக்குச் செல்லவும் அவர் உரிமை பெற்றிருந்தார். தென்னாட்டுச் சிற்றரசர்களும் ஆனந்தரங்கரைப் பாராட்டினார்கள். முசபர்சங் அவருக்கு "மன்சு பேதார்" பட்டம் வழங்கினார். பிள்ளை அவர்கள் நாள்தோறும் ஊர்ப்பொது மன்றத்திற்குச் சென்று அங்கு வழக்குகளைத் தீர விசாரித்துத் தீர்ப்பளித்து வந்தார். இதனால், அவர் பெரிதும் பாராட்டப் பெற்றார். மேலும் அவர் நம்பிக்கை உள்ள பல நன்மக்களை ஊர்கள் தோறும் அனுப்பி, அவர்கள் வாயிலாகச் செய்திகளை அவ்வப்போது அறிந்து வந்தார். இதனால், அக்காலத்தில் புதுச்சேரியின் ஆளுநராய் இருந்த துய்பளேக்ஸ் என்ற பிரெஞ்சுக்காரர் பிள்ளையவர்களின் உதவியைப் பெரிதும் தேடுவாராயினார். இதனால், ஆனந்தரங்கப்பிள்ளை அண்டை நாட்டு விவகாரங்களிலும் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. சுருங்கச் சொன்னால் புதுச்சேரியின் "முதலமைச்சர்" என்று போற்றத்தக்க அளவில் ஆனந்தரங்கர் விளங்கினார்.

## கப்பலோட்டிய தமிழன்

பிரஞ்சுக்காரர்கள் அரசியல் வெற்றிகளுக்குப் பிள்ளையவர்களே காரணமாக இருந்தார்.

ஆனந்தரங்கப்பிள்ளை பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கூட்டுறவுச் சங்கத்தாருக்குச் செய்த உதவிகளுள் சிறந்தது அவர் தம் வாணிபத்தைப் பெருகச் செய்ததேயாகும். நெசவுத் தொழிலுக்கு ஆதரவு தந்து, அத்தொழிலைப் புதுச்சேரிப் பிரதேசங்களில் வளரச் செய்து, அயலூர்களுக்கு நல்ல துணிகளை ஏராளமாக ஏற்றுமதி செய்து வந்தார். நெசவுச் சாலைகளோடு சாயச் சாலைகளும், அச்சுச் சாலைகளும் அவர் அமைத்து, தாமே எல்லாவற்றையும் நேர்முகமாகப் பார்வையிட்டு வந்ததே அத்தொழில் வளம் பெறுவதற்குக் காரணமாயிற்று. துணிகள் தரை மார்க்கமாகவும், கடல் வழியாகவும் பற்பல ஊர்களுக்கும் அனுப்பப்பட்டன. தம் வர்த்தகத்திற்கெனவே `ஆனந்தப்புரவி' என்ற பெயருள்ள ஒரு கப்பலை அவர் தமக்குச் சொந்தமாக வைத்திருந்தார். எனவே, இவரைப் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே கப்பலோட்டிய தமிழன் என்கிறோம்.

பிள்ளையின் முயற்சியால் நாடெங்கிலுமிருந்து தொழில் வினைஞர்கள் புதுச்சேரிக்கு வந்து குடியேறினர். புதுச்சேரி ஒரு நகரமாக வளர்ச்சியடைந்தது.

## புலமை நலம்

ஆனந்தரங்கப்பிள்ளை கல்வி கேள்விகளில் சிறந்தவர். அவருக்குப் பல மொழிகள் தெரிந்திருந்தன. என்றாலும், தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் அவருக்குப் பெரும் பற்று உண்டு. தமிழ் நூல்களை ஆராய்வதிலும் தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதிலும் அவர் கொண்ட ஊக்கம் மிகவும் பாராட்டத்தக்கது. திருக்குறளை முற்றும் படித்து, அவர் மனப்பாடஞ் செய்திருந்தார் என்று கூறப்படுகிறது. ஒரு கால், அவர் "சித்துக்காட்டுச் சின்னத் தம்பி முதலியார் என்ற புலவரைச் சந்தித்து, திருக்குறள் பற்றி உரையாடினார் " என்று கூறப்படுகிறது.

## புலவர் போற்றும் புரவலர்

அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் பலர். எனினும் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் தியாகராயப்புலவர், மதுரகவிராயர், சவ்வாதுப் புலவர் முதலியவர்கள் ஆவார்கள். அவர் ஒரு புலவருக்குத் தட்டு நிறையத் தங்கக் காசுகள் கொடுத்திருக்கிறார். இச்செய்தி மகிழத்தக்கதாக உள்ளது! ஆனந்தரங்கப் பிள்ளை பேரில், இலக்கண விளக்கப் பரம்பரை சதாசிவ தேசிகர் `ஆனந்தரங்கக் கோவை' என்ற பெயருடைய ஒரு கோவை நூல் யாத்துள்ளார். கஸ்தூரி ரங்கய்யர் என்ற ஆந்திரப் புலவர் ஒருவர் ஆனந்தரங்க ராட்சந்தமு என்ற தெலுங்கு யாப்பு நூல் ஒன்று ஆக்கியுள்ளார். சீனிவாசக் கவி என்ற பெயருடைய மற்றொரு புலவர் `ஆனந்த ரங்க விஜயம்' என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார்.

### அறம் வளர்த்த அண்ணல்

ஆனந்தரங்கப் பிள்ளை பெரிய தரும சீலர். பலவிதமான பொதுத் தருமங்கள் அவரால் செய்யப்பட்டிருக்கின்றன. பல சத்திரம், சாவடிகளை அவர் கட்டியுள்ளார்; சில கோவில்கள் எழுப்பியுள்ளார். பெருங்கோவில்கள் சிலவற்றிற்கு நிவந்தங்கள் செய்துள்ளார்.

இவர், நாட்டில் நடைபெற்ற எல்லாச் செய்திகளையும் முடிந்த வரையில் தவறாமல் தம் நாட்குறிப்பேட்டில் ஏற்றிவிட்டார்.

### நாட்குறிப்பு

ஆயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்றாம் ஆண்டு, டிசம்பர் மாதம் சனிக்கிழமை எழுதப்பட்ட குறிப்பு:

"துரை அவர்கள் சொன்னது என்னவென்றால், இன்று முதல் மொறட்டாண்டித் தண்ணீர் பந்தலிலே வணிகர், பெரிய மனிதர், "கும்பனி" அலுவலர் முதலிய யாவரும் இங்கு வந்து வீடுகட்டிக் கொள்ளலாம். அத்துடன் இனிமேல் தண்ணீர்ப் பந்தல் என்ற பெயரைச் சொல்லக் கூடாது; மாறாக "துயிப்ளேக்ஸ் பேட்டை" என்றே அழைக்க வேண்டும். தவறினால் அபராதம் விதிக்கப்படும்" என்ற துரையின் கட்டளை அந்தக் குறிப்பில் உள்ளது.

ஆனால், மொறட்டாண்டித் தண்ணீர்ப் பந்தல் துயிப்ளேக்ஸ் பேட்டை என்ற பெயரில் பின்னர் வழங்கி வந்ததாகத் தெரியவில்லை. அப்படியொரு புதிய ஊர் ஏற்பட்டிராது என்றும் கருத வேண்டியிருக்கிறது. ஆளுநர் துயிப்ளேக்ஸின் கட்டளை நிறைவேறாமல் நின்று விட்டிருக்கலாம்.

### பாதிரியார் கடிந்து கொண்டார்

1745-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் ஆசாரப்ப முதலியார் மனைவி எல்லா விதமான ஆடை, ஆபரணங்களையும் அணிந்து கொண்டு வாசனை பூசிக்கொண்டு மாதாக் கோயிலுக்குச் சென்றார். பூசை சொன்ன பாதிரியார் அந்த அம்மையாரைப் பார்த்து மிகவும் கோபப்பட்டார். "இப்படியா கோயிலுக்கு வருவது? உடம்பெல்லாம் வெளியில் தெரியும்படி உடுத்துவது? நீ பூசை செய்தது போதும் போ! "என்றார். இதிலிருந்து பிள்ளை அவர்கள் காலத்தில் மாதாக் கோயிலுக்குச் சென்ற பெண்மணிகளின் செல்வச் செருக்கும், ஆடை அணிகளில் அவர்கள் காட்டிய ஆர்வமும் நன்கு விளங்குகிறது.

### பரமானந்தருக்குச் சிறை

1743-ஆம் ஆண்டு சூன் மாதம் 15-ஆம் நாள் நடந்த அதிசயம்:

பரமானந்தன் என்பவன் சுண்ணாம்புடன் மருந்து கலந்து வெற்றிலையில் தடவிக் கொடுத்தும், கூலிக்கு வேலை செய்யச் சொல்லியும், புல்லுக்கும், விறகுக்கும், விலை தருவதாகக் கூறியும் பலரை ஏமாற்றி மொட்டை அடித்து விலங்கிட்டு அடைத்துவைத்தான். பின், இரவோடு இரவாக நூற்றுக் கணக்கான பேர்களை அடிமைகளாகக் கப்பலேற்றி அனுப்பி விட்டான். இப்படிப் பல முறை நடந்துள்ளது. இதை அறிந்த நகரப் பெரியவர்கள் துரையிடம் முறையிட்டனர். பின் விசாரணை செய்து பரமானந்தனுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பிள்ளை அவர்களுக்குச் சோதிடத்தில் நம்பிக்கை இருந்தது. இதனை அவர் எழுதி வைத்திருந்த சாதகக் குறிப்பிலிருந்து அறியமுடிகிறது. இவ்வாறு எண்ணற்ற செய்திகளை ஆனந்தரங்கரின் நாட்குறிப்பிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

### மறைவு

1709-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ஆம் நாள் சென்னைப் பெரம்பூரில் திருவேங்கடம் பிள்ளையின் செல்வனாகப் பிறந்த திரு. ஆனந்தரங்கப் பிள்ளை, 1761-ஆம் ஆண்டு சனவரி மாதம் 11-ஆம் நாள் புதுச்சேரியில் இயற்கை எய்தினார்.



# கருநாடக மாநிலத்தில் தமிழர்கள்

பேராசிரியர் தண்.கி.வேங்கடாசலம், பெங்களூர்

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு அம் மொழி பேசும் அடிப்படையில் `தமிழர்' என்ற இனம் மக்களிடையே தனித்து நிலவுவதாயிற்று. அவ்வாறு தமிழ் மொழி பேசி அம்மொழி வழியாகப் பிரிந்த இனம் தன் சூழலுக்கேற்பச் சிந்தனையாலும் கலையாலும் பண்பாட்டாலும் மற்ற மொழி பேசும் இனங்களிலிருந்து தனித்தன்மை பெற்று வளரத் தலைப்பட்டது.

`வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து' என்பது

தொல்காப்பியம் குறிக்கும் தமிழகம். இத் தமிழகம் பல்வேறு காலங்களில் அவ்வக் கால நிலைக்கேற்பப் பரந்தும் சுருங்கியும் மாற்றம் அடைந்து வந்துள்ளது. தமிழகத்தை ஒட்டியுள்ள பிறமொழி வழங்கும் பகுதிகளிலும் தொலை தூர நாடுகளிலும் தமிழினம் சென்று வாழத் தொடங்கியது. வாணிகம், தொழில், கல்வி, அரசியல் என்று பல்வேறு காரணங்கள் இதற்குண்டு.



கருநாடகம் என்பது கன்னட மொழி பேசும் மக்கள் வாழும் மாநிலமாகும். இக் கன்னட மாநிலம் கி.பி.1956 க்கு முன்னர் இருந்த நிலை வேறு; இப்பொழுதுள்ள நிலை வேறு. முன்பு அது மைசூர் மன்னர் ஆட்சிக்குட்பட்ட `மைசூர் நாடு' என்ற அளவில்தான் இருந்தது. மொழி வாரி மாநில அமைப்பு நடை முறைக்கு வந்ததும் `மைசூர் நாடு' விரிவு பெற்றுக் கருநாடகம் என்ற பெயருடன் விளங்குகிறது. இக்கருநாடக மாநிலத்தில் அண்டை மாநில மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி முதலிய மொழிகளைத் தத்தம் தாய்மொழிகளாகக் கொண்டு அவ்வம் மொழிகளைப் பேசும் மக்களும் விரவியுள்ளனர். மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப் பட்ட பின், ஒவ்வொரு மாநிலத்திலும் அம் மாநில மொழியே ஆட்சிமொழி ஆகிவிட்டது. கருநாடகத்தில் கன்னடமும், தமிழகத்தில் தமிழும், ஆந்திரத்தில் தெலுங்கும், கேரளத்தில் மலையாளமும் மகாராட்டிரத்தில் மராத்தியும் ஆட்சி மொழிகளாக உள்ளன. பிற மாநிலங்களிலும் அவ்வாறே அவ்வம் மாநில மொழிகள் ஆட்சி மொழிகளாக உள்ளன. ஆனால் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலமொழியல்லாது மற்ற மொழிகள் பேசும் மக்களும் இருக்கின்றனர். அவர்கள் அம்மாநிலத்தின் மொழிச் சிறுபான்மையர் எனப்படுவர்.

கருநாடகத்தில் தமிழர்கள் மொழிச்சிறுபான்மையராக வாழ்ந்து

வருகின்றனர். கன்னடம் தவிர வேறு மொழிபேசுவோர் அனைவரும் மொழிச்சிறு பான்மையரே. மொழிச்சிறுபான்மையர் எனினும் கருநாடகத்தில் வாழும் தமிழர் தொகை சிறிதன்று; முப்பது லட்சத்திற்கும் மேற்பட்டதாகும். இந்த முப்பது லட்சம் தமிழர்களும் கருநாடகத்தின் மொத்த மக்கள் தொகையான ஐந்து கோடியில் அடங்குவர். இனிக் கருநாடகம் வாழ் தமிழர்களின் நிலையைச் சற்றுக் காண்போம்.

மற்ற மாநிலங்களில் அவ்வம் மாநில மொழி பேசாது மொழிச்சிறுபான்மையராய் வாழும் இயல்பிற்கும் கருநாடகத்தில் தமிழர் மொழிச் சிறுபான்மையராய் வாழும் இயல்பிற்கும் ஒரு பெரிய வேறுபாடுண்டு. மற்ற மாநிலங்களின் மொழிச் சிறுபான்மையரைப் போல் மாநிலம் முழுதும் பரவலாக இல்லாமல் கருநாடக மாநிலத்தில் தமிழ்ச் சிறுபான்மையர் குறிப்பிட்ட சிற்சில பகுதிகளில் செறிந்து அடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அப்பகுதிகள் கருநாடக மாநிலத்தில் அடங்கியிருப்பினும் அப்பகுதிகளின் அளவை நோக்கும் போது அங்கே தமிழர்கள் சிறுபான்மையராய் அல்லாமல் பெரும்பான்மை யராகவே உள்ளனர். கோலார்த் தங்க வயல், பெங்களூர், பத்ராவதி, மைசூர் இரியூர் ஹூப்ளி, சாமராஜநகர் முதலிய பகுதிகளில் தமிழர்கள் அவ்வாறு அடர்ந்துள்ளனர். அங்கெல்லாம் தமிழ்க் குடும்பங்கள் பல நெருங்கி வாழ்கின்றன. அதனால் அப்பகுதிகளில் தமிழ் மொழியும், கலையும் பண்பாடும் இன்னும் நிலைத்துள்ளன. மாநிலம் முழுவதும் பரந்துபட்டுப் பரவலாக வாழும் தமிழர்கள் காலப் போக்கில் தங்கள் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை மறந்து, கன்னடமொழி, கலை, பண்பாடு ஆகியவற்றுடன் தம்மை இணைத்துப் பிணைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இஃதொரு தவிர்க்க முடியாத மாற்றம்; இயற்கை மாற்றமும் ஆகும்.

ஆனால் தமிழர்கள் பெரும்பான்மையராக உள்ள பகுதிகளில் கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் மாநில மொழியான கன்னடமொழி, கலை, பண்பாடு ஆகியவைகளைப் போற்றிப் பின்பற்றினும் தங்கள் தமிழ்மொழி, கலை, பண்பாடுகளையும் மறவாமலும் கைவிடாமலும் பின்பற்றிப் போற்றிவருகின்றனர். அவைகளை அவர்கள் மறப்பதும் இயல்பன்று. வற்புறுத்தி மறக்கச் செய்தல் இயற்கைக்கு முரண் ஆகும். இதனைக் கருத்தில் நன்கு ஊன்றிக்கொள்ளல் நலம். தமிழர்கள் பெரும்பான்மையராக வாழும் பகுதிகளில் உள்ள திரையரங்குகள் தமிழ்த்திரைப் படங்களை மிகுதியாகத் திரையிடுவது தவறாகாது. அப்பகுதிகளில் தமிழ் நாடகங்களும், தமிழ் இசை நிகழ்ச்சிகளும், தமிழ்த்திருவிழாக்களும் அதிகமாக நடைபெறலாம். தமிழ்ப் பள்ளிகளும் கல்லூரிகளும் மிகுதியாக நடத்தப்பெறலாம். இந்நிலை கண்டுயாரும் வேற்றுமை பாராட்டலாகாது. கன்னட நாட்டில் கன்னட மொழி, கலை, பண்பாடுகளில் தோய்ந்து படிந்து பழகிப் போன தமிழர்களும் உளர். அவர்கள் மாநிலத்தால் கன்னடர்கள்; மொழி, கலை முதலியவற்றால் தமிழர்கள். அவர்களைக் காலஞ் சென்ற மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் அவர்கள் தமிழ்க்கன்னடர்' தமிழ்பேசும் கன்னடியர் என்று அழைப்பர். கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் தம் தாய்மொழியாகிய தமிழில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருப்பினும் அது குற்றம் ஆகாது. அதே போல், அவர்கள் கன்னடத்தைப் புறக் கணிப்பதும் சரியாகாது.

இன்றைய நிலை எவ்வாறுள்ளது? கன்னடத்தைத் தாய் மொழியாகக்கொண்ட கன்னடச் சகோதரர்கள் தமிழ்க் கன்னடர்களைத் தங்கள் மாநிலத்தவர் என்றும் சகோதரர்கள் என்றும் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் பயிலும் வாய்ப்பினைக் குறைக்கவும் தடுக்கவும் முற்படுகின்றனர். 'மெல்லத் தமிழ் இனிச்சாகும்' எனத் தமிழ் அழிய அடிகோலுகின்றனர். வேலை வாய்ப்பு முழுதும் கன்னடர்க்கே என உரிமை கொண்டாடித் தமிழ்க் கன்னடியராகிய சிறு பான்மையரை அடக்கி ஒடுக்க முயல்கின்றனர். தமிழ்க் கன்னடர்கள் கருநாடகத்தில் இரண்டாந்தரக் குடிமக்களாக வாழ வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது. தமிழ்க்கன்னடர்கள் தங்கள் பெயர்களை வேலை வாய்ப்புப் பதிவகத்தில் பதிவு செய்து கொள்வது கூட மறைமுகமாகத் தடுக்கப்படுகிறது. இந்த நிலையினைத் தமிழர் எங்ஙனம் ஏற்றுக்கொள்ள முடியும்? கருநாடக அரசு இதனை நடுநிலையோடு சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

எந்த மொழி பேசுபவராய் இருந்தாலும் கருநாடக மக்கள் அனைவருக்கும் எல்லாத்துறைகளிலும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். இன்றேல் இந்திய மண்ணிலேயே இந்திய மக்கள் புறக்கணிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிடும். நாட்டு ஒற்றுமையே நலிந்துவிடும். எனவே, தமிழர் மீது எழும் வேறுபாட்டுணர்வு வேருடன் களையப்பட வேண்டும். இதற்குக் கருநாடக அரசு எவ்விதத் தயக்கமும் இன்றி ஆவன செய்ய முன் வரவேண்டும். தமிழர்கள் பெரும்பான்மையாராக வாழ்ந்து வரும் கருநாடகப் பகுதிகளில் அவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழைக் கற்கவும் அத் தாய்மொழி

வழியாகவே கல்வி பெறவும் போதிய அளவு பள்ளிகளைக் கருநாடக அரசு நிறுவிப் பேண வேண்டும். தாய் மொழிப்படிப்புக்குக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் வாய்ப்பு வழங்கவேண்டும். தமிழ்க்கலை, பண்பாடுகட்கும் ஆதரவு நல்க வேண்டும். 'கோக்காக் குழு' 'சரோஜினி மகிஷி குழு' என்று குழுக்களை அமைப்பதும் அக்குழுக்களின் முடிவுகளை ஆராயாது நடை முறைப்படுத்துவதும் தவிர்க்கப் படவேண்டும். தமிழ்க் கன்னடர்கள் கருநாடகத்தில் அச்சம் ஏதும் இன்றி உரிமையுடன் வாழ வழி வகுக்க வேண்டும்.

கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் இன்று, நேற்று அங்குக் குடியேறியவர்கள் அல்லர். பன்னெடுங்காலமாகவே தமிழர்கள் கருநாடக மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் கருநாடக மாநில வளர்ச்சிக்கு ஆற்றிவந்துள்ள பணிகளையெல்லாம் மறந்து விடக்கூடாது; குறைத்து மதிப்பிடக்கூடாது. இன்று பெங்களூரில் வானளாவி நிற்கும் சட்டப் பெருமன்றமாகிய 'விதான் சௌதா' என்னும் மாளிகை தமிழரின் கைவண்ணம் என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. கோலாரத் தங்கவயலின் பொன் வளத்தை உருவாக்கியவர்கள் தமிழரே. கண்ணம்பாடி அணைக்கட்டிலும் அவர்களின் வியர்வை சிந்திய உழைப்பு அமைந்துள்ளது. சித்திரதுர்க்கா மாவட்டத்தில் இரியூர்ப்பகுதியில் உள்ள வாணி விலாச சாகரம் கட்டியவர்கள் தமிழர்கள். ஆரணிக்கட்டை என்னும் ஊரிலும் அதன் சுற்றுப்புற ஊர்களிலும் வாழும் தமிழர்களின் உழைப்பு வியக்கத்தக்கதாகும். அங்குள்ள காட்டுப் பகுதிகளையெல்லாம் அழகிய கரும்பு வயல்களாக மாற்றி வளங்கொழிக்கச் செய்த பெருமை தமிழர்க்குண்டு. அந்த உழைப்பில் தங்களைத் தியாகம் செய்து கொண்டவர்கள் எண்ணற்ற தமிழர்கள். அக்காலத்தில் கொடிய நோயான ப்ளேக்கு மற்றும் மலேரியாவிற்குப் பலியான தமிழர்கள் எவ்வளவோ? பாம்புக் கடிக்கும் மற்ற நச்சுத்தொல்லைக்கும் பலியானவர்கட்குக் கணக்கும் உண்டோ? சுருங்கக்கூறின், கருநாடகத்தின் ஏற்றத்திற்கும் தோற்றத்திற்கும், வளமைக்கும் செழுமைக்கும் தமிழர்கள் செய்த தியாகமும் அவர்கள் அளித்த உழைப்பும் கன்னடர்களின் தியாகத்திற்கும் உழைப்பிற்கும் எவ்வகையிலும் குறைந்ததாகா.

கருநாடக மாநிலத் தமிழர்களும் இன்று தங்கள் கடமையினை நன்குணர்ந்து செயல்பட வேண்டும் என்பதும் இங்குக் குறிப்பிடப்பட வேண்டும். அவர்கள் தங்கள் மொழி, கலை, பண்பாடுகளைக் கட்டிக்காப்பதோடு நில்லாமல் மாநில மொழியாகிய கன்னடத்தை நன்கு கற்றுக் கன்னட அறிவைப் பெருக்கிக் கொள்ள முயல வேண்டும். கன்னட மொழியில் எவ்வளவுக்கெவ்வளவு தேர்ச்சி பெறுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அது சிறப்பாகும். கன்னட அரசின் ஆதரவு ஒரு புறமிருக்க, அங்கு வாழும் தமிழர்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றி ஒருங்கிணைந்து நின்று தங்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு முதலியவைகளைப் பெருக்கிக் கொள்ள ஆவன செய்ய வேண்டும். அவ்வகையில் கல்விச்சாலைகளும் தொழிற்சாலைகளும் அமைக்க முன் வரவேண்டும். தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளத் தக்க முறையில் அரசுக்குக் குரல் கொடுக்க வேண்டும். தமிழர்கள் என்றால் ஏழைகள், கூலிகள், பிச்சைக்காரரர்கள் என்ற கருத்தினைப் பொய்யாக்கிக் காட்ட வேண்டும். தமிழர்கள் வறுமையிலும் செம்மையுடையவர்கள்; தன்மானத்தில் குறைந்தவர்கள் அல்லர் என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

கருநாடக மாநிலத்தில் நுழைவதற்குக் கடவுச்சீட்டும் ம் (*Passport*), தங்கி வாழ்வதற்கு வாச அநுமதியும் (*Visa*) பெற வேண்டும் எனக்கூறும் கன்னடர்களுக்கு, "நாம் அனைவரும் இந்திய மக்கள்" என்பதையும் "தேசிய ஒருமைப்பாடு மிகமிக இன்றியமையாதது" என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டும். தமிழர்கள் எங்கே சென்றாலும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாழ்வதை மதிக்க வேண்டும். தமிழர்கள் கருநாடகத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் மேலும் மேலும் ஆக்கம் தர வேண்டும். தமிழக அரசியலையே பேசிக்கொண்டு இராமல் தாம் வாழும் கருநாடக அரசியலில் ஈடுபாடு கொள்ள வேண்டும். பெரியார் டி.வி.குண்டப்பா, பி.எஸ்.கைலாசம், மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் போன்ற தமிழர்கள் தங்களைக் கன்னட நாட்டுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டு அந்நாட்டிற்கும் மொழிக்கும் மிகச் சிறந்த தொண்டு செய்து புகழ் பெற்றவர்கள். உலகப் பொதுமறை எனப்படும் தமிழ்த் திருக்குறளைப் பேராசிரியர் எல்.குண்டப்பா அவர்களும் நா.முனிசாமி அவர்களும் கன்னடத்தில் மொழி பெயர்த்துத் தந்துள்ளனர். பெரியபுராணம் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கன்னடப் பெரியார் சர்வக்ஞரின் வசனங்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இக்கட்டுரையாசிரியரும் 'கன்னட இலக்கிய வரலாறு' என்ற நூலையும், 'மௌன ஓலம்' என்ற புதினத்தையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இத்தகைய பணிகள் மேலும் மேலும் பெருக வேண்டும். அண்மையில் டி.வி. குண்டப்பா அவர்களின் கன்னட நூல் ஒன்றும் மேற்குறிப்பிட்ட முனிசாமி அவர்களால்

`மக்கு திம்மன் பிதற்றல்கள்' எனும் தலைப்பில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கருநாடக மாநிலத்தில் உள்ள தமிழ்ச்சங்கங்கள் ஆற்ற வேண்டிய பணிகளும் பல பெங்களூரில் உள்ள பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் பெரிதும் பாராட்டத்தக்கன. அதன் பணிகள் யாவும் இந்திய ஒருமைப் பாட்டுணர்வையும் தமிழ் கன்னட உறவையும் அடிப்படையாகக் கொண்டு தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உதவி வருவதை அனைவரும் போற்றிப் புகழ்கின்றனர். கருநாடகத்தில் வாழும் பிறமொழி மக்களுக்குக் கடந்த 30 ஆண்டுகளாகக் கன்னடம் கற்றுத்தரும் கன்னட வகுப்பினை அது இடையறாது நடத்தி வருகின்றது. இவ்வகுப்பில் கன்னடம் பயின்று பயன் பெற்றோர் பல்லாயிரக் கணக்கானவர்கள். இவ்வாறு கன்னடம் வளர்க்கும் தமிழ்ச்சங்கம் தமிழ் வளர்ச்சியினையும் மறவாது போற்றிவருகின்றது. தமிழ் அறியாதார் தமிழ் கற்றுக் கொள்ளத் தமிழ் மொழி வகுப்பையும் தமிழ் இலக்கிய அறிவைப் பெருக்கிக்கொள்ள இலக்கிய வகுப்பையும் நடத்தி வருகின்றது. இசை, நாடகம், யோகம், கராத்தே, தையல், பூவேலை, முதலிய கலைகளும் முறையாக வளர்க்கப்படுகின்றன. வைப்பு நிதிகள் வைத்து நிலையாகப் பல அரிய ஆய்வுச் சொற்பொழிவுகளை யும் தமிழ்ச்சங்கம் நடத்தி வருகின்றது. பயிற்று மொழி தமிழாகக் கொண்ட உயர்நிலைப் பள்ளிகள் போதுமான அளவு இங்கில்லை. தமிழ்ப்பிள்ளைகள் கன்னடம், ஆங்கிலம் ஆகியவற்றைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பதும் எளிதாக இல்லை. பணி மாற்றம் காரணமாகத் தமிழகத்திலிருந்து இங்கு வரும் குடும்பப் பிள்ளைகள் தங்கள் கல்வியைத் தொடர்வதற்கும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட உயர்நிலைப் பள்ளிகள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் காமராசர் பெயரால் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட உயர்நிலைப்பள்ளி ஒன்றினை நடத்தி வருகின்றது. பெருஞ் சுமையாக இருந்தாலும் தளராமல் பெருமுயற்சியுடன் இதனை நடத்தி வருவது பெருஞ்சிறப்பாகும். ஹூப்ளியிலுள்ள ஹூப்ளி தமிழ்ச் சங்கமும் இப்படியொரு பள்ளியினை நடத்தி வருகின்றது. இவ்வாறே கருநாடகத்தில் மற்ற இடங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களும் தங்கள் நிலையுணர்ந்து செயற்படவேண்டும், நற்பணியாற்ற வேண்டும். மேலும் மேலும் தமிழ்ச் சங்கங்கள் தோன்ற வேண்டும்.

கன்னடமும் தமிழும் கன்னடரும் தமிழரும் ஒருங்கிணைந்து கைகோத்து உள மகிழ்வுடன் வாழும் காலமே பொற்காலமாகும். அது விரைவில் வருவதாக!



# அண்ணன்மார்சாமி கதையில் உயிர்ப்பாக்கம்

ஆய்வாளர் ப.குழந்தைசாமி

உயர்திணை, அஃறிணை என்ற பகுப்பில், உயர்திணைக்குரிய பேசுதல், செய்தல் போன்ற தொழில்கள் உயிருள்ள, உயிரற்ற அஃறிணைப் பொருள்களின்மேல் ஏற்றிக் கூறுவது இலக்கிய உத்திகளுள் ஒன்றாகும். இவ்வுத்தி உயிர்ப்பு ஆக்கம் (ANIMATION) எனப்படும். இவ்வுத்தியை வ. செயதேவன் "உயிரற்ற பொருள், உயிருடைய தாவரங்கள் விலங்குகள் முதலிய அஃறிணைப் பகுப்பில் அடங்குவனவற்றிற்கு உயர்திணைத் தன்மையை வழங்கி அவையும் மனிதர்போல் எண்ணுதல், பேசுதல், செய்தல் முதலியன நிகழ்த்துமாறு அமைக்கும் உத்தி... இவ்வுத்தி வாயிலாகச் சுருக்கமும் செறிவும் விளைவிக்கப்படும்." என்று (அறிஞர்கள் பார்வையில் கலைஞர் ப.220) விளக்குகின்றார். இது அகப்பொருளில் 'காமம் மிக்க கழிபடர்கிளவி' என்னும் துறையாக அமைகின்றது.

சங்க இலக்கியங்களில் தனது துன்பநிலையை வெளிப்படுத்தப் பாத்திரங்கள் நிலவு முதலிய அஃறிணைப் பொருள்களைத் தூதுவிடும் நிகழ்ச்சி காட்டப்படுகின்றது. இதனினும் வளர்ந்த நிலையில் தூது என்ற ஓர் இலக்கியவகையில் தமிழ்மொழி முதலியன தூதுப் பொருள்களாக ஆக்கப்பட்டன. பெரியபுராணத்தில் இறைவன் தூது சென்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வுயிர்ப்பு ஆக்க உத்தி தொல்காப்பியர் காலத்திலிருந்து தொடர்ந்து வளர்ச்சிபெற்று வந்தமையால் அறிய முடிகின்றது.



கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டளவில் கொங்குநாட்டில் நடந்த அண்ணன்மார் வீரவரலாறு கதைப் பாடலாக வழங்கி வந்தது. இதைப் பிச்சன் என்பார் ஏட்டில் எழுதியதாக அந்நூல் அவையடக்கப்பாடலால் அறிய முடிகின்றது. இது கடவுள் வழிபாட்டு, வீரவரலாற்றுக் கதைப்பாடலாகும். இந்நாட்டுப்புறக் கதைப் பாடலில் காணலாகும் உயிர்ப்பு ஆக்கம் இங்குச் சுட்டப்படுகின்றது. அஃறிணைப் பொருள்கள் உயிர்ப்பு ஆக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் கடவுள், பூதம் முதலியனவும் இக்கதைப்பாடலில் உயிர்ப்பு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன.

**அஃறிணை உயிர்ப்பு ஆக்கம்**

அஃறிணைப் பொருள்களான பாம்பு, பன்றி, குதிரை, வேங்கை, யானை போன்றவை உயிர்ப்பு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன.

### பாம்பு

அண்ணன்மார்சாமி கதையில் இரண்டிடங்களில் பாம்பு உயர்திணையாக்கப் பெற்றுள்ளது. பெரிய காண்டியம்மன் வரலாற்றில் பாம்பு, பிள்ளைவரம் வேண்டித் தவம் செய்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தவம் செய்யும் பாம்புக்கு உமையவள் மகளாகப் பிறக்கின்றாள். அப்போது அந்த மகளையெடுத்து நாகம்,

*என் மைந்தன் கவலை தீர்க்கவந்த கண்ணே! நீ*
*என்பிள்ளைக் கவலை தீர்க்க வந்த புத்திரனே*
*வாருமம்மா!*

*(ப.77)*

என்றவாறு பாராட்டி மார்பில் அணைத்து மடியில் வைத்து, முத்தமிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இது இக்கதைப்பாடலில் தாமரை நாச்சியார் குழந்தைப்பேற்றுக்குத் தவம் செய்து, குழந்தைபெற்ற கதையமைப்புக்கு இணையாக அமைகின்றது. தவம் செய்தல், குழந்தையைக் கண்டு பூரிப்படைதல் போன்ற செய்கைகள் மனிதர்களுக்குரியன. இது பாம்புக்கு ஏற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் பின் கதையமைப்பை ஆற்றலுடையதாக்கவும், உணர்ச்சிப்பிழம்பாக்கவும் மேற்கொள்ளப்பட்ட உத்தியெனலாம்.

இரண்டாவதாக மூலக்கதையில் அண்ணன்மார் படுகளத்தைக் காணத் தங்கை அரற்றிவரும்போது அவளை யாரெனப் பார்த்துவரப் பெரிய காண்டியம்மன் பாம்பை அனுப்புகிறது. அப்பாம்பு தங்கை புலம்பலைப் பார்த்து அவள்மேல் இரக்கங்கொண்டு `பெண் பாவம் கொள்ளையிட்டால் பிழை தீர நாள் செல்லுமென்று இரங்கி' அவளுக்கு ஊறு செய்வதற்கு மாறாகப் படம் விரித்துக்குடை பிடிக்கின்றது. இந்நிகழ்ச்சியில் மனித மனப்பான்மை பாம்புக்கு ஏற்றிக் கூறப்பட்டுப் பாம்பு பெண்பாவம் எண்ணி, இரங்கிக் குடைபிடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. கதைப் பொருளைச் செறிவாக்கவும், பாத்திரத்தின் மீதான இரக்க உணர்வை மிகுதிப்படுத்துவதற்காகவும், பாத்திரத்தைத் தெய்வத் தன்மையுடையதாகக் காட்டுவதற்காகவும் இவ்வுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது (ப.327). இது போன்றே வேங்கை, யானை முதலியன தங்கைக்கு ஊறு செய்யாமல், இரங்கித் துணை செய்ததாக உயிர்ப்பு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. (பக்.325, 327).

### பன்றி

பன்றி வளர்த்தால் குழந்தைப்பேறு கிடைக்குமென்று நம்பி, தாமரை நாச்சியார் இரண்டு பன்றிகளை வீட்டில் வளர்க்கின்றாள். ஒரு முறை தாமரை நாச்சியார் பங்காளி வீட்டிற்குச் சென்று திரும்பி வரும்வரை குன்றுடையான் அப்பன்றிகளுக்கு உணவளிக்காமல் இருந்துவிட்டான். தாமரை நாச்சியார் வந்தவுடன் அப்பன்றிகள் குன்றுடையான் மீது குறை சொல்கின்றன. அதைத் தாமரை நாச்சியார் பொருட்படுத்தாததால் அப்பன்றிகள் அவள் மேல் கோபித்துத் தலையூர் சென்றன என்று கதையமைந்துள்ளது. பன்றி கோபித்துக்கொண்டு தலையூர் செல்லல் என்னும் உயிர்ப்பு ஆக்கம் கதை வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டுள்ளது. இப்பன்றியின் காரணமாகப் பின்னர் வேட்டுவர்க்கும் அண்ணன்மார்க்கும் சண்டை நடக்கிறது. இங்குக் கதை வளர்ச்சிக்கு இவ்வுயிர்ப்பு ஆக்க உத்தி பயன்படுத்தப்பட்டது. பன்றிகளுக்குப் பெயர் வைத்து அழைத்ததாகக் குறிக்கப்பட்டிருப்பது அவர்கள் பன்றி மீது கொண்டிருந்த அன்பினையும் அஃறிணைப் பொருளையும் உறவாகக் கருதும் மனப்பாங்கையும் புலப்படுத்துகின்றது (ப.142).

பன்றி தாமரைநாச்சியிடம் சபதம் கூறுவதும், பன்றி பத்ரகாளி கோவிலில் பிள்ளைவரம் வாங்குவதும் (ப.150) உயிர்ப்பு ஆக்கம் ஆகும். இவ்விரு உயிர்ப்பாக்கங்களும் கதை வளர்ச்சிக்காக இடம் பெற்றுள்ளன. தாமரைநாச்சியார் பிள்ளைப்பேறின்றி மலடியாய் இருந்த நேரத்தில் அவள் வளர்த்த பன்றி, ஊர்க்குருவி, பூனை, நாய், பேய், முருங்கைமரம் முதலியனவும் மலடாய் (ப.142)இருந்ததாகவும், தாமரை நாச்சியார் பிள்ளைப்பேறடைந்தபோது இவையும் பிள்ளைப் பேறடைந்ததாகவும் (ப.160) கூறப்பட்டிருப்பது கதைப் பாத்திரத்தின் இயல்பைச் செறிவாக்கவும், விளக்கமாக்கவும் செய்யும் உயிர்ப்பு ஆக்க உத்தியாகும்.

### குதிரை

இக்கதைப் பாடலில் தலைமைப் பாத்திரங்களான பொன்னர், சங்கர் ஆகிய அண்ணன்மாரின் ஊர்தியாகக் குதிரை குறிக்கப்படுகின்றது. சமயநிலையில் தெய்வத்திற்குச் செய்யும் சிறப்பு, தெய்வ அங்கங்கட்கும் செய்யப்படுதல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

பொன்னர் போர்ப்பறை கேட்டு, வெள்ளாங்குளத்திலிருந்து படுகளம் வர எண்ணி மனங்கலங்கும்போது குதிரை,

எண்ணங்கலங்க வேண்டாம்
சுவாமியோசனைகள் செய்யவேண்டாம்
அங்கம் கலங்கவேண்டாம்
அழவேண்டாம் அண்ணா நீ

கடலைக்குதிக்கிறேன் அண்ணா
உன்னைக்கொண்டு கருமலையைத்
தாண்டுகிறேன்
விண்ணைக் குதிக்கிறேன் உன்னைக்
கொண்டு வேகமாய்ப் பறக்கிறேன்
தம்பி பலிவெட்டி சுவாமி நீதான்
திரும்பி நீ வருவாய்

(பக்.301 302)

என்றவாறு வீரவுரை கூறுகின்றது. இங்கு உயிர்ப்பு ஆக்கம் வீர உணர்வுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

### மீசை

வலதுபுறம் மீசையது வல்லபாய்ப்போர் செய்கிறது
இடதுபுறம் மீசையது ஈட்டிப்போர் செய்கிறது

(ப.218)

என்ற அடிகளில் மனித உறுப்பான மீசை போர் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. சங்கரின் கோப உணர்ச்சியையும் வீர உணர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றது. இது பாத்திரப்படைப்பினைச் செறிவாக்க உதவுகின்றது; பாத்திரத்தின் பண்புநலனைத் தெளிவாக்க முடிகின்றது.

### கடவுள் உயிர்ப்பு ஆக்கம்

கடவுள் வழிபாட்டு வீர உணர்ச்சிக் கதைப் பாடலாதலால் தெய்வ வழக்குகள் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. கடவுள் மனித உருவில் வந்து வினைபுரிவதாகக் கதையில் அமைக்கப்பட்டுள்ளது. இது கதையமைப்பில் சிக்கல், சிக்கல் அவிழ்ப்பு ஆகிய கூறுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கதைமாந்தருக்கு உதவி செய்ய மாயவனார் (திருமால்) ஆட்டிடையன் போல் வருதல் (பக்.122, 124), சங்கரை விழ்த்த வேடன்போல் வருதல் (295), பஞ்சாங்கம் பார்க்கும் வேதியன்போல் வருதல் (ப.150, 354), ஆகிய நிலைகளிலும், சிவனார் பஞ்சாங்க வேதியனாக வருதல் (ப.146, 354) செல்லாண்டிக்கும் பெரிய காண்டியனுக்கும் கரகப்போட்டி நடத்தல் ஆகிய நிலைகளிலும் கடவுளர் மனித நிலையில் படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைகள் கதை வளர்ச்சிக்காகவும், கதையில் ஏற்படும் சிக்கலுக்கு இறைவன் காரணம் என்று காரணம் கற்பிக்கும் நிலயிலும், சிக்கல் அவிழ்ப்பிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுத்தியால் அக்காலத்தில் மக்கள் கொண்டிருந்த கடவுள் பற்றிய நம்பிக்கைகளும் புலனாகின்றன. கடவுள் மனிதனாகத் தோன்றிச் செயலாற்றுவார் என்ற இறையவதார நம்பிக்கை இக்கதையிலும் பலித்திருப்பதை அறியமுடிகின்றது.

பூதம் களை பிடுங்கியதாக (ப.136) அரிராமர் ஏவலால் காடு கெடுத்து நாடாக்கியதாகக் கூறப்பட்டுள்ள உயிர்ப்பு ஆக்க உத்தியால், நல்லவர்க்கு இறைவன் துணைகிட்டும் என்னும் நம்பிக்கை வெளிப்படுகின்றது. இவ்வுத்தி வாயிலாகக் குன்றுடையான் பாத்திர இயல்பு வெளிப்படுகின்றது.

### கூற்றுவழி உயிர்ப்பு ஆக்கம்

கல்லுக்கும் வாயிருந்தால் கண்ணீர் விட்டேயழுமாம்
நல்ல எங்கள் தாமரைத்தாய் நாளெல்லாம் பட்ட
துன்பம்

(ப.186)

என்னும் ஆசிரியர் கூற்றால் உணர்ச்சி மீதுறலும், தாமரைநாச்சியார்பட்ட துன்பமும் வெளியாகும். இவ்வாறு கேட்போரை, படிப்போரைக் கதையோடு ஒன்றிணைக்க ஆசிரியரின் உணர்ச்சியைப் படிப்பவர், கேட்பவர் உணர இது போன்ற தொடர்கள் பயன்படுகின்றன; பாத்திரப்படைப்பும் சிறப்புப் பெறுகின்றது.

தற்குறிப்பேற்ற அணியாக, தங்கை அண்ணன்மார் படுகளத்தைத் தேடிச் செல்லுகையில் அவளது இரக்கநிலையைக் கண்டு பறவை இரையெடுக்காதிருந்தது, கன்று பால் ஊட்டாமல் இருந்தது போன்ற நிகழ்ச்சிகள் உயிர்ப்பு ஆக்கமாக அமைக்கப்பட்டுள்ளன (ப.324). இவை இரக்க, அவல உணர்ச்சியை அதிகப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### முடிவுரை

கடவுள் வழிபாட்டுக் கதைப்பாடலாதலால் கடவுள் பாத்திரமாக வர வேண்டிய சூழ்நிலையில், கடவுள் மனித வடிவில் வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பெரியபுராணத்தில் தூது செல்லக் கடவுள் பயன்படுத்தப்பட்டுள்ளார். இக் கதைப்பாடலில் கதை வளர்ச்சிக்காகவும், சிக்கல் அவிழ்ப்புக்காகவும் கடவுளர் மானுடவாக்கம் செய்யப்பட்டுள்ளனர். இயற்கைப் பொருள்களை உயிர்ப்பு ஆக்கம் செய்யும் உத்தியால் இயற்கை மீது அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு, இயற்கையோடு ஒன்றிவாழ்ந்த வாழ்க்கைமுறை புலனாகின்றது. கதை வளர்ச்சிக்காக அஃறிணைப் பொருள்கள் உயிர்ப்பு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. இதனால் நாட்டுப்புறப் பாடல்களிலும் இவ்வுயிர்ப்பு ஆக்க உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

# தமிழ் இலக்கணம் உணர்த்தும் மெய்ம்மைகள்

## வேலூர் நீ.தங்கவேலன்

பன்னெடுங்காலத்துக்கு முன்னமே-தமிழ்மொழியில் இலக்கணம் தோன்றுவதற்கு முன்னமே நம் முன்னோர்கள் அறிய வேண்டிய மெய்ம்மைகளை அறிந்த மெய்யறிவாளர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அதனால்தான் தமிழ் இலக்கணத்தை இயற்றுகின்ற போதே, அந்த இலக்கணமே மெய்ம்மைகளை உணர்த்துகின்ற வகையில், இயற்றியிருக்கிறார்கள்.

இறையைப் பற்றியும் உயிரைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் அவர்கள் கொண்டிருந்த தெளிவான அறிவை அந்த இலக்கணமே நமக்குப் புலப்படுத்துகிறது.

தமிழ் எழுத்துகளை உயிர் எழுத்து, மெய்எழுத்து, எனப் பிரித்து உயிர்எழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து பிறக்கின்ற எழுத்தை உயிர்மெய் எழுத்து என்று குறிப்பிடுவதும்- உயிர் எழுத்தும் உயிர்மெய் எழுத்துமே மொழிக்கு முதலில் வரும்-ஒரு சொல்லின் முதல் எழுத்தாக வரும். - மெய்யெழுத்து சொல்லின் முதல் எழுத்தாக வராது என்று வரையறை செய்திருப்பதும் ஒரு மெய்ம்மையை உணர்த்துகிறது.



மெய் என்பது உடல். அது தனித்து வாழாது. உயிரோடு சேர்ந்தே வாழும்.

உடலினின்று வேறுபட்டது உயிர். அது தனித்தும் வாழும். உடலோடு சேர்ந்தும் வாழும்.

உயிர்மெய் என்பது உடலும் உயிரும் சேர்ந்திருக்கின்ற நிலை. உடலும் உயிரும் சேர்ந்த உயிர்மெய்யாக உள்ளது வாழும், உயிர் அற்ற வெறும் மெய்யாக உள்ளது. வாழாது என்னும் மெய்ம்மையையே அது உணர்த்துகிறது.

தமிழ்மொழியில் உள்ள பிறப்பு இறப்பு என்னும் சொற்கள் இதனை மேலும் தெளிவாக விளக்குகின்றன.

பிறப்பு இறப்பு என்னும் சொற்களில் முதல் எழுத்தைத் தவிர்த்து ஏனைய மூன்று எழுத்துகளும் ஒன்றாகவே உள்ளன. பிறப்பு என்பதில் முதல் எழுத்து பி அது, ப் என்னும் மெய்யெழுத்தோடு இ என்னும் உயிர் எழுத்து சேர்வதால் தோன்றுவது. அந்த எழுத்தை முதலாக உடைய பிறப்பு என்னும் சொல் உயிரோடு சேர்ந்து, உடல் இந்த உலகத்தில் பிறப்பதைக் குறிக்கின்றது.

உயிர்மெய் எழுத்தாகிய பி என்பதிலிருந்து ப் என்னும் மெய்யெழுத்து பிரிக்கப்பட்டு விட்டால் தனித்து நிற்பது இ என்னும் உயிர் எழுத்து. அந்த எழுத்தை முதலாக உடைய இறப்பு என்னும் சொல் உடலைவிட்டு உயிர்பிரிந்து தனித்துச் செல்வதைக் குறிக்கின்றது. பிறப்பு இறப்பு என்பதைக் குறிக்கும் வேற்று மொழிச் சொற்களில் இத்தகைய சிறப்பும் இத்தகைய கருத்தும் இல்லவே இல்லை.

உயிர்மெய்எழுத்துகள் மொழிக்கு முதலில் வரலாம் என்றாலும், வருகின்ற தகுதியுடையன என்றாலும் எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதல் எழுத்தாக வருவதில்லை. எந்தச் சொல்லின் முதலிலும் வராமல் இருக்கின்ற உயிர்மெய் எழுத்துகளே மிகப்பல. 18 மெய்யெழுத்துகளும் 12 உயிர் எழுத்துகளும் சேர்ந்து பிறக்கின்ற உயிர்மெய் எழுத்துகள் 216 ஆகும். இந்த 216 எழுத்துகளில் 92 எழுத்துகளே சொல்லின் முதல் எழுத்துகளாக வருகின்றன. ஏனைய 124 எழுத்துகள் சொல்லின் முதல் எழுத்துகளாக வருவதில்லை. எடுத்துக்காட்டாக ங, ஙா, ஙி, ஙீ, ஞி, ஞீ, யி, யீ, யை, வு, ழு, ளீ, று, னே, னோ போன்ற எழுத்துகள் சொல்லின் முதல் எழுத்துகளாக வருவதில்லை. இப்படி வராமல் இருப்பதும் ஒரு மெய்ம்மையை உணர்த்துகிறது போல் உள்ளது.

விலங்கு இனமும் பறவை இனமும் புழு பூச்சி இனங்களும் உயிரும் உடலும் சேர்ந்த பிறவிகளையே எடுத்திருந்தாலும், அவை மற்ற இனத்தைப்போல் மெய்யறிவு பெறுவதில்லை. மாந்த இனத்தில் கூடப் பலர் மெய்யறிவு பெறாமலே போய்விடுகிறார்கள். உயிர்மெய் எழுத்துகளில் மிகப்பல மொழிக்கு முதலில் வராமல் இருப்பது இந்த உண்மை நிலையையே சுட்டிக் காட்டுவது போல் உள்ளது.

உயிர்மெய் எழுத்திலும் சேராமல் மெய்யெழுத்திலும் சேராமல் தனித்து நிற்கின்ற ஓர் எழுத்தும் தமிழில் உள்ளது. அஃது ஆய்த எழுத்து என்று சொல்லப்படுகிறது. உயிர் எழுத்துகள் 12 ஆகவும் மெய்யெழுத்துகள் 18 ஆகவும் இருக்க இந்தஆய்த எழுத்து என்பது மட்டும் ஒன்றே ஒன்றாக இருப்பது மற்றொரு மெய்ம்மையை உணர்த்துகிறது. உயிர்கள் பல, உலகங்களும் பல. ஆனால் இறை அல்லது பரம்பொருள் ஒன்றே என்பதுதான் அந்த மெய்ம்மை ஆகும்.

உயிர் எழுத்துகள் உயிர்களைக் குறிக்கின்றன. மெய்யெழுத்துகள் மண், நீர், நெருப்பு, காற்று வெளி என்னும் ஐந்து பெரும் பூதங்களால் ஆன உடலையும் ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையான உலகத்தையும் குறிக்கின்றன. ஆய்தஎழுத்து இவ்விரண்டிற்கும் அப்பால் உள்ள இவ்விரண்டின் இயக்கத்துக்கும் காரணமாக உள்ள இறையைக் குறிக்கின்றது.

உயிர் எழுத்துகளில் முதல் எழுத்து அ.மெய்யெழுத்துகளில் முதல் எழுத்து க். இவ்விரு எழுத்துகளின் கூட்டு ஒலியே ஆய்த எழுத்தின் ஒலியாக அக்(ஃ) என ஒலிக்கின்ற வகையில் அமைந்திருப்பது உயிர்களையும், உலகங்களையும் இயக்குவது இறையே என்னும் மெய்ம்மையை உணர்த்தி நிற்கின்றது.

உயிர் எழுத்துகளும் மெய்யெழுத்துகளும் கோடுகளையும் வளைவுகளையும் உடைய வரிவடிவங்களையும் பெற்றுள்ளன. ஆனால் ஆய்த எழுத்தோ, அத்தகைய வரிவடிவம் பெறாமல் மூன்று புள்ளிகளையே (ஃ) குறியீடுகளாகப் பெற்றுள்ளது. இறை உருவம் அற்றது என்னும் மெய்ம்மையை அது உணர்த்துவதாக இருக்கின்றது.

ஃஎன்னும் எழுத்தில் உள்ள மூன்று புள்ளிகளில் இரண்டு புள்ளிகள் கீழே ஒரு நேர்க்கோட்டில் இருப்பதுபோல் இருக்க ஒரு புள்ளிமட்டும் மேலே தனித்து நிற்கிறது. அப்படி மேலே தனித்து நிற்கும் புள்ளி இறையையும், கீழே இணையாக இருக்கும் புள்ளிகள் உயிரையும் உலகத்தையும் குறிப்பனபோலவும், அந்த உயிரும் உலகமும் இறையில் அடக்கம் என்னும் மெய்ம்மையை உணர்த்துவதுபோலவும் அமைந்திருப்பது எண்ணி வியக்கத்தக்கதாகும்.

அ.இ.உ. என்னும் மூன்று எழுத்துகளையும் சுட்டெழுத்துகள் என்று சொல்கிறது தமிழ் இலக்கணம். `அ' என்னும் எழுத்து சேய்மையைச் சுட்டுகிறது. தொலைவில் உள்ளதை அது என்று சுட்டிச் சொல்கிறோம். இ என்னும் எழுத்து அண்மையைச் சுட்டுகிறது. அருகில் இருப்பதை இது என்று சுட்டிக் காட்டுகிறோம். உ என்னும் எழுத்து சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்டதைச் சுட்டுகிறது. தொலைவிலும் இல்லாமல் அருகிலும் இல்லாமல் இடைப்பட்ட தூரத்தில் இருப்பதை உது என்று சுட்டிக் காட்டுகிறது தமிழ்.

"உதுக்காண் தோன்றும் தேரே" என்பது போன்ற அடிகள் சங்க இலக்கியங்களில் பயின்று வருவதைக் காணலாம்.

பிறமொழிகளில் அது இது என்று சுட்டப்படுவன இரண்டாகவே உள்ளன. ஆங்கிலத்தில் THIS, THAT என்றும் வட மொழியில் இயம் சுயம் என்றும்தான் வருகின்றன. இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதைச் சுட்டுவதற்கு அம்மொழிகளில் சொல் இல்லை. ஆனால் தமிழிலோ

இடைப்பட்டதைச் சுட்ட உது என்னும் சொல் உள்ளது.

இப்படித் தமிழில் மட்டும் சுட்டெழுத்துகள் மூன்றாகக் கூறப்படுவதும் ஒரு மெய்ம்மையை உணர்த்துவதாகவே இருக்கின்றது.

இறைஎன்னும் பரம்பொருள் சேய்மையில் இருப்பது. அது என்று சுட்டத்தகுவது. உலகம் அண்மையில் இருப்பது. இது என்று சுட்டத்தகுவது. அண்மையில் உள்ள உலகத்துக்கும் சேய்மையில் உள்ள பரம்பொருளுக்கும் இடையில் இருக்கும் உயிர் உது என்று சுட்டத்தகுவது. எனவே, அ என்னும் சுட்டெழுத்து இறையைச் சுட்டுகிறது. இ என்னும் சுட்டெழுத்து உலகத்தைச் சுட்டுகிறது. உ என்னும் சுட்டெழுத்தோ உயிரைச் சுட்டிநிற்கிறது.

எந்த உயிரினமும் தன் வாயைத் திறந்தவுடன் இயல்பாகத் தோன்றுகின்ற ஒலி அ என்னும் ஒலிதான். எல்லா ஒலிகளுக்கும் அடிப்படையாக இருக்கும் அந்த ஒலியை உடைய அ என்னும் எழுத்து இறையைச் சுட்டிக் காட்டுகிறது. எல்லா உயிர்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் அடிப்படையாக இருப்பது இறைதான் என்னும் மெய்ம்மையை அது உணர்த்துகிறது.

எல்லா மெய்யெழுத்துகளையும் ஒலிப்பதற்கு முதலில் வந்து நிற்கும் ஒலி இ என்னும் ஒலிதான். இக், இங், இச், என்றுதானே மெய்யெழுத்துகளை நாம் உச்சரிக்கிறோம். மெய்யெழுத்துகள் உயிரற்ற உடலையும் உலகத்தையும் குறிப்பனபோல் உள்ளவை. அவற்றை ஒலிக்க முன் நிற்கின்ற ஒலியை உடைய இ என்னும் எழுத்து உலகத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆயிரம், இலக்கம், கோடி என்னும் மூன்றைத் தவிர, தமிழில் உள்ள எண்களின் பெயர்கள் எல்லாமே உ என்னும் ஒலியிலேயே. உகரத்திலேயே முடிவதாக அமைந்துள்ளன. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, தொண்ணூறு, நூறு என்று எல்லா எண்களின் பெயர்களுமே உகர ஈற்றையே உடையனவாக உள்ளன. ஒன்று ஒரு உகரம், இரண்டு - இரு உகரம், மூன்று -மூன்று உகரம், நான்கு -நான்கு உகரம், பத்து-பத்து உகரம், நூறு- நூறு உகரம் என்று உகரத்தை எண்ணிக் கணக்கிடுவதுபோலவே அவை உள்ளன. முடிவில்லாமல் எண்ணிக்கொண்டே செல்வதற்கு உரியனவாக இருப்பவை இந்த உலகத்தில் உடலோடு பிறந்து வாழ்ந்து இறந்து விடுகின்ற -மீண்டும் தனித்துப் போய்விடுகின்ற உயிர்களே என்னும் மெய்ம்மையை உணர்ந்தவர்கள் தமிழர்கள்.

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" என்று திருவள்ளுவர் கூறுவது இதனைத்தான். உலகத்தில் பிறந்து வாழ்ந்து இறந்து விடுகின்ற உயிர்களை உ என்னும் எழுத்து சுட்டிக் காட்டுகிறது.

இவ்வாறு என்றும் மாறாத மெய்ம்மைகளைத் தமிழ் எழுத்துகளும் தமிழ் இலக்கணமும் உணர்த்துவனபோல் வேறு எம்மொழி எழுத்துகளும் எம்மொழி இலக்கணமும் உணர்த்துவனவாக இல்லை.

"முத்தமிழ் கற்று முயங்கும் மெய்ஞ்ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி-குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி -குதம்பைச் சித்தர்.



# பொன்கோடி தந்தாலும்

பாவலர் பாக்கிய மணாளன்

தென்கோடி பிறந்தவளே! தமிழே! தாயே!
திராவிட நல் சிங்கங்கள் ஈன்றாய் நீயே!
பொன்கோடி தந்தாலும் தமிழே! உன்னைப்
போற்றுவேனே யன்றியான்அப் பொன்வி ரும்பேன்!
என்கோடிச் செல்வம் நீ! எல்லாம் நீயே!
என்னுடைய ஆவியிலே இருக்கின் றாய்நீ!
முன் ஓடி வந்திடுவாய் முத்தே! என்னை
முந்திடச்செய்! முன்னேறச் செய்வாய் அம்மா!

பாண்டியர்கள் சேரசோழர் பாது காப்பில்
பாலுண்டு வளர்ந்தவளே! உனக்கிந் நாட்டில்,
வேண்டியவர் தொகைவிரிக்கின் பெருகும் அன்றோ?
வேண்டுவன யாவையுமே தருபவள் நீ!
ஆண்டவர்கள் அந்நாளில் உனக்க
ளித்த
அரியணைகள் இன்றில்லை! இந்த
மண்ணில்
மீண்டும் நீ கோலோச்ச வேண்டும்!
இந்த
மேதினியோர் உன்னழகைக் காண
வேண்டும்!

மேடையில் நான் மணமகனாய் அமரும் வேளை,
மென்தமிழில் மந்திரங்கள் ஒலித்தல் வேண்டும்!
வாடையில்நான் உடல்வாடி நடுங்கு கையில்
வண்டமிழின் இசைகாதில் விழுதல் வேண்டும்!
பாடையில்நான் சுடுகாடு செல்லும் போதும்
பைந்தமிழில் அழுமோசை எழுதல் வேண்டும்!
ஓடையில்நான் சாம்பலெனக் கரையும் போதும்
உயர்தமிழின் ஓசையுடன் கரைதல் வேண்டும்!

தமிழ்த்தாயே! நான்வணங்கும் தெய்வம் நீதான்!
தரையில்நான் உள்ளவரை போற்றி வாழ்வேன்!
இமிழ்கடலுக் கப்பாலும் உன்னை என்றன்
இதயத்தில் ஏந்திப்பின் சென்று மீள்வேன்!
கமழ்மலரே! கற்கண்டே! கசந்தி டாத
கரும்பே! உன் பெருமையொன்றே
பாடி நிற்பேன்!
அமிழ்தே! என் ஆருயிரே! அன்பே!
உன்னை
அன்றியொரு நொடிப்பொழுதும்
உயிர்வா ழேன்நான்!



# தமிழர் நிலை அன்றும் இன்றும்

## தே.கிருட்டிணன் மலேசியா

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி" என்று தமிழர் பற்றியும், "மூத்த மொழி "என்று தமிழ் மொழி பற்றியும் கூறுவது வழக்காகும். இக்கருத்தை நமக்கு நாமே கூறிக் கொண்டால் அது தற்புகழ்ச்சியான ஒரு செயலாகும். ஆனால், இக்கருத்தை மேம்பாடடைந்துள்ள மேலைநாட்டவர்களும், சரித்திர ஆய்வாளர்களும், மொழி வல்லுநர்களும் ஒட்டு மொத்தமாக ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் நாம் அது பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். எனவே, இக்கருத்தின்படி உலகின் மூத்த குடி "தமிழர் குடி" என்பதும், மூத்த மொழி "தமிழ் மொழி" என்பதும் தெள்ளத் தெளிவான ஒன்றாகும். இப்படிப்பட்ட பெருமைக்குரிய தமிழர்களும், தமிழ் மொழியும் இன்று இவ்வுலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகின்றனர் – வருகிறது – என்றால் அது மிகையாகக் கூறுவதாகாது. இவை, தமிழர்கள் எந்த அளவிற்குத் துணிவும், மனப்பக்குவமும், நாகரிகமும், முயற்சியும், ஆற்றலும் உடையவர்களாக விளங்கி வந்துள்ளனர் என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். இவ்வகையில் நாம் ஓரளவு பெருமிதம் கொள்ளலாம்!



ஆனால், "நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பெருமை இல்லை" என்ற பாரதியாரின் கவிதையுடன் இன்றுள்ள நமது நிலையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தமிழர்களின் உலகப் பரவலை-சரித்திர காலப் பரவல், தற்காலப் பரவல் என இருவகையாகக் கொள்ளலாம். சரித்திர காலத்தில் அவர்கள் உல்லாசிகளாக, பொழுது போக்குபவர்களாக, வணிகர்களாக,

நாடு பிடிப்பவர்களாக உலகின் பல பாகங்களுக்கும் சென்றுள்ளனர். "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் ஔவை வாக்கை அரும் பொருளாக்கியுள்ளனர். அவர்களின் நோக்கங்களில் வெற்றி பெற்றவர்களாகப் பெரும் பொருள் ஈட்டியும், பெரும்புகழ்பெற்றும் வாழ்ந்துள்ளனர். இதற்குச் சரித்திரங்கள் ஆதாரங்களாக உள்ளன. ஆனால், தமிழர்கள் தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் `நின்று வாழ வேண்டும்' என்ற எண்ணம் இல்லாது இருந்துவிட்டதாலும், `நன்று வாழ வேண்டும்' என்ற குறிக்கோள் இல்லாது இருந்துவிட்டதாலும், சென்ற நாட்டு மக்களுடன் ஒன்றுபட்டு உருமாறிப் போய்விட்டதாலும், `அன்று நாம் வென்று வாழ்ந்தோம்' என்பதை இன்று நாம் கூறிக் கொள்ளும் நிலை இல்லாது

போய்விட்டது. இருப்பினும், நடந்தவைகளைச் சரித்திரம் எடுத்துக் கூறுவதாக உள்ளது என்பதில் மனநிறைவு கொள்ளலாம். தமிழர் சென்ற இடங்களில் எல்லாம் அவர்கள் பரப்பிய பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் இன்றளவும் நடைமுறையில் இருந்தே வருகின்றன என்பதை உணரும்போது ஓரளவு பெருமிதமும் கொள்ளலாம்!

`தற்காலப் பரவல்' என்பது சற்றேறக்குறைய இரண்டு நூற்றாண்டுகட்கு உட்பட்டதாகும். இது, ஆங்கிலேயர் இந்தியப் பேரரசை அடிமை கொண்ட பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆளத் தொடங்கிய பின்னர், அவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகள் அனைத்திலும் இந்தியர்களை – குறிப்பாக – தமிழர்களைத் தொழிலாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் கொண்டு சென்று குடியேற்றம் செய்தனர். அவ்வகையில் இன்று தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகின்றனர். குடியேறிய நாடுகள் பலவற்றில் நிலையாகத் தங்கியும் விட்டனர். “விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக்கொண்டார்” என்ற கருத்துக் கேற்ப, தொழிலாளர்களாகச் சென்றவர்கள் நாளடைவில் அதிகாரிகளாக, வணிகர்களாக, நில உடைமையாளர்களாக, தொழில்துறை அதிபர்களாக மாறி, பின்னர் அரசியல்வாதிகளாகி, அமைச்சர்களாகவும், ஆளுநர்களாகவும் கூட மாறி மாண்புற்றுள்ளனர். இவை யாவும் ஒருகாலத்தில் ஆண்டான்களாக இருந்த தமிழர் இடைக்காலத்தில் அடிமைகளாகி, இன்று ஆள்பவர்களாகவும் ஆகியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டும் சரித்திரக் கூறுகளாகும். இருந்தாலும்கூட, இன்று மற்றவர்களுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் தமிழர்களது நிலைமை அவ்வளவாகக் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு உயர்வு பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை நிலையாகும். இதைக் கேட்கவும், உணரவும் நமக்கு வருத்தமாகவே இருக்கும். ஆனால், என்ன செய்வது? உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்?

உலகில் மூத்த குடிமக்களாகிய நமக்கு-ஒரு காலத்தில் உன்னத நிலையில் இருந்துவந்த நமக்கு -இன்றுள்ள தாழ்வு நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கான அடிப்படைகளை ஓரளவு ஆய்வு செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். இதற்கான காரணங்களில் ஒன்று, போட்டி போட்டுக் கொண்டு தமிழ் மொழியையும் தமிழர் பண்பாடுகளையும் வளர்த்து வந்த மூவேந்தர்கள் எனப்படும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பேரரசு அமைக்கும் பேராசையின் காரணமாகப் போர்களில் ஈடுபட்டுத் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டதாகும். திரண்ட செல்வங்களையும், தடந்தோள் வீரர்களையும் போரில் அழியச் செய்துவிட்டனர். இதனால், வறுமை நிலை ஏற்பட்டு நாடுகள் நலிந்து போனதுடன், மக்கள் தொகைப் பெருக்கமும் குறைந்து போனது. தமிழர்களது வீழ்ச்சிக்கு இது இரண்டாவது காரணமாகும். தமிழ் நாட்டை வேற்று நாட்டவர்கள் பலர் படை எடுத்துப் பல அழிவுகளைச் செய்துவிட்டனர். இது மூன்றாவது காரணமாகும். சாதி, சமயப் பூசல்கள் பல அவர்களிடையே உருவாகி அவர்களது ஒற்றுமையைக் குலைத்துவிட்டன. இது நான்காவது காரணமாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக மேலை நாட்டவரது ஆட்சிக் காலத்தில் அவர்களைப் பல கூறுகளாகப் பிரித்து அடிமைகளைப் போல வாழ வைத்துவிட்டது தமிழர்களது வீழ்ச்சிக்குத் தலையாய காரணமாக அமைந்துவிட்டது. இப்படிப் பல வகைகளில் சிதைவுற்றுப்போன தமிழர் சமுதாயம் தனது உயர்வு நிலைபற்றி முறையாகச் சிந்திக்கத் தவறிப் போனது காலம் செய்த கோலம் ஆகும். அதன் பயன்தான் இன்று நாம் அனுபவித்து வரும் அவல நிலை வாழ்க்கையாகும். அத்தி பூத்தாற் போல் எங்கோ ஒரு சில தமிழர்கள் ஒரு சில நிலைகளில் உயர்ந்தும் உள்ளனர். ஆனால், ஒட்டு மொத்தமாக இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றும் எனத் தனிமரமாக உயர்ந்து காணப்படுகின்றனர். `தனி மரம் தோப்பாகுமா?' எனவே, தமிழர்கள் `தோப்பு' நிலையில் வளர்ச்சி பெற முயற்சி செய்ய வேண்டும். மேற்காணும், மாறுபாடான நிலைகளைத் தவிர்த்து, தமிழர்களின் சரிவு நிலைக்கு வேறு சில காரணங்களும் கூட உள்ளன. அவை, தம்மை மறந்த நிலையில் மதுவருந்தும் பழக்கம், காழ்ப்புணர்வு, பிறர் வாழப் பொறாமை, நிலை தாழ்ந்துவிட்டவரைத் தூக்கிவிடத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளாத தன்மை, உயர்வு கண்டு வருபவரை ஊக்குவிக்கும் மனப்பக்குவம் இல்லாமை போன்ற இன்னோரன்ன பல காரணங்களாகும். இவை யாவும் களைந்தெறியப்பட வேண்டியவை ஆகும்.

வாழ்ந்து கெட்ட சமுதாயமாக இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் நாம் இப்படியே இருந்து வர முடியும்? இப்படியே இருந்துவிட்டால் பின்னர், எப்படித்தான் நாம் முன்னேறுவது? நாம் முன்னேற முடியாவிட்டாலும் பாதகம் இல்லை; பழைய சரித்திரத்தை மீட்க முடியாவிட்டாலும் பாதகம் இல்லை; சராசரி நிலையில் இந்நாட்டிலும், உலகளாவிய நிலையிலும் மற்ற இன மக்களுடன் சம நிலையில் வாழுவாவது நாம் தக்க நடவடிக்கைகளை

எடுத்துக் கொள்ள வேண்டாமா? அப்படியில்லாத நிலையில் இருந்துவிட்டால் எதிர்காலத்தில் நமது நிலை என்னவாக இருக்கும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டியது மிகவும் அவசியமாகும். இப்படிப்பட்டதொரு

மறுமலர்ச்சியை நாம் எப்படிக் காணுவது? அல்லது அடைவது? அதற்கு நாம் ஏதாவதொன்றைச் சிறப்பாகவும், உடனடியாகவும் செய்தேயாக வேண்டும். அதற்காக உயிரைக் கொடுக்க வேண்டும் என்பதல்ல! நம்மால் இயன்றதைச் செய்யலாம். செய்தே ஆகவேண்டும். இது நமது சமுதாயக் கடனும் கடமையும் ஆகும்! அதைச் சாதிப்பதற்காக அமைந்துள்ளதே இந்த "உலகத் தமிழர் மாமன்றம்" "பூனைக்கு யார் மணி கட்டுவது?" என்று எலிகள் கூடிப் பேசிக் கொண்டே இருந்தால் என்றுமே அவைகளால் பூனைக்கு மணி கட்டவே முடியாது. தமிழர் சமுதாயத்தின் நலன்கள் பற்றி யார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது? என்று ஆங்காங்கே ஒவ்வொருவராகச் சிந்தித்துக் கொண்டிருந்தால், எந்நாளுமே உருப்படியான எதையும் செய்ய முடியாது. எனவே, திடமான, தெளிவான நோக்குடன் அதைச் சாதிக்க முன்வந்துள்ள தமிழர் மாமன்றம் பாராட்டுதற்குரியதாகும். இதன் கொள்கைகள் நமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன. எனவே, இதை ஆதரிக்க வேண்டும்; அனைவரும் உறுப்பியம் பெறவேண்டும். உலகெங்கும்

பரந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாக அமைந்துள்ள இந்த மன்றத்தைப் பேணிக்காத்து வளர்த்துவர வேண்டியது -உயர வேண்டும், உன்னதமாக வாழவேண்டும்; தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்; தன்மானம் காக்கப்படல் வேண்டும்; தமிழர் மரபுகள்

பாதுகாக்கப்படல் வேண்டும் என நினைக்கும் அனைத்துத் தமிழர்களதும் அத்தியாவசியக் கடமையாகும்!

சிதறிப் போன பாகங்களை ஒன்றுபடுத்தினால்தான் ஒரு முழுப்பொருளை உருவாக்க முடியும். அதுபோல, பல வகையிலும் சிதறிப்போய்-சிறுத்துப் போய் - சிறுமைப்பட்டுப்போய் -சீரழிந்துள்ள நமது தமிழர் சமுதாயத்தைச் சிறப்புறச்

செய்ய வேண்டுமானால் அதற்கென ஒரு பொது அமைப்பு அவசியம் தேவையாகும். அக்குறையைப் போக்கும் முகத்தான் அமைக்கப்பட்டுள்ளதே "உலகத் தமிழர் மாமன்றம்" ஆகும்! அதன் கொள்கைகளான -தமிழ் மொழியைப் பேணி வளர்த்தல், தமிழர்களிடையே ஒற்றுமை உணர்வை வலியுறுத்துதல், தமிழர் பண்பாடுகளைப் பாதுகாத்து வளரச் செய்தல், உரிமைகளை உணர்ந்து செயற்படச் செய்தல் போன்றன மிகவும் வரவேற்கக்கூடியனவாகும். அரசியல் கலப்பின்றி, சமய வேறுபாடுகளற்ற நிலையில் `தமிழர் முன்னேற்றம்' ஒன்றையே கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ள இம்மன்றத்தை ஊக்குவித்து வர வேண்டியது நமது முதற் கடன் ஆகும். இம்மன்றத்துக்குத் தலைமை ஏற்றுள்ள மலேசிய நாடாளு மன்ற உறுப்பினர் -மக்கள் தொண்டன். மாண்புமிகு டாக்டர்.வி.டேவிட் அவர்கட்கும்,துணை நின்று உழைத்து வரும் அனைத்து உறுப்பினர்களுக்கும், நமது பாராட்டுக்களைக் கூறிக் கொள்ளும்

அதே வேளையில், மலேசிய நாட்டின் தலைநகரில் நடைபெறவுள்ள "முதலாம் உலகத் தமிழர் மாநாடு" சிறப்புற நடைபெற்றுத் தனது குறிக்கோளில் வெற்றி காண வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

`நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'—என்று மான உணர்வுடன் உரிமை போற்றி வாழ்ந்து வந்த மரபில் பிறந்தவர்களாகிய நாம், அஞ்சுவதற்கு மட்டுமே அஞ்சி, அஞ்சத்தகாதவைகளை மிஞ்சி, கெஞ்சும் நிலையைத் துஞ்சச் செய்து, விஞ்சிய வாழ்வு பெற்று, எஞ்சிய நாட்களைக் கொஞ்சு நிலையில் கழிக்க `அஞ்சாமை' என்னும் அணிகலன் பூண்டு, அமைவுற வாழ்ந்து ஆவன காண்போமாக!

உரிமை அற்ற வாழ்வு
வெறுமை ஆன தாகும்
உரிமை உற்ற வாழ்வே
பெருமை தருவ தாகும்!

அன்றுவாழ்ந்த தமிழர்
உரிமை காத்து நின்றனர்
இன்று வாழும் நாமோ
வெறுமை கொண்டு நிற்கிறோம்!

இன்று கூடும் மன்றம்
தமிழர் உரிமை பேண
நன்று காண வேண்டும்
ஒன்று பட்ட திட்டம்!

தமிழர் உரிமை நின்றில்
`தலை நிமிர்ந்து நிற்கும்!
தலை நிமிர்ந்த நிலையில்
தரமும் கூடி நிற்கும்!

# சங்க இலக்கியத்தில் கால்நடை மரபியல் கருத்துக்கள்

பேராசிரியர்
சு.செயராசு நத்தானியல்

சங்க கால இலக்கியங்கள் அக்காலத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுவன. வாழ்க்கை நெறி முறைகள், வரலாறு, அரசியல் நிலை, சமுதாய நிலை போன்றவற்றை எடுத்து உரைப்பன. இலக்கிய நயம் மிக்க பாடல்கள் மட்டுமின்றி அதில் ஆங்காங்கே குறிப்பிடப்படும் அறிவியல் செய்திகளும் போற்றத்தக்கன. கால்நடைத் தொடர்பான செய்திகளும் அவற்றில் காணக் கிடக்கின்றன. அவற்றைச் சிறிது உற்று நோக்கின் பல அரிய செய்திகள் தெரிய வரும்.

**கலப்பினம்**

கால்நடை மரபியலார் பாலுக்கென நம்நாட்டு இனப் பசுவுடன் அயல் நாட்டுக் காளையைக் கலப்பினச் சேர்க்கை செய்கின்றனர். நமது கிராமத்துப் பசு நாள் ஒன்றுக்கு ஒரு லிட்டர் பால் தரும். ஐரோப்பிய இனம் நாள் ஒன்றுக்கு 30 லிட்டர் தரும். இந்நிலையில் பால் வளம் பெருகக் கலப்பின உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. மேலை நாட்டு இனத்தை அப்படியே இங்குத் தருவித்து அதனை வளர்ப்பது எளிதன்று. ஏனெனில் கால நிலை மாற்றத்தால் அவை நலிந்து விடும். இந்நிலை போக்க



நோய் எதிர்ப்புச் சக்தியை இந்நாட்டிற்கேற்பப் பெற்றுள்ள நமது நாட்டு இனத்தையும் அயல்நாட்டு இனத்தையும் இனக்கலப்புச் செய்வது சிறப்புடையது. அவ்வாறு செய்யும்பொழுது 50 விழுக்காடு வரை அயல்நாட்டு இனம் சேர்ப்பது நல்லது. அதற்கு மேற்பட்டால் அந்தக் குறிப்பிட்ட கன்று மேலை நாட்டுத் தன்மையைச் சார்ந்து இங்கு உயிர் வாழ்தல் அரிதாகி விடும் (50 விழுக்காடு என்பது நாட்டுப்பசு + அயல்நாட்டுக்காளை. அதாவது ஜெர்சி போன்ற அயல் நாட்டுக் காளை - முதல் சேர்க்கை. இதில் பிறந்து வளர்ந்து கலப்பினப் பசுவினை மீண்டும் அயல் இனச் சேர்க்கை செய்யும் போது மேலும் அயல் இனப்பண்பு விழுக்காடு கூடும்). ஆகவே கலப்பினச் சேர்க்கையின் போது 50 விழுக்காட்டினைத் தாண்டி விடக் கூடாது. இக்கலப்பினம் நாள் ஒன்றுக்கு 4 அல்லது 5 லிட்டர் பால் தரும். தனியார் பண்ணைகளிலும் அரசுப் பண்ணைகளிலும் நல்ல தீவனம் மற்றும் சிறந்த பராமரிப்பு முறைகளை மேற்கொள்வதனால் கலப்பினங்கள் 10 அல்லது 12 லிட்டர் வரை பால் கொடுக்கின்றன. நம் நாட்டு இனங்களின் பால் உற்பத்தித்திறனை உயர்த்த இன்று கடைப்பிடிக்கும் உத்தி இது. சங்க காலத்திலும் கலப்பினத்தை

உருவாக்கினார்கள். அது பாலுக்காக அல்ல. ஏனெனில், அன்று தீவனப் பற்றாக்குறையும் இல்லை. பசும் புல்வெளிகள் மிகுந்தும் காணப்பட்டன. மிகுந்த எண்ணிக்கையில் மாடுகள் செலவின்றி வளர்க்கப்பட்டன. எனவே பால் பற்றாக்குறை தெரிந்திருக்க வழியில்லை. ஆனால் அக்காலத்தில் போக்குவரத்திற்கு மாடுகளையே நம்பி இருக்க வேண்டியிருந்தது. உப்பு வண்டி, கூலம் எடுத்துச் செல்லும் வண்டி, மக்கள் போக்குவரத்து என அனைத்திற்கும் மிகுதியும் பயன்பட்டன எருதுகள். ஆகையால் நல்ல வலுவுள்ள எருதுகளை உருவாக்கக் கலப்பின வழி முறைகளைக் கையாண்டனர். அதன்படி, அருகம்புல்லைத் தின்று குடப்பால் தரும் பசுவினையும் போர்ப்பண்பு மிக்க காளையையும் கலப்பினம் செய்வதன்மூலம் வண்டியை எளிதில் இழுக்கும் ஆற்றல் பெற்ற எருதினைப் பெறுவர். இந்த இனக்கலப்பு உள்நாட்டு வகையில் ஏற்பட்டதோ அன்றி வெளிநாட்டு வகையில் ஏற்பட்டதோ என்பதனைக் காட்டக் குறிப்பில்லை எனினும் கலப்பின முறையைத் தெரிந்திருந்தனர் என்பதனை இச் செயல் முறை எடுத்துக் காட்டுகிறது.

### சினைத் தருணம்

எருமைகள் இனவிருத்தியில் திறன் குறைந்து காணப்படுகின்றன. பெரும்பான்மையான எருமைகள் இரவு நேரங்களிலேயே சினைப் பருவத்திற்கு வருகின்றன. சினைத் தருணம் 24 மணி நேரம் இருக்கும். ஆனால் அவை சினைத் தருணத்தில் எந்தவித வெளிப்பாடும் காட்டாமல் இருந்து விடும். இயல்புநிலை மாறி இருப்பின் ஓரளவு கண்டுபிடித்து விடலாம். இன்று கருத்தடை அறுவை சிகிச்சை செய்த பொலிகிடாக்களை எருமைகளோடு மேய்ச்சலுக்கு அனுப்புவதால் அவற்றின் சினைத் தருணத்தை அறிய இயலும். ஆனால் அன்று எருமை மாடுகளின் சினைத் தருணத்தை அறிய அதன் இயல்பு நிலை மாற்றத்தைக் கொண்டு அறிந்தனர் என்பதைக் குறிப்பாக அறிய முடிகிறது. அதாவது நள்ளிரவில் அவை கயிற்றை அறுத்து வேலியைச் சாய்த்து வெளியேறித் தாமரையையும் நெற்கதிர்களையும் மேய்வதுண்டு. இந்த இயல்பு மாறிய நிலை, இரவில் அது சினைத் தருணத்திற்கு வந்த நிலையையே காட்டுகிறது. ஏனெனில், எருமைகள் வளஞ்செறிந்த நீர் நிலைகள் நிறைந்த மருத நிலத்தில் வளர்க்கப்பட்டன. புல் தரைகளுக்குக் குறைவில்லாத பகுதி. அது பகலிலேயே வேண்டிய அளவு தீவனம் தின்று விட முடியும். அப்படி இருக்கையில் தீவனத்திற்காக அது கயிறறுத்து வேலி சாய்த்துத் தாமரையையும் நெற்கதிர்களையும் தின்று பசியாறத் தேவையில்லை. ஆனால் இப்படிப்பட்ட இயல்பு மாறிய நிலையைக் கூர்ந்து கவனித்தனர் பண்டைத் தமிழர்கள் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. இதன் மூலம் அவர்கள் எருமைகளின் சினைத் தருணத்தை அறிந்தனர் என்பதைக் குறிப்பால் அறியலாம்.

### நீர் நிலைகளில் எருமை

எருமைகள் நீர் நிலைகளில் படுத்துத் தம் உடல் வெப்பத்தைப் போக்கிக் கொள்ளும். ஆகவேதான் எருமைகளை வளர்ப்பதற்கு உகந்த நிலம் மருத நிலமாக அமைந்தது. பொதுவாக எருமைகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது எல்லாம், அவை குளத்திலுள்ள ஆம்பல், குவளை போன்ற மலர்களைத் தின்ற செய்தி குறிப்பிடப்படும். ஆகவே எருமை வளரும் சூழ்நிலை அறிந்து அவற்றை மருத நிலத்தில் வளர்த்துப் பயனுற்றனர். எருமைகளுக்கு வேர்வைத் துளைகள் தோலில் அதிகம் இல்லை. ஆதலால் அவை உடல் வெப்பம் மிகுந்து விடுவதால் வெயிலைத் தாங்காது நீரில் கிடப்பதை விரும்புகின்றன.

அரிய செய்திகள் மரபியலில் மட்டுமல்ல; தீவனம் அளித்தல், வளர்ப்பு முறை போன்றவற்றிலும் பல அறியக் கிடக்கின்றன. இன்னும் நுணுகி ஆராய்வதன் மூலம் பண்டைத் தமிழரின் கால்நடை பற்றிய அறிவு அனுபவம் ஆகியன வெளிப்படும்.

கார்ஆரப் பெய்த கடிகொள்வியன்புலத்துப்
போராது சென்று பெரும்பதவப் புல்மாந்தி
நீரார் நிழல குடஞ்சுட்டு இனத்துள்ளும்
போர்ஆரா ஏற்றின் பொருநாகு இனம்பாண்டில்
தேர்ஊரச் செம்மாந் ததுபோல்

கலி. 109 :1 5

டாக்டர் வ. உலகநாதன், 'கறவை மாடுகள் பராமரிப்பு', பக்.21

"கருங்கோட்டு எருமை கயிறுபிரிந்து அசைஇ
நெடுங்கதிர் நெல்லின்அ நாள்மேய லாரும்"

ஐங்95 :1 2

'கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை'

–நற்.260:1

'ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் மாந்தி' –அகம். 56:3–5

# வையகத் தமிழரின் வாழ்வும் வளர்ச்சியும்

## பேராசிரியை வை.சகுந்தலா

*"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே*
*முன் தோன்றி மூத்த தமிழ்க் குடியினர்."*

வளர்ச்சி, வாழ்வு, இவை இரண்டும் தோன்றிய காலந்தொட்டே தொடர்ந்து வந்துகொண்டுதான் இருந்திருக்கிறது. தமிழர் வாழ்வு வளர்ச்சியில் தான் முதிர்ச்சி கண்டிருக்கிறது. வீரத்தில், காதலில், விவேகத்தில், கலையில் சிறந்து வளர்ச்சி பெற்றுக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருப்பார்கள். கட்டடக்கலையில் மட்டுமல்ல; கடலின் அலையிலும், வணிகத்தை வளர்த்துள்ளார்கள்.

**வாணிப வளர்ச்சி:** தமிழகம் மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டதே அவர்களின் வாணிப வளர்ச்சிக்கு ஒரு வெற்றிப்படியாக அமைந்துவிட்டது. மேற்கத்திய கிழக்கத்திய நாடுகளுடன் கடல் வாணிபம் சிறந்து விளங்கியிருக்கிறது. சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டு வந்த காலத்தில் வாணிப வளர்ச்சி உச்ச நிலை அடைந்திருந்தது. சிறு மரக்கட்டையில் கட்டுமரம் அமைத்து மீன் பிடிக்க ஆரம்பித்ததே கப்பல் கட்டும் அறிவுக்கு முதல்படியாக அமைந்தது. பின் தோணி, படகு பாய்மரக்கப்பல் என அறிவு விரிந்துகொண்டே சென்றது. அவைகட்குப் பரிமுக அம்பி, கரிமுக அம்பி, அரிமுக அம்பி (சிலம்பு 13 176 177) எனப் பெயரிடப்பட்டன. `கப்பல் சாத்திரம்' என்னும் ஒரு தமிழக கையெழுத்துப் பிரதி நூல் அன்று நடைமுறையில் இருந்த கப்பல் கட்டும் அறிவை, நமக்குக் கண்ணாடி போல் காட்டுகிறது. இந்நூல் கி.பி.17ஆம் நூற்றாண்டில் பேனிஷியர்கள் தரங்கம்பாடியில் குடியேறிய காலத்தில் எழுதப்பட்டது. ஆசிரியர் யார் என அறியப்படவில்லை. இதில் கடலில் ஓடும் கலத்தின் தன்மையை எப்படி வலிவாக்கலாம் என்பதைக் கூறுகிறது. பல்வேறு அளவுள்ள பாய்மரத் துண்டும் பாய்களும் தேவைப்படும் அளவு, கப்பலை எவ்வாறு நிறுத்துவது, நிறுத்த எவ்வளவு நங்கூரங்கள் தேவை என்பதையும் இந்நூல் விளக்குகிறது.



வாணிபக் கலையில் தமிழனின் வளர்ச்சி பற்றிச் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் கூறப்படுகிறது. பட்டினப்பாலையில் `சுங்கவரி' பற்றிப் பேசப்படுகிறது. 106 முதல் 141 அடிகள் வரை உள்ள பாட்டுக்களில், மரக்கலத்திலே வேற்று நாடுகளிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதும், உள்நாடுகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற பொருட்களை ஏற்றுமதி செய்வதும், அளந்தறியாப் பல்வகைப் பண்டங்கள் மீது காவல்காரன்

புலிச்சின்னத்தை அடையாளமாக முத்திரை பொறிப்பதும் பேசப்படுகின்றன.

159–182 அடிகளில் வரை பலவகை நாடுகளின் கொடிகள் பற்றிக் கூறப்படுகின்றன. 183–193 அடிகளிலே மிளகுப்பொதிகளும், மேருமலை மாணிக்கமும், சாம்பூநதப் பொன்னும், குடகுமலை சந்தனமும், அகிலும், தென்திசைக் கடல்பிறந்த முத்தும், கீழைக்கடலில் பிறந்த பவளமும், கங்கை, காவிரியாற்றில் உண்டாகிய பொருளும் ஏற்றுமதிக்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ள செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.213–218 வரையுள்ள பாடல்களில் பேசும் மக்களின் சிறப்புப் பற்றிக் கூறப்படுகிறது. இந்தச் சான்றுகளே வையத்தில் வாழுவாங்கு வாழும் தமிழன் அறிவு, வாணிபத்தில் சிறந்திருந்தது எனக் கண்கூடாகத் தெரிய வருகிறது.

ஆங்கிலேய ஆதிக்கத்தின் பாதிப்பிற்கு முன்பு வரை, உலக நாடுகளில் வாணிபத்திற்காகவும், அரசு செலுத்தவுமே சென்ற தமிழர், பின்னரே கொத்தடிமைகளாகவும், தோட்டத் தொழிலாளிகளாகவும் செல்லத் தலைப்பட்டனர்.

> "நளியிரு முந்நீர் நாவாயோட்டி
> வளிதொழிலாண்ட வுரவோன் மருக
> களியியல் யானைக் கரிகால் வளவ"

(புறம் 68 : 1:3)

என்று, வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர், சேரமான் பெருஞ்சேரலாதனோடு பொருது வெற்றி பெற்று மகிழ்ந்த சோழ வேந்தன் கரிகால் பெருவளத்தானைப் பற்றிப் பாடியுள்ளார். இப்பாட்டிற்கு உரை கண்ட ஔவை துரைசாமிபிள்ளை கடலில் கலஞ் செலுத்தும் பணியை முதலில் கண்டவர் தமிழரே, உரோமர்கள் அல்லர் என்று ஒரு குறிப்பு வரைந்துள்ளார்.

கடலில் நீரோட்டத்தின் திசையிலேயே கலத்தைச் செலுத்தும் போக்கு பரிபாடலில் காணப்படுகிறது.

(10வது பாடல் 102வது வரி)

> "செயலாற்றுத் தீம்புனலிற் சென்மரம்
> போல"

(பரிபாடல் 6.79)

> "நீர் வழிப்படூஉம் புணை போல்"

(புறம் -192-9)

> "நீடு புணை வாங்க" (பரிபாடல் 11.108)

போன்ற பாடல்கள் கடல் நீரோட்டத்தை விளக்குகின்றன.

மேலும் வணிகர்கள், அரசர்களுக்கு நிகரான செல்வாக்குப் படைத்தவர்களாக இருந்ததும் சிலம்பின் மூலம் வெள்ளிடை மலை எனத் தெரிகிறது.

கலங்கரை விளக்கத்தின் பயன்களும், மரக்கலங்கள் திசையறியாமல் தத்தளிப்பதைத் தடுக்கக் கலங்கரை விளக்கங்கள் ஒவ்வொரு துறையிலும் இருந்தது எனவும் அறியப்படுகிறது.

> "நெடுங் கால் மாடத்து ஒள் எரி நோக்கி
> கொடுந்திமில் பரதவர் குரூஉச் சுடர்
> எண்ணவும் "

(பட்டினப்பாலை111 112)

> "விண் பொர நிவந்த வேயா மாடத்து
> இரவின் மாட்டிய இலங்கு சுடர் நெகிழி
> உரவுநீ ரழுவத் தொடுகலங் கடையுறி ·
> துறைபிறக் கொழியப் போகிக் கறையடி"

(பெரும்பாணாற்றுப்படை398 352)

> "கோடுயர் திணிமலை கன்றுறை நீகாண
> மாட வெள்ளெரி மருங்கரின் தொய்ய"

(அகநானூறு 255:566)

ஆகிய பாடல்கள் கலங்கரை விளக்கம் பற்றி நம் முன்னோர் அறிவை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

மேற்கூறப்பட்ட இலக்கியச் சான்றுகள் மூலம் பண்டைத் தமிழரின் வாணிப வளர்ச்சி, கப்பல், அறிவு ஆகியன அறியப்படுகின்றன. கப்பலோட்டுவதற்கான அனைத்து அறிவையும் அவர்கள் பெற்றிருந்தது அவர்களின் மரபு வழியேயன்றி வேறொன்றுமில்லை. பரதவர்களிடையே சென்று வாய்மொழிச் செய்திகளைச் சேகரித்தால் மேலும் பல அரிய செய்திகளை அறியலாம். அறிவியலறிவு எனத் தனித்துத் தெரியப்படாமலே பலவகை அறிவும், வளர்ச்சியும் அவர்களிடம் இருந்தன, இருந்து வருகின்றன. என்றும் இருக்கும் என்பதே காலஞ்சார்ந்த உண்மை.



# தமிழ்மாணவன் தமிழறிந்த மாணவனா?

## புலவர் த.கோடப் பிள்ளை

மனிதன் மனத்தால் எண்ணுகிறான். எண்ணிய கருத்து, மொழியால் வெளிப்படும். வெளிப்படும் மொழிக்கு அடிப்படை எழுத்து. அவ்வெழுத்தை ஒலித்திட வேண்டும். ஒலி எழுத்துக்கு இயைபுடைய வரி எழுத்தை-வரி வடிவத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

மாணவனுக்கு இயற்கையறிவோடு செயற்கை அறிவையும் ஊட்டுகிறோம். சிந்திக்க, செயல்பட வழிகாட்டுகிறோம். எதிர்கால வாழ்வுக்கு ஏற்றன எடுத்துத் தருகிறோம்.

மாணவனுக்குத் தரவேண்டிய கருத்தைப் பல பாடங்களாக வகுத்துத் கொண்டுள்ளோம். அப் பாடங்களைப் பிழையற உணர, மொழியால் பிழையற எழுதக் கற்பிக்க வேண்டும்.



எப்பாடமாயினும்-எக் கருத்தாயினும்- அப்பாடத்தைப் பற்றிய அறிவை வளர்க்க மொழியே அடிப்படையாகத் தேவைப்படுகிறது. மொழியைத் தெளிவுறக் கற்றால்தான் மாணவன் பிற பாட அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களையும் கற்க அடிப்படை தாய்மொழிப் பாடமே.

பள்ளியில் ஒரு மாணவனுக்கு ஓர் ஆசிரியரே அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கின்ற நிலை கீழ் வகுப்பில் இருக்கின்றது. தொடக்க நிலையில் பயிலும் மாணவன், வகுப்பு உயர உயர ஒரு பாடத்துக்கு ஓராசிரியரே கற்பிக்கும் நிலை உருவாகிறது. இந்நிலையடைகின்ற மாணவன் சிந்தனையை வளர்த்து, தானே வினாவுக்கு விடையெழுதவும் கட்டுரை ஆக்கவும் உரையாடவும் பயில்கின்றான். செய்யுளைப் படித்துப் பொருளுணரவும் உணர்ந்ததை எழுதவும் பிறரோடு கலந்து இலக்கிய உணர்வை பெருக்கிக் கொள்ளவும் திறனை வளர்த்துக் கொள்கின்றான். சொற்களை ஆளவும் கற்கின்றான்.

தாய்மொழியாகிய தமிழைத் தொடக்க வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கின்றான். ஆறு அல்லது ஒன்பதாம் வகுப்பு முதல் தமிழாசிரியரே இவனுக்குத் தமிழ் கற்பிக்கின்றார். எனினும் இவன் எழுதும் தமிழ் பிழையின்றி அமைகின்றதா?

ஓர் எடுத்துக்காட்டு:

பன்னிரண்டாம் வகுப்பு மாணவனொருவன் ஒரு வினாவுக்கு எழுதிய விடை:

"ஒவ்வொரு ஊரிலும் தேர்தெடுக்கப்பட்ட ஊர்சபையினர்

ஊராட்ச்சியை கவனித்து வருவர். ஊர்சபை உறுப்பினர் குடவோலை வாயிலாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஊர்சபையில் உறுப்பினர் ராகுவதற்கு சொந்த மனையும், சொந்த வீடும், கல்வியறிவும், நல்லொழுக்கமுடையவரே தகுதியுடையவராக வரையறுக்கப்படுவர். இச்செய்தி முதல் பராந்தக சோழன் கி.பி.921 பொறிக்கப்பட்ட உத்திரமேரூர்க் கள் வெட்டு மூலம் அறியலாம்.

இவ்வொரு பத்தியை எழுதுவதில் பதினான்கு இடங்களில் எட்டுவகைப் பிழைகளைச் செய்கின்றான்!

1. சொல்லும்போது ஒலிக்கும் எழுத்துகளை னைத்தையும் எழுதவில்லை

தேர்தெடுக்கப்பட்ட; ஊர்சபை
(தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச்சபை)

2. தேவையில்லாதவிடத்து வல்லெழுத்தை மிகுவிக்கின்றான்.

ஊராட்ச்சி (ஊராட்சி)

3. தேவையுள்ளவிடத்து வல்லெழுத்தை மிகுவிக்கவில்லை.

வாயிலாக தேர்ந்தெடுக்கப் படுவார்கள்
(வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ).

4. சொல்லைப் புணர்த்து எழுதப் பிழைபடுகின்றான்.

உறுப்புனர்ராகுவதற்கு (உறுப்பினராகுவதற்கு)

5. எண்ணும்மையை விட்டுவிடுகின்றான்.

நல்லொழுக்கமுடையவரே
(நல்லொழுக்கமுமுடையவரே)

6. வேற்றுமையுருபை விட்டு விடுகின்றான்.

இச்செய்தி (இச்செய்தியை)
பராந்தக சோழன் (பராந்தக சோழனால்
கி.பி.921 (கி.பி. 921-இல்)

7. சொல்லில் எழுத்துப் பிழை ஏற்படுகிறது.

கள்வெட்டு (கல்வெட்டு)

8. ஓரிடத்தில் பிழை செய்து மற்றோரிடத்தில் சரியாக எழுதுகின்றான்.

தேர்தெடுக்கப்பட்ட (தேர்ந்தெடுக்கப்படுவார்கள்)

இதிலிருந்து அறியப்படுவன:

1. மாணவன் ஒலிப்புமுறையைச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.

2. பார்த்துப் படித்தபோது எழுத்துகளை முழுமையாகப் பார்த்து மனத்தில் நிறுத்திக் கொள்ளவில்லை.

3. சொற்றொடரில் செயப்படு பொருளுக்கு இரண்டாம் வேற்றுமையுருபையும் (ஐ), ஆக்குவோனுக்கு மூன்றாம் வேற்றுமையுருபையும் (ஆல்), ஆண்டு எண்ணுக்குப்பின் எழுத வேண்டிய ஏழாம் வேற்றுமையுருபையும் (இல்) எழுதவில்லை.

4. பொருளுணர்ந்து எழுதவில்லை.

5. எழுதியதை மீண்டும் சரிபார்க்கவில்லை.

6. கவனக்குறைவு.

தமிழ் மொழியறிவு தமிழ் வகுப்பில் மட்டும் நிறைவு பெறுவதில்லை. பிற பாட வகுப்புகளிலும் தமிழ் வளர்தலால் நிறைவு பெறும்.

`சுவரில் பூனை ஏறுகிறது' என்பார் தமிழாசிரியர். `சுவற்றில் வெள்ளையடித்தல் நன்று' என்பார் மற்றொரு பாட ஆசிரியர்.
`சுவத்தில் சாயாதே' என்பார் இன்னொரு பாட ஆசிரியர்!
மாணவனுக்கோ குழப்பம்! மேலும் `கருத்துகளே இன்றியமையாதன; எழுத்து தேவையில்லை' என்ற மனப்போக்கு பிற பாட ஆசிரியர் சிலரிடம் இருக்கின்றது. ஒருமை பன்மை முடிபு, உயர்திணை, அஃறிணை வேறுபாடு, பால்பகுப்பு என்பனவெல்லாம் அவர்க்குத் தேவையில்லாதன!

இந்நிலையில் மாணவன்-தமிழ்ப்பாட வாயிலாக இலக்கிய உணர்வையும் பெற வேண்டியவன்-அடிப்படை மொழியறிவைப் பெருக்கிப் பிழைநீக்கி, எழுத, படிக்க, பேச, கேட்க என்னும் மொழித் திறன்களை வளர்த்துக் கொள்கின்றானா?

செய்ய வேண்டுவன:

தொடக்கக் கல்வி நிலையில் தமிழ்ப்பாடம் கற்பிப்பவர், தம்மை மொழியறிவு உடையவராய் ஆக்கிக் கொள்ளல் வேண்டும். `ஒலிப்பு முறை நன்கறிந்தவராகவும் எழுத்துகளைத் தெளிவாக எழுதுபவராகவும் அமைதல் வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையான மொழியை மாணவன் கற்க -மொழித் திறன்களைப் பெற -கற்பிக்கும் ஆர்வமுடையவராகத் தம்மையுயர்த்திக் கொள்ளல் நன்று. நோக்கம் நிறைவேற ஊக்கமுடையவராய் உழைத்தல் நன்று.

இதற்காகக் கீழ்வகுப்புப் பாடம் எடுக்கும் ஆசிரியர்க்கு ஆண்டுதோறும் பணியிடைப் பயிற்சி கொடுத்தல் நன்று.

அடுத்த நிலை வகுப்புகளுக்கும் மேல் வகுப்புகளுக்கும் தமிழ்ப்பாடம் நடத்தும் தமிழாசிரியர், மாணவன் தானே கட்டுரை எழுதிடப்

பிழையின்றிச் சொற்றொடர் அமைக்கப் பயிற்றல் நன்று. சொற்களஞ்சியம் மாணவனிடம் பெருக, செய்யுள் உரைநடைப் பாடங்களை ஊக்கத்துடன் பயிற்றல் நன்று. பேசவும் கேட்கவும் எழுதவும் படிக்கவும் தமிழைச் செந்தமிழாய் மாணவனுக்கு அளிக்க வேண்டும். எழுத்துப் பயிற்சியை எல்லாருமே கொடுத்துத் திருத்துதல் நன்றாம்.

இன்றைய மாணவர்களில் பெரும்பகுதியினர் செய்யுளைப் பாடுவதே, ஏன்-படிப்பதே இல்லை! இக் குறையை நீக்கத் தமிழாசிரியரே முயலவேண்டும்.

பெற்றதைப் பிறர்க்கு வழங்கும் திறன் மாணவனிடம் வளர, கற்ற அறிவை மற்றவரும் அறிய எழுதி வைக்கும் எழுத்தாற்றல் வளரத் தமிழாசிரியர் முயன்று கற்பித்திட, "இவனென்ன தமிழாசிரியனாகப் போகப் போகிறானா? என்று மற்ற ஆசிரியரும் எண்ணாமல் ஒத்துழைப்பு நல்கிட, தமிழ் மாணவன் தமிழறிந்த மாணவனாகச் சிறப்படைவான் என்பதில் ஐயமில்லை.

# நாணச் செய்யும் ஈனச் செயல்கள்



கவிஞர் தீப்பொறி டி.எஸ். பொன்னுசாமி

தமிழன் கடையில் தமிழன் நுழையத்
தயக்கம் கொள்வதுவும்
தமிழன் வந்தால் தமிழில் பேசத் தவறிச்
செல்வதுவும்

தமிழன் செய்த தவற்றைச் சுட்டித்
தர்க்கம் செய்வதுவும்
தமிழன் தமிழனைச் சுரண்டிச் சுகிக்கத்
தருணம் பார்ப்பதுவும்

தமிழன் கண்ணீர்த் துளியைப் பார்த்துத்
தமிழன் நகைப்பதுவும்
தமிழன் தலையைச் சாய்க்கத் தமிழன்
தன்னைச் சிதைப்பதுவும்

மானத் தமிழனை நாணச் செய்யும்
ஈனச் செயல்களடா!- இதைக்
காணக் காண என்னுள் எத்தனை
கவிதைப் பொறிகளடா!

# விளைக இன்பம்

## கவிஞர் மு. பரத பாண்டியன்

கடல்கடந்த தமிழா நீ
கண்ணீரைக் கடந்ததுண்டா?
கடன்பட் டாயேல்,
உடனதனை அடைத்ததுண்டா?
உளஅமைதி கிடைத்ததுண்டா?
உரைப்பாய் நீயே!
உடலங்கே உயிரிங்கே
உலவுமெனில் உயர்வெங்கே
கிட்டும் சொல்வாய்?
கெடலெங்கே நீமட்டும்
கெட்டிமகன் செட்டிமகன்
ஆகி விட்டால்!

அகதிநிலை அதோகதிதான்
அறிந்துகொள்நீ! புரிந்துகொள்நீ!
ஐயோ, அந்தச்
சகதிநிலை தமிழனுக்கே
சார்புவியில் வாய்த்ததடா
சரியா சொல்வாய்!
நகுவதற்கோ நீபிறந்தாய்!
நடைப்பிணமோ நீசொல்வாய்!
பிறரின் மண்ணில்,
புகுவதெனில் அஞ்சுவாய்நீ!
புரியாமல் இன்றுநீயே
புலம்பு கின்றாய்!



வானாண்ட மறவர்குல
வரிவேங்கை நீயென்றால்
அட்டி யுண்டோ?
மீனாண்ட புலியாண்ட
வில்லாண்ட இனத்தவன்நீ
நீயா ளாமல்,
ஏனாண்டான் பிறநாட்டான்
எண்ணிப்பார் எண்ணிப்பார்
உனையே நீயே!
தேனாண்ட தமிழ்மொழியைத்
திசையாள வைத்தவனே!
தெளிக நன்றாய்!

மலேசியா, சிங்கப்பூர்
மண்மேட்டில் வாழ்பவனே!
உனக்கோர் துன்பம்
இலேசாக வந்ததென்றால்,
எமதிதயம் நோகுமன்றோ?
எடுத்துரைநீ!
உலோகத்தின் காலத்தில்
உலவுகின்ற அறிவியல்சீர்
வாய்ந்த வன்நீ!
சுலோகங்கள் முழங்கட்டும்
சுடர்த்தமிழர் எழுந்திடட்டும்!
விளைக இன்பம்!

# அறிவியல் தமிழில் அளவையியல்

**பேராசிரியர் ஆர். மணிவண்ணன்**

"இனிமையும் நீர்மையும் தமிழ்என லாகும்"

-(பிங்கல நிகண்டு)

"தமிழ் வையைத் த ண்நன் புனல் "

-(பரிபாடல்)

"தமிழ்ப்பாட் டிசைக்கும் தாமரையே"

-(கம்பன்)

இவ்வாறு தமிழ் நூல்களின் துணைகொண்டு ஆராய்ச்சி செய்த பின்னர் தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை, அழகு என்று பொருள் அமைந்துள்ளது என்று தெளிவாக அறியமுடிகிறது. இதனால் தமிழில் எந்த நூல் வெளிவந்தாலும் மேற்கூறிய பண்புகள் இருந்தேயாகவேண்டும். தமிழ் இலக்கியமோ தொன்றுதொட்டு வருகின்றது. தமிழின் பழமையையும், அதன் பெருமையையும் அறியப் பல துணை நூல்களும் எழுந்தவண்ணம் இருக்கின்றன. அதுமட்டுமின்றி அப்படி நூல்கள் மேன்மேலும் வளரவேண்டிய சூழ்நிலையும் இன்று வளர்ந்துகொண்டே வருகின்றது.



உலகம் வளரும் தன்மையுடையது. மனித சமுதாயம் இந்த உலகத்தோடு சேர்ந்தே உலகின்கண் ஒன்றாக ஒன்றிவிட்ட அழகு. இயற்கை என்பனவற்றை இணைத்துப் பார்க்கும் போது சேர்ந்தே வளர்ந்து கொண்டு வருகின்றது. மொழியானது காலத்தோடு ஒட்டி மக்கள் வளர்வதற்குத் தக்க முறையில் அவ்வப்போது எப்படிப்பட்ட தேவைகள் தோன்றுகின்றனவோ அப்படிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்த வண்ணம் உதவி செய்து கொண்டு வருகின்றது. இந்த உதவியைப் பற்றி,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்"

என்று நன்னூலாரும்,

"காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்"

என்று பாரதியாரும் கூறிப் போந்தனர்.

தமிழிலக்கியப் பரப்பானது தமிழர் சமுதாயம் தொன்றுதொட்டுத் தொன்மைநலம் சார்ந்து இன்றுவரை. எண்ணிலடங்காப் பிரச்சினைகளைக் கண்டும் பல்வேறு அனுபவங்களைப் பெற்றும் வந்து, இன்றைய இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பற்பல புதிய துறைகளில் சிந்தனையையும் திறமையையும் புகுத்தி, எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் என்று ஓங்காரக் குரல்

எழுப்பி வருகின்றது. இதில் வெற்றியும் பெற்று வருகின்றது.

சங்க நூல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழரின் காதல் வாழ்விலும், வீரவாழ்விலும் அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பரிபூரணமாக எடுத்தியம்புகின்றன. சங்கம் மருவிய காலத்தில் நீதி நூலான திருக்குறள் எழுச்சியுற்றது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலத்தே தமிழ் பக்தி உச்ச கட்டத்தில் மிளிர்ந்து பரவசமூட்டியது. புரட்சி, புதுமை எண்ணம் போன்ற எண்ணங்கள் மக்கள் மனத்தில் நாளடைவில் புகுந்து, அதன் பயனாகப் பள்ளு, குறவஞ்சி போன்றவை வெளிவந்தன. அடிமை வாழ்வை அகற்றிடவும், அந்நியர் ஆட்சியை ஒழித்திடவும் உரிமைப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்ட நேரத்தில் எரிகின்ற விளக்கிற்கு எண்ணெய் வார்ப்பதுபோலப் பாரதி புறப்பட்டு அகில உலகத்தையும் தம் கவிதைகளால் ஆட்டிப் படைத்தான். பாரதி எளிய நடையில் கவிதைப் புரட்சி செய்து எண்ணங்கள் எங்கெல்லாம் செல்கின்றனவோ, அங்கெல்லாம் சென்று எல்லார் மனத்திலும் புதிய வலுவும் மங்காத வாழ்வும் பெற்றிடச் செய்ததன் பயனாய்ப் பாவேந்தர் பாரதிதாசன் போர் முரசம் எட்டு திக்கும் கொட்டினார்.

பாரதி புதிய துறைகளையும், புதிய கருத்துக்களையும் தோன்றச் செய்து அதன் வழியாக அறிவியல், மருத்துவம், சட்டம் என்று பல்வேறு துறைகளிலும் தமிழன்னை கோலோச்ச வேண்டும் என்று கனவு கண்டு அந்தக் கனவு நனவாகி, தொழிலாளர்களின் உழைப்பினைப் போற்றிப் - பொது உடைமை பரவ வேண்டும் என்று கூறி, "எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்" என்று பாவேந்தர் கூறியதும் நடைபெற்று வருவதை நாம் காண்கின்றோம்.

இவைபோன்ற அறைகூவல்களால் உந்தப்பட்டு இன்று அறிவியல் தமிழ் என்பது பற்றி ஆராய்கிறோம்.

அறிவியல் என்றால் என்ன? உலகிலுள்ள மக்களின் நடவடிக்கைகளை உற்றுநோக்குவோம். இவர்களின் நடவடிக்கைகள் பல்வேறு கோணங்களில் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் சிந்தித்து அவற்றின்மூலம் நாம் அறிவைப் பெறுகின்றோம். தத்துவம், ஞானம், கலை இன்ன பிறவெல்லாம் சீரிய சிந்தனையின் பின்னர் உருவெடுத்த உண்மை அறிவே ஆகும். இந்தஆற்றல் பெற்றுள்ளமையால்தான் மக்கள் விலங்குகளின்றும் வேறுபடுகின்றனர். எடுத்துக்காட்டாக, மனிதன் காணுகின்ற தன்மை - இதுவே அறிவுநிலையாகின்றது. முதலில் காட்சி. அடுத்து எண்ணம். எண்ணத்தினால் அறிவுநிலைபெற்றுப் பின்னர் உணரும் தன்மை ஏற்படுகின்றது. இது உணர்வுநிலை. தன்னுடைய காட்சி, எண்ணம் (அறிவு நிலை), உணர்வு இவற்றைப் பிணைத்துச் செயலாற்றும் எண்ணம் தோன்றுகின்றது. இது செயல்நிலை.

இப்படி எண்ணிய பிறகு ஒரு (முடிவான) உண்மையைத் தெரிந்து கொள்கின்றான். சமுதாயத்தில் அவரவர்களின் விருப்பங்களை நிறைவு செய்யும்போதுதான் அவர்களின் பலதரப்பட்ட செயல்பாடுகளைக் காண முடிகின்றது. தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு முன்னர் கண்டு, உணர்ந்து, தெளிந்து இதுதான் உண்மை என்று முடிவெடுக்கின்றான். இப்படி உண்மையைத் தெரிந்துகொண்ட பின்னர் தன்னுடைய உணர்வினால் தூண்டப்பெற்று இது இயற்கை, அது செயற்கை, இது அழகு, அது அழகற்றது என்ற அவ்வவ்வற்றின் தன்மைகளைப் (*Quality*) பாகுபடுத்த முயல்கின்றான். செயல் என்னும் வினைக்கு மாற்று இல்லை ( *Work has no alternative*).

இந்த வழிமுறையில் சில கருத்துக்களைக் கூறலாம்:

1. அளவை இயல் அல்லது தருக்க முறை ஒரு அறிவியலாகும்.

2. தருக்க முறை உள்ளத்தின் செயலை நன்கு ஊன்றிப் படிக்கச் செய்கிறது.

3. முடிவில் உண்மையை அறிய முடிகிறது.

ஒரு திட்டம் வகுத்து ஒரு குறிப்பிட்ட துறையில் ஒரு பொருளை எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து முழுமையாகவும், முறையாகவும் படித்துணர்ந்து செயல்படுவதையே அறிவியல் என்று கூறலாம். அறிவியலில் ஆராய்ச்சியின் விளைவாக ஏராளமான கருத்துக்களைத் தெளிவோடும், நுண்மையோடும் துல்லியமாகவும் உணர்ந்து தெளிவடைய முடிகின்றது. தேரான் தெளிகின்றான்; தெளிந்தான் ஐயம் போக்கிக் கற்கின்றான். கற்ற பின் உலகையே தான் கற்றபடி (அறிவியல் முறையில்) ஆட்டிப் படைக்கின்றான்.

அறிவியல் முறையில் படிக்கும்போதும் பாகுபடுத்திக் கூறும்போதும் எண்ணத்தின் ஆரம்பநிலை (*Simple apprehension*) உருவெடுத்து ஒரு தீர்ப்பு நிலையை ( *Judgement*) அடைய முடிகின்றது. எடுத்துக்காட்டாக, நாம் ஒரு பொருளைக் காண்கிறோம். கண்டவுடன் அப்பொருளை ஆதரிப்பதும் இல்லை

மறுப்பதுமில்லை - ஆனால் அந்தப் பொருள் இதுதான் - அது அல்ல என்று துணிவு ஏற்படுகின்றது. மேலும், சூரியன் மறையும் திசையை நோக்கி ஒவ்வொரு நாளும் சென்றபடியால்தான் அந்த நாளில் படகில் சென்றவர்கள் எப்போதும் ஒரே திசையில் செல்லுகின்றார்கள் என்பதை உணர்ந்தார்கள். இதனால் அவர்கள் எப்போதுமே பிழைத்ததில்லை (தவறு இழைக்கவில்லை). இப்படி உள்ளத்தில் உண்மையான முடிவை அறிந்த பின்னர் எழுத்து வழியாகவும் மொழிவழியாகவும் எடுத்தறிவித்தனர். முன்னோர்கள் சிந்தனைச் சிற்பிகளாக இருந்து எண்ணங்களை ஆராய்ந்து, அவற்றை மொழி வழியாகவும் எழுத்து வழியாகவும் வெளியிட்டு அப்படிப்பட்ட கருத்துக்களை நாமும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நூல்களைச் செய்துவைத்தார்கள்.

இந்தக் கருத்துக்களை மக்கள் தங்கள் எண்ணங்களோடு இணைத்து இவற்றினின்று ஒரு முடிவான உண்மையை அறிந்து தெளிவடையும்போதுதான் அப்பொருளின் பரந்த நிலையும் ஈடு இணையற்ற சிறப்பும் தெரியப்பெற்று அப்பொருள் எத்தன்மைத்து என்று போற்றி,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள்"

என்று காண ஏதுவாகின்றது. மக்களுக்கு இயற்கையிலேயே சிந்திக்கும் திறன் அமைந்திருப்பதால்தான் இது அறிவியல் என்று பிரித்து நோக்காமல், இலக்கிய உணர்வு ஊன்றிய வண்ணமே எண்ணிட முடிகின்றது. இந்தச் சிந்தனைத் திறனை அறிவியலின்பால் ஈர்த்து, இணைத்து, விதிகளைக் கையாண்டு பயன்படுத்தினால் இலக்கியத்தின் மற்றொரு பகுதியான அறிவியலின் தன்மை தெரிந்து, தங்களின் சிந்தனைத் திறனைப் பெரிய அளவில் வளர்த்துக் கொள்ள முடியும்.

"கடவுள் மனிதனை இரண்டு கால் விலங்காகப் படைத்து அரிஸ்டாடில் என்னும் கிரேக்க தத்துவ ஞானியிடம் சென்று சிந்திக்கக் கற்றுக்கொள் என்று சொல்லவில்லை" என "லாக்" ( Lacke) என்ற தத்துவப் பேரறிஞர் கூறியதைப் பார்க்கும்போது - மக்களுக்குச் சிந்திக்கும் திறன் ஒரு சிறப்புக்கூறாக இருக்கின்றது என்று புலப்படுகின்றது. இருந்தாலும் இந்தச் சிந்தனைத் திறனை வளர்ப்பதற்கும் ஒழுங்கமைத்துச் சீரான முறையைப் பின்பற்றவும்தான் ஒருவன் அளவையியல் என்னும் அறிவியலின் பகுதியை நன்குக் கற்றறிய வேண்டும் என்பதை,

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" ( குறள்)

என்று திருவள்ளுவர் விளக்குகின்றார்.

ஒரு மொழிக்கு எவ்வாறு இலக்கணம் தேவையோ அவ்வாறு சிந்தனைக்கும் சில வழிமுறைகள் தேவை. "இவ்விழாவிற்கு நான் வந்து பேரறிஞர் பலரின் சொற்பொழிவைக் கேட்டுச் சுவைத்தேன்" என்று கூறுவதற்குப் பதிலாக இவ்விழாவிற்கு நான் வந்து சொற்பொழிவைக் கேள்வியுற்றுச் சுவைத்தான் என்றால் தமிழ் மொழி அறியாதவன் என்று எல்லாராலும் நகைக்கப்படுவேன். இதேபோல் அளவை இயலை அறிந்தவன் - தான் எண்ணும்போதும், பிறர் எண்ணி அவர்களின் சிந்தனையை வெளிப்படுத்தித் தருக்கம் செய்யும்போதும் அதிலுள்ள பிழைகளைக் கண்டு இது சரி, இது தவறு என்று திருத்த முற்படுவான். அடுத்தடுத்து இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யாமல் தடுத்திடவும் அளவை இயல் உதவிபுரிகின்றது.

"உலகில் அதிக முக்கியம் வாய்ந்தது மனிதன் என்றால், அவனிடம் முக்கியமாக அமைந்தது அவனுடைய உள்ளமே" என்று ஆமில்டன் என்ற அறிஞர் கூறுகிறார். எனவே நாம் உள்ளத்தைக் காக்கவேண்டும். எண்ணங்களின் விதிமுறைகளை அறிந்து அந்த விதியினை வழிமுறையோடு கையாண்டு வருபவர்களின் உள்ளம் சிறப்பான முறையில் சிந்திக்கும் ஒரு தொழிற்சாலையாக அமைகிறது. அறிவியலின் பகுதியான அளவை இயலை அறிந்தவன் எப்பொருள் பற்றி யார்யார் கூறினாலும் அப்பொருளை எழுத்து எழுத்தாகப் பிரித்து ஆராய்ச்சி செய்து அதை நாள்தோறும் நடைமுறையில் செயலாற்றும் மற்ற செயல்களோடு ஒப்பிட்டு, இதன்மூலம் ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்த மாபெரும் அறிஞனாகிவிடுகிறான். உண்மையான முடிவை யாரும் ஏற்பார்கள் அல்லவா? இன்றைய இருபதாம் நூற்றாண்டும் வெகுவிரைவில் வர இருக்கும் இருபத்தோராம் நூற்றாண்டும் அறிவியலை எங்கும் புகுத்தத் தயாராக இருக்கின்றது. இதனால் அறிவியல் தலைசிறந்து விளங்கும் என்பது நன்றாக உணர முடிகின்றது. அதற்காக அறிவியலை நல்ல முறையில் கையாளவேண்டும். மேலையோர் வகுத்த முறையையும் இன்றைய அறிவியல் ஆய்வறிஞர்கள் கண்டுபிடித்த வழிமுறைகளையும் சரியான முறையில் பயன்படுத்தினால்தான் எதிர்பார்க்கும் அறிவியல் தமிழ் நல்ல முன்னேற்றம் அடையக் கூடும். அளவையியலும் இந்த முன்னேற்றம் பற்றிக் கூறுவதாக இந்த இயலின் வழிமுறைகளையும் அறிவியலார் கற்றுத் தேர்ந்து கையாண்டால் நாடு

தமிழ் அறிவியலில் செழிக்கும்; எளிதில் வேகமாக முன்னேற்றப் பாதையிலும் செல்லும்.

அறிவியலை இருப்புநிலை நூல் (Natural Science), உயர்நிலை நூல் (Normative Science) என்று இரு கூறாகப் பிரிக்கலாம். பொருள்கள் எப்படித் தோன்றுகின்றன - இருக்கின்றன - வளர்கின்றன என்று இருக்கின்ற நிலையிலே கூறுவது இருப்புநிலை நூல்களின் கருத்தாகும். அதே நேரத்தில் பொருள்கள் எப்படி இருக்கவேண்டும் - எவ்வாறு இயங்கவேண்டும் என்று விளக்கங் கூறுவது உயர்நிலைநூல்களின் தன்மையாகும். இதில் இயற்பியல், வேதியியல், தாவர இயல் போன்றவை இருப்புநிலை நூல்களாகும். இயற்பியலில் பொருள் எந்த நிலையில் உள்ளது என்பது பற்றியும், வேதியியலின் கூட்டுப் பொருள்களின் செயற்கையைப் பற்றியும், பல்வேறு மலர்களைப் பற்றியும், விதைகளைப் பற்றியும் தாவரவியலில் அறிகின்றோம். ஆனால் உயர்நிலை நூல்களாகிய அறவியல் (Ethics), எழிலியல் (Aesthetics), இலக்கணம் (Grammar) போன்ற அறிவியல் நூல்களில் மக்கள் எப்படிச் நடக்கவேண்டும், அழகுப் பொருள்கள் எப்படி அமையவேண்டும், மொழி எப்படி இருக்கவேண்டும் என்றெல்லாம் அழகாகவும் சிறப்பாகவும் எடுத்தியம்பக் காணுகின்றோம். அறவியல் என்றால் நேர்மை; உயர்நிலை - எழிலியல் என்றால் அழகு; உயர்நிலை - மொழி என்றால் திருத்தமான மொழி, இலக்கணம், உயர்நிலை என்று சொல்லாமலே விளங்குகின்றது.

இவ்வளவு திறமையான அறிவைப் பெறுவதற்கு அறிவியலின் அளவை இயலை ஓர் உண்மையான நுண்ணறிவைப் பெறுவதற்கு எப்படிச் சிந்தித்து ஒரு உயர்ந்த நிலையை அடையவேண்டும் என்பதற்கு ஏதுவாக இந்த அளவையியலைத் தமிழில் பயன்படுத்துவோம்.

"தாமின் புறுவது உலகுஇன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

- குறள்

வளர்த்துக் கொண்டே போகாமல் இறுதியாக ஒன்று கூறலாம்.

இலக்கு என்பது குறி. இலக்கியம் என்றால் குறிக்கோளுடையது என்பது பொருள். சாகா இலக்கியங்கள் பல இன்றும் இருந்துவருவதால்தான் தமிழ்மொழியின் இலக்கியச் சிறப்பு - தனிச்சிறப்பு வாய்ந்ததாய் இருக்கின்றது. தமிழ்ப் பேரறிஞர் பல்லோரும் அவரவர் இயற்றிய நூல்களைத் தமிழ்நாட்டுக்கு என்றுமட்டுமல்லாமல் உலகுக்கே படைத்தனர்.

"உலகெலாம் உணர்ந்து" என்று சேக்கிழாரும், "உலகம் யாவையும்" என்று கம்பநாடரும், "உலகம் உவப்ப 70 என்று நக்கீரரும், "அங்கண் உலகளித்தலால்" என்று இளங்கோவும், " ஆதிபகவன் முதற்றே உலகு" என்று திருவள்ளுவரும் எடுத்துக் கூறுகின்ற இயல்பை நோக்கும்போது தமிழகப் பேராசிரியர்களும் பேரறிஞர்களும் உலகுக்கே தம்மை ஆட்செய்துகொண்டு, உலகம் உய்யவேண்டும் என்று பெரிய மனத்தோடு எண்ணினார்கள் என்று நன்கு தெரிகின்றது. இதை நனவாக்கி உலகிற்கு நல்ல முறையில் உழைக்க முற்படுவோம். வெற்றிபெற இன்னமும் எவ்வளவோ படிக்கவேண்டும். எதிர்காலத்திற்காகப் படிக்கவேண்டும். இந்த முறையால் கற்பதால் எதிர்காலத்தில் சமாதானப் பணிகள் செவ்வனே - நடைபெறும்; உணவு மலைமலையாகக் கிடைக்கும்; இருக்க இடமும் கிடைக்கும். உள்ளமும் உடலும் வலிமைபெறும் என்ற அறுதியிட்டுக் கூறமுடியும்.



# பழமொழிகள் கூறும் நம்நாட்டு மருத்துவம்

பேராசிரியர் கு.மதிவாணன்

பழமொழிகள் பட்டறிவில் முகிழ்த்தவை. எல்லாப் பொருளும் இதன்பால் உள என்ற பாராட்டு, பழமொழிகட்கும் பொருந்தும். உடல் நலம் காத்தல், நோய்த் தடுப்பு, நோய்நீக்குதல் போன்றவற்றிற்கும் பழமொழிகள் பல வழிகளை எடுத்துக் கூறுகின்றன. ஆயினும் பழமொழிகள் கூறும் நம் நாட்டு மருந்துகளைப் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

மருந்துகள், செடி கொடிகளின் இலை, பட்டை, வேர், பூ, கனி, போன்றவற்றிலிருந்து செய்யப்படு கின்றன.

மூலிகைகளைப் பயன்படுவத்துவதன் மூலம் உடல் நலத்துடன் வாழலாம். உடல் நலம் பெற்றால் எதனையும் செய்து முடிக்கலாம். ஆகவே மூலிகைகளை நோய் வராமல் காக்கவும், நோய்க்கு ஏற்றவாறு பயன்படுத்தவும், தெரிந்து கொள்ள வேண்டும்.



`மூலிகை அறிந்தால்
மூவுலகையும் ஆளலாம்'
என்பது பழமொழி.

எளிய நோய்களை மூலிகைகளைக் கொண்டு தீர்க்கலாம். நாட்பட்ட நோய்களைத் தீர்க்க பஸ்பம் செந்தூரம் போன்றவை பயன்படுகின்றன.

`வேருபாரு தழை பாரு
மிஞ்சினால் பஸ்பம் செந்தூரம் பாரு'

என்பது பழமொழி.

**நலமாக வாழ**

புண், வேக்காடு போன்றவற்றைப் போக்கவல்லது மணித்தக்காளிக் கீரை. அகத்திக்கீரை வயிற்றில் ஏற்படும் புண்களை ஆற்றவல்லது. மன ஒருமைப்பாட்டையும் உடல் நலத்தையும் தந்து ஆயுளைப் பெருக்கவல்லது தூதுவளை. வெங்காயம் உயிர்ச்சத்து `சி' மிகுந்ததும் நோய் எதிர்ப்பாற்றலைத் தர வல்லதும் ஆகும். ` பொன்னாங்கண்ணிக் கீரையினை உண்டால் உடல் பொன்போல் ஆகும். இரும்புச் சத்து மிக்கது கரிசலாங்கண்ணிக்கீரை. இரும்புச் சத்து மிகுந்தால் குருதி பெருகும். உடல், நலமும் வளமும் பெறும். நோய் எதிர்ப்பாற்றல் மிகும். கரிசலாங்கண்ணி( கரிசாலை) எங்கும் எளிதில் கிடைக்கக் கூடியது. ஆகவே பொருட்செலவின்றி ஏழைகளும் உடல் நலம் பேணலாம். இவற்றைக் கீழ்வரும் பழமொழிகள் வலியுறுத்துகின்றன.

`மக்களைக் காக்கும் மணித்தக்காளி'
`அகத்துப்புண்ணுக்கு அகத்திக்கீரை'
`தூதுவளை ஆயுளை விருத்தி செய்யும்'

`தன்காயம் காக்க வெங்காயம் வேண்டும்'
`பொன்னாங்கண்ணி மேனியைப்
பொன்னாக்கும்'
`ஏழைக்குக் கரிசாலை'

இரும்பிலிருந்து செய்யப்படுகின்ற அயச்செந்தூரத்தினை உண்டால் குருதி மிகும். நோய் எதிர்ப்பாற்றல் மிகும். ஆகவே தான்

`அயம் உண்டால் க்ஷயம் போகும்'
`இருக்கிறவன் இரும்பைத் தின்னு
போறவன் மண்ணைத் தின்னு'

போன்ற பழமொழிகள் வழங்குகின்றன.

**நோய்நீக்கி**

சுக்கு உணவுப் பொருட்களில் ஒன்று. இதனைப் பயன்படுத்துவதால் அனைத்து நோய்களும் தீரும். எடுத்துக்காட்டாகச் செரியாமை, மார்பெரிச்சல், புளியேப்பம், வெப்பம், காசம், நீரேற்றம், வாதநோய், வயிற்றுப்பிசம், முகநோய், வயிற்றுவலி, சீதபேதி, சளி, சுரம் போன்றவை நீங்கும். ஆகவே சுக்கினைத் தனித்தோ, பிற மருந்துப் பொருட்களுடன் சேர்த்தோ கியாழமிட்டுப் பயன்படுத்துவது வழக்கம். கருவுற்ற பெண்களுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள் தீர்ந்து நன்முறையில் மகப்பேறு நிகழ்வுக்குக் கியாழம் குடித்து வரவேண்டும்.

`சுக்கு அறியாத கஷாயம் உண்டா?'
`சுக்குக்கு மிஞ்சிய மருந்து இல்லை.'
`சுப்பராயனுக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை'

போன்றவை பழமொழிகள்.

சுக்கின் மருத்துவ ஆற்றலுக்கும் எல்லையுண்டு என்பதனைக் `கடப்பாறையை விழுங்கிப் விட்டுச் சுக்குக் கஷாயம் குடித்தால் தீருமா?' என்ற முதுமொழி உணர்த்தும்.

சீரகத்தினால் வாந்தி, வயிற்றுவலி, வாயு பித்தத் தொல்லைகள் நீங்கும். உடலுக்கு உறுதியும் கண்களுக்குள் குளிர்ச்சியும் தரும். உடல்இயக்கம் சீர்படும். ஆகவே `சீர் அகம் பெற சீரகம் தின்னு' என்கிறது பழமொழி.

உடலைப் பலவகையிலும் பாழாக்கிக் கொண்டவர்கள் காலையில் இஞ்சியினையும், பகற்பொழுதில் சுக்கினையும், மாலை வேளையில் கடுக்காயினையும் ஒரு மண்டலம் (48 நாட்கள்) பயன்படுத்தி வருவார்களாயின் கிழத் தன்மை நீங்கிக் குமரத்துவம் பெறுவர்.

`காலை இஞ்சி கடும்பகல் சுக்கு, மாலை
கடுக்காய்
மண்டலம் கொள்ள கோலை ஊன்றி
நடப்பவன்
கோலை வீசி நடப்பானே'

என்பது பழமொழி.

**காயம் கடி**

எங்கும் எளிதில் கிடைக்கும் சுண்ணாம்பு ஒரு சிறந்த நோய் நுண்மத் தடைப் பொருள், *(ANTISEPTIC)* இது வெட்டுக்காயங்களுக்கும் பூச்சிக் கடிகளுக்கும் சிறந்தது. அவசரத்திற்குப் பயன்பட்டு ஆபத்தினைப் போக்க வல்லது. உடலில் சுண்ணாம்புச் சத்து போதிய அளவில் இருந்தால் நோய் எதிர்ப்பாற்றல் மிகும். ஆகவே தாம்பூலத்துடன் சுண்ணாம்பினைச் சேர்த்தல் தமிழர் மரபு.

`அறுத்த விரலுக்குச் சுண்ணாம்பு
தரமாட்டான்'
`சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம்'

போன்றவை பழமொழிகள்.

**புண்**

எளிய புண் முதல் நரம்புச்சிலந்திப்புண் வரை ஆற்றும் ஆற்றல் மிக்கது மல்லிகைப் பூ.

`ஒடுக்கும் மல்லிகைப் பூ ஒட்டிய புண்ணை
என்பது பழமொழி.

சேராங்கொட்டையினைத் தூய்மை செய்து முறைப்படி செய்யப்பெற்ற மருந்து சிலந்திப் புண்களையும் ஆற்றும்.

`சேங்கொட்டை அண்ணன் சேதி
மறக்காதே' என்பது பழமொழி.

**வீக்கம்**

வீக்கத்தினைப் போக்கவல்லது எருக்கம் பாலே.

`எந்த வீக்கத்திற்கும் எருக்கன் பாலடி

என்பது பழமொழி.

**சளி, சுரம், இருமல்**

அடிக்கடி ஏற்படக் கூடிய நோய்கள் இவை. இவற்றுக்காக அச்சம் கொள்ள வேண்டாம். குப்பை மேனிச் சாறு அரை அல்லது ஒரு தேக்கரண்டி அளவு கொடுத்தால் மலத்தைப் போக்கிக் கோழையை அறுத்து வெளியே தள்ளும்.

விடாத கடுஞ்சுரமாக இருந்தாலும் எங்கும் எளிதில் கிடைக்கும் விஷ்ணுகிராந்தி என்ற

மூலிகையின் கஷாயம் போதும். இருமலுக்கு இன்புறாவேர் சிறந்தது.

`குப்பை மேனிச்சாறு கோழையை அறுக்கும்'
`விடாச்சுரத்துக்கு விஷ்ணுகிராந்தி'
`இம்பூரல் தெரியாமல் இருமிச் செத்தானே'

**உடலில் உள்ள நஞ்சுகளைப் போக்க**

நச்சுத் தன்மை மிக்க கழிவுகள் உடலில் இருந்து வெளியேறாவிட்டால் காய்ச்சல் ஏற்படுகிறது. அல்லது உணவில் கலந்து விட்ட நச்சுத் தன்மை மிக்க பொருட்களினால் தீய விளைவுகள் ஏற்படுகின்றன. இவற்றைப் போக்க மிளகுக்கியாழும் போதும்.

`பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்'
`விஷத்தைக் குடித்தவன் மிளகு நீர் குடி'

இவை பழமொழிகள்.

நச்சுத் தன்மை மிக்க மருந்துகளை அடிக்கடி உட்கொள்வதால் சிறு நீரகங்கள் வேலை செய்வதில்லை. கழிவு நீர் வெளியேறுவதில்லை. கைகால்கள் வீங்கும் கவலைக்கிடமான இந்நிலையைப் போக்க அறுகங்கட்டைக் குடிநீர் (DECOCTION) பயன்படும். உடலில் தேங்கும் கழிவு நீரினை வாழைத்தண்டும், கீரை வகைகளும் போக்கும்.

`அறுகங்கட்டை ஆபத்துக்குதவும்'
`வாழைத்தண்டும் கீரையும் வழியொடு நீரை இறக்கும்'

**விக்கல்**

உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய நோய். குழந்தைக்கு விக்கல் ஏற்பட்டால் வைக்கோல் துரும்பினை எடுத்துத் தலையில் செருகும் வழக்கம் உண்டு. விக்கலுக்கு வைக்கோல் சிறந்த மருந்து. வைக்கோலைக் குறுக அரிந்து நீரில் இட்டுக் கொதிக்க வைத்து இரண்டு கரண்டி அளவு அடிக்கடி கொடுத்தால் இரண்டு மூன்று முறைகளுக்குள் விக்கல் நிற்கும். கை கண்ட மருந்து இது.

`வைக்கலை வைத்து விக்கலை எடு
`வைக்கலைப் போட்டு விக்கலை உடை'

போன்றவை பழமொழிகள்.

**இடுமருந்தின் வேகம் தீர**

சில பெண்கள் ஆண்களை இடு மருந்தின் மூலம் வசியம் செய்து தங்களை விட்டு நீங்கா வண்ணம் செய்துவிடுவர். விளாம்பழ ஓட்டினைக் குடி நீராக்கிச் சாப்பிட்டால் இடு மருந்தின் வேகம் தீரும்.

`விட்டதடி உன்னாசை விளாம்பழத்து ஓட்டோடே' என்பது பழமொழி.

**கிரந்தி**

ஒழுக்கக் கேட்டினால் ஏற்படும் கிரந்தி நோயைப் போக்கச் செருப்படி என்ற மூலிகை பயன்படுகின்றது என்பதே.

`தாசி வீடு சென்றவனுக்குச் செருப்படி வேண்டும்' என்பதுபழமொழியின் உட்பொருள். எங்கும் கிடைக்கும் இம்மூலிகை செருப்படியின் வடிவினை ஒத்துத் தரையை ஒட்டிப் படர்ந்து வளரும்.

**மேலும் சில மருந்துகள்**

`வேலம் பட்டை பித்தத்தைப் போக்கும்'
`ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்'
`தூதுப்பத்திரி நூறு பத்து நோய் மாற்றும்'
(தூதுபத்திரி-திருநீற்றுப்பச்சை)

`கொன்றைப்பட்டையினால் கோடி வியாதி போம்' போன்றவை பழமொழிகள்.

**மருந்துப் பொருட்களைத் தூய்மை செய்தல்**

இயல்பாகக் கிடைக்கும் மருத்துவக் குணமிக்க பொருட்களைத் தூய்மை செய்த பின்பே பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மருத்துவப் பயன் மிகும். சுக்கினது மேல் தோலைச் சீவி விட்டுத்தான் பயன்படுத்த வேண்டும். கடுக்காயின் தோலை மட்டுமே மருந்தாகப் பயன்படுத்த வேண்டும்.

`சுக்குக்குப் புறநஞ்சு
கடுக்காய்க்கு அகநஞ்சு' என்பது பழமொழி.

**மருந்து செய்தல்**

மருந்து செய்யும் முறையினாலேயே மருத்துவப் பயன் மிகுகிறது. இதனை

`அரைப்பவன் அரைத்தால் அடுப்புச் சாம்பலும் மருந்தாகும்'

எனும் பழமொழி உணர்த்தும்.

மூலிகைகளின் வேர்களைச் சிதைத்து (கொன்று) அணியமாக வைத்திருந்தாலே ஒருவன் பாதி மருத்துவனாகின்றான் என்பதனை

ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'

என்ற பழமொழி உணர்த்தும்.

'பாலும் தழையும் சேராத மருந்தும்
பாகும் நெய்யும் சேராத லேகியமும் வீண்'

என்ற பழமொழி இளகல் (லேகியம்) செய்யும் முறையினை எடுத்துரைக்கின்றது.

**மருந்துண்ணும் காலம்**

எளிய நோய்கள் மூன்று நாட்களிலேயே குணமாக வேண்டும். இல்லாவிட்டால் மருந்து பொருத்தமற்றது என்பதனை உணர வேண்டும்.

மருந்தும் விருந்தும் மூன்று நாள்'

என்பது பழமொழி.

**மருந்தின் சுவை**

நாட்டு மருந்துகள் பெரும்பாலும் கசப்பாக இருக்கும். இதனை,

'இனிப்பான நோய்களும் இன்பமான
மருந்துகளும் உண்டா?'
'கசப்பு மருந்து கடுநோயைப் போக்கும்'.
போன்ற பழமொழிகள் உணர்த்துகின்றன.

இவ்வாறாகப் பழமொழிகள் நோய்த்தடுப்பு முறைகளையும் நோய்கட்கான மருந்துகளையும், மருந்துகள் செய்யும் முறைகளையும், மருந்துண்ணும் காலத்தினையும், மருந்தின் சுவையினையும் எடுத்துரைக்கின்றன.

# மாமனிதர்களின் மணிமொழிகள்

"அச்சிறு பருவத்திற்றானே ஜாதியாசாரம், ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுலகா சாரத்தைப் பொய் யென்றறிவித்து, அவற்றை அநுட்டியாமற்றடை செய்வித்து அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும், எனதறிவை விளக்கஞ்செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்க வைத்தருளினீர்"

வள்ளலார்

"நீ யாருடைய பக்தன்? என்னுங் கடாவுக்குப் பலதெய்வ வழிபாடுடையான்யாதனை விடையாக இறுப்பான்? மூகந்தான் காட்டுவான் போலும்! நோய்வாய்ப்பட்டு நிற்கு ஞான்று இழிதெய்வங்களைச் கும்பிடலும், பிரார்த் தனை புரிந்து காணிக்கையிடலுமாம் வழக்கம், தமது ஆத்மார்த்த பரம்பொருளை அவமானஞ் செய்தல் பொரு வும்; அன்புந் தளருமாதலின் அவை செய்யற்க வென்றலும் ஆசிரியன் சீடற்கோ தொள்ளுரை களிலொன்றாம்!" குமர குருதாச சுவாமிகள் பாடற்கண்:

"நோய் வந்த காலையிற் பேய்களைக் கும்பிட்டு
நோன்மையை மறந்த துட்டன்"

எனவருதல் கண்ணுறுக.

"சாமவேத வச்ர சூசி கோப நிஷதம் பிராமணத் தன்மைக் குரியது சீவனன்று, உடம்பன்று, சாதியன்று, கல்வியன்று, கன்மமன்று, தன்மமன்றெனத் திருட்டாந்த வாயிலாக விளக்கிச் சுவானுபவப் பிரமஞானமுடைய வனே பிராமணனென்றோதி இதுவே, சுருதி, ஸ்மிருதி புராணேதி காசங்களின் அபிப்ராயம்' என்று முடிவுரை மொழிந்துள்ளது."

தள்ளற் பாலது சாதி விகற்பமே
எள்ளற் பாலது எய்யாமையர் செய்கையே
உள்ளற் பாலது உறங்குமோர் இன்புநாம்
கொள்ளற் பாலது கொள்குகன் பாதமே

பாம்பன் சுவாமிகள்.

# திணைகளுக்கு மலர்ப்பெயர்கள்

## பேராசிரியர் தெ.கலியாணசுந்தரம்

உயிரினங்களில் இனப்பெருக்கம் நிகழப் பாலுணர்வு அடிப்படை. அகப்பொருள் இனம் விரிவடைதலுக்கு அடிப்படை. மரம் செடிகொடிகளில் இனப் பெருக்கம் நிகழ மலர்கள் கருவிகள். மகளிர் இனப்பெருக்கத்திற்கேற்ற உடல் தகுதி பெறுதலை 'பூப்பு' என்ற சொல் குறிக்கும். பூத்தல் என்றால் மலர்தல் என்பது பொருள். 'மலர்தல், விரிதல், விரிவடைதல் ஆகிய சொற்கள் ஒரு பொருளுடையவை. மனித இனப் பெருக்க நோக்கத்திற்கு அடிப்படையாக உணர்வுகள் உள்ளன.

`மலரினும் மெல்லிது காமம்' என்னும் திருக்குறளில் மலரின் மென்மை குறிப்பிடப்படுகிறது. பாலுணர்வின் வேகம் மென்மையாகி மனநிறைவு தருவதானால் அது காதல் எனலாம்.



இக்கட்டுரை மூலம் சங்க இலக்கியத் திணைகளுக்கும் அத்திணைகளுக்குரியதாக வகுக்கப் பட்டுள்ள நிலங்களுக்கும் மலர்களின் பெயர்கள் அமைந்துள்ளதன் காரணமும், பொருத்தமும் ஆராயப்படுகின்றன.

அன்பின் ஐந்திணை ஒவ்வொன்றும் மலர்ப் பெயரிடப்பட்டு உள்ளது.

### குறிஞ்சி

குறிஞ்சி மலர் அரிதாகக் காணப்படுவது. குறிஞ்சிச் செடி மலர் தோற்றுவிக்கும் காலம் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறையாகும். குறிஞ்சி மலர்க்குரிய சிறப்பு பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மலர்வது என்பதைத் தவிர வேறு இல்லை. அதற்கு மற்றபடி கண்ணைக் கவரும் அழகோ அல்லது மணமோ எதுவுமில்லை. இம்மலர் மலரும் கால அளவு நீண்டிருப்பதால் இம்மலர் அருமையுடையதாகக் கருதப்படுகிறது.

தலைவனும், தலைவியும் பால்உணர்வின் (ஆணையால்) உந்துதலால் எதிர்ப்பட்டுப் புணர்தலும் அதன் நிமித்தங்களும் அடிக்கடி நடப்பதில்லை; அரிதாகவே நிகழ்கின்றன. தொல்காப்பிய நூற்பா,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோனாயினுங் கடிவரை இன்றே"

எனக் கூறுவதால், "ஒன்றி உயர்ந்த பாலதாணையின்படி இருவருள்ளமும் பிறப்புத்தோறும் ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்து ஊழினது ஆணையினால் எதிர்ப்பட்டுப் புணர்தல்

அரிதாம்" எனல் பொருந்தும். மேலும் "ஒத்த தலைவனும் தலைவியும்" என்பதால் தொல்காப்பியர் கூறும் பத்துவகை ஒப்புமைகளான பிறப்பு, குடிமை, ஆண்டு, ஆண்மை, வனப்பு, அன்பு, அடக்கம், அருள், உணர்வு, செல்வம்" ஆகியவைகளும அமைந்திருக்க வேண்டுமாதலால் அவை அமைந்திருக்கும் தலைமக்களும் அரிதாகவே எதிர்ப்பட்டுப் பின் களவொழுக்கம் மேற்கொள்வர். குறிஞ்சி மலர் பூத்தலின் அருமையைப் போன்றே புணர்தல் ஒழுக்கமும் அரிதாக நிகழ்வது குறியீடாக் கப்பட்டுள்ளது.

### முல்லை

முல்லை மலர் காலையில் அரும்பி மாலை வரை கதிரவனின் வெப்பத்தைத் தாங்கியிருந்து மாலையில் மலர்கின்றது. பிரிவினால் பொறுத்திருந்து இல்லத்தில் காத்திருக்கும் ஒழுக்கம் இதனோடு ஒப்பிடக்கூடியது. தலைவி ஆற்றியிருத்தல் தலைவனின் வருகையால் மகிழ்ச்சியாக மலர்கிறது. மேலும் முல்லை மலரும் நேரமான மாலை நேரமே இம்முல்லைத் திணைக்குரிய சிறுபொழுதும் ஆகும்.

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்"

என்ற குறள கூறும் செய்தியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பிரிவின் கடுமையைப் பொறுத்துக் காத்திருந்து மனத்திண்மையை வளர்ப்பது முல்லையால் குறியீடு செய்யப்படுகிறது.

### நெய்தல்

நெய்தல் மலரிலுள்ள நீர்த்துளிகள் உதிர்ந்து கொண்டிருப்பது பெண்களின் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்வதற்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறது. நெய்தல் திணையின் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும். எனவே இந்த உரிப்பொருளுக்கேற்ப நெய்தல் மலரின் இயலபு அமைந்துள்ளது நன்கு பொருந்தியுள்ளது. "நெய்தல் நிலத்திற்குரிய நீர்க்கொடிகளில் நெய்தற்கொடி சிறப்பாகப் பேசப்படுகிறது. இக்கொடியில் தோன்றும் மலருக்கு 'நெய்தற்பூ' என்று பெயர். இப்பூ பசுமையான இலைக்கு மேலே உயர்ந்து தோன்றும் திரட்சியையுடைய காம்பை உடையது. இக்காம்பு திரண்டுள்ளதால் இதனைக் 'கணைக்கால் நெய்தல்' என்று புலவர் கூறுவர்.

இத்தகைய நெய்தற்பூ சிறந்து விளங்குவதாலேயே கடற்கரைப் பகுதிக்கு 'நெய்தல்' என்னும் பெயர் வந்ததெனப் புலவர் சிலர் கூறுவர்(அ). நெய்தல் கொடி ஒரு களை. இது களைந்தெறியப்பட வேண்டியது. அதுபோன்று நெய்தல் ஒழுக்கமாகிய இரங்கலும் நீக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இரங்கல் பொருளுக்கேற்ற இயல்பில் அமைந்து, அப்பொருளுக்கேற்ப வகுக்கப்பட்ட நிலத்தில் தனித்துச் சிறப்பாகக் காணப்படும் நெய்தல் மலர் அவ்வுணர்வுக்கும், அந்நிலத்திற்கும் குறியீடும் பெயரும் ஆகின்றது.

### பாலை

பாலைத்திணையில் பிரிவு தலைவன், தலைவி இருவர்க்கும் கடுமையானதாகத் தோன்றுகிறது. இதற்குப் பாலைமலர் குறியீடாகக் காட்டப் பட்டுள்ளது. பாலைமரம் கரடுமுரடான தன்மை வாய்ந்தது. பாலைமலர் காயாக உருவாகும் பொழுது காம்பிலிருந்து இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து பின் நுனிப்பகுதியில் மறுபடியும் இணைந்த தோற்றத்தில் காணப்படும். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளைத் தேடப்பிரிவதும், பிற காரணங்களால் பிரிவதும், பின்னர் இணைவதற்காகவே என்பது இக்காயின் தன்மையையும், வடிவையும் ஒப்பு நோக்க விளங்குகிறது. பாலைத் திணையின் மற்றொரு உள்ளீடு உடன்போக்கின் மூலம் தலைமக்கள் இணைவது. இருவரும் இணைந்தாலும் அவர்கள் தத்தமது பெற்றோர், சுற்றத்தார் முதலியோரை உடன்போக்கு, பாலையில்தான் நிகழ்கிறது. எனவே பிரிவையும், இணைவையும் குறிக்கும் வகையில் பாலைமலர் காயாக உருவாகும் தோற்றம் அமைந்தது இத்திணைக்குப் பொருந்துகிறது.

### மருதம்

"மருத மரத்தின் மலர்கள் கண்ணை ஈர்க்கும் இயல்பு கொண்டவை; மிக அழகு வாய்ந்தவை" மருதமலரின் தன்னையீர்க்கும் தன்மையும் தலைவனது புறத் தொழுக்கத்திற்குக் காரணமான பரத்தையர் ஈர்ப்பும் ஒப்பிடப்பட்டு இத்திணையைக் காட்டும் குறியீடாக மருதமலர் அமைந்து இருப்பது நன்கு பொருந்துகிறது. புறத்தொழுக்கம் ஊடலுக்கு அடிகோலி, உணர்வுப் போராட்டத்தை மனத்தில் எழுப்புகிறது. பரத்தையர் ஆடவரையீர்க்க அழகாகத் தம்மைப் புனைந்து கொண்டு தெருவில் சென்றமையைக் குறிப்பிடும் பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது. இவ்வாறு ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகிய ஒழுக்கங்களைக் குறிக்கக் கண்ணையீர்க்கும் மருதமலரைக் குறியீடு செய்திருப்பது நன்கு பொருத்தமேயாகும்.

### புறத்திணைகள்

அகத்திணைகளுக்கு மலர்களின் பெயர்கள் அமைந்தமை போலப் புறத்திணைகளுக்கும் அப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புறத்திணையும் ஒரு அகத்திணைக்கே புறமாக வருகின்றது. எனவே புறத்திணைப் பெயர்களும் மலர்ப்பெயர்களாகவே அமைந்துள்ளன. இதில் பாடாண் திணை மட்டுமே மலர்ப்பெயர் பெறாமல் உள்ளது. "போர்' பற்றிய பூமொழி தமிழருக்கே உரிய தனிச் சிறப்பு வாய்ந்தது" எனக் கருதுவர்.

### கைக்கிளையும் பெருந்திணையும்

கைக்கிளையும், பெருந்திணையும் உடல், உணர்வுப் பக்குவங்கள் இல்லாமல் தோன்றும் நிலையின. எனவே பக்குவமற்ற நிலைகளான இவ்வொழுக்கங்கள் அன்பின் ஐந்திணைகளில் உட்படவில்லை. மேலும் அன்பின் ஐந்திணை ஒழுக்கங்கள் உள்ள மென்மையும் முறைமையும் இவற்றில் இல்லை. ஆகவே இவை மலர்களின் பெயர்ளைப் பெறவில்லை.

### முடிவுரை

அக, புற ஒழுக்கங்களுக்கு உணர்வுகள் காரணமானவை. மலர்கள் உணர்வுக் குறியீடுகள். மனத்தை முகர்தல் உணர்வுகளுக்குத் தொடர்பு கொண்டது. எனவே ஒழுக்கங்கள் மலர்களின் அடிப்படையில் பெயர் பெற்றன. `நிலங்களும் மலர்களின் அடிப்படையில் பெயர் பெற்றன. ஆனால் ஒவ்வொரு நிலத்திலும் அவ்வொரோ ஒழுக்கம் மட்டும் நிகழ்வதில்லை. எல்லா ஒழுக்கங்களும் நிகழ்கின்றன. எனவே ஒழுக்கங்களின் பெயர்கள், அது நிகழ்வதாகக் காட்டப்படும் நிலத்தில் சிறப்பாகவும், அவ்வொழுக்கத்தை விளக்கும் வகையிலும் அமைந்துள்ள மலரின் பெயரால் இடப்பட்டுள்ளன.

உணர்வுகளும், எண்ணங்களும் மனத்தில் நிலைகொள்பவை; உருவமற்றவை. உருவமற்றவற்றைக் குறியீடுகளால் வெளிப்படுத்தல் மரபு. எனவே மலர்கள் உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் குறியீடாகின்றன.



# கிராமிய நடனக்கலை



சரசுவதி அரிகிருட்டிணன், மலேசியா

ஆடலும் பாடலும் இன்ப உள்ளத்தின் எதிரொலியாகும். அகில உலகும் இந்த ஆடலுக்கும் பாடலுக்கும் அடிமையாகத்தான் தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

இந்த ஆடல் பாடல் இரண்டிலும் தற்காலத்தில் புதுமைகள் பல தோன்றினாலும் பழமை என்றும் மாறுபடுவதே இல்லை. அதிலும் தொன்மையான பழங்கலைகளான கிராமியக் கலைகள் நாட்டுக்கு நாடு-இனத்திற்குஇனம்-மொழிக்கு மொழி மாறு பட்டிருந்தாலும் அதில் இயற்கைத் தன்மை மாறாமல் இருப்பதை உணரலாம்.

அந்த வகையில் இந்திய இசை, நடனம் இரண்டுமே தொன்று தொட்டு இயற்கைத் தன்மை மாறாமல் இருந்து வருவதைக் கண்டு நாம் பெருமைப்படத்தான் வேண்டும்.



**கிராமிய நடனங்கள்**

எல்லா நாடுகளிலுமே கிராமியக்கலை உண்டு. கிராமிய நடனங்கள். கிராமியப் பாடல்கள்-பண்பாடுகள்- கைவினைப் பொருட்கள் ஆகியவைதாம் அந்தந்த நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டை நிலை நிறுத்துகின்றன.

இந்தியர்களிடையே பாரம்பரியப் பண்பாட்டுக்கலைகள் நிறைய உள்ளன. இந்தியக் கிராமியக்கலைதான் உலகில் மிகப் பழமை வாய்ந்தது. எண்ணிக்கையிலும் கூடியது என்றும் கூறலாம்.

கும்மி- கோலாட்டம்- ஒயிலாட்டம் - மயிலாட்டம்- ஆடுபுலி ஆட்டம்- சிங்கநடனம்- பொய்க்கால் குதிரைஆட்டம்- பொம்மலாட்டம்- நிழலாட்டம்- சிலம்பாட்டம்- கரகாட்டம்- காவடி ஆட்டம்- அறுவடை நடனம்- தீப நடனம்- மஞ்சள் நீராட்டம்- பூச்சொரியாட்டம்- சதிராட்டம்- நலங்கிடுதல்- மணவிழாக்கூத்து- வளைகாப்பு- தாலாட்டு- நீர்க்குடநடனம்- தெருக்கூத்து- வில்லுப் பாட்டு- கதாகாலட்சேபம்- ஒப்பாரி.

இப்படிப் பலதரப்பட்ட நடனங்கள் -பாடல்கள் பண்டைய நாட்களில் பழக்கத்தில் இருந்துள்ளன. தமிழர்களின் வாழ்க்கை இயற்கையோடு கலந்து ஆடல் பாடலோடு ஏற்றங் கண்டதாகும்

பிறப்பு- வாழ்வு- தாழ்வு- இறப்பு எதுவானாலும் அங்கே இசையும் கூத்தும் இருக்கவே செய்யும்.

வாழ்வின் எந்தப் பக்கத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே கலையழகு மிக்கதாகவே தமிழர்தம்

வாழ்க்கை அமைந்துள்ளது.

இறைவனையே கூத்தாட வைத்துக்கண்டு களித்தவர்கள் தமிழர்கள். "அம்பலத்தே ஆடும் திருத்தாண்டவா" என்றும். "கயிலையில் ஆடும் கனக சபேசா" என்றும் கூத்துக் கலைக்கே முதல்வன் என்று பரமசிவனைக் கொண்டாடுகின்றார்கள் தமிழர்கள்.

எனவே இறை நம்பிக்கையில் தொடங்கிய இசை-நடனம் என்பது உடலோடு ஒட்டிய ஒன்றாகிவிட்டது.

தமிழர்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு மூலைமுடுக்கெல்லாம் பரத நடனங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால், நமது கிராமியக் கலைகளான கும்மி-கோலாட்டம் போன்ற மேற்சொன்ன பல கலைகளைக் கற்பிக்கவோ... செய்து காட்டவோ நம்மிடையே முறையான பயிற்றுவிப்பாளர்கள் கிடையாது.

தீப நடனம்-ஆடுபுலி ஆட்டம் போன்றவை நம்மிடம் இருந்து மறக்கப்பட்டு வருகின்றன.

சீனர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வால் சீனத்தெருக்கூத்து-சிங்க நடனம்-கடல் நாக நடனம் போன்றவை இன்றளவும் பெருமைக்குரியவையாகக் காக்கப்பட்டு வளர்ந்து வருகின்றன. அந்த நடனங்களால் ஓர் இனத்தின் பெருமை-வளர்ச்சி போற்றப்படுகின்றன.

சீனர்கள் ஆடும் சிங்க நடனம்-கடல் நாக நடனம் போன்றவற்றிற்குப் பிறப்பகம் இந்தியா என்றுதான் சொல்லுகின்றார்கள்.

மொழிக்கு மூலமே தமிழ்தான் என்று சொல்லுவதுபோல, கலைக்கு மூலமும் தமிழகமே என்று சொல்லும் போது நாம் பெருமைப்படுகின்றோம்.

**கும்மி:** பெண்கள் பலர் கூடிக் கைகளைத் தட்டி, ஓசை எழுப்பிப் பாடல்களைப் பாடி ஆடுவது கும்மி. இதில் சில வேளைகளில் ஆண்களும் கலந்து கொள்வார்கள்; "கும்மியடி பெண்ணே கும்மியடி... குனிந்து குனிந்து கும்மியடி;" என்று கும்மியே முதலடியாக வரப் பலர் பாடல் புனைந்துள்ளனர்.

**கோலாட்டம்:** "கோலாட்டம் அடிப்போமே.. கோலாகலமாகக் கோபியர் கூடி" என்று இரு கழிகளைக் கொண்டு தட்டி ஓசை எழுப்பி ஆடப்படுவது கோலாட்டம். வண்ணம் பூசிய கழிகளின் கோலாட்டம் இன்னும் சிறப்பாக இருக்கும்.

**பின்னல்/கயிறு கோலாட்டம்** கழிகளை நீண்ட மெல்லிய கயிற்றால் கட்டிய பின்னர் கயிற்றின் நுனி ஒன்று சேர்த்து உத்தரத்தில் கட்டப்படும். வட்டமாக நின்றுள்ள பெண்கள் பலர் இசை அல்லது பாடலுக்கேற்பக் கழியைத் தட்டியபடி வட்டமாக ஆடி அசைந்து ஒரு பின்னலையே போட்டுவிடுவார்கள். பின்னர் போட்ட பின்னலை எடுத்தும் விடுவார்கள். இக்கலை இன்று மறைந்து விட்டதென்றே தோன்றுகிறது. உயிர்ப்பிக்கத் தக்கவர்கள் முன்வர வேண்டும்.

**மயிலாட்டம்:** நடன மணிகள், மயில் போலவே ஒப்பனை செய்துகொண்டு-முதுகின் பின்புறம் கட்டியுள்ள தோகையைக் கைகளால் விரித்துக் கொண்டு ஆடுவது.

**ஒயிலாட்டம்:** தேர், திருவிழாக் காலங்களிலும் -அறுவடைக் காலங்களிலும் ஆணும் பெண்ணும் ஒயிலாக ஆடிப்பாடுவது.

**ஆடு புலி ஆட்டம்:** ஆடு போன்றும் புலியைப் போன்றும் வேடம் போட்டுக் கொண்டு-கத்திக்கொண்டும்- உறுமிக்கொண்டும் ஆடுவது.

**பொய்க்கால் குதிரை ஆட்டம்:** குதிரையின் வடிவம் போலவே அழகாக அமைத்துக் கொண்டு, அதை ஆண்களும், பெண்களும் உடலில் மாட்டிக்கொண்டு ஆடுவது. ராஜா ராணி கதைகளைப் பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் வழி சுவைக்கலாம்.

**அறுவடை நடனம்:** காலமெல்லாம் பாடுபட்டுக் கைமேல் பலன் கிட்டிய பிறகு-பெண்கள் கஞ்சிக் கலயம் தூக்குவது முதல் நெல்மணிகளை அறுத்துக்குவித்து அடித்துச் சேர்ப்பது வரை அபிநயத்தின் வழி செய்து காட்டுவது.

**குரவைக்கூத்து:** சிலப்பதிகாரத்தில் சிறப்பாகச் சொல்லப்படுவது குரவைக் கூத்து. பசு வளர்ப்போர் கூடிக் குரவை பாடி மகிழ்வதொரு பாங்கு இது.

**பொம்மலாட்டம்:** விதவிதமான பொம்மைகளைத் தயாரித்து அவற்றில் நூல்களைக் கட்டி அபிநயத்திற்கேற்பப் பொம்மையின் கை கால்களையும் உடலையும் தலையையும் ஆட்டுவித்தல், இன்று இந்தக் கலை மறக்கப் பட்டுவிட்டது. பிடித்துக் கொண்டவர்கள் மேல் நாட்டவர்கள்.

**நிழலாட்டம்:** மலேசியாவில் (ஓயாங் கூலிட்) என்று வழங்கப்படும் இக்கலைக்கு மூலக்கதையே இராமாயணம் தான். மலாயாக்காரர்கள் வழி செழிப்புற்றுள்ள இக்கலையைத் தமிழர்கள் கைவிட்டுவிட்டனர்.

**சிலம்பாட்டம்:** இது ஒரு தற்காப்புக் கலை. ஆனால், கோயில் திருவிழா -பெரிய வரவேற்பு நிகழ்ச்சிகளில் இது நடப்பு முறையில் அழகாகச் செய்து காட்டப்படுகின்றது.

**கரக ஆட்டம், காவடி ஆட்டம்:** இவ்விரு ஆட்டங்களும் ஆண்டவனுக்கு நேர்த்திக் கடன் செலுத்த

ஏற்படுத்தப்பட்டவை. இந்த ஆட்டங்களை முறையாக நடனமாக ஆடும்போது அற்புதமாக இருக்கும். கரகம்-காவடி-இவற்றைத் தலையிலும் தோளிலும் சுமந்து ஆடிக்கொண்டு போவது தனிச் சிறப்பாகும்.

**தீப நடனம்:** வண்ணக்காகிதங்கள் அல்லது வண்ணக்கண்ணாடிக் குவளைகளில் ஒளி விளக்கேற்றி அணையாமல் ஆடப்படுவது.

**பூச்சொரி ஆட்டம்:** அம்மன் ஆலயங்களில் மலர் தூவி ஆடுவது பருவம் அடைந்த பெண்ணைப் 'பூப்பெய்திவிட்டாள்' என்று கூறுவது தமிழ்ப்பண்பாடு. அவ்வேளையில் அவளை நன்னீராட்டிப் புத்தாடை அணிவித்து மணமான பெண்கள் மலர் தூவி அறிவுரை கூறும் நடனம்.

**சதிராட்டம்:** தப்பை-பம்பை-உடுக்கு-மத்தளம் போன்ற இசைக்கருவிகளை இசைத்து மிக்க மகிழ்ச்சியோடு ஆடும் நடனம்.

**மஞ்சள்நீராடல்:** ஆலயத் திருவிழா முடிந்த பின்னர், -மஞ்சள் கலந்த நீரை ஒருவர் மீது ஒருவர் ஊற்றிக்கொண்டு மகிழ்வது. இதில் முறைப்பெண்கள்-முறைமாப்பிள்ளை போன்றவர்கள் அதிகப்படியாகக் கலந்து மகிழ்வார்கள்.

**நலங்கிடுதல்:** திருமணம் ஆகவிருக்கும் ஆண் பெண் இருவருக்கும் முறைக்காரர்கள் பலவித உணவு வகைகளோடு சந்தனம்-எண்ணெய்-சீயக்காய்-பன்னீர்- பூக்கள் இவற்றைக் கொண்டு ஆரத்தி எடுத்து கேலி பேசி ஆடுவது.

**மணவிழாக் கூத்து:** திருமணம் முடிந்தவுடன் மணமக்களை ஊஞ்சலில் அமர்த்திப் பெண்தான் உயர்ந்தவள் என்று மணமகனை நையாண்டி செய்து பெண்ணின் தோழியர்கள் பாடுவார்கள். மாப்பிள்ளைதான் உயர்ந்தவன் என்றும் பெண்ணை நையாண்டி செய்தும் மாப்பிள்ளையைச் சார்ந்தவர்கள் பாடி மகிழ்வது. பெண்களுக்குத் திருமண வளையிடல் என்றும் மருதாணி நலங்கு என்றும் இன்றும் செய்வதுண்டு.

**வளைக்காப்பு:** சூல்கொண்ட பெண்ணிற்கு ஏழாம் மாதம் அல்லது ஒன்பதாம் மாதத்தில் தங்க வளையல்-களோடு கண்ணாடி வளையல்கள் அணிவித்துத் தாய்மையின் மகத்துவத்தை எடுத்துக்கூறி ஆடிப்பாடுவது.

**தாலாட்டு:** குழந்தை பிறந்த முப்பதாம் நாள் 'பெயர் சூட்டல்' நிகழ்ச்சி நடைபெறும். வையகத்தில் வாழவந்த பிஞ்சுகளுக்குக் காப்பணிவித்துப் பிஞ்சு விரல்களில் 'மோதிரம் அணிவித்துக் கழுத்தில் தங்கச்சங்கிலியிட்டுப் புத்தாடை அணிவித்துத் தொட்டிலிட்டு ஆராரோ பாடி மகிழ்வது.

**நீர்க்குட நடனம்:** தண்ணீர்க்குடங்களைத் தலை-தோள்-இடுப்புப்போன்ற இடங்களில் வைத்துக் கொண்டு ஆடுவது.

**தெருக்கூத்து:** நாட்டுப் பாடல்களை நயம்படப்பாடிக் கொண்டு ஆடுவது.

**வில்லுப்பாட்டு:** வில் போன்ற உருவ அமைப்பில் மணிகள் கோர்க்கப்பட்டுள்ள கருவி மூலம் நகைச்சுவையாகவும், நயத்தோடும் செய்யப்படுவது.

**கதாகாலட்சேபம்:** இரண்டு மூன்று பேர் புடை சூழ ஒருவர் தலைமை ஏற்று இசையோடு பக்கவாத்தியங்களுடன் பாடி, கதை சொல்லி விளக்குவது.

இவ்வாறு கிராமியக் கலை மகிழ்ச்சிக்கும்-பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஊன்று கோலாக இருந்திருக்கின்றன.

மலேசியாவில் பழங்கலைகள் அழிந்துவிடாமல் இருக்க அரசே பாதுகாப்புச் செய்து வருகின்றது. பட்டம் பறக்க விடுதல்-பம்பரம் சுழற்றுதல்-ஓயாங் கூலிட்-டிக்கி பாராட்-பல்லாங்குழி ஆடுதல் போன்ற கலைகளைக் கண்ணெனக் காத்து வருகின்றது.

புதுமைகள் தோன்றித் தோன்றி மறையக் கூடியவை. ஆனால், பழமை என்றும் நிலைக்கக் கூடியவை. மொழியும் பண்பாடும்-பழக்க வழக்கங்களும் ஓர் இனத்தின் உன்னதப் பெருமைக்கு அணிகலன்கள்.

மலேசியாவில் நமது இந்தியக் கிராமியக்கலைகள் வளர வேண்டுமானால் சமூக இயக்கங்களும்-மன்றங்களும், அரசியல் கட்சிகளும் முன்வரவேண்டும். மலேசியாவில் இன்று சிலம்பக் கலை வேரூன்றிச் செழித்திருப்பதைப் போல் மற்றக் கலைகளும் புத்துயிர் பெற வேண்டும். அதற்கு:

(1) சிறந்த கலைஞர்களைக் கொண்டு பழங்கலைகளுக்குப் புத்துயிர் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

(2) ஒரு கணிசமான தொகையைக் கிராமியக் கலை வளர்ச்சிக்கு ஒதுக்கிட வேண்டும்.

(3) போட்டிகளை நடத்திச் சிறந்த கலைஞர்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்.

(4) தேசிய அளவில் நடைபெறுகின்ற அணிவகுப்புகளில் தமிழர்கள் பாரம்பரியக் கலைகளும் இடம் பெறச் செய்ய வேண்டும்.

(5) கிராமியக் கலையை குழு முறையில் செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

(6) ஆண்டு தோறும் கிராமியக் கலைக்கு விழா எடுத்துக் கலைஞர்களைக் கௌரவிக்கவேண்டும்.

(7) கிராமியக் கலைக்கென ஒரு மன்றம் அமைக்க வேண்டும்.

(8) கிராமியக் கலைகளை உலகறியச் செய்யவேண்டும்.

(9) பிணக்கு, பூசல், போட்டியின்றிக் கலை வளர ஆவன செய்ய வேண்டும்.

இந்தியப் பண்பாட்டை-கலையை மங்காத செல்வமாகக் காப்பாற்ற வழி செய்யவேண்டும். இன்று நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள்-உருப்படியான செயல்கள் நமது எதிர்காலச் சந்ததியினர்க்கு வழி காட்டியாக. அமையும்.

மொழி-பண்பாடு-கலை- பாரம்பரியம்-உடை இவற்றை எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்கக் கூடாது. மேற்கூறியவற்றுள் ஒன்றை நாம் இழந்தாலும் நம் இனமே அழியக் கூடிய வாய்ப்பும் உண்டு.

உலகின் மிகப்பெரிய வலிமையுள்ள மிருகம் `டயனசாஸ்' என்பதை அறிவோம். ஆனால் இந்த மிருகம் இன்று உலகில் இல்லை. காட்சிப் பொருளாக மட்டுமே உள்ளது.

மலேசியாவில் தமிழர்களின் கலை, பண்பாடு எதிர்காலத்தில் `டயனசாஸ்' போன்று காட்சிப் பொருளாக ஆகிவிடாது காக்க வேண்டியது நமது கடமையாகும் என்பதை ஒவ்வொருவரும் மனத்தில் கொள்ள வேண்டும்.

`வெற்றி எட்டுத் திக்கும் என்று கொட்டு முரசே' என்று முழக்கம் செய்தவனும் தமிழன் தான். `ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசை கொண்டு வாழியவே' என்று தமிழ் மொழியைப் பாடியவனும் தமிழன்தான்.

எனவே, இன்று நாம் செய்யும் முயற்சி நாளை எழ இருக்கும் மாளிகைக்கு அடிக்கல்லாக அமையும்.

நமது பாரம்பரியக் கிராமியக் கலைகளைக் காப்பது-வளர்ப்பது-அவற்றின் காரணங்களை எழுதிப் பல மொழிகளிலும் வெளியிடுவது நமது கடமையாகும்.



# மாண்புமிகு மலேசியத் தமிழர்களுக்கு

## 'மலர்மாமணி' புலவர் இளஞ்செழியன்

"கப்பல் தட்டிலே நின்று கொண்டு,
டவளமிகுந்த என் தாய்நாட்டிலே
என் வாழ்வுக்குப் போதுமான வழி
கிடைக்காததால், `இதோ நான் மலேயா
போகிறேன்; கண்காணாச் சீமை!
காட்டிலே வேலை செய்யப் போகிறேன்;
தாயைப் பிரிந்துபோகிறேன்; தாய்
நாட்டிலிருந்து வறுமை என்னைத் துரத்து
கிறது; வெளிநாடு செல்கிறேன்
கூலியாக' என்று ஏக்கத்துடன்
கூறிய தமிழன் சிந்திய கண்ணீர்
கொண்டு எழுதப்பட்டதுதான் நமது
இலட்சியம்"

இவ்வாறு பேரறிஞர் அண்ணா அவர்கள், தம் `இலட்சிய வரலாறு' எனும் புத்தகத்திலே எழுதுகிறார்; எழுதியிருக்கிறார்.



"வெளிநாடு செல்கிறேன் கூலியாக" என்றுதான் அன்றைய தமிழனால் குரலெழுப்ப முடிந்ததே தவிர, "வெளிநாடு செல்கிறேன் ஜாலியாக" என்று, அவனால் அன்று குதூகலமாக எழுதவும் முடியவில்லை; கூறவும் முடியவில்லை!

ஆனால், ஒரு காலத்தில் அவ்வாறு கூலியாகச் சென்ற தமிழன், இன்றைக்கும் கூலியாகவே வேலை செய்துகொண்டிருந்தாலும், அவனுடைய கூலி அவ்வப்போது உயர்ந்து உயர்ந்து, அந்த உயர்வு அவனை அன்றாட வாழ்க்கையிலே உயர்த்தி உயர்த்தி, அவனது வாழ்க்கைத் தரத்தை - தமிழகத்திலே உள்ள ஒரு தமிழனது வாழ்க்கைத் தரத்தைவிட இன்று உயரச் செய்திருக்கிறது.

எனவேதான், முன்னொரு நாள் அவ்வாறு எழுதிய பேரறிஞர் அண்ணா அவர்கள், பிறிதொரு நாள் அவரே மலேசியாவிற்குச் சென்றிருந்த நேரத்திலே, கரும்பாக இனிக்கின்ற ஒரு கருத்தைக் கூறினார் -

"உலகமெல்லாம் தமிழர்கள்
இருக்கிறார்கள்.
ஆனால், மலேசியாவில்
வாழ்கிறார்கள்" என்று.

தமிழர்களின் மூன்றாவது தலைமுறை - மலேசியாவிலே தலையெடுத்து வாழ்வதைக் கண்ட அண்ணா அவர்கள், தாராளமாக இந்த மணிமொழியைச் சிந்தி, மலேசியத் தமிழர்களின் வரலாற்றுக்கே பெருமை சேர்த்திருக்கிறார்.

தமிழர்கள் இந்த உலகிலே இருப்பது என்பது வேறு. வாழ்வது என்பது வேறு. ஒருவன் உயிரோடு இருப்பதற்கும் உவப்போடு வாழ்வதற்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது அல்லவா? உலகத்திலே பல நாடுகளிலே தமிழர்கள் இன்னும் ஒரேயடியாகச் செத்துப் போகாமல் உயிரோடுதான் இருக்கிறார்கள். ஆனால் மலேசியாவிலே மட்டும் தமிழர்கள் உவப்போடு வாழ்வதற்காகவே உயிரோடு இருக்கிறார்கள். உயிரோடு இருந்து, உவப்போடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வள்ளுவரின் ஒரு குறளை மெய்யாக்குகிற வகையிலே, வையத்திலே வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கிற மலேசியத் தமிழர்கள் தமிழ் மொழிப் பாசத்திலே மேலானவர்கள் என்று குறிப்பிடுவதிலே தவறிருக்க முடியாது.

ஏனென்றால், மலேசியத் தமிழர்கள், பேச்சுத் தமிழிலே மூச்சுக்கு மூச்சு கலப்படம் செய்து பேசுவதில்லை. ஆங்கிலத்தையும் அரபு, உருது, சமற்கிருதம் போன்றவற்றையும் தமிழோடு கலந்து பேசாத தமிழகத் தமிழனைத் தமிழகத்தில் காண்பது அரிது. ஆனால், எந்த ஒரு மலேசியத் தமிழன் வாயிலும் இந்தக் கலப்பு நடை நடமாடுவதில்லை.

`சினாங்கு' (சுலபம்) என்கிற மலாய்ச் சொல் ஒன்று மட்டும் மலேசியத் தமிழர்களின் வாயிலும் வாழ்விலும் கலந்துபோயிருக்கிறது என்பதைத் தவிர, மற்றபடி அவர்கள் தமிழைப் பேசினால் தமிழை மட்டுமே பேசுவார்கள், மலாய் பேசினால் மலாய் மட்டுமே பேசுவார்கள். ஆங்கிலம் பேசினால் ஆங்கிலம் மட்டுமே பேசுவார்கள். இந்த மூன்றையும் கூட்டிப் பேசி நம்மைக் குழப்ப மாட்டார்கள்.

`வங்கி, அவர்கள் வழங்காத மொழி! அதற்குப் `பொருளகம்' என்றுதான் புகல்வார்கள். `தியேட்டர்' என்கிற சொல் அவர்கள் தீண்டாத ஒன்று. `படமேடை' என்றுதான் பகர்வார்கள். `நடன அரங்கேற்றம்' என்று நம்மூரில் நாவசைப்போம். அவர்கள், `நடன நிறைகூட்டு' என்று நவில்கிறார்கள். `தான் தோன்றித்தனம்' - மலேசியாவில் `தன் மூப்புத்தனம்' என வழங்குகிறது. "அவர் தன் உறுப்பினர் பதவியை இழந்தார்" என்று அவர்கள் எழுதுவதில்லை. "அவர் தனது உறுப்பியம் இழந்தார்" என்றே எழுதுகிறார்கள்.

காலையிலே அவர்களுடைய வாயிலே `காப்பி, டீ' ஆகிய சொற்கள் வருவதில்லை. `தண்ணீர் சாப்பிடுங்கள்' என்றே தாராளமாகச் சொல்லுவார்கள். `டிபன், நாஸ்டா சாப்பிடுங்கள்' என்று கூறமாட்டார்கள். `பசியாறுங்கள்' என்றுதான் பண்புடன் கூறுவார்கள். அந்தப் பச்சைப் பசுந்தமிழ் வார்த்தையைக் காதாலே கேட்கும்போது, நமது பசியே அடங்கிப்போகும்!

கழிப்பறை, கக்கூஸ் என்று கூறாமல், `மலக்கூடம்' என்று கூறுகிறார்கள். "இந்தப் பொருளை உபயோகப் படுத்துங்கள்" என்று நாம் கூறுவோம். அவர்களோ, "இந்தப் பொருளைப் பாவியுங்கள்" என்றே பேசுவார்கள். இப்படி எத்தனை எத்தனையோ இனிய தமிழ்ச் சொற்கள், மலேசியத் தமிழர்களின் வாழ்க்கையிலே இரண்டறக் கலந்து போயிருக்கின்றன.

மலாயா, மலேசியா, மலாக்கா என்று வெளியுலகத்தோர் கூறுகின்றனர். ஆனால், மலேசியத் தமிழர்களிலே பெரும்பாலோர், `மலையகம்' என்றே குறிப்பிடுகின்றார்கள். இது அவர்களுடைய மங்காத தமிழ்ப் பற்றுக்கோர் சிங்கநாதம்! சங்கநாதம்!

இந்தத் தாய்மொழி-தமிழ் மொழிப் பற்று ஒன்றினாலேயே, மலேசியத் தமிழர்கள், உலக அரங்கிலே இன்று தனியாக மதிக்கப்படுகிறார்கள்.

இரண்டு முறை, உலகத் தமிழ் மாநாடுகளைக் கண்டவர்கள் அவர்கள்!

இப்போது, முதல் முறையாக, உலகத் தமிழர் மாநாட்டையும் அவர்களே காண்கிறார்கள்.

எனவே, தமிழ், தமிழர், தமிழர் பண்பாடு இவற்றைத் தலைமேலே சுமந்தவர்களிலே, மலேசியத் தமிழர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள்.

என்றாலும், இந்தக் கட்டுரை, எழுதப்படுவதற்கு ஒரு காரணம் உண்டு.

## மூன்று இனங்கள்

மலேசிய நாடு-தமிழர்கள் மட்டுமே வாழ்கிற ஒரு நாடன்று. தமிழ் இலக்கணத்திலே வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று இனங்கள் இருப்பது போல, மலேசியாவிலே மலாய் இனம், சீன இனம், தமிழ் இனம் என மூன்று இனங்கள் இருக்கின்றன.

இந்த மூன்று இனங்களிலே வல்லினம் யார், மெல்லினம் யார், இடையினம் யார் என்று கண்டறிவது என்பது அவ்வளவு கடினமான ஒன்றில்லை! அப்படி அதைக் கண்டறிந்து, உண்மையைத் தெரிந்து கொள்வதாலேயே தமிழ் இனத்திற்குத் தாழ்வு வந்துவிடப் போவதில்லை! அந்த உண்மையை இன்னதெனக் கண்டறிந்து தெரிந்து

கொள்வதிலேதான் தமிழ் இனத்தைக் காப்பதற்கான தடமே கூட நமக்குத் தெளிவுபடும்!

### மலாய் இனம்

மலேசியாவில், `மலாய் இனம்'தான் இன்று `வல்லினமாக'-வலிமை பெற்ற இனமாக-எண்ணிக்கையிலே வளர்ச்சி பெற்ற இனமாக-ஆளுகிற இனமாக-அதிகாரம் படைத்த இனமாக இருந்துகொண்டிருக்கிறது.

### சீன இனம்

சீன இனம்-மலாய் இனத்திற்கு இரண்டாவது இனமாக- இடையினமாக -மலேசியாவின் பொருளாதார இனமாக-வாணிக இனமாக-வாடாத இனமாக -வளமான இனமாக இருந்து கொண்டிருக்கிறது.

### தமிழ் இனம்

தமிழ் இனமோ மெல்லினம் தான்! மலாய், சீனம், தமிழ்-இந்த மூன்று இனங்களிலே மூன்றாவது இனம்தான் தமிழ் இனம்! எண்ணிக்கையிலே தமிழினம் 16 விழுக்காடுதான்! மலாய் இனம் 44 விழுக்காடு! சீன இனம் 40 விழுக்காடு!

ஆனால், தமிழ் இனம் மலேசியாவிலே எண்ணிக்கையிலே தாழ்ந்திருந்தாலும், அந்த நாட்டின் ஆளும் கட்சியைத் தீர்மானிக்கிற ஒரு தனித் தகுதியைத் தன்னிடத்திலே வைத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம்.

அந்த அடிப்படையிலே கூறினால், தமிழ் இனம், மலையகத்திலே வல்லினமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று நம்பலாம். அது மட்டும் இல்லை-வரலாற்று அடிப்படையிலே நோக்கினால், மலேசியாவின் முதல் இனம், தமிழ் இனமே! இதற்கு ஆதாரங்களையெல்லாம் அடுக்குவோர் உண்டு. அந்த ஆதாரங்களை இங்கே இப்போது ஆராய வேண்டியதில்லை. ஆயிரமாயிரம் கூறவேண்டியதுமில்லை. உலகத்தின் மூத்தஇனம் தமிழ் இனமே என்று வரலாறு மொழிகிறது. "இந்தியாவின் தென் கோடியிலே பூத்த தமிழினம், உலகத்தின் பல பாகங்களிலும் போய்ப் பரவியது" என்று வரலாற்று அறிஞர்கள் வாய்மலர்ந்துள்ளனர். இந்த உண்மையின் அடித்தளத்திலே நின்று உரைத்தால், மலேசியாவின் மூத்த இனம்-முதல் இனம்-முக்கிய இனம் தமிழ் இனமேயாகும்.

மலையகத்தின் முதல் இனமாகிய தமிழினம்தான், இன்று மூன்றாவது இனமாக இருந்து கொண்டு; `மலாய்க்காரர்களை முதல் இனமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

### மலேசியாவில் தமிழினத்தின் நிலை

`மலாய் மொழி' படிக்காத மலேசியத் தமிழனை இன்று மலேசியாவில் பார்க்கமுடியாது. மலாய்மொழி பேசத் தெரியாத தமிழனையும் மலேசியாவில் இன்று கண்டு பிடித்துவிட முடியாது. மலாய்மொழியைப் படிக்காமலும் பேசாமலும் மலேசியாவில் தமிழர்கள் வாழவும் முடியாது; நிமிரவும் முடியாது.

"ஒவ்வொரு மலேசியனும், அவன் எந்த இனத்தவனாக இருந்தாலும் மலாய்மொழி தெரிந்திருக்க வேண்டும்" என்பது அந்த நாட்டின் கட்டாய விதி! ஆயினும் தமிழர்கள், தங்கள் தமிழைப் பள்ளிகளிலே படிப்பதற்கும், பரப்புவதற்கும் பேசுவதற்கும், எழுதுவதற்கும், இலக்கியங்களைப் படைப்பதற்கும், இன்பத் தமிழ் மொழிக்கு ஏற்றம் தேடுவதற்கும், இமய உச்சியிலேவைத்து அதன் புகழைப் பாடுவதற்கும் மலேசிய நாட்டிலே மறுப்பில்லை; வெறுப்பில்லை; வேலியுமில்லை. ஆனால் மொழிவெறி, இனவெறிகளுக்கு அங்கே இடமில்லை! முறை மீறாத தமிழ்ப்பற்று, தமிழினப் பற்றுகள் அங்கே எல்லோராலும் வரவேற்கப்படுகின்றன

இந்த நிலையிலே சிந்திக்க வேண்டியவர்கள் மாண்புமிகு மலேசியத் தமிழர்களே!

`மாண்புமிகு' என்று மலேசியத் தமிழர்களை ஒலிப்பதும் விளிப்பதும் மாப்பொருத்தமே!

மாண்பு மிக்க அவர்களை `மாண்புமிகு' என்று தானே அழைக்க வேண்டும்!

மனைத்தக்க மாண்புடைய மனைவிமார்களைப் பெற்ற கணவன்மார்களைப் பெற்ற நாடு மலேசியா!

செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருக்கும் மாண்புடையவர்களாக வாழ்கிறவர்கள் மலேசியத் தமிழர்கள்!

அமுதமெனும் ஆயுள் அழியா மருந்தை உட்கொள்வதாய் இருந்தாலும், அதனை விருந்தாளிக்கும் பங்கிட்டுப் படைத்த பின்பே உண்பார்கள் மலேசியத் தமிழர்கள்.

பண்பு, அன்பு, பரிவு, பாசம், நேசம், மாண்பு, மனவளம், உண்மை-இவற்றிற்கெல்லாம் பள்ளிகள்-பண்ணைகள் அவர்கள்! ஆகவே, அவர்களை "மாண்புமிகு மலேசியத் தமிழர்கள்" என்றுதான் மதிக்கவேண்டும்!

மாண்புமிகு மலேசியத் தமிழர்களே!

மலாய்மொழி படியுங்கள்! அதே சமயம், மாணிக்கத் தமிழை மறந்துவிடாதீர்கள். ஆம்! உங்கள் தாயை மறந்துவிடாதீர்கள். `நீங்கள் யார்' என்று இந்த நில உலகத்திற்குக் காட்டிக் கொண்டிருக்கிற அந்த நிலவைத் துறந்துவிடாதீர்கள்.

`தமிழைப் படி' என்று உங்கள் பிள்ளைகளுக்குக் கூறாமல், நேரே `மலாய் படி' என்று மலாய்ப் பள்ளிக்கே உங்களின் பிள்ளைகளை - அனுப்பிவைத்துவிடுகிற அந்தக் கொடுமையை -குற்றத்தை மட்டும் செய்யாதீர்கள்.

அப்படிச் செய்தால், எதிர்கால மலேசிய மண்ணிலே நீங்கள் இன்னார் என்றே இருப்பது தெரியாமல் எளிதிலே மறைக்கப்பட்டு - மறக்கப்பட்டு-பின்னர் எந்தச் சலுகையும் மறுக்கப்பட்டுப் போய்விடுவீர்கள். "நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?" என்பதே ஐயத்திற்குரியதாகி, எந்தப் பட்டியலிலும் நீங்கள் இணைக்கப்பட முடியாமல் ஏனோதானோ என்று- ஏன், ஏதிலிகளாகவே எண்ணப்பட்டு விடுவீர்கள்.

எதிர்காலம் என்பது, இன்பத் தமிழை அறியாதவர்களுக்கு இருள்வானமே! இருண்ட மயானமே!

ஆகவே ஆறாம் வகுப்பு வரை தமிழ் என்கிற அந்த அமுத சுரபியின் அருகிலே, உங்கள் அறிவுச்சுடர்களை அவசியம் போகவிடுங்கள்! மன மாயையிலே சிக்கி மதியிழந்து போகாதீர்கள். மலாய் மட்டுமே படித்து மதிப்பிழந்து வாடாதீர்கள். தமிழைப் படித்தால்தான் `தமிழர்கள்' என்று நீங்கள் தலை நிமிர முடியும்! உங்கள் பொழுதும் புலம்பல் இல்லாமல் விடியும்!

மானமிகு தமிழர்களுக்கு, வேலைவாய்ப்பு, என்ன வேத மந்திரமா? `வாய்ப்பு' என்கிற பெயராலே `ஏய்ப்பு'க்கு நீங்கள் வாசல் திறந்துவிடுவதா? வருங்காலம் உங்களைப் பழிப்பதா? நாளைய உலகிலே நீங்கள் நடுங்காமல் நடை போட வேண்டாமா? ஏழையாக இருந்தாலும் இருந்து விட்டுப் போங்கள், ஆனால் கோழையாக மட்டும் குனிந்துவிடாதீர்கள்! இல்லாமை இருக்கலாம்; தமிழ் கல்லாமை இழிவு!

ஆம்! தமிழ் தழைக்கவேண்டும்! தமிழ்ப்பள்ளிகள் நிலைக்க வேண்டும்! தமிழர்கள் இதை நினைக்கவேண்டும்!

"வீட்டுக்கு வீடு தமிழ்"- விருந்தாளியாக மட்டுமே வீற்றிருந்து பயனில்லை!

நாடு முழுதும் நற்றமிழ்க் கல்வி தேவை! தமிழ் ஏடு படிக்காத தமிழன் இருக்கக்கூடாது.

"மெல்லத் தமிழினிச் சாகும்" என்ற தீய சொல்லைச் சிலர் சொல்லக் கேட்கிறபோது, உள்ளம் பதைக்கிறது. உடம்பு உதறுகிறது.

ஒற்றுமையும் உரத்த குரலும் இருந்தால், தமிழர்களை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது.

"தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை"

என்றும்,

"பிறந்துளார் தமிழறிஞர் ஆதல் வேண்டும்
வருந்தமிழர் வையத்தை ஆள வேண்டும்"

என்றும்

"தமிழரெல்லாம் தமிழரையே சார்தல் வேண்டும்
தமிழரல்லார் தமைச்சார்தல் தீமை செய்யும்
தமிழர்க்குத் தமிழர்தாம் இடர்செய் தாலும்
தமிழர்பொது நலமெண்ணிப் பொறுக்கவேண்டும்"

என்றும்

"தமிழனொரு தமிழனுக்குத் தீமை செய்தால்
தனிமுறையில் செய்ததென அதைம றந்து,
தமிழரது பொதுநலத்துக் குயிரும் தந்து
தமிழரது பண்பைநிலை நிறுத்த வேண்டும்"

என்றும் முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதை வரிகளை நெஞ்சிலே நிறுத்துங்கள்! நினைவிலே அசைபோடுங்கள்!

"தமிழரெல்லாம் ஒன்றுபடத் தக்க நேரம்
தமிழரிதை மறப்பாரேல் இனமே சாகும்"

என்று பாவேந்தர் நமக்கு எச்சரிக்கையும் தருகிறார்.

மலேசியத் தமிழர்களைப் பொறுத்த வரையிலே, மனத்திலே எச்சரிக்கை மிக்கவர்கள்; பத்திரமாக இருக்கப் பழகியவர்கள். பல இனச் சூழலிலே வாழப் பழக்கப்பட்டவர்கள்.

பத்திர உணர்ச்சி, அதே சமயம் படிதல் உணர்ச்சி, ஒத்துப் போகிற உணர்ச்சி, உரிமை உணர்ச்சி- இவை அனைத்துமே மலேசியத் தமிழர்களிடம் ஊற்றுகள்! நாற்றங்கால்கள்!

பத்திர உணர்ச்சியோடு, தமிழைப் பாதுகாக்கிற உணர்ச்சியும் கொண்ட மலேசியத் தமிழர்கள், பள்ளிகளிலே தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழைப் படிக்கவைக்கிற கட்டாய உணர்ச்சியையும் பெற வேண்டும் என்பதே, நமது பணிவுமிகுந்த விண்ணப்பம் ஆகும்!

ஆதிக்க வெள்ளம் சோதிக்கதான் செய்யும்! அதன் பாதிப்புக்கு உள்ளாகத்தான் வேண்டும்

என்றாலும், அதை வாதிக்காமல் இருந்தால் நாம் வாழ்விழப்பது உறுதியாகிவிடுமே! ஆகவே நம்மைக் கடைசிவரை காத்துக் கரையேற்றுகிற கன்னித் தெப்பம் தமிழ்தான்! தமிழை விட்டால் இந்தத் தரையிலே நம் தலையே இல்லை! மொழி இல்லையேல் நாம் யார் என்ற கேள்வியே முளைக்கும்!

***மொழியின்றேல் நாம் யார்?***

விழியில்லாத வாழ்வும்
வெற்றி பெறுதல் கூடும்!
வழியில்லாத ஊர்க்கும்
வரப்பைக் கடந்து சேர்வோம்!

எழில் இல்லாதபெண்ணும்
எவற்கோ மனையாய்க் கூடும்!
மொழியில்லாத வாழ்வை
நினைக்க முடியா தன்றோ?

மொழியே தானே மூச்சு!
மொழியே தானே உணர்வு!
மொழியே தானே வாழ்வு!
மொழியே தானே இன்பம்!

மொழியே தானே மனிதன்!
மொழியே தானே வழிகள்!
மொழியே தானே உலகம்!
மொழியின்றேல் நாம் யாரோ?

-பாவேந்தர் பாரதிதாசன்



# ANNA our HISTORY

S. Nallarasu



**"History is itself the biographies of great men" It is said.**

The life of PERARIGNAR ANNA is an apt illustration of this saying. To know the history of today's Tamil Nadu, one has to know the biography of Anna. But for Anna, Tamil Nadu would not have come to be called by her own name. Anna was born in Tamil Nadu-nay, Tamil Nadu as it is to-day was born on the 15th September 1909.

It was Anna who roused the slumbering Tamils to realise their past history and glory and it was Anna who named the Madras State as Tamil Nadu and helped Tamil Nadu to be known to the world by her own historical name high lighting the glory and grandeur of Tamil and Tamil Land.

The term 'Anna' in Tamil Means elder brother. The very name 'Anna' inspired millions of people. He was also known by another term 'Perarignar' meaning great genius. He was an erudite scholar, an astute politician, a wise statesman, powerful orator, revolutionary writer, fine novelist, noted play- wright, great social reformer, an ardent rationalist, a staunch socialist, a great diplomat, a true democrat, an eminent leader and, above all, an affectionate elder brother (Anna) to the Tamils in and outside Tamil Nadu.

After taking his M.A. Degree, instead of seeking the usual refuge in the white-collar profession, Anna entered the political scene devoting himself to moulding the destiny of the masses. He became a staunch follower of Thanthai Periyar E.V. Ramaswamy, the most revolutionary social reformer India has ever seen. Anna boldly took to the hard path of social reform. The Self Respect Movement started by Periyar attracted him. He made use of all the media of propaganda namely the press, the stage and the screen to propagate his ideals. Anna gave a vivid picture of the glorious past and the degraded later state of Tamil Nadu. In his words:

"Our Literature, art and architecture are fine specimens of human intelligence, but they bear the ravages of time and also the effect of currents and crores-currents so that today, we have to listen to the foreign historian or scholar in order to realise the glory and grandeur of Tamil Nadu. Our culture and civilisation are hoary but we have allowed scars and wrinkles to disfigure them. It is our duty, therefore, to re-discover and reconstruct what is ours.

Truly great have been our acheivements in the field of literature. To be able to announce to the world that we, Tamilians, do possess great literature and to represent to the world and the entire humanity, the great Thirukkural is something about which we can have pardonable pride."

Portraying the picture of Tamil Nadu in his unique style, Perarignar Anna made a clarion call to the young graduates in the following words:

"Graduates, please carry on the crusade against caste which cannot co-exist with democracy; against superstition which cannot co-exist with science and against tyranny of various dimensions which cannot co-exist with liberty, equality and fraternity."

Anna's call attracted a continuous stream of zealous young men with a spirit of service. Anna was the only leader who knew best about the youth and channelled their energy for constructive purposes.

Anna was not born with a silver spoon in his mouth; instead, he was born with a 'silver tongue.' He was equally proficient in Tamil and English. With the gift of the gab, Anna attracted-rather hypnotised, any kind of audience, young and old literate and illiterate. His speeches were interesting, instructive and inspiring.

As a writer, Anna has been compared with Bernard Shaw, Ibsen and Galsworthy. The pen is mightier than the sword. Anna's tongue was mightier than the pen. As an orator, Anna was verily a combination of Demosthenes. Ingersoll, Winston Churchill, Edmund Burke and Macaulay. All his speeches are there in volumes. Euphonic alliterations and rhymes, apt and arresting similes, and revolutionary thought are the special features of his speeches and writings.

Anna moved his tongue and the whole Tamil Nadu moved behind him. It obeyed his orders.

Anna is the fore-runner of the Renaissance in Tamil Literature and art. He developed a style of his own. His way of writing and speeches are emulated by a host of writers and speakers. His oratory is inimitable.

Anna translated his ideals into action. He ushered in a new era. Apart from the social changes, Anna brought about a glorious, revolution in Tamil Nadu, the least violent, but the most beneficient change.

After ascending the seat of power, Anna encouraged intercaste marriages through state awards. No other State in India has done it and it was greatly appreciated by Thanthi Periyar. Anna gave legal recognition to Self - Respect Marriages to the Satisfaction of Periyar.

His Amiable disposition, his tact, sobriety, statesmanship, brotherly feelings for all and magnanimity towards his political opponents endeared him to all. He was an embodiment of all the faculties.

Anna rebuilt Tamil Nadu and he presented a vivid picture of the grandeur of Tamil Nadu before the foreign delegates on the occasion of the Second International Conference Seminar of Tamil Studies held in Madras in 1968.

It is a matter of pride and pleasure of record that the Yale University in the U.S.A. honoured Anna by conferring on him the Chubb Fellowship. Anna was given that unique honour. Anna was the first non-American to have received that honour. This shows his greatness in the inter-national plane.

At the time when Anna was born, the Tamils had not realised the greatness and depth of their history. When he left, the Tamils had come to realise their history and feel proud of it. Anna made them feel proud of it.

Anna proposed in the Legislative Assembly the naming of the Tamil Land, which was previously known as Madras State, with her own historical name "Tamil Nadu", and the whole Assembly unanimously seconded and echoed his voice. The credit of christening Tamil Nadu goes to Anna and it was his life's ambition to name Tamil Nadu. He roused the people of Tamil Nadu to identify Tamil Nadu and to demand for her naming, and he himself accomplished it.

Anna discovered Tamil Nadu and named her. He identified his 'mother' and 'christened' her. He was the only son who, in his history ever named his 'mother.' And the Story of Anna's life is itself the History of Tamil Nadu.



# None Deflects I Reflect

## Dr. Thirumalai Natarajan

*Never conscious is mother to her duty to grown up girl;*
*But coaxes and fondles the lass to take more milk!*
*Ever engaged in unrelenting studies is her elder brother!*
*Eternally absorbed in arts of war is her valiant father ever jubilant and*
*Blaers out Royal Fiat "Leaving dead victims all survivors of war be my relatives!"*
*Thus none around her at home bothering about*
*Puerile looks her face potent with launching numberless battles to ground*

***PURANANOORU-346***

*-KURUVAZHUTHI-*

பிற(...)ளே பால் என மடுத்தலின்
ஈன்ற தாயோ வேண்டாள் அல்லள்
கல்யென் என்னும் வல் ஆண் சிறா ஆன்
ஒள் வேல் நல்லன் அதுவாய் ஆகுதல்
அழிந்தோர் அழிய ஒழிந்தோர் ஒக்கல்
பேணுநர்ப் பெறாஅது விளியும்
புன்தலைப் பெரும்பாழ் செய்யும் இவள் நலனே

புறம்-346

-பாடியவர் குறுவழுதி-



***COMMENTARY***

*Technically the first five lines of the poem are of positive or passive postures uniformily. But they depict rigid following of three numbers of royal household viz., 1)the queen 2) the prince who is indifferent and 3) the head of the family, the ruler, ever-engrosed in the arts of war.*

*They reveal from outset the deeprooted maternal affection of the royal mother who is never watchful and alive to the growth of her own daughter, and not attentive to her responsibility. The second one is the prince who is elder to the girl but he is also unattentive to anything at home and spends his entire time in learning more and more books. The third is a ruler and head of the family who is a great warrior ever engaged in the perfection of and improvement of arts of war and spends all his time*

*on activities connected with war! He makes an unusual and unheard of declaration that after all those that die in the war, the survivors will all be his own (Kings) equiprivileged. This is unheard of in any land of the world in any of the literature! What a great recognition!*

*As there are queen, prince and king, no lesser subject can dare to correct them of their own steeped sticking to their own decision, however harmful in the long run. Further these things do not converge on their administrative spheres at all. That is the primary and foremost reason. They could not be reviewed or interfered with. Again they had to be watchfully waiting for an opportunity to represent overtly about the convictions of the 'top three' of the state and the consequences never thought of by them!*

*As regards the last and fourth sequence of comparison of the ancient Tamil Poet called KURUVAZHUTHIYAR, Son of Ander, in this poem is by itself eruptive and revolting and opposite to all above being negative posture with self-inciting war and confrontation by outside rulers who endlessly seek the hand of the Princes having the artless, alluring face too irresistible to all eligible prince. in the country from far and near places. They all risk their lives and Courts war against the obdurant father, ever determined to wage war on all unsuccessful princes. All those suitors are only losers and lost their young lives! The poet squarely blames the artless, alluring, irresistible face of the princess and apprehends how many more battles have to be going on at the place.*

*It is remarkably interesting to note the exact reference in great Western epics of Greece in Great Greek epic poets Homer in his immortal classic "Illiad" He has portrayed the Helen, as one who had the face that launched a thousand ships on sea on one night proceeding to strom the city of Troy, where the eloped queen Helen with prince Paris and is living with. So the thousand ships proceed to seize Troy and win the war and bring back the elpoed queen Helen from Prince paris.*

*Here in our poem Tamil poet Kuruvazhuthi has described the face of the princess ever precious and vivifying as 'artless, alluring face' but would launch endless number of wars to her native place from her unsuccessful suitors. But there is one important and marked difference between the two princess Helen and Tamil Princess that Helen was already married to a King and lived with him. So she is not a virgin with her purity. But the Tamil Princess is supreme by her prestime purity and many princes are losing their lives. This is a marked and well-known deviation between accidental and oriental civilisation we learn from history.*



# இலங்கை வேந்தன்

# இராவணன்

## இ.நமச்சிவாயம். வழக்கறிஞர்

வேதம் புராண இதிகாசங்களில் கூறப்படும் முனிவர்களுள் ஈழ நாட்டிலுள்ளவர் புலத்தியர்.

பண்டைக்காலத்தில் ஈழத்தில் புலத்திய நகரம் என்று அழைக்கப்பட்ட நகரம் ஒன்று உள்ளது. அது இப்பொழுது பொல நறுவ என்று அழைக்கப்படுகிறது. அனுராத புரத்திற்கும் திருகோணமலைக்கும் மத்தியிலுள்ளது. பத்தாம் பதினொராம் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசர் ஆட்சியில் இருந்தது. அங்குப் புலத்தியரின் பிரம்மாண்டமான கற்சிலை ஒன்று இருக்கிறது. இன வெறி மயக்கத்தில் வரலாற்று எழுத்தாளர் அச்சிலையைத் தமது பண்டை அரசன் பராக்கிரமவாகுவின் சிலை என அடஞ் சாதிக்கின்றனர். அந்தச் சிலை முழுக்க முழுக்க முனிவர் வடிவில் அமைந்திருக்கிறது.

புலத்தியர் வழித்தோன்றல்களே குபேரனும், இராவணனும். குபேரன் இயக்கர்கோமகனாக ஈழத்தை அரசு புரிந்து சிவபிரான் அனுக்கிரகம் பெற்று வடதிசைத்தலைவனாகவும் நிதிக்கிழவனாகவும் பதவி பெற்றனனென்று புராண இதிகாசங்கள் சாற்றுகின்றன.



குபேரன் தம்பி இராவணன் அயராத சிவபக்தன். வேதங்கள், சிறப்பாகச் சாமவேதம் மற்றும் சிவசாத்திரங்களில் பாண்டித்தியம் பெற்றவன்.

திருஞான சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் திருநீற்றின் பெருமையைக்கூறும்

"இராவணன் மேலதுநீறு வெண்ணத் தகுவதுநீறு
பராவணமாவது நீறு பாவ மறுப்பதுநீறு
தராவண மாவதுநீறு தத்துவ மாவதுநீறு
அராவணங்குந் திருமேனி யால்வாயான் திருநீறே'

என்ற தேவாரப் பாடல் இராவணனுக்கே அழியாப்புகழை ஈட்டியது.

திருக்கயிலாயமலை ஸ்கந்த காலோத்ராகம் கூறும் அறுபத்தெட்டு சுவாயம்புலிங்க சேத்திரங்களில் சிறந்தது. இராவணன் சிவபூசைப்பிரியன். கயிலையை இமயத்திலிருந்து பெயர்த்து இலங்கைக்கு எடுத்துச் செல்ல எத்தனித்தனன். கைகூடவில்லை. அவலப்பட்டனன. பின்பு சாம கானஞ் செய்து சிவபிரான் அனுக்கிரகத்தினைப் பெற்றனன். சிவபெருமான் இராவணனுக்கு இறவாத தன்மை அருளித் தமக்குச் சிறப்பான வாகனமாகச் சேவிக்கும் பதவியை அளித்தனர். சிவாலயங்களில் உள்ள கயிலாய வாகனம் இம்மரபின் விளைவு.

"ஏர்தரும்ஏழுலகு ஏத்த எவ்வுருவுந்தன் உருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப்

பேரருள் இன்பம் அளித்த பெருந்துறைமேய
பிரானைச்
சீரியவாயாற் குயிலே தென்பாண்டி நாடெளனைக்
கூவாய்"

திருவுத்தர கோச மங்கையில் முன்னொரு காலத்தில் சிவபெருமான் ஆயிரம் முனிவர் குழாமிற்குச் சிவாகமப் பொருளை உபதேசித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது மண்டோதரியின் பூசனைக்கு அருள் பாலிக்கத் திருவுளம் கொண்டு முனிவர்களை விடுத்து அலைகடல் மீமிசை நடந்து இலங்கையை அடைந்து அவள் வேண்டியபடி குழவி உருவத்தில் காட்சியளித்து அருள் வழங்கினர். சிவ வழிபாட்டில் சிறந்தவனான இராவணனும் பேரழகும் தேசுமுள்ள குழந்தை உருவிலிருந்த சிவபெருமானைத் தூக்கி எடுத்து அன்புருக உச்சிமோந்து பேரானந்த மடைந்தனன். இவ்வரலாறு மேற் சொல்லப்பட்ட திருவாசகத்திலும் உத்தரகோசமங்கைத் தலபுராணத்திலும் கூறப்படுகிறது.

சிவபெருமான் கடல் கடந்து கரையேறி இடங்கொண்ட சேத்திரம் இலங்கையிலுள்ள திருக் கேதீச்சரம். இது சுவாயம்புலிங்க இருப்பிடம்.

மண்டோதரியின் தந்தை மயன். இவன் அசுர சிற்பி. வல்லவன்; மயனாமதம் என்ற சிற்பநூல் இவனால் இயற்றப்பட்டது. முற்காலத்தில் திருக்கேதீச்சர ஆலயத்தை உருவாக்கியவன் என்பது மரபு. (திருக்கேதீச்சரத்தலபுராணம்)

வடக்கே இமயத்திலுள்ள உத்தரகயிலையும் தெற்கே இலங்கையிலுள்ள தட்சகயிலை எனப்படும் திருகோணமலை திருக்கோணேசர் ஆலயமும் (பாடல் பெற்றதலம்) சைவ நிலப்பரப்பின் எல்லைகள். எனவே திருமூலநாயனார் இலங்கையைச் சிவபூமி எனத் திருமந்தில் போற்றியுள்ளனர்.

வால்மீகி இராமாயணம் ஆரியப் பண்பாட்டைப் புகழ்ந்துரைக்கும் வடமொழி வீர காவியம். இராமன் மனிதப்பிறவி எடுத்த தெய்வமாகக் கொள்ளப் பட்டான். அவனது தெய்வத்தன்மையும் பராக்கிரமமும் போற்றப்படுகின்றன. இராமன் தெய்வமாகத் திகழ்வதற்காக இராவணன் குணச் சிறப்பற்ற அரக்கனாக்கப்பட்டான்.

கவியரசன் கம்பன் வால்மீகி இராமாயணமூலத்திலிருந்து தனது இராம சரிதையைப்படைத்தனன். கம்பன் ஆரிய மாயைக்கு ஆட்பட்ட நிலையில் வால்மீகியைப் பின்பற்றி இராமனைத் தெய்வமாகவும் இராவணனைச் சீலமற்ற அரக்கனாகவும் படைத்தனன்.

இராவணன் திராவிடர்களின் ஆதிமுன்னோர் *(Proto Dravidian)* இனத்தைச் சேர்ந்தவன். அவர்கள் இயக்கர் எனப்படுவர். தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்தவர்கள்; நாகரிகத்திலும் அறிவாற்றலிலும் ஆரியர்களுக்குக் குறைந்தவர்களல்லர்.

இராமர் காலம் வேத காலத்து இரண்டாவது அல்லது மூன்றாவது சகாப்தம் எனக் கருதப்படுகிறது.

இராமர் காலத்தில் கோதாவரி நதிக்கும் விந்திய மலைத் தொடர்ச்சிக்கும் வடக்கே ஆரியர் ஆதிக்கம் இருந்தது. அதிகமான ஆரியர் வாழ்ந்தனர். அங்குப் பல ஆரியமன்னர்கள் ஆட்சி புரிந்தனர்.

இலங்கையிலும் கோதாவரி வடக்கெல்லையாயுள்ள தென்னகத்திலும் ஆரியர் அல்லாத மக்கள் வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் இயக்கர்கள். கோதாவரித் தென்கரையில் இயக்கர் புறக்காவல் அரண் ஒன்று இருந்தது. இது ஜனஸ்த்தான என்ற இடத்தில் இருந்தது. இங்கு இராவணனது வலிமை மிகுந்த ஆதிக்கம் நிலவியது.

இராவணனும் அவனது மக்களும் சிவபெருமானை வழிபட்டவர்கள். இராவணனது காலத்தில் இலங்கையில் 1008 சிவாலயங்கள் இருந்தனவாகக் கூறப்படுகிறது.

1. திருக்கேதீச்சரம்
2. திருக்கோணேச்சரம்
3. நகுலேச்சரம்
4. முன்னேச்சரம்
5. தொண்டீச்சரம்

இவை சிவாலயங்கள்: இந்த ஆலயங்கள் சிங்கள இனமும் புத்தசமயமும் இலங்கைக்கு வருவதற்குமுன் இருந்தவை. இந்த விவரங்கள் இலங்கை வரலாற்று ஆசிரியர் போல்பீறிஸ் அவர்களால் கூறப்பட்டது. இன்னும் மேலேகூறப்பட்ட திருக்கேதீச்சரம் புத்த சமயம் இலங்கைக்கு வருவதற்கு முன்பே இருந்ததாக மகாவம்சம் என்னும் புத்தசமய வரலாற்று நூல் கூறுகிறது. புத்தசமயம் இலங்கைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்டது. தொண்டீச்சரம் இருந்த இடத்தில் இப்பொழுது கத்தோலிக்கச் செயற்கைக் குகைக் கோயில் உள்ளது.

இன்றைய மங்களூருக்கு அண்மையில் திருக்கோகரண என்னும் ஆலயம் இருக்கிறது. இது சைவ நாயன்மார்களால் பாடப்பட்டது. இங்குள்ள சிவலிங்கம் இராவணனால் பிரதிட்டை செய்யப்பட்டது.

மயன், விசுவகர்மா, மாதுவட்டா ஆகியோர் இயக்கர்கள். வேதங்களையும் ஆகமங்களையும், சாத்தி ரங்களையும், கலைகளையும் கற்றுணர்ந்தவர்கள். சிறப் பாகக் கட்டடக் கலையிலும், சிற்பக்கலையிலும் சிற்பன்னர்கள். சிறப்பான கோயில்களையும் நகரங்க ளையும் மாடமாளிகைகளையும் கோட்டை கொத்த ளங்களையும் அமைப்பதில் நிகர் இல்லாதவர்கள்.

முனிவர்கள்-ஆரியப் பிராமணர்கள்- வேதங்களை நன்கு கற்றுணர்ந்தவர்கள்- முத்திப் பிரியர்கள் அல்ல. யோகநிலை எய்தி கடுந்தவஞ்செய்து இன்றும் அக்கினி வளர்த்து ஓமங்களும், யாகங்களும் வேள்விகளும் இயற் றிப் பெரும் தவவலிமை பெற்றிருந்தனர். முக்காலங் கள் உணரும் சக்தியும், காயசித்தி. ஆக்கல் அழித்தல் ஆகிய சகல சித்திகளையும் அடைந்திருந்தனர். அசு ரர்கள் மக்கள் மத்தியில் அரசருக்குமேல் அதிகாரமுள் ளவராக விளங்கினர். சிலர் அரசப்புரோகிதராக அரச சபைகளில் புதவி வகித்தனர்.

முனிவர் தம்மைப் பகைத்தவர்களையும் தம் மோடு இணங்காதவர்களையும் மதிக்காதவர்களையும் சபித்து அழித்துவிடுவார்கள் அல்லது அல்லல்படவைப் பார்கள். அரசர்களும் மற்றவர்களும் இவர்களைக் கண்டு அஞ்சினர். ஆரியர் அல்லாதவர்கள் –இயக்கர் முதலியோரும் இவர்களுக்கு அஞ்சினர்.

ஆரியர் அல்லாதவர்களும் ஆரியப்பண்பாட்டி னால் ஈர்க்கப்பட்டு வேதசாத்திரங்களைப் பெற்றுத் தவம் செய்து யாக வேள்விகள் இயற்றி சர்வசித்திக ளையும் பெற்று தவ வலிமை வாய்ந்த முனிவர்களாகத் திகழ்ந்தனர். அகத்தியர், விசுவாமித்திரரும் இராவ ணின் முன்னோரான புலத்தியரும் இந்நிலை எய்திய மகாரிஷிகள். இவர்களும் உத்தம பிராமணரானார்க ளது சமஸ்கிருதம், இயக்கர்கள்களுக்குத் தெரியாத மொழி. அவர்கள் பேசும் மொழி வேறானது.

இராவணனும் வேத இதிகாசங்களையும், புரா ணங்களையும் நன்கு கற்றுணர்ந்தவன். சாமகானஞ் செய்வதில் நிகர் இல்லாதவன்.

முனிவர் கோதாவரி நதிக்கும் விந்திய மலைத் தொடர்ச்சிக்கும் வடக்கேயுள்ள வனங்களில் தமது பத் தினிகளுடன் வாழ்ந்தனர்.

கும்பகர்ணன் ஜனஸ்தானாவிலிருந்த ஆரியரைத் துன்புறுத்தினான். இயக்கர் கூட்டங்கள், இயக்கிதா டகை அவள்மகன் மாரீசன், சுபாகு ஆகிய மூவரின் தலைமையில் முனிவர் வாழ்ந்த வனங்களுக்குள் கட் டின்றி ஊடுருவிச் சோரமாக யாக சாலைகளைப்பின் வாயிலால் அணுகி யாக கமண்டலங்களுக்குள் நீரைச் சொரிந்தும் இறைச்சி, எலும்பு முதலிய அசுத்தப் பொருள்களை ஆகுதி வழங்கும் வேளையில் வீசியும் வேள்விகளைப் பங்கப் படுத்தினர். விசுவாமித்திரர் வேள்விகளும் இவற்றால் பாதிக்கப்பட்டன. இப்பகு தியை ஆண்ட அரசர்கள் வலியற்றவர்களாயிருந்தனர். அவர்களால் இயக்கர் செய்த ஊடுருவல்களை நிறுத்த முடியவில்லை. இராவணனும் முனிவருக்குப் பாது காப்பு அளிக்கவில்லை. இந்த நிகழ்ச்சி பெரும் பகை மையை உண்டாக்கியது. சீற்றமடைந்த விசுவாமித்திரர் அயோத்தியை அடைந்து இராமஇ லக்குமரை முனிவர் வேள்விகளுக்கு காவல் புரிவதற்கு அழைத்துவந்தனர்.

இராவணன் தங்கை தாடகையும் மகன் மாரீச னும் சுபாகுவும் இராம இலக்குவனால் தாக்கப்பட்ட னர். தாடகியின் தனங்களும் மூக்கும் அம்பினால் அறுக்கப்பட்டன. இயக்கி தாடகை தாம் அங்கம் இழந்த கோலத்தில் இராவணனிடம் சென்று புலம்பி னாள். இந்நிகழ்ச்சி மேலும் பெரும்பகையை மூட்டி யது. பின்பு இராம இலக்குமனர் சீதையுடன் வனவாசம் செய்த பொழுது இராவணன் சோரமாகச் சீதையைக் கவர்ந்தனன். பகைவர்களின் பெண்டிர்க ளைக் கவருவது அரசர் போர்முறையில் ஏற்றதாகப் கருதப்பட்டது. போர்மூண்டது. இராவணனையும் அவனது தம்பியர், புத்திரர், சேனைகள் அனைத்தை யும் இராம இலக்குமனர் சுக்ரீவன் அனுமன் ஆகியோ ரின் துணையோடு அழித்தனர். பின்பு விபீடணன் ஆரியரின் கைப்பாவை அரசனாக இராமரால் முடி சூட்டப் பட்டனன். எவ்விதத் தடையுமில்லாமல் ஆரி யப் பண்பாடும் சமயக் கொள்கைகளும் கோட் பாடுகளும் தென்னகத்திலும் இலங்கையிலும் பரவின. இவற்றைத் தொடர்ந்து வடமொழியின் ஆதிக்கமும் நிகழ்ந்தது.



# தமிழ் இளைஞர்களின் வளர்ச்சி

வி.ஆர்.எஸ்.சம்பத். வழக்கறிஞர்.

சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திறவிழி!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே! வாழ்க நின் கூட்டம்!

எனப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் இளைஞர்களுக்கு எழுச்சி முரசு கொட்டுகிறார்.

தமிழ் இளைஞர்களின் ஈடு இணையற்ற எழுச்சிதான், ஒரு காலத்தில் பெரியார் இயக்கம்; பேரறிஞர் அண்ணாவின் பாசறை!

கல்லூரி வளாகத்திற்குள்ளே கால் பந்தாட்ட வீரர்களாய் இருந்தவர்கள் உண்டு; நாடு மொழிபற்றிக் கவலைப் படாமல், நான்கு சுவர்களுக்குள் அடைபட்ட பூச்சிகளாய் நாட்களைக் கழித்தவர்கள் உண்டு. ஏடு சுமந்து, எழுத்தாணி சுமந்து, எழுதிய தேர்வுகளிலே முதலிடத்தைப் பிடித்து, இந்திய ஆட்சிப் பணியாளர்கள் வரை உயர்ந்து, பொது நோக்கு எள்ளளவும் இன்றி, இறுதிக் காலம்வரை ஏதோ மனிதர்களாய் இருந்துவிட்டுப் போனவர்கள் உண்டு; போகிறவர்கள் உண்டு.



விரல் விட்டு எண்ணத்தக்க இளைஞர்கள்தான், வீறுகொண்டு எழுந்து, இந்த நாட்டின் விதியையே மாற்றி எழுத வீதிக்கு விரைந்தனர். அந்தி மேடைகள் தோறும் ஆர்ப்பரித்தனர். அன்றாடம் மக்களைச் சந்தித்தனர்; அறியாமை இருட்டைச் சாகடித்தனர். பகுத்தறிவுச் சுடரை ஏற்றினர்; தன்மானத் தீபம் பிடித்தனர். ஆம்! தந்தையாய்ப் பெரியாரும், தளபதியாய் அண்ணாவும் ஒன்று சேர்ந்து உருவாக்கிய எழுச்சியைத்தான் குறிப்பிடுகிறேன், அத்தனையும் இளைஞர் எழுச்சி!

பெரியாரின் பேச்சைக் கேட்டுப் பெரியவர்கள் மருண்டனர்; உருண்டனர். பின்பற்ற மறுத்தனர். ஏன் பெரியாரையே வெறுத்தனர்.

அப்போது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி போன்ற இடங்களிலே இருந்துதான், படித்த இளைஞர்கள் எழுச்சி பெற்றனர்; உணர்ச்சி கொண்டனர். கிளர்ச்சியிலே கூட ஈடுபட்டார்கள்,

பேரறிஞர் அண்ணாவைப் பேச அழைத்து, அவருடைய பேச்சைச் சுவைத்து, அவர் பின்னாலே டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், மதியழகன், கடலூர் இளம்வழுதி போன்றவர்கள் ஒன்று திரண்டார்கள். இவர்களின் எதிர்கால வளர்ச்சி எப்படி இருந்தது என்பதைச் சிறிது எண்

ணிப்பார்ப்பது, இன்றைய இளைஞர்களுக்கு நல்லது.

எழுச்சி பெற்ற அண்ணா காலத்து இளைஞர்கள், எழுச்சி பெற்றதுடன் அடங்கிப் போய்விட வில்லை; வளர்ச்சி பெற்றார்கள்; வரலாறு படைத்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் பெற்றிருந்த அடித்தளம் திறமைதான்! தங்கள் திறமையினால் முன்னுக்கு வந்தவர்களே, திராவிட இயக்கத்து இளைஞர்கள் ஆவர்.

அழகு நடையிலே எழுதவும், அருமையாகப் பேசவும், கண்ணும் கருத்துமாய்க் கடமையாற்றவும், கண்ணியம் காக்கவும் அவர்களை மிஞ்சியவர்கள் இல்லை. அத்தகையதோர் ஆற்றலை அண்ணா அவர்கள் அளித்தார்கள்! அடேயப்பா! திறமை என்றால், திராவிடத் தமிழ் இளைஞர்களின் திறமைக்கு இணையாக வேறு எதையும் சொல்வதற்கில்லை!

அது ஒரு காலகட்டம்! அறிவை வளர்ப்பதையே இளைஞர்கள் முதன்மையாகக் கொண்டிருந்த வசந்த காலம் என்றால் அதுதான்! அன்று தேறிய இளைஞர்களின் ஆட்சிதான் இப்போதும் தொடர்கிறது!

இன்றைய முதல்வர் ஒருவர் நமக்குப் போதுமே, திறமைக்குச் சான்று சொல்ல! இளமைக் காலத்திலேயே, திறமை உழைப்பு இரண்டும் அவரிடம் இயல்பாகவே இருந்துவிட்டன. அந்த இரு கவசங்களையும் அணிந்து கொண்டுதான், ஆட்சிக் கோபுரக் கலசமாகவே இன்றவர் விளங்குகிறார். கலைஞர் வளர்ச்சியின் இரகசியக்கடமை திறமை உழைப்புதான்!

ஒரு நாட்டின் அரியாசனமே இளைஞர்களின் கைக்கு மாறுவதன் தத்துவம் அவர்களின் கூட்டுத் திறமைதான்!

எனவே, திறமையில்லாமல், வளர்ச்சியில்லை, உழைப்பில்லாமல் திறமையுமில்லை.

மலேசியாவில் சீனர்கள் மலைபோல் வளர்ந்திருக்கிறார்கள் என்றால், அதற்கு அவர்களுடைய மாபெரும் உழைப்பும் திறமையும்தான் காரணமாகும்.

உலகத்தில் வளர்ந்துள்ள நாடுகள் அத்தனையிலும், இளைஞர்கள் உழைக்கிறார்கள்; தங்கள் அறிவுத் திறன்களை ஓயாமல் வளர்க்கிறார்கள்.

அதேபோல், உலகத் தமிழ் இளைஞர்களும், மற்ற இன இளைஞர்களுக்கிடையே உயர்வு கொண்டவர்களாய் நடைபோட வேண்டுமானால், தங்கள் படிப்புக் காலங்களிலேயே திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இனியதோர் எதிர்காலத்தைப் படைக்க இளைஞர் உலகு, இப்படி அப்படிக் காலத்தை இரையாக்காமல், திறமையைக் கொள்முதல் செய்வார்களாக!

திறமை மூலம், நம் வளர்ச்சி உறுதி!



# மணிப்பிரவாளம்

## டாக்டர் திருமதி சாரதா நம்பி ஆரூரன்

**முன்னுரை**

இந்நிலவுலகில் பழமைக்கும் பழமையாய், ஏனைப் புதுமைக்கும் புதுமையாய் தொன்று தொட்டு வழங்கி வரும் மொழி தமிழாகும். ஏனைய உலக மொழிகளில் சில வழக்கொழிந்தன. சில பழமையாயின. சில புதிய மொழிகள் உருவாயின. ஆனால் பழமையும் புதுமையும் இணைந்த இயல்பைத் தமிழ் மொழியிடத்து மட்டுமே காண இயலும்.

ஒண்தீந்தமிழ் தனித்தமிழாகச் சிறப்புற்று விளங்கியது ஒரு காலம். வட சொற்கலப்பெனும் நோயால் நலிவுற்றது இடைக்காலம். தனித்தமிழியக்கத்தால் நோய் தணிந்தது இக்காலம். இவ்வட சொற்கலப்பே "மணிப்பிரவாளம்" என்றழைக்கப்படுகிறது. இக்கலப்பு ஏற்படக் காரணங்கள், கலந்த காலம், கலந்த துறை, கலந்த முறை, கலந்த அளவு இவற்றைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.



**மொழிக்கலப்பேற்படக் காரணங்கள்**

ஒரு மொழியில் கலப்பேற்பட வாணிபம், அரசியல், கலை, சமயம் போன்றவை காரணமாய் அமைகின்றன. ஒரு மொழியில் பிற மொழிச் சொற்கள் எவ்வாறு கலக்கின்றன எனப் பார்த்தால், பிற மொழியாளர்களுடன் பழகுவதாலும் பிற மொழிகளைப் பயில்வதனாலும் ஒரு மொழியில் பிற மொழிச் சொற்கள் கலக்கின்றன என்பர் மறை. திருநாவுக்கரசர்.

மொழிக் கலப்பு பற்றி மறைமலையடிகள் கூறும்போது ஒரு மொழியினைப் பேசும் மக்கள் தம் இனத்தாரை விட்டு நீங்காதிருக்கும் வரையில், அவர் தம் நாட்டில் பிறமொழி பேசுவார் வந்து புகாதிருக்கும் வரையில் அயன் மொழிச் சொற்கள் கலப்பதற்கு வாய்ப்பில்லை என்கிறார்.

ஆயின் பன்னெடுங்காலமாகப் பிற நாட்டாருடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்த தமிழர் தம் நாட்டுப் பொருட்களை ஏற்றுமதி செய்தும், அந்நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்தும் வந்தனர். எனவே அந்நாட்டினரின் பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும் தமிழரிடையே கலந்தன. ஒருவர் நாகரிகத்தை மற்றொருவர் பினபற்றும் போது மொழியிலும் கலப்பு ஏற்படல் இயற்கையே என்பதை அடிகள் ஒத்துக் கொள்கிறார்.

பிற நாட்டாருடன் தமிழர் செய்த வாணிபத்தின் பயனாகத் தமிழில் மட்டுமே கலப்பு ஏற்படவில்லை, வெளிநாட்டினரின் மொழியிலும் கலப்பு ஏற்பட்டது. கி.மு. பத்தாம் நூற்றாண்டில்

அரசன் சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து மயில் தோகைகள், யானைத் தந்தங்கள் போன்றவை அனுப்பப்பட்டன. பழைய ஈபுரு மொழியில் உள்ள துகி என்ற சொல் தோகை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்பதை ஆய்வாளர் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். இதே போல்அகில்எனும் தமிழ்ச் சொல் திரிந்து அஹலத்ஆயிற்று என்பர்.

ஆங்கிலேயருடன் ஏற்பட்ட வாணிகத் தொடர்புகள் காரணமாகச் சந்தனம் சாண்டல்(*Sandal*) எனவும், அரிசி ரைஸ்(*Rice*) எனவும் திரிந்தன.

கிரேக்க நாட்டிற்குத் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட இஞ்சியும், மிளகும், கிரேக்க மொழியில் சிக்கிபெரஸ், பெப்பரி என்ற சொற்கள் தோன்றுவதற்குக் காரணமாயின. ஆங்கிலேயர் இப்பொருட்களைக் கிரேக்கரிடமிருந்து பெற்றபோது ஜிஞ்சர்(*Ginger*) பெப்பர் (*Pepper*) என்ற புதுச் சொற்கள் தோன்றின.

ஆணி, மீனம், நீர், தாமரை, , கலை, குடம், போன்ற தமிழ்ச் சொற்கள் ஆரிய மொழியிலும் அசை, அருவி, இரும்பு, ஈன், எல்லாம், மேன்மை, முகில் போன்ற தமிழ்ச் சொற்கள் ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கு முதலான ஐரோப்பிய மொழிகளிலும் அவா, இரு, ஊர், எருமை, சினம், செவ்வை போன்ற சொற்கள் சாலடி, ஈபுரு முதலான மொழிகளிலும் கலந்துள்ளன. "இவ்வாறு மொழிகள் ஒன்றோடொன்று கலக்கப் பெறுவதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருத்தலால், நாகரிகம் வாய்ந்த எந்த மொழியும் பிற மொழிக் கலப்பில்லாமல் இருத்தல் இயலாது" என்கிறார் மறைமலையடிகளார்.

தமிழ் நாட்டை வென்று ஆண்ட அரசர்கள் தம் மொழி, சமயம், நாகரிகம், பண்பாடு முதலியவற்றைத் தமிழகத்தில் பரவச் செய்தனர். அயலார் ஆட்சிக்குட்பட்ட தமிழகம் அவர்களது மொழிகளையும் ஏற்க வேண்டியதாயிற்று. அப்போது அம்மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. எனவே எந்தெந்த மொழிக்காரர்கள் தமிழ் நாட்டை ஆண்டார்களோ, அவரவர் மொழிச் சொற்கள் தமிழில் கலக்க ஆரம்பித்தன. எனவே பிற நாட்டார், பிற மொழியாளர் ஆதிக்கம் மொழிக் கலப்பிற்குரிய காரணங்களுள் ஒன்றென்பர்.

மொழிக்கலப்பிற்குக் கீழ்வரும் காரணங்களைப் பண்டிதமணி கதிரேசம் செட்டியார் குறிப்பிடுகிறார்.

1. புலவர்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களைத் தெரிந்து வழங்கும் ஆற்றல் இல்லை.
2. தமிழ்ச் சொற்களை அறிந்திருந்தும் வடசொற்கலப்பே செவிக்கு இன்பம் பயக்கும் எனப் புலவர்கள் மயங்கிக் கிடந்தனர்.
3. தனித்தமிழிற் சுவை காணும் புலமை குறைந்தது.
4. தனித்தமிழை நாடும் புலவர் எண்ணிக்கை அருகிற்று.
5. வடமொழியாளர்தம் மனம் மகிழும்படி வடசொற்களைக் கலந்து எழுதும் ஆர்வம் நாடெங்கும் பரவிற்று.
6. தமிழ் வளர்ச்சிக்குச் செல்வந்தர்கள் உதவி செய்ய முன்வருவதில்லை. வடமொழி வேத சாத்திர பாட சாலைகட்கும், வடமொழி கல்லூரிகட்கும் பொருளை வாரி வழங்குபவர்கள் அதில் ஒரு சிறு தொகையைக் கூடத் தமிழுக்கு ஒதுக்குவதில்லை. வடமொழியாளர் செல்வாக்கு இச் செல்வர்களிடையே மிகுதிப்பட்டிருப்பதே இவற்றுக்கு எல்லாம் காரணமாகும் என்கிறார் பண்டிதமணி.

### கலப்பு ஏற்பட்ட காலம்

தொல்காப்பியரை ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்கிறார் பனம்பாரனார். எனவே தொல்காப்பியர் வடமொழிப் பயிற்சியுடையவர் என்பதறியலாம். வடமொழி மறைகள் முதலில் தோன்றி அடுத்து வடமொழியின் தொன்மை இலக்கணமான ஐந்திரம் தோன்றியது. பின்னரே வடமொழிப் புலவர்களால் பாராட்டிப் பயிலப் பெறும் பாணினி வியாகரணம் தோன்றியது. "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் " என்ற குறிப்பால் வடமொழிப் பாணினியத்திற்குக் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் எனலாம். எனவே தொல்காப்பியர் காலம் கடைச் சங்ககாலத்திற்கு முன்னரே அதாவது கி.மு. மூன்று, நான்காம் நூற்றாண்டுகட்கு (இன்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு) முன்னரே இயற்றப்பட்ட தொன்மையுடையது. தமிழில் கலப்பேற்பட ஆரம்பித்த காலமும் அதுவே எனலாம்.

தொல்காப்பியர் காலத்தில்தான் வேங்கடத்திற்குத் தெற்கே ஆரியர் வந்தனர். சமஸ்கிருதமும் தமிழும் கலந்தது என்பது இலக்குவனார். தொல்காப்பியர் தமது நூற்பாக்களை இருவகையாக எழுதியுள்ளார். சில விதிகளைத்தாமே கூறுவார். சிலவற்றை என்ப, என்மனார் புலவர் எனப் பிறர் கூற்றாகக் கூறுவார். தமிழில் அகரம் முதல் னகரம் வரை முப்பது எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இருந்ததை

"எழுத்தெனப்படுப அகர முதல்
னகர இறுவாய் முப்பது என்ப

(தொல்)

என்கிறார். ஆனால் வடசொற்கள் தமிழில் எங்ஙனம் கலத்தல் வேண்டுமென்பதை,

"வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" (தொல்)

என்கிறார். இதில் என்ப, என்மனார் என்று கூறவில்லை. எனவே, வடசொல் தமிழில் கலக்கும் முறைக்கும் முதன் முதலாக இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியரே

சங்க காலத்திலேயே வடசொற்கள் தமிழில் கலந்தன. ஆனால் கலப்பு மிகக் குறைவே. ஆங்காங்கு இரண்டொரு வட சொற்கள் காணப்படலாமேயன்றி அதற்கு மேலில்லை என்பர் சூரிய நாராயண நாராயண சாத்திரியர்.

சங்க இலக்கியமான குறுந்தொகையில் வடசொற்கள், வடமொழிப் பெயர்கள், புராணக் கதைகள் இடம்பெறுகின்றன. சகடம், நேமி. ஆத்திரை ஆதி போன்றவை வட சொற்கள் . ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன், உருத்திரன் குலபதி, தாமோதரன், ஒதஞானி, சாண்டிலியன் போன்ற வட மொழிப் பெயர் கொண்ட புலவர்களைக் காண்கிறோம்.

நற்றிணையிலும் இளிசந்த நாகனார், உலோச்சனார், சிறுமோலிகன் ஆத்திரேயன், நிகண்டன்பராயன், பிரமசாரி, கௌசிபன், காசிபன் போன்ற வடமொழிப் பெயர்களையும் காணலாம்.

சங்க காலத்திலேயே கலப்பு இருப்பினும் கலப்பு மிகமிகக் குறைவே. பௌத்தர், சமணர் வருகையால் இக்கலப்பு அதிகமாயிற்று. சமணர் ஆரியர் ஆசாரங்களை மேற்கொண்டனர். வடமொழிப்பற்றுடையோராய் வடமொழி இலக்கணம் கற்றனர். சமணர் தமிழையும் கற்க முயன்றபோது, அளவற்ற வடசொற்களைக் கலந்தனர். மணிப்பரவாளம் என்ற கலப்பு நடை தோன்றிற்று. "மணியும் பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயத்தால் போலத் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த பாஷை கேள்விக்கின்பம் பயக்குமென்ற போலியெண்ணமே இத்தகைய ஆபாச பாஷையொன்று வகுக்குமாறு தூண்டிற்று" என்று வி.கோ சூரிய நாராயண சாத்திரி கூறுகிறார்.

மணிப்பிரவாளம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இதனை ஏற்பாரும் உளர்; மறுப்பாருமுளர்.

"வேறு வேறான இரண்டு பாஷையின் தனிமொழிகளும் தொடர் மொழிகளும் மணியும் பவள மும் விரவிக் கோத்த மாலை போன்று விரவி நடத்தலின் இப்பெயர் பெறுவதாயிற்று". என்று கூறியுள்ளார் செல்வக் கேசவராய முதலியார்.

ஆனால் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மணிப் பிரவாளம் என்பதற்குச் சற்று மாறுபட்ட முறையில் பொருள் கூறுகிறார். மலையாளத்தில் மணிப்பிரவாளத்துக்கு இலக்கணம் கூறும் லீலாதிலகம் என்ற நூல் மணி என்பது சிவந்த மாணிக்க மணியையும், ப்ரவாளம் என்பது பவளத்தையும் குறிக்கும் எனவும், மணியும் பவளமும் கலந்து கோத்த மாலையில் இரண்டும் நிற வேறுபாடு தோன்றாது ஒன்றாகக் கலந்து விடுவது போல இருமொழிச் சொற்களும் எளிதில் விளங்குவனவாக அமையும் நடையே மணிப் பிரவாளம் எனவும் கூறுவதாகத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிக்கிறார்.

வைணவப் பெரியார்கள் எழுதிய உரை நடை நூல்களும், சமணர்கள் எழுதிய சமயச் சார்பான நூல்களும் மணிப்பிரவாள நடையில் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டன.

மணிப்பிரவாள நடையின் மூலம் வடமொழிக்கும் தென்மொழிக்கும் நெருங்கிய உறவு ஏற்படும் என்றும், வடமொழிப் புலவர்களும், தமிழ்ப் புலவர்களும் ஒன்றுபட முடியும் என்று நம்பியதாகவும் மு. வரதராசனார் குறிப்பிடுகின்றார். "மணிப்பிரவாளம் வளர்த்தவர்களின் நோக்கம் நல்ல நோக்கமே. தமிழ் நாட்டில் வீணான பிளவு வளர்வதை விரும்பாமல் அறிவுலகத்தில் நல்ல ஒற்றுமை ஏற்படுவதற்கு அது உதவியாகும் என்று நம்பியே இங்ஙனம் வடசொற்களைத் தமிழுடன் கலந்தனர் என்கிறார் மு. வரதராசனார்.

ஆயின் இராமசாமிப் புலவர் போன்றார் இக்கருத்தை உடன்படாமல் "வடமொழிமாட்டுக் கழிபெருங்காதல் கொண்ட ஒரு சிலர் உரைநடைக்கு வசனம் எனப் பெயரிட்டு வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பெய்து உரை நடை நூல்களை மணிப்பிரவாளமாக இயற்றலாயினர்" என்பர்.

தமிழர்கள் அல்லாத பல்லவர், நாயக்கர்களின் ஆட்சியில் தமிழகம் இருந்தபோது, மக்களிடையே ஏற்பட்ட பதவிப்பித்தும் செல்வச் செருக்குமே பின்னால் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் தோன்றுவதற்கும், தமிழும் வடமொழியும் சேர்ந்து மணிப்பிரவாள நடை உருவாவதற்கும், மற்ற அந்நிய மொழிகளோடு சேர்ந்து தமிழ் மொழி கலப்படமாகப் பேசப்படுவதற்கும் காரணமாயிற்று என்பர் வீரசிங்கம்.

மணிப்பிரவாள நடையைப் புகுத்தியவரின் நோக்கம் நல்லதே ஆயினும் மொழியின் இயல்புக்கு ஒவ்வா

ததால் அம்முயற்சி வெற்றி பெறவில்லை. இக்கருத்தை மறைமலையடிகள் "உலக வழக்கின்கண் உள்ள ஒரு மொழியிற் பிற சொற்கள் வந்து சேருமாயின், அது இயற்கையாக நிகழவேண்டுமே யல்லாமற் கல்வியறிவுடைய சிலரால் அவர் தமக்குத் தோன்றியபடியெல்லாம் அவை செயற்கையாக வலிந்து புகுத்தப்படுதலாகாது. அன்றி அங்ஙனம் புகுத்தப்படுமாயின் அவை அம்மொழியில் நிலைபெற்று உயிர் வாழா" என்கிறார்.

மணிப்பிரவாளம் தோன்றிய நூற்றாண்டிலே பல புலவர்கள் அம்முயற்சியைப் போற்றவில்லை. சான்றாகக் கம்பர் வால்மீகியைப் பின்பற்றி வழி நூலாகத் தம் இராமாயணத்தைப் படைத்த போதும், தம் காப்பியத்தில் வரும் வடமொழிப் பெயர்களனைத்தையும் தமிழ் ஒலிக்கேற்ப மாற்றியமைத்துள்ளார். சில பெயர்களைப் பொருள் மாறாமல் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வெட்சுமணனை இலக்குவன் எனவும், விபீஷணனை வீடணன் எனவும், ஸுபர்ணனை உவணன் எனவும், ஸ்வர்ணவர்ணனை சுவணவண்ணன் எனவும், அஹல்யாவை அகலிகை எனவும் தமிழின் ஒலிமுறைக்கேற்ப மாற்றினார். ஸ்வர்ணவர்ணனைக் கனகமேனி எனவும், யக்ஞ விரோதனை வேள்விப் பகைஞன் எனவும் மொழி பெயர்த்தார்.

வடமொழி கற்றிருந்த புலவர்கள் பலர் மணிப்பிரவாள நடை புகழ் பெற்று விளங்கிய காலத்தும் இலக்கிய இலக்கணங்களுக்கு உரை எழுதும்போது தூயதமிழிலேயே எழுதினர். நக்கீரர், உரையாசிரியர் என்றே பெருமையுடன் அழைக்கப்படும் இளம்பூரணர், தொல்காப்பியத்தின் ஒரு பகுதிக்கும் திருக்கோவையாருக்கும் உரையெழுதினர். சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றார், வடமொழியையும் தமிழையும் கற்றுத் தேர்ந்து உரை எழுதிய போதும் மணிப்பிரவாள நடையைக் கைக் கொள்ளவில்லை.

நாயக்கர் காலத்தில் வடமொழிப் புராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட போதும் தலபுராணம், உலா, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களிலும் கலப்பு நடை அதிகமாயிற்று.

அரிச்சந்திர புராணம், பிரபுலிங்க லீலை, வில்லிப் புத்தூர் பாரதம் இவற்றில் வடசொற்கள் அதிகம் உள்ளன. வில்லிபாரதம் 4300 பாடல்களால் ஆனது. சந்த இன்பமிக்கது. வட சொற்கலப்பு மிக்குள்ளது. இந்நூலுக்கு உரை எழுதிய வை.மு.கோபாலகிருட்டிணஆச்சாரியர் தம் முகவுரையில் "இது எளிய நடையையுடைய தேயாயினும், வடமொழி மிகக் கலந்திருத்தலால், தென் மொழியறிவோடு வடமொழியறிவும் இல்லாதவர்க்கு உண்மைப் பொருள் காண்டலரிது" என்கிறார்.

அருணகிரிநாதர் பாடல்களில் வடசொற் கலப் பதிகம். இராமலிங்க வள்ளலார், பாரதியார் இருவரது பாடல்களில் உள்ள தனித் தமிழை உரைநடையில் நாம் காணஇயலாது.

இங்ஙனம் தமிழைப் பிடித்திருந்த வடசொற்கலப் பெனும் நோய் மறைமலையடிகளாரின் தனித்த தமிழியக்கத்தாலும், தமிழர்தம் விழிப்புணர்வாலும் செல்வாக்கிழக்கத் தொடங்கிற்று. தற்போது தமிழ் இலக்கிய மேடைகளிலும், எழுத்துலகிலும் நல்ல தமிழை நாம் கேட்பதற்கும் காண்பதற்கும் காரணமாயமைந்தவர் அடிகளாரே எனல் மிகையன்று.



# பெயருக்கும் ஒரு வரலாறு

## பேராசிரியர் டாக்டர் சு.வேம்புலு

உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பெயர் என்பது இன்றியமையாத ஒன்று. சமுதாயத்தில் பெயரில்லாத மனிதனைக் காண்பது அரிது. பிறந்திருக்கும் குழந்தை பெயரிடப்படும் வரை `பெயரில்லாப் பூச்சி' என்றே அது கருதப்படுகிறது. பெயரிடப்பட்ட பின்பே ஒரு குழந்தை மக்களினத்தின் ஓர் அங்கமாகிறது. பெயரைப் பெற்று அப்பெயரால் அழைக்கப் பெறும் வரை குழந்தையினிடத்தில் ஏதோ குறையிருப்பதாகவே மனத்தில் தோன்றிக் கொண்டிருக்கும் என்பது தாய்மார்களின் கருத்து.

பிறக்கும் குழந்தைகள் எல்லாம் ஆண்டுகள் பல உயிர்வாழும் வாய்ப்பைப் பெறுவதாகக் கூற இயலாது. பெயரிடப்படுமுன்பே குழந்தை உயிர்நீத்துவிடுமானால் அது விரைவிலேயே தன் தாயின் நினைவிலிருந்து நீங்கிவிடுகிறது. தனக்கென ஒரு பெயர் பெற்றபின் இறக்கின்ற குழந்தை, தாய்க்கு அடுத்தடுத்துக் குழந்தைகள் பிறந்தாலும் தன் பெயரால் அவள் உள்ளத்தில் அவ்வப்பொழுது தோன்றி மறைந்து தனது பிறப்பை நினைவுறுத்திக் கொண்டிருக்கும். தங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்ற எண்ணிக்கையைப் பிறருக்குச் சொல்லும் பொழுது கூட, உயிரோடிருக்கும் குழந்தைகளை மட்டும் கணக்கிட்டுச் சொல்லுவது தாய்மார்கள் பெரும்பான்மையினரின் வழக்கமாகக் காணப்படுகிறது.



குழந்தைப்பிறப்பு, குழந்தை உயிரோடிருத்தல், தனக்கென்று ஒரு பெயரைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய மூன்றனுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. மேலை நாடுகளிலும், "எடுத்துக்காட்டாக, மேற்கு ஆப்பிரிக்க மக்களிடையேயும் அமெரிக்கக் கறுப்பு இன மக்களிடமும் ஒரு குழந்தை பெயரிடப்படுவதற்கு முன் அது பிறந்திருப்பதாகவே கருதப்படுகிற வழக்கமில்லை. பெயரிடப்படும் வரை அது மனித இனத்தைச் சேர்ந்ததாகவே கருதப்படுவதில்லை.

குழந்தை உயிரோடு நிலைத்திருக்கும் என்று பெற்றோர் உறுதிப்படுத்திக் கொள்ளாதவரை அதற்கு அவர்கள் பெயரிடுவதில்லை. பெயரிடப்படுவதற்கு முன்பே குழந்தை இறந்துவிடுமானால், அக்குழந்தை பிறந்ததாகவே கருதப்படுவதில்லை" என்பதும் தெரிகிறது.

பிறக்கும் எந்தக் குழந்தையும் தனக்குத் தானாகவே பெயர் சூட்டிக் கொள்ள இயலாது. ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்திருக்கும் சமுதாயத்தின் அல்லது ஓர் அங்கமாக விளங்கும் மற்றொரு தனி மனிதனின் தாக்கம் பெற்ற பெயரையே

தாங்கவேண்டியவனாகிறான். " பிரான்ஸ் நாட்டிலும் ஜெர்மன் நாட்டிலும் அரசாங்கப் பெயர்ப்பட்டியலில் உள்ள ஏதாவது ஒரு பேரைத்தான் தேர்ந்தெடுத்துத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்ட வேண்டும் என்று அந்த நாட்டின் அரசுகள் உத்தரவிட்டுள்ளன" என்ற செய்தி குறிக்கத்தக்க ஒன்று. ஜப்பானில், "யாராவது ஒருவரின் பெயர் குழந்தைக்கு இடப்படவேண்டும் என்பதுதான் பெயரிடல் சடங்கின் அடிப்படைத் தேவை" எனக் கூறப்படுகிறது என்பது தெரியவரும்.

பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் இணைந்து வாழும் இந்தியநாட்டில் மக்கள்பெயரிடலில் பல மரபுகள் இருப்பது உறுதி. மரபு என்பதனை டாக்டர்.மு.வரதராசனார், "ஏதேனும் ஒருமுறை முதலில் உருவாகியபின் வழக்கத்தில் நிலைத்துவிடுகிறது. அவ்வாறு வழங்கி வழங்கி நிலைபெற்றுவிடுகின்ற ஒன்றைத்தான் மரபு என்று குறிக்கிறோம் " என விளக்கியிருக்கிறார். தமிழ் நாட்டின் குறிப்பிட்டதொரு வட்டாரத்தில்கூட, மக்கட் பெயரிடலில் அந்த வட்டாரம் முழுமைக்கும் பொதுவாக அமைந்துள்ள சில மரபுகளையும், ஊருக்கு ஊர், குடும்பத்திற்குக் குடும்பம், இனத்திற்கு இனம் எனத் தனிப்பட்ட வகையில் அமைந்துள்ள வேறுசில மரபுகளையும் பார்க்கமுடிகிறது.

பெயரிடுபவர் எப்பொழுது, எங்கே, என்னென்ன அடிப்படையில் குழந்தைக்குப் பெயரிடுகிறார் என்ற விவரங்களையெல்லாம் மரபுகள் உள்ளடக்கியிருப்பதைக் காணமுடியும். இந்த மரபுகளிலிருந்து விலகி, ஒரு தனி மனிதன் தன் கருத்துக்கேற்பப் பெயரிடலில் புதியமுறை ஒன்றைப் புகுத்தவும்கூடும். அந்த முறை பின்னாளில் ஒரு சமுதாய மரபாக மாறுவதற்கும் வாய்ப்பு உண்டு.

இவ்வாறு மரபின் வழியாகவோ புதியதொரு முறையின்படியோ பெயரிடுகிற ஒருவர் தம் உலகியல் அனுபவம், குழந்தையின் உடல்தோற்றம் மற்றும் அதனிடம் காணப்படும் இயல்புகள், தம்முடைய மனப்போக்கு முதலியவற்றுக்கு ஒப்பவும் பெயரிடமுடியும். பெயரை அவர் தாமாகவே புதிதாகப் படைக்கிறார், அல்லது, ஏற்கெனவே பிறரால் படைத்து வைக்கப் பெற்றுள்ளவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து இடுகிறார். சமுதாயத்தில் இருக்கும் எத்தனையோ பெயர்களில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்து இடுவதில் அவரது பெயரிடும்திறம் வெளிப்படுகிறது. சமுதாயத்தில், அக்கறை எடுத்துக் கொள்ளாமலும் குழந்தைக்குப் பொருந்தாதபடியும் பெயரிடுபவர்கள் சிலர் மட்டுமே. பெரும்பான்மையினர் மிகுந்த அக்கறையுடன் சிந்தித்துப் பெயரிட்டு வருகின்றனர்.

மக்களுக்கு இடப்பெறும் பெயர்களின் பின்னணியில் தனிமனிதனின் அல்லது சமுதாயத்தின் ஆசைகள், எதிர்பார்ப்புகள், வெற்றிகள், தோல்விகள் முதலிய பல்வேறு காரணிகள் அமைந்திருக்கின்றன. இவ்வாறெல்லாம் படைக்கப்படுகின்ற பெயர் அப்படியே நிலைத்துவிடும் என்று உறுதிசொல்லவும் இயலாது. இடையில், வேறு பெயர் அல்லது பெயர்கள் படைக்கப்படவும் வாய்ப்பு இருக்கிறது. எப்படியும், ஒவ்வொரு பெயருக்குப் பின்னணியிலும், அப்பெயர் படைக்கப்பட்ட வரலாறு ஒன்று உண்டு என உறுதியாகக் கூற இயலும்.



# கல்வி சிறந்த தமிழ்நாடு

சுபிரகதம்

கல்வி சிறந்த தமிழ்நாடு; புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு; வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

அவ்வளவுதான். அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாது. தமிழ்க் கல்வி என்றால் இன்றைய நிலையில் வள்ளுவனையும், இளங்கோவையும், கம்பனையும் அறிந்து கொள்வது என்ற நிலைக்கு வந்துவிட்டோம். அதற்கு மேல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்று எதிர்காலத்தை உணர்ந்த அறிஞர் அண்ணா, இந்தியாவின் இப்பகுதிக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்தார். அதனால்நம் நாட்டுப் பெயரிலாவது தமிழை நினைவு கூரும் நல் வாய்ப்பு உள்ளது.

கல்வியை எண்ணில் காமராசர் கண்முன் வருவார். ஓராசிரியர் பள்ளி என்ற அளவில் தமிழ் நாட்டில் சிற்றூர் அனைத்திலும் பள்ளிகளை ஏற்படுத்திக் கல்விக் கண் திறந்தார்.



அவர் காலத்தில் தான் அன்றைய சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டது. ஆர்வமுள்ள அதிகாரிகள் தமிழில் ஆட்சி நடத்தினர். விடுதலை பெற்றுச் சிலகாலமே ஆகியிருந்தது. தம்மை இந்தியர் என்பதில் பெருமையடைந்த அதிகாரிகள், தமிழ் பற்றிப் பேசுவது தேச விரோதம் என்று கருதுமளவுக்கு இருந்தனர். தமிழில் ஆட்சி நடக்கின்ற காலத்தில் கூடத் தமிழில் கையெழுத்திடுவது புரட்சிகரமான செயலாகக் கருதப்பட்டது. 1961 இல் சுமார் 20 பேர் பணியில் சேருவதிலிருந்து தமிழிலேயே கையெழுத்துப் போடுவது என்ற உறுதியோடு தமிழ் நாட்டு, அல்ல, அன்றைய சென்னை மாநில அரசில் நுழைந்தோம். எனக்கு வாய்த்த மேலதிகாரி திரு. ந. திருஞானசம்பந்தம் அவர்கள் தமிழ்ப்பற்றுடையவர். அதனால் நான் மட்டும் பிழைத்தேன். மற்றவர்கள் தொடர்ந்து தமிழில் கையெழுத்துப் போட முடியாமல் போய்விட்டது. அக்காலத்தின் சுதந்தரம் பெற்ற மக்களின் நிலை அதுவே.

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழ்,
வாழிய பாரத மணித்திருநாடு.

என்ற பாரதியின் பாடல் *LOCAL PATRIOTISM* கொண்டதென்பதால், இதனைத் தடை செய்ய வேண்டுமென்று பேசப்பட்டது. தமிழ் வாழ்க, தமிழர் வாழ்க என்பது ஏக இந்திய உணர்வுக்கு எதிரானது என்று கருதப்பட்டது. நல்லவேளை ! பாரதி பாடலுக்குத் தடை வராமலேயே தப்பித்துக் கொண்டோம்.

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் வந்தது. எனினும் அதில் சில விதி விலக்குகள் தந்தார்கள். இது போதாதா! இதைச் சாக்கிட்டு விதி விலக்கிலேயே தமிழ் அதிகாரிகள் காலம் தள்ள முற்பட்டனர். இதில் ஒரு வேடிக்கை; இச்சட்டம் சுப்பனுக்கும் குப்பனுக்கும் தான். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், தலைமைச் செயலகத்திலும் இந்தச் சட்டம் நுழைய இயலாது. அண்மையில் ஒரு வழியாக இவ்விரண்டு அலுவலகத்திற்குள்ளும் தமிழ் எட்டிப் பார்த்துள்ளது. தமிழ் முன்னேறுகிறதா, பின்வாங்குகிறதா என்று நாள் செல்லச் செல்லத் தெரியும்.

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஓர் அங்கம் கருவூல அதிகாரி. அவருக்குத் தமிழிலிருந்து முழுவிலக்கு. அவர்தான் அரசாங்க ஊழியருக்குப் படியளக்கும் பெருமாள். சம்பளம், பயணப்படி, மற்ற எல்லாப் படிகளையும் படிபடியாய் அளப்பவர். அதனால் இவற்றைத் தமிழில் எழுத இயலாது. தமிழக அரசில் போதிய எழுத்தறிவில்லாதவர்கள். நான்காம் நிலையில் ஏராளம் பேர் உள்ளனர், அவர்களும் ஆங்கிலத்தில்தான் பயணப்படி எழுத வேண்டும். அண்மையில் புதிய அரசு இக்கொடுமையை மாற்றிப் பயணப்படியை மட்டும் தமிழில் எழுத அனுமதித்துள்ளது. இன்னும் சம்பளப்பட்டியல் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும். தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் வந்தது. எனவே தமிழில் பயின்றோர் ஆட்சிக்குத் தேவைப்பட்டார்கள். அந்நாள் கல்வி அமைச்சராக இருந்த சி. சுப்ரமணியம் அவர்கள் கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வியை அறிமுகப்படுத்தினார்கள். அதனை நிறைவேற்றுகின்ற கால கட்டத்தில் அவர் நடுவரசில் பதவியேற்க நேர்ந்து விட்டது.

கேடுகாலம் அன்று -பித்தது; பின்னர் விலகவேயில்லை. திரு. பக்தவத்சலனார் தமிழில் படிப்போருக்குத் தமிழக அரசில் வேலை என்று சொல்வதற்குப் பதிலாக, நிதியுதவி என்று அறிவித்து விட்டார்.

பின்னர் தமிழில் பயின்றோர் வேலை கேட்டுப் பல போராட்டங்கள் நடத்தினர். ஒன்றும் பலிக்கவே இல்லை.

தமிழில் பயின்றோருக்குத்தான் தமிழ்நாட்டு அரசில் வேலை கிடைக்குமென்று, இயற்கையாக எதிர்பார்த்த பொதுமக்கள் ஏமாந்து போயினர். ஆக எதில் படித்தாலும் தமிழ் நாட்டு அரசில் வேலையுண்டு என்று ஆகிவிட்டது. மேலும் தமிழில் படித்தால் தமிழ் நாட்டிற்குள் தான் வேலை தேடவேண்டும்; ஆங்கிலத்தில் படித்தால் தமிழ் நாட்டிலும் தேடலாம்; வெளிமாநிலத்திலும் தேடலாம்; வெளிநாட்டிலும் தேடலாம்; இந்த உண்மை தமிழக மக்களுக்குச் சில அரிய உண்மைகளைப் புலப்படுத்தியது. தமிழ் இனிச் செல்லாக்காசு; கம்பனையும், வள்ளுவனையும் படிக்கக் கல்லூரிக்குப் போக வேண்டுமா! தமிழை வீட்டில் நாமே சொல்லிக் கொடுத்துக் கொள்ளலாம். பிழைப்புக்கு வழி தேட ஆங்கிலக் கல்லூரிப் படிப்புத் தேவைதான் என்பது விளங்கியது.

கல்வி வியாபாரிகள் விழித்துக் கொண்டனர். கல்லூரியில் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்பதால், குழந்தைகளைக் கருவிலேயே தயார்ப்படுத்துவோம் என்று கிளம்பி விட்டனர். அழுக்குப் படாமல் வேலை வேண்டுமென எண்ணும் இளைஞர்களும், வீட்டுப் பணியிலிருந்து விடுதலை தேடி வெளியே வந்த வீராங்கனைகளும், இருநூற்றுக்கும் முந்நூற்றுக்கும் 24 மணி நேரம் உழைக்கத் தயார் ஆயினர். ஒரு ஓலைக் குடிசை போட மூலதனமும் 40,000 ரூபாயும் இருந்தால் போதும் ஒரு பள்ளியைத் தொடங்கி விடலாம். கொஞ்சம் அனுபவம் கைவந்தால் போதும் ஊர்தோறும் ஒருத்தரே பல பள்ளிகள் தொடங்கி நடத்த இயலும்.

இன்றைய தலைமுறையில் முன்னணியில் உள்ளோர் பலர் பள்ளியிறுதி வரையாவது தமிழில் படித்தவர்கள். அவர்களின் பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்பும் பறிபோய்விட்டது. இளமழலை முதல் ஆங்கிலம் பயில்கின்றனர். ஆங்கிலம் பேசாத வீட்டுப் பிள்ளைகள் இளமழலை, முதுமழலைகளில் படும் சித்ரவதை அருகிலிருந்து காண்போருக்குப் புரியும். குடும்பத் தலைவி தன் குழந்தைகளின் மண்டையில் ஆங்கிலத்தைப் புகுத்துவதற்குப் படும் அல்லல் சொல்லுந்தரமன்று. திருதிருவென விழிக்கும் பிள்ளைகளை எல்லாக் கொடுமைக்கும் ஆளாக்கி, மூளையில் செலுத்துகின்றாள். அதனாற்றான் பள்ளியில் சேர்க்கும்போது, பெற்றோருக்குத் தேர்வு வைக்கிறார்கள்.

வெயில் நாடான இந்தியாவில், வெள்ளையன் போனதும், டை,ஷூ ஆகியவற்றைக் கழற்றி விட்டெறிந்த அதிகாரி, தன் மழலை அத்துன்பத்தை அனுபவிப்பதை ஆனந்தமாகப் பார்க்கிறார். தான் பெற்ற பேறு, தன் பிள்ளை பெறவேண்டும் என நினைக்காமல், நான் பட்ட துயரம் தன் பிள்ளைகளைப் பிடித்துக் கொண்டது குறித்துப் பெரு மகிழ்ச்சி அடைகின்றார்.

ஆங்கிலத்தில் தேர்வெழுதுவதில் பிள்ளைகள் பெரிதும் துயரமடைந்தனர். அதனால் வெற்றியடைவோர் எண்ணிக்கை குறைந்தது. அரசாங்கம் ஓர் அரிய வழி கண்டு பிடித்தது.

ஆங்கிலம் வழி பயின்றபோதும் தேர்வுகளைத் தமிழில் எழுத அனுமதியளித்தது. மாணவர்களுக்கு இது நன்மையாக அமைந்தது. கல்லூரிகளில் ஆங்கிலம் வழி படிக்கும் மாணவர்கள், சுமார் 80 சதவீதம் தமிழில் தேர்வெழுதி வெல்லுகிறார்கள் என்பது இன்றைய நடைமுறை. இந்த இரகசியம் இன்னும் தமிழ் நாட்டுப் பெண்கள் காதுகளுக்கு எட்டவில்லை.

வேலை வாய்ப்பு என்பது தற்காலத்தில் குதிரைக் கொம்பாக உள்ளது. எல்லா மாநிலங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக உள்ளது. எனவே பிறமாநிலங்களில் வேலை என்பது கற்பனையே.

அரசாங்க வேலை வாய்ப்பில் இன்னொரு கொடுமை, தமிழ்மொழி அறியாதவரும் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் பின்னர் இரண்டாம் வகுப்பு அளவில் தமிழ் தேறினால் போதும். எனவே தமிழ்நாடு அரசாங்கத்தின் தமிழறிவு இரண்டாம் வகுப்பு அளவுதான். தமிழ் எழுத்துக்களைப் படிக்கவும் எழுதவும் தெரிந்தால் போதும். இன்றுள்ள சூழ்நிலையில், தமிழை மொழிப்பாடமாகப் படிக்காமலே, முனைவர் பட்டம் வரை பெற, தமிழ் நாட்டில் முடியும். பிற மாநிலங்களில் முடியாது. இருந்தபோதிலும் தமிழர்களை மொழி வெறியர் என்பர்.

தஞ்சையில் பிறந்து, தொடக்கப்பள்ளி முடித்து சென்னையில் பி.இ. வரை முடித்த தமிழ் இளைஞர் பணியில் சேர்ந்தார். அவரால் தினத்தந்தி கூடப் படிக்க இயலவில்லை.

மொழி ஒரு பிரச்சனையே அல்ல; ஜெர்மனி, போன்ற மேலை நாடுகள் சென்று ஜெர்மனியிலேயே எம்.இ பயின்று வந்தவர்கள் உண்டு. ஜெர்மனியில் இரண்டு மாதம் வெறும் மொழிப் பயிற்சிதான். பின்னரே மேற்படிப்பு. மொழியில் புலமை பெற இரண்டு மாதம் முழுநேரம் போதும். தமிழ்நாடு அரசில் பணிக்கு வரும் அயல் மொழி அய்.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு இரண்டு மாதம் முழுநேரம் தமிழ் சொல்லிக் கொடுத்த பின் தத்தம் பணியில் சேர்க்கலாம்.

தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலம் செல்வோருக்கும் இது பொருந்தும். நடுவரசு செல்வோருக்கும் இது பொருந்தும்.

தமிழ் நாட்டில் ஆங்கிலம் விலகும் இடத்தை இந்தி பிடித்துக்கொள்ளும் என்ற பயம் உலவுவதாகத் தெரிகின்றது. ஆங்கிலத்தை விலக்கி விட்டு இடத்தைக் காலியாக வைத்திருந்தால்தானே, திறந்த வீட்டில் எதுவேண்டுமானாலும் நுழையும்? ஆங்கிலத்தின் இடத்தை உடனுக்குடன் தமிழால் நிரப்பி விட்டால் இந்தப் பிரச்சினை எழாது.

உத்திரப் பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதவ் கூறினார். தன் மாநிலத்தில் முழுவதும் இந்தி என்றதோடு நிறுத்திக் கொள்ளாமல், தமிழ் நாட்டோடு தமிழில் தொடர்பு கொள்வேன் என்றார். தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் இதை மூடி மறைத்துவிட்டன.

மீண்டும் காமராசரின் பெருமைக்கே வருவோம். தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி ஒரு பாடமாக இருந்தது. பிற எல்லாப் பாடத்திலும் முதல் வகுப்பு மதிப்பெண் பெறும் மாணவர்கள் கூட இந்தியில் போதிய மதிப்பெண் பெற முடியாமல், பள்ளி இறுதித் தேர்வை மீண்டும் எழுதும் நிலை இருந்தது. இந்த அவலத்தைப் போக்கி இந்தி மதிப்பெண் தேர்வுக்குத் தேவையில்லை என நீக்கி மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றார் காமராசர். 6,7,8 வகுப்புகளில் இந்தி படித்தோம். இந்தி நீங்கியதால் 9,10,11 வகுப்புகளில் இந்தியின்றிப் பிழைத்தோம்.

தமிழை ஆட்சிப் மொழியாக்கிய பெருந்தலைவர், அன்றே தமிழில் ஆட்சி நடைபெறுவதற்காக தமிழ் வழிக் கல்வி தொடங்குகிறோம் என்றும், தேவை கருதி தமிழக அரசில் தமிழ் வழி பயின்றோருக்கு வேலை எனவும் அறிவித்திருந்தாரானால், காளாண்கள் போல ஆங்கிலப் பள்ளிகள் பெருகியிருக்காது. தமிழ் நாட்டில் 'ஆங்கிலப் பள்ளி' என்று போடுவதற்கு இதயம் கூசாமல், பெருமைப்படும் நிலை தோன்றியிருக்காது.

தமிழ் வழி பயில்வோருக்கு வேலை உத்தரவாதம் இல்லை. எனவே தமிழ் சோறு போடாது. சோறு போடாத தமிழ் யாருக்குத் தேவை. இது தமிழ் நாட்டு இளைஞனின் கேள்வி.

தமிழ் வாழத் தீக்குளித்துச் செத்தார்களாமே சிலர்; இனித் தமிழ் உயிரோடு இருப்பதற்கே இத்தகைய தியாகங்கள் தேவைதான்.

சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்.
என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்.

என்று விரும்பினானே ஒரு பெருங்கவிஞன் அது முற்றிலும் நியாயமாகி விட்டது. உயிர் வாழத் தமிழ் தேவையில்லை என்று ஆகிவிட்டது. பணிக்காலமெல்லாம் முடிந்த பின், ஓய்வு பெற்றுத் திண்ணையில் அமர்ந்திருக்கும் போது தமிழ் படிக்கலாம். சாகும் வரை தமிழ் படிக்கலாம். சாகும்போதும் தமிழ் படிக்கலாம். நிச்சயம் சாம்பலில் தமிழ் மணம் இருக்கும்.

# விழாத விழா

## கல்பாக்கம் வ.வேம்பையன்

விழா

விழா என்பது விழைந்து செய்வது; விரும்பிச் செய்வது; நலன் கருதிச் செய்வது; அன்புடன் கூடுவது; பண்புடன் பழகுவது; மகிழ்ந்து கொண்டாடுவது; ஆடிப்பாடுவது; மனைவி மக்கள் சுற்றத்துடன் உண்பது; உறவினர்களுடன் உறவாடுவது; நண்பர்களுடன் நட்பாடுவது; புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் தருவது; ஊக்கம் ஊட்டுவது; ஆக்கம் அளிப்பது.

விழா ஓர் இனமக்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், வரலாறு, அரசியல், சமுதாயவியல் முதலியவற்றை முரசொலிப்பதாக அமைதல் வேண்டும். அந்த மக்களுக்கு உரிமை உணர்வையும் விடுதலைவேட்கையையும் உணர்த்துவதாக இருத்தல் வேண்டும்.



இவ்வாறு இன்று நாட்டில் நடைபெறும் விழாக்கள் உள்ளனவா? எண்ணிப் பார்ப்போம்

| | | |
|---|---|---|
| சித்திரை | : | சித்ரா பௌர்ணமி, சித்திரைப் பெருவிழா. |
| வைகாசி | : | விசாகம், கருட சேவை. |
| ஆனி | : | திருமஞ்சனம். |
| ஆடி | : | ஆடிப் பூரம், ஆடிப் பெருக்கு, வரலட்சுமி விரதம். |
| ஆவணி | : | ஆவணி அவிட்டம், விநாயகர் சதுர்த்தி, கோகுலாஷ்டமி, ஓணம். |
| புரட்டாசி | : | சரஸ்வதி பூசை (ஆயுத பூசை), நவராத்திரி, தசரா, சனிக்கிழமை விரதம், திருப்பதித் திருவிழா |
| ஐப்பசி | : | தீபாவளி, கந்தசஷ்டி. |
| கார்த்திகை | : | அண்ணாமலையார் தீபம். |
| மார்கழி | : | ஆருத்ரா தரிசனம் (திருவாதிரை), வைகுண்ட ஏகாதசி. |
| தை | : | தைப் பூசம். |
| மாசி | : | மகம், மகா சிவராத்திரி. |
| பங்குனி | : | பங்குனி உத்திரம், ராமநவமி. |

பன்னிரண்டு மாதங்களிலும் இவ்வாறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு கதை, புராணம் உண்டு.

ஓர் ஆண்டில் முசுலீம்கள் 15 முக்கிய பண்டிகைளையும், கிறித்தவர்கள் 18 முக்கிய பண்டிகைகளையும், இந்துக்கள் 45 முக்கிய பண்டிகைகளையும் கொண்டாடு கிறார்கள்.

இவற்றில் எதுவும் தமிழ் மக்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், வரலாறு, அரசியல், சமுதாயவியல் முதலியவற்றை எடுத்துக் காட்டுவதாக இல்லை. விளைவு என்ன? தமிழ் மக்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சமுதாயத்தில் பழமை, பொருளாதாரத்தில் ஏழைமை, அரசியலில் அடிமை, வாழ்வில் கூலி ஆக இருந்து வருகிறார்கள். இது பற்றித் தமிழர்கள் சலிப்போ, சோர்வோ, வெறுப்போ, புரட்சியோ கொண்டுவிடாதபடி இந்தப் பண்டிகைகள் பாதுகாத்து வருகின்றன.

## பொங்கல் விழா

இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டும் வேறுபட்டும் இருப்பது பொங்கல் திருநாள் ஒன்றே. எப்படி? தமிழ் நாட்டில் எண்பது விழுக்காட்டிற்கு மேல் உழவர்கள். அவர்களின் தொழில் உழவு. உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டது பொங்கல் விழா. உழவுக்கு உதவி புரியும் மழை, ஞாயிறு, மாடு, உடன் உழைப்பாளர் இவ்விழாவில் போற்றப்படுகின்றனர். தூய்மை, துப்புரவு, உழவு, உழைப்பு, நன்றி அறிதல், ஞாயிறு போற்றுதல், மொழி பேணல் ஆகியவற்றின் சீரும் சிறப்பும் செப்புகின்ற விழாவாகப் பொங்கல் விழா உள்ளது.

போகிப் பண்டிகை `இந்திரனுக்குரிய விழா' என்றும் பொங்கல் பண்டிகை ஆதித்தனைத் தியானிக்கும் `காயத்ரீ மந்திர விழா' என்றும் `சங்கராந்தி' என்றும் மாட்டுப்பொங்கலைக் `கண்ணனுக்குரிய விழா' என்றும் கதை கட்டப்பட்டது; புராணம் புகுத்தப்பட்டது.

ஆனால் பொங்கல் விழா இந்தக் கதையிலும் புராணத்திலும் வீழ்ந்து விடாமல் விழாத விழாவாக விளங்கி வருகிறது. அதனால் தான் பொங்கல் பெருநாள் விழா என்றும் விழாத விழாஎன்றும் அழைக்கப்படுகிறது.

மேலும், தமிழ் மொழியை, தமிழ் இனத்தை, தமிழ் நாட்டை வீழ்த்தாத, என்றும் தாழ்த்தாத விழாவாக இது திகழ்கிறது. ஆகவே தமிழர் திருநாள்,, என்று போற்றப்படுகிறது.

## தமிழர் திருநாள்

இவ்விதம் விழாத விழாவாக விளங்குகின்ற பொங்கல் பெருநாளைத் தமிழ்த் திருநாளாகவும் தமிழர் திருநாளாகவும் கொண்டாடுவதற்கு 1934 ஆம் ஆண்டில் வித்திட்டவர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய கா.நமச்சிவாயர் ஆவரர்.

இன்று உலகில் 72 நாடுகளில் வாழ்கின்ற ஏறத்தாழ பதின்மூன்று கோடித் தமிழ் இன மக்கள் சாதி, மதம், நிறம், கட்சி, நாடு, வேறுபாடு இல்லாமல் பண்பாட்டு விழாவாக, தமிழர் திருநாளாகப் பொங்கல் பொன்னாளைக் கொண்டாடுகிறார்கள்.

இவ்வாறு தமிழர் திருநாளைக் கொண்டாடும்படி தமிழ் இன மக்கள் இடையே பரப்பி வருகின்ற பெருமை தன்மான இயக்கம், திராவிடர் இயக்கம், பகுத்தறிவு இயக்கம், தனித்தமிழ் இயக்கம், தமிழரசுக் கழகம் ஆகியவற்றையே சாரும்.

தன்மான இயக்கத்தலைவர் தந்தை பெரியாரின் எதிர்ப்புக்கு ஆளாகாத எதுவுமே இல்லை. ஆனால், பொங்கல் திருநாள் மட்டும் அவர் எதிர்ப்புக்கு உட்படாததோடு அவருடைய பாராட்டுதலையும் போற்றுதலையும் பெற்றுத் திகழ்கிறது.

`தமிழ் மக்களுக்குப் பாராட்டத் தகுந்த ஓர் உண்மையான திருநாள் உண்டு என்றால் அது தமிழர் திருநாளாகிய பொங்கல் திருநாள்தான். பொங்கலில் எவ்வித அரசியலோ, மதமோ, மற்ற கற்பனைகளோ இல்லை' என்று தந்தை பெரியார் சான்றுரைத்துள்ளார்கள்.

## தமிழ்க் கோபுரம்

ஆரியம், தேசியம் இரண்டிலும் விழாமல் தமிழுக்கு, தமிழர்க்கு, தமிழ் நாட்டிற்குப் பெருமை சேர்க்கின்ற தமிழர் திருநாளில் மொழிக்கு, இனத்திற்கு, நாட்டிற்கு அடித்தளமாகவும் ஆணிவேராகவும் விளங்கி வருகின்ற பதினொரு தமிழ்ச் சான்றோர்களுக்குப் பதினொரு மாடங்கள் கொண்ட தமிழ்க் கோபுரம்' அமைத்து அவற்றில் அவர்களுடைய முழு உருவச் சிலைகளை வைத்தல் வேண்டும் என்று ஒரு தமிழ் நெஞ்சம் கனவு காண்கிறது. கனவின் வடிவமைப்பே முகப்பில் ஓவியமாகத் திகழ்கிறது.

மாடத்தின் வரிசை எண்ணும் சான்றோர் பெயரும் சிறப்பும் கீழ்வருமாறு இருக்கும்.

| மாடம் எண். | சான்றோர் பெயர் | சிறப்பு |
|---|---|---|
| 1. | தொல்காப்பியர் | தொன்மை |
| 2. | திருவள்ளுவர் | வாழ்வியல் |
| 3. | இளங்கோ அடிகள் | முத்தமிழ் |
| 4. | தந்தை பெரியார் | இன நலம் |
| 5. | பேரறிஞர் அண்ணா | அரசியல் |
| 6. | பெருந்தலைவர் காமராசர் | தியாகம் |

| மாடம் எண். | சான்றோர் பெயர் | சிறப்பு |
|---|---|---|
| 7. | தமிழ்க்கடல் மறைமலை அடிகள் | தனித்தமிழ் |
| 8. | புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் | புரட்சி |
| 9. | மொழி ஞாயிறு தேவ நேயப் பாவாணர் | தமிழ் மொழி |
| 10. | தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி | ஆட்சி |
| 11. | தமிழர் தளபதி கி. வீரமணி | கொள்கைபரப்பு |

தமிழ்க் கோபுரத்தின் உச்சியில் தமிழ்க் கொடிகள் (வில், புலி, கயல்) பட்டொளி வீசிப் பறக்கும். கோபுர உச்சியில் நடுவில் தமிழ் ஒளி சுடர் விட்டுத் திகழும்.

தமிழ் மொழிக்கு, தமிழ் இனத்துக்கு, தமிழ் நாட்டுக்கு இவர்கள் மட்டும்தாம் பாடுபட்டார்களா? மற்றவர்கள் இல்லையா? என்று வினா எழலாம். இவர்கள் அடித்தளம், ஆணிவேர் என்று எண்ணுகிறேன். யானை அடிக்குள் எல்லா விலங்குகளின் அடிகளும் அடங்குவது போல, குறளடியில் எல்லாக் கருத்துக்களும் அடங்கியுள்ளது போல இவர்களுக்குச் செய்யும் சிறப்பு எல்லார்க்கும் செய்யும் சிறப்பாகக் கருதுகின்றேன். இவர்கள் தனி மனிதர்கள் அல்லர். அமைப்பு, இயக்கம், நிறுவனம், இனம், மொழி, நாடு முதலியவற்றின் படிமங்கள்.

தஞ்சை மண்ணில் தமிழர் திருநாள் அறக்கட்டளை சார்பில் தமிழ்க் கோபுரம் அமைத்தல் வேண்டும் என்பது என் பேரவா; கனவு. தமிழ் நெஞ்சம் உள்ளவர்கள் வேறு இடங்களிலும் அமைக்க முயற்சி செய்யலாம்.

'கனவு கண்டால்தான் நனவு ஆக முடியும்' என்பது ஆங்கிலப் பழமொழி.

'நாடு, சமுதாயம் பற்றிக் காணுகின்ற கனவு உறுதியாக நனவு ஆகும்' என்பது பேரறிஞர் அண்ணாவின் அறிவுரை.

> தனக்கென வாழ்வது சாவுக் கொப்பாகும்.
> தமிழுக்கு வாழ்வதே வாழ்வதாகும்.
>
> —புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

விழாத விழாவைப் போற்றுவோம்.



# தன்னிகர் இல்லா மாந்தர்

திருமிகு தமிழைக் கற்பார்;
திருக்குறள் நோற்பார்; முப்பால்
திருவுரை அருட்பாப் போன்று
திருவருள் கமழ வாழ்வார்;
"ஒருவரே கடவுள்" என்னும்
ஒண்பொருள் காண்பார்; இன்பம்
தரும் உயிர் இரக்கம் கொள்வார்
தமிழர்காண் உலகின் கண்ணே!

அறிவியல் கலையில் வல்லார்
அன்பினில் வாழ்க்கை செய்வார்;
பொறிபுலன் வென்று வாழ்வார்;
பொதுப்பணி புரிவார்; என்றும்
நெறிமுறை வழுவார்; நீடு
வாழ்நிலை அறிவார்; ஊழ்முந்(து)
உறினும்உப் பக்கம் காண்பார்
தமிழர் காண் உலகின் கண்ணே!

பெற்றவர் தம்மைப் போற்றிப்
பேணுவார்; பண்பு மிக்கார்;
நற்றவம் முயல்வார்; சான்றோர்;
நயத்தக்க நாக ரீகர்;
மற்றவர் வாழ வாழ்வார்;
வாய்மையர்; தூயர்; வேண்டின்
உற்றமெய் உயிரும் ஈவார்
தமிழர்காண் உலகின் கண்ணே!



மழலையில் குழல்,யாழ்ப் பண்ணில்
மகிழுவார்; சித்தர், யோகர்,
பழம்நிகர் அறிஞர், சிற்பர்,
ஓவியர், கலைஞர், பாணர்,
வழிவழிக் கலைகள் தம்மை
வளர்ப்பர்; இவ் வுலகை யொட்டி
ஒழுகுவார்; குழந்தை போன்றார்
தமிழர்காண் உலகின் கண்ணே!

மயல்தரும் இயற்கைக் காட்சி
மாட்சியில் இயைந்து, தம்மெய்
உயிர்-உணர் வெல்லாம் ஒன்றி,
உவந்துதம் சிந்தை சொல்லில்
செயல்களில் உயர்ந்து காண்பார்;
சீர்சிறந் துழைப்பார்; மற்றோர்
உயர்வதில் களிப்பார்; அன்னார்
தமிழர்காண் உலகின் கண்ணே!

மன்னுயிர் எதையும் கொல்லார்;
மருந்துக்கும் புலாலை உண்ணார்;
நன்றேனும் கள்ளை நண்ணார்
பொய்புனை நவிலார்; மற்றோர்
பொன்பொருள் ஏதும் கள்ளார்;
அகம்புற ஒழுக்கம் காப்பார்
தன்னிகர் இல்லாமாந்தர்
தமிழர் காண் உலகின் கண்ணே

## கவிஞர் மருதுவண்ணன்

# தமிழர் பண்பாடு

## முத்தமிழ்ச் செல்வர் ஹ.இராமசாமி

அலோர்ஸ்டார்)

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அதற்கோர் குணமுண்டு.

நாமக்கல் கவிஞர்.

உலகில் உள்ள ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. பண்பாடுகளை ஒப்புநோக்கி உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது. காலப்போக்கிற்கேற்பப் பண்பாடுகள் மாறலாம். "புதியன புகுதலும் பழையன கழிதலும், வழுவல கால வகையி னானே" என்பது நன்னூற் சூத்திரம். இதன் கருத்து, தமிழர் பண்பாட்டிற்கும் பொருந்தும். காலங் காலமாக மாறாமல் இருந்து வரும் தமிழர் பண்பாடுகளைத் தெரிந்து கொள்ளுவதும் திறமையாகக் கட்டிக் காப்பதும் நமது கடமையாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழரின் தலைசிறந்த பண்பாடு.



### பண்பு

"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்" எனக் `கலித்தொகை' என்ற நூல் பண்புக்கு விளக்கம் கூறுகிறது. அதாவது, பண்பு என்று சொல்லப்படுவது நல்ல உலக நடைமுறையை அறிந்து நடத்தல் என்று கூறுகிறது. அதனை இன்னும் சற்று விரிவாக விளக்குகிறார் வாழ்வியல் வகைகளை வகுத்து வழங்கியுள்ள வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையார். "ஒருவன் பெருமை, பெருந்தன்மை முதலிய அருங் குணங்களிலிருந்து தவறாமல், பிறர் குணம் அறிந்து அதற்கேற்ப நடக்கும் நற்குணமே பண்பு" என்றும், "அது எல்லாத் தன்மைகளையும் அறிந்து நடக்கும் ஓர் உயர்ந்த குணம்" என்றும், "அன்புடைமையும், உயர்குடிக்கேற்ற நற்குண நற்செயலுமே நல்ல பண்பு" என்றும் பேசுகிறார் நாயனார். அவரது கருத்துப்படி நீதியையும் அறத்தையும் நெஞ்சார விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பே சிறந்த பண்பாகும்.

### பண்பாடு

பண்பாடு என்ற சொல்லுக்குப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் தருகின்ற சிறப்பான விளக்கம் இங்குச் சிந்திக்கத்தக்கது. `பண்பாடு' என்ற சொல், `பண்' என்பதையே மூலச் சொல்லாகக் கொண்டது என்கிறார் பன்மொழிப் புலவர். நிலத்தைப் பண்படுத்துவது போல, இனத்தைப் பண்படுத்துவது பண்பாடாகும். நிலத்தைப் பயிரிடுவதற் காகப் பண்படுத்துகிறோம். இனத்தை யும் வாழ்வுக்காக, வாழ்வின்

வளத்துக்காகப் பண்படுத்துகிறோம். ஆகவே அதுவும் பண்பாடு ஆகிறது என்கிறார் அவர்.

### கலாச்சாரமே பண்பாடு

கலை, ஆசாரம் என்ற இரு சொற்கள் இணைந்தது கலாச்சாரம் என்ற சொல். அதற்குக் கலையறிவு சார்ந்த ஒழுக்கம் என்று பொருள் சொல்லலாம். ஆனால் தமிழ் அறிஞர்கள் அந்தச் சொல்லை அழகான தமிழிலே, "பண்பாடு" என்று அழைக்கிறார்கள். கலை என்பது தமிழ்ச் சொல். ஆசாரம் என்பது வடமொழிச் சொல். ஆசாரம் என்ற சொல் ஒழுக்கம் அல்லது நன்னடை என்று பொருள்படும். கலாச்சாரத்தை உணர்த்தும் பண்பாடு என்ற தமிழ்ச் சொல்லும் பண்+ பாடு என்ற இரு சொற்கள் இணைந்ததுதான். பண் என்பதற்கு இங்கே சிறப்பு, தகுதி என்பது பொருளாகும். பாடு என்றால் உலக வொழுக்கம் அல்லது உலக நடைமுறை என்று பொருள்படும். ஆகவே சிறப்பான உலக ஒழுக்கமே பண்பாடு என்பது. அதாவது தமிழ் மக்களது சிறப்பான நடைமுறை என்பதே தமிழ்க் கலாச்சாரம் என்ற தமிழர் பண்பாடு என்பதாகும்.

### பண்பாட்டை உருவாக்கியோர்

ஒருவனுக்கு மொழிதான் முதலில் முக்கியம். அதன் பிறகுதான் நாடு. மொழி இருந்தால் நாட்டை எங்கு வேண்டுமானாலும் ஏற்படுத்திக்கொள்ளலாம். மொழி அடங்கியதுதான் பண்பாடு. பண்பாடுதான் ஓர் இனத்தின் உயர்வை வெளிப்படுத்தும். அதனால்தான் நாம் பண்பாட்டைப்பற்றி அதிகமாகப் பேசி வருகிறோம். நமது தமிழர் பண்பாட்டில் வீரம், கொடை, அறம், காதல், கற்பு ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. இவற்றை உணர்ந்து நடப்பதன் வழிதான் நாம் பண்பாட்டோடு வாழ்கிறோம் என்பதை வரையறுக்க முடியும். பண்பாட்டின் முக்கிய பணி அதன் தாயாகிய மொழி அழியாமல் காப்பதே.

இந்த நாட்டில் நமது தாய்த் தமிழை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டை நாம் மறந்தோமானால் அல்லது அதைப் புறக் கணித்தோமானால் காலப்போக்கில் தமிழில் பேசுவதிலிருந்தே நாம் விடுபட்டுவிடுவோம். பிறகு தமிழர் பண்பாடே இங்கு அருகிவிடும் – அழிந்துவிடும். ஒரு நாட்டின் வரலாறே பண்பாட்டின் பரம்பரையில் தான் அமைகிறது – வளர்கிறது. பண்பாட்டை உருவாக்கி வளர்ப்பவர்கள் அந்த நாட்டின் மேதைகள், சமுதாய அரசியல் வழிகாட்டிகள், தத்துவ ஞானிகள், இலக்கியப் படைப்பாளர்கள், பேரறிவுபெற்ற வல்லுநர்கள் ஆகியோராவர். நம் தமிழர் பண்பாட்டைப் பண்டைய நாளில் உருவாக்கியவர்கள் பலப்பலராவர்.

### பல்வகைப் பண்பாடுகள்

தமிழர் பண்பாட்டில் பல்வகைக் கூறுகள் அடங்கியுள்ளன. அகப் பண்பாடு, அதாவது அகப் பொருள் – காதல் – பற்றிய பண்பாடு, புறப் பண்பாடு – வீரப் பண்பாடு – ஆண்மைப் பண்பாடு, பெண்மைப் பண்பாடு, குடும்பப் பண்பாடு, சமுதாயப் பண்பாடு, அரசியல் பண்பாடு, உள்ளப் பண்பாடு, கடவுள் பண்பாடு ஆகிய இன்னும் பல்வகைகள் அதில் அடங்கியுள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்குச் சுருக்கமாகச் சிந்திப்போம்.

### அகப் பண்பாடு

அகப் பண்பாடு என்பது காதல், ஒழுக்கம் பற்றிய நடைமுறையைக் குறிக்கிறது. ஒத்த பிறப்பும், ஒத்த வயதும், ஒத்த உருவமும், ஒத்த அன்பும், ஒத்த அறிவும் அமைந்த ஆணும் பெண்ணும் காதல் கொண்டு, சில காலம் மனம் விட்டுப் பழகி ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு, பின்பு திருமணம் புரிந்து வாழும் வாழ்வை 'அக வாழ்வு' என்பார்கள். உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை அருமையான ஒற்றுமையுற்ற உழுவலன்பு பூண்ட உயர்வான காதலுக்கு இப்படி ஒப்பிட்டுக் காண்கிறார் உத்தரவேதம் உரைத்த தெய்வப் புலவர்.

> உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு.

இது காதலன் வாக்கு. உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை எவ்வாறு பிரிக்க முடியாதோ, அவ்வாறே ஒருங்கிணைந்த உயர்வான காதலர்களின் காதலையும் பிரிக்க முடியாது. ஒன்றுபட்ட காதலைப் பிரிப்பதென்பது உடலிலிருந்து உயிரைப் பிரிப்பதற்கு ஒப்பாகும். உயிரின் உயர்ந்த தனித்தன்மையையும் காதல் சிறப்பையும் ஒன்று சேர்த்துக் காண்கிற தமிழர்தம் காதல் பண்பாடு அல்லது அகப் பண்பாடு அறிந்து மகிழத் தக்கதாகும். அம் முறையில் ஒருவனுக்கு ஒருத்தி என்பது மாறாத தமிழர் பண்பாடுகளில் தலைசிறந்த பண்பாடாகும்.

காதற் கிழத்தி, காமக் கிழத்தி, இற் பரத்தை, சேரிப் பரத்தை என்று பல்வகைப் பாவையரை வைப்பாக வைத்துக்கொள்ளும் வழக்கத்தைச் சங்க காலம் அனுமதித்தது. ஆனால் அதை வாழ்வியல் மேதை வள்ளுவர் வலிந்து எதிர்த்த பின்பு அந்த வழக்கு மாறத் தொடங்கியது.(இக் கட்டுரையின்

முன்னுரையில் பண்பாடு மாறலாம் என்று கூறிய கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.)

பிறர்மனை நோக்காப் பேராண்மைசான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு

பிறர் மனைவியை விரும்பாமையே அறிவுடையோரின் சிறந்த ஒழுக்கமாகும் என்ற வள்ளுவரின் கூற்று ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டை வலியுறுத்தும். இது தலைசிறந்த தமிழர்தம் அகப் பண்பாடாகும் என்பதில் ஐயமில்லை.

### குடும்பப் பண்பாடு

ஆண்களுக்கும் பெண்களுக்கும் நம் சமுதாயத்தில் தனித் தனியே பற்பல பண்பாட்டு நெறிகள் உள்ளன. மாறாத குடும்பப் பண்பாட்டில் மாறாத அன்பும் அறமும் அடிப்படைப் பண்புகளாக அமைந்து விளங்கும். அவையே சிறந்த வாழ்க்கையை உருவாக்கிச் சீரிய குடும்பம் என்ற பெயர் விளங்கப் பெருந்துணை புரிகிறது.

திருமணமாகிக் கணவன் வீடு சென்றபின் தான் பிறந்த வீட்டு நிலையைப் பேணுதல், அதன் பெருமை பேசுதல், பெண்மைக்குப் பெருமை அல்ல – அழகல்ல. பிறந்த வீட்டில் செல்வச் செழிப்போடு வளர்ந்திருந்தாலும் புகுந்த வீட்டு நிலைக்கேற்ப வாழும் பண்பாடே சிறந்த குடும்பப் பண்பாடாகப் போற்றுதற்குரியது.

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”,
“தந்தை சொல்மிக்க மந்திரமில்லை”,
“தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை”

என்று கொன்றைவேந்தன் கூறும் கோட்பாடுகள் நமது தமிழர்தம் குடும்பப் பண்பாடுகளில் அடங்கும். இதன் வழி, பெற்றோர்களைப் பேணிப் போற்றுதல் என்பது தமிழர் பண்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. அத்துடன் எவ்வகையிலாவது அறிவுள்ள பெரியோர்களின் நட்பைப் பெற்று நடத்தல் எல்லாவற்றிலும் சிறந்ததாகும் என்ற கருத்தை,

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியோரைப்
பேணித் தமராக் கொளல்.

என்று கூறிப் பெரியோர்களைத் துணைக் கொள்ளும்படி பேசுகின்றார் நாயனார்.

### கொடை

தமிழர்கள் கொடைவழங்கும் பண்பில் சிறந்தவர்கள் என்பதை நமது சங்க இலக்கியமான புறநானூறு இங்கிதமாக எடுத்து இயம்புகிறது.

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று

என்ற வாக்கிற்கிணங்க வாகாக விளங்கியவர்கள் தமிழர்கள். இன்னதை எனக்குக் கொடு என இரந்து கேட்பது இழிவானது. அப்படிக் கேட்பவனுக்குக் ‘கொடுக்க மாட்டேன்’ எனக் கூறுதல் அதனினும் இழிவானது என்று கருதும் மிக உயர்ந்த பண்பாடுடையவர்கள் தமிழர்கள். அதே கருத்தில்தான் ஏழைகளுக்குக் கொடுத்து இனிய புகழுடன் வாழ்வதே பயனான வாழ்வு என்பதை,

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

என்றார் வாழ்வியல் மேதை வள்ளுவனார். ஒருவன் கேட்டுக் கொடுப்பது உயர்ந்த பண்பாடு அல்ல என்பதைப் புறநானூறு புகல்கிறது.

கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று
அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

ஒருவன் கேட்காமல் நாமே வலியக் கொடுப்பதுதான் கொடை. அது உயர்வான பண்புதான் என்றாலும் அப்படி நாம் கொடுப்பதைப் பெறமாட்டேன் என மறுப்பது அதைவிடப் பன் மடங்கு உயர்வான பண்பு என்பதை மேற்படி பாடல் வழி உணர்த்துகிறார் பாவலர். வரையாது வழங்கும் கொடைமடத்தைத் தன் கடமையாகக் கொண்ட கொடைக்கடம் வாய்ந்தவர்கள் பண்டைய தமிழர்கள். இன்றும் அத்தகு பண்பாடுடையவர்கள் இங்கும் ஒருசிலர் இருக்கின்றார்கள்.

### கடவுள் பண்பாடு

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்னும் சிறந்த கடவுள் கொள்கையில் வாழ்ந்த அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் இறைநெறிப் பண்பாடு வானளாவ ஓங்கி உயர்ந்திருந்தது. பரம்பொருள் என்னும் பிறப்பிறப்பு அற்ற பெம்மானையே இறைவனாக அவர்கள் வணங்கினார்கள். அன்றைய சமய அறிஞர்கள் சிறு தெய்வ வணக்கங்களைக் கண்டித்துப் பரம்பொருள் வழிபாடுகளையே பரப்பி வந்தார்கள். அதுவே ஒருவகைக் கடவுள் பண்பாடு என்றும் அறிவுறுத்தினார்கள்.

அவர்கள் அன்றைய இறைவழிபாட்டின்போது பொன்னும் பொருளும் போகமும் வேண்டாமல் அன்பும் அறமும் அருளுமே ஆண்டவனிடத்தில் வேண்டினர். அவர்களது அத்தகு இறைவழிபாடு தூய்மையான இறைப் பண்பாட்டை நமக்கு உணர்த்துகிறது. அந்நாளில் அவர்கள் தெய்வத் தன்மையைத் தம் உயிராகப் போற்றி வாழ்ந்தனர். கடவுள் பண்பாடு இன்றைய நமது சைவ சமய வழிபாடுகளில் முழுமையாகப் பங்குகொள்ளா விட்டாலும், பெரும்பாலும் பங்கு கொண்டுள்ளது எனலாம்.

## புறப் பண்பாடு

அகம் அல்லாதவை அனைத்தும் புறமாகும். வீரமான போர் வாழ்க்கையே முற்காலத்தில் மிகுதியாகப் பேசப்பெற்றது. நிராயுதபாணியையோ புறமுதுகுகாட்டி ஓடுபவனையோ கொல்லுங் கொடுமை தமிழர் பண்பாடு அல்ல. "இன்று போய்ப் போர்க்கு நீ நாளை வா" என்று இராமபிரான் இராவணனிடம் கூறிய கூற்றால் மேற்கண்ட புறப் பண்பாட்டை அறியலாம். போர்க்களத்தில் வீரமரணம் எய்துபவர்களுக்கு, 'நடுகல்' நாட்டி வணக்கம் செய்வார்கள். இவையாவும் தமிழர்தம் புறப் பண்பாட்டில் அடங்கும்.

## பண்பாடு காப்பீர்!

'எங்கள் பண்பாடு எங்கள் இன உரிமையாகும். எங்கள் உயிரையே இழந்தாலும் கூட இதை நாங்கள் இழக்க மாட்டோம்' என்ற இதய உறுதியோடு தமிழர் பண்பாட்டைக் கட்டிக் காத்து ஒட்டி ஒழுக வேண்டியது அட்டியன்றி ஒவ்வொரு தமிழனின் கட்டாயக் கடமையாகும்.

வாழ்க தமிழர் பண்பாடு!
வளர்க தமிழர் வளம்!



# அண்ணா சாகவில்லை

பேராசிரியர் கே.என்.இராமச்சந்திரன்



அடலேறே! ஆயுந்தோ றினிக்கும் அண்ணா!
ஆயுளில் உன் ஒருவனைப் போல் கண்டதில்லை!
கடலோரம் துயில்கின்றாய்! மீள மாட்டாய்!
கருத்துக்குள் நீஎன்றும் வாழு கின்றாய்!
திடலேறிப் பேசியஉன் பேச்சைக் கேட்டுத்
தென்னாடே உன்பக்கம் திரண்ட தன்றோ?
நடனமொழி படைத்தவனே! நாளும் உன்னை
நான்நினைப்பேன்! சாகாமல் வாழு கின்றேன்!

புத்தகமாய் இருப்பவனே! புத்தி வேண்டின்,
புண்ணியன்உன் சன்னதியில் பெற்றுக் கொள்வேன்!
வித்தகமாய் நடந்தவனே! உன்னை வெல்ல
வேறொருவர் இந்நாட்டில் பிறந்த தில்லை!
சத்தியமாய்க் கூறுகின்றேன், இந்த நாட்டின்
சரித்திரத்தில் சரித்திரத்தைப் படைத்த வன்நீ!
செத்தாய்நீ என்பதுவும் பொய்யே என்பேன்!
சித்தன்நீ உனக்கென்றும் சாவே இல்லை!

---

பொதிகை மலையில் பிறந்தவளே!
பொற்றா மரையில் தவழ்ந்தவளே!
மதுரைத் தெருவில் நடந்தவளே!
மங்காத் தமிழ்மகள் நீயன்றோ?

கம்பன் வீட்டுக் கவிமகளே!
கற்பிற் சிறந்த கண்ணகியே!
கொம்பைத் தழுவாக் கொடிமகளே!
கொஞ்சும் நற்றாய் நீயன்றோ?

பிள்ளைத் தமிழாய் உள்ளவளே!
பேச்சுத் தமிழாய் வாழ்பவளே!
கொள்ளை இன்பக் கோமகளே!
குடும்ப விளக்கு நீயன்றோ?

குறிகள் சொன்ன குறவஞ்சி!
குறைகள் சொன்னால் ஏற்பதுண்டோ?
நெறிகள் பேசும் நிலமகள்நீ!
நிசமாய் நீயே தாயன்றோ?

நாடகத் தமிழாய் நிலைத்தவளே!
நன்றாய் உலாவரும் தமிழ்மகள்நீ!
ஆடல் புரிவாய் என்நெஞ்சில்!
அழகாய் என்னை வாழவைப்பாய்!

திருமதி தங்கம் இராஜாஜி



# கம்பரின் குடும்பம்



## கொடுமுடி சண்முகன்

இராமகாதையின் நாயகியர் பலர். அன்னை சீதாப்பிராட்டி, கற்பரசி மண்டோதரி, இராகவன் தாயார், தம்பி மனைவியர், தாரை இன்னும் பலர். அவர்களின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஓரளவு நமக்குப் புலப்படுத்துகிறார் கம்பர்.

கணவன் இருக்குமிடம் அயோத்தியென்று கணவனுடன் கானகம் ஏகினாள் சீதை. யார் கட்டாயத்திலும் அன்றித் தானே புறப்பட்டு விட்டாள். இலக்குவன் மனைவி ஊர்மிளை வீட்டிலேயே இருந்து கொண்டாள். அவர் புறப்பட்டிருந்தாலும் இலக்குவனால் அழைத்துச் சென்றிருக்க இயலாது. அண்ணனுக்கும் அண்ணிக்கும் தொண்டு செய்வதே அவன் பணி. ஊர்மிளை உடன் வந்தால் பாரமாக இருக்கும்; தன் பணி தடைப்படும்.



சீதை கணவனோடு வாழ்ந்த காலம் குறைவே எனினும் அசோக வனத்தில் அமர்ந்திருக்கும்போது தன் குடும்ப வாழ்க்கை நினைவிற்கு வருகின்றது. தனியாக இருக்கும் இராமன் ஒரு விருந்தாளி வந்தால் எப்படி நடந்து கொள்வானோ என்று மயங்குகிறாள். உணவைத் தானே பரிமாறிக் கொண்டு உண்ணத் தெரியாத ஆடவனாயிற்றே என்று கவல்கிறாள்.

அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்று
அழுங்கும்
விருந்து வந்தபோ தென்னுறுமோ என விம்மும்
மருந்தும் உண்டு கொல் யான் கொண்ட
நோய்க்கு என மயங்கும்
இருந்த மாநிலம் செல்ல ரித்திடவும் யாண்டு
எழாதாள் (5089)

உட்கார்ந்த இடம் கறையான் அரித்ததே என்னும் நாட்டுப்புறச் சொல்லாட்சியைக் கம்பர் காவியத்தில் ஏற்றிக் காட்டுகிறார். இராமனோடு துணைக்கு இலக்குவன் இருக்கின்றானே என்பதை மறந்து விட்டு, உணவை யார் இடுவார்களோ என மயங்குகிறாள். விருந்து வந்தபோது வரவேற்று உபசரிப்பது பெண்களின் வேலை. தன் துணையின்றி என்ன செய்வாரோ என வேதனைப்படுவதாகக் கம்பர் காட்டுகிறார். இராமனும் இலக்குவனும் காட்டிலேஇருக்கிறார்கள். அவர்களே அட்டசோறின்றி இயற்கை வளங்களை உண்டு வாழும் நிலையில் உள்ளனர். எனவே அருந்துவதும், விருந்தோம்பலும் இங்கே பெரிய பிரச்சினை இல்லை.

ஒரு தமிழ்நாட்டுக் குடும்பப் பெண்ணின் மனக்கவலைகளைச் சீதையின் மனமொழியாக நமக்குக்

காட்டுகிறார் கம்பர் எனக்கொள்வது பொருந்தும். தன் துணையில்லாமல் இந்த ஆண்களால் எதுவும் செய்ய இயலாது என்ற அசையாத நம்பிக்கை கொண்டிருக்கும் தமிழ்ப் பெண்ணையே இங்குக் காண்கிறோம்.

பெண்ணடிமை என்ற சொல் எப்படியோ தமிழ் நாட்டில் புகுந்து விட்டது. பாரதியார் கொடி தூக்கிக் கொண்டு அடிக்க வருமளவுக்கு இடைக்காலத்தில் ஒரு தொய்வு இருந்திருக்கக் கூடும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, கணவன் தலைவன் என்றால் மனைவி தலைவியாகத் தான் இருக்கிறாள். தலைவியை அடிமை எனக் கூறிவிட்டால், அன்றைக்கு உணவு கிடைக்காது; பட்டினிதான்; இது எவ்வாறு சாத்தியமாகின்றது? எல்லாவகையிலும் வீட்டிற்கு வெளியே தலைவராக இருக்கும் ஆண்மக்கள் வீட்டிற்குள் வந்ததும், தலைமைப் பதவியை இறக்கி வைத்து விட்டுச் சாதாரண மனிதராகி விடுகின்றனர். ஏனெனில் அங்குதான் ஒரு தலைவி இருக்கிறாளே! மனைவியை இல்லக் கிழத்தி என்கிறோம். இல்லத்தில் எல்லா உரிமைகளையும் கொண்டவள். எல்லாப் பொருட்களும் அவளின் உடைமைகள், கணவன் உட்பட. வீடு தொடர்பான பேச்சு வரும்போது வீட்டுப் பொறுப்பெல்லாம் அவள் பார்த்துக் கொள்வாள் என்றுதானே கூறுகிறோம்.

வாங்கிய சம்பளத்தை, முனை முறியாத முள்ளங்கிப் பத்தை போல மனைவியிடம் கொடுத்து விட்டு, கவலையேதுமின்றித் தன் வேலையைக் கவனிக்கும் கணவன்மார்களே தமிழ் நாட்டில் அதிகம். அலுவலக வேலை, பிற சமுதாயத் தொண்டுகள் எத்தனையோ இருக்கும் போது வீட்டிற்கான உப்புப் புளி மிளகாய்ச் செலவுக் கணக்கை வைத்திருக்கவா நம்மை இறைவன் படைத்தான் என்ற எண்ணமே ஆண்களின் மனத்தில் அலைமோதுகின்றது.

குடும்பத் தலைவியும் அதனை உணர்ந்து குடும்பத்திற்கான எல்லாப் பொறுப்புகளையும் தானே ஏற்று நடத்துகிறாள். வரவு, செலவுத் திட்டமிடுதல், மாமன் மாமியைப் போற்றுதல், விருந்தோம்பல், தேர்த்திருவிழாப் பண்டிகைகள், உறவின் முறையார் வீட்டு விசேசங்கள் என்றவாறு பலப்பல அவள் கடமைகளாகின்றன. பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதும், அவள் பெருங்கடமையே. அதுவும் தற்காலத்தில் ஆங்கிலப் பள்ளியில் மழலையரைச் சேர்த்துவிட்டு அவைகளின் மண்டையில் அதனை ஏற்றிட முயலும் தமிழ்ப் பெண்ணின் முயற்சிகளைக் காணின் இரத்தக் கண்ணீர் வந்துவிடும். குடும்பம் எனும் முழுப் பாரத்தையும் இடைவிடாது சுமக்கும் ஆற்றலால், தன் கணவனையும் பிடித்து வைத்துள்ளாள். தன்னையறியாமல், தன் கணவனால் எந்த முடிவும் எடுக்க இயலாதென்பதைத் தான் அறிந்துள்ளதோடு, கணவனுக்கும் அறிவுறுத்தி விடுகிறாள். வேற்று மனிதராகக் காண்போருக்கு, அவள் கணவனை ஆட்டிப்படைப்பது போலத் தோன்றும். அவ்வாறில்லை. அவன் கடமைகளைப் பங்கு போட்டுப் பாதியாகச் சுமக்கிறாள். கணவன் வாங்கும் சம்பளம் ஒருத்தருக்கான ஊதியம் எனக் கருதுவது அறியாமை. இது குடும்பத்தின் சம்பளம். எனவேதான் செலவு செய்யும் பொறுப்பினைத் தலைவி ஏற்கிறாள்.

திருமணம் நிகழ்ந்த சில திங்களிலேயே தனிக் குடித்தனம் வைத்தல் என்ற பழக்கம் தமிழ்நாட்டில் பல சமூகங்களில் பரவலாக உள்ளது. சென்றதும் தலைமைப் பண்பு தானாகவே வந்து விடுகிறது. அந்தச் சிறிய இல்லத்திற்கு அரசியாகின்றாள். இல்லத்தில்தான் அவள் அரசியே தவிர, வெளி உலகில் அவள் கணவனுக்கு அடங்கிய பெண்தான்.

கணவன் மனைவியிடையே காதலுணர்வு, பிற கடப்பாடுகளைப் போன்ற ஒன்றே தவிர அதற்குப் பெரிய பங்கு ஒன்றும் இல்லை.

பொங்கி வரும் காதலுணர்வைவிடக் கண்களில் முகிழ்த்து நிற்கும் கண்ணீருக்கு அதிக வலிமை. அவளின் சிறுசிறு கட்டுப்பாடுகள் சள்ளையாகத் தோன்றும். ஆண்களின் வெளி உலக சுதந்தரத்தைக் கட்டுப்படுத்துவதாகத் தோன்றும். எனினும் சீரான வாழ்க்கை முறைக்கு அது தேவைப்படுகிறது. அரசியல் சட்டதிட்டங்களுக்கேற்ப அரசாங்கத்தை நடத்திச் செல்லும் அரசன் அல்லது தற்காலத்தில் முதலமைச்சரின் நிலையில் கணவன் கட்டுப்பட வேண்டியுள்ளது. அங்குக் கணவனோ, முதலமைச்சரோ அடிமைகள் அல்ல. இரண்டு கரைகளுக்குள் அடங்கி ஓடி, நாட்டு வளம் கூட்டும் பேராற்றைப் போன்றவர்களாகின்றனர். மனைவி இங்கே காட்டாற்றின் கரையைப் போலவும் கட்டுப்பாடுகள் செலுத்தும் அரசுயந்திரத்தைப் போன்றும் திகழ்கிறாள்.

என்றாலும், கணவனின் பெற்றோர் மற்றும் உறவினர் எதிர்பார்க்கும் அளவுகடந்த சலுகைகள் மனைவியிடம் செல்லுபடியாவதில்லை. எனவேதான் அவளின் ஆலோசனைகள், தலையணை மந்திரம் என்ற புதுப்பெயர் பெற்று விடுகின்றன. கட்டுப்பாடுகள் இந்தத் திசையில் சற்று மிகைதான். எனினும் அமைதிச் சூழல் வேண்டிக் கணவன் பணிந்து போக வேண்டியுள்ளது. உருட்டி விழிக்கும் கண்களாலேயே பல உத்தரவுகளை அள்ளி வீசி

விடுகிறாள் அத்தலைவி. கையறு நிலை என்ற சொல்லுக்கு இங்கே கணவனின் அடக்கமே உரையாகி விடுகின்றது. வெளியே சொல்லவும் முடிவதில்லை; மனைவிக்கு அடங்கிப் பெற்றோரைத் தள்ளவும் முடிவதில்லை. இந்த இடத்தில் தன் வல்லாண்மையை உயர்த்திச சமநோக்கு காட்டி, மனைவியைச் சற்றே அடக்கிப் பெற்றோரைப் பேணும் கணவனே மனைவிக்கு நற்பெயர் தேடித் தருபவனாகிறான்.

குடும்பம் என்ற சமுதாய நிறுவனத்தின் எழுதாச் சட்டங்களின் அடிப்படையில் மனைவிக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் பல; அந்த உரிமைகளைப் பயன்படுத்தித் தன் காதல்உணர்வு உள்ளிட்ட எல்லாக் கடமைகளையும் ஆற்றுவதே அவளது குடும்ப தர்மம் ஆகின்றது.

தமிழ்ச் சான்றோர் அதனாலேயே குடும்பத்தையே சொர்க்கம் என்றனர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற வடபுல வழக்கம் தமிழ் நாட்டில் இல்லை. குடும்பமே வீடு எனும் சொர்க்கம். அலுவலகத்தை விட்டு வீடு செல்கிறோம் என்றால் குடும்பம் எனும் சொர்க்கத்தை அடைகிறோம் என்று பொருள். மேலுலகம் போய் விட்டதாகவா கருதமுடியும்!

`மாண்ட என் மனைவி' என்றார் பிசிராந்தையார். மாண்புடையவள் என் மனைவி என்று பெருமைப்படுகிறார். " இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென் இல்லவள் மாணாக் கடை என்பது வள்ளுவர் வாக்கு. கணவன், மனைவி சொல்லைக் கேட்டு நடப்பது தமிழ் நாட்டின் வழக்கம் இன்றும் அன்றும். அதை வணங்குதல் என்று சொல்லக் கூடாதுதான். இருந்தாலும் கம்பர் வணங்குதல் என்றே கூறிவிடுகிறார். அதற்காக எந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார்? இரணியன் கதை இடம் தருகிறது. அவனோ அண்டம் முழுவதையும் அடக்கியாள்பவன். தானே இறைவன் என்ற தன்னம்பிக்கை கொண்டவன். அவன் பெற்ற செல்வம் பிரகலாதனோ, `எல்லாம் எனையாளும் ஈசன் நாராயணன் செயல்' என்பான்.

தந்தை மகன் உரையாடல் உச்ச கட்டத்திற்கு வருகிறது. `கோபம் கொந்தளிக்க எங்கேயிருக்கிறான் உன் நாராயணன் என்ற கேள்விக்குத் `தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான்' என்று பதிலளிக்கிறான் பக்த பிரகலாதன். `வரச் சொல் உன் நாராயணனை எனக் கூறி எதிரிலிருந்த பெருந்தூணை உதைக்கிறான் இரணியன்.

தூணைப் பிளந்து கொண்டு வெளிப்படுகிறது செங்கட்சியம். சிங்கத்தின் தலையும் மனித உடலும் கூரிய வல்லுகிரும் கோர கர்ச்சனையும் உலகத்தையே நடுக்குகின்றது. எனினும் இரணியன் வீரனல்லவா?

இல்லாத ஒன்றிடம் சண்டை போடுவது எப்படி.

இன்று நேருக்கு நேர் நின்று போராடும் வாய்ப்பு கிட்டியுள்ளது. அண்டம் கிடுகிடுக்கச் சிரிக்கிறான். பிரகலாதனோ சீறிவரும் நரசிம்மத்தின் தாள் பணிந்து உயிர் பெற்றுப் போக அறிவுறுத்துகிறான்.

`வணங்குதலா? எந்த நாளிலும் இல்லை

இதைச் சொல்லும்போது கம்பர் தமிழ்நாட்டுப் பெண்மையை நினைத்துக் கொள்கிறார். தலைவர்கள் வணங்கிப் போகும் இடம் அவருக்கு நினைவுக்கு வருகிறது. அதுவே மகளிர் ஊடல் நாள். ஊடலும், கூடலும் மாறி மாறி அளித்தல் மகளிர் கடனென்று கூறிப்போனாரே வள்ளுவர். ஊடல், கட்டிய மனைவியின் உரிமையே தவிர, காதல் மகளிரிடம் இல்லை. எனவே வணங்குதல் என இரணியன் சுட்டுவது இல்லத்தரசிகளையே யாகும்.

அடேய் பிரகலாதா, இத்தூணைப் பிளந்து வந்த நரசிம்மத்தைக் கொன்று, பின் உன்னையும் கொன்று விட்டு, என் வாளை நட்டு வணங்குவேனேயன்றி, மகளிர் ஊடல் நாளிலும் வணங்குதல் இல்லை என்பார் கம்பர் பெருமான்.

கேளிது நீயும் காணக் கிளர்ந்த கோளரியின்
கேழில்
தோளொடு தாளும் நீக்கி, நின்னையும்
துணித்து பின்என்
வாளினைத் தொழுவதல்லால் வணங்குதல்
மகளிர் ஊடல்
நாளினும் உளதோ என்னா அண்டங்கள் நடுங்க
நக்கான் *(6334)*

பெண்மைக்கு வணக்கம் செலுத்தக் கம்பர் தேர்ந்தெடுத்த இடம் ஈடுஇணையற்றதெனில் மிகையாகாது. எனினும் கம்பரிடமே ஓர் இணை காணலாம். இராவணனை வென்று அயோத்தி திரும்பிய இராகவன் முடி சூட்டிக் கொள்கிறான். வசிட்டர் முடி சூட்டுகிறார். வசிட்டரிடம் முடியினை அளிக்கும் பெருமையினைத் தன் புரவலன் திருவெண்ணெய்' நல்லூர்ச் சடையனின் மரபினருக்கு அளிக்கின்றான். நன்றிக் கடனுக்கு இதைவிட உயர்வு வேறுண்டோ? இதே போன்று, பெண்மையின் சிறப்பைக் கூற இரணியனைத் தேர்ந்தெடுத்துள்ளார் கம்பர் என்பது வெள்ளிடை மலை.

# நோயின்றி வாழ்வது எப்படி?

டாக்டர் பெ.கிருட்டிணன்

மக்களாய் பிறந்த அனைவரும் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். பொன்வேண்டேன், பொருள் வேண்டேன், மண்வேண்டேன் என அனைத்தையும் துறந்து பற்றற்ற நிலையில் வாழ்ந்த துறவிகள் கூட, "நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்" என இறைவனை இறைஞ்சினார்கள்.

உயிர் நிலைப்பதற்கு நிலைக்களமாக உள்ள உடல், எந்த அளவிற்கே, மக்கள் உலகில் வாழவும், மற்றவர்களை வாழவைக்கவும் முடியும். இதை உணர்ந்த திருமூலர்

உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயமு
மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்
தேனே!

என்கிறார். உடம்பை நன்கு ஓம்பவேண்டும். உடம்பை சிலர்

"காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா"
"மாயானார் குயவன் செய்த மண்ணு பாண்டம் ஓடடா"



என்று இழிவாகவும், பழியாகவும் பேசி வந்தார்கள். ஆனால் திருமூலர் என்ற சித்தர் மட்டும்.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுக் குள்ளீசன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே"

என்கிறார்.

உலகில் சிறந்த அறிவாளிகளும், அரிய செயல் செய்தவர்களும், செய்கின்றவர்களும், உலக மக்களின் உயர்விற்கு உழைத்த உயர்ந்தோர்களும், உடலை மிகவும் அக்கறையோடும் அறிவோடும் ஓம்பு கின்றார்கள் என்பது உண்மை. உடல் நலத்தோடிருப்பவர்கள்தாம் உயர்வான உறுதியான, எண்ணங்களைச் செயல்களாகச் செய்ய முடியும். நோயுற்ற மக்கள் தாங்களும் இன்பமாக வாழாமல் தம்மைச் சார்ந்த உறவினர்களையும் மனைவி மக்களையும் இன்பமாக இருக்கவிடாமல் துன்பப் படுவார்கள் என்பது உண்மையிலும் உண்மை.

பிணி என்பது என்ன? பிணி என்றால் உடல் நலத்தோடு, இயங்காமல் இயல்பான வாழ்விற்குத் தடையாய்த் தளர்வாய் இருப்பதே

"பிணி" என்கின்றோம். அந்தப்பிணி, உடற்பிணி, உளப்பிணி என இருவகைப்படும். அதை நீக்க மேற்கொள்ளும் முறையே மருத்துவம் ஆகும். உடலுக்கு ஏற்பட்டுள்ள தடையைத் தளர்வை நீக்குவதையே "மருத்துவம்" என்கிறார்கள். உடல் பிணியுற்றாலும் உள்ளம் பிணியுற்றாலும், உடலின் இயக்கமும், இயல்பும் தளர்ச்சியுறுகின்றது. அந்தத் தளர்ச்சியைப் போக்க மேற்கொள்ளும் முறைகள்தாம் "மருத்துவ முறைகள்". அவை

ஆயுள்வேதம் அல்லது ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யூனானி மருத்துவம் என்பவை. பண்டைக்காலம் முதல் இன்று வரை இந்தியாவில் நடைமுறையில் உள்ள மருத்துவம். பதினாறாம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் சிறந்த முறையில் பெரும்பாலான மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "அலோபதிக்" என்ற மருத்துவமுறை புகழ்வாய்ந்தது. அதற்கடுத்து "ஓமியோபதி" என்ற மருத்துவ முறை செர்மனிய நாட்டவரான ஆனிமென் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டுக் கீழைநாடுகளில் பரவலாகக் கையாளப்படுகின்றது. சுஜலர் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட பன்னிரு தாதுக்கள் பண்டைக்காலம் முதல் கைக்கொள்ளப்பட்ட அக்குபன்சர் முறை நவீன முறை என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு முறை மருத்துவம் பல்லாற்றனும் சிறப்பும் செம்மையும் பெற்று வருகின்றது. ஆங்கில மருத்துவத்திலுள்ள நோயறியும் முறைகள், அறுவை சிகிச்சை முறை, நிழற்படமெடுக்கும் முறை இன்னும் பல செயல்பாடுகள் போற்றத்தக்கனவாகும். அவ்வாறே ஓமியோபதி முறையும் யூனானி, அக்குபன்சர் முறையும் பலவழிகளில் சிறப்புற்றுள்ளன.

இவ்வாறு உலகில் பலவிதமான மருத்துவ முறைகளும் நெறிகளும் நோயகற்றப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுடன் யோகாசன முறைகளும், இயற்கை மருத்துவ முறைகளும், மண் சிகிச்சை முறைகளும், நீர் சிகிச்சை முறைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய அநேக மருத்துவ முறைகளில் அவரவர் மேற்கொள்ளும் மருத்துவமே உயர்வானது. உயிரைக் காக்கக் கூடியது என அவரவர் பேசுவது இயல்பு. என்றாலும் அனைத்து மருத்துவ முறைகளிலும் மக்கள் வாழும் நாடு, அங்குள்ள தட்பவெப்ப நிலை, உணவு, இயற்கைச்சூழல், உணவுமுறைகள் இவற்றை பொறுத்தே உடல்நலன் அமைகிறது என்பதையும் மறுத்துவிட முடியாது.

மனிதவாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாது தேவைப்படுவன காற்று, நீர், உணவு, உறக்கமும் ஓய்வும், வெப்பம், இயற்கைச்சூழல், உடல் உழைப்பு போன்றவையாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டே உடல்நலமமைகிறது.

*காற்று–* "மனித உயிர் உடலில் இயங்குவதற்கு மிகமிக இன்றியமையாது தேவைப்படுவது தூய்மையான இயற்கையான காற்று. அந்தக் காற்றை மக்கள் பயன்படுத்தும் முறையால் பலபிணிகள் உடலில் ஏற்படாமலேயே போகின்றன. கிராமங்களில் இயற்கை சூழலில் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழும் மனிதர்கள் பெரும்பாலும் நோயின்றியே வாழமுடிகின்றது. எடுத்துக்காட்டாக நகரங்களில் வாழும் மக்கள் சர்க்கரை நோய், இரத்த அழுத்த நோய், இருதய நோய் போன்ற கொடிய நோய்க்களுக்கிரையாவதைப்போல் கிராம மக்கள் இரையாவதில்லை என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சித்தமருத்துவ சித்தாந்தத்தின்படி வாத, பித்த, சிலேத்துமம்தான் நோய்களுக்குக் காரணம் என்பதாகும். அக்கால எண்ணமும் நம்பிக்கையும் அவ்வாறு இருந்தன. இதையே உலகுக்கே மருத்துவநெறியை நல்கும் உலகக் கவிஞன் வள்ளுவன் நோய்களுக்கு மூலகாரணம்,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலாய் எண்ணிய மூன்று" என்கிறார்.

வாத, பித்த, சிலேத்துமம் என்ற மனித உடலில் இயல்பாக உள்ள மூன்றும் குறைந்தாலும் மிகுந்தாலும் நோய் செய்யும் என்பது குறள். அத்துடன் இக்கால ஆய்வுகளால் அறிவியலார் கூறும் கிருமிகள், நுண்ணியிரிகள் தாக்கத்தால் கூடப் பிணிகள் உண்டாகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். நுண்ணுயிரிகள் தாக்கம் மனித உடலைத் தாக்கும்போது பிணிகள் ஏற்படும் என்பதைக் கண்ட அறிவியலார் அதற்கேற்ற மருத்துவ முறைகளையும் நெறிகளையும் வகுத்து, வகைப்படுத்தி, பிணியகற்றி வருகின்றார்கள். அதைப் பயன்படுத்தி, பிணியகற்றி வருகின்றார்கள். அதைப் பயன்படுத்தியும் தற்காலத்தில் உடல் நலம் பெற முடிகின்றது. மனிதர், விலங்குகள், மரங்கள் உட்பட அனைத்து உயிர்கட்கு காற்று எவ்வளவு இன்றியமையாது தேவைப்படுகின்றது என்பதனை நன்கு உணரவேண்டும். நமது நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறை சுவாசிக்கின்றது. அதுவும் 438 கன அடி காற்றைச் சுவாசிக்கின்றது என்பதைக் கணக்கிட்டுக் காற்றின் இன்றியமையாமையையும் உடல்நலத்தில் காற்றிற்குள்ள சிறப்பையும் அறியவேண்டும். ஒரு நல்லமனிதன் காற்றைச்

சுவாசிக்காமல் பத்து நிமிடங்கள் கூட உயிர்வாழ முடியாது. யோகாசன முறையில் காற்றை யடக்கும் யோகிகள் கூடக் குறிப்பிட்ட கால அளவு வரைதான் காற்றைச்சுவாசிக்காமல் அடக்கவும்முடியும் என்பதை அறிவார்கள். அந்தக் காற்றின் மேன்மையை உணர்ந்த ஞானி திருமூலர். உடல்நலத்தோடிருக்க வேண்டுமென்றால், காற்றையடக்கக் கற்கவேண்டும் என்கிறார்.

"உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக் கருத்தினால் இருத்தியே கபால மேற்ற வல்லீரேல் விருத்தரும் பாலராவார் மேனியுஞ் சிவந்திடும்." என்றார்.

### காற்றையடைக்கும் முறை

***பிராணாயாமம்:*** மலம், சிறுநீர் போன்ற கழிவுப் பொருட்களைக் கழித்துக் குடல் காலியாக உள்ளபோதுதான் இவ்வுயரிய செயல் செய்யப்படவேண்டும். பத்மாசனத்தில் நன்கு நிமிர்ந்து உட்கார வேண்டும். இருகால்களையும் விறைப் பில்லாமல் நீட்டிக் கொள்ள வேண்டும். வலது காலை முதலில் இழுத்து மடித்து இடது தொடை மீதும், பின்னர் இடதுகாலை மடித்து வலது தொடை மீதும் வைக்க வேண்டும். உடலை நேராக நிமிர்த்தி உட்காரவேண்டும். வலது கை பெருவிரலால் வலது நாசியை அடக்கிக் கொண்டு இடது நாசியின் வாயிலாகக் காற்றை ஐந்து விநாடிகள் கணக்கில் உள்ளே மெதுவாக ஒலியின்றி இழுக்கவேண்டும். முடிந்தவரை காற்றை அடக்கி வைத்திருந்து இடது நாசித் துவாரத்தை மூடிக்கொண்டு வலது நாசியின் வழியாக மெதுவாகக ஒலியின்றி வெளியே விட்டுவிடவேண்டும். இந்தச் செயல்கள் அனைத்தும் ஒரு செயலாகக் கணக்கில் கொள்ளப்படும். காற்றை உள்ளிக்கிழுப்பது "பூரகம்" என்றும் காற்றை வெளியே விடுவது, "இரேசகம்" என்றும், காற்றை யடக்குவதைக் "கும்பகம்" என்றும் கூறப்படும். வலது நாசியின் வழியாகச் செல்லும் பிராணனை "பிங்கலை" என்றும், இடது நாசி வழியாக வெளியேறும் காற்றினை "இடங்கலை" என்றும் கூறுவர். இச்செயல்களைச் செய்கின்றபோது மனத்தைக் கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்திப் பழக்கி விட்டால், உடல்நலிவின்றி வாழ்வதோடு பலவிதமான நன்மைகளையும் அடையலாம்.

"மனம் அது செம்மை யானால்
மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" –திருமூலர்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற –வள்ளுவர்

மனமே உலகம், மனமே வாழ்வு, மனமே உயர்வு. அனைத்தும் மனத்தின், எண்ணத்தின், ஊக்கத்தின் உள்ள உறுதியின் பாற்படும்.

ஆகவே பிராணாயாமம் முறையாகவும், நெறியாகவும் கட்டுப்பாட்டோடும் செய்யப் படுமானால் இரத்தம் தூய்மையடையும். நரம்புகள் பலப்படும். ஆஸ்துமா, நீரிழிவு, இரத்த அழுத்தம் (Blood pressure) இதயத்தைப் பற்றிய பல பிணிகள் குணமாகும். பிராணயாமம் செய்த பின்னர் அரைமணி நேரம் கழித்த பின்னர்தான் கைகால் முதலியவற்றைச் சுத்தம் செய்து இலகுவாக உணவைக் காலையில் உட்கொள்ளவேண்டும். மாலையில் முறையாகப் பிராணயாமம் செய்யப் பழகவேண்டும்.

இக்காற்றை யடக்கும் கணக்கை நன்கறிந்தவர்கள் முறையோடும், நெறியோடும், ஒழுக்கத்தோடும், உயர்குணத்தோடும் இருக்க முடியுமானால் கண்டிப்பாக உடல் நலத்தோடும், உறுதியோடும் பிணியின்றி வாழமுடியும். இக்கருத்தை மற்றத் சித்தர்களைவிடத் திருமூலர்தான் மிகவும் வற்புறுத்திக் கூறியுள்ளார். மற்றோரிடத்தில் கூட,

"வளியினை வாங்கி வயிற்றிலடக்கினால்
பளிங்கொத்த காயம் பழுக்கினும் பிஞ்சாம்"
என்கிறார்.

ஆகவே, காற்றின் இன்றியமையாமையையும், அதையடக்கும் முறையையும் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

இன்றைய அறிவியல் உலகிலும் மேல்நாட்டு மருத்துவ ஆய்வாளர்களும் காற்றையடக்கி இருபது நிமிடம் தினமும் மனத்தை நெறிப்படுத்தினால், ஆறுமணிநேரம் ஆழ்ந்த நித்திரை கொண்டதற்குச் சமம் ஆகும் எனக் கூறியுள்ளார்கள். இதையும் மனத்தில் கொண்டு காற்றையடக்கும் கணக்கைக் கற்கவேண்டும். அடிக்கடியும் விரைந்து மூச்சுவிடும். விலங்குகள் வாழ்நாள் குறைவாகும், நிதானமாகவும், நெறியாகவும் விரைவும் வேகமும் இன்றி மூச்சுவிடும் விலங்குகள் வாழ்நாள் குறைவாகவும், நிதானமாகவும், நெறியாகவும் விரைவும் வேகமும் இன்றி மூச்சுவிடும் உயிர்கள் வாழ்நாள் அதிகமாகவும் வாழும் எனக் கண்டுள்ளார்கள். நிமிடத்திற்கு நாம் எத்தனை முறைகள் மூச்சை உள்ளிழுத்து வெளியே விடுகின்றோம் என்பதைப் பொறுத்து வாழ்நாளும் நோய்களும் உண்டாகும் என்பதனை மனத்தில் கொள்ளவேண்டும். காற்றையடக்கக் கற்றுக் கொள்ளுதல் நல்லது. எளிது, நாளும் வாழ்க்கையை முறைப்படுத்த உதவக் கூடியது. நோயின்றி வாழ வழிவகுக்கக் கூடியது என்பதை நாம் அறியவேண்டும்.

| உயிரினங்களின் பெயர் | சுவாச எண்ணிக்கை நிமிடத்திற்கு | வாழும் ஆண்டுகள் |
|---|---|---|
| திமிங்கிலம் | 3–4 | 200–250 |
| ஆமை | 4–5 | 150–155 |
| யானை | 11–12 | 100–120 |
| பாம்பு | 7–8 | 120–130 |
| குரங்கு | 31–32 | 20–30 |
| முயல் | 38–39 | 8–10 |
| பண்டைக்கால மனிதர்கள் | 12–13 | 100–120 |
| இக்கால மனிதர்கள் | 15–16 | 60 |

இந்தியரின் சராசரி வயது 58 ஆண்டுகள். அனைவரும் உயிர்களின் உயிர் வாழ்க்கைக்கும் மூச்சுவிடும் எண்ணிக்கைக்கும் தொடர்புண்டு என்பதை அறிந்திருந்தல் நன்மை பயக்கும்.

உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் உட்கொள்ளும் காற்றின் கணக்கு அடிப்பபடையிலும், உண்ணும் உணவிலாலும் பருகும் நீரின் அளவினாலும்தான் உயிர் வாழ்கின்றன. உடல் நலத்தைப் பெறுகின்றன என்பது உண்மை. இந்த மூன்றையும் முறையோடும், நெறியோடும் ஏற்கக் கற்றுக்கொள்ளவேண்டும். சுவாசிக்கின்ற உயிர்க் காற்றுதான் உடல் உயிரோடு இருப்பதற்கும், உடலில் வெப்பநிலை மாற்றமுறாமல் இருப்பதற்கும் உட்கொள்ளும் உணவுப் பொருட்கள் செரிப்பதற்கும், செரித்த உணவுப்பொருட்கள் உடல் முழுவதும் சென்று உடலுப்புகள் சக்தியும் வளர்ச்சியும் பெறுவதற்கும், இரத்த ஒட்டம் சீராக அமைவதற்கும் பயன்படுகிறது.

அந்தக் காற்றைக் கணக்கறிந்து அடங்கும் முறையறிந்தால் நோயின்றி வாழ வழி வகுக்கும். முடிந்தவரை நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் வாழ்ந்தாலே உடல்நலம் கெடாமல் இருக்கும். எடுத்துக்காட்டாக, காற்றுவசதியற்ற நகரமக்கள், நல்ல உணவும், சத்துள்ள பால் பழம் முதலியவற்றையும் உண்டு வாழ்ந்தாலும், கிராமமக்கள் பெறும்காற்று வசதி நகரமக்களுக்குக் கிடைக்காத காரணத்தால் நகரமக்கள் அடையும் நோய்கள் கிராம மக்களைத் தாக்குவதில்லை. ஆகவே உயிர்வாழ்க்கைக்கும மிகவும் அவசியமான நல்ல காற்றினைப் பெறுவதும் அதனை உடலில் அடக்கி, ஆயுளையும் உடல் நலத்தையும் !ஓம்புவகது நமது கடமையாகும்.

**உணவு:** உணவு என்பது நாட்டிற்குநாடு, வீட்டிற்கு வீடு, ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது. ஒரு வீட்டில் இருக்கின்ற ஒருவர் உண்ணும் உணவை மற்றொருவர் உண்பதில்லை. அதுமட்டும் அல்ல; தான் உண்ணும் உணவுதான் சிறந்தது என்றும், மற்றவை தாழ்ந்தவை என்று கூறியும் சண்டையிடுகின்றனர்.

ஏழைகள், நரிகுறவர்கள், இன்னோரன்னவர்கள், சீழான கழித்துவிட்ட எச்சில் உணவை உட்கொள்கின்றவர்கள் கூட உயிரோடிருக்கின்றார்கள். அதுவும் உடல்நலத்தோடும் இருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் பார்க்கின்ற போது நல்ல உணவை நாளும் முறையாகவும் நெறியாகவும் உட்கொள்கின்றவர்களும் கூடத் தீராத பிணியுற்று அவதிப்படுவதையும் காண்கிறோம். இதற்குக் காரணம் ஒரு மனிதன் வளத்தோடும் நலத்தோடும் இருப்பதற்கு உணவும் ஒரு காரணம் என்பதுதான் உண்மை ஆகவே உணவு கொள்ளும் முறைமை பற்றியும் சிந்திப்போம்.

உணவை மனிதன் சமைத்துண்ணக் கற்றபின்னர்தான் அறிவுவளர்ச்சியும் மாற்றமும் பெற்றான் என்றார் பாவ்லே என்ற ஜெர்மானியர் நாட்டு விஞ்ஞானி. உணவு சைவ உணவு, அசைவ உணவு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சைவ உணவிலும் உடலுக்கு வேண்டிய உயர்ந்த சத்துப் பொருட்கள் உள்ளன. இரு உணவு வகைகளையும் உண்ணும் முறையிலும் அளவிலுந்தான் வேறுபாடும், மாறுபாடும் உள்ளன. நம்நாட்டில் பெரும்பாலும் மக்கள் அரிசியால் ஆன உணவு, கேழ்வரகினால் ஆன உணவுகள், கம்பு, சோளம், கோதுமை போன்ற தானியங்களால் ஆன உணவுகள் உண்கிறார்கள். அவற்றில் உள்ள சத்துக்கள்.

| | கார்போ ஹைடிரேட் | புரதம் | கொழுப்பு |
|---|---|---|---|
| பச்சரிசியில் | 75.1 | 7.2 | 0.6 |
| புழுங்கலரிசியில் | 78.0 | 8.5 | 0.6 |
| கோதுமையில் | 71.2 | 12.1 | 1.5 |
| கேழ்வரகில் | 65.3 | 12.2 | 1.3 |
| கம்பில் | 64.2 | 12.6 | 1.2 |

என்ற சதவிகிதங்களின்படி அடங்கியுள்ளன. இவற்றைப் பார்க்கின்றபோது நாமுண்ணும் உணவு என்றாலும், உணவின் அளவில் மாறுபடுகின்றவர்கள் உடல்நலத்தில் வேறுபடுவார்கள் – இதையே வள்ளுவரும்

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு –குறள் 943

முன்னுண்ட உணவு நன்கு செரித்து, நன்கு பசித்த பின்பே உணவை உட்கொள்ளவேண்டும் என்கிறார்.

அதுவும் அளவோடு உண்ண வேண்டும். சுவையாக இருக்கிறது என்று தேவைக்குமேல் உண்டு பிணியாளியாகிவிடக்கூடாது. அளவறிவாமல் உண்டு நோயுற்று மடிந்தவர்களே, உணவின்றி மடிந்தவர் களின் எண்ணிக்கையை விட அதிகம் என்கிறார் மற்றொரு மேல் நாட்டறிஞர். மனிதன் ஆசைக் காகவும் உண்ணுகிறான். மற்ற உயிர்கள் அவசியத்திற்காகவும் மட்டும் உண்ணுகிறான். மனிதன் ருசிக்காகவும் உண்ணுகிறான் மற்ற உயிர்கள் பசிக்காகவும் மட்டும் உண்ணுகின்றன. பாம்புகள் இரை கிடைக்காத போது பலநாட்கள் பசித்தே இருக்கும். பாம்புகளின் வயது மனிதர்களின் வயதைவிட மிக அதிகம் என்பதை மிக அதிகம் என்பதை அட்டவணையில் காணுங்கள்.

உணவில் அறுசுவை என்றால் உவர்ப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கைப்பு, இனிப்பு என்பனவாகும். நாம் உண்ணும் உணவில் இயல்பாகவே இந்த அறுசுவைகளும் அமைந்துள்ளன. சிலவற்றில் ஒரு சுவை அதிகமாகவும் மற்றவை குறைந்தும் காணப்படும். எடுத்துக்காட்டாகக் கரும்பில் இனிப்பு அதிகம் மற்ற சுவைகள் குறைவு. அது போலவே வேம்பில் கைப்புச் சுவை அதிகம். இனிப்புச்சுவை குறைவு. நாக்கின் சுவைக்கு அடிமைப்பட்டுவிட்ட நாம், சுவையும் மணமும் உண்டாக்குவதற்காக அதிகமான கார உணவுகளை உட்கொள்வதால் குடலில் புண் உண்டாகி அதன் விளைவாகப் பல நோய்கள் கண்டு அவதிப்படுகின்றோம். அவ்வாறே புளியும் அதிகமாக உட்கொண்டால் உடல்நலத்திற்குக் கேடு விளைக்கும் என்பதனை ஒருவர் கூறுகின்றார்.

"காட்டு விலங்குகளை அழிக்கப் புலியையும்
நாட்டு மக்களை அழிக்கப் புளியையும் வைத்தான்

என்கிறார். ஆகவே புளியையும், காரத்தையும் அதிகமாக உட்கொள்ளுபவர்கள் குடற்புண்ணடை வார்கள். அதுமட்டுமல்லாமல் பலவிதமான நோய்களுக்கும் புளியையும் காரமும் காரணம். விலங்குகளும் பறவைகளும் நாமுண்ணும் முறைப்படி உப்பும், புளியும் காரமும் சேர்த்து அவற்றின் ஆகாரத்தை உண்பதில்லை. நம்மைப் போன்று கணக்கிலடங்காத நோய்களை அவைகள் அடைவதும் இல்லை. நாம் நாக்கின் சுவைக்கு அடிமை யாகிவிட்டோம் என்பதை உணரவேண்டும். நகரத்தில் வாழும் மக்கள் உணவை விட கிராமத்தில் வாழும் மக்கள் மிகவும் எளிய கேழ்வரகு, கம்பு போன்ற உணவையே உட்கொண்டாலும், நகர மக்கள் அடையும் கொடிய நோய்கள் கிராம மக்கள் அதிகம் அடைவதில்லை. காரணம் அங்கு அவர்களுக்குக் கிடைக்கும் ஏராளமான தூய்மையான காற்றுதான் காரணம் என்பது நன்கு புலனாகின்றது. நல்ல காற்றோட்டமான இடத்தில் வாழ்ந்தாலே போதும். அப்படி வாழ முடியாத நகர மக்கள் காலையும் மாலையும் நல்ல மரம் செடி கொடிகள் நிறைந்த இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்களில் உலாவுதல் வேண்டும்.

ஒருவேளை யுண்பவன் யோகியாவான்
இருவேளை யுண்பவன் போகியாவான்
மூன்றுவேளை யுண்பவன் ரோகியாவான்

என்கிறார்கள் சான்றோர்கள். நாம் இன்று மூன்று வேளையை விட்டு நான்கு வேளைகள் உண்பதோடு நில்லாமல் இடை வேளைகளில் தேநீர், காப்பி போன்ற பானங்களையும் பருகுகின்றோம். காபியும் தேநீரும் உடல் நலத்திற்குக் கேடு விளைப்பனவே. பழக்கப்பட்டுவிட்ட நாம் முயன்று நிறுத்திவிட வேண்டும். "மக்களுக்கு ஏற்படும் எல்லா நோய்களுக்கும் வயிறுதான் அடிப்படை" என்ற உண்மையை லூயிகூன் என்ற ஜெர்மானிய நாட்டவர் வெளியிட்டார். வயிறுதான், உடலின் எப்பாகத்திலும் எந்த நோய் ஏற்படுவதற்கும் காரணமாகும்.

"கலப்பு உணவு" என்று கூறுகையில் நாமுண்ணும் உணவில் ஒரே வகையான உணவை உட்கொள்வது அவ்வளவு நல்லதல்ல. காலை அரிசியாலான சிற்றுண்டியைச் சாப்பிட்டால் மதியம் கேழ்வரகு அல்லது கோதுமையாலான உணவைச்சாப் பிட்டால் மாலை வேறு தானியத்தாலான உணவை உட்கொள்ளவேண்டும்.

காய்கறிகளும், கீரை, பழங்களும் கூட அவ்வாறே கலந்து சாப்பிடுவது நன்மை பயக்கும். எவ்வுணவானாலும் உணவை நன்கு நிதானமாக மென்று சுவைத்து வாயிலேயே குழம்பாகும் பக்குவம் வரும் வரை மென்று பிறகு விழுங்க வேண்டும். "நொறுங்க மென்றால் நூறு வயது" "மெல்லாத உணவு செல்லாது" என்பன போன்ற பழமொழிகள் உணவை நன்கு மென்று நிதானமாக உண்ணவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. வள்ளுவர்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின் (942)என்கிறார்.

ஆகவே நோயின்றி வாழவேண்டுமென எண்ணும் யாவரும், குறைவாகவே உண்ண வேண்டும், உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும், பருகுவதற்குக் குளிர்காலங்களில் வெந்நீரும், கோடையில் தண்ணீரும் பழக்கப்படுத்த வேண்டும். ஒரு சராசரிமனிதன் நடுத்தர வயதுடையோர் ஒரு நாளைக்கு 3 1/4பவுண்டு உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டும் என்று

உலகில் நல்ல உடல் நலம் பேணும் சான்றோர்கள் கூறுகின்றனர்.

உணவுப்பையில் உணவு செரித்து உணவில் உள்ள சத்துப்பொருட்கள் நன்கு உட்கிரகிக்கப்பட்டால் உடல் நலம் பெறும். உணவானது சரியாகச் செரிக்காமல் சத்துப்பொருள்களை உடலால் ஏற்றுக்கொள்ளாவிட்டால் உடல் நலம் குறைதல், இரத்த சோகை, பலவீனம், நரம்புத் தளர்ச்சி போன்ற கடும்பிணிகள் ஏற்பட வாய்ப்புள்ளது. நரம்புத் தளர்ச்சியினாலேயே இரத்த அழுத்தம், இதய பலவீனம், தூக்கமின்மை, பசியின்மை, சோம்பல், ஆண்மைக்குறைவு, சோர்வு போன்ற கடும்பிணிகள் தோன்றவாய்ப்புள்ளது.

இளிவறிந் துண்பான்கண் ணின்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய் (946)

என்கிறார் வள்ளுவர்.

உடல் எடையில் முக்கால் பாகத்திற்கும்மேல் வெப்பத்தை நிலைப்படுத்துவதும், கழிவுப்பொருட்களை வெளியேற்ற உதவுவதும், உண்ணும் உணவை உண்டாக்குவதும், உணவாகி இருப்பதும், உடலை ஓம்புவதும், உணவைச் செரிக்கச் செய்வதும், செரித்த உணவை உடலின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்வதும் நீர்தான். இதை வள்ளுவர்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" என்கிறார் (குறள் 12)

மழையாகிய நீரின் செயல்பாடுகளை வள்ளுவர் இவ்வாறு கூறுகின்றார். நீருக்கு நிறமும் மணமும் சுவையும் இல்லாமல் இருப்பதே தூய்மையான நீர் என்கின்றானர் அறிவியலார். அவ்வாறு இல்லையாயின் நீரை நன்கு காய்ச்சி வடித்துப் பருகும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் காலரா, விஷபேதி, வயிற்றுவலி, காமாலை நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பருகும் முறை: காலையில் எழுந்தவுடன் காய்ச்சி ஆறவைத்த நீரை ஒரு குவளை குடிக்கப் பழக வேண்டும். அதனால் உடலில் ஏற்படும் வெப்பம், உடற்பிணிகள் தடுக்கப்படுகின்றன. இன்னும் வசதியுள்ளவர்கள் காலையில் அந்த நீருடன் பத்துத் துளிகள் சுத்தத் தேன் கலந்து பருகினால் உடல் உறுதி பெறுவதோடு, உள்ளமும் உறுதிப்படும் என சான்றோர்கள் கூறுகின்றார்கள். மலசலம் நன்கு வெளியேறும் பருக வேண்டிய நீரின் அளவு. ஒரு நல்ல உடலையுடையவன் ஒரு நாளைக்கு 2.9 குவார்ட் நீர் பருகவேண்டும் என மருத்துவக் கழகக் குறிப்புகள் கூறுகின்றன. உணவுக்கு முன்னும், உணவு உண்ணும் போதும் நீர் பருகக் கூடாது. உணவை உண்டு முடித்த பின்னர்தான் நீர் பருகவேண்டும். தற்கால நிலைமையில் காய்ச்சி வடித்து ஆறிய நீரினையே பருகவேண்டுவது அவசியம் ஆகும். அதுவும் காலை முதல் மாலைக்குள் சுமார் எட்டுக் குவளைகள் நீர் பருக வேண்டும். அவ்வாறு பருகாமல் குறைத்தால் மலச்சிக்கல், சிறுநீர் சரியாகப் பிரியாதிருத்தல் போன்ற பிணிகள் ஏற்பட வாய்ப்புண்டு.

தேவையின்றி வசதியுள்ளவர்கள் வண்ணம் ஏற்றிய பானங்கள் அடிக்கடி பருகுகிறார்கள். அது நன்மை தராது. சுத்தமான நீரைப் பருகாமல் அதற்கீடாக வண்ணமேற்றிய குடிநீர்களையும், ஆடம்பரமான பானங்களையும் பருகுவதும் தவறானதுதான். அத்துடன் கள், மதுபானம், போதைப் பொருள்கள் போன்ற மயக்கந்தரும் பானங்களைப் பருகுதல் எக்காரணம் கொண்டும் நமது தட்பவெப்ப நிலைக்கு சரியன்று. பருக வேண்டியவை சுத்தமான நீர், காய்ச்சி வடித்த நீர், பழரசங்கள், மோர் போன்ற பானங்களே யாகும். காலையில் ஒரு எலுமிச்சைம்பழரசத்தை ஒரு குவளை வெந்நீருடன் கலந்து பருகி வந்தால் பித்த நோய்கள், மயக்கம், தலை சுற்றல், வாயில் நீரூறல் குமட்டல், வாந்தி போன்ற பிணிகள் தோன்றுவதைத் தடுக்கலாம். பசியாமல் இருப்பவர்களும் நன்கு பசியெடுத்து உண்பார்கள். இவ்வாறு உடல் நலக் கோட்பாடுகளைக் கவனித்து வந்தால் நோயின்றி வாழ்வதற்கு உதவியாகும். ஆகவே நோய்கள் வராமல் தடுக்க நல்ல காற்று நல்லநீர் பருகல், நல்ல உணவை அளவோடு மென்று நிதானமாக உண்ணல் போன்ற உணவுமுறைகளைப் பேணுதல் போன்றவற்றைக் கடைப்பிடித்தால் உடல்நலத்தைக் காப்பாற்றலாம்.

உறக்கமும் ஓய்வும்: ஓய்வு உறக்கம் ஆகிய இரண்டுமே உடல் நலத்திற்கு இன்றியமையாதவை. சிறுவர்கள் பத்துமணி நேரமும் பெரியவர்கள் எட்டுமணி நேரமும் உறங்கவேண்டும். உறங்கும்போது தெற்கு, மேற்கு கிழக்குத் திசைகளில் தலைவைத்துப் படுக்கலாம். வடக்குத் திசையில் தலைவைத்துப் படுக்கக் கூடாது. காரணம் காந்த சக்தி வடதிசையில் இருப்பதால் தலையை வடதிசையில் வைத்துப் படுக்கக் கூடாது. இரவில் உறக்கம் வரவில்லையென்றால் நரம்பு சம்பந்தமான அல்லது குடலில் புண் சம்பந்தமான பிணிகள் உள்ளன என்பது பொருள். மருத்துவரையணுகி ஆலோசனை பெற வேண்டும். தூக்கமாத்திரைகள் சாப்பிட்டுத் தூங்குதல் கேடு விளைக்கும். தூக்கம் வரவில்லையென்றால் அதற்குரிய காரணத்தை யறிந்து, ஆலோசனையின் பேரில் மருந்துண்டு இயற்கையான உறக்கத்தைப் பெறவேண்டும். பொதுவான உடல் நலத்தையும்

பலத்தையும் பெறவேண்டும். அதுவே அனைத்துப் பிணிகளையும் நீக்கி நோயின்றி இன்பமாக வாழ வழி வகுக்கும். இயற்கையோடு இணைந்தே வாழவேண்டும். இறைவன் இரவைப் படைத்தது மனிதன் உறக்கமும் ஓய்வும் பெறவேண்டும் என்பதற்காகவே என்பதையறிந்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இரவெல்லாம் விழித்தல், குடித்தல், புகைப்பிடித்தல், புகையிலையைப் பயன்படுத்துதல், பொடிபோடுதல் போன்ற பழக்கங்களாலும் உறக்கம் கெடும் அதனால் உடல் நலமும் கெடும். உடல் நலமும் உறக்கமும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவனவாகும். "prevention is better than cure" "பிணிவரும் முன் காப்பதே அறிவுடமை" பிழைபட்டு, பிணியுற்று, மருந்துண்டு, உடல்நலங்காணுதல் கடுமையானது மடமையானதும் கூட.

ஆகவே உடலில் பிணி ஏற்படாமல் தடுக்க வேண்டும் அதற்காக மேற்கூறிய காற்றுப் பயிற்சிகள், உணவுமுறைகள், நீர்பருகும் முறைகள், உறக்கநெறிகள் போன்றவற்றை முறையாகக் கடைப்பிடித்தால் பிணியே அணுகாமல் உடல்நலத்தோடும், பலத்தோடும் வளத்தோடும் வாழலாம். நமது உடலில் நாளும் நடைபெறும் அரிய செயல்களைப் பாருங்கள். அவரவர் உடலில் நாளும் நடைபெறும் செயல்—ஆனால் எத்தனைபேர் இதனை உணர்ந்துள்ளார்கள்? இதையே தாயுமானவர்.

தன்னைத்தான் உணராத் தாரொளித்த மாந்தர்க்கு
என்னத்தான் சொல்லுவேன் என் கோவே?

என்கிறார். இதோ நம்மில் நாளும் நடைபெறும் வியப்பூட்டும் செயல்களைப் பார்ப்போம். ஒரு சராசரி மனிதன் பொதுவாக ஒரு நாளைக்கு அவருடலில் இதயம் 103688 தடவைகள் துடிக்கின்றன.

இரத்தம் 16,80,00,000 மைல்கள் உடலில் சுற்றும் தூரமாகும். நுரையீரல் 23,040 முறைகள் சுவாசிக்கிறது.

ஒருநாளைக்கு ஒரு மனிதனுக்குத் தேவையான தூயகாற்று 438 கன அடி. சராசரி மனிதர் ஒரு நாளைக்கு 3 1/4 பவுண்டு உணவை உட்கொள்கிறார். ஒரு நாளைக்கு 2.9 குவார்ட் அளவு தண்ணீர் பருகுகிறார். அதில் 7/8 அளவான கழிவுகள் வெளியேறுகின்றன. சராசரி மனிதர் ஒரு நாளைக்கு 4800 சொற்கள் பேசுகிறார். நரம்பு இயக்கம் 750 நரம்புகளில் இயக்கம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு நகம் வளருவது 0.0000416 மி.மீ அளவில் வளரும். ஒரு நாளைக்குத் தலைமுடி 0.01714 மி.மீ அளவு வளருகிறது ஒரு நாளைக்கு மனித உடலில் ஏற்படும் செல்கள் 70,00,000 இயங்குகின்றன. இவைகளைக் காணுகின்ற போது மனிதரை யறியாமலேயே அவருடலில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள், இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே இத்தகு அபூர்வமும் அதிசயமும் நிறைந்த, வியப்பூட்டும் உடலை நல்லமுறையில் இயற்கைநெறியிலும், இறைநெறியிலும் நின்று பாதுகாத்து வருவது மனிதனின் தலையாய கடமை ஆகும். உடலில் பிணியணுகாமல் இருக்க, சித்தர் கூறும் நெறியில் நின்றொழுக வேண்டும்.

"காலை இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டலம் தின்றால்
கோலை ஊன்றிக் குனிந்து நடப்பவர்
கோலை யெறிந்து குலாவி நடப்பரே"

என்கிறார் ஒரு சித்தர். அதாவது காலை எழுந்தவுடன் இஞ்சியினால் கஷாயமிட்டுக்குடித்து விட்டுப் பின்னர் தற்கால முறையில் ஏதாவது பருகினால் பித்த நோய்கள் அணுகாது. "பித்தம் குறைந்தால் சித்தம் தெளியும்" என்பார்கள். பித்த நோய்களுக்கு இஞ்சி கஷாயத்தில் தேன் விட்டுப் பருகினால் அவை அணுகாது.

கடும்பகல் சுக்கு: நண்பகலில் உணவை. உண்டபின்னர் சுக்குத்தூளை ஒரு சிட்டிகை வாயிலிட்டுச் சுவைத்துவிட்டு நீர்பருகினால் செரியாமை, புளித்த ஏப்பம், வயிற்றுவலி, வயிற்றுக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கலாம். சளியினால் ஏற்படும் தொல்லைகளும் நீங்கும்.

### மாலை கடுக்காய்

கடுக்காயுந் தாயுங் கருதிலொன் றென்றாலும்
கடுக்காய்த்தாய்க்கதிகங்காண் கடுக்காய்நோ
யோட்டி யுல்தேற்று முற்றவன்னை யோசுவைக
ளூட்டி யுடற்றேற்று முவந்து என்கிறார் சித்தர்.

ஆகவே கடுக்காய் தாயை விட மேலானது என்பதுதான் சித்தர் எண்ணம். இரவில் படுக்கும் முன் பாவனக் கடுக்காய் ஒன்றினை வாயிலிட்டு மென்று சுவைத்துப். பால் பருகவேண்டும். இவ்வாறு ஒரு மண்டலம் பருகினால் மிகுந்த பயன் அடையலாம் எனச் சித்தர்கள் கூறுகிறார்கள்.

# தமிழன்

## கவிவாணர் ஐ.உலகநாதன்

இமயத்தில் உன் கொடியா? ஈழத்தை வென்றவனா?
எகிப்துக்கும் கிரீசுக்கும் எழில்முத்துத் தந்தவனா?
அமிழ்தனைய திருக்குறளை அகிலத்திற் களித்தவனா?
அறம்பாடு சிலம்போடு புறப்பாட்டைத் தந்தவனா?

பரணியெனும் போர்ப்பாட்டைப் பாடியவன் பரம்பரையா?
பார்புரக்கும் காப்பியங்கள் படைத்தளித்துக் காத்தவனா?
தரணியெலாம் நாகரிகத் தாய்ப்பாலைச் சுரந்தவனா?
தமிழ்மகனா? உன்பட்டன் தனித்தாண்ட தென்னவனா?

இல்லையடா இல்லையவை எல்லாம்பொய்க் கற்பனையே!
ஏடெல்லாம் உண்மையென்றால் ஏனில்லை அந்தநிலை?
உள்ளதெனில் தொல்புகழில் ஒருசுவடும் இன்றுளதா?
ஓய்வுபெற்ற பாவலர்கள் உருட்டிவைத்த புரட்டடா!

கலையேந்தி நிலமாண்ட கதைகண்ட தமிழனுக்கும்
கையேந்தி நிலைகுலைந்த உனக்குமென்ன சம்பந்தம்?
உலகேந்திப் பாராட்டப் புகழேந்தித் தமிழனுக்கும்
ஓடேந்திப் போராடும் உனக்குமென்ன தொடர்புண்டு?

வாழ்ந்தவர்கள் என்றுரைக்க வடுவுண்டா சுவடுண்டா?
வாழ்க்கையிலே அக்கால வளமதுதான் துளியுண்டா?
தாழ்ந்தவர்கள் என்றுரைக்கச் சான்றுகளோ கோடியுண்டு!
சரித்திரத்தைத் துணைக்கழைத்துத் தலைமறையப் பார்க்காதே!

வாழ்ந்தவனும் நீயல்லன்; வாழ்பவனும் நீயல்லன்!



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
பதிவு இல.
கசெட் இல.

# UNIQUE PRAYER

# 'Mend Morosemind'

KALPA MUTHAIAN

*History of the Occident or West introduces us to very strange things which are diametrically opposite to us in content form and practice, from early days. While in West, we are awed at the Royal Palaces, house hold or administration with lawish grandeur pomp and show, displaying their inherent Imperialism ofrulers and ruling class and object subjucation of all its people. There were several privileged groups in feudal society stratified into serfs, barons, dukes,lords etc., Kings were naturally authoritarian in their concept and autocratics in practice in ruling his subjects. With all the pomp and show, and all the parapharanelia, in grandoise palaces, Courts etc.,*

*But in the Orient, we see an entirely different system of Government people,rulers, ministers and advisors. Here people were given supreme rights to approach the King on any wrongs done by other subjects or by the State Officials. The kings did not live in pompous palaces and manor houses like their occidental counterparts. There were no privileged groups of people or under privileged, or unprivileged. All were subject to the same law of administration.*



*In the administration of ancient Tamil Kings, there are ample instances of poets,wisemen etc., had contributed their bits to the dispensation of justice byrulers. They used their good offices to reconcile the different rulers where they were not maintaining good relations between themselves. Their wise counsels were appreciated by the rulers and acted upon. This system is also quite unique to ancient Tamil Kings for they were amenable to good reason, fairness and above all justice.*

*Now let us to take the text of the poem;*

### (145) MENDING MOROSE MIND

*Genus : Mending matrimony strained.*
*Species : Restoration of conjugal harmony*

*Pitting artless peacock shivering*
*you hastened*
*To throw your royal mantle over*
*its erect Georgious feathers*
*stretched to protect!*
*O, benignest Paegan, rider of giant embellished tusker (Heelephant) and swiftleaping*

*'I COME NOT OF HUNGER TO YOU NOR*
*DO I HAVE ANY HANGERS ON*
*(DEPENDENTS)*
*TOFEED!'*
*Alluring ripe pumpkin like shaped black*
*boughed SEERIYAZH (Lute)*
*Played I here most deftly to deterring dismay*
*of your royal musicians*
*Only to implove you to be most righteous and*
*benign O! Graceful ruler!*
*That is what I beg of you as choicest present*
*and Pray you to proceed in your chariot this*
*night straight*
*To console your stricken hearted and pining*
*'better half*

*KAPILAR*

## OBSERVATION

*In the above poem the poet who is well known to the ruler takes upon him the toughest and risky responsibility of reconciliation and rappoach omission on himself between the ruler and his 'cast away consort'. As between them thedispleasure between them the displeasure has to be erased and they are to beunited again. Yet this is a stupendous task for the minstrel to accomplish!*

*He studies deeply well the ways of world and concludes that practically all humansplaced on high authority and power have their own diligent cares, dignity and decorum and proven respects to protect with! They do not relent and compromise withless fortunate easily. In all human relationship this is most marked and worthy of note. Who can really spot this out and strive to set this right? Only a true and worthy friend can do it!*

*Yet there is practically the real difference between an acquaintance and truefriendship of pure heart and best of intention, irrespective of the rank and status between them. There are instances of supreme sacrifices recorded in humansociety for this cause of friendship entrenched among the faithful.*

*"Ever determine possibility and concentrate deligently.*
*For such faithful persons*
*Lo! Nothing remains impossible at all to accomplish"*

*(Kural)*

*As the Kural points out he starts judiciously pondering over how to execute thisdifficult problem which has been neglected by all. Finally he concludes how to bring about rappoachment between the discarded queen and the ruler by making useof his mastery of his craft and soon proceeds to the ruler/straight away withhis lute. (Seeriyazh).*

*Then at the outset he salutes the ruler by narrating his benign act of throwing his own royal mantle on the peacock to cover its feathers, erect and strechedwide looked brilliantly of georgeous, with the view to protect the bird from pouring rain and shivering.*

*Secondly he begins to describe his majestic rights on emballished elephant and swift galloping horse!*

*Thirdly he blatantly announces to the ruler in his August Assembly that 'HE ISNOT HUNGER DRIVEN NOR HAS HE ANY HANGER ON DEPENDENT TO FEED'. This is intended to arouse the ruler.*

*Fourthly there on he begin to play proudly his pumpkin shaped black boughedSeeriyazh (lute) to the utter dismay of the royal musicians that remain. and watchwith shameful and stupefied facial expressions.*

*Fifthly he claims now that he played dexterously well to dismay the royalmusicians, before the ruler only to implore the ruler to yield his request as his 'choicest present.' The ;ruler is in his most elated form and makes up hismind to grant him whatever his request be!*

*Sixthly, he begs the ruler to be pleases to proceed that night itself in his ownchariot to meet his grief stricken 'better half, which is now turned to be a must to the ruler. Who has relaxed and turned very cool and obliging!*

*Then presumably he proceeds to see his queen!*

# தமிழர் வரலாற்றில் நோய்கள்

## டாக்டர். காந்தராஜ்

பல நாடுகளை வென்று தன் கீழ் ஆண்டவன், ஆழமான கடலைக் கடந்து நாடு பிடித்தவன். உயரமான மலையைத் தொட்டுத் தமிழ்க் கொடியை நாட்டியவன். ஆற்றலாளன் வீரன் என்றாலும் அவன் நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிறான். அந்த நோய்களால் தன் மொழியையும், இலக்கியங்களையும், மத வழிபாட்டையும் ஏன் தன் வரலாற்றையுமே இழந்திருக்கிறான்.

`சூலை நோய்' என்ற நோய் தமிழ் வரலாற்றில் அடிக்கடி இடம் பெறும் நோய்! இந்த நோயைக் குணப்படுத்தும் முறை அந்தக் காலத்தில் ஆரிய மதத்தைச் சேர்ந்த துறவிகளுக்குத் தெரிந்திருக்கிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மன் இந்த நோயால் அவதிப் பட்டிருக்கிறான். அவனுடைய அரண்மனை மருத்துவர்களால் தீர்க்க முடியாத அந்த நோயை அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் குணப்படுத்தியிருக்கிறார். அதற்கு அவர் வாங்கிய சம்பளம்- சமணனாயிருந்த மகேந்திர பல்லவனைச் சைவ சமயத்திற்கு மாற்றியதுதான்!



கி.பி. 5 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் மக்கள் தழுவியிருந்த மதங்கள் பௌத்தமும் சமணமும் ஆகும். தொல்காப்பியர் தொடங்கி, திருவள்ளுவர் இளங்கோ என்று கடைச் சங்க காலப் புலவர் வரை பெரும்பான்மையோர் பௌத்தராகவும் சமணராகவும் இருந்துள்ளனர். "மன்னன் எவ்வழி அவ்வழி குடிகள்" என் வகையில் பார்த்தால் அந்தக் காலத்திய மன்னர்களும் அப் புலவர்களைப் போலவே பௌத்தராகவும், சமணராகவும் இருந்திருக்க வேண்டும்.

இந்தக் கால கட்டத்தில்தான் ஆரியர்கள் இந்த நாட்டிலே வேகமாகப் பரவத் தொடங்கினர். கேரளாவைச் சேர்ந்த ஆதி சங்கரர்தான் இன்று இந்து மதம் எனப்படும் பிராமண மதத்தைத் தொடங்கியவர் எனக் கருதலாம். அவர் கால்நடையாக நாடு முழுவதும் பயணம் செய்து பிராமண மதத்தைப் பரப்பினார். அவருடைய வாக்கு வன்மையால் கவரப்பட்ட பல மன்னர்கள் பிராமண மதத்துக்குத் தாவினர். தாவின கையோடு அதுவரை பௌத்த விகாரையாகவும் சமணப் பள்ளியாகவும் இருந்த வழிபாட்டுத் தலங்களைப் பிராமணமத வழிபாட்டுத் தலங்களாக மாற்றினார்.

இமயத்தில் பத்ரிநாத்தில் இருந்த சமணப்பள்ளி இந்து கோயிலாயிற்று. காசியிலிருந்த புத்தவிகாரை, அசோகத் தூண் உட்பட அனைத்தும் இடிக்கப் பட்டு, காசி இந்துக்களின் புனிதத் தலங்களாக மாற்றப்பட்டன. எந்த

இடத்திலிருந்து புத்தர் தனது புனிதக் கொள்கைகளை உலகுக்குப் படைத்தாரோ, அந்தச் சாரநாத்தை வாரணாசியாக்கிப் புத்த மதச் சின்னங்களை அழித்து இந்துக்களின் புனிதத்தலமாக்கிய கொடுமை அன்றிருந்த மன்னர்களாலேயே நடத்திக் காட்டப்பட்டது. இந்தப் பாவத்திற்குப் பரிகாரமாகத்தான் பின்னால் வந்த ஔரங்கசீப் காசி விசுவநாதர் ஆலயத்தைத் தரைமட்டமாக்கி அந்த இடத்தில் முஸ்லிம்களின் மசூதியைக் கட்டி, அதனை முஸ்லிம்களின் புனித்தலமாக்கினான்.

சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் நிலை இழக்கக் காரணமான. இன்னொரு நோய் கூன் நோயாகும். அப்பரும் திருஞான சம்பந்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது நமக்குத் தெரியும். அப்போது பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் கூன் நோயால் அவதிப்பட்டான். சம்பந்தர் தன் வைத்தியத் திறமையால் அந்த நோயை நீக்கினார். அதன் விளைவாக அந்த மன்னன் சமணத்திலிருந்து சைவத்துக்குத் தாவி "கூன் பாண்டியன்" என்ற அவலத்திலிருந்து "நின்ற சீர் நெடுமாற நாயனார்" ஆனான். மன்னனைத் தன் கைக்குள் போட்டுக் கொண்ட சம்பந்தர் தன் மதவெறியையும் சாதி வெறியையும் பலவகையில் காட்டினார். சம்பந்தரின் பேச்சைக் கேட்டுப் பாண்டி நாட்டைச் சேர்ந்த எட்டாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றிக் கொன்றான் அந்தக் கூன் பாண்டியன். மன்னனின் பின் பலத்தோடு பல சமணப் புலவர்களை வாதுக்கழைத்து அவர்களே தோற்றதாகக் கதை கட்டி அவர்கள் இயற்றியிருந்த பல அழகிய தமிழ் இலக்கியங்களை ஆற்றிலும் நெருப்பிலும் போட்டு அழித்தார் சம்பந்தர். பல சமணப் பள்ளிகளைப் பிராமண மதக் கோயில்களாக்கினார் அதற்கோர் எடுத்துக் காட்டு சீர்காழி சட்டையப்பர் கோயில்.

திருஞான சம்பந்தரின் இந்தச் செயலால் இலக்கியங்கள், கோயில்கள் அழிந்ததோடு தமிழினத்தின் வரலாற்றுத் தொன்மையும் சேர்ந்தே அழிந்து போயின. இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் கூட முதலில் சமணர் தான். தர்மசேனர் என்ற அந்தச் சமணரும் திருநாவுக்கரசர் என்ற சைவரானது அவருக்கு வந்த சூலை நோயால்தான்.

பிற்காலத்தில் எடுத்துக் கொண்டோமானால், திருமலைநாயக்கர் தான் நம் நினைவுக்கு வருகிறார். இவருக்குத் தீராத தடுமன் (சைனஸ்) தொல்லை இருந்திருக்கிறது. வழக்கப்படி யாராலும் குணப்படுத்த முடியவில்லை. இந்தச் சமயத்தில்தான் கிறித்துவ மதம். தமிழ்நாட்டில் வேரூன்ற ஆரம்பித்திருந்தது. அவ்போது மதுரையில் கிறித்துவ போதகராக இருந்த தே.நொபிலி என்ற பாதிரியார் திருமலை நாயக்கரின் தடுமனைத் தீர்த்து வைத்தார். அதனால் தீவிர வைணவரான திருமலை கிறித்துவராக மாறத்தலைப்பட்டார். அவருக்குக் கிறித்துவ மதத்தைச் சேர்ந்த வைப்பாட்டி இருந்ததாகவும், அந்தக் கிறித்துவ வைப்பாட்டியின் வீட்டிலிருந்து திரும்ப வரும் வழியில் அந்நிய மதத்தின் ஆதிக்கம் நுழைய விரும்பாத மன்னரின் ஆலோசகர்கள் அவரைக் கொன்றுவிட்டதோடு நில்லாமல், தே.நொபிலி பாதிரியாரையும் சேந்தமங்கலம் என்ற ஊரில் சிறைவைத்தனர் என்று வரலாறு கூறுகிறது.

சோழர் காலத்தை எடுத்துக் கொண்டால், கண்டராத்தித சோழனின் ஆரம்பகால மலட்டுத்தன்மை அவனுக்கு வாரிசில்லாமல் செய்ய, அவன் தம்பி சுந்தர சோழன் பட்டமேறினான். சுந்தர சோழனுக்கு ஆதித்த கரிகாலன் என்ற மகன் பிறந்த பிறகுதான் கண்டராதித்தனுக்கு மதுராந்தகன் என்னும் மகன் சட்டப்படி சோழ மன்னனாக வேண்டியவன் பிறந்தான். ஆனால் விதி நோய் வடிவத்தில் விளையாடியது. சுந்தர சோழன் பக்கவாதத்தால் படுக்கையில் வீழ்ந்து விடப் பட்டத்து இளவரசனாக இருந்த ஆதித்த கரிகாலன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டு அவனுடைய தம்பி அருள் மொழிவர்மன் ராஜ ராஜ சோழனாக அரியணை ஏறினான். கடல் கடந்து நாடுகளைப் பிடித்து அரசாண்ட முதல் தமிழ் மன்னன் இவன் தான். பேரரசன் என்ற சொல்லுக்கு உண்மையான எடுத்துக்காட்டும் இவன்தான். சில நோய்கள், இழந்த வரலாற்றை மீட்டுத் தரும் நல்ல நோய்களாகவும் இருத்திருக்கின்றன என்பது இராஜ ராஜ சோழன் அரியணை ஏறியதன் வாயிலாக அறியலாம்.

மன்னர்கள், மன்னர் மன்னர்கள் என்று விளங்கிய பெருமையெல்லாம் நம் தமிழ்நாட்டிற்குத்தான். நம் தமிழ் மன்னர்கள்தான் வடக்கே கங்கைக் கரைவரையிலும் கிழக்கே மலேயா, ஜாவா, பிலிப்பைன்ஸ், பர்மா, கம்போடியா, தாய்லாந்து போன்ற நாடுகள் வரையிலும், மேற்கே இலட்சத்தீவு போன்ற நாடுகளையும் தன்கீழ்வைத்து நாடாண்ட அரசர்க்கரசர்கள். ஆனால் நம் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படும் இன்றைய புருடோத்தமனையும். நம் தென்னாட்டுப் புலிகேசியிடம் உதைவாங்கிய ஹர்ஷவர்த்தனையும், தன்நாட்டு எல்லையைத் தாண்டாத மௌரியர்களையும். குப்தர்களையும் சம்யுக்தையைத் தூக்கிச் சென்றதைத்தவிர வேறு எதையும் சாதிக்காத பிரிதிவிராஜனையும், ஐம்பது வெள்ளைக்காரனை மட்டுமே கொன்ற ஜான்ஸி ராணியையும், சாந்த பீபியையும் (கட்டபொம்மனைவிட பல ஆயிரம் மடங்கு குறைந்த மதிப்பு) பற்றிப் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளி அவர்களையெல்லாம் மாபெரும் சரித்திர நாயகர்களாகக் காட்டுகின்ற இன்றைய சரித்திர



# இன்னுமா உறக்கம்

## கவிஞர் ஞானச்செல்வன்

விலகலில்லாத் துன்பமுறும் வீறிலங்கைத் தமிழர்களின்
விழிநீரைத் துடைத்தோமா நாம்?
நிலவுகின்ற தமிழ்க்கலையின் இலக்கியத்துப் படைப்ப
தனில்
நீள்வெற்றி கண்டோமா நாம்?

கன்னடத்தில் தெலுங்கதனில் கவின்மலை யாளத்தில்
கருத்ததனைச் செலுத்தினோமா நாம்?
பின்னுள்ள குசராத்தி வங்காளி இந்திமொழி
பெறும்புகழை அறிந்துளோமா நாம்?
இன்னும்தான் தமிழர்நாம் உறக்கத்தைக்
கொள்ளுவதோ?
எழுதிவைத்த வீரம்பொய் யோ?
முன்னோரின் வைப்பினிலே வாழ்க்கையினைச்
செலவிடுதல்
முறையாமோ மொழிகுவீர் நீரே?

வித்தகர்கள் ஞானியர்கள் விளங்
குபே ரறிவினர்கள்
வேதங்கள் சாத்திரங்கள் சேர்
சித்தர்கள் முத்தர்கள் தீரர்கள் சூரர்கள்
தேடிவைத்த புகழினிலே நீர்
எத்தனைகா லங்கள்தாம் குளிர்காய எண்
ணுவீர்கள்
இயம்புவீர் இயம்புவீர் நீரே!
இத்தனைகா லங்கள்நீர் இருந்ததையே
மறந்திடுவீர்
ஏறிடுவீர் உழைப்பெனும்தேரில்!

எல்லாமும் எந்தமிழில் இருக்கின்ற தென்னுமொரு
இறுமாப்பில் இருந்தோமோ நாம்?
சொல்லழகும் பொருளழகும் சுவையழகும்
தினமகிழ்ந்து
சோம்பல்மிகக் கொண்டோமோ நாம்?
வல்வழக்கு வம்புகளில் வசமிழந்து நலமிழந்து
வாழும்வகை மறந்தோமோ நாம்?
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே மூத்தபழம்
கணக்கினிலே திளைத்தோமோ நாம்?

செந்தமிழை மேம்படுத்தத் திக்கெல்லாம்
செல்கவெனத்
தெளிந்தமொழி மறந்தோமோ நாம்?
சிந்தைக்கும் செயலுக்கும் தினையளவும் ஒவ்வாத
செயற்கைவழி வகுத்தோமோ நாம்?
உந்துகின்ற உணர்வுக்கும்
உயிர்ப்புக்கும் தமிழென்று
உதட்டாலே மொழிந்தோமோ நாம்?
தந்திரமே தம்திறமாய்ச்
சதுரர்களாய் மாறிவிட்ட
தமிழ்ப்பாதை கண்டோமோ நாம்?

உலகமெலாம் நந்தமிழர் உயர்வுக்குத்
திட்டமிடும்
உயர்வழியைக் கண்டோமா நாம்?
அலகில்லாப் புதுமைகள்தாம் அன்றாடம்
மலர்வதற்கே
அறிவியலை வளர்த்தோமா நாம்?

---

பாடப்புத்தகாசிரியர்களின் இந்த நெறிகெட்ட நோயால் நமது இளைய தலைமுறையினர் நம்முடைய மேன்மையான வரலாற்றை அறியாத நோயினால் வாடுகிறார்கள். நடக்கப் போகும் உலகத்தமிழர் மாநாடு இந்நோய் தீர்க்க வழிகாண வோண்டும் என வேண்டுகிறேன்.



# பெண்களும் திருமணமும்

## மா. இராமையா

திருமணம்— இளசுகளின் ஏக்கப் பெருமூச்சோடு அவர்கள் வாழ்க்கையில் வந்துறும் ஒரு மகிழ்ச்சியான நாள். இந்தத் திருமணம் ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைக்கிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒரு தொடர்புப் பாலமாகவும் இந்தத் திருமணம் அமைகிறது. இத்தனை எதிர்பார்ப்புகளையும் கனாக்களையும் உள்ளடக்கி இருக்கும் இந்தத் திருமணம் எல்லோருக்கும் இலகுவில் அமைந்து விடுவதில்லை. அமையும் திருமணங்களும் பூரணத்துவம் பெற்றுவிடுவதில்லை.

இந்தத் திருமணம் என்னும் சொல் இன்னும் அவிழ்க்க முடியாத எத்தனையோ பிரச்சினைகளை முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறது. அதனால்தான் திருமணத்தின் போது கட்டும் தாலிக்கு மூன்று முடிச்சு போட்டுத் தொடங்கி வைக்கிறார்களோ!

திருமணத்திற்குப் பின் ஒரு பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைவிட, திருமணம் என்று ஒன்று நடப்பதற்குள் பல தடைகளை உடைத்தெறிய வேண்டியவளாக இருக்கிறாள். காலம் புதுமையாகிக் கொண்டு வரும் இந்த நாளில் பிரச்சினைகளும் புதுப்புதுக் கோலம் பூணுகின்றன.

☆

நத்தியிரு பெண்ணே—நீ
நல்லவரை என்றும்!
சொத்து வரும் என்று—நீ
தோது தவறாதே!
முத்து வரும் என்று—நீ
முறை தவற வேண்டாம்!

—பாரதிதாசன்

☆

ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றேரைவிடப் பெண்பிள்ளைகளை ஈன்ற பெற்றோர்கள்தாம் அதிகம் கவலைப்படுகின்றனர். அதில் முக்கியமானது வயது. வயது ஏற ஏற பெண்ணின் மவுசும் குறைந்து விடுகிறது. அதனால், தம் பெண்ணுக்குக் காலத்தோடு மணம் முடித்துவிட நினைப்பதில் தவறில்லைதான். ஆனால், இந்தப் புதுமைக் காலத்தில் பெண்கள் எத்தனையோ போராட்டங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது. அவற்றில் முதன்மையான ஒன்று கல்வி.

### கல்வி

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்ற பத்தாம் பசலிக் கொள்கை இந்த நூற்றாண்டில் உடைத்தெறியப்பட்டு, பாரதி கண்ட "புதுமைப் பெண்கள்" தோன்றிவிட்டனர். இப்போது பெண்களும் ஆண்களுக்குச் சமமாக எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். அவர்களின் முன்னேற்றத்தின் முதல் படி கல்வி. இந்தக் கல்வியை ஓரிரு ஆண்டுகளில் பெற்றுவிட முடியாது.

ஒரு பெண்பிள்ளை தட்டுத் தடங்கலின்றித் தன் கல்வியைத் தொடர்வாளேயானால் பட்டப் படிப்பை முடிக்கும்போது அவளுக்கு

வயது இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து ஆகிவிடுகிறது. இப்போது பட்டப் படிப்பு ஒன்றுக்குத்தான் மதிப்பு உண்டு. வருங்காலத்தில் எஸ்.பி.எம்., எஸ்.டி.பி.எம்., வரையிலான படிப்புக்கு வேலை கிடைக்குமா என்ற நிலைமையை டிப்ளோமாவும் பட்டப் படிப்பும் பின்னே தள்ளி விட்டு விட்டன. எனவேதான், எல்லோரும் பட்டப் படிப்புக்குப் போட்டி போட்டுக்கொண்டு முன்னே நிற்கின்றனர்.

### வேலை வாய்ப்பு

இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து வயதில் தன் பட்டப் படிப்பை முடித்துக்கொள்ளும் ஒரு பெண்ணினுடைய பயணம் அதோடு நின்றுவிட வில்லை. அடுத்த கட்டம் வேலை தேடும் படலம். இப்போது வேலை கிடைப்பதும் அவ்வளவு சுலபமா என்ன? அதற்கும் காத்திருக்க வேண்டி இருக்கிறது.

பெண்கள் படிப்பது வேலை செய்வதற்குத்தானா என்று கேட்கக்கூடும். படிக்க வேண்டும் என்ற நிலையை அடையும் ஒரு பெண் அதற்காகத் தான் செலவிடும் காலம், பொருள் விரையம் அனைத்தையும் எண்ணிப் பார்க்கும் போது அது அவசியமாகிறது. அதுமட்டுமல்ல, குடும்பச் சூழ்நிலையின் காரணமாக வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள பெண்களும் உண்டு.

ஓரளவு படித்த பெண்கள்கூட வேலை செய்வதை ஒரு தலையாயப் பணியாக மேற்கொண்டிருக்கும் வேளையில், பட்டப்படிப்புப் படித்த பெண்கள் வேலைக்குப் பிறகுதான் திருமணம் என்று இன்னும் சில ஆண்டுகளைத் தள்ளிப் போடுவதும் இயல்புதான். அப்படியே ஒரு பெண் வேலையில் அமர்ந்து விட்டாலும் உடனே திருமணத்துக்குச் சம்மதித்து விடுவதில்லை. தனக்கென்று சில பொருட்களையும், அணி மணிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டாமா என்று கேட்டுக் காலத்தைக் கடத்துபவர்களும் உண்டு.

இன்றைய நிலையில் பெண்கள் திருமணத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. கல்வி, வேலை என்பனவற்றில் அவர்கள் மனம் ஊன்றிப்போய் விடுவதால் திருமணத்தைப் பற்றி நினைப்பதற்குக்கூட நேரம் இருப்பதில்லை. ஆனால், பெற்றோர்கள் வாளாவிருந்துவிட முடியுமா? "அய்யோ, என் பெண்ணுக்கு வயதாகிக் கொண்டு போகிறதே, இன்னும் மணம் முடித்து வைக்க முடியவில்லையே" என்று பெற்றோர்கள் கவலைப்படுவது இயல்பு.

பெண் பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படும் பெற்றோர் ஆண் பிள்ளைகளைப் பற்றி அரற்றிக்கொள்வதில்லை. ஆண்களைப் பொறுத்த வரையில் எத்தனை வயதிலும் திருமணம் செய்து கொள்ளலாம். பெண்களுக்கு வயது ஏற ஏற "இளம் பெண்" என்ற நிலையைத் தாண்டிப் "பேரிளம் பெண்" என்னும் தகுதிக்கு வந்து விடுகிறார்கள். அதனால், திருமணம் தடைப்படுகிறது. அல்லது தகுதியான மணமகன் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது.

### பழைய நிலை

ஓர் ஐம்பது அறுபது ஆண்டுகட்கு முன்பு இந்த அவலம் இல்லை. பதின்மூன்று பதினான்கு வயதிலேயே பெண்களுக்குத் திருமணம் நடந்திருக்கிறது. "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்ற மன நிலையில் மக்கள் வாழ்ந்த காலம் அது. ஆண்களும் "மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்று வள்ளுவர் வகுத்த நெறிப்படி வாழ்க்கைக்குத் துணைதான் வேண்டும் என்று நினைத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தது எல்லாம் தங்களுக்கு வரும் மனைவி ஒழுக்கமுள்ளவளாக, நற்பண்புகளைக் கொண்டவளாக, கற்புநெறி தவறாதவளாக, கணவனின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்பவளாக இருக்க வேண்டும் என்பதுதான்.

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்
> தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்கிறார் வான்மறை வள்ளுவர்.

குடும்பத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பு பெண்களிடந்தான் நிறைந்திருக்கிறது. ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் சுமையும் பொறுப்பும் அதிகம். கணவனுக்குத் துணையாகவும் குழந்தைக்குத் தாயாகவும் குடும்பத்துக்குத் தலைவியாகவும் விளங்க வேண்டியவள் பெண். ஆண்களுக்கு இத்தனை சுமைகள் இல்லை. வெளியே சென்று பொருள் தேடி வரும் பொறுப்பை மட்டும் தன்னிடம் வைத்துக் கொண்டு "குடும்பத்" தலைவர்களாக விளங்கிய ஆண்கள் இப்போது பொருள் தேடும் பொறுப்பையும் பெண்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். அதனால், பெண்களும் வேலை செய்தாக வேண்டும் என்ற ஒரு கட்டாயத்தைஆண்கள் ஏற்படுத்தி வைத்துவிட்டனர்.

### யாருக்கு மதிப்பு?

பெண்களும் வேலை செய்ய வேண்டும் என்று காலத்தால் கட்டாயப் படுத்தப்பட்டாலும், வேலை

செய்யும் அவர்களுக்குத்தான் இப்போது மதிப்பு அதிகம். அதிலும், நிரந்தர அரசாங்க வேலை செய்யும் பெண்களாயிருந்தால் அவர்களுடைய மதிப்பு பல மடங்கு அதிகரித்து விடுகிறது.

இப்போது தமிழர்களுக்கு அரசாங்க வேலை என்பது வெறும் ஆசிரியர் தொழில் மட்டுந்தான். அதிலும் அதிகமான பெண்களைத் தமிழ்ப் பள்ளிகளில்தான் காண முடிகிறது. இந்நாட்டில் தமிழ்ப் பள்ளிகள் இருக்கும் வரை தமிழாசிரியைகளும் இருக்கவே செய்வர். அவர்களைத் தேடிச் செல்லும் ஆண்களும் இருப்பர். ஆனால், நிரந்தரமற்ற – தனியார் துறைகளில் வேலை செய்யும் பெண்களின் கதி என்ன ஆவது?

பெண்கள் திருமண வயதைக் கடந்து "பேரிளங் கன்னிகளாகக் காலந் தள்ளுவதற்கு வழியமைத்துக் கொடுக்கும் தடைகளை உடைத்தெறிய, ஆரம்பமுதலே கல்வியிலும் வேலையிலும் அதிகக் கவனம் செலுத்துகின்றனர்.

தாங்கள் எதிர் நீச்சல் போட்டு வாழ்க்கையில் முன்னேறும்போது தன்னை நாடிவரும் ஆணிடம், அவனுடைய பலவீனத்தைப் புரிந்து கொண்டு நிபந்தனை விதிப்பதும் வழக்கமாகிவிட்டது. தனக்குக் கணவனாக வரும் ஆண்மகன் எப்படி இருக்க வேண்டும் என்று பட்டியலிடும் பெண்களும் உண்டு.

ஆண்கள் தங்களுக்கு வரும் மனைவி ஒழுக்கமுள்ளவளாக, நல்ல குணவதியாக, கற்புடையவளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது போன்று, ஒரு பெண் தனக்கு வாய்க்கும் மணவாளன் குடி–சூத்தி–சூதாடல் – போதைப்பொருள் பழக்கம் இல்லாதவனாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது இயற்கை. இப்போதைய பெண்கள் அவற்றை எல்லாம் விட்டுவிட்டுப் பெண்களுக்கே உரிய நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய பண்புகளையும் ஓரங்கட்டிவிட்டுக் கீழ்த்தரமான எண்ணங்களைப் பகிரங்கப்படுத்துவது பெண்கள் சமுதாயத்துக்கே இழுக்காகும்.

திருமணங்கள் தள்ளிப் போவதற்கு இவை மட்டும் காரணங்களில்லை. சாதி என்ற ஒன்றும் இப்போது குறுக்கே நிற்கிறது.

**சாதிச் சனியன்**

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்றார்
பாரதி.

"சாதி இரண்டொழிய வேறில்லை" என்றார்
ஔவையார்.

இந்தச் சாதிச் சழக்கையும் மூடப் பழக்க வழக்கங்களையும் ஒழிப்பதற்குத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் பெரியார். அவருடைய போராட்டம் ஒரு கால கட்டம் வரை வெற்றியைத்தான் தந்தது. சமூக – சமுதாய மேம்பாட்டைப் பற்றி நினைக்கின்ற காலங்களில் அதற்குச் சாவு மணி அடிக்கத்தான் செய்தார்கள். அரசியலும் சமயமும் மக்களிடையே வேரூன்றி விட்ட பின்னர் சாதி என்னும் பூதம் இப்போது தலைவிரித்தாடுகிறது.

சமயவாதிகளைக் கேட்டால் "சாதிப்" பாகுபாடு சமயத்தில் இல்லை என்பார்கள். நெருங்கிப் போய்ப் பெண் கேட்டால் "எங்களுக்குள் ஏற்பாடு பண்ணிவிட்டோம்" என்பார்கள். அரசியல் வாதிகளோ எந்த மேடையில் எப்படிப் பேசித் தங்களுடைய சாதியை வெளிப்படுத்தி ஆள் சேர்த்துத் தங்கள் இடத்தைத் தங்க வைத்துக் கொள்வதென்று சிந்திப்பார்கள்.

இந்தச்சாதிப் பிரிவினை சமயத்தோடும் அரசியலோடும் நின்று விடவில்லை. உயர் கல்விக் கூடங்கள் வரை பரவி விட்டது. இளைய தலை முறையினர் சாதியைக் கடைப்பிடிப்பதில் வலுவாக இருக்கின்றனர். அவர்கள் அங்கே கல்வி கற்க மட்டும் செல்லவில்லை. சாதி ஆராய்ச்சியும் செய்கின்றனர்.

கல்விக் கூடங்களை விட்டு வெளியேறும் அவர்களுக்கு இரண்டு முக்கியமான பணிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று வேலை தேடுவது மற்றொன்று மணமகன்– மணமகள் தேடுவது. இதில் கூட "இன்ன சாதிக்கார" மாப்பிள்ளை –பெண்தான் வேண்டும் என்று பகிரங்கமாக அறிவிக்கும் அளவிற்குச் சாதியின் பிடி வலுத்துவிட்டது.

**வரதட்சணை**

பெண்களைப் பெற்று வைத்திருப்பவர்கள், தம் பெண்களுக்கு மணமுடித்து வைக்க இன்னொரு "கண்டத்தையும்" தாண்ட வேண்டி இருக்கிறது. அதுதான் வரதட்சணை. இந்த வரதட்சணை தமிழகத்தைப் போல் கொடுமையான கிடுக்கிப் பிடி பிடிக்கவில்லை என்றாலும் ஓரளவு பாதிக்கவே செய்கிறது. இந்த அபாயத்தைத் தாண்டவே புத்திசாலி பெற்றோர் ஆரம்பத்திலேயே பணத்தைச் செலவிட்டுப் பட்டப் படிப்பு வரை படிக்க வைத்து விடுகின்றனர். அதிலும் பட்டதாரி ஆசிரியையாக இருந்தால் மதிப்பு கொஞ்சம் அதிகந்தான். தொழில்

நுட்ப வல்லுநர்கள் தாராளமாகச் சம்பந்தம் வைத்துக் கொள்ள முன் வருவார்கள்.

இவர்களுக்கு வரதட்சணை தேவை இல்லை. இவர்கள் மணந்து கொள்ளும் பெண்கள்தாம் "வாழ்நாள்" முழுக்கச் சம்பாதித்துக் கொடுக்கப் போகின்றனரே, அதைவிட அவர்களுக்கு வேறு என்ன வேண்டும்?

ஆனால், அதிகம் படிக்காமலும் நல்ல தொழிலில் அமராமலும் இருக்கும் ஏழைக் குடும்பத்துப் பெண்கள்தாம் இந்த வரதட்சணைக்குப் பலியாகின்றனர். காலத்தோடு திருமணம் நடக்காமல் போவதற்கு இதுவும் ஒரு காரணமாகிவிடுகிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் நெறிமுறையை உணர்ந்தால் வாழ்க்கைக்கு வேண்டியது ஒரு துணை; அந்தத் துணையைத் தேடும் மறுமலர்ச்சி உதயமானால் ஒழிய, பெண்கள் எதிர்கொள்ளும் தடைகளை உடைத்தெறிய முடியாது.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை— குறள்



# எனது அருமைக் குழந்தைகளே

எனது அருமைக் குழந்தைகளே!
என்ன வேண்டும் உங்களுக்கே?
மனதுக் கினிய எதிர்காலம்!
மண்டும் கவலைகள் உதிர்காலம்!

நாளைய உலகின் சிற்பிகளே!
நடப்பது உங்கள் காலம்தான்!
தோளை உயர்த்தி நடந்திடுவீர்!
தொலைநோக் குடனே கல்விகற்பீர்!

சேலையின் அழகு இழையினிலே!
சித்திர அழகு வண்ணத்திலே!

சோலையின் அழகு மலர்களிலே!
உங்கள் அழகு படிப்பினிலே!

வேரிலே நீரை விடுவதனால்,
விரைவாய் மரமும் வளர்வதுண்டு!
ஊரிலே நீங்கள் வளர்வதற்கே
உரங்கள் மிகவும் தேவையென்பேன்!

நல்ல குழந்தைகள் வளர்ந்துவிட்டால்,
நாடும் செழிக்கும்; நலமோங்கும்!
வல்லான் கொடுமை நீங்கிவிடும்!
வையம் அறிவில் நிலைத்துவிடும்!



கவிஞர் எஸ்.ஆர்.ஜி.சுந்தரம்

# அச்சுத்தேரில் புத்தக ஊர்வலம்

## மூவேந்தர் முத்து

அறிவியல் உலகம், வேகமான செயல்களால் வியக்கும் வண்ணம் வளர்ந்துவருகின்றது. அறிவியலைப் பரப்பும் முக்கியக் கருவியாகப் பயன்படுவது புத்தகங்களேயாகும். அந்தப் புத்தகங்கள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வது எல்லோருக்கும் நன்மை பயப்பதாகும்.

புத்தகங்கள் உருவாவதற்கு அச்சகங்களே முதன்மை இடம் பெறுகின்றன. இன்று அச்சுத் தொழில் வளர்ச்சி எவ்வளவு மேலோங்கிய முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதென்பதை யாவரும் அறிவர்.

கையெழுத்து தெளிவாக - அழகாக இருந்தால் அப்படியே அச்சுக் கோப்பதற்குக் கொடுத்து விடலாம். இல்லாவிட்டால், தட்டச்சுச் செய்து கொடுப்பது மிகவும் நல்லது.



மேலை நாடுகளில், எழுதிப் படித்து, இன்னொருவரும் படித்து, அதன்பின் தட்டச்சுச் செய்தே அச்சகத்துக்குக் கொடுக்கிறார்கள். தட்டச்சுச் செய்வதிலும் பிழைகள் ஏற்படலாம். அதனால் மீண்டும் படித்து, வரிசை எண் அமைத்துக் கொடுப்பதே நல்லது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், அச்சுக் கோப்பவர்களுக்குப் புரியும் வண்ணம் எழுதி. சொல்லுக்குச் சொல் இடைவெளிவிட்டுக் *(SPACE)* கொடுத்துள்ள செய்தியை அவரே தெரிவித்துள்ளார். "நாம் பண்டிதர்கள்; அச்சுக் கோக்கும் தொழிலாளர்கள்அவ்வளவு படிக்கவில்லையே" என்று கூறும் அவர், அச்சுத் தொழிலை எவ்வளவு மதித்துள்ளார் என்பதையும் அறியலாம்.

அச்சகம் ஒன்றை நடத்தும் உரிமையாளரும், புத்தகங்கள் பற்றிய விவரம் தெரிந்தவராக இருக்க வேண்டும். அப்போதுதான் நூல் நல்ல முறையில் வர வாய்ப்பாக அமையும்.

எழுதி எடுத்துச் செல்லும் கைப்பிரதியை - தட்டச்சுப் பிரதியைப் பார்த்தே இத்தனை பக்கங்கள் வரும் என்பதைக் கணக்கிட்டுச் சொல்லி விடலாம்.

பத்துப் புள்ளி *(10 POINT)* எழுத்தாக இருந்தால், ஒரு வரிக்கு எத்தனை எழுத்துகள் அடங்கும் என்பதைப் பார்த்து, பக்கத்துக்கு எவ்வளவு வரிகள் வரும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

அச்சக உரிமையாளர் அல்லது போர்மேன் எனப்படும் நிர்வாகி கைப்படிகளைப் பெற்று, அவற்றைப் பிரித்து, நான்கு பக்கங்கள் அதாவது ஒரு `காபி' வரும் அளவுக்கு ஒவ்வொரு அச்சுக் கோப்பவரிடமும் கொடுப்பார்.

அச்சுக் கோப்பவர்கள், கம்பாசிட்டர்கள், (*COMPOSITORS*) என அழைக்கப்படுவார்கள். அவர்கள் ஒவ்வோர் எழுத்தாக, ஸ்டிக் (*STICK*) என்னும் அச்சுக் கோப்பானில் அடுக்கி, ஒவ்வொரு வரியையும் முடித்து, மீண்டும் மறுவரியைக் கோத்து வருவார்கள். அச்சு எழுத்துகளை எடுத்து வைக்கும் முறையைப் பார்த்தாலே மிகவும் வியப்பாக இருக்கும்.

அச்சு எழுத்துகள் தலைகீழாக இருக்கும். சில நாட்களின் பயிற்சியிலேயே அவற்றைப் புரிந்து கொள்ளலாம். எழுத்துகளை அடுக்கிவிட்டு, இடைவெளியைச் சமமாக நிரப்ப அச்சு இல்லாத கட்டைகள் (*Thin Space, Midline Space, 1/2 cm, one cm.*) இருக்கும். அச்சு எழுத்துகள் காரீயத்தினால் வார்க்கப்பெற்றவையாகும். பத்திகள் முடியும் இடத்தை நிரப்ப 1 எம், 2 எம், 3 எம், 4 எம் என்று அச்சுக் கட்டைகள் உள்ளன.

அச்சுக் கோப்பானில் 12 அல்லது 14 வரிகள்தான் கோக்க முடியும். ஈயத்தகடு (*LEAD*) முன்னும் பின்னும் வைத்தே எழுத்துகளை அடுக்க வேண்டும். முன்புறமுள்ள தகடு பித்தளையிலும் இருக்கும். அளவை விட சிறிது நீளமாக, முனைப்பகுதி வெளியில் தெரியும் வகையில் கூராக வெட்டி வைத்திருப்பார்கள். கோப்பானில் அடுக்கி முடித்ததும், அதைக் கழற்றி, காலி (*GALLY*) எனும் இரும்புத் தகட்டில் அடுக்கி வைக்க வேண்டும். இந்தத் தகடு, மூன்று பக்கம் மடித்து முறம் போல் 2 அடி நீளம் இருக்கும். கனமான தகடாக இருப்பதால், நான்கு பக்கம் கொண்ட பளு உள்ள எழுத்துகளைத் தாங்கும். அச்சுக் கோத்து, `காலி'யில் வரிசையாக வைத்து நிரப்புவார்கள். அச்சுக் கோக்கும் போது சமமாக இல்லாவிட்டால் வரிகள் உள்ளடங்கியும், வெளியில் நீண்டும் இருக்கும். இந்தச் சமம் (*JUSTIFICATION*) இல்லாவிட்டால் மெஷினில் அச்சாகும்போது சரியாக அச்சிட முடியாமல் இடைவெளிக் கட்டைகள் மேலே வந்துவிடும்.

எழுத்துகளை, காலி நிறையும்வரை அடுக்கி, பி[illegible], கட்டைகள் வைத்து இறுக்கி, `புருப்' மெஷினில் `கா[illegible] புருப் எடுப்பார்கள். இந்த `புருப்பைப் பிழை [illegible]துபவர்கள், உதவியாளருடன் ஒத்துப் படிப்பார்கள். புருப் படிக்கும் கலையும் அச்சக வேலையில் முக்கி[illegible] பங்கு வகிக்கிறது.

காலி புருப் படிக்கும்போது மூலப்[illegible]யை (*ORIGINAL*) உதவியாளரைப் பார்க்கச் சொ[illegible], புருப் ரீடர் `காலி'யில் படித்துக் கொண்டே, பிழை[illegible]களைத் திருத்த வேண்டும். புருப் படிப்பவருக்கு, அ[illegible] மொழியில் புலமை இருப்பதோடு, பொறுமையும் ஆ[illegible]வமும் இருக்கவேண்டும். புத்தகம் செம்மையாக அமைய - அச்சுப்படி திருத்துபவரே முக்கியப் பொறுப்பாவார்.

`காலி' புருப் படித்துக் கொடுத்ததும், அதை `கரெக்ஷன்' செய்து, பக்கம் பிரித்து, பக்கம் செப்பம் (மேக்கப்) செய்வார்கள். பக்கம் கட்டும்போது அளவுக்குத் தகுந்தாற் போல் (கேஜ்) அளவு வைப்பார்கள். இது உலகளாவிய அளவாக எங்கும் உள்ளது. பெரும்பாலும் *EM* கணக்கில் அளவிட்டுள்ளார்கள். (6 *EM* 1 அங்குலம்; 2 1/2 செ.மீட்டர்.)

பக்கம் பிரித்து மேக்கப் செய்ததும், காலியிலேயே பக்கம் புருப் எடுப்பார்கள். மொத்தமாகக் காலியில் அடுக்கி வைத்தபோது, `காலி புருப்' என்கிறோம். அதே காலியில், பக்கம் கட்டியபின் `பக்கம் புருப்' என்று அழைக்கிறோம். புத்தக அளவு பெரும்பாலும் கிரவுன், ராயல், டெம்மி அளவாகவே இருக்கும். ஒரு காலியில் மூன்று பக்கங்கள் வைத்தே மேக்கப் செய்து பக்கம் புருப் எடுப்பார்கள்.

பக்கம் மேக்கப் செய்யும் போது, வரிக்கு வரி இடைவெளி விடுவதற்கு ஈயத் தகடுகளை அந்தந்த அளவுக்கேற்றபடி (*LEAD OUT*)ஒவ்வொரு வரிக்கு இடையிலும் பொருத்துவார்கள். லெட் அவுட் செய்யும் போது அடுக்கிய எழுத்து வரிகள் உடையாமல் மிகவும் கவனமாகச் செய்ய வேண்டும். இந்த வேலைகளை மிகவும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களே செய்வார்கள். `மேக்கப்' செய்யும்போது பார்த்தால் அழகாகவும், வியப்பாகவும் கண்கொள்ளாக் காட்சியாகவும் இருக்கும்

திரைப்படத் தயாரிப்பின்போதுதான். `மேக்கப்' என்ற சொல் அடிக்கடி அங்கே அழகு நடை போடும். அங்கே `மேக்கப்' நடிக - நடிகையரை மெருகூட்டுகிறது. அச்சுக் கூடத்தில் `மேக்கப்' எழுத்து அடுக்கிய முறையை அழகுபடுத்தி, புத்தகத் தயாரிப்பை மெருகூட்டுகிறது. இப்போது இந்த `மேக்கப்' வீடுகளிலும் பரவிவிட்டது.

பக்கம் புருப் எடுத்தவுடன், மீண்டும் படி திருத்துவோர், உதவியாளருடன் படிக்க வேண்டும். அதன் பிறகே, நூலை எழுதிய ஆசிரியர், அல்லது பொறுப்புள்ள மற்றவர்க்கு `புருப்' அனுப்புவார்கள். `புருப் படிப்[illegible]து ஒருவர் மட்டுமே படிக்காமல், அடுத்து இன்னொருவரும் மீண்டும் படிக்க வேண்டும். அப்படிப் படிக்[illegible]ம் போதுதான் பிழையின்றிப் புத்தகம் வரமுடியும்.

பிழை திருத்தும்போது, விளக்கெண்ணெயைக் கண்களில் ஊற்றிக் கொண்டு பார்க்க வேண்டும் என்பார்கள். அப்படிப் பார்த்தாலும் எப்படியாவது

பிழை நேர்ந்துவிடும். எழுத்துப்பிழை இல்லாமல் புத்தகம் வெளிவருவதையே எல்லாரும் விரும்புவர்.

இதையே ஆங்கிலத்தில், *"A Doctor's mistake is buried. A Lawyer's mistake is Jailed. But a Printer's mistake is published"* என்று கூறினார்கள்

"டாக்டரின் தவறு புதைக்கப் படுகிறது; வக்கிலின் தவறு சிறையிடப்படுகிறது; ஆனால் அச்சகத்தாரின் தவறோ வெளியிடப்பட்டு விடுகிறது" என்று—

பக்கம் படி திருத்தியபின் மீண்டும் அதிலுள்ள பிழைகளைத் திருத்தி, (CORRECTION) அதாவது எழுத்துகளைச் சரி செய்து அதன் பின் பக்கங்களை, நூல் கயிற்றால் தனித் தனியாகக் கட்டி, காலியிலிருந்து 'ஸ்டோன்' என்னும் மேசைக் கல்லில் தள்ள வேண்டும். மேசைக் கல்லில் தள்ளியபின், பக்கங்களை அச்சிடுவதற்கேற்ற வகையில் IMPOSE) வரிசைப்படுத்தி அமைக்க வேண்டும். இந்த இம்போஸ் மட்டும் மாறிவிட்டால், புத்தகத்தின் பக்கங்கள் வரிசை குலைந்து இடம் மாறிவிடும்.

பக்கங்களை வரிசையாக (IMPOSING) வைத்து, இரும்புச் சட்டத்தில் அளவுக் கட்டைகள் பொருத்தி இறுக்க வேண்டும் . இந்தக் கட்டைகள், தலைக் கட்டை, பக்கக் கட்டை, மத்தியக் கட்டை, வால் கட்டை என்று அளவாக இருக்கும். இந்தக் கட்டைகள் மரத்தினாலும், ஈயத்தினாலும் இருக்கும்.

இரும்புச் சட்டத்தில் 16 பக்கங்களாகவும் 8 பக்கங்களாகவும், அச்சுப்பொறி இயந்திரத்திற்குத் தகுந்தவாறு இருக்கலாம். இதை பாரம் (FORM) என்பார்கள். ஒவ்வொரு பாரத்திற்கும், முதல் பக்கத்தின் அடியில் 'வால் நம்பர், என்று புத்தகத்தின் முதல் எழுத்தைப் போட்டு,' 'பாரம்' எண் போட வேண்டும். இந்தக் குறியீடு, படிவ வரிசைக்கும், கட்டமைப்புச் BINDING) செய்யும் போது மடிப்பதற்கும் வசதிக்காக அமைக்கப்படுகிறது.

படிவம் இறுக்கியபின், இரும்புச் சட்டத்தோடு (CHASE) மெஷினில் அதற்குரிய இடத்தில் பொருத்தி வைக்க வேண்டும். அந்த இடத்திற்கு 'மேட்டர் பிளேட் என்பார்கள். அங்கேயும் மெஷின் ஓடும் போது, நகராமல் இருக்க இறுக்கிக் (FITTING) கொள் வார்கள். அதன் பிறகே மெஷினை ஓட்ட ஆரம்பிப்பார்கள். ஒரு தாள் மட்டும் மெஷினில் கொடுத்து, மெஷின் புரூப் எடுப்பார்கள்.

மெஷினில் எடுக்கும் புரூப்பை, முன்பு பக்கங்கள் பார்த்த படியுடன் திரும்பவும் (REVISED) கரெக்ஷன் சரியாகப் போடப் பட்டிருக்கின்றனவா என்று ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். சரியாக இருக்கிறது என்று (O.K.) (அ) (STRIKE ORDER) கொடுத்தால்தான் மெஷின் மேன் அச்சிடுவதற்கான வேலைகளைச் செய்யத் தொடங்குவார். கரெக்ஷன் ஏதாவது இருந்தால் மெஷினிலேயே அச்சுப்படிவத்தைத் (FORM MATTER) தளர்த்தி, கரெக்ஷன் போடுவார்கள்.

கரெக்ஷன் முடிந்ததும், மீண்டும் அச்சுப்படிவத்தை இறுக்கி, பக்கங்கள் ஒன்றன்மேல் ஒன்று சரியாக அமைந்துள்ளதா என்று சரி READY பார்த்த பிறகே அச்சிடுவார்கள்.

இந்த முறை அனைத்தும் LETTER PRESS அமைப்பு முறையாகும்.

பாரங்கள் அச்சிட்டபின், கட்டமைப்புக்குச் செல்ல வேண்டும். 16 பக்கங்கள் கொண்ட பாரத்தை இரண்டாக வெட்டி மூன்று மடிப்பாக மடித்தால் புத்தக அளவு வந்துவிடும். ஒரு நாளில் 4000 படிகள் ஒருவர் மடிக்கலாம். பாரங்கள் மடிக்க மெஷினும் (FOLDING MACHINE) உள்ளது.

பாரங்களை மடித்து, கட்டுக்கட்டி வைத்து விடுவார்கள். பிறகு 1,2,3 என்று எத்தனை பாரங்கள் இருக்கின்றனவோ, அவற்றை வரிசையாக வைப்பார்கள். இதை கம்போஸ் (COMPOSE) எடுப்பது என்று கூறுவார்கள்.

'கம்போஸ்' முடிந்ததும், பாரங்களைத் தைக்கத் தொடங்குவார்கள். தேவைக்குத் தகுந்தவாறு குத்துத் தையலாகவும், (HALES STITCHING) கோத்துத் தைக்கும் (SECTION STITCHING) தையலாகவும் தைக்கலாம். தையல் முடிந்ததும், புத்தகங்களை வரிசையாக அடுக்கி முதுகுக்கு வஜ்ஜிரம்தடவவேண்டும்.

வஜ்ரம் தடவுவதற்கு முன்பு பக்கத்தாள்களை (SIDE PAPER) ஒட்ட வேண்டும். இந்தத் தாளை மேல் அட்டையுடன் ஒட்டிவிடுவார்கள். புத்தகத்தின் வலுவுக்கு இந்தத் தாள்களே துணை செய்கின்றன. புத்தகத்தைப் பிரிக்கும்போது, அட்டை தனியாகப் பிரியாமலும், கெட்டியாகவும் இருக்க இந்தப் பக்கத் தாள்கள்தான் காரணம்.

அடுத்து, மேல் அட்டை இருந்தால்தான் புத்தகம் முழு உருப்பெறமுடியும். அந்த அட்டை எப்படி அமைகிறது என்பதைப் பார்ப்போம்.

மேல் அட்டைகளை(WRAPPER COVER) பல வண்ணங்களில் எடுப்பாக அமைத்தால், வாங்குபவர் கவனத்தை ஈர்க்கும். அதற்குத் தகுந்த ஓவியங்களை வரையவேண்டும்.

ஓவியரிடம் சென்று, கதையின், கட்டுரையின், உள்பொருள் விளக்கம் சொன்னால், அதற்கேற்ற வகையில் வரைந்து கொடுப்பார்.

ஓவியத்தை வாங்கிக் கொண்டு வந்து, பிளாக் செய்ய வேண்டும். எத்தனை வண்ணங்களோ அத்தனை அழகிய 'படக்கட்டை' (பிளாக்)(BLOCK) பிளாக்குகள் செய்ய வேண்டும்.

பிளாக் செய்வதும் அச்சுத் தொழிலில் ஓர் அங்கமேயாகும். சூரிய ஒளியிலும், கேமராவிலும் நெகடிவ் எடுத்து, அதன் பிறகு 'பிளேட்டில் எக்ஸ்போஸ் செய்து பதியவைத்து, ஆசிட்டினால் கழுவித் தயாரிக்கிறார்கள். ஈயத் தகட்டில் செய்யும் இந்த பிளாக்குகள் அவற்றிற்குரிய கட்டைகளில் பொருத்தி, ஆணி அடித்து உருவாக்குகிறார்கள்.

அதன்பின், ஒவ்வொரு வண்ணமாக அதற்குரிய டிரெடில் மெஷின் ஆட்டோமாடிக் (தானியங்கி) மெஷின் ஆகிய அச்சுப் பொறிகளில் அச்சிட்டுக் கொள்ளலாம்.

மேல் அட்டை அச்சிடும்போது, அட்டையிலேயே அச்சிடலாம். அல்லது கனமான அட்டையை முதலில் புத்தகத்தின் மேல் ஒட்டிவிட்டு, அதன்மேல் மேல் அட்டையும் தனியாக ஆர்ட் பேப்பரில் அல்லது மேப்லித்தோ பேப்பரில் அச்சிட்டு, அட்டைமேல் மாட்டி விடுவார்கள் இதை 'COVER'என்றும், 'JACKET' என்றும் அழைப்பார்கள். ஆரணங்குகளுக்கு 'ஜாக்கெட்' எவ்வாறு அழகைக் கூட்டுகிறதோ, அதே போல், இந்தப் புத்தகக அணங்குக்கும் 'ஜாக்கெட்' போட்டால் தான் 'கெட்அப்' கிடைக்கும். அழகும் மிளிரும்.

அச்சிட்ட மேலட்டையைக் கட்டமைப்பாளரிடம் கொடுத்தால், புத்தகக் கனத்துக்குத் தகுந்தாற் போல் முதுகில் அழுத்திக்கோடு (SCORING) போட்டு அதன் பிறகே மடித்துப் புத்தகத்தில் ஒட்டுவார்கள்.

வண்ண அட்டைகளின் மேல், இப்போது பிளாஸ்டிக் அழகமைப்பு (LAMINATION) முறை வந்துள்ளது. கவர்ச்சியாகவும் உள்ளது. அழுக்கும் படியாது. வண்ணம் அச்சிட்டு உலர்ந்த பிறகே இதைப் பதிய வைக்க வேண்டும்.

மேல் அட்டை ஒட்டி நன்றாகக் காய்ந்தபின் - குறைந்தது ஒரு நாள் - அதன்பிறகே கட்டிங் மெஷினில் புத்தகங்களை வெட்ட வேண்டும். முதலில் புத்தகத்தின் வயிற்றுப் பக்கம் வெட்டுவார்கள். வயிற்றுப் பக்கம் என்பது புத்தகத்தைப் பிரிக்கும் வெளிப்பக்கமாகும். அதன்பிறகே தலை - வால் அதாவது மேல் - கீழ் பகுதிகளை வெட்டுவார்கள். வெட்டியபின் புத்தகம் முழு நிறைவு பெறுகிறது.

புத்தகத்தை-இந்த நிலையில் பார்க்கும் எழுத்தாளன், ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த பேற்றை - பெருமையை - சிறப்பைப் பெற்று மகிழ்கிறான்.



# முயன்றால் முடியும்

## எம்.கே.இராசமாணிக்கம்

பண்டைக் காலந்தொட்டே தமிழர் –திரை கடலோடியும் திரவியம் தேடு என்னும் முதுமொழிக்கேற்ப, உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் சென்று வாணிபம் செய்து பொருளும் புகழும் ஈட்டி வந்தனர். இக்கட்டுரையில் தமிழரின் வாழ்வும் வளர்ச்சியும் பற்றி விளக்கமாய் ஆய்வோம்.

### பொருளியல்துறை

பொருள்களின் உற்பத்தியானது வேளாண்மையாலும் தொழில் உற்பத்தியாலும் ஈட்டும் அந்நியச் செலாவணியாகும். இதன் மூலம் பணமும் பிற இன்றியமையாப் பண்டங்களும் நம் நாட்டிற்குக் கிட்டுகின்றன.



நம் தமிழகத்தில் வேளாண்மையால் உற்பத்தியாகும் பொருள்களான பருத்தி, நிலக்கடலை, அரிசி, மரவள்ளிக் கிழங்கின் உற்பத்திப் பொருள்களான சேமியா, ஜவ்வரிசி மற்றும் பட்டு, காப்பி, தேயிலை, ஏலம், கிராம்பு, பூண்டு, வெங்காயம் ஆகியவையும் விலங்குகளால் கிடைக்கும் தோல், உரோமம், கொழுப்பு ஆகியவையும் காடுபடு பொருள்களான சந்தனம், அகில், தேக்கு, ஈட்டி, ரப்பர், மூங்கில் போன்றவையும் மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, சப்போட்டா, அன்னாசி, ஆப்பிள் போன்ற கனிகளும் விமானம் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி மூலம் பொருளீட்டப்படுகின்றன.

பருத்தியாடை, பட்டாடை, கம்பளி ஆடை, நைலான், நைலக்ஸ் ஆகிய ஆடைவகைகளும் தைக்கப்பட்ட ஆடைகளும் (ரெடிமேடு ஆடை வகைகள்) கைவினைப் பொருள்களும், கலைப் பொருள்களும், விளையாட்டுக் கருவிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தீப்பெட்டி, பட்டாசு, மத்தாப்பு, வெடிகள் போன்றவைகளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அன்றாட இன்றியமையாத் தேவையான சர்க்கரையும், வாசனைத் திரவியங்களும், கடல் படுபொருள்களான மீன், முத்து மற்றும் பவழம் போன்றவையும் நமக்குப் பணம் கிட்டச் செய்கின்றன.

கோழி முட்டை தமிழகத்திலிருந்து உலக நாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதியாகிறது.

### தொழிலியல் துறை

பாரதி இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே! இயந்திரங்கள்

வருத்திடுவீரே! என்று பல ஆண்டுகளுக்கு முன்பு கூறியதை இன்று தமிழகம் நிறைவேற்றியுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, அனல் மின் நிலையம் மற்றும் ரயில் பெட்டித் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, எவர்சில்வர் பாத்திரத் தொழிற்சாலை, பிளாஸ்டிக் பொருள் தொழிற்சாலை, பருத்தி, பட்டு துணி ஆலைகள், கைத்தறித் தொழில் கூடங்கள், ஜவ்வரிசி ஆலைகள், உப்பளத் தொழில், காகிதத் தொழில், சர்க்கரை ஆலைகள், பனைப் பொருள் தொழில்கள், திரைப்படத் தொழில் கூடங்கள், செய்தித்தாள் துறை, வானொலி, தொலைக்காட்சித் தொழில், மரச்சாமான்கள், இரும்புச் சாமான்கள் செய்யும் தொழில்கள், வாகனங்கள், எழுதுபொருள்கள் செய்யும் தொழிற் சாலைகள், உரத் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு வகையான தொழிற்சாலைகள் நம் நாட்டில் செயல்படுகின்றன.

கட்டடக் கலைக்குத் தேவையான செங்கல், கருங்கல், சிமெண்ட், சுண்ணாம்பு தயாரிப்பு தொழில் கூடங்கள், கடிகாரத் தொழிற்சாலைகள், அரிசி ஆலைகள் பல உள்ளன. சிறப்பாக, தமிழகத்தில் வெட்டியெடுக்கப்படும் முதிர்ந்த கருங்கல் உலக நாடுகளைத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. குறிப்பாக, ஜப்பான் நாட்டிற்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்கெனக் "கனிம நிறுவனம்" என்ற அமைப்பு நன்கு செயல் புரிகின்றது.

இன்று தமிழகத்தில் சுமார் 14 போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுகின்றன. மேலும் கால்வாய்களிலும் கடலிலும் இயங்கிவரும் கப்பல், படகு, மின் படகு போன்ற நீர்வழிப் போக்குவரத்துக் கழகங்களும் நம் தமிழகத்திற்குச் சுற்றுலாத் துறையை மேம்படுத்திப் பொருளீட்டித் தருகின்றது.

சுற்றுலாத் துறையின் மூலம் தமிழகத்திலுள்ள கோடை வாழிடங்கள், அணைக்கட்டுகள், பறவை, விலங்கு சரணாலயங்கள், கோயில்கள், பெரு நகரங்கள், அருவிகள், கடற்கரைகள், திருவிழாக் காலங்களில் சிறப்பிக்கப்படும் பேரூர், சிற்றூர், நகரங்கள் மூலம் வெளிமாவட்டம், வெளிமாநிலம், வெளிநாடுகளிலிருந்து வரும் கல்விப் பயணம், இன்பப் பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் மூலம் பணம் ஈட்டி வருகின்றன.

விழாக்காலங்களில் விற்கப்படும் கைவினைப் பொருட்களும், கலைப் பொருட்களும், தின்பண்டங்களும், அணிமணிகளும், வாகனங்களும், கால்நடைகளும் பொருளாதார உயர்வைச் செய்யும் ஊக்கிகளாகும்.

சிலப்பதிகாரம், இந்திர விழாக் கொண்டாடும் காட்சியில் பன்னாட்டு வணிகர்களும் காவிரிப் பூம்பட்டினத்தில் கூடியதாக வரலாறும் இலக்கியமும் கூறுகின்றன.

தற்காலத்தில் உணவுப் பொருட்கள் நம் தமிழகத்தில் தயாரிக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி ஈட்டுகின்றன. உணவு தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருட்கள், கிரைண்டர், மிக்ஷி போன்றவையும் இங்குத் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஸ்விட்சர்லாந்து நாட்டுக்கு இணையான கடிகாரங்கள் தற்போது தயாராகின்றன. இங்குள்ள ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், பி.ஈ., படித்தவர்கள் துபாய், ஜெர்மனி, அரேபியா போன்ற நாடுகளுக்குச் சென்று பணியாற்றுவதன் மூலம் தம் தொழில் திறமையைப் பயன்படுத்திப் பொருள் ஈட்டவும் தமிழகம் முன்னோடியாய் உள்ளது.

மருத்துவத்துறையில் அலோபதிக்கு நிகராக சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்து முறைகளும், இயற்கை மருத்துவ முறையும் முன்னணியில் விளங்குவதோடு வெளியுலகச் சந்தையிலும் பொருளீட்டுகின்றன. கலைத்துறை, இயல், இசை, நாடகத்துறையில், விளையாட்டிலும் இன்று தமிழகம் முன்னோடியாயுள்ளது. சமயத்துறை, ஆன்மீகத்துறை, இலக்கியத்துறை மூலம் மக்களை நல்வழிப்படுத்த நம் மாபெரும் புலவர்களால் யாக்கப்பட்ட பேரிலக்கியங்கள் பிற உலக மொழிகளில் பெயர்க்கப்பட்டுப் பலரால் படிக்கப் பயன்படும்படியாகப் பல்வேறு நூல்கள் அச்சாக்கப்பட்டுப் பிற நாடுகளில் விற்கப்பட்டும் நம் தமிழகம் பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ளது.

### கணிப்பொறித் துறை

கணிப்பொறி பற்றி இருவிதக் கருத்து வேறுபாடுகள் நிலவி சர்ச்சைக்கு உரியதாகிவிட்டது. **1)** கணிப்பொறி மிக விரைவில், கொடுக்கப்பட்ட பணியை முடித்து விடுகின்றது. இது அழகாகவும் துரிதமாகவும் செயல்படுகின்றது. பல மனிதர்கள் செய்யும் வேலையை ஒரு கணிப்பொறி செய்து முடித்து விடுகின்றது என்று பெருமையாகக் கூறிக்கொள்ளப்படுவது. **2)** கணிப்பொறி மனித சக்தியற்ற நாடுகளுக்கு மட்டுமே தேவையான ஒன்று. இந்தியா, சீனா போன்ற மக்கள் தொகை நிறைந்த நாடுகளுக்குத் தேவையற்றது. இது நம் நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கச் செய்யும் கருவி. மேலும் இதனை இயக்கவும் இதற்கான செயற்

# இடிதாங்கி



புண்ணுக்கு இடிதாங்கி போட்ட கட்டு!
பூவையர்க்கும் இடிதாங்கி போட்ட கட்டாம்!
மண்ணுக்கு இடிதாங்கி மரங்கள்! காதல்
மஞ்சத்தில் இடிதாங்கி மலர்கள் ஆகும்!
கண்ணுக்கு இடிதாங்கி இமைகள்! வாழ்வில
கவலைகளின் இடிதாங்கி கவிதை! இந்தப்
பண்ணுக்குள் உவமைஇடி இடித்தால் அந்தப்
பாட்டியின் இடிதாங்கி கேட்போர் நெஞ்சம்!

காதலர்தம் இடிதாங்கி மெரினா என்னும்
கடற்கரையில் இருக்கின்ற விளக்குக் கம்பம்!
வேதனையின் இடிதாங்கி விதிதான் என்னும்
வீணர்களின் கூற்றில்இடி விழக்கூடாதா?
மாதமிழன் பெருமையினைக் காக்க வந்த
மகத்தான இடிதாங்கி அண்ணா! சாதிப்
பேதமையின் வேரறுக்கப் பிறந்து வந்த
பெரியதொரு இடிதாங்கி பெரியார் ஆகும்!

கருத்தஇடி வீழ்ந்தமரம் கருகிச் சாகும்!
கடன்இடிகள் வீழ்ந்தால்நம் வாழ்வு மாயும்!
வருத்தமுகம் சிரித்தமுக மாவதற்கும்
வளமறிந்து வாழ்க்கையினை மாய்ப்ப தற்கும்
பொருத்தமிகும் இடிதாங்கி சேமிப் பாகும்!
பொருத்திடுவீர் அதைஉங்கள் வாழ்வில்! எண்சீர்
விருத்தத்தில் இதுவரையில் நான்இ டித்த
வேகஇடி தாங்கிகளை நெஞ்சில் வைப்பீர்!

**கவிஞர். எஸ். பி. என். இராமலிங்கம்**

---

குறிப்புகளையும், கட்டளை அட்டைகளையும் வழங்கவும் மனித சக்தியே தேவைப்படும். இதனால் வேலை திறம்படவும், துரிதமாகவும், அழகாகவும் நடக்கலாம். ஆனால் பல மனிதர்களின் வயிற்றிலடித்துப் பஞ்சத்தையும் பட்டினியையும் வளர்த்து வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்த்து மக்களிடையே புரட்சியை வளர்க்கும் சாதனமாகும். ஏழை பணக்காரர் போராட்டத்தை வளர்க்கும் கருவியாகும் என்பது ஒருசாரார் கருத்து.

எது எப்படியாயினும் கணிப்பொறி மூலம் பணி புரியத்தக்க கல்வியைக் கற்றுக் கொண்டபின்னர், மனித சக்தி குறைவாயுள்ள வெளிநாடுகளுக்குச் சென்று ஆலோசனை கூறவும், பணி புரியவும் தக்க வகை பயிற்சிபெற நம் தமிழக கைவினைப் பயிற்சியாளர் முன்வந்தால் தம் திறமையையும் வெளிநாடுகளுக்குக் காட்டி அதன் மூலம் பொருளீட்டவும் செய்யலாம்.

முயன்றால் முடியாதது இல்லை.

# குழந்தைப் பாடல்கள்

## பி.வி.கிரி

குழந்தை இலக்கியம் இன்றோ நேற்றோ தோன்றியதல்ல, அது நினைப்புக்கு எட்டாத நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றியது என்பதை அறியும் போது விந்தையாக இல்லையா?

"கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் தாம், முதன்முதலில் குழந்தைப் பாடல்கள் இயற்றி, அவற்றை நூல்வடிவாகக் கொண்டு வந்தவர்" (வளர்ந்துவரும் குழந்தை இலக்கியம் - பெ. தூரன் முன்னுரை) என்பதை நாம் அறிகிறோம்.

பெரியவர்களுக்காக எழுதிப் பேரும் புகழும் பெற்ற மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும், தி.ஜ.ர.வும்., மூதறிஞர் இராஜாஜியும் குழந்தைகளுக்காக நிறைய எழுதியிருக்கிறார்கள்.



"ஈழநாட்டில் க. சோமசுந்தரப் புலவர் போன்றோர் 40 ஆண்டுகளுக்கு முன்பே குழந்தைகள் விரும்பும் பல பாடல்களை இயற்றியுள்ளனர் என்பது 1935- ஆம் ஆண்டு வெளிவந்த `பிள்ளைப் பாட்டு' என்ற தொகுப்பு நூலிலிருந்து தெரிகிறது. கே.எஸ். அருணந்தி என்னும் கல்வித்துறை அலுவலர் பதிப்பித்த இந்நூலில் 12 கவிஞர்கள் பாடிய 74 பாடல்கள் உள்ளன. இலங்கையிலுள்ள மட்டக்களப்பிலிருந்து 1965-ஆம் ஆண்டு மற்றொரு தொகுப்பு நூல் வந்தது. திமிலை மகாலிங்கம் பதிப்பித்த `கனியமுது' என்னும் இத்தொகுதியில் 41 கவிஞர்களின் குழந்தைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. 1941- இல் புதுக்கோட்டையிலிருந்து ப.நீலகண்டனைப் பதிப்பாசிரியராய்க் கொண்டு மூன்று சிறுவர் பாடல் தொகுப்பு நூல்கள் வெளிவந்தன". (`வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' - குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, பக்:5,6)

அமரகவி பாரதியாரும் குழந்தைகளுக்காகப் பல பாடல்களைப் பாடினார். அவர் தம் `புதிய ஆத்திசூடி'யில்.

அச்சம் தவிர்  
ஆண்மை தவறேல்  
இளைத்தல் இகழ்ச்சி  
ஈகை திறன்

என்று எடுத்த எடுப்பிலேயே `வயிரமுடைய நெஞ்சு வேணும்' என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

`ஓடி விளையாடு பாப்பா—நீ  
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா'

என்று பாரதியார் பாடிய `பாப்பா பாட்டு' தன் அருமை மகள் சகுந்தலா பாரதிக்காகவே பாடியது. இந்தப் பாட்டில் வரும்,

`சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'

என்று கூறி, பிஞ்சு மனத்திலேயே சமதர்மச் சமுதாயத்தை மலர வைக்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசன், குழந்தைகளுக்காகவே `இளைஞர் இலக்கியத்தைப் படைத்திருக்கிறார். அதில் குழந்தைகள் அறிவு நலம் பெறப் பல பாடல்களை எழுதியுள்ளார். அவையெல்லாம் படித்துப் பயன்பெறத் தக்கவை.

`படி' என்னும் தலைப்பில் ஒரு கவிதை -

*எடுப்பு*

நூலைப் படி -
சங்கத் தமிழ் நூலைப் படி - முறைப்படி
நூலைப்படி

*உடனெடுப்பு*

காலையிற் படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி
நூலைப்படி

*அடிகள்*

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?
நூலைப் படி!

இப்படிப் பாடல் முழுவதும் படிப்பதன் அவசியத்தைப் பசுமரத்தாணிபோலப் பதிய வைக்கிறார் பாவேந்தர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பிரபலமான பாட்டு ஒன்று உண்டு. அதுதான்,

`தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி'

என்பது. இந்தப் மழலைப் பாட்டு எல்லாக் குழந்தைகளுக்குமே மனப்பாடம்:

குழந்தைகள் தாமே படித்து மகிழும் வண்ணம் பாடல்களை இயற்றி, அவற்றைப் பாடநூல்களில் முதல் முதலாகச் சேர்த்த பெருமை கா. நமச்சிவாயம் முதலியார் அவர்களையே சாரும்.

`சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப் போல நானுமே
உழைத்திடவே வேணுமே'

இந்தப் பாடலைக் குழந்தைப் பருவத்தில் படித்தது, இன்றைக்கும் நம் நினைவுக்கு வருமே!

இதே போல மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களும், அகர வரிசையில் ஒரு அழகிய பாட்டைப் பாடியுள்ளார்.

`அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு'

இந்தப் பாட்டும் மழலையர் மனத்தைவிட்டு நீங்காத சிரஞ்சீவிப் பாட்டு.

குழந்தைகளிடத்தில் குழந்தையாக இருந்து பழகியவர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள். அவர் பாடிய,

`அம்மா அப்பா வாரும்
பலகை புத்தகம் தாரும்
பள்ளிக்கூடம் போவேன்
பெரிய மனிதன் ஆவேன்'
காசும் பணமும் பெறுவேன்
கையில் வாரித் தருவேன்!.

என்கிற பாட்டை இன்றும் குழந்தைகள் பாடக் கேட்கலாம்.

மணி. திருநாவுக்கரசர் எழுதிய,

பூவே உன்னைப் படைத்தவர் ஆர்?
புதுமணம் உள்ளே நுழைத்தவர் ஆர்?
பலபல நிறங்கள் பண்ணவர் ஆர்?
பார்க்க அழகு தந்தவர் ஆர்?
உன்னைச் செய்தோன் வல்லவனே!
உலகுக்கெல்லாம் நல்லவனே!

என்னும் பாடலில், அந்த நல்லவன்தான் இறைவன் என்பதைச் சொல்லாமல் சொல்லிப் புரியவைக்கிறார்.

மழையில் நனையும் ஆட்டுக்குட்டியைப் பார்க்கிறார் கவிஞர் பெ.தூரன். அதை ஒரு குழந்தை வாயிலாக வெளிப்படுத்துகிறார் -

ஐப்பசி மாதம் வந்தது
அடை மழையும் பேயுது
ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
வீட்டுக் குள்ளே ஓடிவா!

இருபதாம் நூற்றாண்டில் நம்மோடு வாழ்ந்த ஒருவர் குழந்தைகளுக்காகவே தம் வாழநாள் முழுவதும் எழுதி வந்தவர், அதற்காகவே பாடுபட்டவர். அவர்தான் `குழந்தைக் கவிஞர்' என்று எல்லோராலும் போற்றப்படும் அழ. வள்ளியப்பா அவர்கள். குழந்தைகளுக்கான கதை, கட்டுரை, கவிதை, நாடகம் என்று பல துறைகளிலும் அவரது கைவண்ணம் மிளிர்ந்தது. குறிப்பாக, `குழந்தைப் பாடலுக்கு அழ. வள்ளியப்பா' என்று போற்றிப் புகழும் அளவுக்கு அவர் எண்ணற்ற பாடல்களை எழுதிக் குவித்தார். மலரும் உள்ளம், சிரிக்கும் பூக்கள், பாட்டிலே காந்தி முதலான நூல்கள் குழந்தை இலக்கிய உலகில் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய படைப்புகளாகும்.

குழந்தைப் பத்திரிகை என்கிறபோது, அது எப்படி இருக்க வேண்டும் என்பதை எட்டே வரிகளில் அழகாகக் குறிப்பிடுகிறார் அழ. வள்ளியப்பா.

`சிறுவருக் கான பத்திரி கைகள்
நிறைய வேண்டும்
சித்திரம் எல்லாப் பக்கங்களிலும்
திகழ வேண்டும்
அருமையான கதையும் பாட்டும்
இருக்க வேண்டும்
அறிவைப் புகட்டும் கட்டுரை பலவும்
அமைய வேண்டும்.'

பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரை என்பது போல, குழந்தைக் கவிஞர் பரம்பரையும் இன்று வளர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த வரிசையிலே முதலாவதாக வைத்தெண்ணப்படுபவர் புலவர் தணிகை உலகநாதன் அவர்கள்.

பாட்டானாலும், கதையானாலும் நல்ல கருத்துக்களோடு, நகைச்சுவையும் கலந்து வழங்குவதில் இவருக்கு இணை இவரே. இவருக்கு ஒரு கவிதை பிறக்கக் காரணமாக இருந்தது, எலித்தொல்லையே.

`எங்கள் வீட்டு எலிகள் - அவை
எவர்க்கும் அஞ்சாப் புலிகள்'

என்று அவற்றை அடையாளம் காட்டுகிறார் நகைச்சுவையுடன் கவிஞர்.

கவிஞர் பூவண்ணன் அவர்களின் `பாட்டுத் தோட்டத்தில்' மலர்ந்த ஒரு பாடல்:

`எத்தனை பட்டைகள் வயிரத்தில்
எனினும் வயிரம் ஒருபொருளே!
எத்தனை சாதிகள் இந்நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே!

என்று இந்திய ஒருமைப்பாட்டை, வைரப்பட்டைகள் மூலம் உணர்த்துகிறார்.

கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கன்,

`ஆடிக்கொண்டே இருப்பதென்ன
ஆலமரத்தின் கீழே!உன்னைத்
தேடிக் கொண்டே

இருக்கும் கல்வி!
தேம்பிக் கொண்டே இருக்கும்!'

என்று விளையாட்டுப் பிள்ளையாய் இருந்தால், கல்வியை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கிறார்.

கவிஞர் தே.ப. பெருமாள் எழுதிய `மறவாதே'என்னும் பாடலில் வரும்,

`கல்வியை என்றும் மறவாதே
கற்றதைச் செய்ய மறவாதே
நல்லவர் சொல்லை மறவாதே
நாட்டுப் பணியை மறவாதே'

என்னும் அடிகள் நம்மை நல்வழிப் படுத்தத் தூண்டுகின்றன.

மலேசியக் கவிஞர் முரசு நெடுமாறன், குழந்தையின் இயல்பைக் காட்டுகிறார்-

`கடைக்கு வாராய் என்றாலே
கையை வீசி வரும் பாப்பா!
என்ன வேண்டும் என்றாலே
இனிப்பைக் காட்டிச் சிரித்திடுமே!
இனிப்பை வாங்கித் தந்தவுடன்
இன்னொரு பொருளைக் காட்டிடுமே!
வாங்கித் தரவே மறுத்தாலே
வம்பு செய்தே அழுதிடுமே!

`நிலாச் சோறு' என்னும் நூலில், இக்கட்டுரையாசிரியர் பி.வி.கிரி,

ஒரே நாடு
ஒரே மக்கள்
ஒன்று கூடுங்கள்!
ஒரே வானம்
ஒரே நிலவு
எண்ணிப் பாருங்கள்!

என்று கூறி நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறார்.

கோடிவகை மக்களுண்டு
கொள்கை ஒன்றுதான்!
ஓடிவரும் இன்பமெல்லாம்
ஒருமைப் பாட்டில்தான்!

என்று அந்தநூலின் முடிவில் முழங்கி, இவர் நம்மை ஒரு முடிவுக்கே வரவைக்கிறார்.

# நாட்டுப்புறப்பாடல்கள்



எ.கு. திருவேங்கடம்

நாட்டுப்புறம் என்பது கிராமத்தையும், அதைச் சார்ந்த இடங்களையும் குறிப்பிடும் ஒரு சொல்லாகும். கிராமங்களில் கோழி கூவக்கேட்டு, மேழியைத் தோளில் தாங்கி வயல் நோக்கிச் செல்லும் விவசாயி, மனித இனத்தின் மானம்காக்க ஆடைதரும் நெசவாளி, 'நெற்றி வியர்வை நிலத்தில் ஆறாகப் பாய்ச்சும் அனைத்து உழைக்கும் இனத்தவர் தங்கள் தளர்வைப் போக்கிட வளருணர்வுடன் வாயில் உதிர்க்கும் வண்ண வாடா மலர்களே நாட்டுப் புறப்பாடல்களாய்ப் பரிணமிக்கின்றன. இவைகளே நாட்டுப் புறப் பாடல்கள் எனக் குறிப்பிடப் படுகின்றன. இப்பாடல்கள் எளியவை, இனியவை, எழுதப்படாதவை. வாயிலே பிறந்து காற்றிலே மிதந்து, செவிகளில் தவழ்ந்து கருத்திலே கலப்பவை. களிக்க வைப்பவை.

கிராமப்புறத்து ஆண்களும் பெண்களும் தங்களை மறந்த நிலையில் இயற்கையோடு இயைந்து ஒலிக்கின்ற பாடல்களில் அவர்தம் எண்ணங்கள், ஏக்கங்கள், கனவுகள், விருப்பு வெறுப்புக்கள் ஆகியவை வெளிப்பட்டு அவர்தம் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் காலக் கண்ணாடி களாய்க் காட்டுகின்றன.



### நாட்டுப்புறப் பாடல்களின் தோற்றம்:-

மனிதன் தோன்றிக் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த காலத்தில் தன் உணர்ச்சிகளை ஓசை வழியில் வெளிப்படுத்தினான். அந்த ஓசையே இசையுடன் வருவதை விரும்பினான். இப்படி இசை இன்பத்தை மனிதன் நுகரத் தொடங்கிய நாளிலிருந்தே நாட்டுப்புறப் பாடல் தோன்ற ஆரம்பித்துவிட்டது என்று குறிப்பிடலாம். நாகரிகம் அறியாத கிராம மக்களே அதன் ஆசிரியர்கள்! ஏட்டு இலக்கியம் தோன்றுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே. வரையறுக்கப்படாத காலந் தொட்டே இப்பாடல் இலக்கியங்கள், தோன்றி வளர்ந்துள்ளன. உயர்ந்த கருத்துக்களையும் தத்துவங்களையும் எளிய சந்தத்தில் கிராமிய மொழியில் பாடலாகப் பாடுவது இதன் தனிச்சிறப்பு. இவை காற்றிலே மிதந்த கவிதை. வாய்வழி இலக்கியம், ஏட்டில் எழுதாக் கவிதைகள், பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள், கண்ணிர்ப் பூக்கள், காட்டு மல்லி, இப்படிப் பல தலைப்புக்களில் தொகுக்கப் பட்டு வருகின்றன.

### நாட்டுப்புறப் பாடல்களின் தொன்மை:-

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து வழங்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி' எனத் தொடங்கும் தொல்காப்பியப்பாயிரத்தின்

'வழங்கும்' 'செய்யுளும்' ஆய்ந்து இலக்கணம் செய்யப் பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதில் வழக்கு என்பது வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கும் எனவும். பொருளோடு புணர்ந்த நகைமொழி, பொருளோடு புணராப் பொய் மொழி, பிசி, பண்ணத்தி எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவன இந்த நாட்டுப்புறப் பாடல்களையே என்று குறிப்பிடுவர். பண்ணத்தி இன்று வழங்கும் நாட்டுப் புறப்பாடல்களையும் பிசி என்பது இன்று வழங்கும் விடுகதையையும் குறிக்கும் என்பாரும் உண்டு. ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்குமுற்பட்டது எனக் கருதப்படும் தொல்காப்பியம் வாய்மொழி இலக் கியத்தை வரையறை செய்யும் தன்மையை நோக்கும் போது, தொல்காப்பியர் காலத்துக்கு முந்தியே நெடுங்காலமாக இப்பாடல் இலக்கியங்கள் இருந்து வந்துள்ளன என்பதை நம்மால் உணர முடிகின்றது.

மனித இன வளர்ச்சியில் வாழ்க்கையூடே தனது துன்பத்தைப் போக்கிக் கொள்ளவும், உடல் வாதை யைக் குறைத்துக் கொள்ளவும், இன்பக் கிளர்ச்சியிலும் துன்ப நிலையிலும் தங்களுக்குத் தெரிந்த இசையில் எழுப்பிய நாத ஒலியே பாடலாக வெளிப்பட்டது. அந்தப் பாடல்கள் தங்களுக்குத் துன்பம் போக்கும் மருந்தாகவும், பிறரைக் கவர்ந்து ஈர்க்கும் அழகு மொழியாகவும் வெளிப்பட்டன. கலைநலனும், இசைவ ளமும் பெற்று இவர்கள் ஊர்விட்டு ஊர், நாடு விட்டு நாடு நடந்து சென்று தாங்களும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வூட்டி இவற்றைச் செவிவழி வளர்த்ததால் இவை நாடோடிப் பாடல்கள் எனவும் வழங்கப்பட்டன. அப் பாடல்கள் ஏட்டில் எழுதா இலக்கியமாக வாய்வழி கேட்டுக் கேட்டு வழிவழியாகப் பாடி வந்தமையால் கால வெள்ளத்தில் ஆதிவடிவம் சிதைந்து நாடோடிப் பாடல்களாக மாறியிருக்கலாம் எனப் பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் தம் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப்புறப் பாடல் பற்றிய ஆராய்ச்சி நம் நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் தொடங்கப்பட் டது. ஆனால் மேலை நாடுகளிலோ கடந்த இருநூற் றாண்டுகளாகவே இது பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகின்றது. நாட்டுப் புறப்பாடல்கள் "(ஆறீறவ்)!" பாலட்ஸ் என அவர்களால் அழைக்கப்படுகின்றன. மேலை நாட்டு ஆய்வாளர்கள் சிலர் இந்த நாட்டுப் புறப் பாடல் கருத்தினை ஆய்ந்து கண்ட முடிவு நமக் குத் தெளிவையே அளிக்கின்றது.

"உயிர் பெற்று வளரும் சமுதாயமாகிய கற்பா றையிலிருந்து புறப்படும் ஜீவ ஊற்றே கவிதை" என் கிறார் எம்.பி.கம்மோ என்னும் மேநாட்டு அறிஞர்.

"ஒரு நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சம் நாட்டுப் பாடல்களே. மட்டிலா மகிழ்ச்சியை அளிக்கும் இவை கிராம மக்களின் அன் றாட உள்ளுணர்வுகளின் பிரதிபலிப்பே" என்பார் பேராசிரியர் சாம்பமூர்த்தி.

இதன்படி நாடெங்கும் ஏன், உலகெங்கும் நாட் டுப்புற மக்களின் அடிமனத்து உணர்வுகளிலிருந்து வெளிவரும் பாடல்கள் இயற்கையுடன் கலந்து தொட் டில் முதல் சுடுகாடுவரை வாழ்க்கைக் கட்டங்கள் ஒவ் வொன்றிலும் ஊடுருவித் திகழ்ந்து அவர்தம் நம்பிக்கை, தெய்வவழிபாட்டுமுறை, நடைமுறை பழக் கவழக்கங்கள் ஆகியவற்றை வெளிப்படையாக உணர்த்துகின்றன.

"உலகம் முழுவதிலும் நாட்டுப் பாடல்களின் இடையே விளக்கிக் கூற முடியாத ஒரு ஒற்றுமை நிலவுகின்றது. அவற்றில் மொழிகள் வேறு வேறாக இருப்பினும், அவை எடுத்துக் கொள்ளும் பொருளில், சொல்லும் பாணியில், கருத்தில் கூட ஒற்றுமை காணப்படுகிறது" என்பார் டபிள்யூ.பி.ஹெர் என்னும் அறிஞர்.

"ஒரு நாட்டின் உண்மையான பண்பாட்டினை அதன் அகத்தேதான் காணமுடியும். நகரங்களில் அல்ல, உட்பகுதியின் சூழல்கள், இயற்கை நியதிகள், பாட்டுப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் மனித னின் உண்மை வாழ்க்கை நெறியை அறியலாம்." பேரா சிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் ஆறு.அழகப்பன் அவர்களின் திறனாய்வு நூலுக்கு அளித்த முகவுரையில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"ஆகவே நாட்டுப்புறப் பாடல்கள் கருமேகம் சூழ்ந்துவர, தென்றல்வீசிவர, வண்டினங்கள் பாடிவர, வண்ணத்தோகை விரிந்து மயிலினங்கள் ஆடும் ஆட் டத்தப் போல இயற்கையான எழில் நிறைந்தது; அதனை வான் கோழியின் ஆட்டமெனக் கருத்தில் கொண்டு தள்ளுவது கூடாது" என்பார் புலவர் இரா.சுரேந்திரன் அவர்கள்.

**இலக்கியங்களில் நாட்டுப் பாடல்கள்:-**

"கம்பர் ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப் பாட் டில்லை" என ஏற்றப் பாட்டினை வியந்து கூறுகின் றார், மாணிக்க வாசகர். நாட்டுப்புறப் பாடலைத் தழுவி ஊசல் சுண்ணாம்சாழல், அம்மானை போன்ற தலைப்புகளில் இறையைப் பாடிப் பரவசம் கொள் கின்றார்.

**நாட்டுப்பாடல்களின்வளர்ச்சியும்எழுச்சியும்.**

மேலை நாடுகளில் நாட்டுப்புறப் பாடல்களின் ஆய்வு இருநூறு ஆண்டுகளுக்குமுன்பே தொடங்கப்

பட்டது. ஆனால் தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களும் அறிஞர் குழாமும் இந்த நூற்றாண்டில்தான் ஆய்வு வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளன.

**காற்றில் மிதந்த கவிதை** என்ற தலைப்பில் 1943 இல்மு.அருணாசலம் அவர்களால் வெளியிடப்பட்ட முதல் கவிதைத் தொகுப்பே நாட்டுப்புறப் பாடலின் முதல் தொகுப்பு நூலாகும். இவர் நூலுக்குப் பிறகு மு.வை. அரவிந்தன், திரு.ர.அய்யாசாமி, அன்னகாமு, ஆறு. அழகப்பன், வெ.மு.இராமலிங்கம், இராசாராம், தமிழண்ணல், கி.வ.ஜகந்நாதன், நா.வானமாமலை போன்ற தமிழக அறிஞர்களும் சார்லசு, இ.கோவா, பெர்சிமாகவிண் போன்ற வெளிநாட்டு அறிஞர்களும் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றி தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் டாக்டர் பூவண்ணன் அவர்கள் `குழந்தை இலக்கிய வரலாறு' என்னும் நூலையும், பெங்களூர் தூய வளனார் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சு.சண்முக சுந்தரம் அவர்கள் `நாட்டுப்புற இலக்கிய வரலாறு' என்னும் அருமையான தொகுப்பு நூலையும் வழங்கித் தமிழ்த் தாய்க்கு அணி செய்துள்ளனர்.

நாட்டுப்புறப் பாடல் வன்மையும் தொன்மையும் கொண்டு பல்லோர் உள்ளத்தையும் கவர்ந்துள்ளதால் பல்கலைக் கழகங்களில் நாட்டுப்புற இயல், ஆராய்ச்சிக்குரிய பாடங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதை விருப்பப் பாடமாக ஏற்று முதுகலைப்பட்டங்கள் பலர் பெற்றுப் பயனடைந்து வரும் நிலை இன்று இருந்து வருகின்றது. 1974 மே 19 ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நாட்டுப்புற அறிஞர்களைக் கொண்ட கருத்தரங்கு முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. மதுரைப் பல்கலைக்கழகம் திரு.நா. வானமாமலையின் ஏழு நாட்டுப்புறக் கதைப் பாடல்களை வெளியிட்டது. கர்நாடகப் பல்கலைக்கழகம் 1974 பிப்ரவரியில் பல கண் காட்சிகளையும் கருத்தரங்கையும் நடத்தி ஆறு கட்டுரைகளை வெளியிட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நாட்டுப்புற இயல் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது.

**காவியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள்:-**

சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவவரி, ஆராய்ச்சியர் குரவை, குன்றக் குரவை எனப்பல இடங்களில் நாட்டுப் புறப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடியார்கள் பலர் நாட்டுப்புறப் பாடல்களை ஒட்டிய பாடல்கள் புனைந்துள்ளனர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, பாரதியார், பாரதி தாசன் ஆகிய பிற்காலக்கவிஞர்களும் நாட்டுப் பாடல்களில் நெஞ்சம் பறிகொடுத்து அதன் வழித் தம் இலக்கியப் பாடல்களை எளிய முறையில் அமைத்தனர். பரணி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், பள்ளு, குறவஞ்சி ஆகிய சிற்றிலக்கியங்கள் நாட்டுப்புற பாடல் வகையைச் சார்ந்தவையே என்பது பலரின் கருத்தாகும்.

**நாட்டுப்புறப் பாடல்களும் இன்றைய நிலையும்.**

திரைப்படக் கவிஞர்களான கவியரசு கண்ணதாசன், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், வாலி, வைரமுத்து போன்றோர் திரைப்படங்கள் வாயிலாக நாட்டுப்புறப் பாடல்களுக்கு உயிரூட்டியுள்ளனர். அத்தகைய பாடல்கள் கிராமப்புற மக்கள் மட்டுமன்றி அனைத்து மக்களாலும் விரும்பிப் பாராட்டப்படுகின்றன. அண்மைக் காலமாக நாட்டுப்புறச் சூழலில் உருவாக்கப்படும் திரைப்படங்கள் மக்களின் பேராதரவினைப் பெற்று வெற்றி நடைபோட்டு வருவதை நாளும் நோக்கிகுன்றோம். இன்று புகழ் உச்சியில் உலவும் திரைப்பட இயக்குநர் பாரதிராஜா, இசையமைப்பாளர் இளையராஜா போன்றோர் நாட்டுப்புறப் பாடல்களை நாட்டுப்புறச் சூழலில் முறையே இயக்கியும் இசையமைத்தும் வெற்றிக்கொடி நாட்டி வருகின்றனர். வானொலி, தொலைக்காட்சி ஆகியவையும் தங்கள் பங்கிற்கு வாரம் ஒரு நாள் ஒளி பரப்பையும் ஊக்கமளித்தும் வருகின்றன. நீரில் பூத்த நெருப்பாகத் திகழ்ந்து வரும் நாட்டுப்புறப் பாடல்களைக்கால வெள்ளத்தில் அழியாது காத்துக் காலமெல்லாம் போற்றி வளர்க்க வேண்டியது ஒவ்வொரு தமிழரின் தலையாய கடமையாகும். நாட்டுப்புறப் பாடல்களைப் பேணிக் காப்போம். தமிழன்னைக்கு நாம் நலம் பல சேர்ப்போம்.



# தமிழ்ப் பெண்களின் கலைகள்



வண்ணக் கலைகள் வாழும் தமிழகம்
வளர்ப்போம் மிளிர் கலையை தமிழ்
வளர்த்திடும் ஒளிர் நிலையை!
வண்டமிழ் வனிதையர் போற்றிடும் கலைகளை
வனப்புடன் மிகக் காப்போம் —அதை
வரலாற்றில் சேர்ப்போம்!

மஞ்சள் முகத்தில் குங்குமப் பொட்டு
மரபாய் இடுகின்றார் —உலகில்
மற்றவர் விடுகின்றார்!

அஞ்சும் விழியில் கருநிற மையால்
அழகுற எழுதிடுவார்—இதை
அடுத்தவர் தொழுதிடுவார்!

கார்குழல் கூந்தல் ஓரணி ஆக்கிக்
கரத்தால் பின்னிடுவார்—அந்தத்
திறத்தால் மின்னிடுவார்!

மார்பகம் மறைக்கும் சேலையை அணிந்து
மாப்புகழ் பெற்றவராம்—வியக்கும்
மாக்கலை கற்றவராம்!

வாயிற் புறத்தே புள்ளிகள் கோலம்
ஓவியம் போலாகும்—இது
காவிய நூலாகும்!

சாயும் கூந்தல் மணம்பெற வேண்டிச்
சரமாய் மலர்வைப்பார்—அவர்
சரித்திரப் புகழ் நிற்பார்!

உடைகள் எல்லாம் மானப் படைகள்
உலகில் தமிழ்ப் பெண்கள்— போற்றும்
உயரிய இசைப் பண்கள்!

நடையில் நடனம்; இடையில் நளினம்
நன்னெறி நங்கைகளே—இவர்
நற்றமிழ் மங்கைகளே!

எல்லாம் கலைகள் தையலர் நிலைகள்
நமக்கெனக்கிடைத்திட்டார்—தமிழ்க்கு
நலம்பல படைத்திட்டார்!

வெல்லச் சொற்கள், வேல்விழிப் பார்வை
வீரத்திருமகளாம்—இதய
ஈரக் கலைமகளாம்!

அழகுடைத் தேராய் தமிழ்ப் பெண்கள்
அவனியில் வாழ்கின்றார்—நாளும்
அரும்புகழ் சேர்க்கின்றார்!

பழகிடப் பண்பும், பாசமும், அன்பும்
பாரினில் இவர் பெற்றார்—எல்லாம்
பாங்குற இவர் கற்றார்!

தமிழன் கலையில் யார்க்கும் தாழான்
தகுதியில் முதல்வனவன்—தமிழ்த்
தாயின் புதல்வனவன்!

தமிழனை ஈன்ற அவனது தாயும்
தரணியில் கலைத்தாயே —அவள்
திறத்திற்(கு) இலை ஈடே!



வண்ணப்பூங்கா வாசன்

# சங்ககாலத் தமிழகத்தில் தொழிலும் வணிகமும்

## டாக்டர் மெ.சுந்தரம்

தமிழகம் இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் பெற்றது; நெடிய கடற்கரையைப் பெற்றது. மலைபடு பொருள்களும், கடல்படு பொருள்களும், காடுபடு பொருள்களும் தேவைக்கு மிகுதியாகக் கிடைத்தன. வானம் பொய்ப்பினும் தான் பொய்யாது காவிரி போன்ற ஆறுகள் தமிழக நிலத்தை வேலியாயிரம் விளைவதாகச் செய்தன.

இதனால் பழங்காலத்திலேயே தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் எல்லாம் எளிதிற்பெற்றுச் சிறந்த வாழ்க்கையுடையவராய் விளங்கினர்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் அரசியல், சமுதாயக் கருத்துக்கள் செம்மையாக வாழவிழையும் எந்தச் சமுதாயத்திற்கும் தேவையானவை. அரசியல் சமுதாய வாழ்வில் தமிழர் பெற்ற அனுபவத்தின் விளைவே அவை. தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார்கள்; இயற்கை அவர்களது சிந்தனையைப் பெரிதும் உருவாக்கியது என்னலாம். காலப்போக்கில் பல நாட்டவர்களோடு பழக நேர்ந்தபொழுது வாழ்க்கையைப் பரந்த முறையில், பொது நோக்கில் காண முடிந்தது. தங்கள் வாழ்க்கையை அவ்வழியில் செலுத்தவும் இயன்றது.



மிகப் பழங்காலத்திலேயே தமிழகம் நாகரிகத்தில் சிறந்து விளங்கிய எகிப்து, சுமேரியா, பாபிலோனியா, பாலஸ்தீனம், அரேபியா, கிரீசு முதலிய நாடுகளுடனும் உரோமப் பேரரசுடனும் வணிகத்துறையில் தொடர்பு பெற்றிருந்ததென்பதைப் பிறநாட்டவர் எழுதிவைத்துள்ள குறிப்புக்களினின்றும் அறிகிறோம். பண்டை நாகரிக நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தமையால்தான் மிகச்சிறந்த நாகரிகத்தைத் தோற்றுவிக்க முடிந்தது. பிற நாட்டுப் பொருள்களுடன் பிற நாட்டினர் கருத்துக்களையும் கலைகளையும் அறியும் வாய்ப்பைத் தமிழர்கள் பெற்றிருந்தனர்.

அரசியல் துறையில் உரோமப்பேரரசு போன்ற ஒரு பெரும் பேரரசைத் தோற்றுவிக்கும் நிலையில் பழந்தமிழகம் இல்லை எனினும், வணிகத் துறையிலும் சமுதாயத் துறையிலும், பண்டை நாகரிக நாடுகள் எதனினும் அது இளைத்ததாக இருந்திலது.

தமிழர்களின் சிறந்த வாணிக வாழ்விற்குப் பெரிதும் துணையாய் அமைந்தது தமிழகத்தின் இயற்கையமைப்பேயாகும்.

தென்கடல் முத்து தமிழர் வாணிகத்தை உரோமநாடு வரை கொண்டு சென்றது. மேற்குமலைத் தொடரில் விளைந்த மிளகும், தேக்கும் பிறநாட்ட

வரைத் தமிழகத்திற்கு இழுத்து வந்தன. தமிழர் வணிகத்திற்கு இயற்கை புரிந்த புன்னகை பெரிதெனினும், அவர்களது முயற்சியும், அறிவாற்றலும், வினைசெயல் வகையும் கைவினைத்திறனும் அடிப்படைக் காரணங்களாகும்.

`உள்ளது சிதைப்போர் உளர்எனப்படார்'
`வினையே ஆடவர்க்கு உயிரே

போன்ற அடிகளால் பொருளீட்டுவதை வாழ்க்கையில் அடிப்படையான ஒன்றாகக் கொண்டிருந்தனர். தமிழர்களிடையே ஊடுருவி நின்ற இவ்வெண்ணமே அவர்கள் சிறந்த வாணிக மக்களாகவும், பெருநகரங்களையும் சிறந்த அமைப்புகளையும் தோற்றுவித்த சீரிய நாகரிகமுடையவர்களாகவும் ஆக்கியதென்னலாம். அரசன் முதல் சாதாரண ஆட்கள் வரையில் உழைப்பு மிக்கவர்களாகவும் ஊழையும் உப்பக்கமும் காணும் ஊக்கம் மிக்கவர்களாகவும் இருந்தனர். அதனாலேதான் காடுமலைகள் நிறைந்த நாட்டினர் உள் பகுதியில் சென்றும் திரைகடலோடியும் பெரும் பொருள் ஈட்ட முடிந்தது. மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துப் பொருள்களும் தமிழகத்தில் நிரம்பி வழிந்தன.

பண்டைத் தமிழகத்தில் தொழிலையும் செய்பொருள்களையும் குறிப்பிடுகையில், தற்காலத்தில் அமைந்துள்ள தொழில் நிலையிலும் செய்பொருள் அமைப்பாலும் அவற்றைக் கொள்ளுதல் அமையாது. தற்காலத்தைப் போன்று விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் வளராத அக்காலத்தில் உலகம் முழுவதும் செய்பொருள்கள் கைகளால் எளிய கருவிகளைக் கொண்டு ஆக்கப்பட்டன; பொருள்உற்பத்தியும் தற்காலத்துடன் ஒப்பிடுகையில் மிகச்சிறு அளவனதாகும்.

அக்கால நிலையில், தமிழ்நாட்டுச் செய்பொருள்கள் சிறந்திருந்தனவாக இருந்தன. தமிழ் நாட்டுத் தொழில்நிலை சிறந்திருந்தது. ஏனை நாட்டுச் செய்பொருட்களில் தமிழ்நாட்டுப் பொருள்கள் சிறந்து விளங்கின; உலகச் சந்தைகளில் அவைவிரும்பி வாங்கப்பட்டன. தமிழரின் கைத்திறன் ஏனை நாட்டவரால் பாராட்டப்பட்டது என்பது பொருளாகும். தமிழ் நாட்டின் விளைபொருள்களும் ஏனைய இடங்களில் கிடைக்காதனவாகவும் பெரும்சிறப்பு வாய்ந்தனவாகவும் இருந்தன.

முதலில் பண்டைத் தமிழகத்தில் முதன்மையாக மேற்கொள்ளப்பட்ட தொழில்களை நோக்குவோம்.

சங்ககாலத்தில் தமிழகத்தில் பொருளாதார அமைப்புப் பெருமளவு பயிர்த் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. காவிரி போன்ற பேராறுகள் பாயும் பகுதிகள் வளமிக்கனவாக அமைந்திருந்தன; பெரும் விளைச்சலைத் தந்தன. திருச்சி தஞ்சை மாவட்டங்கள் இன்று போலவே அன்றும் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கின. ஆற்றுவளமின்றிய மேட்டு நிலங்களில் மழையை நம்பியே பயிரிட வேண்டியிருந்தன. மழைபெய்யும் பொழுது தாழ்வான பகுதிகளில் கரையமைத்து நீரைத் தேக்கி நெடிதுநாள் நிற்கச் செய்து அதன் துணையால் சில பகுதிகள் பயிரிடப்பட்டன. அரசனது வெற்றியே இந்நீர் நிலைகளைப் பொறுத்தாகும் என ஒரு புலவர் குறிப்பது இங்கு நோக்கத் தக்கதாகும். இலங்கையிலிருந்து உணவுப்பொருள்கள் இறக்குமதியாயின என அறியப்படுதலின் அப்பொழுதும் உணவுப் பொருள் தட்டுப்பாடு இருந்ததோவென ஐயுறக் கிடக்கிறது.

மலைப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு உணவுப் பொருள்களை ஆக்குவதுதான் முதன்மையான தொழிலாகும். ஆனால் அங்கு உழுதுதான் விளைக்க வேண்டுமென்ற நிலையிருக்கவில்லை; உழாமலே உணவுப் பொருளைப் பெறும் நிலையும் இருந்தது. பொதுவாக மலைப்பகுதிகளில் வாழ்ந்தோர் மூங்கில், நெல், தினை, வரகு முதலிய உணவுப் பொருள்களை மிகுதியாக விளைத்துப் பயன்படுத்தினர் எனவும், சமநிலைப் பகுதியில் நெல் முதன்மையான உணவுப்பொருளாகப் பயன்பட்டதெனவும் அறியக் கிடப்பதாகும். சமநிலங்களில் மீன், உப்பு, பால், தயிர், நெய் முதலிய பலபொருள்களுக்கு ஈடாக நெல்லே அளிக்கப்பட்டது. பல்வேறு கலப்பொருள்கள்நகரத்துச் சந்தைகளில் விற்கப்பட்டதெனக் குறிக்கப்படுதலின் அவை மிகுதியால் விளைந்த பகுதிகளின்றும் கொண்டுவரப்பட்டுத் தேவைப்பட்ட பகுதிகட்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கக்கூடும்.

அடுத்து, தமிழகத்தில் மீன்பிடித்தல், உப்புவிளைத்தல், கள் உற்பத்தி, முத்து எடுத்தல், நூற்றல், நெய்தல் முதலிய தொழில்கள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தனவாகும்.

மீன்பிடித்தல் பெருமளவு கடற்கரை ஓரங்களில் நடை பெற்றதாகும். ஆழமான கடற்பரப்பிற்குச் சென்று பெரும் வலை கொண்டு மீன்பிடிக்கப்பட்டது.

நடு இரவில் திமில் எனப்படும் படகில் விளக்குடன் மீன்பிடித்தற்குச் செல்வார்கள். காலையில் தாங்கள் பிடித்த மீனுடன் கரையை அடைவர். சுறாமீனும் பெருமளவில் பிடிக்கப்பட்டன. சுறாமீனைப் பிடிக்க முற்படுகையில் வலை அறுபடுவதுடன் ஆட்களுக்குப் பெரும் காயம் ஏற்படுவதும் உண்டு. மிகுதியான மீன்கள் துண்டுதுண்டாக வெட்டிக் கருவாடாக ஆக்கப்பட்டு, உள்நாட்டில் விற்கப்பட்டதுடன் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மீனினின்றுஎண்ணெய் இறக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்

டது. மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட பரத வர் மீனை விற்றுத் தமக்கு வேண்டிய நெல் முதலிய பொருள்களைப் பெற்றனர்.

உப்பு விளைவித்தலும் கடற்கரையில் நிகழ்ந்த தொழிலேயாகும். தமிழ் நாட்டிற்கு வேண்டிய உப்பு கடற்கழிகளிலேயே கடல் நீரைக் கொண்டு ஆக்கப் பெற்றனவாகும். இவ்வயல்களில் அமைந்த உப்பு வெண்மையானதாகும். குவியல் குவியல்களாகக் குவிக் கப்பெற்றுக் கிடந்தனவாகும். இவ்வுப்பினைத் தலைச் சுமையாக அருகிலுள்ள பகுதிகளில் பரதவர்கள் விற்று அதற்கீடாக நெல்லைப் பெற்றனர். உப்பு ஓடங்களிலேற்றி எடுத்துச் சென்றும் விற்கப்பட்டது.

கடற்கரையினின்று உப்பை வாங்கி உள்நாட்டில் சென்று விற்றவர்கள் உமணர்கள் எனப்பட்டவராவர். அவர்கள் தாங்கள்பெற்ற உப்பிற்கீடாக நெல்லைக் கொடுத்தனர் எனவும், பெருங் குழுவாகச் சேர்ந்து வண்டிகளில் ஏற்றிக் கொண்டு சென்று உள்நாட்டில் விற்றனர் என்றும் நற்றிணை 183 ஆம் பாடலால் அறி யக்கிடக்கின்றது. உப்பைப் பற்றியும் உமணரைப்பற் றியும் சங்க இலக்கியத்தில் காணப்படுதலில் உப்பு வாணிகத்தின் சிறப்பை நாம் ஒருவாறு உய்த்துணர லாம்.

அடுத்து கள் உற்பத்தி சிறப்பான தொழிலாக விளங்கியது. நாட்கள் தொப்பவிளைந்த தீங்கந்தாரம், நள்விழி கொண்ட வெங்கள் தேறல், வெற்புடைய மட்டு நீடமை விளைந்த தேக்கண் தேறல், தேட்கடுப் பன்ன நாட்படு தேறல் எனப்பலபடியாகப் பேசப்படு தலில் பலவகை கள் இருந்ததென அறியலாம். மூங் கில் குழாய்களில் தேன் இட்டுப் புதைத்துக் கள்ளாக ஆக்கப் பெற்றது. அன்றியும் வீடுகளில் பெருமளவில் கள் காய்ச்சப் பெற்றது. கள் பெருங்கடைகளில் வைத்து விற்கப்பட்டது. கள்கடை பெருநகரங்களிலும் ஏனை ஊர்களிலும் பொதுவாகக் காணப்பட்ட ஒன் றாகும். கள்ளிற்கு ஈடாகத் தந்தம், ஆனிரை முதலிய விலையுயர்ந்த பொருள்களும் அளிக்கப்பட்டன. அர சன் அளித்த விருந்துகளில் கள் முதன்மையான பொரு ளாக அமைந்திருந்ததெனச் சங்க இலக்கியத்தில் பெரி தும் பேசப்படுதலின் மக்கள் வாழ்க்கையில் அது பெற் றிருந்த முதன்மையான நிலையை அறிதல் கூடும்.

முத்துக் குளிப்பும் கடலினின்றும் எடுக்கப்பட்ட முத்துக்களை விற்பனைக் கேற்றவாறு செம்மை செய் தலும் பாண்டி நாட்டுக் கடற்கரையில் நடைபெற்ற னவாகும். அதிலும் குறிப்பாகக் கொற்கைத் துறையில் முத்துக் குளிப்பு மிகுதியாயிருந்ததாகும்.

முத்துக்கள் கடலினின்றும் எடுக்கப்பட்டபின் அவற்றை அழகு பெறக் கைவல்ல கம்மியர் செம்மை செய்தனர். உள்நாட்டுச் சந்தைகட்கும் வெளிநாட்டுச் சந்தைகட்கும் அனுப்பப்பட்டன. `முழங்குகடற் தந்த விளங்கு கதிர் முத்தம்....விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர் நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார் புணர்ந்து' என்று மதுரைக் காஞ்சி கூறுவதனால் முத்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாயிற்று என்று தெரிகிறது. முத்தெடுத்தல், முத்து வெளிநாடுகட்கு ஏற் றுமதியாதல் ஆகியவை பற்றி வெளிநாட்டினர் குறிப் புகளினின்றும் பல விவரங்கள் அறியப்படுகின்றன.

நூற்றலும் நெய்தலும் பண்டைத் தமிழகத்தில் நடைபெற்ற சிறப்பான தொழில்களாகும். தமிழகத்து நுண்ணிய வேலைப்பாடமைந்த ஆடைகள் மேலை நாடுகளிலும், வட இந்தியாவிலும் சீழைநாடுகளிலும் விரும்பி வாங்கப்பட்டன. `பாம்பு உரியன்ன வடிவின காம்பின்இழைபடு சொலியின் இழையணிவாரா ஒண் பூங்கலிங்கம்' `நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்க ளிந்துஅரவுரியன்ன அறுவை' `நேர்கரை நுண்ணூல் கலிங்கம்' என்பனவற்றால் தமிழகத்தில் நெய்யப்பட்ட ஆடைகளின் நுண்மையையும் அறியலாம். `பூவிரி கச்சை' என்பதனால் பூவேலை அமைய ஆடைகள் ஆக் கப்பட்டன என்பதும் `நீலக்கச்சை' புனைந்த நீலக்கச் சினர்' என்பதனால் ஆடைகள் கண்ணைக் கவரும் பலநிறம் தோய்க்கப் பெற்றன என்பதும் `கொட்டைக் கரைய பட்டுடை நல்கி' என்பதனால் பெருங்கரைக ளைமைந்த பாட்டாடைகள் நெய்யப் பெற்றன என் பதும் அறியப்படுவனமாகும்.



# ஒரு மமதையின் மரணம்

சலசலென்று பாய்ந்துசெல்லும் நதியின்ஓரம் கரையிலே
பொலபொலென்று காய்ந்துபோன பட்டமரம் நின்றது

நதியில் ஆடி நீந்தியோடி நனைந்துவந்த மங்கையாள்
புதிய ஆடை மாற்றுதற்கு மரத்தின்பக்கம் போயினாள்-

ஆடைமாற்றும் நேரந்தன்னில் அந்தமங்கை மேனியோ
வாடிநின்ற மரத்தைநோக்கி வார்த்தையாட லுற்றது:

"தோல்உரிந்து கிழடுதட்டித் தோற்றம்கெட்ட ஏமரம்!
வேல் எறிந்து வெல்லும்வீரர் மயங்கும்என்றன் நேர்த்திபார்-

என்ன இளமை என்ன இளமை! மின்னல்வீசும் பொன்னுடல்!
கன்னிமங்கை வண்ணநங்கை என்பர் என்னை; சொத்தை நீ! "

"காலம்ஒன்று நேரும்அந்தக் காலம்உன்னைப் பார்க்கிறேன்
சேலைகட்டிக் கொள்க" என்று சொன்னதந்தக் கிழமரம்.

கிழமரத்தின் வார்த்தைக்கொப்பக் காலம்ஒன்று நேர்ந்தது-
பழம்கனிந்த கன்னிமங்கை பாவம்செத்துப் போயினாள்!

செத்தஅந்தப் பெண்ணை ஆம்! சின்னமங்கை மேனியைச்
சொத்தையான பட்டமரத்தின் கட்டைவந் தெரித்ததே!



ஓவியக் கவிஞர்
அமுதபாரதி

# தமிழர் மேலாண்மை அறிவியல் தத்துவங்கள்

டாக்டர் டி.எஸ். இராஜதேவன்

உலகத்தில் மேலாண்மை அறிவியல் தத்துவங்கள் *(Management principles)* பல வகையானவை. ஒன்று மேலைநாட்டுத் தத்துவங்கள். மற்றொன்று கீழைநாட்டுத் தத்துவங்கள். முன்னது இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளின் சித்தாந்தம். பின்னது ஜப்பான் போன்ற கிழக்கு நாடுகளின் தத்துவம்.

தமிழர் மேலாண்மைத் தத்துவமோ தனித்து நிற்பது; மேற்சொன்ன இரண்டிற்கும் பாலமாக, பக்கபலமாக – அதே சமயம் தனித்தன்மை தனைக்கொண்டு – நிற்பது!

நிதி, மக்கள் செல்வம், காலம், பொருள் என்ற `கலவை' யை எந்த விகிதத்தில் கலப்பது, எந்த அடிப்படையில் பொருளாதார மேம்பாட்டை எட்டிப்பிடிப்பது, அதே சமயம் எவ்வளவு சிறப்பாகச் சமுதாயத்திற்குப் பலனுள்ளதாக அதை அமைப்பது என்பதுதான் மேற்கு நாடுகளின் மேலாண்மைச் சிந்தனைகள்! அதை ஓர் *macro approach* – `பேரளவு முறை' எனலாம்! வானளாவிய அளவிலே அணுகுவது அவர்கள் முறை!



ஜப்பான் போன்ற நாடுகளோ அதனை ஓர் *'Micro approach'* – `அணுவிலிருந்து அண்டம் வரை' என்ற முறையிலே அணுகும்!

இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில் மேலாண்மைத் தத்துவங்கள் ஒரு வித்தியாசமான கோணத்திலிருந்து அணுகப்படுகின்றன. *"Managers are made"* மேலாண்மை செய்வோர் பயிற்சியால் பண்படுத்தப்படுகிறார்கள் என்ற நிலைதான் இங்குள்ளது. *'Guru sishya approach'* – `ஆசான் மாணவன்' என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இந்திய மண்ணுக்கே உரிய ஒரு சிறந்த மேலாண்மைத் தத்துவமாகும்!

*'Catch them young'* – `இளமையில் கல்' என்ற தத்துவம்தான் இதன் அடிப்படை. `இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்விடல்' என்பானே வள்ளுவன், அதன் அடிப்படையில் `இவன்' இதற்குப் பொருத்தம், `இன்னொருவர்' இதற்குப் பொருத்தம் என்று இனங்கண்டு கொண்டு ஒவ்வொருவனையும் ஒவ்வொரு மேலாண்மை நிலைக்குத் *(Placement)* தயார் செய்து, பயிற்சி அளிப்பது! எப்படி நெல் நாற்றுக்களை ஒரு சிறிய இடத்தில் விட்டுப் பின்னர்*(Transplant)* எடுத்துப் பெரிய இடத்தில் தூரதூர நடுகிறோமோ, அதுபோல `மேலாளர்

கனவு' உருவாக்குவது என்பது ஒரு சிறந்த முறை!

இந்த முறையினைப் பயன்படுத்தி `நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்' போன்ற மிகப் பெரிய நிலையங்கள் பெரிதும் பயன் துய்த்துள்ளன!

`முயற்சி திருவினையாக்கும்' என்ற முனைப்பான கூறுதான் இதன் அடிப்படைத் தத்துவம். முயற்சி ஒருவனுக்கு செல்வத்தைப் பெருகச் செய்யும். தனிமனிதர் முயற்சி செய்து முன்னேறினால் அவர் மட்டுமின்றி அவர் குடும்பமே முன்னேறுகிறது. இப்படி ஒவ்வொரு குடும்பமும் முன்னேறினால் சமுதாயம் முன்னேறுகிறது. அதன்மூலம் நாடே முன்னேறுகிறது!

ஏனெனில் "வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்" ஆகும்! ஒரு தொழிலில் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் திட்பமே – உறுதியே – ஆகும்!

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் என்ற ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் வெற்றி நிச்சயம்!

ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொளல் வேண்டும். இஃது ஒரு யானையால் மற்றொரு யானையினைப் பிடித்தலைப் போன்றது என்பான் நுண்மான் நுழைபுலத்து வள்ளுவப் பெருந்தகை!

பொருளீட்டல் (*Profitability*) மேலாண்மைத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கை! ஏனெனில் "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்" – அதாவது ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வதாகிய பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் வேறு இல்லை!

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

இதன் கருத்து என்னவென்றால் முயற்சி, நிறைந்த அறிவு எனப்படும் இரண்டையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவருடைய குடி உயர்ந்து விளங்கும்!

"அறிவற்றங் காக்கும் கருவி" என்பான் வள்ளுவன். ஆம்! அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் ஒரு (*Instrument*) கருவியாகும்! அறிவுடையார் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லவர்; அறிந்து அதற்கேற்பத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுவர்!

ஏனெனில் `அறிவுடையார் எல்லாம் உடையார்'. அவர் தவம் செய்து தொழில் செய்பவர்! தவம் என்றால் காவி உடை தரித்துக் கமண்டலம் ஏந்திக் கானகம் போக வேண்டியதில்லை! '*Dedication to duty*'`கடமையில் கண்ணுங்கருத்துமாக இருப்பதே `தவம்' ஆகும்! மேலாளர் எல்லாம் ஒருவகையில் தவசிகளே!

`என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற திருமூலரின் தத்துவம்தான் இந்திய மண்ணின் தலையாய மேலாண்மைக் கருத்தாகும். இதனையே வள்ளுவரும் வலியுறுத்துகிறார்!

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" என்பார் வள்ளுவர்! தவவலிமையால் கடமை ஆற்றுவதில் கைதேர்ந்தவராக ஆகிவிட்டால் கூற்றமே – யமனே – எதிரில் வந்தாலும் அவனை வெல்லும் சக்தியினைப் பெற்றுவிடுகிறாராம் அக்கடமை வீரர்!

`உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' – எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும்! இதுதான் சமுதாய மேன்மைக்கு(*Social Justice*) மேடை அமைத்துத் தரும்!

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு"

இஃது எந்தத் துறைக்கும் பொருந்தும். மேலாண்மைத்துறை உட்பட!

பண்பும் பெருமையும் நன்மக்களின் இருகண்கள். மேல்நிலையில் இருந்தாலும் மேன்மைப்பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர்! கீழ்நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர் கீழ்மக்கள் அல்லர்! இந்த அடிப்படைத் தத்துவம் மேலாண்மையின் ஒரு முக்கிய கூறாகும்!

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

உழவு என்னும் பொருள் பற்றிப் பேசும் வள்ளுவப் பெருந்தகை அவ்வுழவு எல்லாத் துறைக்கும் பொருந்தும் அளவில் பொதுவாகப் பேசுகிறார் என்று கொள்ளலே சாலச் சிறந்ததாகும்!

ஏனெனில் என்னிடம் `இது' இல்லையே `அது' இல்லையே என்று `வாளா' இருத்தலாகாது. சோம்பல் கூடாது. சுறுசுறுப்பு தேவை! ஆக்கம் தேவை! ஊக்கம் தேவை!

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

உலகம் பலதொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது: அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

இந்திய நாடு ஒரு விவசாய நாடு. அதன் அடிப்படையில் எழுந்தது இஃது இன்று பல்துறையில் இந்திய நாடு முன்னேறி வருகின்றது. மேலாண்மைத்துறை (*Management Studies*) உட்பட!

நல்ல பண்பாடு பெற்ற நம்நாடு – இந்திய நாடு. தமிழ் நாடு தனக்கே உரிய மேலாண்மைத் தத்துவங்களைக் கண்டெடுத்து, ஆராய்ந்து, செயல்படுத்தி வருவது உலகுக்கே ஒளியூட்டக்கூடிய ஒன்றாகும்!

பல தடைகள் இருப்பினும் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து முன்னேறும் இந்திய நாடு – தமிழ் நாடு – ஓர் உன்னத நாடே!

## பாவாணரின் பயன்மொழிகள்

### தமிழே உலக முதன்மொழி

- தமிழ் குமரி நாட்டில் தோன்றியமை
- பழந்தமிழ், திராவிட மொழிகளுக்குத் தாயாயிருத்தல்
- ஆரியமொழிகளாகக் கருதப்படும் வடநாட்டு மொழிகளின் அடிப்படை தமிழாயிருத்தல்
- மேலையாரிய மொழிகளிலும் அடிப்படைச் சொற்கள்பல தமிழாயிருத்தல்
- இருமுது குரவரைக் குறிக்கும் அம்மை அப்பன் என்னும் தமிழ்ச் சொற்கள் திரிந்தும் திரியாதும் பெரும்பாற் பெருமொழிகளில் வழங்குதல்
- எல்லா மொழிக்குடும்பங்களிலும் ஒன்றிரண்டேனும் தமிழ்ச் சொல்லாயிருத்தல்
- ஆரிய மொழிகளிலுள்ள சுட்டுச் சொற்களெல்லாம் தமிழ்ச்சுட்டெழுத்துக்களினின்றே தோன்றியிருத்தல்.
- தமிழிலக்கண அமைதிகள் பலமொழிகளிற் காணப்பெறுதல்
- பலமொழிகட்கு அல்லது மொழிக்குடும்பங்கட்குச் சிறப்பாகச் சொல்லப்பெறும் இலக்கண அமைதிகளின் மூலநிலை தமிழில் இருத்தல்.

மறைமலை மாணடிகள் மாபெயர் வாழி
நிறைமொழி முத்தமிழ் வாழி—இறைமொழியான்
என்றும் வடமொழியும் ஏமாற்றா தெந்நிலத்தும்
மன்னுக நுன்மொழி மற்று.

# ஏ! இளைஞா!



அடிவானம் கைக்குள்ளே வந்து தங்கும்
ஆழிகளை ஓர் அடியால் தாண்டக் கூடும்!
விடிவெள்ளி பூவாகிக் கொண்டை ஏறும்!
வெள்ளிநிலா பந்தாடக் கையில் சேரும்!
முடியுயர்ந்த இமயமலை மூச்சால் வீழும்!

முக்கோடி கோள்களெலாம் முன்னே நிற்கும்!
முடியாதா ஏ! இளைஞா! முயன்று பார்ப்பாய்!
முன்னேறும் முயற்சிக்கோ முட்டை இல்லை!

வியர்வைகளால் செந்நெல்கள் விளைவ தில்லை!
வீளைகளால் சங்கீதம் பிறப்ப தில்லை!
மயர்வுகளால் திறனாய்வு மலர்வ தில்லை!
மயிர்களினால் வீணைஒலி எழுவ தில்லை!
துயில்களினால் முன்னேற்றம் முளைப்ப தில்லை!
சோம்பலினால் வெற்றிமரம் துளிர்ப்ப தில்லை!
முயன்றால்தான் முடியுமென முயலுகின்ற
முற்போக்குக் கொள்கைக்கோ தடையே இல்லை!

சித்திரப்பூ செந்தேனைக் கொடுப்ப தில்லை!
சிலைபூனை புனுகுதனை நல்கல் இல்லை!
மத்தாப்பூ மகிழ்கனியைத் தருவ தில்லை!
மந்திரங்கள் மாப்பசியை மாய்ப்ப தில்லை!
புத்தகத்துப் பசு, பாலைச் சொரிவ தில்லை!
பொன்வண்டு தேனெடுத்துத் தருவ தில்லை!
பத்து விரல் கரமிருக்கப் பயமி லாமல்
பாடுபடும் உழைப்புக்கோ பழுதே இல்லை!

**புலவர். பா. முனியமுத்து**

**திரு.வி.கா.வின் தேன் மொழி**

இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச்செய்து, பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்று, ஒருதொழிலில் நுழைதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லா தொழிகிறது. இது கல்வியாகுமா?

# தமிழ் நாட்டில் கரும்பு

பேராசிரியர் ஏ.கே.கதிர்வேலு

இன்று இந்தியாவின் மக்கள் தொகை 80 கோடியை எட்டி வருகிறது. குடும்ப நலத்திட்டத்தைத் தீவிரப்படுத்தினாலும் கி.பி. 2000த்தில் மக்கள்தொகை 100 கோடியைத் தாண்டும். ஆண்டு ஒன்றுக்கு மக்கள் தொகை 2.5 சதம் கூடுவதாகக் கூறப்படுகிறது. ஒருவருக்கு இன்று சராசரி இனிப்புத் தேவை ஆண்டிற்கு 20 கிலோ அளவில் உள்ளது. அது கி.பி. 2000-ல் 25 கிலோவாக உயரும். அன்றைக்குத் தமிழ்நாட்டிற்கு மொத்தம் 250 இலட்சம் டன்கள் இனிப்பு (வெல்லம், சர்க்கரை) தேவைப்படும். மக்களுக்கு அடிப்படைத் தேவையான தானியம், பருப்பு, எண்ணெய்வித்து, காய்கனிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். தமிழகத்தின் இயற்கை வளங்களான நிலம், நீர், தட்பவெப்ப நிலைகளின் விரிவாக்கத்தில் வாய்ப்பில்லை.



ஆனால் புதிய கரும்பு வகைகளை, உழவியல் நுட்பங்களைப் பயிர்த்தேவையின் அடிப்படையில் *(Need based economic)* உரம், நீர், பயிர்ப்பாதுகாப்புகளைச் செயலாக்குவது, எளிதில் ஏற்கத்தக்க சிக்கன உழவியல் கருவிகளைப் பயன்படுத்துவது, வறட்சியிலிருந்து பயிரைப் பாதுகாக்கப் புதிய உத்திகளைக் கையாளுவது ஆகியவற்றின் மூலமாக ஏக்கரின் உற்பத்தித்திறனைப் பன்மடங்காக்க வழிகள் பிரகாசமாக உள்ளன.

இன்று இந்தியாவில் கிடைக்கும் சராசரி கரும்பு மகசூல் எக்டருக்கு 60 டன்களாகும். சூரிய ஒளி அதிகமாகக் கிடைக்கும் பகுதிகளான தென் இந்தியாவில் மகசூல் அதிகமாக உள்ளதற்குக் கரும்பு வளர்ச்சி பருவத்தில் சூரிய ஒளி மிகுதியாக இருப்பதுதான் காரணம் ஆகும்.

தமிழ்நாடு கரும்பு மகசூலில் எக்டருக்கு சராசரி 120 டன்கள் பெற்று முதல் நிலை வகிக்கிறது. நம்மிடமுள்ள மண், நீர், கால நிலை வசதிகளைக் கொண்டும் புதிய ரகம் மற்றும் புதிய சாகுபடி முறைகளைக் கொண்டும் இன்றுள்ள உற்பத்தியை விட நான்கு மடங்காகப் பெருக்கமுடியும். இனி இது எப்படி இயலும் என்பதைப் பார்ப்போம்.

**கரும்பு வகைகள்**

கோவை கருத்தேற்ற நிலையத்திலிருந்து *(Sugarcane Breeding Institute)* 1928 37 வரை வெளியிடப்பட்ட கரும்பு வகைகளில் கோ 419 ரகம் மட்டுமே தமிழ்நாட்டில் 1970 வரை அதிகப் பரப்பளவில் பயிரிடப்பட்டு வந்தது. அதன் பிறகு

கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஆய்ந்தறிந்து சாகுபடிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கோ 6304 (இந்த ரகம் 1970-ல் தமிழக அரசால் வெளியிடப்பட்டது) ரகத்தினால் கரும்பு சர்க்கரை மகசூலில் புதிய சகாப்தம் (*New Era*) தோன்றியது. 1970-ல் தமிழ்நாட்டில் சராசரி எக்டர் கரும்பு மகசூல் 77 டன்னாக இருந்தது. 1981-ல் 110 டன்னாக உயர்ந்தது. இந்த ரகம் கோ 6304 அதிக மகசூல் தரும் ஆற்றல் பெற்றிருந்ததால் அனைவரும் இந்த ரகத்தையே பயிரிட ஆர்வம் காட்டினார்கள்.

1975-ஆம் ஆண்டு கடலூரிலிருந்து தமிழக அரசால் சாகுபடிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு ரகம் கோ.க 67–1, 1967-ல் கோவை கரும்பு கருத்தேற்ற நிலையத்தில் விதை உருவாகி 7 ஆண்டுகள் பல நிலைகளில் ஆராய்ந்தறியப்பட்டுக் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டது. 1974-ஆம் ஆண்டு, அன்று ஆலைப்பகுதிகளில் அதிகமாகப் பயிரிடப்பட்ட கோ 658 ரகம் கட்டுப்படுத்த முடியாத செவ்வழுகல் நோய்க்கு (*Red rot disease*) பலியாகி, கரும்புச் சாகுபடி குறைந்து, ஆலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டபோதுதான், கோ.க 67–1 கரும்பு ரகம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த கோ.க 67–1 ரகத்தில் சர்க்கரை சத்து மண்டிக்கிடக்கிறது. பருவத்துக்குத் தக்கவாறு மற்ற ரகங்களைவிட 1 யூனிட் முதல் 3 யூனிட் வரை கூடுதல் சர்க்கரை மகசூல் தரவல்லது. குளிர் காலத்திலும் நன்கு வளரக்கூடியது. எல்லாப் பருவத்துக்கும் ஏற்றது. விரைவாக வளர்ந்து, குறுகிய காலத்தில் அறுவடைக்கு வந்துவிடும். இச்சிறப்புகள் வாய்ந்த இந்த ரகம் ஆலைப்பகுதிகளில் 70–99 சதவிகித பரப்பளவில் பயிரிடப்படுகிறது. நலிந்தஆலைகள் கூட இதன் அதிக சர்க்கரை கண்டு முதலால் நிமிர்ந்துள்ளன. இப்புதிய ரகத்தில் டன்னிற்கு 30–40 கிலோ கூடுதல் சர்க்கரை கிடைக்கிறது. எக்டருக்கு மகசூல் 150 டன்னிற்கு மேலாகக் கிடைக்கிறது. இப்போது தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் இந்த ரகம் விரைவாகப் பரவி வருகிறது. எனினும் 2000-ல் இதனை விடச் சிறந்த ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மேலும் கரும்பு உற்பத்தியில் சாதனை புரியலாம்.

### உரமும், உரமிடும் முறையும்

பயிருக்கு உரம் மிகவும் தேவை. பயிர் உணவுகளைக் கரும்பின் வேர், தண்டு வளர்ச்சிப் பருவத்தில் தேவையான அளவில் இடுவதனால் குறைந்த உரச் செலவில் கூடுதல் மகசூல் பெறலாம். மணிச்சத்தை வேர், பயிர் தூர்கட்டும் பருவத்தில் (நட்ட 30 நாட்களில்) இடவேண்டும். இரசாயன உரங்களுடன் வேப்பம்புண்ணாக்கு உயிர் உரங்களையும் பயிருக்கு இட்டு அதிகப் பலன் பெறலாம். தழைச்சத்தின் ஒரு பகுதியை நீரில் கரைத்து இலை மீது தெளிப்பதால் செலவு குறையும். மகசூல் கூடும். தொழுவ உரம், மக்கு உரம், ஆலை அழுக்கு ஆகியவைகளையும் தாராளமாக இட்டு மண்ணின் ஈரத்தைக் காக்கலாம்.

### நீர் பற்றாக்குறை காலங்களில் கரும்பைக் காப்பது எப்படி?

கோடைக் காலங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் கரும்பில் கிளைப்பு வளர்ச்சி குறைகிறது. கிளைத்து வரும் பயிர்கள் காய்ந்து சருகாகி விடுகிறது. எனவே, எப்போதும் வேர்ப்பகுதியில் ஈரமிருப்பது அவசியம். ஈரத்தைக் காப்பதற்குக் காய்ந்த கருப்பஞ்சோலைகளைக் கரும்பு வரிசைகட்கு இடையே பரப்பி ஈரம் காக்கும் சக்தியை அதிகரிக்கலாம். நீரின் தேவையும் குறையும். கரும்பிலிருந்து காய்ந்த சோலைகளை உரித்து எடுக்கும்போது அவற்றை ஒருகால் விட்டு ஒரு காலில் பரப்பியும் ஈரத்தைக் காக்கலாம். நட்ட கரும்பு முளைத்த பிறகு கரும்பில் ஒரு வரிசைவிட்டு ஒரு வரிசையில் மட்டும் கிடங்கு அமைத்துத் தண்ணீர் விடலாம். இரு வரிசைகட்கு இடைப்பட்ட பகுதியில் சோலைகளைப் பரப்புவதால் நீர் ஆவியாவதைத் தடுப்பதோடு அதிக மகசூலையும் பெற முடிகிறது. பொட்டாஷ் உரம் இட்டும் கரும்பு காய்வதைத் தடுக்கலாம்.

நடவின்போது இடைவெளியைக் குறைத்து நட்டால் அறுவடைக்கு வேண்டிய கரும்பின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். இதன் மூலம் கரும்பு மகசூலைக் கூட்டலாம். நடவு இடைவெளி 80 சி.எம். போதுமானது. இரசாயன கரும்பு முற்றும் கலவையைத் (*Cane ripeners*) தெளித்து, சர்க்கரை கண்டு முதலை உயர்த்தலாம். பாதகமான சூழ்நிலைகளிலும், அதிகமான மழை, புயலால் பாதிக்கப்படும் பகுதிகளிலும் இரசாயன கலவையைத் தெளிப்பதன் மூலம் சர்க்கரை கண்டு முதலை அதிகரிக்கலாம்.

கரும்பிலிருந்து கரும்பு ஆலைக்கழிவான கழிவுப் பாகு (*Molasses*) கிடைக்கிறது. இதலிருந்து சாராயம் (*Alcohol*) தயாரிக்கப்படுகிறது. இதிலிருந்து எரிபொருள் தயாரித்து, பிரேசில் நாட்டில் வாகனங்களை இயக்கப் பயன்படுத்துகிறார்கள். 2000–ல் தமிழ் நாட்டிலும் இது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம்.

### கரும்பைத் தாக்கும் முக்கிய நோய்கள்

கரிப்பூட்டை, புல்தண்டு நோய், கட்டைக் கரும்பைக் குட்டையாக்கும் நோய் ஆகியவையாகும். விதைக்கரும்பை வெப்பக்காற்றில் வைத்து அந்தக் கரும்பிலிருந்து நோய் அணுகாத விதைக்கரணைகளைத் தயாரித்து நட்டு நோய்களிலிருந்து கரும்பைக் காப்பாற்றலாம்.

### கட்டைக் கரும்பு

கட்டைக் கரும்பு குறைந்த விலையில் விரைவில் முதிர்ந்து பலன் கொடுக்கும். அதிகக் கரும்பு எண்ணிக்கையாலும், ஒரே சீராக முதிர்ச்சியடைவதாலும், நடவுக் கரும்பை விட கட்டைக் கரும்பில் கூடுதல் சர்க்கரை மகசூல் கிடைக்கிறது. சிறந்த ரகத்தைப் பயன்படுத்துதல், தரைமட்டத்தில் கரும்பை வெட்டுதல், ஒரே சீராகக் கரும்புக் கட்டைகளைச் சீவி விடுதல், கங்குகளைக் கழித்து விடுதல் *(Stubble Shaving)* பயிர்கள் முளைத்து வரும்போது நீரை அதிகமாகப் பாய்ச்சுதல், இயற்கை, செயற்கை உரங்களைக் கட்டை சீவிய உடனே இடுதல், இடை உழவு செய்தல், போதுமான நீர் பாய்ச்சுதல் ஆகிய முன்னேற்ற உழவியல் முறைகளைக் கையாளுவதன் மூலம் கட்டைக் கரும்பிலும் கணிசமான மகசூலைப் பெறலாம். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு, தேவை அடிப்படையில் மருந்து தெளித்து, பயிர்களைப் பூச்சி, நோய்களிலிருந்து காப்பாற்றி மகசூலைப் பெருக்கலாம். பல்வேறு செய்நேர்த்தி முறைகளுக்கு ஏற்ற உழவுக்கருவிகளைப் பயன்படுத்திச் சாகுபடி செலவுகளைக் குறைக்கலாம்.

விளைந்த கரும்பைத் தரைமட்டத்தில் அறுவடை செய்யவேண்டும். இதனால் அடிக்கரும்பிலிருந்து அதிக சர்க்கரை கிடைக்கும். வயலில் கரும்பின் சர்க்கரை சத்தைக் கணக்கிட்டு, அதிக சர்க்கரை உள்ளபோது அறுவடையை மேற்கொள்ள வேண்டும். கரும்பில் ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. கரும்பு உற்பத்தியிலும், சர்க்கரை உற்பத்தியிலும் மேலும் பல முன்னேற்றங்கள், கி.பி.2000-க்குள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

1950இல் தமிழ் நாட்டில் மூன்றே சர்க்கரை ஆலைகள்தாம் இருந்தன. ஆனால் தற்போது 30 சர்க்கரை ஆலைகள் உள்ளன. நம்மிடமுள்ள நிலம், நீர், வளம், காலநிலை, மனித சக்தி, தொழில் நுட்பங்கள் ஆகியவைகளே இந்தச் சிறப்பான வளர்ச்சிக்கு வித்திட்டன. விவசாய விஞ்ஞானிகள், விரிவாக்கச் செயல்வீரர்கள், உழவர் பெருமக்கள் யாவரும் சேர்ந்து உழைத்ததன் காரணமாக, கரும்பு, சர்க்கரை உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. இச்சாதனை கி.பி.2000த்தில் மேலும் உயரும் என்பதில் ஐயமில்லை.



# தொண்டு செய்வாய் தமிழா!

## அரங்கச்செல்வன்

(அலோர்ஸ்டார்)

தொண்டு செய்வாய் தமிழா! —தமிழ்த்
தொண்டு செய்வாய் தமிழா!
பண்டு நமது பண்பைப் — பரி
பாலித் திடுவாய் தமிழா!

இலகுங் கல்வி சீலம் — இவை
எய்தும் முறையில் உயர்வாய்
நிலவும் நமது கலைகள் — எதிலும்
நிகரி லாது ஒளிர்வாய்

நேர்மை யான வாழ்வில் — குறள்
நெறியை மிளிரச் செய்வாய்
மார்பு காட்டும் வீரம் — தன்
மானம் என்றுங் காப்பாய்

சாதிச் சண்டை வேண்டாம் — தமிழா!
சமயச் சழக்கு வேண்டாம்
பேதங் கொண்ட பான்மை — மனதில்
பெய்து கொள்ள வேண்டாம்

ஆன்ம நேய ஒருமை — ஆழ்ந்தே
அகத்தில் பதிய வேண்டும்
மேன்மை யான தமிழர் — வாழ்வு
மேலும் ஓங்க வேண்டும்



அமிழ்தின் இனிய தமிழில் — ஆன்றோர்
ஆக்கித் தந்த வைப்பாம்
தமிழன் கண்ட நெறிகள் — இந்தத்
தரணி மக்கள் காப்பாம்

பாங்கு கொண்டு நீயும் — இங்குப்
பண்டைத் தமிழை வளர்ப்பாய்
ஓங்கும் மலைய நாட்டில் — தமிழா!
ஒன்று பட்டு வாழ்வாய்

ஒன்றே குலமும் என்றும் — உலகில்
ஒருவன் தேவன் என்றும்
அன்றே உரைத்த ஆன்றோர் — சொல்லை
ஆத ரித்தல் நன்று!

மூன்று சங்கம் அமைத்து — நமது
மூன்று தமிழும் ஆய்ந்த
ஆன்ற மக்கள் வழியில் — தமிழை
அருமை யாக ஆய்க!

தமிழர் அனைவர் ஒன்றாய் — எங்கும்
தமிழர் திருநாள் கண்டு
தமிழின் இனிமை பர்டி தமிழன்
தன்மை போற்ற வாரீர்!

# சிறிய நோயும் பெரிய விளைவுகளும்

## டாக்டர் ஏ.எஸ்.எஸ். இராமன்

`அது ஒரு சிறிய நோய் தான். ஆனால் சரிவர சிகிச்சை தரப்படாதபோது அது உயிரையே மாய்க்க வல்லது. எப்படி ஒரு சின்ன ஓட்டை பெரிய கப்பலையே மூழ்கச் செய்யுமோ அதுபோல' என்கிறது ஒரு மருத்துவ நூல். அந்நோய்தான் `ரத்த சோகை.'

உண்ணும் உணவிலுள்ள சர்க்கரைப் பொருட்கள் சக்தியை உண்டாக்க உடலின் பல பாகங்களில் எரிய வேண்டியிருக்கிறது. அப்படி அது எரிய பிராண வாயு தேவை. சுவாசிக்கும் காற்றிலுள்ள ஆக்ஸிஜன் எனப்படும் அப்பிராண வாயு ரத்தத்தில் கரைந்து உடலின் பல பாகங்களையும் சென்றடைகிறது. ரத்தத்திலுள்ள ஹீமோ குளோபின் என்னும் நிறப் பொருளே ஆக்ஸிஜனை ஏற்றுக்கொண்டு உடலின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப் பயன்படுகிறது. ரத்தம் சிவப்பு நிறமாக இருப்பதற்குக் காரணமான இந்த `ஹீமோ குளோபின்' என்னும் நிறப்பொருளே ஆக்ஸிஜனை ஏற்றுக்கொண்டு, உடலின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப் பயன்படுகிறது. ரத்தம் சிவப்பு நிறமாக இருப்பதற்குக் காரணம் இந்த `உறீமோ குளோபின்தான். ஆகவே தான் ஹீமோகுளோபினை `நிறப்பொருள்' என்று குறிப்பிட்டோம்.



இந்த ஹீமோகுளோபின் ரத்தத்தில் குறைவதால் ஏற்படும் நோயே ரத்த சோகை. `அனிமியா' என்று ஆங்கிலத்திலும், `வெள்ளைக் காமாலை' என்று சாதாரண மக்கள் மத்தியிலும் இதற்குப் பெயர்.

ஹீமோகுளோபின் உடலில் உற்பத்தியாகிச் சரிவர இருப்பதற்குக் காரணமானஉணவுப் பொருட்கள் இரண்டு. ஒன்று புரதம் (புரோட்டீன்). இன்னொன்று இரும்புச் சத்து. `ஹீம்' எனப்படுவது இரும்புச் சத்து. நமது மக்கள் உண்ணும் உணவுப் பொருட்களில் இரும்புச் சத்து குறைந்து காணப்படுவதால், ரத்தசோகை மிகுந்து காணப்படுகின்றது. பெண்களுக்கு இந்நோய் இன்னும் அதிகமாக ஏற்படுகிறது. மாதா மாதம் ரத்த சேதாரம் (மாதவிடாயினால்) ஏற்படுவதாலும், குழந்தையைத் தாங்கி நிற்பதாலும், பிறகு அமுதூட்டுவதாலும் பெண்களுக்கு இரும்புச்சத்தும், புரதச்சத்தும் அதிகம் தேவைப்படுகிறது. சாதாரணமாக வயிற்றில் இருக்கும் அமிலங்களில் ஒன்றான ஹைடிரோ குளோரிக் அமிலம் குறைந்துபோவதாலும் ரத்த சோகை வருவதுண்டு.

ஆரோக்கியமாக உள்ளவர்களின் ரத்தத்தில் நூறு மில்லி லிட்டருக்கு 10 முதல் 14 கிராம் வரை ஹீமோ குளோபின் இருக்கும். அது 4

முதல் 8 கிராம் வரை குறையும்போது `ரத்த சோகை ஏற்படுகிறது. வேறொரு நோய் உடலில் இருக்கும்போது. இந்நோய் சுலபமாக ஏற்படும். (உதாரணமாக, புற்றுநோய், காசநோய் இருக்கும்போது)

சரிவரக் கவனிக்கப்படாமல் இது முற்றும்போது நோயாளி சோர்வாகவும், மூச்சிளைப்புடனும் காணப்படுவார். தலைசுற்றுவதும், பார்வைமங்குதலும், தலைவலி ஏற்படுவதும், தூக்கமின்மையும், தோல், நாக்கு வெளிறிப் போவதும், மார்பு படபடப்பதும் நாடித்துடிப்பு அதிகமாதலும் முக்கிய அறிகுறிகளாகும். மிகவும் முற்றிப்போன நிலையில் இருதயம் தளர்ந்து பெரிதாகக் குழந்தைகளுக்கு வரும் ரத்த சோகை கால் கைகளில் வீக்கம் ஏற்படும்.

தேவையான காலத்திற்கு மேல் குழந்தைக்கு வெறும் பால் மட்டும் அளிப்பதால் வருகின்ற ரத்த சோகையே அதிகம். தாய்ப்பாலிலும் சரி, ஆவின் பாலிலும் சரி இரும்புச்சத்து குழந்தைகளுக்குப் போதுமான அளவிற்குக் கிடைப்பதில்லை.

பிறப்பில் எடை குறைவாகப் பிறக்கின்ற குழந்தைகளும் ரத்த சோகையால் பீடிக்கப்படுகின்றனர். முழுமையாகப் பத்து மாத கர்ப்ப காலத்திற்குப் பிறக்கும் குழந்தையின் கல்லீரலிலும், மற்ற பாகங்களிலும் ஏறக்குறைய 300 மில்லி கிராம் இரும்புச் சத்து சேமிப்பாக உள்ளது. கெடுவிற்கு முன்னர் பிறக்கும் குழந்தையின் உடலில் இந்தச் சேமிப்பு அவ்வளவாக இல்லாமல் போகிறது. சாதாரணமாக, நல்ல நிலையில் பிறக்கும் குழந்தையின் ரத்தத்தில் 18 கிராம் சதவீதம் இருக்கும். ஹீமோகுளோபின் மூன்று மாதத்தில் 11 கிராம் சதவீதமாகக் குறைவது இயற்கையாக நடைபெறுதாகும். ஆனால், இதே மூன்று மாத காலத்தில் சிதிலம் அடையும் சிவப்பணுக்களில் உள்ள ஹீமோகுளோபின் இந்தக் குறைகளை ஈடு செய்கிறது. கெடுவிற்கு முன் பிறந்த குழந்தைகளில் இந்த `ஈடு செய்யும் நிகழ்ச்சி' நிகழ்வதில்லை.

## ரத்த ஒழுக்கும், ரத்த சோகையும்

ரத்த சோகை உடலில் ஏற்படும் ரத்த ஒழுக்கினாலும், ரத்த இழப்பினாலும் ஏற்படலாம். ஒரு விபத்தில் இரண்டு அல்லது மூன்று லிட்டர் ரத்தத்தை இழக்கின்ற நபர், உடனே அவ்விழப்பு ஈடுசெய்யப்படாதபோது இறப்பது சகஜம். காற்றில்லாத சைக்கிள் டயர் எப்படி அமுங்கிப் போகிறதோ, அதுபோல!

ரத்த அளவு தேவையான அளவு இல்லாததால் ரத்தக் குழாய்கள் அமுங்கிப் போய் அதிர்ச்சி (ஷாக்)ஏற்பட்டு மரணம் ஏற்படுகிறது. நிதானமாக மெல்ல, மெல்ல ரத்த இழப்பு ஏற்படும் நிலைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, `மூலம்' உள்ளவர்கள், வயிற்றில் புண் (அல்சர்) உள்ளவர்கள். அதிகமாக மாதவிடாயின்போதும் இதே நிலைதான். ஒவ்வொரு மாதமும் ரத்தத்தில் ஹீமோகுளோபின் குன்றிக்கொண்டே வரும். இச்சிறிய இழப்புக்களைச் சிகிச்சை மூலம் சரி செய்தால் பெரிய விளைவுகள் தடுக்கப்படும்.

## சிகிச்சை

சிகிச்சை என்று வரும்போது, சரிவிகித உணவே முக்கியம். சரிவிகித உணவுடன் மருந்தாக இரும்புச் சத்து மாத்திரைகளை அளிப்பதும் நலம். ஃபெர்ரஸ் சல்பேட் எனப்படும் மாத்திரை உயர்ந்த வகையாகும். இது மிகவும் விலை குறைந்திருப்பதும் நோயாளிகளுக்கு ஒரு சாதகமாகும். முறையாக சிகிச்சை தரப்படும்பொழுது ரத்த சோகை நான்கு முதல் எட்டு வாரங்களில் குணமாகும். அச்சிகிச்சை காலத்தில் சிறந்த உணவும் அளிக்கப்படவேண்டும். சில விலையுயர்ந்த வகை மாத்திரைகளில் (வர்த்தக ரீதியாக) வித்தியாசப்படுத்தி, விளம்பரப் படுத்துவதற்காக சேர்க்கப்பெறும் மங்கனீஸ், கோபால்ட் போன்ற கனிமங்கள் அப்படியொன்றும் பயன் தரத்தக்கவையல்ல.

உடலில் வேறொரு நோயுள்ள போது அதைக் கண்டுபிடித்துக் குணப்படுத்துவதும் முக்கியமான ஒன்றாகும். ரத்தத்தில் 5 கிராம் சதவீதத்திற்கும் குறைவாக ஹீமோகுளோபின் உள்ளவர்கள் படுக்கையில் சேர்ந்து சிகிச்சை பெறுவது சால நன்றாகும். சில பேருக்கு (அரிதாக) இந்த இரும்புச் சத்து மாத்திரை வயிற்றில் தங்குவதில்லை. குமட்டி, வாந்தியில் வந்துவிடும். அப்படிப்பட்டவர்களுக்கு ஊசி மூலம் இரும்புச் சத்தை அளிக்கலாம். `இம்ஃபெரான்' என்ற வர்த்தகப் பெயரில் பிரபலமாகியிருக்கும் `ஐயர்ன் டெக்ஸ்ட்ரான்' மிகச் சிறந்த வகையாகும்.

## தவறான கருத்துக்கள்

`வெள்ளைக் காமாலை' என்று ரத்த சோகையைச் சொன்னால் போதும், சிலர் இலைகளையும், தழைகளையும் தின்று கொண்டிருப்பார்கள். மஞ்சள் காமாலை என்ற நோய்க்கும், வெள்ளைக் காமாலை என்னும் ரத்த சோகைக்கும் வித்தியாசம் தெரியாமல் அவர்கள் அவ்விதம் தங்களைத் தாமே கெடுத்துக் கொள்கிறார்கள். மஞ்சள் காமாலை எனப்படும்

`ஜாண்டீஸ்' வைரஸ் என்னும் நுண்ணுயிரால் ஏற்படுகின்ற வியாதி என்பதாலும், அதற்குச் சரியான மருந்து ஆங்கில வைத்தியத்தில் இல்லை என்பதாலும், கீழாநெல்லியும் மஞ்சள் கரிசலாங்கண்ணியும், பயன்படுத்தப்பட்டு வருவது என்னவோ உண்மைதான். ஆனால் அவை ரத்த சோகையைக் குணமாக்கும் என்று தவறுதலாக எடுத்துக்கொள்வது மிகத் தவறாகும். கைகளில் சூடுபோட்டுக் கொள்கிற பழக்கம்கூட கிராமப்புறங்களில் உண்டு. ஏற்கனவே தளர்ந்துபோயுள்ள உடலில், அச்சூட்டுக் காயம் கிருமிகளைப் பெருக்குமே தவிர, ரத்தசோகையைப் போக்காது.

மிக, மிக எளிதில் குணமாகும் இந்த ரத்த சோகையினால் ஆயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக மகப்பேற்றின்போது பெண்கள் மரணமடைகிறார்கள் என்பது புள்ளி விவரங்கள் கூறும் உண்மை. காரணமென்ன? அறியாமை! அறியாமை! கவனமின்மை!

மிகச் சிறிய ஓட்டைகள் அடைக்கப்படாமல் இன்னும் எத்தனை கலங்கள் மூழ்குமோ? விழித்தெழுந்து அக் கலங்களைக் காப்பது அனைவருடைய சமூகக் கடமையல்லவா?



## மறைமலை அடிகளின் மதிமொழிகள்

- தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களைக் குறைக்க வேண்டுமென்றும், அயல் மொழிகளிலுள்ள ஒலி களைத் தமிழிற் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அப்போதுதான் தமிழ் வளர்ச்சியடையுமென்றும் கூறுவர் சிலர். நல்லது; தமிழ்ச் சொற்களிலுந் தமிழ் ஒலியினாலுந் தெரிவிக்கக் கூடாதவை இருப்பி னன்றோ அயல் மொழிச் சொற்களையும் ஒலிகளையுஞ் சேர்த்தல் வேண்டும்?
- "குறளிற் காணப்படுஞ் சொற்களெல்லாம் தனித்தமிழ்ச் சொற்களே. அந்நூலெழுந்த காலம் தனித்தமி ழன்னை அம்பலக் கூத்தனோடு தாண்டவமாடிய காலம்; உருக்கி வார்த்த பசும் பொற் பாவைபோல் அவ்வன்னை இன்பக் கூத்தாடிய காலம். மாசு நிறைந்து, திருவழிந்து ஆரியமும் ஆங்கிலமும் ஆகிய அம்மைத் தழும்புகளுடன் தோன்றும் இக்காலத் தமிழன்னையை யொத்து அக்கால அன்னையைக் காணல் முடியாது. எழுதியவெல்லாம் தூயதமிழில் எழுதப்பட்ட அக்காலத்தில் எழுந்ததாகும் குறள் என்னும் ஒப்பிலாத தூய தமிழ் மறை."
- சைவ அவைகளும் தமிழ்க் கழகங்களும் வைத்து நடத்துவோர், தம்முடைய கழகக் கொண்டாட்டங்க ளுக்குச் சைவமும் தமிழும் நன்குணர்ந்த அறிஞர்களையே வருவித்து அவற்றை நடத்துதல் வேண்டும். வெறும்பட்டங்கள் வாங்கினவர்க்ளையும் ஆங்கிலம் மட்டும் உணர்ந்தாரையும் வருவித்து ஆரவாரம் செய்தல் பயன்படாது. தமிழ் அறிஞர்களை வருவிப்போர் அவர்கட்குத் தக்கபடி பொருளுதவி செய்தல் வேண்டும்.
- தமிழ் கற்றவர்கட்கு எல்லாவகையிலும் பொருளுதவிசெய்து அவர்களைச் சிறக்க வைத்தால்தான் இந் நாடு முன்னேற்றம் அடையும். இவர்களைச் சிறக்க வையாமல், வேறு துறைகளில் எவ்வளவு செலவு செய்தாலும் இந்நாடு முன்னேற்றம் அடையாது. இதனை எல்லாருங் கருத்தில் பதித்தல் வேண்டும்.
- தமிழ்நாட்டிலுள்ள தமிழ்மக்கள் தமக்கே உரிய பண்டைப் பேராசிரியரின் அருளுரைகளின் வழி நில்லாது பிற்காலத்தில் இடையே புகுந்த புராணக் கதைகளின் வயப்பட்டுப் பல்வகைச் சாதிப் பிரிவுகளும், பல்வகைச் சமயப் பிரிவுகளும், பல்வேறு வழக்கவொழுக்கங்களும் உடையராய் ஒருவரோடொருவர் பெரிதும் மாறு கொண்டு அன்பு அருள் ஒழுக்கங்களை முற்றும் மறந்து கல்வியும் ஆராய்ச்சியுறிவுமில் லாதவர்களாய் மிகச்சீர் குலைந்து நிற்பாராயினர்.

# இயற்கைச் சட்டம்



மலையினின்றும் பிறந்தோடிச் சலச லத்து
வருகின்ற அருவியினைத் தடுத்து, "நீ ஏன்
நிலையிழந்து தரைநோக்கி ஓடு கின்றாய்?
நில்" என்றால் நின்றிடுமோ? எண்ணிப் பாரீர்!
அலைக்கரத்தை நீட்டியவா(று) ஆவ லோடே
அழைக்கின்ற கடற்கணவன் தன்னை நாடி
கலக்கின்ற கருத்தோடு கடிது செல்லும்
காதலினால் அருவிப்பெண் இயற்கை யீதே!

கண்ணுக்கிங்(கு) ஒளிபோலே எழுதும் என்றன்
கரத்துக்கு விரல்போலே, உயிர்கள் தம்முள்
பெண்ணுக்(கு) ஆண் என்றுணர்வீர்! பிறக்கும் போதே
பிறந்திட்ட இவ்வியற்கை முடிவு தன்னை
மண்ணுக்கும் விண்ணுக்கு மாகச் சேர்ந்து
மக்களெலாம் எதிர்த்தாலும் அழிக்க ஒண்ணா(து)
உண்ணெக்கு நின்றுருகி ஆணும் பெண்ணும்
உயிர்ப்பிணைப்புக்(கு) ஆளாகா(து) ஒழிவதுண்டோ?



தீதில்லா நெஞ்சத்தால் ஒன்று பட்டுச்
சேர்ந்துவாழ நினைத்திடுவார் ஆணும் பெண்ணும்
சாதியினைச் சொன்னாலும் அஞ்ச மாட்டார்
சமயந்தான் தடுத்தாலும் தயங்க மாட்டார்
பேதந்தான் செல்வத்தில் உண்டென் றாலும்
பிரிவதற்குச் சிறிதும்தான் இணங்க மாட்டார்
நீதியுறை காதல்தான் இதுவே யாகும்
நிலவுலகில் இதையழிக்க யாரால் ஆகும்?

மலர்மணத்தை வேலிகள்தாம் மாய்ப்ப துண்டோ?
மதியொளியை மேகந்தான் சாய்ப்ப துண்டோ?
கொலை மனத்தர் அனைவரும் இங்(கு) எதிர்த்(து) அழிக்கக்
குறுகிடினும் காதலும் தான் அழிவதில்லை
அலையிழந்த கடலில்லை; அகில மெங்கும்
அசைவிழந்த காற்றில்லை; காதல் என்னும்
தலையான உணர்விழந்த உயிரே இல்லை
சற்றும் மா றா இவைகள் இயற்கைச் சட்டம்!

புலவர் நடேச நாராயணன்

# இந்திய பொருளாதாரத்துறையில் புள்ளி இயலின் முக்கியத்துவம்

## ஜி.குழந்தைவேல்

புள்ளிஇயல் உதவி இயக்குநர், தமிழகப்புள்ளி இயல்துறை)

திருத்தகு தெய்வத் திருவள்ளுவர் மக்களெல்லாம் இன்புற்று வாழ உறுதியெனப் பகர்ந்தவை அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலாம். இவற்றுள் `நாடு, பொருள், செயல்வகை, ஒழிபியல், நல்குரவு முதலிய அதிகாரங்களை உள்ளடக்கிய பொருட்பாலினடிப்படையில் பொதுவாகப் பொருளாதாரம் அமைந்துள்ளதெனலாம். இஃது சமூகத்திலுள்ள தனிமனிதனுடைய உடைமைகள் மட்டுமன்றிப் பொது உடைமைகளைப் பற்றியதுமாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலை அந்நாட்டின் இயற்கை வளம், உற்பத்தி, மக்களது தொழில் வகை, மக்கள் தொகைச் செறிவு, தனியாள் பகிர்வு இவற்றின் பால் பெருமளவு சார்ந்திருக்கும்.



33 இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 68.5 கோடி மக்கள் தொகையும் கொண்ட நம் இந்திய நாடு ஒரு துணைக்கண்டம் எனக் குறிப்பிடப் படுகிறது. இவற்றில் கிராமப்புறத்தில் வாழும் மக்கள் தொகை 76.69 விழுக்காடாகும். நகரத்தில் வாழும் மக்கள் தொகை 23.31 விழுக்காடாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இப்பெரும் பரப்பில், நிலம், நீர், குளிர், வெப்பநிலை பருவ காலங்கள்,மழையளவு, மற்ற இயற்கை வளங்கள், விளைபொருள்கள் தொழில் முதலிய உற்பத்தி, அவற்றின் பகிர்மான அளவு, இவற்றில் மட்டுமின்றி, வாழும் மக்களது சமுதாய அமைப்பு, மரபு, பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றிலும் வேறுபாடுகள் நிறைந்துள்ளன. எனவே பொருளாதாரநிலையும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா மக்கட்கும், ஒரே அளவு சமசீராக அமையவில்லை. ஆகவேதான் நம் நாட்டுப் பொருளாதார முன்னேற்ற முயற்சிகளில் சிக்கல்கள் மிகுந்து காணப்படுகின்றன.

எனினும் சுதந்தரத்திற்குப் பிறகு நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அடிப்படையில் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு போன்ற வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் குறைந்த நிலை அளவிலேனும் உற்பத்தி செய்து மக்கட்கு வழங்கப் பொருளாதார நடவடிக்கை (*Economic Activity*) எடுப்பதோடல்லாமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை (*Level of Economic Development*) யைக் குறிக்கும் தேசிய வருமான உயர்வினையும் கருத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப இயற்கை வளங்களைப் பண்டங்களாக மாற்றியும் இந்நிகழ்ச்சியில் மக்கள் சேவை அல்லது பணிகளைப் பயன்படுத்துவதாலும் (*Production of Goods and Services*) தேசிய வருவாய் (*Net domestic Product*) மாற்றியமைக்

கப்படுகின்றது. இம்மாற்றத்தின் அளவு மற்றும் வேகத்தைப் பொறுத்துப் பொருளாதார வளர்ச்சி அமைகிறது.

இப்பொருளாதார நடவடிக்கையில் நாட்டின் செல்வ வளங்கள், மக்கட் தொகை, சமூக அமைப்பு, பொது சுகாதாரம், கல்வி வளர்ச்சி, விவசாயம், தொழிற்சாலைகளில் உற்பத்தி, கூட்டுறவு, போக்குவரத்து, விலைவாசிகள், வாணிபம், நிதியமைப்பு, நிதியியல், வங்கியியல் உபரி உற்பத்தி மூலம் பன்னாட்டு உதவி, அன்னிய செலாவணி முதலியவற்றின் நிலை, மற்றும் வளர்ச்சி பற்றி ஆராய்ச்சிகள் அனைத்தும் அடங்கியுள்ளன.

சமுதாயத்தில் ஏற்படும் இத்தகைய பொருளாதாரச் செயற் கூறுகள், அவற்றால் மாறுதலடையும் இயற்கை வளங்களையும் சார்ந்த விவரங்களைத் தொகுத்து, பகுத்து, வகைப்படுத்தி, இன்ன நடவடிக்கையின் காரணமாக இன்ன நிகழ்ச்சி இன்ன அளவில் ஏற்பட்டதென முடிவு காண்பதோடு வருங்காலத்தில் இன்ன அளவில் இன்ன மாறுதல்கள், இன்ன பலன்களை அளிக்கக் கூடும் என முடிவுகள் காண்பதற்கான வழி வகைகளடங்கியது புள்ளிஇயலாகும்.

இப் புள்ளியியல் தெரிந்த பொது ஞானத்தை எண் மதிப்பாக அல்லது புள்ளிகளாக வடித்துத் தருதல், மற்றும் அவற்றை ஆய்ந்து முடிவுகள் காணுதல் என்ற இரு பிரிவுகளையும் கொண்டதாகும். இப் புள்ளிவிவரங்கள் அவற்றின்பாலெழுந்த முடிவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது அவை எவற்றைக் குறிக்கின்றன என்பதை நன்கு புரிந்து கொள்வதோடு அவற்றின் திட்பம், வரம்புகள் (*precision and Limitations*) ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளல் அவசியம்.

புள்ளிஇயல் இந்தியப் பொருளாதாரத்தில் எத்துணை முக்கியத்துவம் பெற்றுள்ளதென ஒரு சில உதாரணங்கள் வாயிலாகப் பார்ப்போம்.

எடுத்துக்காட்டாக 1971 முதல் 1981 வரையிலுள்ள பத்தாண்டு காலத்தில் இந்தியாவின் மக்கட் தொகை 55 கோடியிலிருந்து 68.5 கோடியாகப் பெருகியுள்ளது. இஃது ஒரு நிமிடத்திற்கு சுமார் 52 குழந்தைகள் வீதமும், அதாவது ஆறு வினாடிகளுக்கு 5 குழந்தைகள் வீதமும் பிறந்து வருகின்றன எனக் கணக்காகிறது. இதே காலத்தில் உணவு தானிய உற்பத்தி 11 கோடி டன்னிலிருந்து 15.15/கோடி டன்னாக உயர்ந்துள்ளதுடன் தலா நபருக்குக் கிடைக்கக்கூடிய உணவு தானியம் 197 கிலோவிலிருந்து 221 கிலோவாக மாறியது. இப் புள்ளிவிவரங்களிலிருந்து மக்கட் தொகை, உணவு உற்பத்தி, ஆள் ஒன்றுக்குக் கிடைக்கக் கூடிய உணவு தானிய அளவு, இவை மூன்றிற்குமான வளர்ச்சி விகிதங்களைக் (*Compound growth rates*) கணிப்பதோடு எதிர்காலத்தில் எந்த விகிதங்களில் இவை வளரக்கூடும், எந்த விகிதங்களில் வளர்ந்தால் நன்மை விளையும் என்றும் கணிக்கப் புள்ளியியல் முறைகள் பயன்படுகின்றன.

மேலும் தனி ஆளுக்குக் கிடைக்கக் கூடிய உணவின் அமைப்பு, (*Structure*)வேறு வேறு தானியங்கள், பருப்பு வகைகள், இவற்றின் அளவைகளை இன்ன வகையில் மாற்றி அமைத்தால் சத்தான -சீரான உணவாக அமையும் எனவும் கணிக்கக் கூடும்.

இதே போல், உடை, வீட்டு வசதி போன்ற இதர தேவைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப, உற்பத்தித் திறன் (*Productivity*) மொத்த உற்பத்தி முதலியன எங்ஙனம் மாற்றியமைக்க வேண்டுமென முடிவுகாண புள்ளியியல் ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது.

ஒரு தொழிலின் அமைப்பு (*Structure of the Industry*) உற்பத்தித் திறன், முதலீடு-உற்பத்தி விகிதம் (*Capital out-putratio*) தொழிலாளி உற்பத்தி விகிதம்(*Labour output ratio*)முதலீடு தொழிலாளி விகிதம் (*Capital labour ratio*) எனப்பல அம்சங்களையும் ஆய்வதுடன் இன்னின்ன வகையில் உற்பத்தித் திறன் மொத்த உற்பத்தி முதலியவற்றில் சிறந்த முன்னேற்றங்காணக்கூடும் என்பதனை அறியவும் புள்ளிஇயல் முறைகள் பயன்படுகின்றன.

இருபது இலட்சம் ரூபாய் முதலீடும், ஆயிரம் தொழிலாளர்களையும் கொண்ட ஒரு தொழில் நிறுவனத்தில் ஐந்தாறு வேறு வேறு பொருள்கள் உற்பத்தி செய்வதாகக் கொண்டால், அந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தியினைக் குறைந்த செலவில் கூடுமான உச்ச அளவுக்கு அதிகரித்தால் (*maximisation of out-put value with minimum input costs*) எங்ஙனம் கூடும் என்பதை '*Linear Programming*' முறையின் அடிப்படையில் நிர்ணயிக்கக் கூடும்.

மற்றும் ஒரு எடுத்துக்காட்டாக 1960ல், 100 என்றிருந்த தமிழகத்தின் தொழிலுற்பத்திக் குறியீட்டெண் (*Index of Industrial Production*)1970ல் 182.5 ஆக உயர்ந்து 1975ல் 196.6 ஆக உயர்ந்துள்ளதைக் கொண்டு வளர்ச்சி விகிதத்தைக் (*Growth rate*) கணித்து இந்த விகிதாசாரம் வருங்காலத்தில் எந்த அளவில் எத்தனை வருடங்களுக்குள் தொழில் உற்பத்தி அடைந்தால் எந்த அளவு மக்களுடைய தேவையினைப் பூர்த்தி செய்யக்கூடும், மற்றும் தேவைக்கதிகமான உற்பத்தி என்ன அளவு, அன்னிய செலாவணியீட்டப் பயன்படும் எனக் கணிக்கலாம்.

நாட்டின் பல்வேறு துறைகளில் எத்தனை நபர்கள் பணிபுரிகின்றனர்: எத்தனை பேர் வேலைவாய்ப்பினை நாடி நிற்கின்றனர்: இவர்களது கல்வி, பயிற்சி தகுதிகளுக்கேற்ப பொருளாதார வளர்ச்சி பெறும் இன்னின்ன துறைகளில் முழு வேலை வாய்ப்பு கிட்டும் என்ற புள்ளியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடு முழுமைக்குமான புள்ளி விவரங்கள் எளிதில் பெறமுடியாத சமுதாய நலன், குடும்ப நலன் போன்ற பிரிவுகளில், திட்டங்கள் எந்த வகையில் பயனுடையனவாக அமைந்துள்ளன என்பதை ஆய்ந்தறிய தேர்ந்தெடுத்த சமுதாய பொருளாதார மாதிரி ஆய்வு மூலம் *(Socio-Ecomonic Sample survey)* சேகரிக்கப்பட்ட துல்லியமான புள்ளி விவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இவ்வாய்வுகளின் முடிவுகள் எத்தனை சதவிகிதம் நாடு முழுமைக்கும் பொருந்தும் என்பதும் நிர்ணயிக்கப்படுகிறது.

அரசாங்க வரவு செலவுத் திட்டங்களைச் சார்ந்த நிதியியலில் நிலவரி, பாசன வரி, தொழில் வரி, விற்பனை வரி முதலியவை மூலம் பெறப்படும் வரவு சதவிகிதங்கள், ஒரு நபருக்கான தலாவரி அளவைகள் கணிப்பதுடன் இவ்வரவு செலவுகள் எந்தெந்த ஆக்கத்திற்கு என்றும் பொருளாதார ரீதியில் இன்னின்ன பாகுபாடுகளுக்கெனவும் பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. *(Functional and Economic classification of Budgets)*

நாட்டின் புழங்கும் ரூபாய் நோட்டுக்கள், நாணயங்கள் இவற்றின் மதிப்பு, வங்கிகளின் வரவு, செலவு மற்றும் இலாப நட்டக் கணக்குகள், இவ்வங்கிகள் இன்னின்ன துறையில் எந்த அளவில் உதவியளித்து வருகின்றன என்ற விவரங்களை ஆராய்ந்து இன்ன மாற்றங்கள் மூலம் குறிப்பிட்ட துறைகளில் உற்பத்தியை வளர்ச்சியை ஊக்குவிக்கக் கூடும் என்று அறியப்படுகின்றன.

பலதரப்பட்ட மக்கட் தொகுதிகளில் நாட்டின் மொத்த வருவாய் எப்படி பகிர்ந்துள்ளது *(Income Distribution)*என்பதனை ஆய்ந்து, அதனை எப்படி மாற்றியமைத்தால் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் அதிக வேறுபாடுகளின்றி ஓரளவு சீராக அமைக்கலாம் என்பதற்கான வழிவகைகள் காண புள்ளிவிவரங்கள் இன்றியமையாதனவாகும். தேசிய மாதிரி ஆய்வின் மூலம் வருமான அடிப்படையில் அல்லது வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் மக்களுள் இத்தனை நபர் அல்லது சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டின் *(Poverty Line)* கீழ் உள்ளனர் என்று ஆய்ந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி வகுக்க புள்ளியியல் பயன்படுகின்றது.

முக்கியப் பொருள்களின் விலைவாசி, வாழ்க்கைச் செலவு, இவற்றின் மாற்றங்களை அளவிடும் விலைக் குறியீட்டெண்கள்/*(Price Indices)* வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள்*(Cost of Living Indices)* புள்ளியியல் முறைப்படி அவ்வப்போது கணிக்கப் படுகின்றன: பிந்திய குறியீட்டெண்ணின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி*(Dearness Allowances)* நிர்ணயிக்கப்படுகிறது.

உரிய புள்ளி விவரங்கள் தொகுக்கப் பெற்றால், விலைவாசியின் உயர்வில் எவ்வளவு சதவிகிதம் பற்றாக்குறை வரவு செலவு திட்டம் *(Deficit financing)* பணவீக்கத்தினால், வங்கிகள் கொடுக்கும் வாங்கும் வட்டி விகிதத்தினால், சேமிப்பு அளவினால், ஏற்பட்டதெனப் பகுத்துக் கூறக் கூடும், இதைக் கொண்டு இன்ன அம்சங்களில் எந்த அளவு திருத்தங்கள் *(Correctives)* மேற்கொண்டால் விலைவாசியினை இன்ன அளவு கட்டுப்படுத்தக் கூடும் என்றறியக் கூடும்.

அன்னிய செலாவணி ஈட்டுவதற்கவசியமான வாணிபத்துறையிலே நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி அளவைகள் அவற்றின் அமைப்பு *(Structure of the Import and Export Trade)* மற்றும் விலைவாசிகள் போன்ற புள்ளி விவரங்கள் அவ்வப்போது தொகுக்கப்பட்டு, இவற்றுடன் சார்ந்த வாணிபம், போக்குவரத்துத் துறைகள் பற்றிய புள்ளி விவரங்களுடன் பயன்தரும் வகையில் ஆய்விடப்படுகின்றன.

நாட்டின் வளம் செழிக்க மேற்கொள்ளப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் *(Statistics of past trends)* வளர்ச்சி விகிதங்கள், மற்றும் எதிர்காலத்தில் இன்ன வகையில், இன்ன துறையில் வளர்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கைகளைக் கொண்டு மதிப்பீடுகள் *(Projections)* செய்யப்படுகின்றன.

சுருங்கக் கூறின், அரசாங்கத்துக்குப் புள்ளிவிவரங்கள் கண்ணாகவும், காதாகவும் இருந்து பயன்படுகின்றன. *(Statistics are the eyes and ears of the Government).*



# தமிழர் விளையாட்டு

ஆட்டன் அத்தி நீர் நடனம்
அடிக்கும் வளைகோல் குணில்வட்டு
தேட்டம் ஓரி வல்வற் போர்
திகைக்கும் வீச்சாம் கவன்குறிகள்
ஓட்டும் நாவாய் வளிதொழில்கள்
உகைக்கும் மன்பின் படகாட்டம்
காட்டும் சங்கப் பாடலிவை
காட்டும் நாள்தான் வாராதோ?

`தட்டும் பந்து பெருங்கதைநூல்
சாற்றும் பலநூல் அம்மானை
கொட்டிக் கயிறா(டு) உடலிவித்தை!
கோலும் வரைகால் நடைப்பாவை
வெட்டும் ஆடு புலிக்கோடு
வீரம் செறிந்த காளைப்போர்
கட்டுச் சோற்றுக் கதையாச்சே
காணும் நாள்தான் வாராதோ?

`கிட்டிப் புள்' போய்க் கிரிக்கெட்டு!
கீற்றுச் `சில்' போய் நீள்தாண்டல்!
`தட்டாண் கல்' போய் பல்பந்தாம்!
`தண்ணீர் புரி' போய் `கோ- கோவாம்!
வெட்டும் கோலி, பம்பரங்கள்
மேவும் தமிழர் மூலங்கள்!
பிட்டு வைத்த பலாச்சுளைகள்
பேணும் நாள்தான் வாராதோ? ==

அகம் **376** *Synchronized Swimming*
சிலம்பு **4632** *CROQUET*
புறம் **152** *ARCHERY*
அகம்**292** *SLING*
புறம் **66** *YATCHING*
குறுந்தொகை **222** *CANOEING, ROWING.*

பெருங்: **4:2:** பந்தடி *INDIVIDUAL JUGGLERY*
பிள்ளைத்தமிழ்- *TEAM JUGGLERY*
குறுந்தொகை **7** *ROPE BALANCING*
வண்டற்பாவை *FIGURE DANCE*
*FIGURE CHESS*
முல்லைக்கலி *BULL-FIGHT*



செங்கைப் பொதுவன்

# உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்!

## பேராசிரியர் டாக்டர் ந. வேலுசாமி

'தமிழ்கூறு நல்லுலகம்' என்ற வாசகம் தோன்றியதே, வருங்காலத்தில் உலகெங்கும் உள்ள தமிழர்கள், தமிழ் இலக்கிய இலக்கணங்கள் பற்றியும், தமிழர்கள் தங்களைப் பற்றியும் ஆராய்ந்து மேலும் மேலும் முன்னேறுவார்கள் என்ற நன்னம்பிக்கையை முன்வைத்துத்தான்.

1966 ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை உலகில் பல்வேறு நாடுகளில் நடந்தேறிய ஏழு உலகத் தமிழ் மாநாடுகளும் தமிழ்மொழி இலக்கிய இலக்கணங்கள் மற்றும் கலை பண்பாட்டுத் தொடர்பானவைகளைத்தான் ஆராய்ந்தன.

இன்று நடைபெறும் மாநாடு. உலகில் வாழும் தமிழர்களின் வாழ்நிலைகளை ஆழ்ந்த கவனத்தோடு ஆராயும் மாநாடு ஆகும்.



முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டிப் பெருமை பெற்ற இந்த மலேசியமண்தான் முதல் உலகத் தமிழர் மாநாட்டையும் கூட்டிப் பெருமை பெறுகிறது... தாய்த்தமிழகத்தை உள்ளடக்கிய உலகிற்கே வழிகாட்டியாய்த் திகழ்கிறது. இவற்றை, உலகத் தமிழர் முன்னேற்றத்திற்கு மலேசியத் தமிழர் ஆற்றிய ஆக்கப் பணிகள் என்று மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

**உலகில் தமிழர் வாழும் நாடுகள்:**

இந்தியாவில் தமிழகத்தில் மட்டும் அல்லாமல் பல்வேறு மாநிலங்களில் தமிழர்கள் வாழ்ந்துவருவதோடு, அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் இருந்து வருகின்றனர்.

இவையன்றி வெளிநாடுகள் என்று எடுத்துக் கொண்டால் — கனடா, பெரிய பிரிட்டன், சிங்கப்பூர், செகோஸ்லேவேகியா, செனகல், சோவியத் ஒன்றியம், பிஜி, போலந்து, மலேசியா, மேற்கு ஜெர்மனி, மொரீசியசு சுவீடன், இலங்கை, ஆஸ்திரியா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, இத்தாலி, ஈராக், எத்தியோப்பியா, கயானா, கென்யா, கிரீஸ். குவாடிலோப், கொரியா, சீனா, கம்போடியா, சூரிநாம், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, தான்சேனியா, துருக்கி, தென்னாப்பிரிக்கா, நியூகாலடோனியா, பாகிஸ்தான், பிரெஞ்சு கயானா, மார்ச்சியானக், உகாண்டா, ரீயூனியன், வெனிசுலா, ஜமைக்கா, ஸ்பெயின், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்சு, பின்லாந்து, ஜப்பான், ஹாலந்து போன்ற நாடுகளில் குறைந்த அளவிலோ, நிறைந்த அளவிலோ சுமார் ஐம்பது நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இன்று நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கக்கூடும்.

**உலகில் தமிழர் வாழும் நிலை:**

வாழ்தல் வேண்டி, உலகில் எந்த நாட்டிற்குக் கடல் கடந்து தமிழர்கள் சென்றாலும் அங்கெல்லாம் தங்கள் உழைப்பு நேர்மை என்ற முத்திரையைப் பதிக்காமல் இருந்ததில்லை. இதுதான் தமிழர்களின் தனிக்குணம். நாமக்கல் கவிஞர். வெ.இராமலிங்கம் பிள்ளை சொன்ன `தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்பது உண்மை.

மேற்குறிப்பிடப் பெற்ற வெளிநாடுகளில் எல்லாம் தமிழர்கள் என்ன செய்து எப்படி வாழ்கிறார்கள் என்பது இன்றைக்கு நாம் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாச் செய்தியாகும். இதை அறிய முற்படுவது, நதிமூலம் ரிஷிமூலம் காண்பது போன்றது என்றாலும், இதைக் கண்டேயாக வேண்டும். கண்டு, அவர்கள் மேலும் வளம் பெற வழிவகை செய்ய வேண்டும். நோய் அறியாமல் மருத்துவம் பார்ப்பதெவ்வாறு?

சிங்கப்பூரில், 1800 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்து வரும் தமிழர்கள் கரும்புத் தோட்டங்களிலும், தென்னந் தோப்புகளிலும் வேலை செய்யத் தொடங்கியவர்கள். பிறகு பாலங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் அமையவும் `உழைப்பை நல்கி' இன்று பல நிலைகளில் உயர்ந்துள்ளனர் என அறிகிறோம்.

பிஜித் தீவில் உள்ள தமிழர்கள் குத்தகைத் தொழிலிலும், கூலித் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர்.

மலேசியாவில் உள்ள தமிழர்கள் ஆங்கிலேயர் ஏற்பாட்டின்படி கங்காணிகள் மூலம் கஞ்சித் தொழிலாளர்களாக வந்து காடு கொன்று மலைகள் கொன்று மலேசிய நாட்டையே ஆக்கி, உழைப்பால் உயர்ந்து — இன்று இன உணர்வாலும் உயர்ந்து நிற்பதைக் காண்கிறோம்.

இலங்கையில், வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் தமிழர்கள் தமிழை ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் ஆக்கிப் பெருமை கண்டனர். அரசு, தனியார் துறை நிறுவனங்களில் எழுத்தராகவும் மருத்துவம், சட்டம், பொறி இயல்துறைகளில் வல்லுநர்களாகவும், வணிகம், உழவு ஆகியவற்றிலும் விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்து வருகின்றனர். அஞ்சல் தலையில் தமிழ் எழுத்துக்களைப் பொறித்துப் பல ஆண்டுகளாக வெளியிட்டுவரும் ஒரே நாடு இலங்கை. இத்தாலியில் உள்ள வாட்டிகன் நகரில் உள்ள வானொலி நிலையம்தான், முதன் முதலில் தமிழுக்கு இடம் கொடுத்த முதல் நிலையம் என்பதையும் நாம் மறத்தல் மரபன்று.

கென்யாவில் உள்ள சில தமிழர்கள் ஆசிரியத் தொழிலிலும் பிற தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதை அறிய முடிகிறது.

மார்ச்சியானக் தீவில் உள்ள சுமார் பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கரும்புத் தோட்டங்களில் பணியாற்றுகின்றனர்.

உகாண்டாவில் 1972 வரை வாழ்ந்த தமிழர்கள் 1972 இல் அந்நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர். அவர்களில் சிலர் பிரிட்டனுக்கும், பலர் இந்தியாவுக்கும் வந்து விட்டனர்.

வந்தாரை வாழவைக்கும் பூமி என்று உண்மையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளைத் தவிர வேறு எதையும் கூறமுடியாது என ஒரு தமிழரே குறிப்பிடும் அளவுக்கு அங்குத் தமிழர்கள் உழைப்பால் முன்னேறியுள்ளனர் என்றும் அறிகிறோம்.

மண்ணின் மைந்தர்கள் என்று கூற யாரும் இல்லாமல் `குடியேறியவர்கள் தீவு' என்று இருந்த மொரீசியசுத் தீவுக்கு உழைக்கக் கற்றுத் தந்தவர்களே தமிழர்கள் தாம். சரியாக இரண்டரை நூற்றாண்டுப் பழமை உடையவர்கள் மொரீசியசுத் தமிழர்கள். அத்தீவின் கோட்டைகள், துறைமுகங்கள், அரண்மனைகள், கற்கட்டிடங்கள் எல்லாம், ஏழாம் உலகத் தமிழ்மாநாடு கண்ட மொரீசியசுத் தமிழர்களின் கை வண்ணங்கள் ஆகும். பல நாடுகளில் தமிழர்கள் உள்ளனர் என்ற குறிப்பு மட்டுமே தெரிகிறது. எப்படி வாழ்கின்றனர் என்ற விவரம் தெரியவில்லை.

**தமிழ்ச் சங்கங்கள் ஆற்ற வேண்டிய பணிகள்:**

தமிழகத்திலும், பிறஇந்திய மாநிலங்களிலும் உலகில் உள்ள பல நாடுகளிலும் உள்ள தமிழ்ச் சங்கங்கள் இன்று உடனடியாக ஆற்ற வேண்டிய சில இன்றியமையாப் பணிகள் உள.

இலக்கிய ஆய்வையும் கலைகலாச்சாரச் சமயப் பணிகளையும், பொழுது போக்குப் பணிகளையும் சிலகாலம் ஒத்தி வைத்துவிட்டு, அவ்வப்பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கையையும், அவர்களின் வாழ்க்கை நிலைகளைப் பற்றிய ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மை நாம் வளர்த்துக் கொள்ள முடியும்.

**உலகத் தமிழர்களே, ஒன்று சேருங்கள்:**

உலகிலேயே முதன் முதலாகக் கடல் கடந்த நாடுகளில் மலேசியாவில் தான் தமிழ் மொழிக் கென்று கல்விப் பீடம் ( Chair ) அமைக்கப்

பெற்றது. அதுவும் இலக்கியத்திற்கென்றும், இலக்கணத்திற்கென்றும் தனித்தனியாக அமைக்கப் பெற்றது. எனவே இந்த மண்ணிற்கு ஒன்று சேர்ந்து வாருங்கள் ஜெகத்தீரே:

`அலைகடலுக்கு அப்பால் வாழ்வார் என் அகத்தினில் வாழ்வார்' என்ற பாவேந்தரின் பாடல் வரிகளைச் சுமந்து கொண்டு வாருங்கள்.

1965 இல் மலேசியாவுக்குவந்த பேரறிஞர் அண்ணா அவர்கள். அங்கு வாழும் பதினான்கு லட்சம் தமிழர்களின இதயங்களும் நிறையும் வண்ணம் கூறினார்: `மற்ற நாடுகளில் தமிழர்கள் ஏதோ இருக்கிறார்கள். ஆனால் மலேசியாவில் மட்டும்தான் வாழ்கிறார்கள்' என்று. அந்த நாட்டிற்கு உலகத் தமிழர்கள் வாழ்வுபற்றி ஆக்க பூர்வமாகச் சிந்திக்க வாருங்கள்.

## பெரியார் புரட்சி மொழிகள்

- எனக்கு வாரிசு என்று யாரும் கிடையாது. என்னு டைய கொள்கைகளும் கருத்துக்களும்தான் வாரிசு. என்பது தானாகவே ஏற்பட வேண்டும்.
- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிருகங்கள் போல் நடத்தப்படுகிற பாட்டாளி, கூலி, ஏழை மக் கள்தான் எனக்குக் கண்வலியாய் இருப்பவர்கள். அவர்களைச் சமமனிதர்களாக ஆக்குவதுதான் எனது கண்ணோய்க்குப் பரிகாரம்.
- என்னைப் பொறுத்தவரையில் ஒரு மனிதர் யாராக இருந்தாலும் தமிழர் பற்று உடையவர் என்று கரு தினால், நான் அவருக்கு அடிமையே ஆவேன். குணம் குடிகொண்டால் உயிர்க்கு உயிர்தான். இல்லாவிடில் அவர் யாரோ என்று கருதுகிறவனாவேன்.
- "நீ ஒரு கன்னடியன்; எப்படித் தமிழனுக்குத் தலைவ னாக இருக்கலாம்?" என்று என்னைக் கூடக் கேட் டார்கள். "தமிழனுக்கு எவனுக்கும் யோக்கியதை இல் லையப்பா" என்றேன். இதற்குக் காரணம், ஒரு தமிழன் இன்னொரு தமிழன் உயர்ந்தவனாக இருப்பதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கவே மாட்டான்
- ஒரே தகப்பனுக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்றை இந்நாட்டிலும் ஒன்றை இங்கிலாந்திலும் வளர்த்துப் பாருங்கள். இங்கிலாந்தில் வளர்ந்தவன் எதையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்ப்பான். இந்நாட்டில் வளர்ந்தவன் எதையும் மதக்கண் கொண்டு பார்ப்பான்.
- பேராசையில்லாவிட்டால் எந்த மனிதனும் தனது புத்திக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வாததை ஒரு கால மும் நம்பமாட்டான்; பின்பற்றமாட்டான்.

தொகுப்பு: காஞ்சி.துரைசௌந்தரராசன்.

## அண்ணாவின் அறிவு மொழிகள்

- வேடமிடாத புராணிகன், மோடிசெய்ய மாது, சோடியில்லா மாடப்புறா, சேடியில்லா இரா ஜகுமாரி இருப்பதில்லை.
- இழுக்குள்ள இசையைக் கேட்பது, அழுக்குள்ள உணவைப் புசிப்பது, சருக்குள்ள வழியிலே நடப்பது—வேதனை தருவனவேயாகும்.
- திருந்தாத வயலும், தீங்கனி தராத மரமும் மணலாறும் இருந்து பயனில்லை.
- கூழும் களியும் கிடைத்தாலே பாலும் பழமும் போலக் கருதுபவர்கள் இருக்கிறார்கள்.
- மலர்விற்றுப் பிழைத்துவந்தவன் மலம்கூட்டும் வேலைக்குச் செல்ல நேரிடுவது, மச்சுவீட்டிலே வாழ்ந்தவன் பிச்சைக் காரனாவது அவனவ னின் வாழ்க்கையிலே ஏற்பட்ட வழுக்கலால்.
- கடல்நீரிலே கன்னல் சுவையைக் காண முடி யாது; காட்டுக் கூச்சலிலே கல்யாணி ராக ஆலாபனத்தைக் கேட்க முடியாது.

தொகுப்பு: இமணிமுடிச்சோழன்.

# அறிவைத் தூண்டும் அரும்பணி செய்வீர்



வையகத் தமிழரே வையகத் தமிழரே!
வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்த்தி மகிழ்கிறேன்!
வாழ்த்துக்கள் மட்டும் வாழ்ந்திட உதவிடா
தாழ்த்தும் தவறுகள் தவிர்த்திட வேண்டும்!
உழைப்பால் உலகில் உயர்ந்திடல் வேண்டும்
உயர்த்தும் உண்மைகள் உணர்ந்திட வேண்டும்!
வாழ்வுக்கு வழிசெயும் வளந்தரு செயல்களை
வரையறை முறைகளை வணங்கி ஏற்பீர்!
ஒற்றுமை யுணர்வும் உயரிய பண்பும்
உடையவ ராகியே உழைப்பீர்; உயர்வீர்!
உழைப்பைக் காட்டிலும் உயர்ந்தது இல்லை
பிழைப்புக்கு அதுவே பெரிய துணையாம்!
பிரிவுகள் என்றும் பிணக்கைப் பெருக்கும்
சலிப்புகள் என்னும் சங்கடப் பேய்கள்
அடுத்த டுத்த மைந்து வாழ்வைத்
தடுத்து நிறுத்தித் தளர்வுறச் செய்யும்!
வெற்றுப் பேச்சும் வேண்டாத நினைவும்
வேதனை பெருக்கும் வேலையைச் செய்யும்!
மேதினி வாழ்வில் மேன்மைகள் சேர்க்காப்
போலித் தனங்களைப் பொசுக்கி யழிப்பீர்!

தடுப்பன தடுத்துத் தவிர்ப்பன தகர்த்துத்
தழைக்கும் முயற்சியைத் தளர்வின்றிச் செய்வீர்!
சூதும் வாதும் சூழ்ச்சி வலைகளும்
சூழ்ந்தவர் தம்மையும் சுற்றி யழிக்கும்!
கற்பனை வாழ்வில் கருத்தை விடுத்து
நடைமுறை வாழ்வில் நாட்டம் கொள்வீர்!
பொருளியல் வாழ்வில் பொறுப்புடன் இருப்பீர்!
அருளியல் வாழ்விலும் அளவுடன் இருப்பீர்
நாட்டு நலனில் நம்மவர் வாழ்வில்
கூட்டு முயற்சியே கூடுதல் பயன்தரும்!
தொழில்வளம் பெருக்கித் தோழமை யுணர்வுடன்
தொண்டுகள் செய்வீர்! தோல்விகள் தவிர்ப்பீர்!
உணர்வைத் தூண்டுவன ஒதுக்கித் தள்ளி
அறிவைத் தூண்டும் அரும்பணி செய்வீர்
வையகத் தமிழரின் வாழ்வும் வளர்ச்சியும்
மெய்யாகச் சிறக்கும் மேன்மைகள் இவையே!



**பேராசிரியர் டாக்டர் நா.செயப்பிரகாசு**

# சிறு சேமிப்புத் துறை

## வெளி நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

## இந்திய அரசின் பாதுகாப்பான சேமிப்பு திட்டங்களில் 15 ஆண்டு பப்ளிக் பிராவிடெண்ட் பண்ட் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்

**முதலீட்டுக்கு** வருமான வரியில்லை
சொத்து வரியில்லை

வட்டிக்கும் பூரண வருமான வரிவிலக்கு!

**சிறப்பு அம்சங்கள்:**

★ 12% கூட்டு வட்டி
★ 3 ஆண்டுக்குப் பிறகு கடன் பெறும் வசதி
★ 7வது ஆண்டிலிருந்து பணம் திரும்ப பெறும் வசதி
★ இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கும் சமயம் பாதுகாப்பான எதிர்கால சேமிப்பு.
★ ஸ்டேட் பாங்கு, அதன் கிளைகள் மற்றும் தலைமை அஞ்சலகங்களில் கணக்கைத் துவங்கலாம்.
★ கணக்கை இந்தியாவில் எந்த கிளைக்கும் மாற்றிக் கொள்ளலாம்.
★ அதிக பட்ச முதலீடு ரூ. 60,000 (ஆண்டொன்றுக்கு)
★ வாரிசு நியமன வசதி உண்டு.
★ நீதிமன்றம் ஜப்தி செய்ய இயலாது.

இயக்குநர்,
**சிறுசேமிப்புத் துறை**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
தொலைபேசி: 840223/846209

DIPR/ /MS/90/ARIES

# சித்தர்கள் கண்ட தமிழ் மருத்துவச்சிறப்புகள்

(டாக்டர். ஜி.பி.வெண்மதியன், பெங்களூர்)

இன்றைய உலகில் நின்றுலவும் மருத்துவ முறைகளுள் சித்தா–ஆயுர்வேதம், யூனானி,–அலோபதி, ஓமியோபதி போன்ற முறைகளும் சிலவாகும். இவற்றுள், பிறமுறைகளுக்கெல்லாம் அது தோன்றிய காலமும், வயதும் ஆய்ந்தறியப்பட்டுள்ள நிலையில், சித்தர் முறைகளுக்குமட்டும் தோற்றமோ, வயதோ இன்றளவும் கண்டறியப்படவில்லை என்பதே உண்மையாகும். இது புராண இதிகாச காலந்தொட்டே, ஏன் மக்கள் தோன்றிய காலம் முதலே தொடங்கி, இன்று வரை தொடருவதாகும்.

சித்தமருத்துவமுறையானது, சித்தர்களுக் கெல்லாம் சித்தனான சிவபிரானையே முதன்மை சித்தனாகக் கொண்டு, அவன் மூலமே தொடங்கப்பட்டதாகவும் கூறப்படும். அதாவது ஒரு சமயம், தச்சனினால் விளைந்த பூசலின் உச்சக் கட்டமான உருத்திரதாண்டவமாடியதின் முடிவில் சினத்தின் கொதிப்பிலிருந்த சிவபிரான், தன் நெற்றிக்கண் திறந்து ஆத்தாள் உமையவளை எரித்துச் சாம்பலாக்கிவிடுகின்றார். பின்னரும் சினமடங்கா நிலையிலே நெருப்புக் கோளமாக நிற்கின்றார். மூலக்கடவுளின் உடலே அக்கினிபோல் தகிக்கையில் அவரால் படைக்கப்பட்ட பூமிவாழ் சீவராசிகள் அனைத்துமே அனலிலிட்ட புழுவாய் தகிக்கும் நிலை ஏற்படுகிறது. அதுகண்டு பதறிப் போன தேவாதிதேவர்கள் சிவனிடம் ஓடி நிலைமையை எடுத்துக் கூறி சினந்தணிவதுடன், நெருப்பினால் உடல்முற்றும் சுர் + அம் =சுரம் (காய்ச்சல்) என்ற வெப்பத்தினால் துடித்துவாடி அழியும் நிலையிலுள்ள சீவராசிகளைக் காப்பாற்றவும் வழி வேண்டி மன்றாடுகின்றனர். ஒருவாறு தன்னிலையடைந்த சிவபிரான், மூதண்டமூலிகையான அருகம்புல்லைக் குடிநீரிட்டு அருந்தினால் உயிரினங்களின் வெப்பம் குறைந்து விடுபடுவர் என்று வழிகட்டுகின்றார். இப்படி மனிதனின் முதல் நோயான சுரத்தை உண்டு பண்ணியதோடன்றி, அதற்குரிய முதல் மருந்தாக அருகைக்கூறியும் மருத்துவமுறையைத் தொடங்கி வைத்தவன் இறையவன் என்பதிலிருந்து சித்தமருத்துவமுறைக்கு மூலம் சித்தனே கடவுளாகும் எனப் புலனாகிறது. இப்படி சிவனால் தோற்றுவிக்கப்பட்டு, பின் நந்தீசர், திருமூலர், அகத்தியர் போன்றாரின் வாயிலாகப் பரவுமாறு வைத்தியநாதனை முருகப்பெருமானின் அருள்வாக்கு மூலமாகப் போதிக்கப்பட்டதாகும். இது பிற முறைகட்கு இல்லாத தனிச்சிறப்பாகும்.

மற்ற மருத்துவ முறைகளில் ஒருவருக்கு நோயுற்றபோது, அதற்குரிய மருந்துக்களைக் கொடுத்து பிணி நீங்கும் வழிமுறைகளை மட்டும் கூறியுள்ள நிலையில், சித்தமருத்துவமுறையில் மட்டுமே, வந்த நோயை நீக்குவதோடு மட்டுமின்றி, மனிதனுக்கு நோயே வராத வழிமுறைகளையும் வகுத்தளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப மனிதனின் வாழ்நாள் முழுவதும் கைக் கொள்ளவேண்டிய ஒழுக்கநெறிமுறைகள், மேற்கொள்ள வேண்டிய உணவாதிமுறைகள், ஐவகை நிலத்திலும், அறுவகைக்காலங்களிலும் செய்யவேண்டிய தொழில் முறைகள், உடுக்கவேண்டிய ஆடைகள், பஞ்சமாபாதகங்களை நீக்கியும், பேராசை, பொறாமை, வஞ்சம் முதலியன நீக்கி, எவ்வுயிரிடத்தும் கருணையும் அன்பும் கொண்டு ஆதரிக்கும் மனப்பக்குவத்தை வளர்த்தல் முதலிய சகல நெறிகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சித்தமருத்துவமுறை மானிடமருத்துவம், தேவமருத்தும்–ராக்ஷதமருத்துவம் என மூவகையாக வகுக்கப்பட்டு, அதற்கேற்ப முறையே தாவர வகைகளினால் செய்த மருந்துகள்–உலோக உபரச, பாடாண, காரசாரங்களினாலான பற்ப, செந்தூர சுண்ணம் போன்ற மருந்துகள் –மற்றும் ஆயுதங் களினாலான அறுவை சிகிச்சை எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் சித்தர்முறைகள் மணி, மந்திரம், மருந்து என்ற முப்பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டு, சூதத்தை நெருப்பிற்கோடாமல் உரிய வழிமுறைகளினால் கட்டுப்படுத்தி, சாரணைகள் மூலம் வலுப்படுத்தி, அதன் மூலம் அட்டமாசித்திகளையும் அடைதல்–மனத்திடத்தினாலும், தனது திரத்தினாலும் (தந்திரம்) பல்வேறு சித்திகளைப் பெறுதல்–மற்றும் உயரிய சக்தி படைத்த மிக மேலான கட்டு, களங்கு, குரு குளிகை போன்றவற்றால் அரியபயன்களை அடைதல் போன்ற வழிமுறைகளைக்கூறி அவரவர்முயற்சிக்கும், உழைப்பிற்கும் ஏற்ற செயல்கள்

மூலம் பலன் பெறும் விதிமுறைகளும் கூறப்பட்டுள்ளது ஒரு தனிச்சிறப்பாகும்.

உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்பதற் கிணங்க, முப்பில்லா மருந்து முழுமை பெறாது எனவும் சித்தர் முறைகள் செப்புகின்றன. இதற்குரிய மூலப் பொருட்களாகவும், செய்முறைகளாகவும் பூமியாகிய அண்டத்திலும்—மனித உடலாகிய இப்பண்டத்திலும் பலவற்றைக் கூறி, அவரவர் சக்திக்கேற்றவற்றைச் செய்து பயன் பெற வழிகூறுகின்றனர். முறையான வழியில் முடிக்கப்பட்ட முப்பூவினால் வைத்தியம்—வகாரவித்தை—கல்பம் போன்ற யாவும் கைக்கூடுவது உறுதி. இத்தகைய முப்பூ என்ற குருமருந்தை உலகின் பிறமுறைகள் எதிலும் காணவியாலது என்பது திண்ணம். முப்பூ என்றொரு அரிய, மேலான முறையைக் கொண்டுள்ளதும் தனியொரு சிறப்பாகும்.

பிறநாட்டுமுறைகளில், குறிப்பாக நவீன மருத்துவமுறைகளில் மனித உடலை இரத்தமும், சதையும், எலும்பும் கொண்டதொரு பிண்டமாக மட்டுமே கருதி, அதன் அடிப்படையில் கண்டறியப்பட்ட உடல்கூறு, உடலியல் தத்துவங்களையே மருத்துவ சிகிச்சைகளுக்கான வழிகாட்டலாக மேற்கொண்டுள்ளனர். ஆயின், சித்தர்கள்மட்டும் அண்டமும், பிண்டமும் ஒன்றேயெனவும், அதன் அடிப்படையினாலான மானிட உடல் பஞ்சபூத தத்துவங்களையும், எழுவகை தாதுக்களையும், பதினாறு வகை வேகங்களையும், தொன்னூற்றாறு தத்துவங்களையும் கொண்டதெனவும், உடலும் ஆன்மாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவே இரண்டினது பாதுகாப்பும், செயல்முறையும் இணைந்தே அனைத்து சொல் முறைகளுக்கும் ஆதாரமாக நிற்கும் எனவும் கூறியுள்ளனர். இப்படி, உடலை வெறும் எந்திரம் போல் கருதாமல், சித்தர் கூறும் வழிமுறைகளைக் கையாளுவதன் மூலம் உடலையும், உள்ளத்தையும் செம்மைப்படுத்தி அதன் வாயிலாக, உடலை அழியாது காத்து அதன் மூலமாக உயிரையும் வளர்த்து, ஆயுளையும் நீடித்து தனக்கும், சமூகத்திற்கும் பணிபுரிந்து பரகதியடையும் வழிமுறைகளையும் வகுத்தளித்துள்ளது, சித்தர் முறைகளில் மட்டுமேஉரிய மேலும் ஒரு சிறப்பாகும்.

சிவனே சித்தனென்றும், அவர்தம் வழிவந்தவர்களே சித்தர்களெனவும் கூறப்படும். சித்தர்கள், இருடிகள், முனிவர்கள் போன்றோர் நவகோடிப் பேர்களெனவும் அவர்களுள் சிறப்புடையோர் பதினெண்மர் எனவும் கூறப்படும் இத்தகைய சித்தர் பெருமக்கள் தத்தமது இடையறாத உழைப்பின் பயனாகவும் மெய்ஞான வழிமுறைகளை மேற்கொண்டு, தொன்று தொட்டு கண்டறிந்து பயன்படுத்தி, தாமும் தம்மைச் சார்ந்தோரும் நலன் பெற்றதன் அடிப்படையிலும், தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற்றுய்ய வேண்டுமென்ற பெருமனம் கொண்டு, சிறிதும் ஒளிவு மறைவின்றிக்கூறப்பட்ட கலைகள் பலவாகும். அவை வாதம், வைத்தியம், யோகம், ஞானம், மந்திரம் விண்வெளி ஆய்வு, சோதிடம், சில்பம் உட்பட பல்வேறு பிரிவினுள் அடங்கும். எனினும், இவற்றுள் இணையற்ற சிறப்பும் பயனும் நல்குவது மருத்துவம் என்றால் மிகையாகாது.

சித்தர்கள் தாம் மட்டும் சகல சித்துக்களை அடைந்து பயன் பெற்றால் போதாது, உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் சித்தர் நிலைக்கு உயர்ந்து பலனடைய வேண்டுமென்ற நல்லெண்ணத் திலேயே செயல்பட்டனர். அதன் பொருட்டே காய கல்ப முறைகளையும் கூறி, வலையும் உயிரையும் வளர்த்து நிலைப்படுத்திக்கொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நிலைகளிலும் தேர்ந்து இறைவனை அடைந்து, பிறவாநிலைபெறும் முக்தியாகிய சித்தியை அடைந்து பேரானந்த நிலையடையும் வழிகளை, அவரவர் தகுதிக்கும், முயற்சிக்கும், செயலாக்கத்திறனுக்கும், வாய்ப்பு வசதிகட்கும் ஏற்ற முறையில் எளிய மற்றும் கடின வழிகளில் கூறியுள்ளனர். அதனைப் புரிந்து செயல்பட்டு மேனிலையடைய வழிகாட்டியுள்ள சித்தர் கலைகளின் சிறப்புக்கும்—சித்தர் பெரு மக்களுக்கும் நமது நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்வதுடன்—என்றென்றும் நாமும், நாட்டோரும் சித்தர் வழி சென்று சிறப்படைவோம் என்றும் உறுதி மேற்கொள்வோமாக.


Horlicks
WITH EXTRA CALCIUM
Great Nourisher
"Growing children need extra Calcium."
Horlicks is enriched with extra Calcium—vital for strong teeth and healthy bones in growing children and for the good health of the entire family.
Horlicks is full of natural nutrients—protein, vitamins, minerals and carbohydrates—that provide energy and vitality. And extra Calcium means extra health.
The Great Nourisher
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA6751 R




"எல்காட்"டின் பணி மின்னணுத் தொழில் வளர்ச்சியில் தொழில் முறையில் பங்கு கொள்வதோடு மட்டும் நின்று விடுவதில்லை. உண்மையில் பணி அங்கே தான் ஆரம்பமாகிறது. எல்காட் பொருத்தமான தொழில் நுட்பத்தைக் கண்டறிய உதவி செய்வதோடு அவற்றை உலகின் மின்னணுத் துறையில் தலை சிறந்து விளங்கும் பிரிட்டனின் மார்கோனி (Marconi), மேற்கு ஜெர்மனியின் சீமென்ஸ் ஏ.ஜி (Siemens AG), அமெரிக்காவின் ஐமெக்ஸ் (IMEX) மற்றும் ஹாரிஸ் ஃபாரிஞன் (Harris Farinan), பிரான்சின் டி.ஆர்.டி. (T.R.T.) போன்ற நிறுவனங்களிலிருந்து தருவிப்பதிலும் உதவி புரிகிறது.

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளை உருவாக்கும் காலம் தொட்டே தமிழ்நாட்டில் மின்னணுத் தொழில், பெரு வளர்ச்சி கண்டுள்ளது. இன்று எல்காட் அளிக்கும் உன்னத ஊக்கத்துடன் தொழில் மின்னணு உபகரணங்களைத் தயாரிக்கும் பல தொழிலகங்கள் தோன்றியுள்ளன்.

அண்மைக் காலத்தில் பல கூட்டு நிறுவனங்களை அமைப்பதன் மூலமாக "எல்காட்" தமிழ்நாட்டில் மின்னணுத் தொழிலை ஒரு நவீன மிக்கதாகவும் வலிமை மிக்க சக்தியாகவும் வளர்க்க உதவுகிறது.

எலக்ட்ரானிக்ஸ் துறையை ஊக்குவிப்பதற்கெனவே எல்காட் எப்பொழுதும் முதலீடு வாய்ப்புகளை பெற முனைவதன் மூலம் இத்துறையில் குறிப்பிடும்படியான பங்கினை அளிக்கிறது.

வெளிநாட்டில் வாழும் இந்தியர், தொழிற்நுட்ப வல்லுனர்கள் மற்றும் தொழிலதிபர்கள் தமிழகத்தில் கூட்டு நிறுவனங்களை உருவாக்க—உயர்விக்க எல்காட் என்றும் உற்சாகப்படுத்துகிறது. ஆகவே உங்கள் திட்டங்களுடன் இன்றே வாருங்கள். எல்காட் உங்கள் திட்டத்தை செயலாக்கிட உதவும்.

**எல்காட்**

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம்.**

735, அண்ணா சாலை, சென்னை-600 002

தொலைபேசி: 867654, 867659,
868505, 869613

தந்தி: TANELCO டெலக்ஸ்: 41-6113 LCOTIN

# உங்கள் வெற்றிக்கு வழி: மகளிர் சிறுதொழில் தொடங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பிரத்யேகத் திட்டங்கள்

ஆம். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நல்ல திறமையுள்ள தொழில் தொடங்கும் மகளிருக்கு தனிச்சலுகை அளிக்கிறது.

மகளிர் தொழில் முனைவோர் வெற்றி பெற நிதியுதவியுடன் சிறப்புச் சலுகைகளையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிறது.

★ குறைந்த பட்சமாக 15 சதவிகிதமே தொழில் முனைவோர் முதலீடு செய்ய தேவைப்படுகிறது.

★ ''மஹிளா உதயம் நிதி'' திட்டத்தின் கீழ் ரூ. 10 இலட்சத்திற்கும் மேற்படாத மதிப்பு உடைய திட்டங்களுக்கு தொழில் முனைவோரின் மூலதனம் 10 சதவிகிதம் இருந்தாலே போதுமானது. சலுகை அளிக்கப்பட்ட தொகை, தொழில் செய்ய உதவித் தொகையாகக் கருதப்படும்.

★ ஐ.எப்.சி.ஐ.யின் வட்டிச் சலுகை திட்டத்தில் ஒருமுறை சலுகை அளிக்கப்படுகிறது.

★ பின் தங்கியவை அல்லாத இடங்களிலும் வட்டி 12.5 சதவிகிதம் தான்.

**மேலும் பின்தங்கிய இடங்களிலும், வட்டாரங்களிலும் தமிழக அரசு அறிவித்துள்ளபடி முன் எப்போதும் அளித்திடாத பலவிதமான சலுகைகள்.**

நீங்கள் ஒரு தன்னம்பிக்கை மிக்க தொழிலதிபராக மாற வாய்ப்பு இருக்கும் போது ஏன் ஒரு தொழிலாளியாக இருக்க வேண்டும்?



மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**தொழில் முனைவோர் வழிகாட்டுப் பிரிவு**

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

''அருள் மனை'', 27, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014.
தொலைபேசி: 861078

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் - மனிதாபிமானத்துடன் செயல்படும் ஒரு நிதி நிறுவனம்**

DIPR/2187/TIIC/MCS/503

# கூந்தல் வேர்களுக்குக் குறையாத சக்தி




- டாம்ப்கால் மூலிகைத் தைலம உங்கள் கூந்தல் வேர்களுக்குக் கூடுதல் வலுவை ஊட்டுகிறது.
- தூய-ஆலிவ் மற்றும் தேங்காய் எண்ணெய்க் கலவையில், மருதோன்றி, செம்பருத்தி, அவுரி மற்றும் பல மூலிகைகளின் அரிய சத்து சேர்ந்தது டாம்ப்கால் கூந்தல் மூலிகைத் தைலம்.
- கூந்தல் வளர்ச்சிக்கு உறுதுணை நின்று கூந்தல் உதிர்வதை டாம்ப்கால் தடுத்து நிறுத்துகிறது.
- உங்கள் கண்களுக்கு குளிர்ச்சியை ஊட்டுகிறது டாம்ப்கால் மூலிகைக் கூந்தல் தைலம்......
- உங்கள் கூந்தலுக்குத் தேவைப்படும் வலுவுக்கும் வனப்புக்கும் டாம்ப்கால் கூந்தல் மூலிகைத் தைலம்

## டாம்ப்கால்

மூலிகைக்கூந்தல்தைலம்

தமிழக அரசு நிறுவனத் தயாரிப்பு

கூந்தல் நலத்திற்கும் வளத்திற்கும் இயற்கையின் கொடை டாம்ப்கால்.

CANCO/MS/90/835

# குடும்பத் தேவையனைத்திற்கும் கதர் கிராமத் தொழில் அங்காடி









# காதிகிராப்ட்



வண்ண வண்ணக் **கதராடைகள்,** பருத்தி, பட்டு, பாலியஸ்டர், கம்பளி ரகங்கள்,
புதுமை பொலியும் ரெடிமேடு வகைகள்.
உங்கள் ஆடைகளின் அழுக்கை அகற்றி, வெண்மை அளித்திடும்.
**கோபுரம்** சலவைசோப்பு







மேனி எழிலுக்கு அழகை கூட்டிடும் **குறிஞ்சி,** வேம்பு, சந்தனம் **நறுமண சோப்பு**
விலையில் குறைந்த, தரத்தில் உயர்ந்த தோலிலான காலணிகள், தோல் பொருட்கள்.
ஆரோக்கிய வாழ்விற்கு தேவையான கலப்படமற்ற சமையல் எண்ணெய் மற்றும் சமையல் பொருட்கள்,
வலுவை அளித்திடும் **கைகுத்தல் அரிசி** சுறுசுறுப்பை அளித்திடும் **தூய தேன்**
உங்கள் இல்லங்களில் உபயோகத்திற்கான மட்பாண்டங்கள் நாரில் உருவான
அழகுப் பொருட்கள், மரம், இரும்பினால் தயாரிக்கப்படும் மேஜை, நாற்காலி, பீரோக்கள்.





**பரிசுகள் அளிக்கவும், நம் இல்லத்தை அழகு மிளர வைக்கவும்,**
**தந்தம், மரம், சந்தனம், செம்பு, பித்தளை, பீங்கான், மண், பனைப் பொருட்கள்,**
**பார்ப்பவரெல்லாம் பாராட்டும் காகிதத்திலான கைவினை அழகுப் பொருட்கள்.**





**காண வாரீர்! விரும்பியதை வாங்கிட வாரீர்!**





தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை-600 108.





ELEGANT

## Soon, a new venue for business deals, corporate decisions and celebrations.

After being a success in the sugar, flour, export and finance business, Aruna Sugars now enter the profitable hotel industry.

With a business class hotel, the first of its kind in Madras. In association with Quality International, U.S.A., the third largest hotel chain in the world.

The Bhoomi Puja to flag-off this venture was held on 25th January '90. And soon businessmen visiting Madras will have an all new option for during-the-day work and celebrating thereafter.

Aruna Sugars. We know how to satisfy the businessman's appetite for good business sense and the good life.

**Aruna Sugars & Enterprises Limited**

'ARUNA CENTRE' 145, Sterling Road, Madras – 600 034




*WITH BEST COMPLIMENTS FROM*

**THE HOTEL IMPALA CONTINENTAL**
**AND**
**IMPALA SWEETS**

12, Gandhi Irwin Road
Egmore, Madras-8.

Phones:
8251778, 8251780, 8251423
8251622, 8250484, 8250564

*WITH BEST COMPLIMENTS FROM*

**TUBE INVESTMENTS OF**
**INDIA LIMITED**

"WHAT WE DO" is not what matters;
THE glory of endeavour lies in
"HOW WE DO IT."

**T1 DIAMOND CHAIN LIMITED**

Ambattur,
MADRAS-600 053.

முதல் உலகத் தமிழர் மாநாடு சிறக்க
எங்கள் நல்வாழ்த்துக்கள்

**பொடார. வை. முருகேச முதலியார்**
**கல்யாண மண்டபம்**

உரிமையாளர்: மு.வடிவேல், வனவாசி அஞ்சல்
சேலம் மாவட்டம்.

*WITH BEST COMPLIMENTS FROM*

**TAMILNADU DRUGS & PHARMACEUTICALS EXPORTS (P) LTD.**
(Manufacturers of Pharmaceutical Formulations for Exports Only)

**Factory:**
A-34, Madras Export Processing Zone
Tambaram, MADRAS-600 045.
PHONE: 465 578

**Registered Office:**
BAID METHA COMPLEX
183, Mount Road,
Saidapet, MADRAS-600 015.

Phone: 416 976
Grams: *Metha Group.*

*BEST COMPLIMENTS FROM*

# CITY KNITTING COMPANY

GOVT OF INDIA RECOGNIZED EXPORT HOUSE

**Office:**
Post Box No.285, 76A Lakshmi Nagar
TIRUPUR-638 602, INDIA.
PHONE NOS: 23290, 27903, 21011
TELEX: 0858-236 CITY IN/0858-211 BEE IN

**Factory:**
2/5, Padmavathipuram, Angeripalayam
TIRUPUR-638 603
PHONE: 23584

*With All The Best Wishes From*

Cable: GEMGRAN

Telephone: 477985
478453

Telex: 041-7492 KAGU IN
041-6844 GRAN IN

# GEM GRANITES

(100% Export Oriented Unit)

58, Cathedral Road, MADRAS-600 086.
INDIA.

Manufacturers and Exporters of
Polished and Flame-finished Granite
Building Slabs, Tiles, Memorials, Markers,
etc. in many colours.

**Factory:**

146, Injambakkam Village
Madras-600 041
Telephone: 417985

**"BUILDING INDIA'S PRESTIGE IN GRANITES"**

Phone: 416 976
Grams: *Metha Group.*

*WITH BEST COMPLIMENTS FROM*

PA

# P.A.CONSTRUCTION

Leading Promoters of Housing,
Multistoreyed Buildings,
Bungalows and Flats

***P.A.Building***

42, Venkatakrishna Road, Raja Annamalaipuram
Madras-600 028.

*Phones:* 838314
838315
838316

Gram: WELBEGUN
Post Box: 2465
Telex: 041-6162 PAC IN

*WITH BEST COMPLIMENTS FROM*

**BALU JEWELLERS A/C**

Mfrs: *DIAMOND, GOLD & SILVER ARTICLES*

72, USMAN ROAD
T NAGAR, MADRAS-600 017.

SHOP PHONE: 441812, 441741
RES: 441741

*Best Wishes From*

# ATRC RETREADS

## ANNAMALAYAR TYRE RETREADING COMPANY PRIVATE LIMITED

*[A UNIT OF ARC PARCEL SERVICE]*

20, GREAMS ROAD, MADRAS-600 006. PHONE NOs. 477110 & 473600

FOR

**QUALITY RETREADS OF ALL TYRES**

**SCOOTER TO TRACTOR**

**BRANCHES**

ERODE
82, Vivekananda Road
Narayanavalasu
ERODE-638 011.

SALEM
3/399-E, By-pass Road
Near V.S.F.Service Station
SALEM-636 002.
Phone No: 55420

COIMBATORE
252, Mettupalayam Road
(By-pass Road)
COIMBATORE-641 043.
Phone Nos: 40430 41424
42390 46920

*Managing Director:* SHRI P.K.DORAISAMY B.Sc.

*With Best Compliments From.*

# ARC PARCEL SERVICE

[Props.ANAMALLAIS AGENCIES]

***Head Office***

P.B.No.2927
No.24, 11th Street, Tatabad, Coimbatore-12.
Phone: 46220, 46172 Yard: 41424, 41740

Dependable Transporters of Parcels having 200 Stations within Tamil Nadu, Kerala, Karnataka, Pondicherry, Gujarat & Maharashtra States.

*For Safe & Quick Delivery of Parcels*

**Madras Office:**

20, Greams Road, Madras-6.
Phone: 477337, 475936 Yard: 865100
Managing Partner: *P.K.DORAISAMY, B.Sc.*

WITH BEST COMPLIMENTS

***WELLWISHER***

"YOU
CAN
TRUST
TVS"

**We're not saying it -
our customers are.**

Ask the Government Departments -
both Central and State - and
Public Sector undertakings
who come to us.

Ask truck operators in Andhra Pradesh,
Karnataka, Kerala and Tamilnadu.

Ask the car owners why they prefer TVS.

You will find they all say :

*YOU CAN TRUST TVS*

T V Sundaram Iyengar & Sons Ltd.

**Madurai and Branches.**

" BEST WISHES "

FROM A

WELLWISHER

- *WITH BEST COMPLIMENTS*

WELLWISHER

# தமிழ்நாட்டை நன்கு அறிந்தவர்கள்,
# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

## கீழ்கண்ட இடங்களுக்கு உங்களை சுற்றுலா அழைத்துச் செல்கிறோம்

### சுற்றுலா: சென்னை நகரம் அரை நாள்

காலை/மாலை எல்லா நாட்களிலும் காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை, மதியம் 1.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை

காணும் இடங்கள்:
செயின்ட் ஜார்ஜ் கோட்டை, அரசு அருங்காட்சியகம், வள்ளுவர் கோட்டம், பாம்புப் பண்ணை, கபாலீஸ்வரர் கோயில் மற்றும் மெரீனா கடற்கரை
கட்டணம் : ரூ.45/-

### மாமல்லபுரம் சுற்றுப்பயணம் ஒரு நாள்

காணும் இடங்கள்:
காஞ்சீபுரம், மாமல்லபுரம், முதலைப்பண்ணை, முட்டுக்காடு படகுத்துறை, V.G.P. தங்கக்கடற்கரை.
கட்டணம்: ரூ.105/-
(காலை சிற்றுண்டி, மதிய உணவு உட்பட)
தினமும் காலை 6.20 மணி முதல் மாலை 7.00 மணி வரை

### திருப்பதி சுற்றுலா ஒரு நாள்

காணும் இடங்கள்:
திருப்பதி - திருமலை - திருச்சானூர்.
தினமும் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
கட்டணம்: A/c. ரூ.250/- சிறுவர்கள் ரூ.225/-
Non A/c. ரூ.200/- சிறுவர்கள் ரூ.175/-
திருமலையில் சிறப்பு தரிசனத்திற்கு ரூ.25/-, சிற்றுண்டி, மதிய உணவு உட்பட. (சிறுவர்களுக்கு 5 முதல் 10 வயதிற்கு தரிசனக் கட்டணம் இல்லை)

### தமிழ்நாடு சுற்றுலா - 8 நாட்கள்

ஒவ்வொரு சனிக்கிழமை அன்று சென்னையில் இருந்து காலை 7.00 மணிக்கு புறப்பட்டு, அடுத்த சனிக்கிழமை மாலை 9.00 மணி அளவில் மீண்டும் சென்னை வந்து அடையும்

காணும் இடங்கள்:
பிச்சாவரம் - சிதம்பரம், தஞ்சாவூர்* ராமேஸ்வரம் - மண்டபம்* - கன்னியாகுமரி* - சுசீந்தரம் - திருவனந்தபுரம் - மதுரை* - கோடைக்கானல்* - திருச்சி* பாண்டிச்சேரி - சென்னை.

| கட்டணத்தொகை | Non A/c. |
|---|---|
| ஒருவர் மட்டும் தங்கும் அறை | : ரூ.1,700/- |
| இருவர் தங்கும் அறை | : ரூ.1,600/- |
| இருவர் தங்கும் அறையில் மேற்படி ஒரு குழந்தைக்கு (வயது 5 முதல் 12 வரை) | : ரூ.1,300/- |

* இரவு தங்கும் இடம்

### மூகாம்பிகை சுற்றுலா: 5 நாட்கள்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அன்றும் சென்னையில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு அடுத்த வியாழக்கிழமை மாலை 8.00 மணி அளவில் மீண்டும் சென்னை வந்து அடையும்

காணும் இடங்கள்:
சரவணபெலகொலா-ஹாசான்* பேலூர்-ஹலிபேடா-சிரிங்கேரி-மூகாம்பிகா கொல்லூர்-உடுப்பி*-தர்மஸ்தலா-மைசூர்*-பெங்களூர்*-சென்னை.

| கட்டணத்தொகை | Non A/c. |
|---|---|
| ஒருவர் மட்டும் தங்கும் அறை | : ரூ.1,150/- |
| இருவர் தங்கும் அறை | : ரூ.1,050/- |
| இருவர் தங்கும் அறையில் மேற்படி ஒரு குழந்தைக்கு (வயது 5 முதல் 12 வரை) | : ரூ. 950/- |

* இரவு தங்கும் இடம்

### மந்திராலயம் சுற்றுலா: 7 நாட்கள்

ஒவ்வொரு சனிக்கிழமை அன்றும் காலை 6.30 மணிக்கு புறப்பட்டு அடுத்த வெள்ளிக்கிழமை மாலை 8.00 மணிக்கு சென்னை வந்து அடையும்

காணும் இடங்கள்:
அகோபிலம்-மஹாநந்தி-நந்தியால்*-ஸ்ரீசைலம்-மந்திராலயம்*-ஹம்பி-ஹாஸ்பெட்*-கோவா*-பெங்களூர்*-சென்னை.

| கட்டணத்தொகை | Non A/c. |
|---|---|
| ஒருவர் மட்டும் தங்கும் அறை | : ரூ.1,550/- |
| இருவர் தங்கும் அறை | : ரூ.1,400/- |
| இருவர் தங்கும் அறையில் மேற்படி ஒரு குழந்தைக்கு (வயது 5 முதல் 12 வரை) | : ரூ.1,275/- |

* இரவு தங்கும் இடம்

### உளம் மகிழ் தென்னிந்தியச் சுற்றுலா : 14 நாட்கள்

புதன்கிழமை, முதல் மற்றும் மூன்றாவது வாரம் காலை 7.00 மணிக்கு பயணம் தொடங்கும்

காணும் இடங்கள்:
சென்னை-திருத்தணி-திருப்பதி*-திருச்சானூர்-பெங்களூர்*-மைசூர்*-முதுமலை வனவிலங்கு சரணாலயம்-ஊட்டி*-மருதமலை-கோயம்புத்தூர்*-மலம்புழா-குருவாயூர்-கொச்சின்*-திருவனந்தபுரம்*-சுசீந்திரம்-கன்னியாகுமரி*-திருச்செந்தூர்-ராமேஸ்வரம்*-திருப்பரங்குன்றம்-மதுரை*-கோடைக்கானல்*-பழனி-திருச்சி*-சுவாமிமலை-பூம்புகார்-சிதம்பரம்*-பாண்டிச்சேரி-சென்னை.

| கட்டணத்தொகை | Non A/c. |
|---|---|
| ஒருவர் மட்டும் தங்கும் அறை | : ரூ.3,000/- |
| இருவர் தங்கும் அறை | : ரூ.2,800/- |
| இருவர் தங்கும் அறையில் மேற்படி ஒரு குழந்தைக்கு (வயது 5 முதல் 12 வரை) | : ரூ.2,600/- |

* இரவு தங்கும் இடம்

### கட்டணத்தின் தொகுப்புகள்

மேற்கூறிய கட்டணம் போக்குவரத்து, தங்கும் இடம் (எங்கெங்கு தேவையோ) வழிகாட்டுநர் கட்டணம், நினைவு சின்னம் நுழைவுக் கட்டணம், படகு கட்டணம் அடங்கியது.

### மொத்தமாக பயணச்சீட்டு வாங்குவோருக்குச் சிறப்புச் சலுகை:

எல்.டி.ஸி. வேண்டுவோர்க்கு சான்றிதழ் வழங்கப்படும்.

### முன்பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விற்பனை அலுவலர்,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்
143, அண்ணா சாலை, வி.எஸ்.டி. மோட்டார்ஸ் கட்டிடம்,
சென்னை-600 002 தொலைபேசி: 830498/830390
டெலக்ஸ் எண்: 041-7575 தந்தி: 'TAMIL TOUR'

சுற்றுலா பொறுப்பு அலுவலர்,
தமிழ்நாடு அரசு,
C/o. கோ-ஆப்டெக்ஸ் வேர்ஹவுஸ், 8/E, டக்ரெஸ் லேன்,
கல்கத்தா-700 069 தொலைபேசி: 284972

டிராவல் இந்தியா,
நெ.1-A, ஹஸ்ரா சாலை, கல்கத்தா-700 026.

சுற்றுலா அலுவலர்,
தமிழ்நாடு அரசு,
சி.ஐ. எம்போரியா காம்ப்ளெக்ஸ், பாபா காராக் சிங் மார்க்
புதுடெல்லி-110 001 தொலைபேசி: 344651




**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**
**(தமிழ்நாடு அரசு நிறுவனம்)**
25, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி: 846843, 846825.

CANCO/MS/90/930

*WITH COMPLIMENTS OF*

**JAGATJIT INDUSTRIES LIMITED**

**MANUFACTURER OF 'VIVA' AND 'MALTOVA'**

IMPET BUILDING,
9, A, WHITES ROAD, MADRAS-600 014
POST BOX NO.691

GRAMS:"JAGATJIT"
TELEX: 041 7550 JIL-IN
✆ 863311

REGD.OFFICE: FACTORIES, JAGATJIT NAGAR-144802
DISTT.KAPURTHALA, (PUNJAB)

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை
வணக்கம் செய்தல் வேண்டும்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே
ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர்
சிறப்புக் கண்டார்

*மகாகவிபாரதியார்*


*விளம்பர உதவி:*

## ஏ பி டி பார்சல் சர்வீஸ்

* பொருள் போக்குவரத்து சம்பந்தமான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு

## ஏ பி டி பார்சல் சர்வீஸ்

* இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப் பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு

## ஏ பி டி பார்சல் சர்வீஸ்

* உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்

## ஏ பி டி பார்சல் சர்வீஸ்

எங்களது சேவையே உங்களுக்கும் தொடர எங்களுக்கு ஒரு வாய்ப்புத்தாரீர்!

குறைந்த கட்டணம்!
நிறைந்த சேவை!

ஏ பி டி பார்சல் சர்வீஸ்
10/13-15, காளியங்கராயன் தெரு
ராம்நகர்,
கோவை 641009.

*WITH BEST COMPLEMENTS*

From

# INDIAN BANK

Head Office: 31, Rajaji Road, Post Box No. 1384, Madras-600 001.

*Chairman Cum Managing Director*
Mr.M. GOPALAKRISHNAN


அலை மா கடல் நிலம் வானில் உன்
அணி மாளிகை ரதமே
அவை ஏறிடும் விதமே உனது
அதிகாரம் நிறுவுவாய்